தமிழை வாழ வைப்போம்! தமிழரையே ஆள வைப்போம்!

எங்கள் திருநாட்டில் எங்கள் நல்லாட்சியே!



நாம் தமிழர் ஆட்சி செயற்பாட்டு வரைவு

2026

- புரட்சி என்பது ஒரு தலைகீழ் மாற்றம்
  மாற்றம் என்பது சொல் அல்ல செயல்
  மாறுவோம் மாற்றுவோம்
  இது மாற்றத்திற்கான எளிய மக்களின் புரட்சி!



குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.

– தமிழ்மறை – 544


பெற்ற தாய் தன் பிள்ளைகளுக்கு
எப்படிக் குறிப்பறிந்து சேவை
செய்வாளோ அப்படித் தன்
குடிகளுக்குச் சேவை செய்யும்
அரசை உலகம் போற்றி நிற்கும்.




தமிழ் மறையோன்

திருவள்ளுவப் பெருமகனார்

மாற்றம் என்பது
மானுடத் தத்துவம்
மாறாது என்ற
சொல்லைத் தவிர
மற்றவை அனைத்தும்
மாறிவிடும்.



மாமேதை
காரல் மார்க்ஸ்



கற்பி!
புரட்சி செய்!
ஒன்று சேர்!

அனைத்துத் துன்பப் பூட்டுகளுக்குமான
சாவி ஆட்சி அதிகாரம் மட்டுமே!




அறிவாசான்

அண்ணல்

அம்பேத்கர்

அரசியல் என்பது
முழுக்க முழுக்க
மக்களுக்கான
சேவை தான்.



பெருந்தலைவர்

தாத்தா

காமராசர்

புதிய ஆத்திசூடி

அச்சம் தவிர்
ஆண்மை தவறேல்
ஈகை திறன்
உடலினை உறுதிசெய்
ஊண்மிக விரும்பு
எண்ணுவ துயர்வு
ஏறுபோல் நட

ஐம்பொறி ஆட்சிகொள்
ஒற்றுமை வலிமையாம்
ஓய்த லொழி
கற்ற தொழுகு
காலம் அழியேல்
கீழோர்க்கு அஞ்சேல்
குன்றென நிமிர்ந்துநில்

கூடித் தொழில் செய்
கெடுப்பது சோர்வு
கேட்டிலும் துணிந்துநில்
கைத்தொழில் போற்று
கொடுமையை எதிர்த்து நில்
கோல்கைக் கொண்டு வாழ்
சரித்திரத் தேர்ச்சிகொள்


சாவதற்கு அஞ்சேல்
சிதையா நெஞ்சு கொள்
சீறுவோர்ச் சீறு
சூரரைப் போற்று
செய்வது துணிந்துசெய்
சைகையிற் பொருளுணர்
சொல்வது தெளிந்து சொல்

தாழ்ந்து நடவேல்
தீயோர்க்கு அஞ்சேல்
துன்பம் மறந்திடு
தூற்றுதல் ஒழி
தெய்வம் நீ என்றுணர்
தேசத்தைக் காத்தல்செய்
தையலை உயர்வு செய்

தோல்வியிற் கலங்கேல்
நன்று கருது
நாளெலாம் வினைசெய்
நீதிநூல் பயில்
நுனியளவு செல்
நூலினைப் பகுத்துணர்
நெற்றி சுருக்கிடேல்

நேர்படப் பேசு
நையப் புடை
பாட்டினில் அன்புசெய்
புதியன விரும்பு
பூமி யிழந்திடேல்
பெரிதினும் பெரிதுகேள்
பேய்களுக்கு அஞ்சேல்

பொய்ம்மை இகழ்
போர்த்தொழில் பழகு
மானம் போற்று
மேழி போற்று
ரௌத்திரம் பழகு
வீரியம் பெருக்கு
வெடிப்புறப் பேசு
நினைப்பது முடியும்



பெரும்பாவலன்

பாட்டன்

பாரதி

சிங்கக் குகையினில் நரிக்கிடம் தந்தோம்
செந்தமிழ் நாட்டின் உரிமை இழந்தோம்
பொங்கும் உணர்வால் எழுந்தமி ழரசு
போர்தொடங் கிற்றுக் கொட்டடா முரசு

நறுக்குவோம் பகையின்வேர் சிறுத்தைப் பெருங்கூட்டம்
நாம் தமிழர் நாம் தமிழர் என்று முரசறைவாய்.
குறுக்கில் முளைத்திட்ட அயலார் ஆட்சி
கூண்டோடு போயிற்றுக் கொட்டடா முரசம்!

அலை மாகடல் நிலம் வானிலுன்
அணிமாளிகை ரதமே
அவை ஏறிடும் விதமே
உனததிகாரம் நிறுவுவாய்
கொலைவாளினை எடடா மிகு
கொடியோர் செயல் அறவே
குகை வாழ் ஒரு புலியே
உயர் குணமேவிய தமிழா!



புரட்சிப் பாவலர்

தாத்தா

பாரதிதாசன்

வாழ்ந்தாலும் தமிழுக்கும் தமிழர்க்கும் வாழ்வேன்
வளைந்தாலும் நெளிந்தாலும் தமிழ்பொருட்டே ஆவேன்

தாழ்ந்தாலும் வீழ்ந்தாலும் தமிழ் மேல்தான் வீழ்வேன்
தனியேனாய் நின்றாலும் என்கொள்கை மாறேன்.

கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை, மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை, எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!



பாவலரேறு

தாத்தா

பெருஞ்சித்திரனார்

உன்னை ஒருவராலும்
தோற்கடிக்க முடியாது,
உன் நம்பிக்கையில்
நீ தோற்கின்ற வரை.



மாவீரன்

சுபாஷ் சந்திரபோஸ்

அரசியல் என்பது மக்கள் மீது
ஆட்சியை நடத்தும் அல்லது
அதிகாரத்தைச் செலுத்தும்
விவகாரம் அல்ல,
அரசியல் என்பது மக்களுக்குச்
சேவை புரியும் பணி,
மக்களின் நல்வாழ்வுக்கு
ஆற்றப்படும் தொண்டு.



தேசியத் தலைவர்

மேதகு

வே. பிரபாகரன்

அரசியல் என்பது
அனைத்து
உயிர்களுக்குமான
தேவையும்
அதை நிறைவு
செய்யும் சேவையும்.



செந்தமிழன்

சீமான்

தமிழன்னை




தமிழே! உயிரே! வணக்கம்!
தாய் பிள்ளை உறவம்மா உனக்கும் எனக்கும்!

அரசு முத்திரை



தமிழ் நாட்டு அரசு

தமிழ்நாட்டுக்கொடி



தமிழ்த்தாய் வாழ்த்து

வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே
மாண்புகள் நீயே என் தமிழ்த் தாயே
வீழ்வாரை வீழாது காப்பவள் நீயே!
வீரனின் வீரமும் வெற்றியும் நீயே!

தாழ்ந்திடு நிலையினில் உனைவிடுப்பேனோ
தமிழன் எந்நாளும் தலைகுனிவேனோ
சூழ்ந்தின்பம் நல்கிடும் பைந்தமிழ் அன்னாய்
தோன்றுடல் நீ உயிர் நான் மறப்பேனோ?

செந்தமிழே! உயிரே! நறுந்தேனே
செயலினை மூச்சினை உனக்களித்தேனே
நைந்தாய் எனில் நைந்துபோகும் என் வாழ்வு
நன்னிலை உனக்கெனில் எனக்கும் தானே!

முந்திய நாளினில் அறிவும் இலாது
மொய்த்த நன் மனிதராம், புதுப்புனல் மீது
செந்தாமரைக் காடு பூத்தது போல
செழித்தஎன் தமிழே ஒளியே வாழி!

– புரட்சிப் பாவலர் தாத்தா பாரதிதாசன்

உழவர் குடியோன்



உழவு இல்லையேல் உணவு இல்லை
உணவு இல்லையேல் உயிர்கள் இல்லை
உயிர்கள் இல்லையேல் உலகு இல்லை
உழவை மீட்போம்! உலகைக் காப்போம்!

தமிழ் மறை 81

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு.

தமிழ் மறை 1031

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை.

தமிழ் மறை 1032

உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது எழுவாரை எல்லாம் பொறுத்து.

தமிழ் மறை 1033

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம் தொழுதுண்டு பின்செல் பவர்.

தமிழ் மறை 1036

உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம் விட்டேம்என் பார்க்கும் நிலை.

உள்ளே


மாற்றத்திற்கான வழி!

1.	தலைநகரை மாற்றுவோம் தமிழகத்தை மாற்றுவோம்	31
2.	அடிப்படை, அமைப்பு, அரசியல் மாற்றம்	35
3.	தன்னலமற்ற அன்பான சர்வாதிகாரம்	47
4.	நீர்வளப் பெருக்கம்	51
5.	தூய குடிநீர் இலவசம்	73
6.	வேளாண்மை	79
7.	மருத்துவம்	111
8.	உடலினை உறுதி செய்	129
9.	வெறிம (போதை) ஒழிப்பு	135
10.	பெண்ணுரிமை	139
11.	மாற்றுத்திறனாளிகள் நலன்	145
12.	அன்புத்தளிர்	147
13.	அன்புச்சோலை	151
14.	உழவர் நலன்	155
15.	மீனவர் நலன்	161
16.	வணிகர் நலன்	173
17.	தூய்மைப் பொறியாளர்	177
18.	அமைப்புச் சாராத் தொழிலாளர் நலன்	181
19.	காவல் - மக்களுக்கான சேவை	187
20.	பசுந்தமிழ்நாடு	201
21.	காலநிலை மாற்றம்	205
22.	வனம் செய்வோம்	207
23.	விலங்குகள் - பறவைகள் நலன்	217

24.	கனிம வளப் பாதுகாப்பு	221
25.	கழிவு மேலாண்மை	227
26.	கையூட்டு, ஊழல் ஒழிப்பு	239
27.	வெளிப்படையான நிர்வாகம்	245
28.	ஈழம் - எங்கள் இனத்தின் தேசம்	253
29.	ஈழத்தமிழ் உறவுகளுக்கானத் தீர்வு	263
30.	தமிழ் மீட்சி	267
31.	தமிழர் மெய்யியல்	281
32.	தொல் தமிழர் மீட்சி	295
33.	அயலகத் தமிழருக்கான அமைச்சகம்	303
34.	கல்விக் கொள்கை	309
35.	போக்குவரத்துக் கொள்கை	335
36.	பொருளாதாரம்	349
37.	சிற்றூர்களின் பொருளாதார வளர்ச்சி	355
38.	தொழில்	361
39.	தகவல் தொழில்நுட்ப ஊழியர்களின் நலன்	373
40.	தமிழ்த்தேசிய வைப்பகம்	377
41.	மாற்று மின் பெருக்கம்	379
42.	சுற்றுலாக் கொள்கை	389
43.	செய்தி ஒளிபரப்புத் துறை	405
44.	திரைக்கலை மேம்பாடு	409
45.	கலை, இலக்கிய, பண்பாட்டு மீட்சி	415
46.	நீதித்துறைச் சீர்திருத்தம்	424
47.	காலத்தின் தேவை	431
48.	தாய்நில உரிமை	433
49.	நாம் தமிழர் கட்சி எதிர்க்கும் சட்டங்களும், திட்டங்களும்	437











சென்னை
திருச்சிராப்பள்ளி
கோயம்புத்தூர்
மதுரை
கன்னியாகுமரி

தலைநகரை மாற்றுவோம் தமிழகத்தை மாற்றுவோம்

சென்னை மட்டுமே தலைநகராக இருப்பதால் கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு என அனைத்தும் ஒரே இடத்தில் குவிந்து கிடக்கிறது. இவை அனைத்தையும் தேடி மக்கள் சிற்றூர்களில் இருந்து நகரத்தை நோக்கி வருவதால் சென்னை பிதுங்கி வழிகிறது. உயிரைச் சுமந்து செல்கிற அவசர ஊர்தி கூடச் சரியான நேரத்திற்குச் செல்லமுடியாத நிலை உள்ளது. இதே நிலை நீடித்தால் சென்னையின் நிலை மேலும் சிக்கலாகும். அதனால் நிருவாக வசதிக்காக, கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு, தொழில் வளர்ச்சி உட்பட அனைத்தும் பரவலாகச் சென்றடைய, நாம் தமிழர் அரசு தலைநகரை பரவலாக்கும்.

ஒன்றிற்கும் மேற்பட்ட தலைநகரங்கள் கொண்ட நாடுகள்

- Netherlands : Amsterdam, The Hague.
- Bolivia : Sucre, La Paz
- Burundi : Gitega, Bujumbura.
- Ivory Coast : Yamoussoukro, Abidjan.
- Malaysia : Kuala Lumpur, Putrajaya.
- South Africa : Pretoria, Cape Town, Bloemfontein.

பரவலாக்கப்பட்ட அதிகாரம் – உதாரணமான நாடுகள்

America :

- Washington D.C., New York City, Los Angeles, Silicon Valley

China :

- Beijing, Shanghai, Shenzhen, Hangzhou, Xi'an, Nanjing.

Switzerland : மாகாணக் கூட்டாட்சி (Cantonal Federalism)

- Bern, Zurich, Geneva.

Germany : கூட்டுறவுக் கூட்டாட்சி மற்றும் மாநிலத் தன்னாட்சி

- Berlin, Munich, Frankfurt.

Canada : மாகாணக் கூட்டாட்சி

- Ottawa, Toronto, Montreal, Vancouver.

தலைநகரை மாற்றுவோம்!
தமிழகத்தையே மாற்றுவோம்!



இப்படியாக பல தலைநகரங்கள் மற்றும் பரவலாக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட பல்வேறு நாடுகள் உலகம் முழுவதும் உள்ளன. இந்த முறையானது எளிமையான நிர்வாக மேம்பாட்டிற்கும், சீரான வளர்ச்சிக்கும் வழிவகை செய்கிறது. நாம் தமிழர் அரசும் இதே முறையை செயல்படுத்தும்.

தமிழ்நாட்டிற்கு 5 தலைநகரங்கள்

- திருச்சி: **நிர்வாகத் தலைநகரம்** (The Administrative Capital)

  தமிழகத்தின் மையப்புள்ளியான திருச்சி முதன்மை நிருவாக மையமாகச் செயல்படும். தென் மாவட்ட மக்களும், வட மாவட்ட மக்களும் ஒரே நாளில் வந்து செல்லக்கூடிய மையமாக இது இருக்கும்.

  - **தலைமைச் செயலகம்** (Secretariat):
    முதலமைச்சர் அலுவலகம் மற்றும் அனைத்துத் துறை அமைச்சகங்கள்.
  - **சட்டமன்றம்** (Legislative Assembly):
    மாநிலத்தின் சட்டமியற்றும் பணிகள்.
  - **வருவாய்த்துறை மற்றும் பொது நிருவாகம்:**
    மாநிலத்தின் 38 மாவட்டங்களையும் கண்காணிக்கும் மையம்.
  - **மாநிலத் திட்டக் குழு:**
    ஒட்டுமொத்தத் தமிழகத்தின் வளர்ச்சிக்கான திட்டமிடல்.

- சென்னை: **தொழில்நுட்பத் தலைநகரம்** (Tech Capital)

  இந்தியாவின் மும்பை, சீனாவின் ஷாங்காய் போல, சென்னை தனது நிருவாகப் பளுவைக் குறைத்துக் கொண்டு, கல்வி, பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியின் நுழைவாயிலாக இருக்கும்.

  - **தகவல் தொழில்நுட்பம்** (IT):
    கணினித் தொழில்நுட்பம் மற்றும் மென்பொருள் ஏற்றுமதி.
  - **திரைக்கலை மற்றும் ஊடகம்:**
    கலை மற்றும் பொழுதுபோக்குத் துறையின் தலைமையகம்.
  - **துறைமுகம் மற்றும் கடல்சார் வணிகம்:**
    சர்வதேச வர்த்தகப் போக்குவரத்து.
  - **நிதி மற்றும் வங்கிச் சேவைகள்:**
    மாநிலத்தின் முக்கிய நிதி நிறுவனங்கள்.

- கோவை: **தொழில் மற்றும் வணிகத் தலைநகரம்** (Industrial & Business Capital)

  ஜெர்மனியின் ஃபிராங்க்பர்ட் அல்லது இத்தாலியின் மிலன் நகரம் போல, கோவை - மாநிலத்தின் உற்பத்தித் துறையின் முதுகெலும்பாகச் செயல்படும்.

  மேற்கு மண்டலத்தின் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கவும், சிறுகுறு தொழில்களை (MSME) உலகத் தரத்திற்கு உயர்த்தவும் இது உதவும்.

  - **தொழில் மற்றும் வர்த்தகத்துறை:**

    புதிய தொழிற்சாலைகளுக்கான அனுமதி மற்றும் மேலாண்மை.
  - **நெசவு:**

    திருப்பூர், ஈரோடு உள்ளிட்ட நெசவு மண்டலங்களின் ஒருங்கிணைப்பு.



- **தொழிற்பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு:**
  இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புப் பயிற்சி மையங்கள்.
- **தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம்:**
  புதிய நிறுவனங்களை உருவாக்குதல்.

- **மதுரை: மொழி, கலை மற்றும் பண்பாட்டுத் தலைநகரம்**
  (Cultural & Heritage Capital)

ஜப்பானின் கியோட்டோ நகரம் அதன் பண்பாட்டினைப் பிரதிபலிப்பது போல, மதுரையும் தமிழின் அடையாளம் மற்றும் நீதிக்கான மையமாகத் திகழும்.

தமிழர்களின் தொன்மையான வரலாறு மற்றும் கலைகளைப் பாதுகாக்கும் உலகளாவிய மையமாக இது விளங்கும்.

- **தமிழ் வளர்ச்சித் துறை:**
  தமிழ் மொழி ஆய்வு மற்றும் உலகத் தமிழ் சங்கப் பணிகள்.
- **சுற்றுலா மற்றும் பாரம்பரியம்:**
  மரபுசார் மற்றும் வரலாற்றுச் சுற்றுலா மேம்பாடு.
- **நாட்டுப்புறக் கலைகள் மற்றும் நுண்கலைகளின் பாதுகாப்பு.**

- **கன்னியாகுமரி: தமிழர் மெய்யியல் தலைநகரம்** (Epistemological Capital)

இந்தியாவின் தென்கோடியில் அமைந்துள்ள குமரி, மாநிலத்தின் தொலைநோக்குச் சிந்தனை மற்றும் இயற்கை வளப் பாதுகாப்பிற்கான மையமாக இருக்கும்.

தமிழரின் மெய்யியல் மற்றும் உலகெங்கும் வாழும் தமிழர்களை இணைக்கும் ஒரு அடையாளப் புள்ளியாக இது விளங்கும்.

- **சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்:**
  கடல்சார் சுற்றுச்சூழல் மற்றும் கடற்கரை மேலாண்மை.
- **வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை:**
  புலம்பெயர்ந்த தமிழர்களுடனான உறவை மேம்படுத்துதல்.
- **சிந்தனை மற்றும் தத்துவ மையம்:**
  வள்ளுவம் உள்ளிட்ட தமிழர் அறநெறிகளை உலகிற்குக் கொண்டு சேர்த்தல்.

தலைநகரை மாற்றுவோம்!
தமிழகத்தையே மாற்றுவோம்!



“இன்று 148 கோடி மக்கள் தொகை, இன்னமும் அதே பழைய 543 நாடாளுமன்றத் தொகுதிதான். இது அடிப்படையிலேயே ஏற்க முடியாத ஒன்றாகும்.”



அடிப்படை, அமைப்பு, அரசியல் மாற்றம்

> நாம் தமிழர் அரசு அடிப்படை மாற்றம், அமைப்பு மாற்றம், அரசியல் மாற்றம் ஆகியவற்றினை உயிர் மூச்சாகக் கொண்டு இலட்சிய அரசாகச் செயல்படும். நாங்கள் வீட்டினைப் புதுப்பித்து வெள்ளையடிக்க வந்த சீர்திருத்தலாளர்கள் அல்லர், வீட்டையே இடித்துவிட்டுப் புதிதாகக் கட்டவந்த புரட்சியாளர்கள் என்பதை மக்களுக்கு நாம் தமிழர் அரசு பெருமிதத்தோடு பறை சாற்றுகிறது.

அடிப்படை, அமைப்பு, அரசியல் மாற்றம்

பெண்களுக்குத் தனித்தொகுதி

- உள்ளாட்சி அமைப்பில் பெண்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், சட்டமன்ற நாடாளுமன்றத் தொகுதிகளில் அப்படி வழங்கப்படவில்லை. ஒரு பெண் வேட்பாளர் போட்டியிடும் தொகுதியில் மற்ற கட்சிகளும் பெண் வேட்பாளரை நிறுத்துவதில்லை. இதனால் பெண்களுக்கான உரிமையும் பறிக்கப்படுகிறது. எனவே பெண்களுக்குச் சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் (பட்டியலினத்தவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதைப் போல்) தனித்தொகுதிகள் போராடிப் பெறப்படும். இதனால் பட்டியலின, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகப் பெண்களுக்கான நிகர்நிலைக் கிடைக்கும்.

மூன்று சட்டமன்றத்திற்கு ஒரு பாராளுமன்றம்

- விடுதலையடைந்தபோது மக்கள் தொகை முப்பது கோடிதான். 1952இல் இரட்டை உறுப்பினர்கள் கொண்ட தொகுதிகள் உள்ளட 489 மக்களவைத் தொகுதிகள்









உருவாக்கப்பட்டன. 2026ஆம் ஆண்டு நிலவரப்படி 543 நாடாளுமன்றத் தொகுதிகள் உள்ளன. ஆனால் இன்று 148 கோடி மக்கள் தொகை பெருகிய பிறகும் அதே 543 நாடாளுமன்றத் தொகுதிதான். இதனால் சரியான நிகராளியம் இருக்காது. மக்கள் தொகை நான்கு மடங்காக உயர்ந்துள்ள நிலையில் மூன்று சட்டமன்ற தொகுதிகளுக்கு ஒரு நாடாளுமன்றத் தொகுதி என மாற்ற வேண்டும். இந்த மாற்றத்திற்காக வேண்டி நாம் தமிழர் அரசு மற்ற மாநிலங்களுடன் சேர்ந்து ஒன்றிய அரசை வலியுறுத்தும். மாற்றம் கொண்டுவரும்வரை போராடுவோம்.

முதல் குடிமகன்

- இந்திய ஒன்றிய அரசியலமைப்புச் சட்டத்தின்படி, இந்தியாவின் முதல் குடிமகன் குடியரசுத் தலைவர். அவரே நாட்டின் தலைவராகவும் உள்ளார். ஆனால் அவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. இது மக்களாட்சி தத்துவத்திற்கு எதிராக உள்ளது. எனவே நாட்டின் குடியரசுத்தலைவரை மக்களே தேர்ந்தெடுக்கும்படியாகத் தேர்தல் முறை இருக்க வேண்டும். அதற்கேற்றாற்போல் அரசியலமைப்புச் சட்டத்தை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை நாம் தமிழர் அரசு இந்திய ஒன்றியத்தின் முன் வைக்கின்றது.

மாநிலங்களவை

- மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படாத, தோற்கடிக்கப்பட்டவர்களாக இருப்பவர்கள், மாநிலங்களவை உறுப்பினர்களாகி ஒன்றிய அமைச்சர் பதவிகளுக்கு வருவது மக்களாட்சி மாண்பிற்கு எதிரானது. மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத எவரும் மக்களை ஆட்சி செய்கிற அதிகாரம் செலுத்துகிற பொறுப்புகளுக்கு வர உரிமையில்லை. அது சார்ந்த சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர நாம் தமிழர் கட்சி போராடும்.

மக்கள் ஒதுக்கும் தலைவர்கள்

- ஊழல் வழக்குகளில் சிக்கிக் கொள்ளும் அமைச்சர்கள், தங்களை சொந்தத் தொகுதி மக்களே தோற்கடித்து விடுவார்கள் என்று அஞ்சி, மக்களைச் சந்திக்காமல், வேறு மாநிலத்தின் மூலம் 'மாநிலங்களவை' உறுப்பினர்களாக ஆகிவிடுகிறார்கள். பிறகு அப்படி வந்தவரே ஒரு கட்சி சார்பாகத் தலைமை அமைச்சராகப் பதவியேற்று, மக்களை ஆட்சி செய்வது எந்தத் தேசத்திலும் நடக்காத ஒன்று.

- மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத குடியரசுத் தலைவரும், மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத தலைமை அமைச்சரும் சேர்ந்து, மக்களால் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் ஆட்சியைக் கலைத்துவிட முடியும் என்ற அதிகாரத்தைப் பெற்றிருப்பது மக்களாட்சித் தத்துவத்திற்கே எதிரானது.

செய்யப்பட வேண்டிய மாற்றங்கள்

- "இந்த அவையானது நம்மில் பலர் விரும்பி வந்தது போல அமைந்தது அன்று என்பதை நீங்கள் அறிவீர்கள். சில குறிப்பிட்ட சூழ்நிலைகளின் காரணமாக





தொடக்கத்தில்
எதையும்
வீண்முயற்சி
என்பார்கள்
வென்றுவிட்டால்
விடாமுயற்சி
என்பார்கள்

- பிடல் காஸ்ட்ரோ

இந்த அவை இவ்வாறு அமைந்துவிட்டது. இந்த அவை உருவாக்கப்படுவதில் ஆங்கிலேயருக்கும் ஒரு பங்கு இருந்தது. இந்த அவையை உருவாக்குவதற்கு ஆங்கிலேயர் குறிப்பிட்ட சில கட்டுப்பாடுகளை விதித்துவிட்டார்கள். எனவே இந்த வரம்புக்குள் நின்று நாம் செயல்பட வேண்டி நேரிட்டுவிட்டது என்பதேயாகும்.'' தனது கருத்தாக சவர்கலால் நேரு கூறியது. (13.12.1946 Indian constitutional documents Vol-II, Page 110)

கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை

- இந்திய ஒன்றிய அரசியலமைப்புச் சட்டம்தான் முகப்புரையை ''இந்திய மக்களாகிய நாம்'' என்று தொடங்குகிறது. ஆனால் இந்திய ஒன்றிய அரசியலமைப்புச் சட்டம் இயற்றப்பட்ட காலத்தில் இங்கு வாழ்ந்த 30 கோடி மக்களின் கருத்துகளையும், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் கருத்துகளையும், பல்வேறு மொழிவழித் தேசிய இனங்களின் கருத்துகளையும் கவனத்தில் எடுத்துக்கொண்டு அரசியலமைப்புச் சட்டம் இயற்றப்படவில்லை.

மாற்றியமைக்கப்படும்

- தகவல் அறியும் உரிமைச் சட்டப்பிரிவு 4இன் படி, அரசுத் துறைகள் பொதுத் தகவல்களைத் தாமாகவே இணையதளத்தில் வெளியிட வேண்டும். ஆனால், தமிழக அரசு இந்த விதிமுறையை பின்பற்றுவதில்லை. தகவல் ஆணையர் பணியமர்த்தத்தில் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்து, ஆணையத்தின் செயல்பாடுகள் முறைப்படுத்தப்படும். மேலும், மேல்முறையீட்டு விண்ணப்பங்களை 2 மாதக் காலத்திற்குள் முடித்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

- தனிப்பட்டவர் தரவுப் பாதுகாப்பு (DPDP) சட்டத்தின்கீழ், RTI பிரிவு 8(1)(j)இல் கொண்டுவரப்பட்ட திருத்தத்தைத் திரும்பப் பெற ஒன்றிய அரசிடம் வலியுறுத்தப்படும். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் வெளிப்படைத்தன்மை பாதுகாக்கப்படும்.

- 74ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி, வட்ட (Ward) அளவில் அதிகாரத்தைப் பரவலாக்கி, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தன்னாட்சி அதிகாரம் கொண்ட பிரிவுகளாக மாற்றப்படும். இதுகுறித்துத் தமிழ்நாடு உள்ளாட்சிச் சட்டங்களில் விரிவாகத் திருத்தம் மேற்கொள்ளப்படும்.

- மேகாலயா மாநிலத்தைப் போல, அரசுத் திட்டங்களைக் கண்காணிக்கவும், குறைகளைத் தீர்க்கவும், பணிகளைத் தணிக்கை செய்யவும் தமிழகத்திலும் 'சமூகத் தணிக்கைச் சட்டம்' (Social Audit Act) இயற்றப்படும்.

- சென்னை மாநகரக் காவல் சட்டப் பிரிவு 41 மற்றும் BNSS 163 (முன்பு CrPC 144) ஆகியவற்றைத் தவறாகப் பயன்படுத்தி, அமைதி வழியில் போராடும் மக்களாட்சி உரிமையைத் தடுப்பது உடனடியாக நிறுத்தப்படும்.

- ''தற்போது இருக்கிற தேசிய இன மக்களின் உரிமைகளைக் கருத்தில் கொண்டு, இந்திய ஒன்றிய அரசியலைப்புச் சட்டத்தைத் தற்கால அரசியல், சமூக, சூழல்களுக்கு உலக ஒழுங்கிற்கு ஏற்றாற்போல மாற்றி அமைக்க வேண்டும்'' என்ற கோரிக்கையை நாம் தமிழர் கட்சி வலியுறுத்துகின்றது.







மாநிலத்தில் தன்னாட்சி, ஒன்றியத்தில் கூட்டாட்சி

- இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தில், "கூட்டாட்சித் தத்துவம்" என்பது பெயரளவே உள்ளது. இந்திய ஒன்றிய அரசியலமைப்புச் சட்டம் 7ஆவது பட்டியலில் உள்ள சட்டமியற்றுகின்ற முறையில், ஒன்றிய அரசு 97 துறைகளில் சட்டமியற்றும் அதிகாரத்தினையும், மாநில அரசு 66 துறைகளில் சட்டமியற்றும் அதிகாரத்தினையும் பெற்றிருக்கின்றது.

மாநில அரசுக்கு அதிகாரம்

- இது தவிர ஒன்றிய, மாநில அரசுகள் சேர்ந்து 47 துறைகளில் சட்டம் இயற்றலாம் என்றிருக்கின்றது. ஆக, ஒன்றிய அரசிடம் 144 துறைகளில் சட்டம் இயற்றுகிற அதிகாரம் உள்ளது. இது ஒன்றியத்தில் ஒற்றையாட்சி முறையையும், தன்னதிகார குவிப்பினையும் உறுதி செய்கிறது.
- எனவே நாம் தமிழர் ஆட்சியில் ஒன்றியத்தில் கூட்டாட்சி, மாநிலத்தில் தன்னாட்சி என்ற முழக்கத்தோடு அனைத்து வகையான துறைகளுக்கும் சட்டமியற்றும் அதிகாரம் மாநில அரசிற்கு உண்டு என்கிற வகையில் இந்திய ஒன்றிய அரசியலைப்புச் சட்டத்தில் உரிய மாற்றம் கொண்டு வரப் பாடுபடுவோம்.

தொடர்வண்டி நிருவாகம்

- மாநில எல்லைக்குள் பயணிக்கும் தொடர் வண்டி நிருவாகத் துறையினை நாம் தமிழர் அரசு இந்திய அரசியலைப்புச் சட்டமாற்றம் மூலம் கையகப்படுத்தும். ஒன்றிய அரசிற்கு படைத்துறை, நாணயம், உள்ளூர்த் தொடர்வண்டி நீங்கலாக மாநிலங்களுக்கிடையேலான பயணிக்கிற தொடர்வண்டி, மாநில அரசின் ஒப்புதலோடு கூடிய வெளியுறவுத்துறை போன்ற துறைகளைத் தவிர மற்ற அனைத்துத் துறைகளிலும் சட்டமியற்றி, நடைமுறைப்படுத்துகிற உரிமை மாநில அரசிற்கே உண்டு என்கிற நிலையை உரிய சட்ட மாற்றங்கள் மூலம் ஏற்படுத்த நாம் தமிழர் அரசு பாடுபடும்.

நீதி மேலாண்மை

- மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சார்பாளர்களின் சட்டமன்றம், நாடாளுமன்றம் இயற்றுகின்ற சட்டங்களையும், திட்டங்களையும், தடை செய்து நிறுத்தி வைக்கிற நீதிமன்ற மேலாண்மை நம் அரசியலைப்பு முறையில் அதிகம் உள்ளது. எடுத்துக்காட்டாக எழுவர் விடுதலை, மீத்தேன், கெயில், கூடங்குளம் போன்ற சிக்கல்களில் உச்சநீதிமன்றத்தின் செயல்பாடு மாநில அரசின் உணர்விற்கு எதிராக இருக்கின்றது. இந்த நிலையை மாற்ற வேண்டும். நீதிமன்ற மேலாண்மையைக் குறைத்து, மக்கள் உணர்வுகளுக்கு, மக்களாட்சிக்கு மதிப்பளிக்கக்கூடிய, உரிய சட்ட மாற்றங்களைக் கொண்டுவரத் தகுந்த முயற்சிகளை முன்னெடுப்போம்.







மாநில நீதிமன்றத்தின் அதிகாரம்

- இப்போது நடைமுறையில் உள்ள நீதிமன்றச் செயல்பாட்டு முறையில், உச்ச நீதிமன்றத்தின் மேலாண்மை அதிகமாக உள்ளது. இந்திய ஒன்றியத்திற்குள் இருக்கின்ற மாநில அரசுகளுக்கு இடையிலான பிணக்குகளைத் தீர்க்க மட்டுமே உச்ச நீதிமன்றத்தின் தலையீடு போதுமானது. மற்றபடி அந்தந்த மாநிலங்களுக்குட்பட்ட வழக்குகளை அந்தந்த மாநிலங்களின் தலைமை நீதிமன்றங்களே உச்ச அதிகாரம் பெற்ற நீதிமன்றங்களாகச் செயல்பட்டு தீர்ப்பினை வழங்கிட இந்திய அரசியலமைப்பில் உரிய மாற்றத்தை ஏற்படுத்த வலியுறுத்தப்படும்.

- ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வொரு மொழி, இன, பண்பாடு உள்ளது. பிற மாநிலங்களில் இருந்து வரும் நீதிபதிகளுக்கு அந்த மாநிலத்தின் மண், மொழி குறித்த புரிதல் இருக்க வாய்ப்பில்லை. இதனால் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. எனவே அந்தந்த மாநில அரசின் தலைமை நீதிபதியாக, அந்தந்த மண்ணின் மைந்தர்களே அமர்த்தப்படும் வகையில் 'சட்ட மாற்றத்தை' ஏற்படுத்த நாம் தமிழர் அரசு, மற்ற மாநிலங்களோடு இணைந்து குரலெழுப்பும், பாடுபடும்.

தமிழர்களுக்கு முன்னுரிமை

- தற்போது நடைமுறையில் உள்ள கல்வி, சமூகம், பொருளாதாரம் சார்ந்த இடப்பங்கீட்டு முறையைப் புரட்சியாளர் அண்ணல் அம்பேதகர் வழியில் நாம் தமிழர் அரசு சீராய்வு செய்யும். தற்போதுள்ள இடப்பங்கீடு முறை என்பது, வகுப்புவாரி முன்னுரிமை (Communal G.O.) வகையில் ஏற்படுத்தப்பட்ட முறையாகும். அம்முறையில் சமூகநீதி உரிமையான இடப்பங்கீட்டு முறையை முன்நிறுத்தித் தன் வருவாய் நோக்கத்திற்காக பூர்வீகத் தமிழ்க்குடிகளுக்கிடையே சாதி வேறுபாட்டினை வளர்த்து முரண்களை உருவாக்கித் திராவிடக் கட்சிகள் இதுவரை அரசியல் ஆதாயம் அடைந்து வருகின்றன.

- நாம் தமிழர் அரசானது இந்த இடஒதுக்கீட்டு முறையை ஒழுங்குபடுத்தி, முறையாக சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பை மேற்கொண்டு, அதன்படி இடப்பங்கீட்டை உறுதி செய்யும். தமிழ்க்குடிகளுக்கு முன்னுரிமை வழங்கி, பிறமொழிவழி மாநிலங்களில் தமிழின மக்களுக்கு என்ன முன்னுரிமை வழங்கப்படுகிறதோ, அதே முன்னுரிமை பிறமொழிவழித் தேசிய இன மக்களுக்குத் தமிழ்நாட்டில் வழங்கப்படும்.

வரி விதிப்பில் உரிய மாற்றங்கள்

- ஊராட்சி வரிகள், விற்பனை வரி, சுங்க வரி, கலால் வரி, பருவ வரி, சரக்கு மற்றும் சேவை வரி (GST) போன்ற பல்வகை வரிகளை ஒன்றிய மாநில அரசுகள் 50:50 என்கிற வகையில் கையாளுகின்றன. இந்த முறையினை மாற்ற வேண்டும். அந்தந்த மாநிலத்தில் பெறப்படும் வரிகளில் 75 விழுக்காடு மாநில அரசுக்கும், 25 விழுக்காடு ஒன்றிய அரசுக்குமாக பிரித்துக் கொள்ளும் வகையில் மற்ற மாநில அரசுகளுடன் இணைந்து நாம் தமிழர் அரசு போராடும்.



- அதே போன்று, இந்திய ஒன்றியத்திற்குள் இருக்கின்ற மாநில அரசுகள் ஒவ்வொன்றும் அந்தந்தத் தேசிய இனங்களின் நலன் சார்ந்து தனி அரசியலமைப்பு ஆவணத்தை ஏற்படுத்திக் கொள்கின்ற உரிமையைப் பெற நாம் தமிழர் அரசு பாடுபடும்.

தமிழே நீதிமன்ற மொழி – வழக்காடு மொழி

- உலகின் எல்லா நாடுகளிலும் அவரவர் தாய்மொழியில் தான் நீதிமன்றங்கள் நடைபெறுகின்றன. அயல் மொழியில் எந்த நாட்டு நீதிமன்றங்களும் நடை பெறவில்லை. எனவே உயர்நீதிமன்றம் முதல் உள்ளூர் நீதிமன்றம் வரை அனைத்து நீதிமன்றங்களிலும் தாய்மொழித் தமிழை ஆட்சிமொழியாக அலுவல் மொழியாக ஏற்படுத்த உரிய நடவடிக்கைகளை நாம் தமிழர் அரசு உடனடியாக எடுக்கும். நீதிமன்றங்கள், நீதிபதிகளுக்கோ, வழக்கறிஞர்களுக்கோ சொந்தமானதல்ல. இவர்களுக்கும் மேலான கோடானுகோடி மக்களுக்குரியது.

வாக்குச் செலுத்துதல் கட்டாயக் கடமை

- ஒவ்வொரு குடிமகனும் வாக்குச் செலுத்த வேண்டும் என்பது உரிமையல்ல. அது கட்டாயக் கடமை. வாக்குரிமை பெற்ற எல்லோரும் கட்டாயம் வாக்களிக்க வேண்டும். கல்வி கொடுத்து, வேலை கொடுத்து, மருத்துவம் கொடுத்து, பாதுகாப்பான வாழ்க்கையை கொடுக்கும் நாட்டிற்காக, ஒரு நாள் வரிசையில் நின்று வாக்களிக்கும் மக்களாட்சிக் கடமையை ஆற்றாதது தேச இரண்டகம். வெறும் 60 விழுக்காடு மக்கள் தேர்தலில் வாக்களிப்பதும், 40 விழுக்காடு மக்கள் ஒதுங்கி இருப்பதும் குடிநாயகம் (மக்கள் நாயகம்) அல்ல. நூறு விழுக்காடு வாக்குப்பதிவை உறுதி செய்வதே நாம் தமிழர் அரசின் நோக்கம்.

வாக்குச் செலுத்துவதில் சீர்திருத்தம்

- தற்போது இருக்கும் மின்னணு இயந்திரப் பெட்டி வாக்குப்பதிவு முறையை நாம் தமிழர் கட்சி எதிர்க்கின்றது. இந்த இயந்திர முறையைக் கண்டுபிடித்த அமெரிக்காவே இதை நடைமுறைப்படுத்தவில்லை. வாக்குச்சீட்டு முறையைத்தான் பயன்படுத்துகின்றது. மின்னணு வாக்குப்பதிவு முறை நீக்கப்பட்டு, வாக்குச் சீட்டு முறை நடைமுறைப்படுத்தப்படும். நன்கொடைச் சீட்டு போல அடிக்கட்டை நுனிக்கட்டையோடு வாக்குச் சீட்டு அச்சடிக்கப்படும். இரண்டிலும் வாக்காளர் அடையாளம் ஒட்டப்படும். கைவரையோ, கையொப்பமோ இரண்டிலும் இட்டு வாக்குச் செலுத்த வேண்டும். வாக்குச் செலுத்தியவருக்கு அதற்கான ஏற்பு பகுதி கிழித்து வழங்கப்படும். வாக்காளர் அடையாள அட்டையைவிட வாக்குச் செலுத்திய அடையாளத்தை மதிப்புமிக்கதாக நாம் தமிழர் அரசு பார்க்கும்.

வாக்குப் பதிவிற்குச் சான்று

- கள்ள வாக்குப் பதிவினைத் தடுக்க, வாக்களித்த பிறகு வாக்காளருக்குச் சான்று வழங்க வேண்டும் என நமது அரசு தேர்தல் ஆணையத்திடம் வலியுறுத்தும்.

தற்போது வாக்காளர் அடையாள அட்டை என்பது முதன்மை அடையாள ஆவணமாகப் பயன்பட்டு வருகிறது. ஆனால் நாம் தமிழர் அரசு தேர்தல்களில் வாக்களித்த சான்றை மட்டுமே அடையாள ஆவணமாக எடுத்துக் கொள்ளும். இந்தச் சான்று வைத்திருக்கும் குடிமக்களுக்குத்தான் குடிநீர் இணைப்பு, மின்சார இணைப்பு போன்ற அனைத்து வகையான உரிமைகளும் சலுகைகளும் வழங்கும். இதன் மூலம் வாக்குச்செலுத்துதல் கட்டாயக் கடமையாக்கப்படும். இதற்கான உரிய அரசியலமைப்பு மாற்றங்களை ஏற்படுத்த நாம் தமிழர் அரசு பிற மாநில அரசுகளை இணைத்துக்கொண்டு போராடி ஒன்றிய அரசிடம் வலியுறுத்துவோம்.

வெளிநாடு வாழ் தமிழர்களுக்கு வாக்குரிமை

- வாழ்வாதாரத்திற்காக வெளிநாட்டில் வாழ்கின்ற அனைத்துத் தமிழ் மக்களுக்கும் அஞ்சல் வழியில் வாக்களிக்கும் உரிமை பெற்றுத் தரப்படும்.

தமிழகத்தில் உச்சநீதிமன்றக் கிளை

- தமிழகத்தில் உச்சநீதிமன்றக் கிளையைச் சென்னையில் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும். ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் மாவட்ட நீதிமன்ற அதிகாரம் கொண்ட உரிமையியல் குற்றவியல் நீதிமன்றம் அமைக்கப்படும். உரிய நீதிபதிகளின் எண்ணிக்கை கொண்டுவரப்படும். காலியாக உள்ள நீதிபதிகள் பணியிடம் சமூகநீதிக் கொள்கைகள் அடிப்படையில் நிரப்பப்படும்.

தமிழில் படிவங்கள்

- கீழ் நீதிமன்றம் முதல் உயர் நீதிமன்றம் வரையிலும் அனைத்துப் படிவங்களும் தமிழில் அமைய ஆட்சி மொழிச் சட்டம் கொண்டு வரப்படும்.

இளம் வழக்கறிஞர்கள்

- சிற்றூராட்சி முதல் மாநகராட்சி வரை உரிமையியல், குற்றவியல் வழக்குகள், காவல் நிலைய சிக்கல்கள் உள்ளிட்ட அனைத்துச் சட்டம் தொடர்பான உதவிகள் செய்வதற்குச் சட்ட உதவி மையம் அமைக்கப்படும். இச்சேவைகளில் சட்டக்கல்வி முடித்த இளம் வழக்கறிஞர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள். இந்தச் சமூகச் சேவை சட்டக்கல்வி முடிக்கின்ற இளம் வழக்கறிஞர்கள் அனைவருக்கும் கட்டாயமாக்கப்படும்.

குறுஞ்செய்தியில் தகவல்

- மாநிலம் முழுக்க இருக்கின்ற நீதிமன்றங்களில் இணையத்தள வசதி உடனடியாக ஏற்படுத்தப்படும். ஒருங்கிணைந்த நீதிமன்றப் பணிகளைக் கவனிக்கத் தகவல் கட்டமைப்பு ஏற்படுத்தப்படும். வழக்கின் வினாவுதல் நாள்கள் வழக்கில் தொடர்புடைய அனைவருக்கும் கைப்பேசிக் குறுஞ்செய்தி மூலமாகத் தெரிவிக்கப்படும்.





எதையும் அறிவுப்பூர்வமாகச் சிந்தித்து
உணர்வுப்பூர்வமாகச் செயலாற்று!
எதையும் ஜனநாயகமாக முடிவெடுத்து
சர்வாதிகாரமாகச் செயலாற்று!

தன்னலமற்ற, அன்பான, சர்வாதிகார ஆட்சிமுறை

> உலகில் வளர்ந்த நாடுகள் அனைத்தும் தன் குடிமக்களை அன்பான சர்வாதிகார ஆட்சிமுறையின் கீழ்தான் வைத்திருக்கின்றன. நாட்டின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும், ஒழுங்கிற்கும் கட்டுப்பாடற்ற ஆட்சிமுறை தடையாகத்தான் இருக்கும். நாம் தமிழர் அரசு ஒவ்வொரு குடிமகனின் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் கவனத்தில் கொண்டே அன்பான சர்வாதிகார ஆட்சி முறையைக் கடைபிடிக்கிறது.

நமது ஆட்சிமுறை

- தன்னலம் சார்ந்த கொடுமையான ஆட்சி முறையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.
- நமது ஆட்சிமுறை 'தன்னலமற்ற அன்பான சர்வதிகார ஆட்சிமுறை.'

குழந்தை

- ஒரு குழந்தை இறக்கும் நிலையில் உள்ளது. அந்தக் குழந்தையைப் பிழைக்க வைக்கும் ஊசியும், மருந்தும் மருத்துவரிடத்தில் இருக்கிறது. ஊசியைப் போடும்போது குழந்தைக்கு வலிக்கும். ஆனால் ஊசி போட்டால்தான் குழந்தை பிழைக்கும். வலியைப் பொருட்படுத்தாமல் குழந்தையைக் காப்பாற்றும் செயல்தான் தன்னலமற்ற அன்பான சர்வதிகார ஆட்சிமுறை.

குழந்தைக்குப் பாடம்

- குழந்தையிடம் பாடத்தை ஏட்டில் மூன்று முறை எழுதிக் கொண்டு வருமாறு ஆசிரியர் பணிக்கும் பொழுது, குழந்தையின் பார்வையில் ஆசிரியர் சர்வாதிகாரியாகத்தான் தெரிவார். ஆனால் குழந்தையின் மனதில் பாடத்தை நன்றாகப் பதிய வைக்க வேண்டும் என்பதே நோக்கம். இச்செயல்தான் தன்னலமற்ற அன்பான சர்வாதிகார ஆட்சி முறை.



“ஒரு நேர்மையாளன்
சர்வாதிகாரியாகத்தான் இருக்க முடியும்.”

– ஐயா இறையன்பு (ஐ.ஏ.எஸ்.)



பனை

- மட்டையைக் கழிக்காமல் பனைமரத்தை அப்படியே விட்டுவிட்டால் பதராகிவிடும். அதற்கு வலிக்குமே என்று வலியைப் பொருட்படுத்தாமல் கத்தியை வைத்து மட்டையைக் கழித்துவிட்டால்தான் பனை பயன் தரும். அந்தப் பனையை செதுக்குகிற முறைதான், 'தன்னலமற்ற அன்பான சர்வாதிகார' ஆட்சி.

பெருந்தலைவர் காமராசர்

- முன்னாள் முதலமைச்சராக இருந்த பெருந்தலைவர் காமராசர் வைகை அணையை கட்டும்போது 20 சிற்றூர்களை வெளியேற்றுகிறார். அவர்களுக்கு மாற்று இடத்தை கொடுக்கிறார். 20 சிற்றூர்களைச் சேர்ந்த மக்களுக்கு அது பெரும் இழப்பாகத்தான் இருந்தது. பிறகு அணையைக் கட்டி முடித்தப் பிறகு திறந்து வைக்க முதல்வர் போகிறார். அப்போது 300 பேர் கொண்ட மக்கள் ஒன்றுகூடி கருப்புக் கொடி போராட்டம் நடத்துகிறார்கள். ''ஐயா, திரும்பிப் போய் விடலாமா?'' என்று பெருந்தலைவர் காமராசரிடம் கேட்கிறார்கள். வண்டியை விலக்கி ஓட்டு என்று சொல்கிறார். அணைக்கு அருகே அங்கு 10,000 பேர், 'காமராசர் வாழ்க' என்றனர். தன்னலமற்ற அன்பான சர்வாதிகார ஆட்சி முறை என்பது, 'மக்களின் கருத்துக்கு ஒரு அரசு இயங்க முடியாது, மக்களின் நலனுக்குத்தான் இயங்க முடியும்' என்பதாகும். எனவே, நாம் தமிழர் அரசானது மக்களின் கருத்துக்கானதல்ல, மக்களின் நலனுக்கானது.

லீ குவான் யு

- விடுதலைக்கு முன்பாக, 'ஆசியக் கண்டத்தின் தீண்டத்தகாத நகரம்' என்று இங்கிலாந்து பேரரசு மற்றும் மேலை நாடுகளால் கூறப்பட்ட சிங்கப்பூரை, பிரதமராகப் பதவியேற்றதும், ஆசியக் கண்டத்தின் மிகச் சிறந்த நகரமாக லீ குவான் யு மாற்றியமைக்கக் காரணம், அவரது 'தன்னலமற்ற அன்பான சர்வாதிகார' ஆட்சி முறைதான்.

செதுக்கி வளர்க்கும்

- வெளிநாட்டிற்குப் போகின்ற நமது மக்கள் அங்குள்ள சட்ட திட்டங்களை அப்படியே கடைப்பிடிக்கிறார்கள். 'இங்கே எச்சில் துப்பாதீர்கள், இங்கே சிறுநீர் கழிக்காதீர்கள், இந்தச் சாலையை மகிழுந்தில் (Car) இத்தனைக் அயிரமாத்திரி (km) வேகத்தில் கடந்து செல்லுங்கள்' என்ற அங்குள்ள சாலை விதிகளை அப்படியே கடைப்பிடிக்கிறார்கள். நமது நாட்டிற்கு வந்தவுடன் அதை அப்படியே மறந்து விடுகிறார்கள். காரணம் அந்த நாடு, 'தன்னலமற்ற அன்பான சர்வாதிகார' முறையில் ஆட்சி செய்கிறது. 'இந்தச் சாலையை 60 அயிரமாத்திரி (km) வேகத்தில் தான் கடந்து செல்ல வேண்டும் இல்லையென்றால், ஓட்டுனர் உரிமம் திரும்பப் பறிக்கப்படும்' என்றிருப்பதால் பயம் உண்டாகிறது. அந்த முறைதான் வளர்கின்ற சமுதாயத்தைச் செதுக்கும்.

அதிகாரம்


- அதிகாரம் வலிமையானது, எமது அதிகாரம் எம் மக்களுக்கானது.

தன்னலமற்ற அன்பான சர்வாதிகார ஆட்சிமுறை



நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு.

– தமிழ்மறை (20) – வள்ளுவப் பெருமகனார்



மலை இல்லையென்றால் மழை இல்லை.
மழை இல்லையென்றால் நீர் இல்லை.
நீர் இல்லையென்றால் வளமில்லை.
வளம் இல்லையென்றால் நிலமில்லை.
நிலம் இல்லையென்றால் நீ இல்லை,
நான் இல்லை, எதுவுமே இல்லை.

நீர்வளப் பெருக்கம்

தண்ணீரின் தேவையில் தன்னிறைவு

> பல்வேறு பெருமைகளைத் தன்னகத்தே கொண்டதுடன் நீண்ட நெடிய வரலாற்றுத் தொடர்ச்சியைக் கொண்ட இனமாகவும் தமிழ்த்தேசிய இனம் விளங்குகிறது. ஓடுகின்ற நீரைத் தேக்கி வைத்து அதைப் பாசனத்திற்கும், பயிர் வேளாண்மைக்கும் பயன்படுத்த முடியும் என உலகத்திற்கு உரைத்தவன் நம் பாட்டன் கரிகால்பெருவளத்தான்.

திருக்குறள் கூறுவது போல, **“நீர் இன்று அமையாது உலகு”**.
ஆனால், இன்று **“பசும்புல் தலை காண் பரிது”** என்ற நிலை உள்ளது.

“விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது” - **தமிழ்மறை.**
என்று வள்ளுவப் பெருமகனார் கூறுகிறார்.

மழைநீர் இல்லையென்றால் பசும்புல்கூட முளைக்காது.

“வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும்,
நெல் உயரக் குடி உயரும், குடி உயரக் கோல் உயரும்,
கோல் உயரக் கோன் உயர்வான்” என்று நம் ஔவைப் பெரும்பாட்டி கூறுகிறார்.

2000 ஆண்டுகளுக்கு முன்பாக மணற்பாங்கான ஆற்றின் குறுக்கே, ஓடிக் கொண்டிருக்கும் பெருவெள்ளத்தைத் தடுத்துக் கல்லணையைக் கட்டி நீர் மேலாண்மையை நிலை நாட்டியது தமிழினம். எகிப்தின் நைல் நதியின் குறுக்கே தடுப்பணையைக் கட்டும் முயற்சி நடந்து தோல்வியில் முடிந்ததாக வரலாறு அறிவிக்கின்ற காலத்தில், தமிழன் வெள்ளப் பெருக்கெடுத்தோடி வரும் காவிரி நீரைத் தடுத்து உலகத்திற்கே சான்றாக நின்றான்.

















- குடிநீர் என்பது விற்பனைக்கு அல்ல. நீர் என்பது உலக உயிர்களின் உயிர்த்தேவை. அது சந்தைப் பண்டமல்ல. விற்பனைப் பொருளும் அல்ல.

- "எண்ணூறு கோடி மக்களில் நூறு கோடி மக்களுக்குத்தான் குடிநீர் உள்ளது" என்றார் ஐயா அப்துல் கலாம். இரண்டு விழுக்காடுதான் குடிநீர் உள்ளது. அதை இருபது விழுக்காடாக உயர்த்துவது எப்படி என சிந்திக்காத மாந்தன், நீரை விற்றால் நிறைய பணம் கிடைக்கும் என சிந்திக்கிறான், அதுதான் கொடிய சிந்தனை.

- மாந்தன், காசு கொடுத்துக் கடையில் தண்ணீர் பெற்றுக் குடிக்கின்றான். ஆனால், காட்டில் உள்ள மான், மயில், சிட்டுக்குருவி, நாய், நரி, பூனை, புலி, கரடி, யானை உள்ளிட்ட விலங்கினங்கள் எல்லாம் என்ன செய்யும்? இதுதான் நாங்கள் முன்வைக்கும் கேள்வி. இந்த மண்ணுயிர்களுக்கான நீர்த் தேவையை எல்லாம் மாந்தனே சூரையாடிவிட்டால் என்னவாகும்?

- அதனால் தான் 'தண்ணீர் விற்பனை' தடை என்கிறோம்.

இருந்ததை இழந்தோம்

- வேளாண்மை செழிக்கக் காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வைகை, தாமிரபரணி, பவானி, அமராவதி, செய்யாறு, கெடிலம், வடவெள்ளாறு, தென்வெள்ளாறு, கொள்ளிடம், பாம்பாறு, பெரியாறு, திருமணிமுத்தாறு, சின்னாறு, தேனாறு, குண்டாறு, வைப்பாறு, கோதையாறு, பரம்பிக்குளம் ஆறு, ஆழியாறு, சிறுவாணி, நொய்யல், மணிமுத்தாறு (திருநெல்வேலி), மணிமுத்தாறு (வள்ளியூர்), பச்சையாறு, சிற்றாறு, கடனா ஆறு, அர்ச்சுனா ஆறு, கோமுகி ஆறு, கருமேனி ஆறு, பொதினி ஆறு மற்றும் உப்பாறு என முப்பத்து நான்கு ஆறுகள் வற்றாத உயிராறுகளாகத் தமிழர் நிலத்தில் நிறைந்து ஓடிப் பண்டைய தமிழகத்தை வளம் கொழிக்கச் செய்தன. இவற்றோடு சிற்றாறுகள், ஓடைகள் மற்றும் கிளை ஆறுகளையும் கணக்கில் கொண்டால், மொத்த எண்ணிக்கை சற்றேறக்குறைய 154ஆக உள்ளது.

  காவிரி தென்பெண்ணை பாலாறு - தமிழ்
  கண்டதோர் வையை பொருனைநதி - என
  மேவிய யாறு பலவோடத் - திரு
  மேனி செழித்த தமிழ்நாடு
  எனப் பாடி உவகை கொண்டான் நம் பாட்டன் பாரதி.

- மேலும் காவிரியாற்றுப்படுகை, பாலாற்றுப்படுகை, தென்பெண்ணையாற்றுப்படுகை, வைகையாற்றுப்படுகை, தாமிரபரணியாற்றுப்படுகை, வெள்ளாற்றுப் படுகை, பரவனாற்றுப்படுகை, அக்னியாற்றுப்படுகை, கருமேனியாற்றுப்படுகை, பாம்பாறு மற்றும் கோட்டக்கரையாற்றுப்படுகை, குண்டாற்றுப்படுகை, வைப்பாற்றுப்படுகை, கோதையாற்றுப்படுகை, நம்பியாற்றுப்படுகை, சென்னை வடிநிலப் படுகை, பரம்பிக்குளம் - ஆழியாற்றுப்படுகை மற்றும் வருசாலியாற்றுப்படுகை ஆகிய 17 ஆற்றுப் படுகைகள் உள்ளன.

- வடகிழக்குப் பருவமழை, தென்மேற்குப் பருவமழை என வான்மழை தந்த அமுதங்களாய் இரு பருவமழைக்காலங்கள் தமிழ்மண்ணைச் செழிக்க வைத்தன. வான்மழை நீரையும் மலையில் இருந்து உருவாகி நிலம் நோக்கி ஓடி வரும் ஆற்று நீரையும் சேகரிக்க ஏரி, கண்மாய், கரணை, தாங்கல், தருவை, ஏந்தல்,



தமிழ்நாட்டில்

ஓர் ஆண்டில் பெய்யும்

மழையின்

நிரலளவு (Average)

980

குறுமாத்திரி (mm)





கெடிலம் ஆறு



கூவம் ஆறு



நொய்யலாறு



பாலாறு

ஊருணி, குளம், குட்டை என பல வகையான நீர்நிலைகளை உருவாக்கி வைத்துத் தமிழ் நிலத்தைச் செழிக்க வைத்தார்கள் தமிழர்கள். 1970ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தமிழர் நிலத்தில் சற்றேறக்குறைய 39 ஆயிரம் நீர்நிலைகள் இருந்தன. ஆனால் இன்று இதில் பாதியளவு நீர் நிலைகள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளன.

- 1960களின் இறுதியில், தமிழ்நாட்டில் இருந்த மொத்த பயிர் செய்யப்பட்ட நிலத்தின் பரப்பளவு 152 இலட்சம் குறுக்கமாக இருந்தது. ஆனால் (தமிழ்நாடு வேளாண்மை மற்றும் வேளாண் குடிகள் நலத் துறையின் (Department of Agriculture and Farmers Welfare) தகவலின்படி அண்மை ஆண்டுகளில் பயிர் செய்யப்படும் நிலத்தின் பரப்பளவு பெருமளவு குறைந்து 122.79 இலட்சம் குறுக்கமாக உள்ளது.

தமிழகத்தில் மழைநீர்

- **தமிழகத்தில் ஓராண்டிற்குக் கிடைக்கும் மழைநீர் 4300 நூற்றுக்கோடி கன அடி (TMC).**
- **அதில் நாம் பயன்படுத்தும் நீரின் அளவு 2000 நூற்றுக்கோடி கன அடி (TMC).**
- **வீணாகக் கடலில் கலக்கும் நீரின் அளவு 2300 நூற்றுக்கோடி கன அடி (TMC).**
- தமிழகம் பருவமழையையே பெரிதும் நம்பியுள்ள மாநிலம். இங்கு ஆண்டின் நிரலளவு மழை மேற்சொன்னபடி சற்றொப்ப 980 குறுமாத்திரி (mm) ஆக உள்ளது. மேலும், தமிழ்நாட்டில் 34 முதன்மையான ஆறுகள் மற்றும் அவற்றின் பெரிய துணையாறுகளும், 17 ஆற்றுப் படுகைகளும் உள்ளன. தமிழ்நாட்டின் மேற்பரப்பில் (ஆறுகள், ஏரிகள், அணைகள் மூலம்) இயற்கையாகக் கிடைக்கும் மொத்த நீரின் திறன் (Total Surface Water Potential) ஏறக்குறைய 692.78 நூற்றுக்கோடி கன அடி ஆகும். அதாவது 75 விழுக்காடு. தனி ஒருவர் நீர்வள இருப்பு தேசிய நிரலளவான 2,200 கனமாத்திரி ஒப்பிடும்போது, தமிழகத்தில் வெறும் 900 கனமாத்திரி மட்டுமே பயன்பாட்டுக்கு உள்ளது. மேலும், இந்தியாவின் நீர்வளங்களில் 2.5 விழுக்காடு மட்டுமே இங்குள்ளது.


- பயன்படுத்தக்கூடிய நிலத்தடி நீர் மீள்நிரப்பு 22,423 பத்திலக்கம் கனமாத்திரி ஆகும். மொத்த நிலத்தடிநீர் வரைவு என்று சொல்லப்படும் தற்போதைய பயன்பாடான 13,558 பத்திலக்கம் கனமாத்திரி நீரானது கிடைக்கக்கூடிய மீள்நிரப்பில் 60 விழுக்காடு ஆகும். மூன்றில் ஒரு பங்கு தொகுதிகளில் (35.8 விழுக்காடு) அதிக நீர்ச்சுரண்டல் ஏற்கனவே நிகழ்ந்துள்ளது, எட்டு தொகுதிகள் (2 விழுக்காடு) உப்புநீராக மாறிவிட்டன. 95 விழுக்காட்டிற்கும் அதிகமான மேற்பரப்பு நீரும், 80 விழுக்காடு நிலத்தடி நீரும் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ளன.


- 2030இல் சென்னையின் குடிநீர் பற்றாக்குறை சற்றொப்ப 46 கோடி சீர்படி (litre) என்ற அளவுக்கு இருக்குமெனவும், அது 2050ஆம் ஆண்டில் இது சற்றொப்ப 96 கோடி சீர்படி(litre)யாக இருக்குமெனவும் நீரியல் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

- சென்னை போன்ற பெருநகரங்களில் வசிக்கும் ஒருவருக்கு ஒரு நாளைக்குத் தேவையான நீரின் அளவு 135 சீர்படி (litre) (LPCD: Litres Per Capita Per Day). ஆனால் 80 முதல் 100 சீர்படி (litre) நீர் மட்டுமே கிடைக்கிறது. இரண்டாம் கட்ட நகரங்கள் / நகர்ப்புறங்களில் (மாநகராட்சிகள் / நகராட்சிகள்) 70 முதல் 135 சீர்படி (litre) நீர் தேவைப்படும். ஆனால் 60 முதல் 90 சீர்படிக்குள் தான் நீர் கிடைக்கிறது. அதுவே ஊரக மக்களுக்கு ஒரு நாளைக்கு






நிரம்பிய
கிணறு
பயன்படும் கிணறு
கடல் மட்டம்
உப்பு நீர்
நீர் மட்ட
அளவு
நிலத்துடி நீர்
உப்பு நீர் நிலத்துடி நீர் கலப்பு


மழைநீர் சேகரிப்புத்
தொட்டிகள்
மழைநீர் சேகரிப்புத்
தொட்டிகள்
சாலையோர
வடிகால்
நிலத்தடி நீர்
செறிவூட்டும்
கிணறுகள்

55 சீர்படி (litre) என்ற அளவில் நீர் தேவைப்படுகிறது, ஆனால் கிடைப்பது என்னவோ 40 சீர்படி(litre)க்கும் குறைவாகவே உள்ளது.

- 2001-2006 காலகட்டத்தில் தமிழக அரசின் கட்டாய மழைநீர் சேகரிப்புத் திட்டம் காரணமாகச் சென்னை மற்றும் பிற மாவட்டங்களில் நிலத்தடி நீர்மட்டம் 50 விழுக்காடு வரை உயர்ந்தது. ஆனால், இந்தக் கட்டமைப்புகளைப் பேணிக் காக்காததால், மீண்டும் நீர்மட்டம் சரியத் தொடங்கி உள்ளது.

- தமிழகம் கணிசமான அளவு நீர்த் தன்னிறைவுக்கு அண்டை மாநிலங்களையே சார்ந்துள்ளது, இது ஆண்டுதோறும் சற்றொப்ப 261.70 நூற்றுக்கோடி கன அடி (TMC) ஆகும். மக்கள்தொகைப் பெருக்கத்தின் காரணமாகவும், பொருளாதார வளர்ச்சியால் தூண்டப்பட்ட அதிகப்படியான தனிநபர் ஒருவர் தேவைகள் காரணமாகவும் தமிழ்நாட்டிற்கான நீரின் தேவை வேகமாக அதிகரித்துள்ளது. பிற மாநிலங்களிடம் இருந்து தமிழகத்திற்கு வரவேண்டிய, நமக்கு உரிமையுள்ள ஆற்று நீர் ஆண்டுதோறும் மறுக்கப்படுவதாலும், 50 ஆண்டுகால திராவிட கட்சிகளின் ஆட்சிகளின் ஊழல் நிரம்பிய தன்னலம் சார்ந்த ஆட்சி முறைகளாலும் காலங்காலமாக தண்ணீர் தேவையில் தன்னிறைவடைய இயலாமல் தமிழகம் கையறு நிலையிலேயே நிற்கிறது. நாம் தமிழர் அரசு, சேமிக்கப்படாமல் கடலில் கலக்கும் மழை நீரைச் சேமித்து மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கும்.

வீணாய்ப் போன நீர் ஆதாரங்களும் தொலைந்துபோன நீர் நிலைகளும்

- தமிழகம் முழுவதும் பல்வேறு நீர்நிலைகள் மனிதத் தலையீடுகளால் அழிவைச் சந்தித்துள்ளன. தலைநகர் சென்னையில் Long Tank, வியாசர்பாடி ஏரி, கல்லுக்குட்டை ஏரி, முகப்பேர் ஏரி, அயனாவரம் ஏரி, வில்லிவாக்கம் ஏரி, நுங்கம்பாக்கம் ஏரி, பள்ளிக்கரணை மற்றும் வேளச்சேரி ஏரி ஆகியவை குடியிருப்புகளாகவும் அரசு கட்டடங்களாகவும் மாறித் தடம் தெரியாமல் அழிந்துவிட்டன.

- தருமபுரி மற்றும் கிருட்டிணகிரி மாவட்டங்களில் பாலக்கோடு, பென்னாகரம் மற்றும் ஓசூர் பகுதிகளில் உள்ள பல ஏரிகள் வன்கவர்புகளால் சுருங்கிவிட்டன. கொங்கு மண்டலத்தில் ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் பாயும் நொய்யல், பவானி மற்றும் அமராவதி ஆறுகள் 600க்கும் மேற்பட்ட சாயப்பட்டறை மற்றும் தோல் தொழிற்சாலைக் கழிவுகளால் முற்றிலும் சீரழிந்துள்ளன. சேலம் மாவட்டத்தில் பாயும் திருமணிமுத்தாறு மற்றும் வசிட்ட ஆறு ஆகியவையும் இதேபோல ஆலைக்கழிவுகளால் இந்தியாவின் மிக அதிக மாசுள்ள ஆறுகளின் பட்டியலில் (Priority I) இடம் பெற்றுள்ளன. வட தமிழகத்தில் வேலூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களில் பாலாறு மற்றும் அதன் கிளை ஆறுகள் தோல் தொழிற்சாலைக் கழிவுகளால் நிலத்தடி நீருடன் சேர்ந்து பாழாகியுள்ளன.

- மேலும் கடலூர் மாவட்டத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க வீராணம் ஏரி மற்றும் வெல்லிங்டன் ஏரி ஆகியவை தூர்வாரப்படாததாலும், மணல் மேவி வருவதாலும் தங்கள் கொள்ளளவை இழந்து வருகின்றன. தென் தமிழகத்தில் மதுரை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் வைகை ஆறு மற்றும் அதன் நீர்ப்பிடிப்புப் பகுதியான கண்மாய்கள் வன்கவர்பு மற்றும் நகரக் கழிவுகளால் சிதைக்கப்பட்டுள்ளன, வற்றாத ஆறான தாமிரபரணி கூட திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஆலைக்கழிவுகள் மற்றும் மணல் கொள்ளையால் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. இவற்றுடன் கோவை மாவட்டத்தின்




“நீர்நிலைகளைக் காத்திட, நீர் ஆதாரங்களைப் பெருக்கிட, வன்கவர்புகளை அகற்றி நீர்வழித் தடங்களைப் புதுப்பித்திடப் பல்வேறு செயல் திட்டங்களை, அமையவிருக்கும் நாம் தமிழர் அரசு உடனடியாக நிறைவேற்றும்.”


வீடுகளுக்கு இரட்டைக் குழாய் நீர் வழங்கல்


புதிய நீர்த்தேக்கங்கள்

நமது நீர் வளத்தைச் சேமித்துப் பாதுகாக்கும் பொருட்டு, புதிய நீர்க் கொள்கை மழைநீர் மறை பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்படும்.


புதிய நீர்த்தேக்கங்கள்


மேம்படுத்தப்பட்ட தண்ணீர் தூய்மையாக்கல் நிலையங்கள்


தொழிற்சாலைகளுக்குத் தூய்மையாக்கப்பட்ட தண்ணீர்

சிங்காநல்லூர், உக்கடம் பெரியகுளம், வாலங்குளம் போன்ற குளங்களும், கரூர் மாவட்டத்தின் பஞ்சப்பட்டி ஏரி மற்றும் வெள்ளியணை ஏரி ஆகியவையும் முறையான பேணுதலின்றி வன்கவர்புகளின் பிடியில் சிக்கித் தவிக்கின்றன.

- பெங்களூரு நகரத்தின் மொத்தக் கழிவுநீரும் நேரடியாகத் தென்பெண்ணை ஆற்றில் விடப்படுவதால், ஓசூர் அருகே தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள கௌவரப்பள்ளி அணை முழுவதும் நச்சுக்கழிவுகளால் நிரம்பி வழிகிறது.

- இயற்கையாக உருவான நீர்வழிப்பாதைகள் அனைத்தும் அழிக்கப்பட்டிருக்கின்றன மற்றும் வன்கவர்புகளால் மறிக்கப்பட்டிருக்கின்றன. அளவற்ற ஆற்றுமணல் கொள்ளையால் ஊற்றுநீர் வளமும் வற்றிப்போய்விட்டது. முறையான கழிவு நீர் மேலாண்மை இல்லாததால் ஆறுகள் கழிவுநீரைச் சுமக்கும் தொட்டியாக மாறி விட்டன.

- ஏரிகள், குளங்கள், கரணைகள் தனியார்களால் வன்கவரப்பட்டு அழிக்கப்பட்டன. 'நீர் இன்று அமையாது உலகு' என்று கற்பிக்கிறது தமிழ்மறை. எனவே, நீர்நிலைகளைக் காத்திட, நீர் ஆதாரங்களைப் பெருக்கிட, வன்கவர்புகளை அகற்றி நீர்வழித் தடங்களைப் புதுப்பித்திடப் பல்வேறு செயல் திட்டங்களை, அமையவிருக்கும் நாம் தமிழர் அரசு உடனடியாக நிறைவேற்றும்.

முதன்மைப் பணிகள்

- ஏரிகள், குளங்கள், ஆறுகள், நீர்நிலைகள் ஆகியவற்றில் கலக்கும் கழிவுநீர் முற்றிலுமாகத் தடுக்கப்படும்.

- ஆற்றங்கரையோரம் எந்தவித தொழிற்சாலைகளுக்கும் அனுமதி வழங்கப்படாது. ஏற்கனவே இருக்கும் தொழிற்சாலைகள், 'தூய்மைப்படுத்தும் மையத்தை' சரியான முறையில் செயல்படுத்தவில்லை என்றால், அவர்களின் உரிமம் திரும்பப் பெறப்படும். கழிவுகளை ஆற்றில் கலக்கவிடும் தொழிற்சாலைகளின் உரிமமும் உடனடியாக திரும்பப் பெறப்படும். ஆலைகள் கழிவுநீரைச் தூய்மைப்படுத்தி (மறுசுழற்சி நீராக) பயன்படுத்திக் கொள்ள ஏற்பாடு செய்யப்படும்.

- தமிழகத்திலுள்ள 17 ஆற்றுப்படுகைகளின் நீர்வழித்தட வரைபடத்தினைக் கொண்டு அவை கடந்து வரும் பாதைகள், அவற்றின் கிளை ஆறுகள், அவற்றோடு தொடர்பில் இருக்கும் நீர்நிலைகள் முதலியவை கண்டறியப்பட்டுப் பேணிக்காக்கப்படும். வன்கவர்புகள் இருக்கும் நிலையில் அவை அகற்றப்பட்டு, நீர் நிலைகளின் இயற்கைப் பரப்பு மீட்டெடுக்கப்படும்.

- நீர் நிலைகளை வன்கவர்பு செய்பவர்களுக்கு கடுமையான சிறைத்தண்டனை வழங்கும் வகையில் சட்டம் இயற்றப்படும்.

- ஏரி, கண்மாய், குளங்கள் போன்ற நீர்நிலைகள் தூர்வாரப்பட்டு அதன் கரைகள் வலுப்படுத்தப்படும்.

- தண்ணீர் பற்றாக்குறை ஆற்றுப்படுகைகளில் நீர்வள மேலாண்மை மூலம் அப்படுகையின் எப்பகுதியிலும் தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும். தேசிய நீர்க்கொள்கைப்படி தேசிய வட்டார மற்றும் சிற்றூர் அளவிலும், தொடர்ந்து தண்ணீர் கிடைக்கும் வகையில் கட்டுமானங்கள் அமைக்கப்படும்.




பசுமை ஏரி


சீர்கெட்ட மூக்கனேரி


சீரமைத்த மூக்கனேரி


செம்மையுற்ற மூக்கனேரி


உக்கடம் ஏரியில் மக்கள் சீரமைப்புப் பணி


செம்மையுற்ற உக்கடம் ஏரி


தூக்கணங் குருவிக் கூடு

நீர்நிலைகளின் கரைகளில் மண் அரிப்பைத் தடுக்கவும், கரையை வலிமைப்படுத்தவும் ஆல், அரசு, பனை, புங்கை, பூவரசு, மூங்கில், வேம்பு, புளி போன்ற மரங்கள் நடப்படும்.

- தண்ணீரை முறையாகப் பயன்படுத்தத்தக்க சட்ட திட்டங்கள் தீட்டி நடைமுறைப்படுத்தப்படும்.
- வேளாண்மை, தொழில், அன்றாட பயன்பாடு ஆகியவற்றில் பின்பற்ற வேண்டிய தண்ணீர் மேலாண்மை முறைகள் கடைபிடிக்கப்படும். மேலும் மக்கள் உடல்நலம் காக்கும் அளவிலும் நோய்களைக் கட்டுப்படுத்தும் வகையிலும் நீரைப் பயன்படுத்தி சுற்றுச்சூழலை நாம் தமிழர் அரசு பாதுகாக்கும்.

கால்வாய்கள் சீரமைப்பு

- தற்போது நீர்த்தாரைகள், கால்வாய்களின் இருபுறம் மற்றும் தரைப்பகுதி ஆகியவற்றில் பைஞ்சுதை (Cement) கொண்டு பூசி விடுகிறார்கள். இதனால் நிலத்தடி நீர் செறிவூட்டப்படுவது தடுக்கப்படுகிறது. மண் வளம் பெறவும், நண்டு, மண்புழு, நத்தை போன்ற உயிரினங்கள் வாழ்ந்து மண்ணை நெகிழ்வுத் தன்மையுடன் வைத்திருக்கவும் வழி இல்லாமல் போகிறது. எனவே, கால்வாய்களில் பைஞ்சுதைத் தளம் அமைப்பதை விடுத்து, இயற்கை முறையில் நீர் கசிவு மூலம் நிலத்தடி நீர் உயர்வதற்கு வழிவகை செய்யப்படும்.

கரைகளை வலிமைப்படுத்துதல்

- கால்வாய் மற்றும் நீர்நிலைகளின் கரைகளில் மண் அரிப்பைத் தடுக்கவும், கரையை வலிமைப்படுத்தவும் பனை, புங்கை, பூவரசு, மூங்கில், வேம்பு, புளி போன்ற மரங்கள் நடப்படும். இம்மரங்களின் வேர்கள் மண்ணை இறுக்கமாகப் பற்றிக்கொண்டு கரைகளைப் பாதுகாக்கும். பைஞ்சுதைப் பூச்சுகளுக்கு மாறாக, குறிப்பிட்ட இடைவெளிகளில் கற்களை அடுக்கி, நீர் மேலாண்மை செய்யப்படும். மக்கள் பயன்பாட்டிற்காகப் படித்துறைகள் அமைக்கப்படும்.

ஆற்றுப்படுகை மேலாண்மை

- ஓர் ஆறு மற்றும் அதன் கிளை ஆறுகள் பாயும் புவியியல் பகுதியைக் (ஆற்றுப்படுகை) கருத்தில் கொண்டு, நீர்வளத்தைப் பாதுகாக்கவும், பயன்படுத்தவும், மேம்படுத்தவும் உதவும் ஒரு செயல்திட்டம்தான் ஆற்றுப்படுகை மேலாண்மை. காடுகள் அழிவதால் ஆற்றுப்படுகையின் பருவ காலத்தில் பெரும் மாற்றம் ஏற்பட்டு மழை அளவு குறைந்து வருகிறது. சில ஆற்றுப்படுகைகளில் வேகமாக ஓடும் மழை நீரை முழுவதுமாகப் பயன்படுத்த முடிவதில்லை. அரசு, எல்லா ஆற்றுப்படுகைகளில் உள்ள பங்கீட்டாளர்கள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள் ஆகியோரின் ஒத்துழைப்பு மூலம் ஆற்றுப்படுகைகளைப் பேணிக்காக்கும்.
- தண்ணீர் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ளும் வகையில் நீர் மேலாண்மை அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படும். பொறியியல் சார்ந்த மேலாண்மை வழிகளில் தண்ணீர் இருப்பு, அதன் தேவை போன்றவற்றைத் துல்லியமாகக் கணக்கிட்டு ஒரு ஆற்றுப்படுகையில் நிலவும் தண்ணீர்ப் பற்றாக்குறை களையப்படும்.

நீர்நிலைகளைச் சுற்றி மரங்கள்

- ஆறு, ஏரி, கண்மாய், கரணை, ஏந்தல், குளம், குட்டை ஆகியவற்றின் கரைகளைச் சுற்றி பனைமரம், வேம்பு, புங்கை, பனிக்கொன்றை, மருதமரம், நாவல்,



கல்லணை



வைகை அணை



வீராணம் ஏரி



மேட்டூர் அணை



அமராவதி அணை



தடுப்பணை



முல்லைப்பெரியாறு அணை



பவானி சாகர் அணை



> பெரும்பாட்டன்களின் பெயரில் 500 மற்றும் 1000 குறுக்கம் பரப்பளவில் புதிய ஏரிகள், கண்மாய்கள் உருவாக்கப்படும். அதற்கான நீர்வரத்துக் கால்வாய்கள் வெட்டப்படும்.

கனிக்கொன்றை, ஆலமரம், பூவரசு, அரசமரம், தேக்குமரம், கோங்குமரம், கடம்ப மரம், மருத மரம், வெட்டி வேர், நாணல் மற்றும் கோரைகள் நட்டு வளர்க்கப்பட்டு, உயிர்ச்சூழல், பல்லுயிர்ப் பெருக்கத்திற்கு ஏற்றாற்போல் நீர் நிலைகள் மாற்றப்பட்டுப் பாதுகாக்கப்படும்.

- நீர் நிலைகளின் கரைகளைச் சுற்றி நடப்படும் பனைமரங்கள் நிலத்தடி நீரைப் பாதுகாத்து வைத்துக்கொள்ளும். அது வேளாண்மைக்குப் பயன்படும். பனைமரங்கள் உள்ள பகுதிகளில் பல்வேறு வகையான பறவைகள் வருவதால் அந்தப் பகுதியில் உள்ள பூச்சிகளை உண்டு வேளாண் தொழிலுக்கு நண்பனாக இருக்கும். அதனால் நீர்நிலைகளைக் காத்து உழவுக்கு உதவியாக நிற்கும் பனை மரங்கள் வளர்க்கப்படும்.
- அனைத்து நீர்நிலைகளும் முள்வேலி அமைக்கப்பட்டு, கண்காணிப்புக் கருவிகளின் உதவியோடு நீர்க்காவல் படை கொண்டு கண்காணிக்கப்படும்.
- நீரை உறிஞ்சி கொள்ளையடிக்கும் தனியார் நிறுவனங்கள் தடை செய்யப்படும். அவர்களுடனான ஒப்பந்தங்கள் திரும்பப் பெறப்படும். தனியார் குடிநீர் விற்பனை தடை செய்யப்படும்.
- நீர் அதிகமாகத் தேவைப்படும் இடங்களில் புதிய நீர்வரத்துத் தாரைகள் உருவாக்கப்படும்.
- ஆழ்துளைக் குழாய்களின் மூலம் நீர் எடுப்பது ஒழிக்கப்படும். ஏரி, கண்மாய், குளம், குட்டைகளில் நீரைச் சேமித்தால் ஆழ்துளைக் குழாய் நீர் தேவை யிருக்காது. இதனால் நிலத்தடி நீர் பாதுகாக்கப்படும்.

புதிய ஏரிகளுக்குப் பெரும்பாட்டன்களின் பெயர்கள்


கரிகாலச்சோழன்
இராசராசச்சோழன்
அரசேந்திரச்சோழன்
பராந்தகச்சோழன்
ஆதித்த கரிகாலச்சோழன்
குந்தவை நாச்சியார்
இயற்கை வேளாண் பேரறிஞர் நம்மாழ்வார்

போன்ற நமது பெரும்பாட்டன்களின் பெயரில் 500 முதல் 1000 குறுக்கப் பரப்பளவில் புதிய ஏரிகள், கண்மாய்கள் உருவாக்கப்படும். அதற்கான நீர்வரத்துக் கால்வாய்கள் வெட்டப்படும். அதன் கரையோரங்களில் பல்வேறு பெரு மரங்கள் நடப்படும். ஆய்வுக்குப் பிறகு, தகுந்த இடங்களில், நூறு குறுக்க நிலங்களுக்கு பத்து குறுக்க பரப்பளவில் ஏரிகள், குளங்கள் வெட்டப்பட்டுப் புதிய மழைநீர்த்தேக்கங்கள் அமைக்கப்படும். இதன்மூலம் வேளாண்மை வளப்படுத்தப்பட்டுப் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு அரசு வேலை வாய்ப்பு உருவாக்கப்படும்.

பாண்டியாறு – புன்னம்புழாத் திட்டம்

- 1955ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட பாண்டியாறு - புன்னம்புழா நீர்த்தேக்கத் திட்டம், கூடலூரில் இருந்து 5 அயிரமாத்திரி (km) தொலைவில் அடிக்கல் நாட்டப்பட்டது. பல்வேறு பொய்ப் பரப்புரைகளைக் கொண்டு கேரள அரசு கொடுத்த தொடர் அழுத்தத்தால் 1972ஆம் ஆண்டு அந்தத் திட்டத்தைக் கைவிட்டார்கள். இந்தத்





தமிழக நீர்வழித் தடங்கள் வரைபடம்

காவிரி, வைகை, தாமிரபரணி, தென்பெண்ணை, பாலாறு உள்ளிட்ட தமிழகத்தின் அனைத்து ஆறுகளிலும் 15 அயிரமாத்திரி(km)க்கு ஒரு தடுப்பணை கட்டிப் புதிய வேளாண் மண்டலங்கள் உருவாக்கப்படும்.

திட்டம் நிறைவேற்றப்பட்டால் ஈரோடு, நாமக்கல், கரூர், திருச்சி, தஞ்சை, உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள பல ஆயிரம் குறுக்கம் வேளாண் நிலங்கள் பயன்பெறும். கூடலூர் உள்ளிட்ட பகுதிகள் சிறந்த சுற்றுலாத்தலமாகியிருக்கும். மேலும் இத்திட்டம் நிறைவடைந்தால், தென்மேற்குப் பருவமழையால் கேரள நிலப்பகுதி வழியாக கடலுக்கு செல்லும் சற்றொப்ப 20 நூற்றுக்கோடி கன அடி (TMC) மிகை நீரை ஆண்டுதோறும் தமிழகத்திற்குக் கொண்டுவர முடியும். இது தமிழகத்தின் காவிரிப் பாசனப் பகுதிகளுக்குக் கூடுதல் நீராதாரத்தை உறுதி செய்யும்.

- கேரள அரசுடன் இணக்கமான முறையில் பேசி, அணை கட்டுவதற்கு மாறாக, பெரிய குழாய்கள் மூலம் நீரைத் திருப்பி, மாயாறு மற்றும் பவானி ஆறுகளுடன் இணைக்கும் மாற்றுத்திட்டம் செயல்படுத்தப்படும். இதன் மூலம் வேளாண்மைக்கான தேவைகள் நிறைவு செய்யப்படும்.
- சற்றேறக்குறைய 16 அயிரமாத்திரி (km) நீளமுள்ள வீரநாராயணன் ஏரி ஆழப்படுத்தப்பட்டு, ஒரு சிறிய கடல் போல மாற்றியமைக்கப்படும். மழைக்காலங்களில் கிடைக்கும் அதிகப்படியான நீரை இதில் சேமித்து, பெரிய குழாய்கள் மூலம் காவிரி மற்றும் வடிநிலப் (Delta) பாசனப் பகுதிகளுக்குக் கொண்டு செல்ல வழிவகை செய்யப்படும்.
- நல்லாறு, ஆழியாறு பாசன விரிவாக்கத் திட்டம்,
- மதுரை மாவட்டம் அழகர் அணைத் திட்டம்.
- தாமிரபரணி, நம்பியாறு, கருமேனியாறு வெள்ளநீர்க் கால்வாய்த் திட்டம்.

  என நீண்ட காலமாக திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் கிடப்பில் போடப்பட்டுள்ள நீர் பாசனத் திட்டங்கள் நாம் தமிழர் அரசு பதவியேற்ற இரண்டாண்டுகளுக்குள் முழுமையாக நிறைவேற்றும்.
- இருபதாண்டு காலமாக மறுக்கப்பட்டு வரும் நெய்யாற்றின் இடதுபுறக் கால்வாய்ப் பாசன உரிமை மீட்கப்படும்.
- காவிரி, வைகை, தாமிரபரணி, தென்பெண்ணை, பாலாறு உள்ளிட்ட தமிழகத்தின் அனைத்து ஆறுகளிலும் 15 அயிரமாத்திரி(km)க்கு ஒரு தடுப்பணை கட்டிப் புதிய வேளாண் மண்டலங்கள் உருவாக்கப்படுவதுடன் மக்களின் குடிநீர்த் தேவையும் நிறைவு செய்யப்படும்.


முல்லைப் பெரியாறு சிற்றணை

- முல்லைப்பெரியாறு அணைக்குக்கீழே அமைந்துள்ள சிற்றணையைத் தூர்வாருவது என்பது அப்பகுதி வேளாண் குடிகளின் நீண்டகாலக் கோரிக்கையாகும். பல ஆண்டுகளாகத் தேங்கியுள்ள வண்டல் மண் மற்றும் மணலை அகற்றுவதன் மூலம், இந்தச் சிற்றணையின் நீர் தேக்கும் கொள்ளளவு குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்கும்.


புதிய நீர்த்தேக்கத் திட்டங்கள்

- சிறுவாணி அணைக்கு அருகில் தமிழக எல்லையில் புதிய அணை கட்டப்படும். சிறுவாணி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதி முழுதும் தமிழகத்தில் உள்ளன. எனவே மிகை நீர் ஆனைக்கட்டி வழியாகக் கோட்டத்துறை ஆற்றில் கலந்து கேரளா மாநிலம் செல்வதைத் தடுக்க ஆனைக்கட்டியில் நீர்த்தேக்கம் அமைத்து கணுவாய்சங்கனூர் பள்ளம் வழியாக நொய்யல் ஆற்றில் கலக்க நடவடிக்கை






ஆற்று மணல் கொள்ளை



அகத்தியர் அருவி



சீமைக் கருவேல மரம் அழிப்பு



வீராணம் ஏரி



யூக்கலிப்டஸ் (கற்பூரத் தைல மரம்) தடை செய்யப்படும்

நாம் தமிழர் அரசு, தண்ணீர் வணிகத்திற்குத் தடைவிதிக்கும். ஒவ்வொரு வீட்டிற்கும் அரசே இலவச தூய குடிநீர் கொடுக்கும். அதற்கான புதிய கட்டமைப்புகளை உருவாக்கும். இது பல்லாயிரக்கணக்கான புதிய வேலைவாய்ப்பைக் கொடுக்கும் துறையாக மாற்றப்படும்.

எடுக்கப்படும். மேலும் நொய்யல் ஆறு சாயக்கழிவுகளிலிருந்து காக்கப்பட்டுச் சீரமைக்கப்படும்.

- ஆண்டு முழுவதும் மழை பெய்யக்கூடிய வால்பாறை மலைப்பகுதிகளில் பெய்யக்கூடிய மழைநீர் சோலையாறு வழியாக கேரளாவில் நுழைந்து கடலில் கலக்கின்றது. எனவே வால்பாறையில் புதிய அணையைக் கட்டி அமராவதி ஆற்றில் நீரைக் கொண்டுவரும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.

- விருதுநகர் மாவட்டம் - திருவில்லிபுத்தூர், இராசபாளையம், சிவகாசி, அருப்புக்கோட்டை, தென்காசி மாவட்டம் - வாசுதேவநல்லூர், சங்கரன்கோவில், தூத்துக்குடி மாவட்டம் - கோவில்பட்டி, விளாத்திக்குளம் போன்ற கரிசல் பூமி பகுதிகளுக்குப் பயன்படும், அழகர் அணை, செண்பகம்தோப்பு, பிளவக்கல், இருக்கன்குடி ஆகிய நீர் பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்படும். இதன்மூலம் ஏறக்குறைய எட்டாயிரம் கண்மாய்கள், பல்லாயிரக்கணக்கான கிணறுகள் நீர்பிடிப்புப் பகுதியாக வளம்பெறும்.

- பழனி மலைத்தொடரில் பொழியும் மழைநீரைத் தேக்கப் புதிய தடுப்பணையைக் கட்டி, சண்முகா ஆற்றுக்குத் திருப்பும் திட்டத்தைச் செயல்படுத்துவோம்.

- கிழக்குத் தொடர்ச்சி மலைகளில் உள்ள புளியஞ்சோலை, கொல்லிமலை, சேர்வராயன் மலை, கல்வராயன் மலை ஆகிய பகுதிகளில் பொழியும் மழைநீரைத் தேக்கப் புதிய நீர்த்தேக்கங்கள் கட்டப்படும்.

- மக்களின் வாழ்வியலுக்கான இப்பணிகள் அனைத்தும் குறிப்பிட்ட கால வரையறைக்குள் செய்து முடிக்கப்படும்.

உயிர் நீர்த் திட்டம்

- உலக மக்கள் தொகையில் நான்கில் ஒரு பகுதியினர் (ஏறக்குறைய 200 கோடி மக்கள்) ஏற்கனவே கடும் நீர் பற்றாக்குறையால் தவித்து வருகின்றனர். 2050ஆம் ஆண்டுக்குள், உலக மக்களில் 50 விழுக்காட்டுக்கும் அதிகமானோர் நீர் பற்றாக்குறையுள்ள பகுதிகளில் வாழ்வார்கள் என்று கணிக்கப்பட்டுள்ளது.

- தங்கத்தைவிட நீர், பெருநிறுவனங்களின் கொள்ளை வணிகமாக மாறும். சென்னை மாநகரின் தனியார் குடிநீர் வணிகத்தின் தற்போதைய மதிப்பு 1440 கோடியாக உள்ளது.

- எனவே நாம் தமிழர் அரசு, இப்படியான தண்ணீர் வணிகத்திற்குத் தடைவிதிக்கும். ஒவ்வொரு வீட்டிற்கும் அரசே இலவச தூய குடிநீர் கொடுக்கும். அதற்கான புதிய கட்டமைப்புகளை உருவாக்கும். இது பல்லாயிரக்கணக்கான புதிய வேலைவாய்ப்பைக் கொடுக்கும் துறையாக மாற்றப்படும்.

- வீடுகளுக்கு இரட்டைக்குழாய் நீர் வழங்கல் முறை எனும் உயிர்நீர்த் திட்டம் செயல்படுத்தப்படும். எல்லா வீடுகளுக்கும் இரண்டு குழாய்கள், ஒன்றில் 24 மணி நேரம் குடிநீரும் (ஆண்டிற்கு 7,300 சீர்படி (litre)), மற்றொன்றில் இதரப் பயன்பாட்டிற்கான நீரும் (ஆண்டிற்கு 1,97,100 சீர்படி (litre)) வழங்கப்படும். ஏற்கனவே உலகளவில் நீர் பற்றாக்குறையைச் சந்திக்கும் சிங்கப்பூர், சவுதி



அரேபியா மற்றும் அமெரிக்காவின் சில நகரங்களில் இந்த இரட்டைக் குழாய் அமைப்பு வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது.

- வீடுகளில் இருந்து வெளியேறும் கழிவுநீர் மேம்படுத்தப்பட்ட தூய்மைப்படுத்தும் நிலையங்கள் மூலம் தூய்மை செய்து தொழிற்சாலை மற்றும் கட்டுமானங்களுக்கு (குறிப்பிட்ட தொகைக்கு) வழங்கப்படும்.
- தொழிற்சாலைகளோ, பெரு வணிக வளாகங்களோ சொந்தமாக ஆழ்துளைக் கிணறு அமைக்கக் தடைவிதிக்கப்படும். அரசே தேவையான நீரினை அவர்களுக்கு கட்டண முறையில் வழங்கும்.

சென்னை நகரத்தின் நீர்த்தேவை

- சென்னை மாநகரத்தின் நீர்த்தேவை ஆண்டுக்கு 12 நூற்றுக்கோடி கன அடி (TMC) ஆகும். ஆனால் இங்கு பெய்யும் மழைநீர் அளவோ 17 நூற்றுக்கோடி கன அடி (TMC). அதில் 4 நூற்றுக்கோடி கன அடி (TMC) அளவுகூட ஆண்ட திராவிட அரசுகள் தேக்குவதில்லை. சென்னைக்குக் குடிநீர் வழங்கும் முதன்மை ஏரிகளில் படிந்துள்ள வண்டலை அகற்றினால் அவற்றில் கூடுதலாக 15 நூற்றுக்கோடி கன அடி (TMC) தண்ணீரைச் சேமிக்க முடியும். இதன்மூலம் சென்னையின் தண்ணீர் பற்றாக்குறை நீங்கும். இதற்காகக் பழைய நீர்ப்பிடிப்புப் பகுதிகள் மீட்கப்படுவதோடு, மேலும் புதிய நீர்ப்பிடிப்புப் பகுதிகளை நாம் தமிழர் அரசு ஏற்படுத்தும்.
- சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் உள்ள நீர் நிலைகளை சரியாகத் தூர்வாரிப் பேணிக்காத்தால் குறைந்தது 200 நூற்றுக்கோடி கன அடி (TMC) தண்ணீரைச் சேமிக்க முடியும்.
- சென்னையின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்யும் பூண்டி, புழல், செம்பரம்பாக்கம், சோழவரம், செங்குன்றம் பகுதி ஏரிகள் அனைத்தும் மேலும் ஒரு மாத்திரி (metre) ஆழப்படுத்தப்படும். இதனால் நீர்ப்பிடிப்பும் அதிகமாகும். இத்திட்டம், மற்ற மாநகரங்கள் அருகில் உள்ள ஏரிகளிலும் செயல்படுத்தப்படும்.
- சாலைகளின் இரு ஓரங்களிலும் மழைநீர்ச் சேகரிப்புத் தொட்டிகள், செறிவூட்டும் கிணறுகள் அமைக்கப்பட்டு மழைநீர் நேரடியாக நிலத்தடி நீர்மட்டத்திற்கு கொண்டு சேர்க்கப்படும்.

மரங்களின் பேய்

- தமிழகத்தின் சுற்றுச்சூழல் சமநிலையைப் பெரிதும் பாதிக்கும் காரணியாக சீமைக்கருவேல மரங்கள் விளங்குகின்றன. இம்மரங்கள் நிலத்தடியில் சற்றொப்ப 40 அடி ஆழம் வரையிலும், பக்கவாட்டில் 40 அடி சுற்றளவு வரையிலும் தனது வேர்களைப் பரவச் செய்து, நிலத்தடி நீர் வளத்தை அதிகளவில் உறிஞ்சும் தன்மையைக் கொண்டுள்ளன. இதனால் அப்பகுதியின் நீர்மட்டம் மிகக் குறுகிய காலத்திலேயே அடி ஆழத்திற்குச் செல்வதுடன், மண்ணின் இயற்கையான சத்துக்களும் நீர்த்துப்போகின்றன. இத்தகைய பாதிப்புகளைத் தடுக்க, சீமைக்கருவேல மரங்களை முற்றிலுமாக ஒழிப்பதற்கெனத் தனிப்பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படும்.



- சீமைக்கருவேல மற்றும் தைல மரங்களுக்கு (Eucalyptus) வியர்க்கும் தன்மை இல்லாத காரணத்தினால், அவை காற்றில் உள்ள ஈரப்பதத்தை முழுமையாக உறிஞ்சிக் கொள்கின்றன. இவ்வாறு காற்றில் உள்ள நீராவி உறிஞ்சப்படுவதால், அது மேகங்களாக உருவெடுக்கும் செயல்முறை தடைபடுகிறது. இதன் நேரடி விளைவாக அப்பகுதிகளில் மழைப்பொழிவு பெருமளவு குறைந்து, வறட்சி நிலை நீடிக்கிறது.

- முன்பு ஒரு காலத்தில் தாள் தொழிற்சாலைகளின் மூலப்பொருள் தேவைக்காகவும், விறகுப் பயன்பாட்டிற்காகவும் 'சமூக நலக் காடுகள்' என்ற பெயரில் இவை பெருமளவு நடப்பட்டன. குறிப்பாகப் புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களில் பல இலட்சம் குறுக்கம் நிலப்பரப்பில் இவை அடர்ந்து வளர்ந்துள்ளன. சமூக நலனுக்காக உருவாக்கப்பட்ட இத்திட்டம், காலப்போக்கில் நீர் ஆதாரங்களை அழிக்கும் சமூகக்கேடாக மாறியுள்ளது. எனவே, வேளாண்மையையும் நிலத்தடி நீரையும் பாதுகாக்க, இத்தகைய அயலக மரங்களை வேரோடு அகற்றி, அவ்விடங்களில் மண்ணிற்கு ஏற்ற தேக்கு, சவுக்கு, புளி, வேம்பு, நாவல், மூங்கில், புங்கை, பூவரசு போன்ற மரபுவகை நாட்டு மரங்கள் வளர்க்கப்படும்.

மணல் கொள்ளைத் தடுப்பு

- அரை விரலம் (அங்குலம்) ஆற்றுமணல் உருவாவதற்கு நூறு ஆண்டுகள் ஆகும். ஆனால் ஒரு நாளைக்கே முப்பதடி ஆழத்திற்கு மேலாக ஆற்று மணலைத் சுரண்டி, 'மணல் கொள்ளை' நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மேலும் மணல் கொள்ளைக்கு இந்த கொள்கையற்ற திராவிட அரசுகளே வழிவகை செய்கிறது.

- மணற்கொள்ளையால் ஆற்றுப்படுகையில் உள்ள தென்னை, பனை மரங்கள் கூட பட்டுப்போய் நிற்கின்றன. மூன்று பருவம் விளைந்த ஆற்றுப்படுகை வறண்ட நிலமாகியிருக்கிறது. அதனால் நாம் தமிழர் அரசு மணற்கொள்ளையைத் தனிப்படைகளை அமைத்து முற்றுமுழுதாகத் தடுக்கும்.



மறைநீர்க் கொள்கை (Virtual Water)

குளிர்பானத் தொழிற்சாலைகளுக்குத் தடை

- கங்கைகொண்டான் SIPCOT வளாகத்தில் தாமிரபரணி ஆற்றிலிருந்து Pepsi (Prathishta Business Solutions) நிறுவனத்திற்கு நாளொன்றுக்கு 15 இலட்சம் சீர்படி (litre) வரையும், Coca Cola (South India Bottling Co.) நிறுவனத்திற்கு நாளொன்றுக்கு 18 இலட்சம் சீர்படி (litre) வரையும் தண்ணீர் எடுக்க அரசு அனுமதி அளித்துள்ளது. நாள்தோறும் பல இலட்சம் சீர்படி (litre) தண்ணீர் என ஆண்டிற்கு சற்றொப்ப 1000 கோடி சீர்படி (litre) தண்ணீர் உறிஞ்சப்படுகிறது. தமிழகம் முழுவதும் பல இடங்களில் இப்படி தனியாருக்குத் தண்ணீரைத் தாரைவார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.









- கங்கைகொண்டான், திருச்சி உறையூர், திருமழிசை, மதுரை வைகை ஆறு, சிவகங்கை, பெருந்துறை, திருவள்ளூர் அரண்வாயல், செங்கல்பட்டு, தண்டலம் கூட்டுச்சாலை, படப்பை உள்ளிட்ட பல இடங்களில் இருக்கும் தனியார் குளிர்ப்பருகம் மற்றும் மதுப்பருக உருவாக்க நிறுவனங்கள் அனைத்தும் தடை செய்யப்படும். அரசு அவர்களோடு போட்டுக்கொண்ட ஒப்பந்தங்கள் நீக்கப்படும். இதன்மூலம் மண்ணின் நீர்வளம் காக்கப்படும்.
- இந்த மண் வளத்தை, இயற்கை வளத்தை, நீர் வளத்தை அடுத்த தலைமுறைக்கு அப்படியே பாதுகாத்து வழங்கிட வேண்டியது நம் கடமை. தமிழகத்திலிருந்து பொருட்கள் உருவாக்கத்திற்குப் பயன்படுத்தப்படும் நீர் வளத்தினைப் பாதுகாக்கப் புதிய கொள்கை மறைநீர்ப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்படும்.

கோழி வளர்ப்பில் நீர்க்கொள்ளை

- ஒரு கோழி முட்டை உருவாகி விற்பனைக்குச் செல்ல 196 சீர்படி (litre) தண்ணீர் தேவைப்படுகிறது. ஒன்றிய அரசின் புள்ளித்தகவலின்படி இந்தியாவின் முட்டை உருவாக்கத்தில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தில் உள்ளது. இது மொத்த உள்நாட்டு உருவாக்கத்தில் சற்றொப்ப 15 விழுக்காடு முதல் 20 விழுக்காடு ஆகும். ஆனால் இந்தியாவின் மொத்த முட்டை ஏற்றுமதியில் 80 விழுக்காடு முதல் 95 விழுக்காடு வரை தமிழ்நாடு தான் பங்களிக்கிறது.
- ஆண்டிற்கு 2000 கோடி முட்டைகள் தமிழகத்தில் இருந்து உருவாக்கப்படுகின்றன. ஒரு முட்டைக்கு 196 சீர்படி (litre) தண்ணீர் என்றால் 2000 கோடி முட்டைக்கு நான்கு இலட்சம் கோடி சீர்படி (litre) தண்ணீர் செலவாகிறது. அதாவது 1.41 நூற்றுக்கோடி கன அடி (TMC) தண்ணீர் செலவாகிக் கொண்டிருக்கிறது. இது தமிழகத்தின் நீர்ப் பொருளாதாரத்தை, நீர் ஆதாரத்தைக் கொள்ளையடிக்கும் போக்காகும்.
- ஒரு அயிரச்சீரெடை (kg) இறைச்சிக்கோழிக்கு 4325 சீர்படி (litre) தண்ணீர் செலவாகிறது. தமிழ்நாட்டில் இருந்து ஆண்டிற்கு சற்றேறக்குறைய 50 கோடி முதல் 70 கோடி அயிரச்சீரெடை (kg) கறிக்கோழி உருவாக்கப்படுகிறது. இதற்கான தண்ணீர்ச் செலவு 3 இலட்சம் கோடி சீர்படி (litre) ஆகும்.

மகிழுந்து (Car) உருவாக்கத்தில் கொள்ளை போகும் நிலத்துடி நீர்

- தமிழ்நாட்டில் உள்ள தனியார் நிறுவனங்களில் ஒரு நிரலளவு மகிழுந்து உருவாகி வெளியே வருவதற்கு 1,50,000 சீர்படி (litre) தண்ணீர் செலவாகிறது. தமிழகத்தில் இருந்து ஆண்டிற்கு ஏறக்குறைய 5 இலட்சம் மகிழுந்துகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆக பல இலட்சம் கோடி சீர்படி (litre) தண்ணீர் கொள்ளை போய்க்கொண்டிருக்கிறது.
- ஆடு மாடுகளின் ஒரு அயிரச்சீரெடை (kg) தோலைப் பதனிட்டு அதனைச் செருப்பாகவோ, தோல் பொருளாகவோ தயாரிக்க 17,000 சீர்படி (litre) தண்ணீரும், ஒரு திண்காற்சட்டை (Jeans Pant) தயாரிக்க 4,000 சீர்படி (litre) தண்ணீரும் செலவாகிறது.
- மேலை நாடுகள், தத்தம் நாட்டில் உள்ள தண்ணீரைப் பாதுகாத்துக்கொண்டு ஊர்திகள் மற்றும் ஆடைகளை இறக்குமதி செய்து கொள்கிறார்கள். சொந்த நாட்டின் நீராதாரத்தைத் தேவையின்றி அழிக்கக்கூடாது என்ற பொறுப்பு அவர்களுக்கு உள்ளது. அதைப்போலவே நாம் தமிழர் அரசும் நீரின் முக்கியத்துவம் உணர்ந்து, இறக்குமதியில் கவனம் செலுத்தி தண்ணீரின் தேவையில் தன்னிறைவு அடையும்.



நாம் தமிழர் ஆட்சியில் அடிப்படைத் தேவையான குடிநீர் விற்பனை முறை ஒழிக்கப்பட்டு அனைவருக்கும் தூய குடிநீர் கட்டணமின்றி வழங்கப்படும்.



தூய குடிநீர் இலவசம்

> தண்ணீரை
> பூமிக்குள் தேடாதே,
> அதை வானத்தில்
> இருந்து வரவழைக்க
> வழிவகை செய்.
>
> – இயற்கை வேளாண் பேரறிஞர்
> அப்பா கோ.நம்மாழ்வார்

அனைத்தும் இலவசம், குடிநீருக்குக் காசா?

- உலக உயிர்களின் மிக முதன்மையான உயிராதாரமான குடிநீரை விற்பனைப் பண்டமாக ஆக்கியதை நாம் தமிழர் அரசு வன்மையாகக் கண்டிப்பதுடன் அதை உலக உயிர்களுக்குச் செய்யும் இரண்டகமாகப் பார்க்கிறது.
- நாம் தமிழர் ஆட்சியில் அடிப்படைத் தேவையான குடிநீரைக் காசுக்கு விற்கும் முறை ஒழிக்கப்பட்டு அனைவருக்கும் தூய குடிநீர் கட்டணமின்றி வழங்கப்படும்.
- நலத்திட்டங்கள் என்ற பெயரில் தொலைக்காட்சிப்பெட்டி, துணி வெளுக்கும் கருவி, கலவையாக்கி, அரைப்பான், மடிக்கணினி, மாதந்தோறும் பண உதவி உள்ளிட்ட பல பொருள்களையும் இலவசமாக வழங்கும் அரசால் தண்ணீரை மட்டும் மக்களுக்கு இலவசமாக வழங்க முடியாமல் இருப்பதே தண்ணீர் மிக உயர்ந்த சந்தைப் பொருள் என்பதற்குச் சான்று.
- உலகின் ஒட்டுமொத்த மக்கள் தொகைக்குமான குடிநீர் 2.5 விழுக்காடு மட்டுமே நன்னீராக உள்ளதாகவும், அதிலும் பெரும்பகுதி பனிப்பாறைகளில் அடைபட்டுள்ளதாகவும் குடிநீராகப் பயன்படுத்தக்கூடியது மிகக்குறைவு என்றும் ஆய்வுகள் சொல்கின்றன.



“அறிவை வளர்க்கும் கல்வி, உயிரைக் காக்கும் மருத்துவம், உலக உயிர்களின் உயிர்த் தேவையான தூய குடிநீர் – இவை மூன்றும் சந்தைப் பொருளாக இருக்கும் நாடு, நாடல்ல சுடுகாடு.”



- 2025ஆம் ஆண்டில் உலகளவில் 200 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்பான குடிநீரைப் பருக இயலாமல் இருப்பதாகவும், பல நாடுகளில் நன்னீர் வளம் வேகமாகக் குறைந்து வருவதாகவும் ஆய்வுகள் எச்சரிக்கின்றன.
- இந்நிலையில் அந்தப் பற்றாக்குறை நிலையைச் சரி செய்து நீர்வளத்தை எப்படிப் பெருக்கலாம் என்று சிந்திக்காமல், அதனை சந்தைப்பொருளாகக் கருதியது ஆகக் கொடுஞ்செயல் என்று நாம் தமிழர் கட்சி கருதுகிறது.

கடல்நீர் குடிநீரா?

- சுற்றுச்சூழலைப் பாதிக்கும் கடல் நீரைச் தூய்மையாக்கிக் குடிநீராகப் பயன்படுத்தும் திட்டத்தை நாம் தமிழர் கட்சி முற்றுமுழுதாக எதிர்க்கின்றது.
- நாம் தமிழர் அரசு அத்தகையத் திட்டத்தைச் செயல்படுத்தாது. அதற்கு மாற்றாக நீர் நிலைகளை ஆழப்படுத்துதல், புதிய நீர்நிலைகளை ஏற்படுத்துதல், அனைத்துக் கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பைக் கட்டாயமாக்குதல், அதில் மழைநீரைத் தேக்கி நீர்வளத்தைப் பெருக்குதல் போன்ற எளிமையான நடவடிக்கைகள் மூலம் அனைவருக்கும் தூய குடிநீர் தடையின்றிக் கிடைக்க வழிவகைச் செய்யும்.


காக்கைக் குருவிகளுக்கானத் தண்ணீர்

- தனியார் பெரு நிறுவனங்கள் நிலத்தடி நீரை பல இலக்கக்கணக்கான சீர்படிகள் (litre) உறிஞ்சி எடுத்துப் புட்டிகளில் அடைத்து விற்பனை செய்து வரும் அவலநிலை நீடிக்கிறது. இப்படி உயிராதாரமான தண்ணீர் தனியார் நிறுவனங்களின் விற்பனைப் பொருளாக மாறி நிற்கும் நிலையில் மாந்தர்களால் அதனை விலை கொடுத்து வாங்க முடியும்.
- ஆனால் காக்கை, குருவி, கொக்கு, மைனா, புலி, யானை உள்ளிட்ட பிற உயிரினங்களின் குடிநீர்த் தேவை குறித்தும் அக்கறை கொள்கிறது நாம் தமிழர் அரசு. மாந்தன், தான் வாழ்வதற்கு மற்ற உயிரினங்களை அழிப்பதென்பது கொடுமையானது. இந்த அவல நிலையை நாம் தமிழர் அரசு மாற்றும்.

அப்பா நம்மாழ்வார் பாதையில்

- வேளாண் பெருந்தகப்பன் அப்பா நம்மாழ்வார் சொல்வது போன்று, நிலத்தின் மீது தேக்கி வைக்கும் நீரை வேளாண்மைக்கும் மற்ற உயிரினங்களுக்கும் பயன்படுத்திவிட்டு, நிலத்தடியில் இருந்து எடுக்கப்படும் நீரைக் குடிநீராகப் பயன்படுத்துவோம்.
- அதற்கேற்ப ஏரி, குளம், கண்மாய்களில் நீர்த்தேக்கும் திட்டம் உறுதியாகச் செயல்படுத்தப்படும். அனைவருக்கும் தூய குடிநீர் கட்டணமின்றித் வழங்கப்படும்.
- அனைத்து உயிர்களுக்குமான நீர்த்தேவையை நாம் தமிழர் அரசு உறுதி செய்யும்.







தண்ணீர் கொள்ளை

- ஏரி, குளம், கண்மாய், ஆறு உள்ளிட்ட நீர்நிலைகளை வன்கவர்பு செய்து அழித்ததால் மழைநீர் தேங்காமல் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாகக் குறைந்து போனது. நாம் தமிழர் அரசு அனைத்து நீர்நிலைகளிலும் உள்ள வன்கவர்புகளையும் உடனடியாக அகற்றி, நீர்நிலைகளை மீட்டெடுத்து, அவற்றின் நீர்வரத்துப் பாதைகளைத் தூர்வாரி பாதுகாக்கும்.
- தமிழகத்தின் பல்வேறு இடங்களில் ஆழ்துளைக் கிணறுகள் மூலம் நிலத்தடி நீரை விற்பனைக்காக உறிஞ்சியெடுப்பது சுற்றுச்சூழலைப் பெருமளவில் பாதிக்கிறது. நாம் தமிழர் அரசு, இதில் தனிக்கவனம் செலுத்தி, தண்ணீர் வழங்கலுக்கு தனிப் பிரிவை உருவாக்கும்.
- சென்னையின் புறநகர் தொடங்கி, தமிழ்நாடு முழுதும், தண்ணீர் வேட்டைக்கு முற்றுப்புள்ளி வைக்கும். வேளாண்மை தவிர தொழில்துறை, வணிகம் உள்ளிட்ட மற்ற தேவைகளுக்கானத் தண்ணீரைத் தடங்கலின்றி, அரசே நெறிப்படுத்தி வழங்கும்.
- நிலத்தடி நீரும் பாதிக்காமல், மக்களின் தேவைகளும் தடைபடாமல் புதிய கொள்கை முடிவுகள் எடுக்கப்படும். அதற்குரியச் சட்ட விதிமுறைகளையும் நாம் தமிழர் அரசு செயல்படுத்தும்.



உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

– தமிழ் மறை (1033) – வள்ளுவப்பெருமகனார்



“நஞ்சில்லா உணவு
அதுவே நம் கனவு!”

– இயற்கை வேளாண் பேரறிஞர் அப்பா கோ.நம்மாழ்வார்

வேளாண்மை

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்!

– பெரும்பாவலர் பாட்டன் பாரதி

“வேளாண்மையை ஓர் அரசுத் தொழிலாக அறிவிக்க வேண்டும். அரசு கையகப்படுத்திய நிலங்களைச் சீரான அளவிலான பண்ணைகளாகப் பிரித்து, ஊரக மக்களுக்குக் குத்தகைக்குவிட வேண்டும். அந்தப் பண்ணைகள் கூட்டுப் பண்ணை முறையில் வேளாண்மை செய்யப்பட வேண்டும்; அரசின் விதிகளுக்கும் வழிகாட்டுதலுக்கும் இணங்கவே இந்தப் பயிர்முறை இருக்க வேண்டும்.”

– அண்ணல் அம்பேத்கர்

கடைசி மீனும் பிடிக்கப்பட்ட பிறகு,
கடைசி மரமும் வெட்டப்பட்ட பிறகு,
கடைசி ஆறும் நஞ்சான பிறகுதான் இவர்களுக்குத் தெரியவரும்,
பணத்தைச் சாப்பிட முடியாது என்று.

ஒரு நாட்டில் ஓர் உழவன் ஏழையாக இருக்கிறான் என்றால், அந்த நாடே ஏழை நாடாகத்தான் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். வேளாண்மையைக் கைவிட்ட அனைத்து நாடுகளும் மோசமான விளைவுகளைச் சந்தித்து வருகின்றன. இன்று ஓர் உழவன் தற்கொலை செய்து கொண்டு சாகின்றான் என்பது வெறும் செய்தி அல்ல, நாளை நாம் உணவில்லாமல் சாகப்போகின்றோம் என்பதற்கான முன்னறிவிப்பு. எந்தத் தொழிற்சாலையும் அரிசியையும், பருப்பையும், காய்கறியையும் உருவாக்குவதில்லை. அவை நிலத்தில்தான் விளைந்தாக வேண்டும். விளைநிலங்களில் எல்லாம் தொழிற்சாலைகளைத் தொடங்கிவிட்டால், தொழிற்சாலை வேலை தரும், சம்பளம் தரும், சாப்பாட்டைத் தருவது யார்?






வேளாண்மை நடக்கும் மொத்த நிலப்பரப்பு ஏறத்தாழ 60,32,718 வரம்பு (எக்டேர்).



விதைப் புதையல் நடுவம்



விதை சேகரிப்பு



வெப்ப உணர்வி தொழில்நுட்பம்



தெளிப்பான் பாசன முறை



தூவல் பாசன முறை



வெப்ப உணர்வித் தொழில்நுட்பம்



வேதிப் பூச்சிக்கொல்லி



கேரளாவில் ஏற்பட்ட பாதிப்பு

- பசி வந்தால் மானம், குடிப்பிறப்பு, கல்வி, ஈகை, அறிவுடைமை, கொடை, தவம், உயர்வு, தொழில் முயற்சி, காமம் என்ற பத்து உயர் குணங்களும் பறந்துபோகும் என்றார் ஔவைப் பெரும்பாட்டி. எனவேதான் மாற்றுப் பொருளாதாரப் பெருக்கத்திற்கு, வேளாண்மை சார்ந்து, 'பசுமைத் தாய்மைப் பொருளதாரம்' என்று முன்வைக்கிறோம். காந்தியத் தத்துவத்திற்குப் பொருளாதார வடிவம் அமைத்துக் கொடுத்த செ.சி.குமரப்பா அவர்களின் பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றுகிறோம். 90 விழுக்காடு மக்கள் இறைச்சி உண்கிறார்கள். 90 விழுக்காடு மக்கள் பால் அருந்துகிறார்கள். 90 விழுக்காடு மக்கள் முட்டை சாப்பிடுகிறார்கள். 100 விழுக்காடு மக்கள் காய்கனி உணவை எடுத்துக் கொள்கிறார்கள்.

- இவையெல்லாம் வேளாண்மையில் இருந்துதான் வருகின்றன. அப்படி என்றால் அதை விளைவிப்பது யார்? பன்னாட்டுத் தனியார் நிறுவனங்கள் கையகப்படுத்தும் முன்பாக அரசு நிறுவனமாக வேளாண் துறை மாற்றப்படும்.

- இன்று நாம் பயன்படுத்தும் வேதிப்பொருள் உரங்களும், பூச்சிக்கொல்லிகளும் உண்மையில் 'பூச்சிக்கொல்லிகள்' அல்ல; அவை 'உயிர்க்கொல்லிகள்'. நம்மாழ்வார் அவர்கள் குறிப்பிட்டது போல, பூச்சிகளைக் கொல்வதாகக் கூறி, மாந்த உயிர்களையே கொல்லும் நச்சுகளாக அவை மாறிவிட்டன. இதனால் மண்ணும் நஞ்சாகிறது; விளையும் உணவும் நஞ்சாகிறது. "நஞ்சில்லா உணவு, அதுவே நம் கனவு" என்பதே எமது முழக்கம்.

நஞ்சைக் கொண்டு வந்த பசுமைப் புரட்சி

- உணவுப் பஞ்சம் என்ற காரணத்தைக் கூறி புதிய வேளாண்மை என்று 'பசுமைப் புரட்சித்' திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இரண்டாம் உலகப்போரில் பயன்படுத்திய நச்சுத்தன்மை கொண்ட வெடிமருந்துகளின் (Naphtha) மூலக்கூறுகளில் இருந்து உருவாக்கப்பட்ட பூச்சி மருந்துகளையும், உரங்களையும் நம் மண்ணில் கொட்டினார்கள்.

- அதில், நம் மண் வளம் அழிந்து போனது. தமிழ்நாட்டின் விளை நிலங்கள் வளமிழந்திருக்கிறது என்பதை மாநில, நடுவண் அரசுகளின் அறிக்கைகளே உறுதிப்படுத்தியிருக்கின்றன.


- எந்த நாடுகள் நமக்கு பூச்சிக்கொல்லி மருந்துகளையும், வேதி உரங்களையும் அனுப்புகிறதோ, அந்த நாடுகளே இங்கு விளையும் உணவுப் பொருள்களை வாங்குவதில்லை.

- இதனால் வேளாண்குடி மக்கள் விளைவிக்கும் பொருள்களுக்கு பன்னாட்டு விலை இல்லை. இசைவேற்பு இல்லை. வேதி உரங்கள் பயன்படுத்தியதால் புதிய புதிய நோய்களும் தோன்றியபடி இருக்கின்றன.

- கேரளம் மாநிலத்தில் Endosulfan என்ற வேதி உயிர்க்கொல்லியைப் பயிர்களுக்கு அதிகம் பயன்படுத்தியதால் நரம்பியல் தொடர்பான நோய்கள் பெருமளவில் தோன்றி பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. இப்படிப் பல சான்றுகளை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.



தமிழக வேளாண் பல்கலைக்கழகங்களில் இயற்கைவழி மரபு வேளாண் ஆய்வுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். அதில் ஈடுபடும் தன்னார்வலர்களின் செயல்பாட்டிற்கு நாம் தமிழர் அரசு ஆதரவு அளிக்கும்.



தமிழ்த் தேசிய நெல் வகைகள்



பூம்புகார் நெல், மாப்பிள்ளைச் சம்பா, கருடன் சம்பா, சீவப்புக் கவுனி, பனங்காட்டுக் குடவாழை, கருத்தக்கார், சண்டிகார், கருங்குறுவை, குறுவைக்களஞ் சியம், தூயமல்லி, தங்கச்சம்பா, நீலச்சம்பா, செம்புளிச்சம்பா, கிச்சடிச்சம்பா, இலுப்பைப்பூச் சம்பா, அறுபதாம் குறுவை, சீரகச்சம்பா, காட்டுயானம், சொர்ணமுசிறி, சீவப்புக் குருவிக்கார், கருப்புக்கவுனி, மளகி, சம்பா மோசனம், மேலும் பல.


மேட்டுப்பாத்தி முறையில் வேளாண்மை

தற்போதுள்ள வேளாண் நிலம்

- தமிழகத்தில் தற்போதுள்ள மொத்த வேளாண் நிலப்பரப்பு (விளைநிலப் பரப்பு) 79,38,000 வரம்பு (எக்டேர்). மொத்த நிலப்பரப்பில் இது ஏறத்தாழ 60.9 விழுக்காடு.
- வேளாண்மை நடக்கும் மொத்த நிலப்பரப்பு (நிகர விதைப்புப் பரப்பு) ஏறக்குறைய 48,38,000 வரம்பு (எக்டேர்). இதில் நாற்பது விழுக்காடு தான் நெல், கரும்பு விளையும் நஞ்சை நிலம். மீதம் அறுபது விழுக்காடு மானாவாரி நிலம். தற்போது உணவுப் பயிரைவிடப் பணப்பயிர்தான் அதிகம் பயிரிடப்படுகிறது. இது உணவுத் தட்டுப்பாட்டிற்கு வழிவகுக்கும். எனவே படிப்படியாகத் தேவைக்கேற்ப பணப்பயிர் விளைச்சலைக் குறைத்து உணவுப்பயிர் விளைச்சலைப் பெருக்கி, இழப்படையாத சீரமைப்பைச் செய்வோம்.
- இதுவரையிலும் இருந்த ஆட்சியாளர்கள் வேளாண்குடிகளின் மண்வளத்தைப் பற்றி அக்கறைப்படவில்லை, அதை மீட்பதற்கான தீர்வையும் முன்வைக்கவில்லை.

மக்களிடமிருந்து நிலம் குத்தகை

- அம்மையார் ஜெயலலிதா அவர்கள் சட்டசபையில் பேசும்போது 21 இலக்கம் (lakhs) குறுக்கம் புதிய வேளாண் விளை நிலங்களை உருவாக்குவோம் என்று கூறினார். ஆனால் உருவாக்கவில்லை. நாம் தமிழர் அரசு, 21 இலக்கம் (lakhs) குறுக்கம் வேளாண் நிலங்களை உருவாக்கும்.
- அரசு நிலங்கள் இல்லாத மாவட்டங்களில் தனியார்களிடம் முப்பதாண்டு ஒப்பந்த அடிப்படையில் குத்தகை நிலங்கள் பெறப்படும். அரசு கட்டாயப்படுத்தாது. விரும்பினால் கொடுக்கலாம். அதோடு அவர்கள் விரும்பினால் நிலத்தில் வேலை செய்யலாம். அதற்குண்டான ஊதியமும் வழங்கப்படும். 25 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் குத்தகை புதுப்பிக்கப்படும் நிலத்தின் உரிமை, நிலத்தை ஒப்படைத்தவர்களின் பெயரிலேயே இருக்கும்.
- தமிழக வேளாண் பல்கலைக்கழகங்களில் இயற்கைவழி மரபு வேளாண் ஆய்வுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். அதில் ஈடுபடும் தன்னார்வலர்களின் செயல்பாட்டிற்கு நாம் தமிழர் அரசு ஆதரவு அளிக்கும்.

இயற்கை வேளாண்மை – வேதி உரங்கள் இல்லாமல்

- வேதிப்பொருட்களாலான உரங்களைக் கொண்டு செய்யப்படும் வேளாண்மையை முற்றிலுமாகத் தடை செய்து, இயற்கை வேளாண்மையை மீட்டெடுப்பதே நமது அரசின் முதல் கடமை.
- தமிழகத்தில் நம் மரபு நெல் வகை ஏறத்தாழ ஓர் இலக்கம் (lakhs) வரை இருந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. பத்தாயிரம் ஆண்டுகளாக நாம், அரிசி உணவுகளை உட்கொண்டு வந்திருக்கின்றோம். அவைகள் அனைத்துமே நமக்கு நோய் தீர்க்கும், நோய் வராமல் தடுக்கும் நெல் வகைகளாகவே இருந்துள்ளன.
- 'பசுமைப் புரட்சி' என்ற ஏமாற்றுத் திட்டம் கடந்த அறுபதாண்டுகளில் நம் மரபு நெல் வகைகளை, வேளாண் முறையை கொஞ்சம் கொஞ்சமாக விழுங்கிவிட்டது. பூச்சி மருந்துகளின் உதவியோடு விளையக்கூடிய ஒட்டுரக, ஐ.ஆர். வகை நெல்



முன் மாதிரி



ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏறத்தாழ ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் புதிதாகக் கால்நடைப் பண்ணைகள் அமைக்கப்படும்



தார்பார்க்கர்



மாவட்டந்தோறும் நூறு ஏக்கர் பரப்பளவில் புதிதாகக் ஆட்டுப் பண்ணைகள் அமைக்கப்படும்



சிந்தி



பால்பொருள் இனிப்பு வகைகள் உருவாக்கும் தொழிற்சாலை அமைக்கப்படும்



கீர்



ஒவ்வொரு மாவட்டத்திலும் புதிதாகக் நாட்டுக் கோழிப் பண்ணைகள் அமைக்கப்படும்



கால்நடைகளை வளர்த்தல், பேணிக்காத்தல், கண்காணித்தல் உள்ளிட்ட வேலைகள் வழங்கப்படும்



நம் தேவைக்குப் போக மீதமுள்ளவை வெளிமாநிலம் மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும்

வகைகள் உட்பட பல விதைகளையும் கொடுத்து, மரபு விதைகளை அழித்து விட்டார்கள்.

- நமது நெல் வகைகள் எல்லாம் குறைந்தது மூன்றடிக்கு மேல்தான் இருந்தது. 'அடி காட்டிற்கு, நடு மாட்டிற்கு, நுனி வீட்டிற்கு' என்ற பழமொழியே உண்டு. கதிர்கள் எல்லாம் வீட்டிற்கும், நடுவில் உள்ள பகுதி மாட்டிற்கு வைக்கோலாகவும், அடியில் உள்ள பகுதி கழனிக்கே உரமாகவும் இருந்து வந்தது. இந்தப் பயிர்கள் வெள்ளத்தையும் வறட்சியையும் தாங்கிக்கொள்ளும் வகைகளாக இருந்தன.
- பசுமைப்புரட்சி என்று கொண்டு வந்த புதிய குட்டை வகை நெற்பயிர்களுக்கு நிறைய தண்ணீர் தேவைப்பட்டது. வறட்சியையும் வெள்ளத்தையும் எதிர்கொள்ள முடியாததாக இருந்தது. தவிர மாட்டுக்குத் தேவையான வைக்கோல் தீவனத்தையும் அளிக்க முடியாமல் போனது. அதனால் மாட்டு இனமும் அழியத்தொடங்கியது.
- ஒவ்வொரு முறையும் விளைச்சலில் இருந்தே நாம் விதைகளை எடுத்து, அடுத்தடுத்த பருவத்திற்கு பயன்படுத்தினோம். ஆனால் பசுமைப் புரட்சி செய்த மோசடியால் ஒவ்வொரு முறையும் பன்னாட்டு நிறுவனங்கள் திணித்த புதிய விதைகளை விலை கொடுத்து வாங்கி வருகிறோம். மரபு விதைப் பாதுகாப்பைக் கைவிட்டோம்.
- அப்பா வேளாண் பெருங்குடியோன் நம்மாழ்வார் அவர்களின் முயற்சியோடு, பல தன்னார்வ உழவர்கள் காணாமல் போன நம் மரபு நெல் வகைகளில் ஏறத்தாழ 126 நெல் வகைகளை மீட்டு எடுத்திருக்கின்றார்கள்.
- அவ்வாறு மீட்கப்பட்ட பூங்கார் நெல், மாப்பிள்ளைச் சம்பா, கருடன் சம்பா, சிவப்புக் கவுனி, பனங்காட்டுக் குடவாழை, கருத்தக்கார், சண்டிகார், கருங்குறுவை, குருவைக்களஞ்சியம், தூயமல்லி, தங்கச்சம்பா, நீலச்சம்பா, செம்புளிச்சம்பா, கிச்சடிச்சம்பா, இலுப்பைப்பூச் சம்பா, அறுபதாம் குறுவை, சீரகச்சம்பா, காட்டுயானம், சொர்ணமுசிறி, சிவப்புக் குருவிக்கார், கருப்புக்கவுனி, மிளகி, சம்பா மோசனம், கைவிரச்சம்பா உள்ளிட்ட 126 நெல் வகைகள் நமது தமிழ்த்தேசிய நெல் வகைகளாக அறிவிக்கப்படும்.
- முழுமையாக மரபு விதைகளை மீட்டெடுத்து, அதிலிருந்து மரபு வேளாண் முறைக்கு திரும்பும் வகையில் தமிழகம் முழுவதும் மரபு விதைப் பண்ணைகள் ஏற்படுத்தப்படுவதோடு, விதை சேகரிப்புக் குழுவும் அமைக்கப்படும். மரபணு மாற்றப்பட்ட விதைகள் மற்றும் குட்டைப்பயிரை ஒழித்துத் தொன்று தொட்ட வேளாண் முறையைக் கொண்டு வருவோம்.
- உலகே இயற்கை உணவுக்குத் திரும்புகிறது. அந்தத் தேவைக்கு ஈடு கொடுக்கும் விளைச்சல் இல்லை. நாம் தமிழர் அரசு 'கூட்டிணைவுப் பண்ணைகளை' உருவாக்கி அரசு பணியாக மாற்றி வேளாண்மை செய்யும். வேளாண்மை என்பது தொழில் அல்ல. எங்கள் பண்பாடு, எங்கள் வாழ்வியல்.
- மரபு நெல் விதை வகைகளைப் பயிரிடுவோருக்கு அரசுத் தரப்பில் அனைத்துச் சலுகைகளும் வழங்கி அவர்களுக்கான மானியமும் கொடுக்கும். தேசிய நெல் வகைகள் அனைத்தும் இயற்கை வேளாண் முறையிலேயே விளைவிப்பதற்கான அனைத்து உதவி நடவடிக்கைகளையும் செயல்படுத்துவோம்.
- ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளாகப் பூச்சிக்கொல்லி மருந்துகள் முற்றிலும் தடை செய்யப்படும். வேதிப்பொருள் பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கு மாற்றாக இயற்கை வழியிலான, பூச்சிகளை விரட்டும் மருந்துகளையும், இயற்கை உரங்களையும் உருவாக்கி வேளாண் குடிகளுக்கு வழங்குவோம்.



முன் மாதிரி


எள்
விளைச்சல்


நல்லெண்ணை
எடுத்தல்


வேர்க்கடலை
ஆய்தல்


எள்ளுருண்டை
செய்தல்


கடலெண்ணை
எடுத்தல்


மாம்பழச்சாறு உருவாக்கும்
தொழிற்சாலை


மாங்காய்
ஊறுகாய்


மண் பாண்டங்கள்
உருவாக்குதல்


காய்கறிப்
பண்ணையில் வேலை

நிலம் மற்றும் வளம் சார்ந்த தொழிற்சாலைகள்

எள், கடலை எண்ணெய்த் தொழிற்சாலை

- மானாவாரி நிலங்களில் அரசு இடங்கள் தேர்வு செய்யப்பட்டு 5,000 குறுக்கம் பரப்பளவில் எள் மற்றும் வேர்க்கடலைப் பண்ணைகள் அமைக்கப்படும்.
- அவற்றின் அருகிலேயே தூய நல்லெண்ணெய் மற்றும் கடலை எண்ணெய் பிழியும் ஆலைகள் நிறுவப்படும்.
- எள்ளுருண்டை, எள்ளினிப்பு(மிட்டாய்), எள் மற்றும் கடலை பிண்ணாக்கு அணிச்சல் (கேக்) போன்ற வணிகப் பொருள்கள் தயாரிக்கப்படும்.
- பிண்ணாக்கிலிருந்து இயற்கை உரம் மற்றும் மாட்டுத் தீவனம் உருவாக்கப்படும். நமது தேவைக்குப்போக எஞ்சியவை வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும். இது அரசு வேலையாக அறிவிக்கப்படும்.
- இளநீர், நுங்கு, பதநீர், கூழ், இயற்கை நெல் போன்ற மரபு உணவுகளை ஊக்குவிக்க ஆண்டுதோறும் "தமிழ்த்தேசிய உணவுத் திருவிழா" பொங்கல் அன்று நடத்தப்படும். இளநீர்/பதநீர் குடிக்கும் போட்டிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.
- எள் பயிரிடும்போதே, அதனுடன் கம்பு மற்றும் சோளம் ஆகியவையும் ஊடுபயிராக விதைக்கப்படும். இந்த நிலங்களில் தேனீப் பெட்டிகள் வைக்கப்பட்டு, தேனீ வளர்ப்பும் ஓர் அரசுப் பணியாக மேற்கொள்ளப்படும்.

பழச்சாற்றுத் தொழிற்சாலை

- இயற்கை முறையில் வளர்க்கப்படும் தக்காளி, மாம்பழம், பப்பாளி, பலா உள்ளிட்ட பழங்கள், பழச்சாறு மற்றும் ஊறுகாய்களாக மாற்றப்படும். இதற்கான தொழிற்சாலைகள் பண்ணைகளுக்கு அருகிலேயே அமைக்கப்படும்.
- படிக்காதவர்களுக்குக் கால்நடைப் பண்ணை, இயற்கை உர உருவாக்கம் மற்றும் காய்கறிப் பண்ணைகளில் அரசு வேலை வழங்கப்படும்.

காய்கனிகளுக்கான பண்ணை வேலைகள்

- பல்லாயிரக்கணக்கான குறுக்கம் பரப்பளவில் காய்கறிகளுக்கான பண்ணைகள் உருவாக்கப்படும்.
- எடுத்துக்காட்டாக, தக்காளிப் பண்ணையில் வேதிப்பொருள் கலப்பற்ற நாட்டுத் தக்காளிகள் விளைவிக்கப்பட்டு விற்பனை, ஏற்றுமதிக்குப் போக மீதம் இருப்பது பழக்கூழ் மற்றும் ஊறுகாய் உள்ளிட்ட பொருட்களை உருவாக்கப் பயன்படுத்தப்படும். அதற்கான தொழிற்சாலை, வேளாண் பண்ணைகளுக்கு அருகில் அரை அயிரமாத்திரி (km) தூரத்தில் அமைக்கப்படும்.
- இதே முறையில் மற்ற காய்கறிகளுக்கென்று மாவட்டந்தோறும் பண்ணைகள் உருவாக்கப்படும். முழுவதும் இயற்கை முறையில் வளர்க்கப்படும் காய்கனிகள் அந்தப்பகுதி தேவைகளுக்குப்போக மீதம் மற்ற மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படும்.



முன் மாதிரி



பனை மரம் வளர்ப்பு



பனங்கருப்பட்டி, பனங்கற்கண்டு, தென்னைவெல்லம், தென்னங்கற்கண்டு



பனைப் பொருள் தயாரிப்பு



பனம் பால்



இளநீர்

அமெரிக்காவில்...





நாடுகளும்	தேசிய மது பானங்களும்
பிரேசில்	கெய்பிரின்கா.
கனடா	கெய்சர் விஸ்கி
ரஷியா	வோட்கா
ஜெர்மனி	ஷேம்பெயின்.
ஜப்பான்	சாக்கி
கியூபா	மொஜிடோ
கொரியா	(சோஜஜ்) கோசு.
ஸ்பெயின்	சாங்ரியா.
பிஜி	காவா

- படித்த இளைஞர்கள் விற்பனைப் பொறுப்பாளர்களாக (Sales Representatives) அமர்த்தப்படுவர். அவர்கள் வெளி மாநிலங்கள் மற்றும் வெளி நாடுகளுக்குச் சென்று தமிழ்நாட்டு விளைபொருள்களின் இயற்கை முறை மேன்மையை விளக்கி விற்பனையைப் பெருக்குவர்.

பலகோடிப் பனைத்திட்டம்

- பனை தமிழ்த்தேசிய மரமாக அறிவிக்கப்படும். ஒரு பனைமரம் ஓர் ஆண்டிற்கு 180 சீர்படி (litre) பதநீர் கொடுக்கிறது. 25 அயிரச்சீரெடை (கிலோ) பனைவெல்லம் கொடுக்கிறது. 16 அயிரச்சீரெடை தும்பு, 25 அயிரச்சீரெடை ஈக்கு, 10 அயிரச்சீரெடை விறகு, 10 அயிரச்சீரெடை ஓலை, 20 அயிரச்சீரெடை நார் ஆகியவற்றை வாரி வழங்கிக் கொண்டிருக்கிறது.
- அதனால் இருக்கும் பனைமரங்களைப் பாதுகாப்பது, புதிய பனைமரங்களை வளர்த்தெடுப்பது என்ற திட்டம் வகுக்கப்படும். ஊர் தோறும் இருக்கும் நீர் நிலைகளைச் சுற்றிப் பனை மரங்களை ஏராளமாக நட்டு வளர்க்க நடவடிக்கை எடுப்போம்.

தமிழ்த்தேசியக் குடிபருகம்

- இளநீர், பதநீர், நுங்கு ஆகியவை தேசிய இயற்கை குடிபருகமாக அறிவிக்கப்படும். நுங்கு, பதநீர், இளநீர் ஆகியவை புதிய முறையில் தகரக் குவளைகளில் அடைக்கப்பட்டு வெளிமாநிலம் மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும். இதற்கான தொழிற்சாலை அமைக்கப்படும்.

தமிழ்த்தேசிய மதுபருகம்

- பனங்கள் மற்றும் தென்னங்கள் ஆகியவை பனம்பால் தென்னம்பால் என்ற பெயரில் தமிழ்த் தேசிய மதுபருகமாக அறிவிக்கப்படும். இதனால் உடலுக்கு எந்தத் தீங்கும் ஏற்படாது. நீர்வளத்தைக் கொள்ளையடிக்கும், மாந்த குலத்திற்குக் கேட்டை ஏற்படுத்தும் செயற்கையான மது வகைகள் அனைத்தும் தடை செய்யப்படும்.

பனைப்பொருள் உருவாக்கம் சார்ந்த வேலைவாய்ப்பு

- பனங்கிழங்கில் இருந்து இன்களி, இன்கட்டி போன்ற இனிப்பு வகைகளையும் உருவாக்கலாம். பனம்பழ நாரிலிருந்து உரங்களை உருவாக்குவோம். பூரி, சப்பாத்தி மாவுகளை உருவாக்குவோம். இதன் உருவாக்கத்தைப் பெருக்கி, வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கு மாவு உணவை ஏற்றுமதி செய்வோம்.
- பனை நாரில் இருந்தும், மட்டையில் இருந்தும் நார்க்கயிறு, கட்டில், நார்க்கொட்டான், விசிறி, ஓலைப் பாய், வீட்டிற்குக் கூரை, அழகுப் பொருள்கள் உட்பட அனைத்தும் உருவாக்கி அரசு விற்பனைக் கூடங்களில் வைக்கப்படும், ஏற்றுமதியும் செய்யப்படும்.
- பனை வெல்லம், பனங்கருப்பட்டி, பனங்கற்கண்டு உள்ளிட்ட அனைத்தும் உருவாக்கப்படும். சர்க்கரைக்கு மாற்றாக, நோயற்ற வாழ்வுக்காக மக்கள் இதைப் பயன்படுத்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.
- பனைப்பொருள் சார்ந்த தொழிற்சாலைகள் மாவட்டந்தோறும் நிறுவப்பட்டு, அதன் மூலம் அந்தந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புத் தரப்படும்.





தென்னத் துடைப்பம்
தென்னை நார்த் துடைப்பம்



தேங்காய் ஓட்டில்
அழகொளிர் விளக்கு



தேங்காய் ஓட்டில்
அழகுப் பொருட்கள்



தேங்காய் - பனை
நார்ப் பொருட்கள்



தேங்காய்
நார்க்கயிறு



தேங்காய்
எண்ணெய்



தென்னை ஓலையில்
மேற்கூரை



மூங்கிலில்
வரவேற்பு நாற்காலி



மூங்கிலில்
உணவுத் தட்டு



மூங்கிலில்
குடிநீர்க் கோப்பை

பயன் தரும் தென்னை

- தென்னை மரத்தின் ஒவ்வொரு பாகமும் நமக்குப் பயன்தரக்கூடியது. தென்னை மட்டையிலிருந்து நார் பிரித்தெடுக்கப்படுகிறது. இந்த நாரைக் கொண்டு கயிறு திரிக்கப்படுகிறது. கயிறு திரிக்கும் தொழிற்சாலைகள் மூலம் பல்லாயிரக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது. தென்னை நாரிலிருந்து மெத்தைகள், இருக்கைகள் (Cushions) மற்றும் இருக்கை உறைகள் போன்றவை உருவாக்கப்படுகின்றன.

- தேங்காய் எண்ணெய் சமையலுக்கும், தலைமுடி வளர்ச்சிக்கும் பயன்படுகிறது. தேங்காய் எண்ணெயிலிருந்து வழலை உருவாக்கப்படுகிறது. தேங்காய் ஓட்டிலிருந்து சிரட்டைக் கரண்டி, கிண்ணங்கள் மற்றும் கலைப் பொருள்கள் செய்யப்படுகின்றன. சிரட்டையை எரித்து அதிலிருந்து ஒருவகை மையை உருவாக்கி, அதனைப் பற்பசையாகவும் (Toothpaste) பயன்படுத்தலாம்.

- இளநீர் ஒரு மிகச்சிறந்த இயற்கை பருகமாகும். இது உடலுக்குக் குளிர்ச்சியையும், ஆற்றலையும் தருகிறது. இளநீரை மதிப்புக் கூட்டி, புட்டிகளில் அடைத்து விற்பனை செய்யலாம். பதநீரிலிருந்து கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவையும் உருவாக்கப்படுகின்றன.

- தென்னங்கீற்றைக் கொண்டு கூரை வேயப்படுகிறது. தென்னங்கீற்றிலிருந்து செய்யப்படும் விசிறிகள், முறங்கள், கூடைகள் போன்றவை இன்றும் பயன்பாட்டில் உள்ளன. இவை அனைத்தும் சுற்றுச்சூழலுக்கு ஏற்றவை. நெகிழி பொருள்களுக்கு மாற்றாக இவற்றைப் பயன்படுத்தலாம்.

- தென்னை பயிரிடும் வேளாண் குடிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த, தென்னை சார்ந்த தொழிற்சாலைகளை உருவாக்கி, மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் அயல்நாட்டுச் செலாவணியை ஈட்ட முடியும். பதநீரை விற்பனை செய்வதன் மூலம் கூடுதல் வருமானத்தைப் பெருக்கலாம்.

மூங்கில் வளர்ப்பும் விற்பனையும்

- மூங்கில் காடுகளை உருவாக்குவதில் புதிய திட்டங்கள் உருவாக்கப்படும். வாய்ப்புள்ள மேற்குத் தொடர்ச்சிமலைப் பகுதிகளில் அதிகம் விளைவிக்க ஏற்பாடு செய்யப்படும்.

- நாற்காலி, மெத்தை இருக்கைகள், நீள் இருக்கைகள் என வீடுகளில் பயன்படுத்தப்படும் நெகிழிப்பொருள்களுக்குப் பதிலாக மூங்கில் மூலமாக செய்யக்கூடிய நாற்காலி, ஊஞ்சல், அழகுப் பொருள்கள் உள்ளிட்ட அனைத்தும் செய்வதற்கானத் தொழிற்கூடங்கள், விற்பனை நிலையங்கள் ஆகியவை நிறுவப்படும். கைவினைத் தொழில் செய்வோர் அதில் ஊழியர்களாக அமர்த்தப்படுவார்கள்.

புங்கை எண்ணெய்

- புங்கை மர விதைகளில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய் உழவு இயந்திரங்களில் வன்னெய்க்கு (டீசல்) மாற்றாகப் பயன்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். புங்கை எண்ணெய் எடுப்பதற்கான ஆலைகள் மாவட்டந்தோறும் அமைக்கப்படும்.



சணல் நார்ச் செடி


(INDUSTRIAL HEMP)

சணல் நார்ச்செடியின்

50,000

பயன்பாட்டில் சில

- ஊர்திகளின் உதிரிப் பாகங்கள்
- மகிழுந்துகளின் பாகங்கள்
- நெகிழிப் பொருள்களுக்கு மாற்றான அனைத்துப் பொருள்களும்
- குடிநீர்ப் போத்தல்கள் முதல் மிகப்பெரும் கொள்கலன்கள் வரை உருவாக்கலாம்.
- உயர்வகை ஆயத்த ஆடைகளை உருவாக்கலாம்.
- செடியின் விதைகள் ஊன்மச்சத்து மிகுதியானது.
- பல வெளிநாடுகளில் குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து உணவாக உருவாக்கப்படுகிறது.



விதைகளின் எண்ணெய்

ஒமேகா – 3

மற்றும்

ஒமேகா – 6

புளிமங்களைக் கொண்டுள்ளதால் இதயம் மற்றும் தோல் நோய்களைக் கட்டுப்படுத்துகிறது.

- வழலை (சோப்பு), சீய்நெய் (சாம்பு), சமையல் எண்ணெய், வண்ணப்பூச்சு, உணவு, இன்சுவை கட்டிகள் உள்ளிட்ட பொருள்களை உருவாக்கலாம்.
- முழுவதுமான ஒரு வீட்டைச் சணல் நார்ச்செடிகள் மூலம் உருவாக்கப்படும் கலவையில் கட்டிக் கொள்ளலாம்.

சணல்

04

மாதங்களிலேயே வெட்டிவிடலாம்



மரம்

20

1) கன்னெய், வன்னெய் மாற்றான எரிபொருளை உருவாக்கலாம்.
2) சணல் நார்ச்செடிகளைக் கொண்டே காகிதங்களை உருவாக்கலாம்.
3) இதன்மூலம் காடுகளை பாதுகாக்கலாம்.

கருப்பட்டி

- தென்னங்கள்ளிலிருந்து உருவாக்கப்படும் ஓர் அயிரச்சீரெடை (கிலோ) கருப்பட்டி ஏறக்குறைய உரு.300 வரை விற்பனையாகிறது. மருத்துவக் குணம் மிகுந்த பனங்கள்ளிலிருந்து உருவாக்கப்படும் ஓர் அயிரச்சீரெடை கருப்பட்டி உரு.400 வரை விற்பனையாகிறது. எனவே உயர்ந்த மருத்துவக் குணம் கொண்ட பனைக் கருப்பட்டி உருவாக்கத் தொழிற்சாலைகள் அமைக்கப்படும்.

மண்ணில்லாப் பல்லடுக்கு வேளாண் முறை (Organic Hydroponics / Aquaponics)

- நகரங்களுக்குத் தேவையான காய்கறிகள், கீரைகள் போன்ற அன்றாடத் தேவைகளுக்கு இவ்வகைப் பயிர் முறை அறிமுகப்படுத்தப்படும். இம்முறையில் வேளாண்மைக்காகப் பல அடுக்குகள் கொண்ட செங்குத்துக் கட்டமைப்புகள் உருவாக்கப்படும். பயிர் வளர்ச்சிக்கான தண்ணீர் மற்றும் வெப்பத்தின் அடிப்படையில் பல அடுக்குகளில் மண்ணில்லா வேளாண் முறையில் நகரக் காய்கறித் தேவைகள் நிறைவேற்றப்படும்.

- நகர்ப்புறங்களில் வீடுகள்தோறும் மொட்டை மாடிகளில் மண்ணில்லா வேளாண் முறை மூலமாகக் காய்கனி, கீரை மற்றும் பூக்கள் பயிரிட ஊக்குவிக்கப்படும்.

சணல் நார்ச்செடி வளர்ப்புத் திட்டம்

- உத்ரகாண்ட், மேற்கு வங்க மாநிலங்களில் இருப்பதைப் போல் தமிழகத்திலும் சணல் நார்ச்செடி வளர்க்கச் சிறப்புத் திட்டம் கொண்டு வரப்படும். இதன்மூலம் தாள்களுக்கான மரங்களை வெட்டுவது குறைக்கப்படும். சணல் நாரிலிருந்து இயற்கை எரிபொருள், இயற்கைச் செங்கல், நெகிழிக்கு மாற்றான இயற்கை நெகிழி போன்றவை உருவாக்கப்படும்.

தொய்வை (ரப்பர்) மற்றும் வட்டகை (Tyre) உற்பத்தி

- தொய்வை மரங்களிலிருந்து பால் வடித்தல், அதனைப் பதப்படுத்தி வட்டகைகள் (Tyres), காலணிகள் மற்றும் தொய்வை சார்ந்த மற்ற பொருள்களை உருவாக்குதல் ஆகிய பணிகளை அரசே மேற்கொள்ளும். அரசே வட்டகைத் தொழிற்சாலைகளை நிறுவி, அரசு முத்திரையுடன் வட்டகைகளை உருவாக்கிச் சந்தைப்படுத்தும்.

வனவளம் மற்றும் மரவேலைப்பாடுகள்

- காடுகளில் சந்தனம், தேக்கு மற்றும் செம்மரம் போன்ற விலை உயர்ந்த மரங்களை அரசே பாதுகாப்பாக வளர்க்கும். முதிர்ந்த மரங்களை வெட்டிவிட்டு, அந்த இடத்தில் புதிய கன்றுகள் நடப்படும். வெட்டப்பட்ட மரங்கள் அரசு மரக்கிடங்குகளில் வைத்து விற்பனை செய்யப்படும். இதன்மூலம் தச்சர்கள் மற்றும் மர வேலைப்பாட்டுக் கலைஞர்களுக்குப் பெரிய அளவில் வேலைவாய்ப்பு உருவாக்கப்படும்.

மலர்த்தோட்டம் உருவாக்குதல் மற்றும் நறுமணப் பொருள்கள்

- மல்லிகை, முட்செவ்வந்தி, செண்பகம் மற்றும் முல்லை போன்ற மலர்த்தோட்டங்கள் அமைக்கப்படும். இவற்றை மலர்களாகவோ அல்லது மாலைகளாகவோ விற்பனை செய்வதோடு மட்டுமல்லாமல், நறுமணப் பொருள்கள் (Perfumes/ Scents) உருவாக்கவும் பயன்படுத்தப்படும். வாசனைப் பொருள் தொழிற்சாலைகள் நிறுவப்படும்.





சணல் செடி



சணல் எரிபொருள்



சணல் செங்கலில் கட்டிய வீடு



சணல் குழைமத்தில் செய்யப்பட்ட கார்



சணல் நார்த் துணி



சணல் விதை உணவுப் பொருட்கள்



சணல் எண்ணெய் புற்று நோய் மருந்து



சணல் விதை எண்ணெய்



சணல் வழலை



சணல் அழகூட்டிப் பொருட்கள்



சணல் காலணி



சணல் தாள் புத்தகங்கள்

தமிழ்த் தேசியப் பயிரினங்கள்

- கம்பு, கேழ்வரகு, சாமை, தினை, வரகு, குதிரைவாலி உள்ளிட்ட கூல (சிறுதானிய) வகைகள் விளைவிப்பதற்கு அரசு மானியங்கள் முழுதுமாக வழங்கி வேளாண்குடி மக்களை ஊக்கப்படுத்தும்.
- கூல (சிறுதானிய) விளைச்சல் வளர்ச்சிக்கென்று வேளாண் துறையில் தனிப்பிரிவு ஒன்றை மாவட்டங்கள்தோறும் அமைப்போம். அந்தத் தனிப்பிரிவு கூல (சிறுதானிய) விளைச்சலைப் பெருக்குவது, அதை பொது வழங்கல் கடைகளின் மூலம் மக்களுக்கு பகிர்ந்தளிப்பது மற்றும் விளைவிப்பவர்களுக்கு இழப்பு ஏற்படாத வகையில் கவனித்துக்கொள்வது ஆகிய பணிகளை மேற்கொள்ளும்.
- மாவட்டந்தோறும் கீரை, காய்கறிகள், மா, பலா, வாழை உள்ளிட்ட உணவுப் பொருள்களின் விளைச்சல் இயற்கை உரங்களின் மூலம் மட்டும் நடைபெற நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

உணவே மருந்தாக மாற்றுவோம்

- தமிழ்நாட்டில் சர்க்கரை நோய்ப் பாதிப்பு சற்றொப்ப 22.7 விழுக்காடாக உயர்ந்துள்ளது. அதாவது, 10 பேரில் 2 பேருக்கு மேல் பாதிப்பு உள்ளது. சற்றொப்ப 1.2 கோடி மக்கள் சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- நாம் தற்போது உண்ணும் பளபளப்பாக்கப்பட்ட வெள்ளை அரிசியில் நார்ச்சத்து கிடையாது. இதன் குருதிச் சர்க்கரை ஏற்புக் குறியீடு (Glycemic Index) மிக அதிகம், இதனால் உண்டவுடன் குருதியில் சர்க்கரை அளவு வேகமாக உயர்கிறது.
- மாறாக மாப்பிள்ளை சம்பா, கருப்பு கவுனி, காட்டுயானம் போன்ற மரபு அரிசிகளில் நார்ச்சத்து அதிகம்.
- சர்க்கரை நோய், இதயநோய் உள்ளிட்ட பல முதன்மை நோய்களைக் குணப்படுத்தக்கூடிய நமது மரபு நெல் வகைகளின் விளைச்சலை அதிக அளவில் மீண்டும் வேளாண்மைக்குக் கொண்டு வருவதன் மூலம் மக்களுக்கு நோயற்ற வாழ்வினை உறுதியளிப்போம்.

கரும்பு மற்றும் எரிசாராயம் (Ethanol) உருவாக்கம்

- சீனா, பிரேசில் மற்றும் கியூபா ஆகிய நாடுகள் பின்பற்றும் புதுமையான பயிரிடும் முறைகள் (வட்டவடிவ அல்லது முக்கோணவடிவ நடவு முறைகள்) பின்பற்றப்படும்.
- பிரேசில் நாட்டைப் போன்று கரும்பிலிருந்து எரிசாராயம் (Ethanol) உருவாக்கப்படும்.
- கரும்புச் சக்கையிலிருந்து தாள் மற்றும் உணவு உண்ணும் தட்டுகள் உருவாக்கப்படும். இதன் மூலம் தைல மரங்களை வெட்டி காகிதம் உருவாக்குவது தவிர்க்கப்படும்.
- வெல்லக்கட்டிகளை மரபு வடிவத்தில் மட்டுமல்லாமல், தற்போதைய சந்தைக்கு ஏற்றவாறு சர்க்கரைத் துண்டுகள் (Cubes) போன்று அச்சு வெல்லமாக வடிவமைத்துச் சந்தைப்படுத்தப்படும். பனங்கற்கண்டு, நாட்டுச் சர்க்கரை ஆகியவையும் உருவாக்கப்படும்.




மாப்பிள்ளைச் சம்பா


கம்பு


கேழ்வரகு


நவீன நெல் அறுவடை


நாற்று நடும் இயந்திரம்


சிறிய வகை அறுவடை இயந்திரம்


சூரிய ஒளி மின்சாரத்தில்...

நெகிழி மாற்று

- சணல் விளையக்கூடிய நிலங்களைத் தேர்வு செய்து, சற்றொப்ப 2000 முதல் 3000 குறுக்கம் பரப்பளவில் சணல் சாகுபடி மேற்கொள்ளப்படும். அங்கு சணல் சார்ந்த தொழிற்சாலைகள் நிறுவப்படும். சணலிலிருந்து சாக்குகள், பைகள், கம்பளங்கள் மற்றும் கால் மிதியடிகள் போன்றவை தயாரிக்கப்படும். இவை நெகிழிக்கு மிகச்சிறந்த மாற்றாக அமையும்.

- பல்லாயிரக்கணக்கான குறுக்கம் பரப்பளவில் வாழை பயிரிடப்படும். வாழைத்தண்டிலிருந்து நாரெடுத்து ஆடைகள் (வேட்டி, சேலை) நெய்யப்படும். வாழை மட்டையிலிருந்து உணவு உண்ணும் தட்டுகள் தயாரிக்கப்படும். இவை நெகிழிக்குச் சிறந்த மாற்றாக அமையும்.

உடனடியான மீட்புத் திட்டங்கள்

- வேளாண்மையில் ஈடுபடுவோர்க்குப் போதிய நிலையான வருவாய் இருப்பதில்லை. அதனால்தான் மாற்றுத் தொழில் தேடிச் செல்கிறார்கள். இந்த நிலையை மாற்றி வேளாண் தொழிலில் நிலையான வருவாயை ஈட்டுவதற்கான திட்டங்களை நாம் தமிழர் அரசு செயல்படுத்தும். அதன் மூலம் வேளாண்மையை விட்டு வெளியேறிய அனைவரும் மீண்டும் வேளாண்மைக்கே திரும்பும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருவோம்.

- வேளாண் பொருட்கள் அதிக உற்பத்தியாகும் காலகட்டத்தில் விலை சரிவு ஏற்படுகிறது. இதனால் வேளாண் குடிகள் உற்பத்தி செலவைவிட குறைந்த விலைக்கே பொருட்களை விற்க வேண்டிய அவலநிலை ஏற்படுகிறது. அவர்களுக்கான முழு உற்பத்திச் செலவையும் ஈடுகட்டும் விதமாக விலையை நாம் தமிழர் அரசு நிர்ணயிக்கும் அல்லது அந்த தொகையை அரசே வேளாண் குடிகளுக்கு வழங்கும்.

- தரிசு நிலங்கள் அனைத்தும் கணக்கெடுக்கப்படும். அந்த இடங்களில் வேளாண் குடிகளுக்கான கால்நடைப் பண்ணைகள் மற்றும் அந்த மண் தன்மைக்கேற்ற நவீன வேளாண்முறை உற்பத்தியை ஏற்படுத்துவோம். புதிய வேளாண் நிலங்கள் உருவாக்குவதன் மூலம் கூடுதல் உணவு உற்பத்தி மற்றும் வேலை வாய்ப்பும் ஏற்படும்.

பாசன முறைகள்

- வேளாண் நிலங்களில் தற்போதுள்ள வாய்க்கால் பாசன முறைகள் மாற்றப்பட்டு அறிவியல்பூர்வமான -
  - சொட்டுநீர்ப் பாசன முறை
  - தெளிப்பான் பாசன முறை
  - தூவிப் பாசன முறை

  போன்ற முறைகளை அறிமுகம் செய்து, குறைந்த நீர்ச் செலவில் நிறைவான வேளாண்மை செய்ய வகை செய்யப்படும்.



முன் மாதிரி



நவீன
பழக்கிடங்கு



காய்கறி
குளிருட்டிக் கிடங்கு




அரிசிக்கிடங்கு



நவீன குளிருட்டிக்
கிடங்கு



மதுப் புட்டிகளைப்
பாதுகாக்கும் அரசு



நெல் மூட்டைகளை
பாழடிக்கும் அரசு

- வெப்ப உணர்வி (Thermal Imaging) மூலம் பயிர்களின் வாட்ட அறிகுறியை முன்கூட்டியே கண்டறிந்து, தேவைப்படும் பயிர்களுக்கு மட்டும் துல்லியமாக நீர் வழங்கும் நவீன தொழில்நுட்ப முறை (Precision Irrigation) கொண்டு வரப்படும். இது நீர் விரயத்தைக் குறைத்து, பயிர் இழப்பைத் தவிர்க்க உதவியாக இருக்கும்.

மாவட்டந்தோறும் தானியக் கிடங்கு

- தக்காளி, பூ, வெங்காயம், காய் கனிகள் போன்ற எளிதில் அழுகி விடக்கூடிய பொருட்களால் வேளாண்குடி மக்கள் பெரிதும் இழப்படைந்து வருகிறார்கள். இதைத் தவிர்க்கும் பொருட்டு ஒவ்வொரு மாவட்டந்தோறும் தேவைக்கேற்ற இயற்கைச் சேமிப்பு நிலையங்கள் மற்றும் குளிரூட்டி நிலையங்கள் அமைத்துக் கொடுக்கப்படும். கூடவே தானியக் கிடங்குகளும் ஏற்படுத்தப்படும். இதனால் வேளாண்குடி மக்கள் இழப்படையாத நிலையை உருவாக்குவோம்.

- தமிழகத்தில் மிகப் பாதுகாப்பான இடம் ஒன்றைத் தெரிவு செய்து "விதைப் புதையல்" நடுவம் அமைக்கப்படும்.

- கடும் புயல் மழை, பெருவெள்ளம், நிலநடுக்கம் போன்ற பேரிடரையும் தாங்கும் வகையில் உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய வகையிலான நடுவமாக அது இருக்கும், அதில் தமிழர் நிலத்தில் இருந்த, மீட்கப்பட்ட அனைத்து வகையான விதைகளையும் வைத்து உயரிய முறையில் பாதுகாப்போம். அதைக்கொண்டு புதிய விதை வகைகளை உருவாக்கும் ஆராய்ச்சியும் நடத்தப்படும்.

- தற்போது தமிழகத்தில் ஆண்டிற்கு சற்றொப்ப 12,00,000 டன் வரை வேதி உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. கடந்த அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாக தூவப்பட்ட வேதிப்பொருட்களைக் கொண்டு நம் மண்வளத்தை சீரழித்துவிட்டார்கள். இதிலிருந்து மண்ணையும் வேளாண் குடிமக்களையும் மீட்க, அதற்கு ஈடான இயற்கை உரங்களைத் தயாரிக்கும் பண்ணைகள் அமைக்கப்படும். மண்வளமும் மக்கள் நலமும் காக்கப்படும்.

இழப்பீட்டுத் தொகை உயர்த்தப்படும்

- வேளாண் பொருட்கள் புயல், மழை வெள்ளம் போன்ற இயற்கைச் சீரழிவில் சிக்கி பாதிக்கும்போது, அரசு குறிப்பிட்ட தொகையை இழப்பீடாக வழங்கி வருகிறது. நாம் தமிழர் ஆட்சி, வேளாண்குடிகள் முந்தைய ஆண்டு எவ்வளவு வருவாயை ஈட்டினார்களோ அதே அளவிலான தொகையை இழப்பீட்டு நிதியாக அளிக்கும்.


- பண்ணைத் தொழில் மற்றும் கால்நடை வளர்த்தல் உள்ளிட்ட அனைத்து வேளாண் பணிகளும் கணினிக் கட்டுப்பாட்டுடன் மேம்படுத்தப்படும்.

- வேளாண் தொழிலைச் சார்ந்த அனைவரும் ஆண்டுக்கு சில மாதங்கள் வேலையற்று இருக்கும் நிலை ஏற்படுகிறது. அந்தக் காலகட்டங்களில் அவர்களுக்கு நிதி உதவி வழங்கப்படும்.

- அறுபது வயதுக்கு மேற்பட்ட வேளாண் குடிகளுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்படும்.



ஒருங்கிணைந்த பண்ணைகள்



வேளாண் பெருங்குடி மக்களே விலையை உறுதிப்படுத்தலாம்

- ஒரு மனிதனுக்கு மது, புகையிலை முதன்மைத்தேவை இல்லை. அவை இல்லாது மனிதன் உயிர்வாழ முடியும். ஆனால் உணவு மக்களுக்கு இன்றியமையாதது. உணவில்லாது மாந்தன் உயிர் வாழவே முடியாது.
- மது, புகையிலையை உற்பத்தி செய்பவர்கள் எல்லாம் இங்கு வசதியாகச் செல்வச்செழிப்புடன் வாழ்கிறார்கள். ஆனால் உணவை விளைவிக்கின்ற வேளாண் பெருங்குடி மக்கள் வறுமையிலும் ஏழ்மையிலும் உழலுகிறார்கள்.
- இதற்குக் காரணம் குண்டூசி முதல் ஏவுகணை வரை எல்லாவற்றையும் உருவாக்குபவர்களே விலையை முடிவு செய்ய இயலுகிறது. ஆனால் வேளாண் பெருங்குடி மக்கள் மட்டும் விளைவிக்கின்ற பொருட்களுக்கு விலையை முடிவு செய்ய இயலவில்லை. அந்த நிலையை மாற்றி உழவர்களே உணவுப் பொருட்களுக்கான விலையைத் தீர்மானிக்கின்ற உரிமையை நாம் தமிழர் அரசு அளிக்கும்.

உயர்ந்த மருத்துவச் சேவை

- வேளாண் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அனைத்து வகை மருத்துவங்களும் கட்டணமில்லாமல் வழங்கும் முறையில் காப்பீட்டுத் திட்டங்களை அரசு வழங்கும். ஆண்டுதோறும் தவறாமல் முழு உடல் பரிசோதனை செய்யும் முறையைக் கொண்டு வருவோம்.
- மாநில வேளாண்மை வருவாய் ஆணையத்தை நிறுவி உழவர்களுக்கான குறைந்தபட்ச வருவாயை உறுதிபடுத்தும் முறை செயல்படுத்தப்படும்.
- ஆயிரம் தொழில்களின் பின் அலைந்து திரிந்தாலும் கடைசியில் உலகம் ஏர்க்கலப்பையின் பின்னால்தான் போகும். என்னதான் துயரம் வந்தாலும் உழவுத்தொழில்தான் உயர்ந்ததாக இருக்கும் என்று உழவின் பெருமையை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறிச்சென்றார் திருவள்ளுவர். அத்தகு உழவுத்தொழிலைவிட்டு இன்று பலரும் வெளியேறிக் கொண்டிருக்கின்றோம்.

ஒருங்கிணைந்த பண்ணைகள்

- மாட்டுத்தீவனப் புல் வளர்ப்பு, தேனீப் பண்ணை, கால்நடைப் பண்ணை, சாணத்திலிருந்து எரிகாற்று உற்பத்தி, காய்கறிப் பண்ணை, வாழைத்தோப்பு உள்ளிட்ட அனைத்தையும் ஒருங்கிணைத்த பண்ணைகள் உருவாக்கப்படும். இவை ஒரே பண்ணையில் சுழற்சி முறையில் இணைக்கப்பட்டு, ஒருவர் அனைத்துத் தேவைகளையும் (உணவு, உரம், எரிபொருள், வருவாய்) பெற்றுக்கொள்ளும் வகையில் வேளாண் முறை அமைக்கப்படும்.
- இத்தகைய ஒருங்கிணைந்த பண்ணைகள் மூலம் வேளாண் குடிகளுக்கு ஆண்டு முழுவதும் வருவாய் கிடைக்கும் வகையில், வேலையின்மை சிக்கலும் தீர்க்கப்படும்.
- அரசு நடத்தும் பண்ணைகளில், சமூகத்தில் நலிவடைந்த பிரிவினரான மாற்றுத்திறனாளிகள், கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு




கோ.நம்மாழ்வார் வேளாண் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
கோ.நம்மாழ்வார் வேளாண் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
கோ.நம்மாழ்வார் வேளாண் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
இயற்கை வேளாண் விற்பன்னர்



வேலைவாய்ப்பில் சிறப்பு முன்னுரிமை அளிக்கப்படும். அவர்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும் வகையில் இவர்களுக்குப் பண்ணை மேலாண்மை மற்றும் பராமரிப்புப் பணிகளில் இடப்பகிர்வு வழங்கப்படும்.

வேளாண் பல்கலைக்கழகம்

- இளங்கலை இயற்கை வேளாண்மை, முதுகலை இயற்கை வேளாண்மை, ஆராய்ச்சி மேற்படிப்பு உள்ளிட்ட அனைத்து வேளாண் கல்வியியலும் பயிற்றுவிக்க வேளாண் பெருங்குடியோன் அப்பா கோ.நம்மாழ்வார் பெயரில் தஞ்சாவூரில் வேளாண் பல்கலைக்கழகம் தொடங்கப்படும்.

எது வளர்ச்சி

- எல்லா நாடுகளுமே தொழில் வளர்ச்சியில் முன்னேறி, அந்நியச் செலாவணியை வைத்துக் கொண்டு, உணவுப் பொருளை இறக்குமதி செய்து கொள்ளலாம் என நினைக்கின்றன. இப்படி உலகில் உள்ள அனைத்து நாடுகளுமே நினைத்து விட்டால், எந்த நாட்டில் இருந்து எந்த உணவுப் பொருளை நாம் இறக்குமதி செய்ய முடியும்?
- அதனால்தான் அரசே வேளாண் தொழிலை கையிலெடுத்து, சொந்த நாட்டிலேயே உற்பத்தி செய்யும் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.
- பெருந்தொற்று (கொரோனா) பொதுமுடக்கக் காலகட்டத்தில் எல்லோரும் உணவுப் பொருட்களுக்காகத்தான் அலைந்து கொண்டிருந்தோமே தவிர, எங்கே கார் கிடைக்கும், எங்கே தொலைக்காட்சி கிடைக்கும் என்று தேடி அலையவில்லை. எதுவில்லாமலும் வாழ முடியும் என்றாலும் மனிதர்களால் உணவில்லாமல் வாழ முடியாது. உணவு என்பது உயிர்த்தேவை.
- அந்த முன்னெச்சரிக்கையோடு நாம் உணவு உற்பத்தி இடத்தைத் தக்க வைத்துக் கொள்ளவில்லை என்றால், எதிர்காலத்தில் மிகப்பெரிய உணவுப் பஞ்சத்தைச் சந்திக்க வேண்டியிருக்கும். அதனால் ஆடு மாடு மேய்த்தல் உள்ளிட்ட வேளாண் தொழில் அனைத்தையும் அரசுப் பணியாக அறிவிக்கின்றோம்.

கூட்டு வேளாண் முறை

- வேளாண் நிலங்களில் பரண் கூண்டுகள் அமைத்து கோழி, வாத்து போன்றவை வளர்க்கப்படும். அவற்றின் கழிவுகள் நிலத்திற்கு உரமாக விழும்படி அமைக்கப்படும். இவ்வகைக் கழிவுகள் விழும் நிலங்களில் மீன்கள் வளர்க்கப்பட்டு, கழிவுகள் மீன்களுக்கு உணவாகவும், மீன்கள் மூலம் பயிர்கள் செழித்து வளரவும் வகை செய்யப்படும்.
- இவ்வாறு கால்நடை, மீன், பயிர் போன்ற அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரே நேரத்தில் வேளாண்மைக்குப் பல்வேறு பலன்கள் கிடைக்கும் வகையில் கூட்டு வேளாண்முறை செயல்படுத்தப்படும்.



முன் மாதிரி







உரம் தயாரித்தல்



மண்புழு வளர்த்தல்



ஜெர்சி வகை மாடுகளின் பால் (A-1) முழுதாகத் தடை செய்யப்படும்



நாட்டுப் பசும் பாலுக்கு வரவேற்பு



தக்காளிச்சாற்றுத் தொழிற்சாலை



ஆலம்பாடி காளை மாடு



உம்பளஞ்சேரி காளை மாடு



காங்கேயம் காளை மாடு



பர்கூர் காளை மாடு

ஆடு, மாடு வளர்த்தல் அரசுப்பணி

கால்நடைப் பண்ணை

- ஆடு மாடுகளை வளர்த்தல் அவமானமில்லை, வருமானம், வெகுமானம் அரசுப் பணி.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏறத்தாழ ஆயிரம் குறுக்கம் பரப்பளவில் தகுந்த இடம் அரசால் தேர்வு செய்யப்பட்டு, அங்கே புதிதாகக் கால்நடை மேம்பாட்டுப் பண்ணைகள் அமைக்கப்படும். அதில் காங்கேயம், தார்பார்க்கர், சிவப்புப்பசகி, சாகிர்வால், உம்பளச்சேரி, புளியங்குளம் பட்டிமாடு, தேனி மலைமாடு, பர்கூர் மலைமாடு, சிந்தி, கிர் உள்ளிட்ட நமது பரம்பரை மாடுகள், ஆடுகள் மட்டும் வளர்க்கப்படும். வெளிநாட்டு Jersey வகை மாடுகள் அனைத்தும் தடை செய்யப்படும்.
- நமது பரம்பரை மாடுகளைக் கொண்டு உருவாக்கப்படும் பண்ணையில் இருந்து பால் (A2), பால்கோவா, தயிர், வெண்ணெய், மோர், பால்பொருள் இனிப்பு வகைகள் ஆகியவை உருவாக்கும் தொழிற்சாலை அமைக்கப்படும். அவற்றில் நம் தேவைக்குப் போக மீதமுள்ளவை வெளி மாநிலங்கள் மற்றும் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும்.

நாட்டு மாடு – பால் சந்தைப் பெருக்கம்

- தமிழ்நாட்டில் பாலின் சந்தை மதிப்பு சற்றொப்ப 3.5 இலக்கம் கோடி. ஆனால் வருமானத்தைப் பெருக்குவதை மட்டுமே நோக்கமாகக் கொண்ட இந்த அரசுகள் உயிரைக் குடிக்கும் மது விற்பனையை மட்டுமே சார்ந்திருக்கிறது.
- பால் வகைகளின் பேய் (Devil in the milk) எனப்படக்கூடிய Jersey வகை கலப்பின மாடுகளின் பால் (A1) முழுதாகத் தடை செய்யப்படும். மரபணு மாற்றம் செய்து உருவாக்கப்பட்ட மாடுகளில் இருந்து பெறப்படும் இந்தப் பால் மாந்த குலத்திற்கு எதிரானது.
- ஒவ்வாமை, சர்க்கரை நோய், பெண்கள் சிறு அகவையில் பூப்பெய்தல், ஆண்களுக்கு மலட்டுத்தன்மை ஏற்படுதல் உள்ளிட்ட நோய்களை எளிதாக உண்டாக்கி வருகிறது. பல்வேறு புதிய வகை நோய்களை உருவாக்கக்கூடியது. அமெரிக்கா, சர்க்கரை நோய்க்கான ஊசி மருந்தை மட்டுமே விற்று பல இலக்கம் (இலட்சம்) கோடி வருமானம் ஈட்டுகிறது.
- America. New Zeeland, Australia உள்ளிட்ட பெரும்பாலான நாடுகள் Jersey வகை மாட்டுப்பாலைப் பயன்படுத்துவதைக் குறைத்துக் கொண்டிருக்கிறது. இந்தியா போன்ற நாடுகளில் இருந்து A2 என்ற நோய் எதிர்ப்பு ஆற்றலை அதிகரிக்கும், எளிதில் செரிக்கக்கூடிய பாலைக் கொடுக்கும் பரம்பரை மாட்டின் விந்தணுக்களை இறக்குமதி செய்து கொண்டிருக்கிறார்கள்.
- எனவேதான் Jersey வகை மாடுகளுக்கு முற்றாகத் தடை விதிக்கின்றோம். மாற்றாக, நமது பரம்பரை மாடுகளைத் திட்டமிட்டுப் பெருக்குவோம்.



ஆட்டுப்பண்ணை





மீனமிலம்



ஆனைந்து



மண்புழு உரம்



அமுதக்கரைசல்



தக்காளி கூழ் தொழிற்சாலை

“America, New Zealand, Australia உள்ளிட்ட பெரும்பாலான நாடுகள் Jersey வகை மாட்டுப்பாலைப் பயன்படுத்துவதைக் குறைத்துக் கொண்டிருக்கின்றன.”



இயற்கை உரங்கள்

- கால்நடை மேலாண்மைப் பண்ணைகளுக்கு அருகில் ஆட்டுப்புழுக்கை, மாட்டுச் சாணம், சிறுநீர்க் கழிவுகளில் இருந்து ஐந்து ஆவின் பொருள் (ஆனைந்து), அமுதக்கரைசல், மண்புழு உரங்கள், அரக்கு உள்ளிட்ட ஏராளமான இயற்கை உரங்கள் உருவாக்கும் தொழிற்சாலைகள் தொடங்கப்படும்.

- அரக்கு என்பது நாட்டு மாட்டுச் சிறுநீரைக் கொதிக்க வைத்து, நீராவியாக்கிக் குளிரூட்டிப் பெறப்படும் அருமருந்தாகும். புற்றுநோய் உள்ளிட்ட நானூற்றுக்கும் மேற்பட்ட பல நோய்களைக் குணமாக்கும். மேலும் இதிலிருந்து பற்பசை, சீய்நெய் (சாம்பு), வழலை (சோப்பு), நறுமணப் பொருள்கள் போன்றவை உருவாக்கப்படும். இவற்றில் தனிக்கவனம் செலுத்தி ஏற்றுமதி செய்யப்படும்.

- இந்தத் தொழிற்சாலைகளில் உருவாக்கப்படும் இயற்கை உரங்கள், அந்தந்த மாவட்டங்களில் உள்ள வேளாண் நிலங்களுக்கு உழவர் கூட்டுறவுச் சங்கங்கள், பொது வழங்கல் கடைகளின் வழியாகச் சிற்றூர்கள் வரை அனுப்பி வைக்கப்படும்.

- தூய இயற்கை முறையில் வளர்க்கப்படும் கால்நடைகளின் கறிகளை உள்நாட்டு விற்பனைக்குப் போக மீதம் வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும்.

- ஆடு - மாடு வளர்த்தல், அது சார்ந்த பண்ணை வேலைகள், இயற்கை உரங்கள் உருவாக்கும் நடுவம் அனைத்திலும் வேலை பார்ப்பவர்கள் அரசு ஊழியர்களாக அறிவிக்கப்படுவார்கள். அரசு ஊழியர்களுக்கான அனைத்துச் சலுகைகளும் இவர்களுக்கு வழங்கப்படும்.













கழுதை வளர்ப்பு

- கழுதை வளர்ப்பு என்பது நகைப்பிற்குரிய செயல் அல்ல; அது மிகச்சிறந்த பொருளாதார வளம் மிக்கது. எகிப்திய அரசி கிளியோபாட்ரா தனது அழகைப் பராமரிக்கக் கழுதைப் பாலில் குளித்தார் என்பது வரலாறு.
- உலகிலேயே மிகவும் விலை உயர்ந்த பாலாடைக்கட்டி (Cheese) கழுதைப் பாலிலிருந்து தயாரிக்கப்படுகிறது. செர்பியா போன்ற நாடுகளில் இது பெரும் வருவாயை ஈட்டித் தருகிறது. உலகச் சந்தையில் இதற்கு 60 விழுக்காடு தேவை உள்ளது. எனவே கழுதை வளர்ப்பிலும் அரசு கவனம் செலுத்தும்.

நெசவுத் தொழில்

- ஒரு கைத்தறி சேலையை நெசவு செய்வது என்பது ஏராளமான கைமுறை செயல்களை உள்ளடக்கியது, ஒரு சேலைக்கு பெரும்பாலும் 15,000 முதல் 25,000 வரை மிதி அசைவுகள் செய்ய வேண்டியதிருக்கும்.
- பல்லாயிரக்கணக்கான குறுக்கம் பரப்பளவில் பருத்தி பயிரிடப்படும். இதனை "வெள்ளைத் தங்கம்" என்று குறிப்பிடுகிறோம்.
- பருத்தி விதையிலிருந்து பருத்திப் பால், எண்ணெய் மற்றும் புண்ணாக்கு ஆகியவை தயாரிக்கப்படும்.
- காய்கறிகள், பழங்கள் மற்றும் இலைகளிலிருந்து பெறப்படும் இயற்கைச் சாயங்கள் ஆடைத் தயாரிப்புக்கு பயன்படுத்தப்படும்.
- பருத்தியிலிருந்து நூல் நூற்பது மற்றும் ஆடை தயாரிப்பது ஆகிய பணிகள் அரசுப் பணியாக மாற்றப்படும். ஏற்கனவே உள்ள நெசவாளர்களின் திறனைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் ஆடைகளை அரசே கொள்முதல் செய்து சந்தைப்படுத்தும்.

படித்தவர்களுக்கும் படிக்காதவர்களுக்கும் அரசு வேலை

- நாம் தமிழர் கட்சி படித்தவர் படிக்காதவர் அனைவருக்கும் அரசு வேலை, இனிப் படிக்காதவர் இல்லை என்ற நிலையை உருவாக்குவதே அடுத்த வேலை என்ற முழக்கத்தை முன் வைக்கிறது.
- அந்தந்தப் பகுதியில் நன்கு படித்த இளைஞர்கள், விற்பனைப் பொறுப்பாளர்கள் வேலைகளில் அமர்த்தப்படுவார்கள். அவர்கள் வெளிமாநிலம், வெளிநாடுகளுக்குச் சென்று தமிழகத்தில் விளையும் காய்கறிகள் அனைத்தும் எப்படி இயற்கை முறையில் உருவாக்கப்படுகிறது என்பதை ஒளிப்படக் காணொலிக் காட்சிகள் மூலம் விளக்கி விற்பனையைப் பெருக்கப் பணிக்கப்படுவார்கள்.
- இதன் மூலமாகத் தமிழகம் முழுவதும் 15 இலக்கத்திற்கும் (இலட்சத்திற்கும்) மேற்பட்ட படித்த, படிக்காத இளைய தலைமுறைக்கு அரசு வேலைகள் வழங்கப்படும். படித்தவர்களுக்குப் பண்ணை மேலாண்மை, நிருவாகம், கணினிமயப்படுத்துவது மற்றும் வெளிமாநில, வெளிநாட்டு விற்பனை நிகராளர் வேலைகள் வழங்கப்படும். படிக்காதவர்களுக்குக் கால்நடைகளை வளர்த்தல், பேணிக்காத்தல், கண்காணித்தல் உள்ளிட்ட வேலைகள் வழங்கப்படும்.



நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

– தமிழ்மறை (948) – வள்ளுவப்பெருமகனார்



மருத்துவம் முதன்மையான சேவை
அது எம் மக்களுக்குத் தேவை.

மருத்துவம்

மருத்துவம் மக்களின் உயிர் உரிமை அதை வழங்குவது அரசின் கடமை.

> “உணவே மருந்து;
> மருந்தே உணவு”
> என்ற நம் முன்னோர்களின்
> வாழ்க்கை முறையை
> சாத்தியப்படுத்துவதே
> நாம் தமிழர் அரசின்
> முதன்மையான
> நோக்கமாகும்.

மருத்துவக் கொள்கையில் மாற்றம்

- “மருத்துவம் முதன்மையான சேவை, அது எம் மக்களுக்குத் தேவை.” உடல் நலம் என்பது பணம் கொடுத்து வாங்கும் பொருள் அன்று, அது ஒவ்வொரு மனிதனின் அடிப்படை உரிமை. அதை வழங்குவதுதான் நாம் தமிழர் அரசின் கடமை.
- தரமான, சரியான, சமமான, கட்டணமில்லா மருத்துவம் அனைவருக்கும் வழங்குவதுதான் நமது அரசின் கடமை. நாட்டின் முதல் குடிமகனுக்கு என்ன மருத்துவம் கிடைக்கின்றதோ, அதுவே கடைக்கோடி மனிதனுக்கும் கிடைக்க வேண்டும் என்பதே எங்களின் குறிக்கோள்.
- புரட்சியாளர் சேகுவேரா அவர்கள் ‘மக்களின் நலனுக்காக ஆட்சி செய்கின்ற ஒரு அரசை நிறுவிவிட்டால், அதைவிட மகிழ்ச்சிகரமானது ஒன்று உண்டா? நான் எனக்கோ, என் மனைவிக்கோ, என் பிள்ளைகளுக்கோ எது ஒன்றையும் சேர்த்து வைக்கவில்லை. காரணம், என் மக்களுக்கானதை என் மக்களின் அரசு கொடுத்துவிடும்’ என்கிறார். அதைப்போல் மக்களுக்கான அரசை, தரம் உயர்த்திய மருத்துவத்தை நிறுவுவதுதான் எங்கள் கனவு.

மருத்துவப் படிப்பு அனைத்தும் தூய தமிழ் மொழியில்

- மருத்துவர் சாமுவேல் பிச்க்றீன் (1822 - 1884), சென்னையிலும், இலங்கையிலும் வாழ்ந்த அமெரிக்கப் பாதிரியார். தமிழைக் கற்றுத் தேர்ந்த இவர் யாழ்ப்பாண





பசுமை மருத்துவமனை



நாம் தமிழர் ஆட்சியில்



சித்த மருத்துவக் கல்லூரி



அரசு மருத்துவமனை தற்போதய நிலை



தொலை மருத்துவம்



மருத்துவக் கல்லூரியில் தமிழ் மொழியிலேயே மருத்துவப் பாடத்தை நடத்தினார். தொடக்கத்தில் எதிர்ப்பு எழுந்தது. தாய்மொழியில் கற்றால்தான் சிறப்பு என்று வாதிட்டார்.

- பின்னாளில் அவரிடம் தமிழ் வழியில் மருத்துவம் பயின்ற பலர் உலகப் புகழ் பெற்றவர்களாகத் திகழ்ந்தனர். இவர் பத்துக்கும் மேற்பட்ட மருத்துவ நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். 'உடற்கூறியியல்' என்று இவர் மொழிபெயர்த்த நூல் சித்த மருத்துவர்களின் பாடப்புத்தகத்தில் உள்ளது.

- இந்தப் பெரும் சாதனையின் தொடர்ச்சியாக நாம் தமிழர் அரசு, தமிழ்வழி மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்கி, அதில் 'பிச்க்றீன்' தமிழில் எழுதிய மருத்துவப் பாடப்புத்தகங்களை இடம்பெறச் செய்யும்.

- இரசியா, செர்மன், பிரான்சு, சீனா உள்ளிட்ட பல நாடுகளும் அவர்கள் தாய்மொழியில்தான் மருத்துவக் கல்லூரிகளில் பாடங்களை நடத்தி வருகிறார்கள். உலகின் தொன்மை வாய்ந்த தமிழ் மொழிக்கு அந்தத் தகுதி உண்டு. அதனால் ஆங்கில மருத்துவம் அனைத்தும் தமிழ் வழியில் நடத்தப்படும்.

தொடக்க நல வாழ்வு மருத்துவ மையம்

- தற்போதைய கணக்குப்படி 30,000 மக்கள் தொகைக்கு ஓர் 'ஆரம்பச் சுகாதார நிலையம்' என்றிருக்கின்றது. அது. 10,000 பேருக்கு ஓர் தொடக்க நல வாழ்வு மருத்துவ மையமாக மாற்றப்படும். அனைத்து தொடக்க நல வாழ்வு மருத்துவ மையங்களிலும் குருதி பரிசோதனை மையம், காந்த அதிர்வலை கருவி (MRI Scan) இதய நோயைக் கண்டறியும் கருவி (ECG) புற்றுநோயைக் கண்டறியும் கருவி முதலியவை அமைக்கப்படும்.

- இங்கு நச்சுக்கடி முறிவு மருந்து, நாய்க்கடிக்கான ஊசி / மருந்து ஆகியவை இருக்குமாறு உறுதி செய்யப்படும். இரண்டு மருத்துவர்கள், 3 செவிலியர்கள் சுழற்சி முறையில் பணிபுரிவார்கள். இதன் நோக்கம், கீழ்மட்டத்திலேயே பெரிய நோய்களைக் கண்டறிந்து தொடக்கத்திலேயே தடுத்துவிடலாம் என்பதே.

சிறப்பு மருத்துவமனை

- சிற்றூர்களில் இருந்து சற்றொப்ப 20 அயிரமாத்திரி (km) தொலைவிற்குள் ஒரு சிறப்பு மருத்துவமனை உருவாக்கப்படும். ஏற்கனவே இருப்பவை மேலும் தரம் உயர்த்தப்படும். சிறப்பு மருத்துவமனையில் கண், காது, மூக்கு, தொண்டை மருத்துவம், மாரடைப்பு தடுப்பு மருத்துவம், தோல் மருத்துவம், எலும்பு முறிவு கட்டு, சிறியவகை அறுவை மருத்துவம் ஆகியவை அளிக்கப்படும். நான்கு மருத்துவர்கள், 5 செவிலியர்கள் சுழற்சி முறை பணியில் இருப்பார்கள். இது அதிகளவிலான படுக்கை வசதிகள் கொண்ட உள்நோயாளிகள் பிரிவாகச் செயல்படும்.

உயர் சிறப்பு மருத்துவமனைகள்

- ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங்களிலும் ஒரு சிறப்பு மருத்துவமனை செயல்படுத்தப்படும். இங்கு இதயம், மூளை, சிறுநீரகம், கல்லீரல் உள்ளிட்ட








மருத்துவ சுற்றுலா நகரம்


மருத்துவ சுற்றுலா நகரம்



உய்யனு கைகள்


மருத்துவ ஆராய்ச்சி நகரம்


மருத்துவச் சாதனங்கள் தயாரிப்பு

"கணினித் தொடர்பு மூலமாக தொடக்க நல வாழ்வு மருத்துவ மையங்கள் அனைத்தும் மாவட்ட மருத்துவமனைகளோடு இணைக்கப்பட்டிருக்கும்."


குருத்தணு சேகரிக்கும் வங்கிகள்


மருத்துவ ஆராய்ச்சி

அனைத்துவித உயர் அறுவை மருத்துவங்களும் வழங்கப்படும். எல்லாவற்றிற்கும் சென்னை தலைமை மருத்துவமனையையே நாடிக் கொண்டிருப்பது தவிர்க்கப்படும். இது சிறப்பு மருத்துவமனைகளைவிட அதிகளவிலான படுக்கை வசதிகள் கொண்டதாக இருக்கும்.

24 மணி நேரமும் வெளிநோயாளிகள் பிரிவு

- தொடக்க நல வாழ்வு மருத்துவ மையம் முதல் உயர் சிறப்பு மருத்துவமனை வரையிலும் வெளி நோயாளிகள் பிரிவு 24 மணி நேரமும் இயங்கும். அதற்கேற்ப மருத்துவர்களும், செவிலியர்களும் சுழற்சி முறையில் பணியமர்த்தப்படுவார்கள். ஏழை மற்றும் நடுத்தர வர்க்க மக்கள் தங்களின் ஒருநாள் ஊதியத்தை இழக்க வேண்டியிருக்காது. அதிகத் தொகையைச் செலவு செய்து தனியார் மருத்துவமனைகளை நாடிப்போவது குறையும்.

சமத்துவ மருத்துவ முறை

- ஆங்கில மருத்துவ முறையைத் தலையாய மருத்துவமாகவும், தமிழ் மருத்துவமான சித்த மருத்துவம் உட்பட பிற மருத்துவ முறைகள் அனைத்தும் மாற்று மருத்துவ முறைகள் என்ற தற்போதைய நிலையை மாற்றி அனைத்து மருத்துவ முறைகளுக்கும் சமமான வாய்ப்பு வழங்கப்படும்.

அரசு மருத்துவமனைகள் தரம் உயர்த்தப்படும்

- இந்திய ஆட்சிப் பணியாளர்கள் (I.A.S., I.P.S., I.F.S., I.R.S.) முதல் அரசு ஊழியர்கள் வரை, முதலமைச்சர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் என அனைவருமே உறுதியாக அரசு மருத்துவமனைகளில்தான் மருத்துவம் செய்து கொள்ள வேண்டும் என்று சட்டம் இயற்றப்படும்.

- அதற்கேற்ப தனியார் மருத்துவமனைகளில் உள்ள அனைத்து வசதிகளும் அரசு மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்படும். அமைச்சர்கள், அரசு அதிகாரிகள், ஊழியர்கள் அரசு மருத்துவமனைகளைப் பயன்படுத்தும்போதுதான் அதன் தரம் மேலும் உயரும். எளிய மக்களும் இந்த கட்டமைப்பின் மீது நம்பிக்கை கொள்வார்கள். நாம் தமிழர் அரசு அதற்கேற்ற மாற்றத்தைக் கொண்டுவரும்.

அடிப்படைக் குறைபாடுகள் நீக்கம்

- தமிழ்நாட்டில் தற்பொழுது அதிக நோயாளிகளுக்கு குறைவான மருத்துவர்கள் என்ற விழுக்காட்டு நிலையே நீடிக்கிறது. இதனால் அனைவருக்கும் சரியான மருத்துவம் கிடைக்கப்பெறுவதில்லை.
- நாம் தமிழர் அரசு இதில் தனிக்கவனம் செலுத்தி நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களைப் பணியமர்த்தும்.
- இதன்மூலம் அனைவருக்குமான மருத்துவம் காலதாமதமின்றிக் கிடைப்பதுடன் மருத்துவர்களுக்கான வேலைவாய்ப்பும் உறுதி செய்யப்படும்.



முன் மாதிரி









குறைகளை ஒழிக்க மாற்று

- அரசு மருத்துவமனைகளில் உயர் மருத்துவங்கள் அனைத்தும் உடனடியாக கிடைக்கக்கூடிய வகையில் கட்டமைப்பு வலுப்படுத்தப்படும். ஊழியர்களின் குறைபாடுகள் அனைத்தும் களையப்படும். மருத்துவமனைகள் அனைத்தும் கணினிமயப்படுத்தப்பட்டு வெளிப்படைத்தன்மையோடு இயங்கும். மக்களுக்கான மருத்துவம் என்பது அரசின் கட்டாயச் சேவை.

குறைகளையும் குற்றங்களையும் தடுப்பது

- நோயாளிகளுக்குப் போதிய படுக்கை வசதிகள் இல்லாதது, ஊழியர்களின் கண்ணியக்குறைவான வார்த்தைகள் மற்றும் நடத்தைகள், எங்கும் நிறைந்த கையூட்டு, அளவுகடந்த காலந்தாழ்த்தல், மாத்திரை மருந்துகள் பற்றாக்குறை, உள்கட்டமைப்பு இல்லாதது, மேம்படுத்தப்பட்ட கருவிகள் இல்லாதது, போதுமான மருத்துவர்கள் ஊழியர்கள் இல்லாமல் இருப்பது, தூய்மையான கழிப்பறைகள் இல்லாமலிருப்பது போன்ற பல குறைகள் மருத்துவத் துறையில் பெருகியிருக்கிறது. நாம் தமிழர் அரசு இவற்றை முற்றாக ஒழித்துவிடும்.
- சிறுநீரகம் உட்பட உடல் உறுப்புத் திருட்டு மற்றும் சட்டத்திற்கு எதிரான உறுப்புக்கொடை கட்டுப்படுத்தப்படும். இவ்வகையான உடல் உறுப்பு திருட்டில் ஈடுபடும் இடைத்தரகர்கள், அதிகாரிகள், மருத்துவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதோடு உரிமமும் திரும்பப் பெறப்படும்.
- உடல் உறுப்பு மாற்றுக்கு தற்போது இருக்கும் TRANSTAN எனும் இணையதளம் மக்கள் எளிமையாக பயன்படுத்தும்படி மாற்றியமைக்கப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் வெளிப்படையாகச் செயல்படும்.

கணினி நல வாழ்வு அட்டை

- புதிதாகப் பிறக்கும் குழந்தைகளுக்கு மருத்துவமனையிலேயே உடல் நல ஆய்வு குறிப்புகளடங்கிய மருத்துவ அட்டை வழங்கப்படும். ஆண்டிற்கு ஒருமுறை பொது உடல் ஆய்வு செய்து கொள்ளும் வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும். நோய்த் தன்மை மருத்துவம் குறித்த அனைத்தும் அந்த குடும்பநல அட்டையில் பதிவேற்றப்படும். அடுத்தடுத்து என்ன மருத்துவம், அதுவரை அளிக்கப்பட்ட மருத்துவம் என்ன என்பதை அறிந்து, தேவையான அடுத்தகட்ட மருத்துவத்தைப் பார்க்க நிலையான அந்த அட்டை பயன்படும்.
- “அனைவருக்கும் மருத்துவம்” என்ற மருத்துவ அட்டை அமல்படுத்தப்படும். அதில் உடல் உறுப்புக் கொடை செய்ய மனமுவந்து பதிவு செய்பவர்களுக்குத் தனிக்குறியீட்டுடன் கூடிய அட்டை வழங்கப்படும். எதிர்பாராத பெரும் விபத்து நடந்து, அவர் உயிரிழக்கும் நிலையில் உடனடியாக அவரிடம் இருந்து உடல் உறுப்புக்கொடையைப் பெற்று மற்றவர்களுக்குப் பொருத்த ஏதுவாக அந்த அடையாள அட்டை இருக்கும்.



முன் மாதிரி





அரசுப் பல்மருத்துக் கல்லூரி ஒன்று மட்டுமே இருக்கிறது. அதனால் தமிழகத்தின் மக்கள் தொகைக்கு ஏற்பப் பல்மருத்துவர்களை உருவாக்க வேண்டி புதிய பல் மருத்துவக் கல்லூரிகள் மாவட்டந் தோறும் தொடங்கப்படும்



முதியோர்களுக்கான நடமாடும் மருத்துவ மையம்

- அகவை அறுபதுக்கு மேல், உடல்நிலை பாதிக்கப்பட்டு நடக்க முடியாமல் துயருறும் முதியோர்களின் நலனிலும், கருவுற்ற பெண்களின் நலனிலும் எமது அரசு அக்கறை எடுத்துக்கொள்கிறது. எனவே ஒவ்வொரு மருத்துவமனையிலும் முதியோர்கள் மற்றும் கருவுற்ற பெண்களுக்கு என தனியாக ஒரு குழு 24 மணி நேரமும் இயங்கும். நடக்க முடியாத முதியோர்கள் தொலைபேசி மூலம் செய்தி கூறினால் வீடு தேடி மருத்துவர்கள் வருவார்கள். தேவையான மருந்து மாத்திரை ஊசிகளைக் கொடுத்து அறிவுரைகளை வழங்கி வருவார்கள். தொடர்ந்து மேல் மருத்துவம் தேவை என்றால் அவரது பரிந்துரையின் பேரில் அரசு மருத்துவமனைக்கு உயிர்காக்கும் ஊர்தி மூலம் அழைத்துச் செல்லப்படுவார்கள்.

குழந்தைகளுக்கான மருத்துவம்

- ஒவ்வொரு குழந்தையின் மருத்துவ நலனில் அக்கறை எடுத்துக்கொள்ளப்படும். பள்ளியில் சேர்க்கும் போது அந்தக் குழந்தையின் உடல்நலம் குறித்த ஆய்வு அறிக்கையும் சேர்த்தே பதிவு செய்யப்படும். இதனால் குழந்தைக்கு உடல்நலக்கேடு ஏற்பட்டால் உடனே கண்டறிந்து குணப்படுத்த வழிசெய்யப்படும்.

மருந்து, மருத்துவக் கருவிகள் வாங்கும் முறை

- மருந்து மாத்திரைகள், மருத்துவக் கருவிகள் கொள்முதல் செய்வது அனைத்தும் வெளிப்படைத்தன்மையோடு செயல்படும். இந்தப் பிரிவு முதல்வரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருக்கும்.
- மருந்து மாத்திரைகள், ஊசி மருந்துகள் என வாங்கும்போது தரத்தைப் பரிசோதிக்கச் சில ஆயிரம் மாத்திரை அட்டைகளுக்கு ஒரு அட்டையைப் பரிசோதிப்பது, பல ஆயிரம் ஊசி மருந்துகளுக்கு ஒரு ஊசிமருந்தைச் சோதிப்பது என்று ஏதும் இருக்காது. ஆயிரம் மருந்து அட்டைகளுக்கு ஒன்று என்ற விழுக்காட்டில் பரிசோதனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். 'சரியானதுதானா? என்ற ஆய்வு நடத்தப்படும். தேவைப்பட்டால் நூறு மருந்து மாத்திரை அட்டைகளுக்கு ஒன்றைப் ஆய்வு செய்யும் முடிவையும் அரசு எடுக்கும். மக்களின் நல வாழ்வுக்காக உருவாக்கப்படும் மருந்து மாத்திரைகள் தரமற்றதாக இருந்துவிடக்கூடாது என்பதில் நாம் தமிழர் அரசு கவனமாக இருக்கும்.

மருத்துவக் கருவிகள் தயாரிப்பு நிறுவனம்

- தலைசிறந்த மருத்துவக் கருவித் தயாரிப்புகள், இதயத்திற்குத் தேவையான உறை குழாய், செயற்கை தடுக்கிதழ்கள் (வால்வு), பல் நடு பதியத்திருகுகள் (Implants)), வெண்வெள்ளித் தகடுகள் (Titanium Plates), இடுப்பு மூட்டு செயற்கை இணைப்புகள், கால் இழந்தவர்களுக்கு






புற்று நோய் சிகிச்சை

“ஆங்கிலவழி மருத்துவமா? அல்லது தமிழ்வழி மரபு மருத்துவமா என்பதை நோயாளிகள் தேர்வு செய்துகொள்ளலாம்.”


பல் மருத்துவம்



சர்க்கரை நோய்


மனவள மருத்துவமனை

இழைநார் கால்கள் (fiber legs) கைகள் இழந்தவர்களுக்கு உய்யணு கைகள் (Bionic arms) போன்றவைகளை உருவாக்க, மருத்துவக் கருவிகளைத் உருவாக்கும் நிறுவனம் அரசு சார்பிலேயே நிறுவப்படும். இதன் மூலம் ஏழை, நடுத்தர மக்களும் விலைகுறைவான உயர் தர மருத்துவக் கருவிகளைப் பெற்றுக் கொள்ளலாம். தமிழகப் பொறியாளர்களுக்கு வேலையும் கிடைக்கும்.

கணினி மருத்துவக் கலந்தாய்வு

- சிற்றூர் மருத்துவமனைகள் அனைத்தும் மாவட்ட மருத்துவமனைகளோடு கணினித் தொடர்பில் இருக்கும். ஒரு நோயாளிக்கு உடல் நலச் சிக்கல் ஏற்படும்போது, உடனே சிற்றூரில் இருக்கும் மருத்துவர், மாவட்ட மாநிலத் தலைமையிடத்தில் இருக்கும் துறை சார்ந்த மருத்துவ வல்லுநர்களோடு காணொளி மூலம் தொடர்பு கொண்டு கருத்துகளையும், மருத்துவ உதவியையும் பெற்றுக்கொள்ளலாம். ஆளுமை முறையும் கணினிமயப்படுத்தப்படும். மருத்துவமனைப் பகுதிகளும் கணினிக் கட்டுப்பாட்டில் இருக்கும்.

உயிர் காக்கும் ஊர்திகள் (AMBULANCE)

- ஒவ்வொரு தொடக்க நல வாழ்வு மருத்துவ நடுவத்திலும், ஓர் உயிர் காக்கும் ஊர்தி (Ambulance) இருக்கும் அல்லது பத்தாயிரம் பேர் இருக்கக்கூடிய இடத்திற்கு ஓர் ஊர்தி இருக்கும். இதன் மூலம் உயிர்ப் பலியை வெகுவாகக் குறைக்க முடியும். அப்படி கொண்டு வரப்படும் நோயாளிகளுக்கு எந்த நேரத்தில் இருந்து மருத்துவம் பார்க்கப்பட்டது என்பது உள்ளிட்ட அனைத்தும் கணினியில் பதிவு செய்யப்படும். அனைத்திலும் வெளிப்படைத்தன்மை இருக்கும்.

பல் மருத்துவம்

- இதயம் தொடர்பான நோய்கள் உட்பட பல நோய்களுக்குப் பற்கள் தூய்மையில்லாததும் பல் நோயும் ஒரு காரணம், அந்தளவிற்குப் பற்களின் நலனைப் பாதுகாக்க வேண்டும். அப்படியான பல் மருத்துவத்திற்கு தமிழகத்தில் ஒரே ஓர் அரசு மருத்துவக் கல்லூரி மட்டுமே இருக்கின்றது.

- உலக சுகாதார நிறுவனப் புள்ளிவிவரப்படி இந்தியாவில் பத்தாயிரம் பேருக்கு ஒரு பல் மருத்துவர் என்றிருக்கிறார்கள்.

- தமிழகத்தில் ஒரு இலட்சம் பேருக்கு ஒரு அரசு பல் மருத்துவர் என்றளவில் உள்ளது.

- தனியார் பல் மருத்துவக் கல்லூரிகள் அதிகம் இருக்கிறதே ஒழிய, அரசு பல் மருத்துவக் கல்லூரி ஒன்று மட்டுமே இருக்கிறது. இன்றைய பல்நோய் சிகிச்சைக்கான 90 விழுக்காடு மருத்துவம் தனியார் மருத்துவமனைகளால் வழங்கப்படுகின்றன. ஏழை, நடுத்தர மக்களுக்கு ஏற்ற வகையில் மாவட்டத் தலைநகரங்கள்தோறும் ஒரு பல் மருத்துவமனைத் தொடங்கப்படும்.



முன் மாதிரி











ஒவ்வொரு மாவட்டத்திலும் மருத்துவக் கல்லூரி

- தற்போது தமிழகத்தைச் சுகாதார அடிப்படையில் 42 மாவட்டங்களாக (HUD) பிரித்துக் கொண்டு மருத்துவத்தை வழங்கி வருகிறார்கள். அதற்கேற்பப் புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்படும். அதன் மூலம் மேலும் மக்களுக்கான மருத்துவச் சேவையை நாம் தமிழர் அரசு வழங்கும்.

குருத்தணு மருத்துவ முறை (Stemcell)

- குருத்தணு முறை மருத்துவ (ஸ்டெம்செல்) ஆய்வுக்கு முதன்மைத்துவம் அளிக்கப்படும். குருத்தணு ஆய்வு மையங்கள் தொடங்கப்படும். வணிக நோக்கில் முறையற்ற ஆய்வு மையங்கள் வளர்வது தடுக்கப்படும். குருத்தணு வைப்பகங்கள் உருவாக்கப்படும்.

மருத்துவ ஊழியர்களின் நலன்

- மருத்துவர்கள் முதல் ஊழியர்கள் வரை பணியில் சேர்ந்த நாள் முதலே அவர்களுக்கான பணிமூப்பு, பதவி உயர்வு, ஊதிய உயர்வு விதிமுறைகள் முடிவு செய்து அறிவிக்கப்படும். ஊழியர்களின் பணித்திறன் கண்காணிக்கப்பட்டு அதன்படி தங்குதடையின்றி அவர்களுக்கான பதவி உயர்வு பலன்கள் கிடைத்தபடி இருக்கும். வெளிப்படைத்தன்மை, கணினிமய நிர்வாக முறை என்பதால் அவர்கள் மீது வீண் குற்றச்சாட்டுகளுக்கும் பழிவாங்கும் போக்கிற்கும் வாய்ப்பிருக்காது. அதனால் அவர்களின் பணிநலன் பாதுகாப்பாக இருக்கும்.

இடமாற்றச் சிக்கலுக்கான தீர்வு

- மருத்துவத் துறையில் இருப்பவர்களுக்கு மன உளைச்சலை தரும் இடமாற்றம் இருக்காது. அவர்கள் அருகில் உள்ள மருத்துவமனைகளிலேயே பணியமர்த்தப்படுவார்கள். பழிவாங்கும் நோக்குடன் நடத்தப்பட்டு வந்த இடமாற்றங்கள் முற்றாக ஒழிக்கப்படும்.

- கணவர் ஓர் ஊரிலும், மனைவி ஓர் ஊரிலும் பணியாற்றுவதைத் தவிர்த்து, இருவரும் ஒரே ஊரில் பணியாற்றும் முறை கொண்டு வருவதோடு, துறை சார்ந்து ஊழியர் நலனுக்கான பிரிவு ஒன்றும் அமைக்கப்படும்.


மரபு சார்ந்த மருத்துவத்திற்கு முன்னுரிமை


- ஆங்கில மருத்துவத்திற்கு இணையாக நம் மரபு சார்ந்த தமிழ்வழி மருத்துவம் (சித்த மருத்துவம்), ஆயுர்வேதம், ஒல்லியல் மருத்துவம் (ஓமியோபதி), யுனானி எனும் தொல் கிரேக்க மருத்துவத்திற்கும் முன்னுரிமை வழங்கப்படும். மக்கள் வாழும் மலைப் பகுதிகளில் மரபுவழி மருத்துவ நடுவம் ஏற்படுத்தப்படும்.

- தொடக்க நல வாழ்வு மருத்துவ நடுவத்தில் இருந்து மாநிலத்தின் தலைமை மருத்துவமனைகள் வரையிலும் சித்த மருத்துவம், ஒல்லியல் மருத்துவம், ஓகம், தொடு மருத்துவம், புள்ளியியல் மருத்துவக் கிளைகள் தமிழகம் முழுதும் பரவலாக்கப்படும்.



முன் மாதிரி











- நோயாளிகள் தங்கள் விருப்பத்திற்கேற்ப மரபு வழி அல்லது ஆங்கில வழி மருத்துவத்தைத் தேர்ந்தெடுக்கலாம்.

இயற்கை மருத்துவம்

- சுற்றுலா சார்ந்து எங்கெல்லாம் நீர்நிலைகள், அருவிகள், மலைப்பகுதிகள் இருக்கிறதோ அங்கெல்லாம் மரபுவழி மருத்துவத்திற்கான நடுவம் ஏற்படுத்தப்படும். அந்தப் பகுதியில் பெரிய அளவில் மூலிகைப் பண்ணைகளும், அழகுக் குடில்களும் அமைக்கப்படும். சிறுகூல மரபு (சிறுதானிய) உணவு முறையோடு, எண்ணெய்க் குளியல், இயற்கை மருத்துவம் என்ற 'இயற்கை சித்த மருத்துவப் பண்ணை' அமைக்கப்படும். சுற்றுலாப் பயணிகளும், இயற்கை மருத்துவம் வேண்டுவோரும் இதன் மூலம் பயனடைவார்கள்.

மரபுவழி மருத்துவ ஆராய்ச்சி மையம்

- 500 குறுக்கம் நிலப்பரப்பில் "திருமூலர் மருத்துவ ஆராய்ச்சி நகரம்" உருவாக்கப்படும். உலகின் உயர்தர ஆராய்ச்சி கருவிகள் அனைத்தும் உள்ளடக்கிய ஆராய்ச்சிக்கூடங்கள் அமைக்கப்படும். உலகின் தலைசிறந்த மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் இங்கு வந்து மருத்துவ ஆராய்ச்சி செய்ய, ஆய்வுப் பாடம் நடத்த வழிவகை செய்யப்படும்.
- அதில் நம் மரபுவழி மருத்துவமான சித்த மருத்துவத்தில் தனி ஆராய்ச்சிகள் நடத்தப்படும். இந்த ஆராய்ச்சிப் பல்கலைக்கழகம் உலக மருத்துவ ஆராய்ச்சியின் ஊற்றுக்கண்ணாக விளங்கும்.

சித்த மருத்துவ அமைச்சகம்

- ஒன்றிய அரசின் Ayush அமைச்சகம் சித்த மருத்துவத்தைத் தொடர்ந்து புறக்கணித்து வரும் நிலையில் தமிழ்நாடு அரசின் கீழ் சித்த மருத்துவத்தின் கல்வி, ஆராய்ச்சி, மருத்துவ சேவை, மருந்து உருவாக்கம், சுற்றுலா மற்றும் உலகளாவிய பரவலை ஒருங்கிணைக்கும் வகையில் தனித்துவமான சித்த மருத்துவ அமைச்சகம் உருவாக்கப்படும்.
- இதன்கீழ் மாவட்டந்தோறும் சித்த மருத்துவப் பிரிவுகள் விரிவாக்கப்படுவதோடு மட்டுமல்லாமல் தமிழகத்தைத் தாண்டி மற்ற மாநிலங்களிலும் சித்த மருத்துவத்தின் மேன்மைகளை எடுத்துக்கூறி, மாதிரி சித்த மருத்துவமனைகள் அமைக்கப்படும். அழிந்து வரும் சித்த மருத்துவக் குறிப்புகள் அனைத்தும் புத்தகங்களாகவும் மின் புத்தகங்களாகவும் அச்சிடப்படும்.
- சித்த மருத்துவமனைகள் மற்றும் ஆராய்ச்சி மையங்கள் ஐந்து தலைநகரங்களிலும் உருவாக்கப்படும்.
- சித்த மற்றும் ஒருங்கிணைந்த மருத்துவத்தை உலக சந்தையில் முன்னணி துறையாக மாற்றி, 10 ஆண்டுகளில் ஆண்டுக்கு 1 இலட்சம் கோடி வருமானத்தையும், 15 இலட்சம் வேலைவாய்ப்புகளையும் உருவாக்கும் உலகளாவிய மருத்துவ நடுவமாக தமிழ்நாடு மாற்றப்படும்.



கட்டணமில்லா தங்கும் விடுதிகள்

- முதன்மை அரசு மருத்துவமனைப் பகுதிகளிலேயே, தங்கும் வசதிகளைக் கொண்ட புதிய தூய்மையான இலவசத் தங்கும் விடுதிகள் ஏற்படுத்தப்படும். இதனால் உள் நோயாளிகளாகச் சேர்க்கப்பட்டவர்களை கவனித்துக் கொள்ளும் உறவினர்கள் போதிய தங்கும் வசதி இன்றி தவிப்பதும், தேவையற்ற செலவுகளும் குறைக்கப்படும். மருத்துவமனையிலும் நெரிசல் குறையும்.

மருத்துவச் சுற்றுலா

- பொது மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் தொடர்பாக 5 இலட்சத்திற்கும் அதிகமான வெளிநாட்டுப் பயணிகள் இந்தியாவிற்கு ஆண்டுதோறும் வந்து குவிகின்றனர். இந்தியாவைத் தவிர்த்து ஏனைய பிற நாடுகளுக்கும் மேல்நாட்டவர் மருத்துவச் சுற்றுலாவுக்கென பயணிக்கின்றனர். அவர்களைக் கவரும் வண்ணம், தமிழகத்தின் மையப்பகுதியில் மருத்துவச் சுற்றுலா நகரம் உருவாக்கப்படும்.
- இங்கு ஒரே இடத்தில் ஆதி முதல் அந்தம் வரை அனைத்து மருத்துவங்களும் உலகத் தரத்தில் அளிக்கும் தலைசிறந்த மருத்துவ வளாகங்கள் உருவாக்கப்படும். இதில் ஆங்கில மருத்துவம் மட்டுமல்லாது சித்த மருத்துவம், ஓகம், புள்ளியியல், ஆயுர்வேதம், யுனானி போன்ற மாற்று மருத்துவ வளாகங்களும் அமைக்கப்படும்.
- இங்கு நோயாளிகள் உடன் வரும் உறவினர்களுக்கு 5 நட்சத்திர விடுதிக்கு இணையான தங்கும் விடுதிகள், கேளிக்கை பூங்காக்கள், வணிக வளாகங்கள் அமைக்கப்படும். மருத்துவத்துக்குப் பிறகு தமிழகம் மற்றும் பிற மாநிலங்களையும் சுற்றிப் பார்க்க மொழிபெயர்ப்பாளர்களோடு கூடிய சுற்றுலாவிற்கு அரசு ஏற்பாடு செய்து கொடுக்கும். இந்த மருத்துவச் சுற்றுலா நகரத்தின் மூலம் அரசுக்கு வருவாயும், நாட்டிற்கு சுற்றுலாத்துறையின் மூலம் அந்நியச் செலாவணியும் பெருகும்.

திருநங்கை, திருநம்பிகளுக்குத் தனி மருத்துவமனை

- திருநங்கை, திருநம்பிகளின் மனம் மற்றும் உடலியல் சிக்கல்கள் மற்றும் தேவைகள் தனித்துவம் வாய்ந்தவை. இதை கருத்தில் கொண்டு, திருநங்கை, திருநம்பிகளுக்கென திருச்சியில் ஒரு தனி மருத்துவமனை உருவாக்கப்படும்.

மனவள மருத்துவமனைகள்

- மனம் சார்ந்த சிக்கல்களுக்கான மருத்துவம் என்பது வெளிநாடுகளில் பரவலாக்கப்பட்ட ஒன்று. அதைப்போன்று தமிழகத்திலும் மனவள மருத்துவமனைகள், நாடாளுமன்ற தொகுதிக்கு ஒன்று என 40 அமைக்கப்படும். மன அழுத்தம், மன வளர்ச்சி குன்றியவர்களுக்கான சிறப்பு மருத்துவம், இயற்கை சார்ந்த சூழலில் அமைக்கப்படும். அடுத்த தலைமுறையின் மன வளம் சிறப்புடையதாக அமையும்.

முன் மாதிரி



தற்போது தமிழ்நாட்டு அரசு மருத்துவமனை



நாம் தமிழர் அரசில்

புற்றுநோய்க்கான மருத்துவ விரிவாக்கம்

- சென்னையில் மட்டுமே புகழ்பெற்ற புற்றுநோய் மருத்துவமனை உள்ளது. புற்று நோய் சிகிச்சைக்காக தென்கோடியில் உள்ளவர்களும் தலைநகரத்தை நோக்கி வரவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. அதை தவிர்க்க வேண்டி, எல்லா மருத்துவக் கல்லூரிகளிலும் உள்ள புற்றுநோய்க்கான பிரிவு, சிறப்பு மருத்துவப் பிரிவாக தகுதி உயர்த்தப்படும்.

சர்க்கரை நோயின் தலைநகர்

- உலக அரங்கில் இந்தியா சர்க்கரை நோயின் தலைநகராக விளங்குகிறது. இந்த சர்க்கரை நோய் மட்டும் ஒருவருக்கு வந்துவிட்டால் அதன் தொடர்ச்சியாக இரத்த அழுத்தம், இருதயக் கோளாறுகள், உறுப்புகள் செயலிழப்பு போன்ற பற்பல நோய்கள் வந்துவிடும். இதை மாற்றியமைக்கும் முறையில் நாம் தமிழர் அரசு சர்க்கரை நோய்க்கான நிலையான தீர்வு பற்றிய ஆராய்ச்சிகள் மேற்கொள்வதோடு, மக்களிடையே இந்நோய் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தி, வாழ்க்கை முறை மாற்றியமைக்கப்பட்டு சத்தான உணவுகளையும் பரிந்துரை செய்து சர்க்கரை நோயாளிகள் இல்லா தமிழ்நாடு என்ற இலக்கை எட்டப் பாடுபடும்.



உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே.

– திருமூலர்



“ஒவ்வொரு ஊராட்சியிலும் தரம் வாய்ந்த விளையாட்டுப் பயிற்சித் திடல்கள், பயிற்சியாளர்கள் ஊராட்சி அளவிலேயே அமர்த்தப்படுவார்கள்.”

உடலினை உறுதி செய்

> விளையாட்டு, உடலை உறுதியாக வைத்துக் கொள்ள உதவுகிறது. சீரான உடல் இயக்கமே சரியான சிந்தனைகளுக்கு வழிவகுக்கும். தமிழக மரபு விளையாட்டுகள் அனைத்தும் உளவியல் தன்மை கொண்டவை. உடலை வலிமைப்படுத்துவதோடு மனத்தை ஒருமுகப்படுத்தி வலுப்படுத்தும். இவ்வகை விளையாட்டுகள் வாழ்க்கையில் அனைத்துத் தடைகளையும் எதிர்கொள்ளும் ஆற்றலை வழங்கும்.

தமிழகமும் பேர் சொல்லும்

- Jamaica நாட்டைச் சேர்ந்த தடகள ஓட்டப்பந்தய வீரர் உசேன் போல்ட், தமிழ்நாட்டின் கண்ணகி நகரைச் சேர்ந்த கார்த்திகா ஆகியோர் தனி ஒரு ஆளாக தன் தாய்நாட்டின் பெயரை ஒரே ஒரு விளையாட்டு மூலம் உலகறியச் செய்தனர். அதே போன்ற நம்பிக்கை இளைஞர்கள் மனத்தில் இருந்தாலும், அதற்கான வசதி வாய்ப்புகள் அவர்களுக்குப் போதிய அளவில் கிடைப்பதில்லை.
- தற்போது 38 மாவட்டங்கள் உள்ள தமிழகத்தில் விளையாட்டுக் கல்வி மேம்பாட்டு ஆணையம் சார்பான மாணவ, மாணவிகளின் தங்கும் விடுதி 27 மட்டுமே உள்ளது. இது போதுமானதல்ல. அனைத்து மாவட்டங்களிலும் தங்கும் விடுதியுடன் கூடிய விளையாட்டுப் பயிற்சிக் கூடங்கள் அமைக்கப்படும்.

சி.பா.ஆதித்தனார் பெயரில்

- சி.பா.ஆதித்தனார் பெயரில் விளையாட்டுப் பல்கலைக்கழகம் தொடங்கப்படும். இங்குப் பன்னாட்டளவில் சிறந்த விளையாட்டுப் பயிற்சிகளும், உலகத் தரத்திலான பயிற்றுநர்களும் பணியமர்த்தப்படுவார்கள். விளையாட்டுத் துறையில் உயர் ஆராய்ச்சி படிப்புகளும் மேற்கொள்ளப்படும். இந்தப் பல்கலைக்கழகம் பஞ்சாப் மாநிலம் பாட்டியாலாவில் உள்ள விளையாட்டுப் பல்கலைக்கழகத்தைவிட சிறப்பான கட்டமைப்பைக் கொண்டதாக அமைக்கப்படும்.



“சி.பா.ஆதித்தனார் பெயரில் விளையாட்டுப் பல்கலைக்கழகம் தொடங்கப்படும். இங்குப் பன்னாட்டளவில் சிறந்த விளையாட்டுப் பயிற்சிகளும், உலகத் தரத்திலான பயிற்றுநர்களும் பணியமர்த்தப்படுவார்கள்.”



- இந்த விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் விளையாட்டுத் துறைக்கென்று சிறப்புத் தகுதி பெற்ற மருத்துவர்கள், இயன்முறை மருத்துவர்கள், சிறப்பு மருத்துவமனை, அதற்கான ஊழியர்கள் என அனைத்து வசதிகளுடன் ஏற்படுத்தப்படும்.

- இப்படியான வசதி வாய்ப்புகளைக் கொடுத்துவிட்டால் விளையாட்டில் ஆர்வம் உள்ள மாணவ - மாணவிகள் சிறந்த வீரர்களாக விளங்குவார்கள். பன்னாட்டளவில் விருதுகளைப் பெறக் கூடியவர்களாக மாறுவார்கள்.

கூடுதல் இடப்பகிர்வு

- விளையாட்டு வீரர்களுக்கு அரசுத் துறையில் வேலைவாய்ப்புக்கான இடப்பகிர்வு இப்போது 3 விழுக்காடு என்றிருக்கின்றது. நாம் தமிழர் ஆட்சியில் அது 5 விழுக்காடாக உயர்த்தப்படும்.

மண்ணின் மரபு விளையாட்டு

- மாநில, தேசிய, பன்னாட்டு விளையாட்டுகளை ஊக்கப்படுத்தி வளர்த்தெடுக்கும் அதே வேளையில் 120க்கும் மேற்பட்ட தமிழர் மரபு விளையாட்டுகளையும் மீட்டெடுக்கத் தனித்துறை அமைக்கப்படும்.

- நமது மரபு விளையாட்டுகளில் சிலம்பமும், கபடியும் மட்டுமே இப்போது பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் இசைவுப்பெற்றதாக இருக்கின்றன. இதில் மேலும் தகுதியுடைய விளையாட்டுகளையும் சேர்ப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படும்.

ஊராட்சிகள்தோறும்

- ஒவ்வொரு ஊராட்சிகளிலும் தரம் வாய்ந்த விளையாட்டுப் பயிற்சித் திடல்கள் அமைக்கப்படும். அனைத்து விளையாட்டுகளுக்குமான பயிற்சியாளர்கள் ஊராட்சி அளவிலேயே அமர்த்தப்படுவார்கள். இதில் சிறந்தவர்களாக விளங்குபவர்கள் மாவட்ட அளவிலான விளையாட்டுப் பயிற்சி மையத்தில் இணைக்கப்படுவார்கள்.

சிற்றூர்களிலும் உடற்பயிற்சிக் கூடங்கள்

- அனைத்துச் சிற்றூர்களிலும் உள்ள பள்ளிகள் அனைத்திலும் சிறந்த உடற்பயிற்சிக் கூடங்கள் அனைத்து வகையான கருவிகளுடன் அமைக்கப்படும்.


- ஆண்டுதோறும் தமிழர் திருநாள் அன்று விளையாட்டுப் போட்டிகள் மிகப்பெரிய அளவில் நடத்தப்படும்.

தமிழ்ப் போராளிகள் பெயரில்

- மாநில, தேசிய மற்றும் உலக அளவில் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறும் விளையாட்டு வீரர்களுக்குத் தமிழ்ப் போராளிகள் பெயரில் விருதுகள் வழங்கப்படும்.













- விருதுகள் பெற்ற விளையாட்டு வீரர்களுக்குத் தகுதிக்கேற்ற அரசு வேலை அளிக்கப்படும்.
- போட்டிகளுக்காகத் தேர்வு செய்யப்படும் வீரர்களின் தேர்வு வெளிப்படையாகவும், அவர்களின் திறமையின் அடிப்படையிலும் நடைபெறும்.
- மாநில, தேசிய, உலக விளையாட்டிற்குத் தேர்வு செய்யப்பட்ட வீரர்களுக்கு தங்கும் வசதி, உணவுடன் கூடிய சிறப்புப் பயிற்சிகள், போக்குவரத்துச் செலவுகள் என அனைத்தையும் அரசு ஏற்றுக்கொள்ளும். நாம் தமிழர் ஆட்சியில் இதற்கான கூடுதல் தொகை ஒதுக்கப்படும்.

பயிற்சியாளர்கள்

- அனைத்து விளையாட்டுகளுக்கும் சிறப்புப் பயிற்சியாளர்கள் மூலம் பயிற்சி அளிக்கப்படும்.
- பதக்கங்களை வென்ற விளையாட்டு வீரர்களுக்கு வழங்குவது போல பயிற்சியாளர்களுக்கு விருதுகளும் அரசு உதவிகளும், தமிழ்ப் போராளிகள் பெயரில் வழங்கப்படும்.


சிறப்பு மருத்துவம்

- பயிற்சியின் போதோ அல்லது விளையாட்டுப் போட்டிகளின் போதோ (வேறு மாநிலங்களில், நாடுகளில் நடந்தால் கூட) வீரர்களுக்கு எதிர்பாராத நேர்ச்சிகள் நடந்தால் அதற்கான முழு மருத்துவச் செலவையும் அரசே ஏற்கும். இதற்கென சிறப்பு மருத்துவப் பிரிவும் ஏற்படுத்தப்படும்.



உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்
கள்காதல் கொண்டுஒழுகு வார்.

– தமிழ்மறை (921) – வள்ளுவப்பெருமகனார்



வெறிம (போதை) ஒழிப்பு

> தமிழகத்தில்
> குடி நோயாளிகளின்
> எண்ணிக்கை அதிகரித்தபடியே
> உள்ளது என்கிறது அரசு
> மருத்துவமனைத் துறை.
> சிறியவர், பெரியவர், ஆண், பெண்
> என்ற எந்த வேறுபாடுமின்றி
> பெரும்பாலானோர் குடி
> நோயாளிகளாக மாறி
> இருக்கின்றார்கள்.

இங்கேயும் ஓர் இனப்படுகொலை

- ஈழ மண்ணில் சிங்கள இனவெறி அரசு நடத்திய கொடூர இனப்படுகொலையில் 1,75,000க்கும் மேற்பட்டோர் இறந்து போனார்கள்.
- ஆனால், இங்கே திராவிட அரசுகள் கொண்டு வந்த மது விற்பனையால் 2,00,000 பேர் இறந்திருக்கிறார்கள். அங்கே சிங்களவன் ஒரே நேரத்தில் இன அழிப்பைச் செய்தான். இங்கே எங்களவன் தவணைமுறையில் இன அழிப்பைச் செய்கிறான்.
- மது, புகையிலை மட்டுமல்லாது, கஞ்சா, வெறிம (போதை) மாத்திரைகள், வெறிம இன்கட்டிகள் (போதை மிட்டாய்கள்) போன்ற வெறிமப் பொருள்கள் பள்ளிச் சிறுவர்கள் உட்பட அனைவருக்கும் தங்குதடையின்றிக் கிடைக்கும் நிலையில் தமிழ்நாடு இருப்பது தமிழ்ச்சமூகத்தையே குற்றச் சமூகமாக மாற்றும் கொடுஞ்செயலாகும்.

கைம்பெண்கள் அதிகம்

- இந்தியாவின் மாநிலங்களில் தமிழகம் கைம்பெண்கள் எண்ணிக்கையில் இரண்டாவது இடத்தில் உள்ளது. மாறி மாறி ஆட்சியில் அமர்ந்து கொண்டு மது விற்பனையைப் போட்டி போட்டு நடத்திய திராவிடக் கட்சிகளே இதற்குக் காரணம்.
- குடிநோய்ப் பழக்கத்தால் இலக்கக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அரசின் கொள்கையற்ற ஆட்சி முறையின் விளைவாக நடந்திருக்கும் இதனை நாம் தமிழர் அரசு முற்றிலுமாகத் தடுத்து நிறுத்தி முழுமையான மது விலக்கை அமல்படுத்தும்.



டாஸ்மாக் அவலங்கள்





















வருமானமல்ல, அவமானம்

- மது அருந்துவதன் மூலம் நரம்பு மண்டலம், கல்லீரல், குடல் பகுதி ஆகியவை பாதிக்கப்பட்டு இறந்து போகும் குடி நோயாளிகளின் எண்ணிக்கை மிகவும் அதிகம். அவர்களைப் பற்றிய அக்கறையற்றுப் பொருளீட்டுவதில் மட்டும் கவனம் கொண்டு அரசுகள் செயல்படுவது நாட்டிற்கு வருமானம் அல்ல அவமானம் என்பதை நாம் தமிழர் கட்சி உணர்ந்திருக்கின்றது.
- பல்வகையான மன நோய்களுக்கும், மனப்பிறழ்வு நிலைக்கும் மதுவே முதன்மையானக் காரணியாக அமைகிறது. சமுதாயத்தில் நடக்கும் கொலை கொள்ளை நிகழ்வுகளுக்கும், வன்புணர்வுக் கொடுமைகளுக்கும் மிக முதன்மையானக் காரணியாக மதுவே இருந்து வருகிறது.

நேர்ச்சிகள் (விபத்துகள்)

- இந்தியாவில் நடக்கும் சாலை நேர்ச்சிகளில், அதிகளவில் நேர்ச்சிகள் நடந்தேறுவது தமிழகத்தில்தான் என்றும் பெரும்பாலான நேர்ச்சிகளுக்கு காரணம் மதுவருந்திவிட்டு ஊர்தி ஓட்டியதுதான் என்றும் அறியப்படுகிறது.
- நாம் தமிழர் அரசு அதிகாரத்திற்கு வந்ததும் முதல் வேலையாக மதுக்கடைகளைப் படிப்படியாக ஓராண்டுக்குள்ளாக நிறுத்திவிடும்.

அச்சுறுத்தும் புற்றுநோய்

- புகையிலையில் இருக்கும் பல நூற்றுக்கணக்கான நச்சுப்பொருள்கள் அதை உட்கொள்பவர்களின் நுரையீரல், தொண்டைக்குழி, குடல் உட்பட பலவகையான புற்று நோய்களின் காரணியாக விளங்குகிறது
- புற்றுநோயால் இறப்பவர்களின் எண்ணிக்கையில் 45 விழுக்காட்டுப் பேர் புகையிலைப் பொருள்களைப் பயன்படுத்துபவர்களாக இருக்கிறார்கள்.
- நாம் தமிழர் அரசு புகையிலையை முற்றிலுமாகத் தடை செய்வதுடன் சட்டத்திற்குப் புறம்பாக புகையிலை விற்பனை செய்பவர்களுக்கெதிராகக் கடுமையான சட்டங்களை உருவாக்கும்.

குடியைக் கெடுக்கும் அரசு

- குடி குடியைக் கெடுக்கும் என்று விளம்பரப்படுத்துகிற அரசே தன் குடிமக்களின் குடியைக் கெடுக்க மதுவை விற்பது அவமானகரமானது. குடிக்கின்ற மக்கள் கொடுக்கின்ற காசில் நடக்கின்ற அரசு என்பதாலேயே இது குடியரசு என்றாகி இருக்கின்றது. ஒரு குடிகாரன், 'மது குடிப்பதால் நாம் தான் தள்ளாடுகிறோம். குடிக்கவில்லை என்றால் அரசே தள்ளாடும்' என்று சொல்லும் அளவிற்கு அரசு மதுபான விற்பனை மோசமாகி இருக்கிறது.

மறுவாழ்வு மையம்

- குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி விட்டவர்களின் எதிர்கால நன்மையைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கான மறுவாழ்வு மையம் நிறுவுவதுடன் அவர்கள் குடிப்பழக்கத்திலிருந்து மீண்டு பெருமைமிக்க வாழ்வு வாழ்வதற்கான மன வள அறிவுரைகளையும் பயிற்சிகளையும் அளிக்கும்.



பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி.

பெரும்பாவலர் பாட்டன் பாரதி



வீரப்பெரும்பாட்டி
வேலு நாச்சியார்

பெண்ணுரிமை

பெண் விடுதலை இல்லையேல், மண் விடுதலை இல்லை.

– தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்

> தமிழ்ச் சமூக அமைப்பு, பெண்களைத் தெய்வமாகவும், வீரம் செறிந்தவர்களாகவும், அறிவில் சிறந்தவர்களாகவும் பதிவு செய்கிறது. இடைபுகுந்த பண்பாட்டுக் கலப்பு, பல்வேறு இனங்களின் படையெடுப்புத் தாக்கம் ஆகியவை பெண்ணை ஆணுக்குரிய நுகர்வுப் பொருளாகக் குறுக்கியதை நாம் தமிழர் அரசு உணர்ந்து, கல்வி, அரசியல் அதிகாரம் உட்பட அனைத்திலும் அவர்களுக்கான சமனிய உரிமையை உறுதி செய்யும்.

பெருஞ்சுமையல்ல பேரின்பம்

- பெண் கருக்கொலை முற்றிலும் ஒழிக்கப்படும். கருவில் ஊடுநோக்கி (Scan) மூலம் பாலின அறிவிப்புத் தடைச் சட்டம் முழுவீச்சாக நடைமுறைப்படுத்தப்படும். இச்சட்டத்தை மீறும் மருத்துவமனைகளுக்கும், பெற்றோர்களுக்கும் கடும் தண்டனை வழங்கப்படும். பெண் குழந்தைகளின் பாதுகாப்பு, பெரும் செலவிலான திருமணங்கள், சடங்குகள் போன்ற காரணங்களால் பெண் குழந்தைகளைச் சுமையாக எண்ணும் போக்கு நிலவுகிறது. இதற்கு எதிராகவும், சமூகத்தில் பெண்களின் முதன்மைத்தன்மை குறித்தும் விழிப்புணர்வுப் பரப்புரைகள் மேற்கொள்ளப்படும்.
- 'பெண்ணே செல்வம், எதற்காக கட்டாயச் சீர் (வரதட்சணை)?' என்ற கேள்வியை கோட்பாட்டினை நாம் தமிழர் அரசு முன்வைக்கிறது. ஆதலால், கட்டாயச் சீர் கொடுமைகளுக்கு எதிராக நாம் தமிழர் அரசு கடுமையானச் சட்டங்களை நடைமுறைப்படுத்தும். கட்டாயச் சீர் கொடுப்பதும், வாங்குவதும் சட்டத்திற்குப் புறம்பானது. இச்செயலில் ஈடுபடுபவர்களுக்கு அரசு வேலை உட்பட எந்த உதவிகளும், உரிமைகளும் வழங்கப்படமாட்டாது.



மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திடல் வேண்டுமம்மா!

– கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை





"பெண் என்னும் பேராற்றல்
அதுவே உலகின் உயிராற்றல்.
பெண்மையைப் போற்றுவோம்
பெருமைமிக்க நாடாக மாற்றுவோம்."

- பாலியல் குற்றங்கள் ஆகியவற்றுக்கெதிரான சட்டங்கள் கடுமையாக்கப்பட்டு, இத்தகைய குற்றங்கள் முற்றிலுமாக தடுத்து நிறுத்தப்படும். பாலியல் வன்புணர்வில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படும்.

கல்விக்கூடங்களில் விழிப்புணர்வு

- கல்விக்கூடங்களில் பாலியல் விழிப்புணர்வு, உடல்நல கருத்துரைகள், தற்சார்பு வாழ்க்கை முறை, தற்காப்புக் கலைகள், வாழ்க்கைக் கல்வி ஆகியவை சிறந்த வல்லுநர்களைக் கொண்டு சிறப்புக் கல்வியாகக் கற்றுத்தரப்படும். இதன்மூலம் அவர்கள் தன்னம்பிக்கை பெற்றவர்களாகத் திகழ்வர்.

பெண்களுக்குச் சரிபாதி வேலைவாய்ப்பு

- தமிழக அரசின் அனைத்துத் துறைகளிலும் பெண்களுக்குச் சரிபாதி வேலை வாய்ப்புகள் அளிக்கப்படும்.
- விளையாட்டுத் துறையில் பெண்களுக்கு சமவாய்ப்பு அளிக்கப்படும்.
- காவல்படை, கடற்படை, சிறப்புக் காவல், வானூர்திப் போக்குவரத்து, மென்பொருள் / வன்பொருள் உருவாக்கம், நீதித்துறை என அனைத்திலும் வாய்ப்புகளை ஏற்படுத்தி, பெண்களின் பேராளுமை உறுதி செய்யப்படும்.
- தமிழினத்தின் வீர மங்கையர்கள் பெயரில் வேலைவாய்ப்புத் திட்டங்கள் உருவாக்கப்படும். மேலும் பெண்களுக்கு அவர்களின் குழந்தைகள் மற்றும் குடும்பத்தைக் கவனிக்க, வேலை நேரம் ஆறு மணி நேரமாகக் குறைக்கப்படும். வீட்டிலிருந்தபடி கணினி வழியே பணிபுரியவும் வழிவகை செய்யப்படும்.

பணியிடங்களில் பாதுகாப்பு

- அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிக்குச் செல்லும் பெண்களுக்குப் பணியிடத்தில் எந்த அச்சமுமின்றி வேலை செய்ய ஏதுவாக, பாலியல் வன்கொடுமைத் தடைச்சட்டங்கள் கடுமையாக்கப்படும். குற்ற முறையீடு அளிக்கும் பெண்களின் தரவுகள் கமுக்கமாக வைக்கப்படும். உரிய நடவடிக்கைகளை விரைவாக எடுப்பதன் மூலம் பணியிடத்தில் அவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.

- பெண்களின் பணியிடங்களில் கட்டாயமாகக் கண்காணிப்புக் கருவிகள் இருப்பதை நமது அரசு உறுதி செய்யும். மேலும், அவர்கள் கைகளில் அணியக்கூடிய வகையில் பாதுகாப்புக் கருவி ஒன்று வழங்கப்படும். இடர் ஏற்படும் நேரங்களில் அந்தக் கருவியின் மூலம் குடும்பத்தினருக்கும், காவல்துறையினருக்கும் நெருக்கடிக்கால எச்சரிக்கை அனுப்பும்படி அது வடிவமைக்கப்படும். இதனைப் பொறுப்புணர்வுடன் இடர் நேரங்களில் மட்டுமே பயன்படுத்த பெண்களுக்கு அறிவுறுத்தப்படும்.

- ஊடகங்களில் பெண்களின் உரிமைகளை இழிவுபடுத்துவது தகுந்த சட்டங்களின் மூலம் அறவே தடுக்கப்படும். திரைப்படங்களிலும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பெண்களை இழிவுபடுத்தும் போக்கை பெண்ணிய இழிவாக நாம் தமிழர் அரசு கருதுகிறது. நல்ல கலைஞராக, பார்வையாளராக நேர்மையான கருத்துரைகளை வைக்கலாமே ஒழிய, தனிப்பட்ட வாழ்வை இழிவுபடுத்துவதை ஏற்க முடியாது. கடும் சட்டங்கள் மூலம் இவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.



மாதர்தம்மை இழிவுசெய்யும் மடமையைக் கொளுத்துவோம்;
வையவாழ்வு தன்னில்எந்த வகையினும் நமக்குளே
தாதர்என்ற நிலைமைமாறி ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக வாழ்வம்இந்த நாட்டிலே!

– பெரும்பாவலர் பாரதி



தெற்குத் தொடர்வண்டித்துறையின் முதல் திருநங்கை பயணச்சீட்டு ஆய்வாளர்
சிந்து கணபதி



இந்தியாவின் முதல் திருநங்கை காவல் உதவி ஆய்வாளர்
பிரித்திகா யாசினி

பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாஎன் கின்றீரோ?
மண்ணுக்குக் கேடாய் மதித்தீரோ பெண்ணினத்தை?
பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே
ஊமையென்று பெண்ணை உரைக்குமட்டும் உள்ளடங்கும்
ஆமை நிலைதான் ஆடவர்க்கும் உண்டு!

– புரட்சிப்பாவலர் பாரதிதாசன்

மகளிர் தன்னுதவிக்குழு

- மகளிர் தன்னுதவிக் குழுக்கள் பெற்றிருக்கின்ற அனைத்துக் கடன்களும் தள்ளுபடி செய்யப்படும்.
- நாம் தமிழர் அரசு கட்டமைக்கும் வேளாண் பண்ணை சார்ந்த தொழிற் சாலைகளில் அவரவர் கல்வித் தகுதிக்கேற்ற வேலைவாய்ப்புகள் வழங்கப்படும் அல்லது வீட்டிலிருந்தபடியே வேலைகளைச் செய்யவும் வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படும். இதனால் நிலையான வருவாய் கிடைக்கும். அவர்களின் வாழ்வாதாரம் உயரும்.

முன்னேற்றப் பாதையில் திருநங்கைகள் / திருநம்பிகள்

- திருநங்கைகளும், திருநம்பிகளும் நம் உடன் பிறந்தவர்கள். இயற்கையின் மாறுதலை இழிவுபடுத்தவோ குறைகள் கூறவோ எவருக்கும் உரிமையில்லை. ஆகையினால் அவர்கள் அனைவரும் தன்மானத்துடனும், சமுதாயத்தில் இயல்பாக வாழவும், எல்லாத் துறைகளிலும் பேராளுமை பெறவும் நாம் தமிழர் அரசு பயிற்சி மற்றும் சமூக ஏற்பளிப்பை உறுதி செய்யும். கல்விக்கேற்ற அரசு வேலைகள் வழங்கப்படும். தங்கும் விடுதிகள், கல்வி மற்றும் தொழிற்கல்வி, வேலைவாய்ப்புப் பயிற்சி மையங்கள் அமைத்துக் கொடுக்கப்படும்.
- அவர்கள் தொழில் தொடங்க தமிழ்த்தேசிய வைப்பகத்தில் இருந்து குறைந்த வட்டியில் கடன் வழங்கப்படும்.
- திருநங்கைகள், திருநம்பிகளுக்கான மருத்துவ உதவிகள், மனவள அறிவுரைகள், மாற்றுப் பாலின அறுவை மருத்துவம் ஆகியவற்றை அரசே கட்டணமின்றி வழங்கும்.
- குடும்பத்தினரால் கைவிடப்பட்ட திருநங்கைகள், திருநம்பிகளுக்கு அரசே பாதுகாப்பு வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்யும். புறக்கணிக்கும் குடும்பத்தினர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் அவர்களுக்கான அறிவுரைகளும் வழங்கப்படும்.
- திருநங்கைகள் பிச்சையெடுப்பது, பாலியல் தொழிலில் ஈடுபடுவது ஆகியவை தடை செய்யப்பட்டு மதிப்புமிக்க வாழ்வினை நாம் தமிழர் அரசு உறுதி செய்யும்.

பெண்கட்குக் கல்விவேண்டும் குடித்தனம் பேணுதற்கே
பெண்கட்குக் கல்விவேண்டும் மக்களைப் பேணுதற்கே
பெண்கட்குக் கல்விவேண்டும் உலகினைப் பேணுதற்கே
பெண்கட்குக் கல்விவேண்டும் கல்வியைப் பேணுதற்கே!

– புரட்சிப்பாவலர் பாரதிதாசன்




Braille
ACCESSIBLE
RAMP
P

மாற்றுத்திறனாளிகள் நலன்

- மாற்றுத்திறனாளிகளுக்கென்று தனி அமைச்சகம் மற்றும் தனி அமைச்சர் உருவாக்கப்படும். மேலும் தமிழகத்தின் அனைத்து உள்ளாட்சிப் பதவிகளுக்கான இடப்பங்கீட்டில் 5% மாற்றுத்திறனாளிகளுக்காக ஒதுக்கப்படும்.

- மாற்றுத்திறனாளிகள் உரிமைச்சட்டம் 2016இல் வழங்கப்பட்டுள்ள 4% இடப்பங்கீட்டை முழுமையாக நடைமுறைப்படுத்தும் வண்ணம் தமிழ்நாட்டு அரசின் கீழுள்ளப் பணியிடங்களை முழுமையாகவும், அறிவியல் நிலையிலும், ஆய்வு செய்து கண்டறியும் ஆணையம் உருவாக்கப்படும்.

- பொதுமக்கள் பயன்படுத்தும் அரசு மற்றும் தனியார் கட்டடங்கள் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் வகையில், எளிமையாக அணுகத்தக்க வகையில் சாய்வுதளம், கழிவறை, மின்தூக்கி, வாகனம் நிறுத்துமிடம், படிகளில் சிறப்புக் கைப்பிடி போன்ற மற்ற வசதிகள் உருவாக்கப்படும். புதியதாகக் கட்டப்படும் கட்டடங்களில் சாய்வுதளம் மற்றும் மின்தூக்கி அமைப்பதற்கான வரைப்படத்தில் குறிப்பிடவில்லையெனில் கட்டட உரிமம் நீக்கப்படும்.

- மாற்றுத்திறனாளிகள், மகிழுந்து (Taxi), தானி (Autorickshaw) போன்றவைகளைக் கைகளால் இயக்கி வாழ்வாதாரத்தை ஏற்படுத்திக் கொள்ளும் வண்ணம் முறைப்படி சட்டத்திற்கு உட்பட்டு அல்லது திருத்தப்பட்டு ஓட்டுநர் உரிமம் மற்றும் சிறப்புக் கடன் வசதிக்கான திட்டம் உருவாக்கப்படும்.

- கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் (மனவளர்ச்சி உட்பட) அவர்களின் விருப்பத்திற்கேற்ப கூட்டாக வாழக்கூடிய (Community Living) வீடுகளோ அல்லது மனைகளோ அமைத்துக் கொள்ள உதவிகள் செய்யப்படும்.

- ஒவ்வொரு மாவட்டத் தலைமை மருத்துவமனையில் இயலாமை உடையோர், மூத்தக் குடிமக்கள், அரிதான நோய்களால் பாதிக்கப்பட்டோர், அமைப்புச் சாரா இயலாமை (NON-CONVENTIONAL DISABILITY) உள்ளவர்களுக்கான தனி மருத்துவத்துறை (Disability Management Department) அமைக்கப்படும். மாற்றுத்திறனாளிகளுக்கான உதவிக் கருவிகளை உருவாக்கி, சீராக்கம் செய்வதற்கானப் பணிமனை ஒவ்வொரு மாவட்டத்திலும் உருவாக்கப்படும்.

- Autism போன்ற பாதிப்புக்குள்ளான அறிவுசார் வளர்ச்சிக்குறைபாடுடைய குழந்தைகளுக்கான, அரசு சிறப்புப் பள்ளி மாநிலத்திற்கே ஒன்றுதான் உள்ளது. இது மாவட்டத்துக்கு ஒரு பள்ளி என்று உருவாக்கப்படும். இதைப்போலவே, வயது வந்த, ஆதரவற்ற, மனவளர்ச்சி குன்றியோருக்குப் காப்பகங்கள் உருவாக்கப்படும். அறிவுசார் வளர்ச்சிக் குறைபாடுடைய குழந்தைகளைத் தொடக்க நிலையிலேயே கண்டறிந்து, பயிற்சி கொடுக்க உதவும் ஈ.ஐ. (c.1) நிலையங்கள் மாவட்ட அளவில் உள்ளன. இதனை வட்ட அளவில் கொண்டு வந்து மேலும் பல நிலையங்கள் உருவாக்கப்படும்.



தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது.

– தமிழ்மறை (68) – வள்ளுவப்பெருமகனார்



பிள்ளைகளுக்கு அறிவூட்டுவது எவ்வளவு முதன்மையோ, அதைப்போலவே தாழ்வு மனப்பான்மையற்ற, தன்னம்பிக்கையுள்ள, நல்ல உளவியலோடு வளர்த்தெடுப்பதும் முதன்மையானது.

அன்புத்தளிர்

குழந்தைகள் நம் நாட்டின் வருங்கால சொத்து. அவர்கள் இந்நாட்டின் வளர்ச்சிக்கான முதுகெலும்பு. பிள்ளைகள் வறுமையால் கல்வியைக் கைவிடுவதும், தெருவோரங்களில் கைவிடப்பட்டவர்களாக நிற்பதும் மாபெரும் கொடுமை. நாம் தமிழர் அரசு இவர்களின் நலனில், வளர்ச்சியில் முழு அக்கறை காட்டும்.

சிறார் மற்றும் முதியோர் நலனுக்கென தனி அமைச்சகம்

- இந்தியாவின் பல்வேறு சட்டங்களில் சிறார்களுக்கான அகவை வரம்பு வெவ்வேறாக இருப்பதால், இன்னும் பல சிறார்கள் ஒரு சீரான சட்டப் பாதுகாப்பு கிடைக்காமல் பாதிக்கப்படுகின்றனர். நாம் தமிழர் அரசு, ஒன்றிய நாடுகள் அவை (ஐ.நா.) வரையறுத்துள்ள 18 ஆகவைக்குக் கீழ் உள்ளவர்களை அனைத்துச் சட்டங்களிலும் சிறார்களாக அறிவிக்க ஒன்றிய அரசை வலியுறுத்தும். சிறார் மற்றும் முதியோர் நலனுக்கெனத் தனி அமைச்சகம் அமைக்கப்படும்.

சிறார் வேலைக்குத் தடை

- சிறார் வேலைக்குச் செல்வது முற்றாக ஒழிக்கப்படும். உறுதியாகப் படித்தாக வேண்டும் என்ற உத்தரவுடன், தடையின்றித் தங்கிப் படிப்பதற்கான அனைத்து வாய்ப்புகளையும் நமது அரசு ஏற்படுத்தித் தரும்.

சட்டங்கள் குறித்த பயிற்சி

- சமூகத்தின் பல்வேறு தளங்களில் உள்ள ஆசிரியர்கள், அதிகாரிகள், காவல் துறையினர் உள்ளிட்ட அனைவருக்கும் சிறார் சட்டங்கள், உரிமைகள், அவர்களின் உளவியல் குறித்துக் கட்டாயப் பயிற்சி அளிக்கப்படும். அதன் அடிப்படையில்தான் அவர்கள் கடமையாற்ற வேண்டும். சிறுவர்கள் மீதான பாலியல் குற்றங்களைச் செய்வோருக்குக் கடுமையான தண்டனை என்ற சட்டம் இயற்றப்படும்.
- பாதிப்புக்குள்ளான குழந்தைகளின் தேவைகள் மற்றும் நலனில் அரசு தனிக்கவனம் செலுத்திப் பேணிக் காக்கும்.




தான் பெற்ற
குழந்தைகளையும்,
தம்மைப் பெற்ற
தாய் – தந்தையரையும்
நேசிக்காத ஒருவன்
மனிதனாகவே இருக்க
முடியாது.

அன்புத்தளிர்

- சிறப்புக் குழந்தைகள், கைவிடப்பட்டக் குழந்தைகள், மீளா வறுமையில் வாழ்விழந்து வேலைக்குச் செல்லும் சிறார்கள், இடம்பெயரும் தொழிலாளர்களின் குழந்தைகள் ஆகியோரின் நலனுக்காக, 'அன்புத்தளிர்' அமைக்கப்படும். இங்கிருந்தபடியே இவர்கள் படித்து உயர் பணிகளில் தங்களைத் தக்க வைத்துக் கொள்ளும் வரை நாம் தமிழர் அரசு துணையாக இருக்கும். சிறார்களுக்கான அனைத்துத் தளங்களிலும் அரசு பாதுகாப்பு உதவிகளை வழங்கும்.
- கைவிடப்பட்ட குழந்தைகளே இல்லாத நிலையை உருவாக்குவதுதான் நாம் தமிழர் அரசின் நோக்கம். குழந்தைகளைக் கைவிடும் பெற்றோர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதுடன், அவர்களுக்கான குடும்ப அட்டை, அடையாள அட்டை உள்ளிட்ட அனைத்து அரசு உதவிகள் மற்றும் உரிமைகள் நிறுத்தப்படும்.

தன்னம்பிக்கை

- சிறுவர்களின் உடல் நலன், மன நலன் குறித்த அறிவுரை மையங்கள் அமைக்கப்படும். அதன்மூலம் சிறார்களுக்கு மன உறுதி, தன்னம்பிக்கைப் பயிற்சிகள் அளிக்கப்படும். தேவையெனில் மருத்துவ வசதிகளும் ஏற்பாடு செய்து தரப்படும். மாற்றுத்திறனாளி சிறார்கள் மீது தனிக்கவனம் செலுத்தப்படும். உணவு, உடை, கல்வி, வேலைவாய்ப்பு என அனைத்திலும் உதவியாய் நின்று நாம் தமிழர் அரசு வளர்த்தெடுக்கும்.
- பிள்ளைகளுக்கு அறிவூட்டுவது எவ்வளவு முதன்மையோ, அதைப்போலவே தாழ்வுமனப்பான்மையற்ற, தன்னம்பிக்கையுள்ள, உடல் நலத்தோடும், உளவியல் வலிமையோடும் வளர்த்தெடுப்பதும் இன்றியமையாதது. அதற்கு வேண்டிய அனைத்துக் கட்டமைப்புகளும் பள்ளிகளில் அமைத்துக் கொடுக்கப்படும்.

கற்றல் குறைபாடு மையம்

- 4 முதல் 12 விழுக்காடு சிறார்களுக்குக் கற்றல் குறைபாடு இருப்பதாகப் புள்ளித் தரவுகள் தெரிவிக்கின்றன. 'படித்தல், எழுதுதல் குறைபாடு' (Dyslexia), 'கணிதக் கற்றல் குறைபாடு' (Dyscalculia), 'கவனக்குறைவு மிகை இயக்கக் கோளாறு' (ADHD) ஆகியவற்றைச் சிக்கலாகப் பார்க்கக்கூடாது. இது ஒரு கவனக்குறைபாடுதான். இவை சரியான வழிகாட்டுதலால் கையாளக்கூடியவையே. இதுபோன்ற குழந்தைகளுக்குத் தனி வகுப்புகளை உருவாக்கி, தேர்ந்த ஆசிரியர்களால் பயிற்சி அளிக்கப்படும். அதற்கான வாய்ப்புகள் அனைத்துப் பள்ளிகளிலும் ஏற்படுத்தப்படும்.
- அனைத்துப் பள்ளிகளிலும் தனி நூலகங்கள் அமைக்கவும், மாதம் ஒரு முறை அறிவுசார் ஆவணப்படங்கள் திரையிடவும் ஏற்பாடு செய்யப்படும்.

"அரசியலாளர்கள் எப்போதும் அடுத்த தேர்தலைப் பற்றித்தான் சிந்திப்பார்கள்! தலைவர்கள் மட்டும்தான் அடுத்த தலைமுறையைப் பற்றிச் சிந்திப்பார்கள்! இவர்களின் எதிர்காலம்தான் எங்களின் கனவு!"



மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை என்நோற்றான் கொல்லெனும் சொல்

– தமிழ்மறை (70) – வள்ளுவப்பெருமகனார்



அன்புச்சோலை

> வீட்டின் பெயரோ
> ‘அன்னை’ இல்லம்;
> அன்னை இருப்பதோ
> முதியோர் இல்லம்.
> ஆலமரத்தைத்
> தாங்கியபடி விழுதுகள்
> முதியோர் இல்லத்தின்
> வாயிலில்.

மூத்தோர்களை அரவணைப்பது

- முதிர்வது இயற்கை முறை. மூத்தோர்களை அரவணைப்பது நம் தமிழ்ச்சமூகத்தின் குடும்ப முறை. பெருத்த அறிவும், பட்டறிவும் கொண்ட முதியோர்களைக் கைவிடுவது சமூகத்திற்கு எதிரானது. எனவே நாம் தமிழர் அரசு முதியோர்களைப் போற்றிப் பாதுகாக்கும். அவர்களின் நலன் காக்கப் புதியத் திட்டங்கள் கொண்டு வரப்பட்டு அவர்களுக்கான அனைத்துத் தேவைகளையும் அரசே செய்து கொடுக்கும். சிறார் மற்றும் முதியோர் நலனுக்கெனத் தனி அமைச்சகம் அமைக்கப்படும்.

- 65 அகவை நிரம்பியவர்கள், தமிழ்நாட்டிற்குள் விருப்பப்பட்ட இடங்களுக்குச் சென்று வர, ஆயுட்கால பயண அட்டை வழங்கப்படும்.

சிறப்பு மருத்துவத் திட்டங்கள்

- முதியோர் மருத்துவத்திற்காகச் சிறப்புத் திட்டங்கள் கொண்டு வரப்படும். தொலைபேசியில் தகவல் கொடுத்தால் மருத்துவக் குழு வீடு தேடி வந்து மருந்து, மாத்திரை கொடுத்துத் தகுந்த அறிவுரைகளை வழங்கும். மேல் மருத்துவம் தேவைப்பட்டால் அவர்களாகவே 108 என்ற எண்ணுக்கு அழைப்பு விடுத்து அதற்கான ஏற்பாட்டைச் செய்வார்கள். அரசு மருத்துவமனையில் உயர் மருத்துவம் அனைத்தும் வழங்கப்படும்.

- மருத்துவக் கல்லூரிகளில் முதியோர்களுக்கான முதுநிலை மருத்துவப் படிப்புக்கு (MD Geriatric Care) மிகக் குறைவான இடங்களே ஒதுக்கப்படுகிறது. முதியோர்களைச் சிறப்பாகக் கவனிக்க வேண்டி, இந்த முதுநிலை மருத்துவப் படிப்பிற்கான இடங்கள் கூடுதலாக ஒதுக்கப்படும். முதியோர்களுக்கான தனிச் சிறப்பு மருத்துவர்கள் உருவாக்கப்படுவர்.






அன்புச்சோலை

அன்புச்சோலை

- கைவிடப்பட்ட முதியோர்களுக்காக, 'அன்புச்சோலை' அமைக்கப்படும். அங்கு அவர்களுக்கான மருத்துவம் உட்பட அனைத்து வசதிகளும் அளிக்கப்படும். விரும்புபவர்கள் தங்களுக்கு விருப்பமான வேலைகளைச் செய்யலாம்; இல்லையெனில் ஓய்விலேயே இருக்கலாம்.
- அன்புச் சோலையில் முதியோர்களின் உடல் மற்றும் மன நலனைப் பேண ஓகம், அகத்தவம் (தியானம்), இசை / நாட்டுப்புறக் கலைப் பயிற்சி, இயற்கைத் தோட்டக்கலைப் பயிற்சி போன்ற நலவாழ்வு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படும்.
- முதியோர்களின் பட்டறிவையும் சிறார்களுக்கும், இளைய தலைமுறையினருக்கும் கடத்த வேண்டி, மாதம் ஒருமுறை கற்றல் நிகழ்ச்சிகள் (கதை சொல்லல், கைவினைப் பயிற்சி, வாழ்க்கைப் பாடங்களைப் பகிர்தல்) நடத்தப்படும். இது முதியோர்களுக்கு மகிழ்ச்சியையும், இளையோருக்கு வாழ்வியல் பாடங்களையும் தரும். நல்ல கதை சொல்லிகளாகவும், நாடகக் கலைஞர்களாகவும் உள்ளவர்களை அவர்களின் விருப்பத்துடன் அரசு பயன்படுத்திக் கொள்ளும்.
- அன்புச் சோலையில் வசிக்கும் முதியோர்களுக்குக் குடும்ப அமைப்பு போன்ற வீட்டுச் சூழல் உருவாக்கப்படும். தோட்டம், பொது இடங்கள், பொழுதுபோக்கு அரங்குகள் அமைக்கப்படும். இது தனிமை உணர்வைப் போக்கி சமூக உறவுகளை வளர்க்கும். அதே நேரத்தில், 24 மணி நேரமும் பேணிக் காக்கும் ஊழியர்கள் மற்றும் உடல்நலக் கண்காணிப்பு அமைப்பு மூலம் பாதுகாப்பும் உறுதி செய்யப்படும்.
- முதியோர்களின் நினைவாற்றல் மற்றும் மன அழுத்த சிக்கல்களுக்காகச் சிறப்பு அறிவுரைகளை மற்றும் இசை, கலைகள் முதலியவற்றின் வழியே மருத்துவத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

அனைத்து உரிமைகளும் மறுக்கப்படும்

- பெற்றோரைக் கைவிடுவோருக்கு அனைத்து உரிமைகளும் மறுக்கப்படும். இதுவரையிலும் கைவிடப்பட்ட முதியோர்களை அரசு கவனித்துக் கொள்ளும். 'பெற்றோர்களை நேசிக்காதவன், மற்றவர்களை எப்படி நேசிப்பான், தாயை நேசிக்காதவன் தாய் மண்ணை எப்படி நேசிப்பான்'. எனவே இனிவரும் காலத்தில் பெற்றோரைக் கைவிடும் பிள்ளைகளுக்கு குடும்ப அட்டை, அடையாள அட்டை, மின் இணைப்பு உள்ளிட்ட அனைத்து உரிமைகளும், அரசு சலுகைகளும், வேலைவாய்ப்புகளும் மறுக்கப்படும்.

> **மாந்தநேயத்தைக் கொன்று புதைத்துவிட்டு, அதன் மீது கட்டியெழுப்பப்பட்டக் கல்லறைகளாகவே முதியோர் இல்லங்களை நாம் தமிழர் அரசு பார்க்கிறது.**



சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

– தமிழ்மறை (1031) – வள்ளுவப்பெருமகனார்



உழவர் நலன்

‘உழுபவர்
கணக்குப் பார்த்தால்
உழக்குக்கூடத் தேறாது’ என்ற
முதுமொழிக்கேற்ற துயர நிலைதான்
உழவர் பெருமக்களுக்கு இன்றும்
நீடித்து வருகிறது.

உலகிற்கு உணவிடும் உழவர்களின்
வாழ்க்கை வறுமையில் உழலும்
நிலையை நாம் தமிழர் அரசு
மாற்றியமைக்கும்.

உழுபவரே விலையை உறுதிப்படுத்த வேண்டும்

- ஒருவர் மது, புகையிலைப் போன்ற வெறிம(போதை)ப் பொருள்கள் இல்லாமல் வாழ முடியும், உணவில்லாமல் வாழ முடியாது. ஆனால் மதுவையும் புகையிலைப் பொருள்களையும் விற்பவர்கள் வசதியாகவும், உணவை விளைவிக்கும் உழவர்கள் ஏழையாகவே இருக்கின்றனர். அதற்குக் காரணம் உலகில் எந்தப் பொருள்களையும் உருவாக்குபவர்களே அதற்கான விலையை தீர்மானிக்கின்றனர். உழவர்கள் அவர்கள் விளைவிக்கக்கூடிய பொருள்களின் விலையை அவர்களால் உறுதிப்படுத்த முடிவதில்லை.

வாழும் தெய்வங்கள்

- நாம் அனைவரும் மாந்தர்கள் செய்யக்கூடிய வேலையையே செய்கிறோம். உழவர்கள் மட்டும் தெய்வத்தின் வேலையைச் செய்கிறார்கள். உலகிற்கே உணவளிக்கின்ற உழவர்கள் தெய்வத்திற்கு இணையானவர்கள்.

"மண்டினி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்க்கொடுத் தோரே”

- சீத்தலைச்சாத்தனார்









நம்மாழ்வார் இயற்கை வேளாண் கல்லூரி (பயிலரங்கம்)

- நம் பெரிய தகப்பன் ஐயா நம்மாழ்வார் அவர்களின் நினைவாக இயற்கை வழி வேளாண்மைக்கு என்று தனியாக இயற்கை வேளாண் கல்லூரிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் உருவாக்கப்படும். அதில் பயிற்சி பெறும் மாணவர்கள் இயற்கை வேளாண்மையில் சிறந்து விளங்கும் Bhutan, Australia, Switzerland போன்ற நாடுகளுக்குச் சென்று சிறப்புப் பயிற்சி பெற அரசு சார்பில் ஏற்பாடு செய்யப்படும்.
- இந்தியாவில் சிக்கிம் மாநிலம் உலகிலேயே 100% இயற்கை வேளாண்மை செய்யும் முதல் மாநிலம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது. அதேபோல Bhutan நாடும் விரைவில் 100% இயற்கை வேளாண் நாடாக மாறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. நாம் தமிழர் அரசும் 100% இயற்கை வேளாண்மையையே இலக்காகக் கொண்டு செயல்படும்.

வேளாண்மை அரசுப் பணி

- நாம் நம் வாழ்க்கையில் ஒரு மருத்துவரை எப்போதாவதுதான் சந்திக்கின்றோம், வழக்கறிஞரை என்றாவது ஒருநாள் தான் சந்திக்கின்றோம். ஆனால் ஒவ்வொரு நாளும் மூன்று முறை வேளாண் குடிகளைச் சந்திக்கின்றோம். அப்படிப்பட்ட உழவர்களின் நலன் போற்றப்பட வேண்டும். நாம் தமிழர் அரசு வேளாண்மையை அரசுப்பணியாக அறிவித்து, உழவர்களை அரசு ஊழியர்களாக மாற்றும்.

உயிரைக் கொல்லும் வேதி உரங்கள்

- உலக நலவாழ்வு நிறுவனம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றால் பெருந்தீங்கானவை எனக் கண்டறியப்பட்ட, ஆனால் இந்தியாவில் இன்னும் முழுமையாகத் தடை செய்யப்படாத சில வேதி உரங்களான Ammonium Nitrate, Monocrotophos, Chlorpyriphos, Acephate மற்றும் Endosulfan போன்ற வேதி உரங்கள் நாம் தமிழர் ஆட்சியில் முழுமையாகத் தடை செய்யப்பட்டு, அதற்கு மாற்றாக இயற்கை உரங்களைப் பயன்படுத்த மற்றும் உருவாக்க உழவர்கள் பயிற்றுவிக்கப்படுவர்.

தனி நலவாரியம்

- உழவர்களுக்கென தனியாக வாரியம் அமைக்கப்படும். அவர்களின் சிக்கல்கள் தீர்க்கப்படும். உழவர்கள் விளைவிக்கும் பொருள்களுக்கு உழவர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட நலவாரியமே அவற்றிற்கான விலையை முடிவு செய்யும்.
- அந்த விலையில் தான் அரசும், மற்றவர்களும் வாங்க வேண்டும். மேலும் அவர்களின் நலனுக்குண்டான அனைத்து மாற்றங்களையும் நாம் தமிழர் அரசு செயல்படுத்தும்.



உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம் விட்டேமென் பார்க்கும் நிலை.

– தமிழ்மறை (1036) – வள்ளுவப்பெருமகனார்



தேசியப் பயிரினங்களுக்குக் காப்பீடு

- நெல், கோதுமை, கரும்பு, பருத்தி, பருப்பு வகைகள், எண்ணெய் வித்துகள், தினைப் பயிர்கள் (சிறு கூலங்கள்) ஆகிய தேசியப் பயிரினங்களைப் பயிரிடும்போது அதற்குக் காப்பீடு வழங்கப்படும்.

நெல் செயராமன் விதை வங்கி

- நம் மரபு விதைகளைப் பாதுகாக்கும் வகையில் ஐயா நெல் செயராமன் பெயரில் மரபு விதைகளுக்கான வைப்பகம் அமைக்கப்படும். இயற்கை வேளாண்மை செய்ய முன்வரும் வேளாண் குடிகளுக்கு விதைகள் விலையின்றி வழங்கப்படும். இவ்வாறு விதைகளை வாங்கிச் செல்லும் ஒவ்வொரு உழவரும் மரபு விதைகளைப் பயிரிட்டு அடுத்த ஆண்டு அதே அளவுள்ள விதைகளை மீண்டும் விதை வைப்பகத்திற்குக் கொடுப்பதால் அவ்விதைகள் மீண்டும் அடுத்த உழவருக்குக் கிடைக்கும். இதன்மூலம் தரமான மரபு விதைகள் நாடெங்கும் பரவலாகக் கிடைக்க வாய்ப்பு உண்டாகும். எனவே நாம் தமிழர் ஆட்சியில் உழவர்கள் விதைகளுக்காகப் பன்னாட்டு நிறுவனங்களைச் சார்ந்து இருக்க வேண்டிய அவலநிலை ஏற்படாது.

கரும்பு உழவர்களுக்கு

- கரும்புப் பயிர் உழவர்கள் ஒவ்வொரு முறையும் கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுக்கச் சொல்லிப் போராடி வருகிறார்கள். நாம் தமிழர் ஆட்சியில் இந்த அவலம் இருக்காது.
- கரும்பு விளைவிக்கும் உழவர்களோடு அரசும் சேர்ந்து பயிரிடும். உழவர்களும், அவர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட நலவாரியமும் சேர்ந்து தீர்மானிக்கும் விலையிலேயே அரசும் வாங்கிக்கொள்ளும்.

வேலைவாய்ப்பில் முன்னுரிமை

- இயற்கை வழி வேளாண்மையில் ஆய்வு மேற்கொள்ளும் உழவர்களுக்கு, தேவையான உதவிகளையும், அறிவுரைகளையும் அரசு வழங்கும்.
- அனைத்துத் தொழிற்சாலைகளும் சூழலுக்குக் கேடு விளைவிக்கும் கழிவுகளை வெளியிடும் வேளையில், வேளாண்மை சார்ந்த தொழில்கள் மட்டுமே உயிர்ச்சூழலை உருவாக்குகிறது.
- வேளாண்மை என்பது தொழில் அல்ல நமது பண்பாடு, வாழ்வியல். அதனால் நாம் தமிழர் அரசு உழவர்களைப் பெரிதும் மதித்துப் போற்றும்.



தமிழக மீனவர்களைப் பாதுகாப்பதற்காகத் தனியே ஒரு சிறப்புக் கடலோரக் காவல்படை, "நெய்தல் படை" என்ற பெயரில் உருவாக்கப்படும்.



மீனவர் நலன்

வருணன் மேய பெருமணல் உலகமாய்ப்
பெருங்கடல் முழங்கும் பெருமித முற்ற
நெய்தல் நிலத்தில் நெத்திலி சுறா
நெய்மீன் பெருகும், நேர்த்திசால் முத்தும்
உப்பும் குவியும், உயிரின் கூற்றாய்
இரங்கலும் இரங்கல் நிமித்தமும் நிகழும்
ஒருமா நிலமாய் ஓங்கும் நெய்தலே!

- தனித்தமிழ்வேங்கை மறத்தமிழ்வேந்தன்

முதன்மைப் பணி

- கடலை ஆண்ட பெருமைக்குரியவர்களான மீனவ மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு நாம் தமிழர் கட்சி அவர்களுக்கான திட்டங்களை முன்வைக்கிறது.
- சிங்களக் கடற்படையால் கொல்லப்பட்ட, இயற்கைப் பேரிடரில் இறந்த மீனவக் குடும்பங்களுக்கு அரசு வேலை. அவர்கள் விரும்பினால் மீன்வளத் துறையிலும் சேரலாம்.
- கடல்தொழிலில் காணாமல் போனோர் குடும்பங்களுக்கு உரிய இழப்புத்தொகை, சிங்களக் கடற்படை தாக்குதல் மற்றும் கடல்தொழிலின்போது, படுகாயமேற்பட்டு உடல் உறுப்பு நிலையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய இழப்புத்தொகை வழங்கப்படும்.

மீனவர் தொகுதி (தனி)

- மிக நீண்ட கடற்கரையைக் கொண்ட தமிழ்நாட்டில் 14 கடலோர மாவட்டங்கள் இருக்கின்றன. 608 மீனவ சிற்றூர்கள் இருக்கின்றன. சற்றொப்ப 12 இலக்கத்திற்கு மேலான மீனவ மக்கள் வாழ்கிறார்கள். இந்தியாவின் மொத்த கடல்மீன் ஆக்கத்தில் 12 விழுக்காடு தமிழக மீனவர்களின் பங்களிப்பாகும்.

















- இத்தனை முதன்மைத்தன்மை வாய்ந்த மீனவர் குடிகளுக்குத் தொகுதிப் பங்கீட்டில் இதுநாள் வரை எந்த முன்னுரிமையும் வழங்கப்படவில்லை, போதிய நிகராளியியமின்றி தொடர்ந்து இரண்டகம் இழைக்கப்பட்டே வந்துள்ளனர். எனவே கடலோர மாவட்டங்களில் மீனவர்கள் மட்டுமே போட்டியிட ஆறு சட்டமன்றத் தொகுதிகளை நாம் தமிழர் அரசு ஒதுக்கும்.

கடல் மரபுசார் பழங்குடியினர்

- மீனவ மக்களைக் கடல் மரபுசார் பழங்குடியினர் இனத்தில் சேர்க்க வேண்டும் என்று மண்டல் ஆணையம் பரிந்துரைத்திருந்தது. அதனை ஏற்று ஆந்திரா, கர்நாடகம், கேரள மாநிலங்கள் மற்றும் பாண்டிச்சேரியைப் போல் நாம் தமிழர் அரசும் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றும். ஒன்றிய அரசுடன் போராடி மீனவ மக்களுக்கான நீதியைப் பெற்றுத் தரும்.

கச்சத்தீவை மீட்போம்

- கச்சத்தீவு ஒப்பந்தம் நீக்கப்பட்டு, நமது மீனவர்களின் மீன்பிடி உரிமையை நிலைநாட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கான சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும். இதனால் கச்சத்தீவுப் பகுதியில் நமது மீனவர்கள் அச்சமின்றி மீன்பிடிக்கலாம்.

தனி அமைச்சகம்

- 48,000 மரபுசார் மீன்பிடிக் கலன்கள், 6000 இயந்திரப் படகுகள், 3 பெரிய மீன்பிடித் துறைமுகங்கள் 363 மீன் இறக்கும் மையங்கள் என்ற கட்டமைப்பைக் கொண்டிருக்கும் தமிழகக் கடலோர மீன்பிடித்தொழில், ஆண்டிற்குச் சற்றொப்ப 6,800 கோடி அயலகச் செலாவணியாக ஈட்டிக்கொடுப்பதுடன், நாட்டின் பெரும்பான்மை மக்களுக்கான உணவுத்தேவையை நிறைவு செய்கிறது. ஆனால் மீனவர்களுக்கென்று ஒன்றிய அரசில் தனி அமைச்சகம் இல்லை. அதனால் மீனவர்களின் நலனுக்கென்று தனி அமைச்சகம் வேண்டும் என்ற கோரிக்கை (மற்ற மாநில மீனவர்களுக்காகவும்) ஒன்றிய அரசிடம் வலியுறுத்திப் பெறப்படும்.

நெய்தல் படை

- தமிழக மீனவர்களைப் பாதுகாப்பதற்காகத் தனியே ஒரு சிறப்புக் கடலோரக் காவல் படை, “நெய்தல் படை” என்ற பெயரில் உருவாக்கப்படும். இதில் பெரும்பான்மையான கடலோர மீனவ இளைஞர்கள் இணைக்கப்படுவார்கள். மீனவர்களுக்கு இலங்கைச் கடற்படையினரால் ஏற்படும் அச்சுறுத்தல், புயல் வெள்ளத் தாக்குதலில் இருந்து நமது சிறப்பு நெய்தல் படை பாதுகாப்பு மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

வழக்குப்பதிவு

- தமிழ்நாட்டு எல்லையில், இலங்கைக் கடற்படையால் கொல்லப்பட்டாலும், தாக்கப்பட்டாலும் அதற்கான வழக்குப்பதிவை இங்கே முறையாகச் செய்வதில்லை.


















வழக்குப்பதிவு செய்தாலும் சட்ட நடவடிக்கை எடுப்பதில்லை. நாம் தமிழர் அரசு வழக்குப்பதிவு செய்வதோடு 'இலங்கைக் கடற்படை மீது இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று முறையாக நீதிமன்றத்தை அணுகி, சட்ட நடவடிக்கை எடுக்கும். மீனவச் சொந்தங்களின் இழப்பிற்கு, அனைத்து வழிகளிலும் உரிய நீதியைப் பெறுவதற்கான உறுதியை நாம் தமிழர் அரசு அளிக்கிறது.

மாநில அரசிடம் அதிகாரம்

- இந்தியாவில் இரண்டாவது பெரிய கடற்பரப்பைக் கொண்டிருக்கும் தமிழகம் 1,076 அயிரமாத்திரி (km) நீளத்தைக் கொண்டது. இப்பகுதியில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களின் நலன் காக்க, கடலில் சுற்றுக்காவல் மேற்கொள்ளப்படுகின்றது. ஆனால் ஒவ்வொரு நாளும் ஒன்றியக் காவல் படையின் உத்தரவைப் பெற வேண்டியிருக்கிறது.

- இயற்கைப் பேரிடர் காலகட்டங்களில் இந்தக் கட்டுப்பாட்டைத் தளர்த்த வேண்டும் என ஒன்றிய அரசிடம் வலியுறுத்தி மாநில அரசுக்கான அதிகாரம் பெறப்படும். உடனடி மீட்பு நடவடிக்கைக்கு இது ஏற்றதாக இருக்கும்.

நெய்தல் நில உரிமை

- மீனவர்களின் குடியிருப்புகள் மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன் கட்டித் தரப்படும். வீடற்ற ஒவ்வொரு மீனவக் குடும்பத்திற்கும் ஒரு வீடு என்ற திட்டம் கொண்டு வரப்படும். கடலும் கடல் சார்ந்த நெய்தல் நிலமும் மீனவர்களுக்கே சொந்தம், அதனால் எந்தக் காரணத்தைக் கொண்டும் மீனவர்கள் கடலோரப் பகுதிகளில் இருந்து அப்புறப்படுத்தப்படமாட்டார்கள் என்றும், மீனவர்களை அப்புறப்படுத்திவிட்டுக் கொண்டு வரப்படும் எந்தத் திட்டத்திற்கும் அனுமதி கிடையாது என்றும் நாம் தமிழர் அரசு உறுதி அளிக்கிறது.

தடை நீக்கம்

- கடல் அட்டை அரிய உயிரினம் என்று கூறி, அதைப் பிடிப்பதற்குத் தடை விதித்திருக்கிறது ஒன்றிய அரசு. இதனால் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், இலங்கை உள்ளிட்ட பல வெளிநாட்டு நிறுவனங்கள் கடல் அட்டையைப் பிடித்து ஏற்றுமதி செய்து கொண்டுதான் இருக்கின்றது. எனவே கடல் அட்டை மீதான தடையை நீக்க நமது அரசு நடவடிக்கை எடுக்கும். மீனவர்களே அவற்றை வளர்த்துப் பெருக்கிக்கொள்ள அனுமதிக்கப்படும்.

பண்ணைகளில் வளர்ப்பு

- கடலுக்குள் கூண்டு வலைகள் கொண்ட பண்ணைகள் அமைத்து அதற்குள்ளாகத் தடை செய்யப்பட்ட கடல் அட்டை, நண்டு, சிப்பி, கடல்பாசி, கடல் ஆமை, சிங்கி, பாறை மீன் ஆகியவற்றை வளர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதற்குத் தேவைப்படும் உதவிகள் அனைத்தும் மீனவர்களுக்கு வழங்கப்படும்.










45562

தீவுகளில் மீன்பிடி உரிமை

- இராமநாதபுரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள 21 தீவுகளில் நமது மீனவர்கள் மீன்பிடிக்கத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அவையனைத்தும் இராமநாதபுர மன்னர் ஆட்சிக்கு உட்பட்ட நிலமாகத்தான் இருந்தது. ஒன்றிய அரசுடன் பேச்சு நடத்தி அந்தத் தடையை நீக்கச் செய்து மீன்பிடிக்கும் உரிமை கேட்டுப் பெறப்படும். இதனால் நமது மீனவர்களின் மரபுசார் மீன்பிடி உரிமை பாதுகாக்கப்படும்.

கடல்சார் பல்கலைக்கழகம்

- மீன்வளக் கல்லூரி, மீனவர் பயிற்சி நிலையம், கடற்சார் பயிற்சி நிலையம், சுற்றுலாப் படகுத்துறை போன்றவற்றில் மீனவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மேலும், மீனவர் சமுதாய இளைஞர்களுக்கு மேம்படுத்தப்பட்ட மீன்பிடித்தொழில் பயிற்சி, பதப்படுத்தும் தொழில்நுட்பப் பயிற்சி, இயற்கை மீன் வளர்ப்பு, வண்ண மீன் வளர்ப்பு சார்ந்த பயிற்சிகள் அனைத்தும் அரசு செலவில் அளிப்பதோடு, வேலைவாய்ப்பிற்கான ஏற்பாட்டையும் நாம் தமிழர் அரசே செய்யும்.

மீனவர் வைப்பகம்

- வேளாண் பெருங்குடி மக்களுக்கு இருப்பது போல், மீனவர்களுக்குத் தனியாக வைப்பகம் (நெய்தல் வைப்பகம்) அமைக்கப்படும். அது தமிழ்த்தேசிய வைப்பகத்தின் ஒரு கிளையாகச் செயல்படும் இந்த 'நெய்தல் வைப்பகம்' குறைந்த வட்டியில் மீனவர்களுக்குக் கடன் அளிக்கும். தொழில் தொடங்குவற்கான கருவிகளைப் பெற்றுக்கொள்ள உதவியாக நிற்கும்.

நெய்தல் நிலத் தலைநகரம்

- தமிழர்களின் மூத்த முதன்மைத் தொழிலாக இருக்கும் மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் மீனவர்களின் பண்பாட்டைப் போற்றும் வகையில் இராமேசுவரம் நெய்தல் நிலத்தின் தலைநகராக அறிவிக்கப்படும். இங்கு நெய்தல் நிலத்து மக்களின் கலை பண்பாடுகளை அறிந்து கொள்ளும் வகையில் கண்காட்சியகமும், கடல்தொழில் சார்ந்த புதிய கல்லூரியும் அமைக்கப்படும்.

மரபு மீனவர்கள் வாழ்வாதாரம்

- நூற்றுக்கணக்கான அயல்நாட்டு நிறுவனங்களின் இயந்திரப் படகுகளுக்கு வழங்கப்பட்ட மீன்பிடி உரிமங்கள் திரும்பப் பெறப்படும். இவர்களால் இந்த மண்ணின் மரபு மீனவர்கள் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். படகுகளிலும், கட்டுமரங்களிலும் சென்று மீன்பிடித்து வந்தவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதை நாம் தமிழர் அரசு அனுமதிக்காது.

- தமிழ் மீனவர்களுக்குப் பன்னாட்டு மீன்பிடி நிறுவனங்களுக்கு இணையான புதிய மீன்பிடித் தொழிற்பயிற்சியும், மீன்பிடி படகுகளும் வழங்கப்படும். பன்னாட்டுத் தரத்திலான மீன்பிடித்தொழில் நமது தமிழ்நாட்டு மீனவர்கள் வசமும் வரும்.









கடலோர மாவட்டங்களில்

- கடலோர மக்களின் மீன்பிடித் தொழில், உரிமைகள் பாதிக்கக்கூடிய அணு உலை, அனல் மின் உலைகள், வணிகத் துறைமுகங்கள் ஆகியவை முழுவதும் தடுக்கப்படும். மக்கள் நலனைப் பாதிக்கும் தொழிற்சாலைகளுக்கான ஒப்பந்தங்கள் திரும்பப் பெறப்படும். மேலும் புதிய தொழிற்சாலைகளுக்கான அனுமதியும் மறுக்கப்படும். கடலோர மாவட்டங்களில் மீனவர் நலத்தொழில் சார்ந்த கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும்.

- ஒன்றிய அரசால் முன்மொழியப்பட்டுள்ள தூத்துக்குடி, கன்னியாகுமரி, தனுசுகோடி கடற்பகுதிகளில் நீரகக்கரிமத் (Hydrocarbon) திட்டத்தை எக்காரணம் கொண்டும் நாம் தமிழர் அரசு அனுமதிக்காது. இராம்சார் பகுதியாக அறிவிக்கப்பட்ட மன்னார் வளைகுடா பகுதியானது 4 ஆயிரத்துக்கும் மிகுதியான கடல்வாழ் உயிரினங்கள் மற்றும் பவளப்பாறைகளின் வாழ்விடமாக உள்ளது. இப்பகுதியில் நீரகக்கரிமக் (Hydrocarbon) கிணறு அமைப்பதென்பது மீனவர்களின் வாழ்வை மட்டுமின்றி கடல் சூழலியலில் மீட்க முடியாத பெரும் அழிவை உண்டாக்கும். இதனை எதிர்த்து சட்டமன்றத் தீர்மானம் இயற்றுவதோடு தகுந்த சட்ட நடவடிக்கையிலும் ஈடுபட்டு இத்திட்டத்தை நாம் தமிழர் அரசு தடை செய்யும்.

- கடலினைக் கையகப்படுத்திக் கட்டப்படும் காட்டுப்பள்ளி அதானி துறைமுகம் உட்பட மீனவர்களையும் கடல் சூழலையும் பாதிக்கும் எந்தத் திட்டத்தையும் நாம் தமிழர் அரசு அனுமதிக்காது.

மீனவர்களுக்கே குத்தகை

- ஏரி, கண்மாய், குளம், அணைகள் உள்ளிட்ட நீர்நிலைகளில் வளர்க்கப்படும் மீன்களைத் தனி ஆட்களிடம் குத்தகை விடுவது தடுக்கப்படும். மீனவச் சங்கங்களுக்கும், பெண்கள் குழுக்களுக்கும், மரபுசார் மீனவர்களுக்கும் மட்டுமே குத்தகை வழங்கப்படும். அதில் கிடைக்கும் வருமானத்தைத் தனி ஒருவர் மட்டுமே எடுத்துக்கொள்ளாமல் கூட்டுக் குழுமமாக மீனவர்கள் பயன்பெறும் முறைமை செயல்படுத்தப்படும்.

தொழிற்கருவிகள் உருவாக்கம்

- மீனவர்களுக்குத் தேவையான அனைத்து வகை வலைகள், கட்டுமரம், படகு கட்டும் கருவிகள், மீன்பிடிக் கருவிகள், மேம்படுத்தப்பட்ட கடற்சார் தொழிற் கருவிகள் என அனைத்தையும் தனியாரிடம் அதிக விலை கொடுத்து வாங்குவதைத் தடுக்க, நாம் தமிழர் அரசு, அவற்றைச் சொந்தமாக உருவாக்கம் செய்யும் தொழிற்சாலையைத் தொடங்கி, நம் மீனவர்களுக்கு உரிய விலைக்கு வழங்கும். இந்தத் தொழிற்சாலையில் மீனவ இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தூண்டில் வளைவுப் பாலம்

- தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளான உவரி, பெரியதாழை தொடங்கி எண்ணூர் வரை பல இடங்கள் கடல் அரிப்பால் பாதிப்பிற்குள்ளாகி இருக்கிறது. மேலும் படகுகள் அனைத்தும் கழிமுகப் பகுதிகளில் இருந்து கடலுக்குள் செல்லும்









இடங்களில் கடல் அலைகளால் இழுத்து வரப்படும் மணல் மேடுகள் படகுகளுக்குத் தடையாக உள்ளது. இந்த இடங்களில் மீனவர்களின் நலன் வேண்டி தூண்டில் வளைவுப் பாலம் அமைக்கப்படும். கடலோர மீனவ ஊர்களும், இறக்குமதி நிலையங்களும் இதன்மூலம் பாதுகாக்கப்படும்.

செயற்கைக்கோள்

- செயற்கைக்கோள் உதவியுடன் எங்கெங்கு மீன்வளம் அதிகமாக இருக்கிறது என்ற தகவல்களைப் பெற்று உடனுக்குடன் மீனவர்களுக்கு வழங்கும் திட்டத்தை நாம் தமிழர் அரசு செயல்படுத்தும். பேரிடர்க் காலங்களில் காணாமல் போவோரையும் இதன் மூலம் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

உப்பளத் தொழில்

- தூத்துக்குடியில் உள்ள உப்புத் தொழிற்சாலைகள் அனைத்தும் மேம்படுத்தப்படும். அரசு நிறுவனமும் உப்பளத் தொழிலில் ஈடுபடும். அதில் மீனவப் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இதன்மூலம் அந்தப் பகுதி மக்களுக்கு புதிய வேலைவாய்ப்பை நாம் தமிழர் அரசு உறுதிப்படுத்தும்.

பனிக்கட்டித் தொழிற்சாலை

- முதன்மைக் கடலோரப் பகுதிகளில் மீன்களைப் பதப்படுத்தி வைக்கும் குளிரூட்டிக் கூடங்கள், கடலுக்குச் செல்லும் மீனவர்களுக்குத் தேவையான பனிக்கட்டிகளை உருவாக்கிக் கொடுக்கும் தொழிற்கூடங்கள் அனைத்தையும் அரசே அமைத்து உரிய விலையில் மீனவர்களுக்கு வழங்கும்.

மீன் கொள்முதல்

- வேளாண்குடிகளிடம் இருந்து நெல் கொள்முதல் செய்வதைப்போல், பிடிக்கப்படும் மீன்களை அரசே கொள்முதல் செய்யும். வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கான ஏற்றுமதிகளை முறைப்படுத்தி, மீனவர்களுக்கு கூடுதல் வருவாய் கிடைக்கும் வகையில் திட்டங்கள் கொண்டு வரப்படும். இறால்களை உயிருடன் ஏற்றுமதி செய்வது, நண்டின் சதைப்பகுதியை மட்டும் ஏற்றுமதி செய்வது உள்ளிட்ட வகைகளில் இரட்டிப்பு நிகர ஆதாயம் (மதிப்புக்கூட்டிய வருவாய்) பெற மீனவர்களுக்கு ஊக்கம் அளிக்கப்படும். மக்களின் குடிநீர் ஆதாரங்களையும் மண்ணின் வளங்களையும் அழிக்கின்ற செயற்கை இறால் பண்ணைகள் முற்றிலுமாகத் தடை செய்யப்படும்.

சிற்றூர் மீனவர்களின் நலன்

- கடலோரப் பகுதி மீனவர்களைத் தவிர்த்து சிற்றூர்களில் ஏரி, குளம், ஆறுகளில் மீன்பிடித்தொழில் செய்து வரும் மீனவர்களின் நலனும் பாதுகாக்கப்படும்.

உருவாக்க விலையில் எரிபொருள்!

- உருவாக்க விலைக்கே மீனவர்களுக்கான எரிபொருள் வழங்கப்படுவதோடு, கடலோர மீனவச் சிற்றூர்கள் ஐம்பேராயமாக (பஞ்சாயத்தாக) அறிவிக்கப்படும்.







வணிகர் நலன்

உள்நாட்டு உருவாக்கங்களுக்கு முன்னுரிமை

- உள்நாட்டு வணிகத்தில் அயல்நாட்டார் முதலீட்டு ஆதிக்கம் கட்டுப்படுத்தப்படும். உள்நாட்டு உருவாக்கங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். தொடக்கத்தில் இருந்தே அயல்நாட்டார் முதலீடில்லாமல் செயல்படும் வணிக நிறுவனங்களுக்கு வரிகளில் சலுகை அளிக்கப்படும்.

வணிகர் நல வாரியம்

- வணிகர் நல வாரியத்தைப் புதுப்பித்துச் செயல்முறைக்குக் கொண்டு வருவோம். கந்து வட்டிக் கொடுமையிலிருந்து சிறு வணிகர்களைப் பாதுகாத்திடத் தொகுதி வாரியாக வணிக வைப்பகம் தொடங்கப்பட்டு அவர்களுக்குக் கடன் வழங்கப்படும்.
- முறையான அனுமதியில்லாமலும் சட்டத்திற்குப் புறம்பாகவும் நடத்தப்பட்டு வரும் வணிக நிறுவனங்கள் அனைத்தும் முடக்கப்படும். அவர்களின் பின்னணி குறித்த தகவல்களைச் சேகரித்துத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

விருது

- ஆண்டுதோறும் முறையாக வரி கட்டும் வணிகர்களைப் பெருமைப்படுத்த அவர்களுக்கு **“அதிக அளவில் அரசுக்கு வரி செலுத்தியோர்”** என்று பட்டம் வழங்கி சிறப்பிக்கப்படும். சிறந்த வணிகர்கள் ஆண்டுதோறும் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு **‘நல்வணிகர்’** என்ற விருது வழங்கிப் பெருமைபடுத்தப்படும்.

கட்டணக் குறைப்பு

- வணிக நிறுவனங்கள் பயன்படுத்தும் எரிகாற்று உருளை, மின்சாரம், குடிநீர் போன்றவைகளுக்குக் கட்டணம் பெறப்படும். ஆனால் இரட்டிப்புக் கட்டணத்தை நீக்கிவிட்டு, வீட்டுப் பயன்பாட்டிற்கான கட்டணமே உறுதிபடுத்தப்படும்.

பாதுகாப்பு

- சமூகக் குற்றவாளிகளின் மிரட்டல்கள், திருட்டு, கொள்ளை நிகழ்வுகள் ஏதும் நடக்காமல் அனைத்து வணிக நிறுவனங்களுக்கும் தகுந்த பாதுகாப்பு வழங்கப்படும்.

நடைபாதை வணிகர்கள்

- சாலைகளையும் நடைபாதைகளையும் வன்கவர்பு செய்யப்படுவதைத் தவிர்க்க, ஒவ்வொரு பகுதியிலும் குறிப்பிட்ட இடங்களை ‘விற்பனை மண்டலங்களாக’ அறிவித்திட முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.




நல்வணிகர்
நல்வணிகர்
பாரம்பரியம் மற்றும் நேர்மைக்கான அங்கீகாரம்







- அனைத்து நடைபாதை வணிகர்களையும் முறைப்படி பதிவு செய்து அவர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படும். இதன்மூலம் சட்டத்திற்குப் புறம்பான வன்கவர்புகளைத் தவிர்க்கலாம் மற்றும் தகுதியுள்ள வணிகர்களுக்கு அரசின் நலத்திட்டங்கள் சென்றடைவதை உறுதி செய்யலாம்.

- அரசினால் கொண்டுவரப்பட்ட அம்மா உணவகங்கள் பெரும்பாலான இடங்களில் (குறிப்பாகச் சென்னையில் உள்ள 388 உணவகங்கள்) போதிய பேணுதலின்றி கட்டடங்கள் சேதமடைந்தும், சமையல் கலன்கள் மற்றும் கருவிகள் பழுதாகியும் உள்ளன. அவை அடையாளம் காணப்பட்டுச் சீர் செய்யப்படும். சாலையோர உணவுக் கடைகள் நடத்தும் சிலரை அரசின் அம்மா உணவகங்களில் பணியில் ஈடுபடுத்தி அவர்களுக்கான வருவாயை உறுதி செய்வதோடு, அரசின் உணவகங்கள் எவ்வகைத் தடையுமின்றிச் சீராக இயங்குவதைத் தமிழ்நாடு முழுவதும் உறுதி செய்திட முடியும்.

- உணவுக் கடை வைத்திருப்பவர்களுக்கு முறையான கழிவு மேலாண்மைப் பயிற்சிகள் வழங்கப்படும். அவர்கள் தங்கள் கடைகளைச் சுற்றியுள்ள இடத்தைத் தூய்மையாக வைத்திருப்பதை உறுதி செய்ய தண்டத்தொகை அல்லது ஊக்கத்தொகை முறை கொண்டுவரப்படும்.

- ஏழை எளிய மக்களை வெளியேற்றும், அவர்களுக்கான சமூக வெளியைத் தடுக்கும் நடவடிக்கை அழகியல் அல்ல, அது வெறுமை, புதிய தீண்டாமை. அனைத்து மக்களையும் உள்ளடக்கிய நகரக் கட்டமைப்பே நகரின் அழகியல் என்பது நாம் தமிழர் அரசின் நிலைப்பாடாக இருக்கும்.




நாம் குடியிருக்கும்
தெருவைத் தூய்மையாக்குவோம்.
நாடு தானாகத் தூய்மையாகும்.









தூய்மைப் பொறியாளர்

மாந்தக்கழிவை மாந்தர்களே அள்ளுவது மாபெருங்கொடுமை, அதை மாற்ற வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமை.

- மேம்படுத்தப்பட்ட அறிவியல் வளர்ச்சி வந்துவிட்ட இக்காலக்கட்டத்திலும் மாந்தக் கழிவை மாந்தனே அகற்றும் இழிநிலை தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இத்தகைய தொழிலாளர்களின் நலனைக் காப்பதாக அறுபது ஆண்டுகளாக அரசியல் பேசும் திராவிடக் கட்சிகள் அம்மக்களின் நலனில் அக்கறை செலுத்தவில்லை. 2025ஆம் ஆண்டில் செப்டம்பர் மாதம் வரை மட்டும் கழிவுநீர்த் தொட்டிகளில் இறங்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 8ஆக உள்ளது.
- இனியும் மாந்தக் கழிவை மாந்தர்களே அகற்றும் முறை முற்றிலுமாக மாற்றப்படும். அவர்களுக்கு மேம்படுத்தப்பட்ட தானியங்கி இயந்திரக் கருவிகள் வழங்கப்படும்.
- இந்திய தொழிற்நுட்பக் கழகம் (IIT Madras) உருவாக்கியுள்ள 'HomoSEP' போன்ற கருவிகள் கழிவுநீர்த் தொட்டிகளைத் தூய்மைப்படுத்தப் பயன்படுத்தப்படும்.
- ஒரு குறிப்பிட்ட இனக்குழுவைச் சார்ந்தவர்களை மட்டும் தூய்மைப் பொறியாளர்களாகப் பயன்படுத்தி வரும் முறை கண்டனத்திற்குரியது. இது முற்றிலும் தடை செய்யப்படும்.

உயர்ந்த சம்பளம்

- தூய்மைப் பணிக்கு உயர்ந்த ஊதியம் அளிக்கப்படும். மற்ற தொழில்களைவிட இத்தொழில் முதன்மையானது. எனவே அதற்கு முதன்மைத்தன்மை அளிக்கப்படும். முறையான அறிவிப்பு மூலம் ஊழியர்கள் பணியமர்த்தப்படுவார்கள். இதன்மூலம் தூய்மைப் பொறியாளர் பணி பெருமைக்குரிய அரசுப் பணியாகக் கருதப்படும்.

மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு உடைகள்

- தமிழகத்தில் உள்ள ஆறுகள் உள்ளிட்ட நீர் நிலைகள் மற்றும் பொது இடங்களில் தொழிற்சாலை நச்சுக்கழிவுகள் கலப்பது முழுவதுமாகத் தடுக்கப்படும். இதற்கென்று தனிக் கண்காணிப்புக் குழு அமைக்கப்படும். தேங்கிய கழிவுகளை அகற்றும்பொழுது நச்சுக்காற்றுத் தாக்கித் தொழிலாளர்கள் இறக்கும் அவலம் இனியும் இருக்காது. உயிர்ச் சேதத்தை தவிர்க்க இதற்கென்று முழுப் பாதுகாப்புடன் கூடிய உடைகள் தூய்மைப் பொறியாளர்களுக்கு அளிக்கப்படும்.











மறுசுழற்சி முறை

- குப்பைகளைச் சேகரிக்கின்ற பொழுது மக்கும் தன்மையுடையது, மக்காதது, வேதிக்கலப்பு கொண்டது என தரம் பிரித்து எடுக்கும் முறையில் மிகைக் கவனம் செலுத்தப்படும்.
- இதனை முறையாகக் கையாளும்போதுதான் தூய்மைப் பொறியாளர்களின் தேவையற்ற வேலைப்பளு குறைக்கப்பட்டு, கழிவுகள் மறுசுழற்சி செய்வது எளிமையாக்கப்படும்.

பணி நிலையமர்த்தம் மற்றும் சமூகப் பாதுகாப்பு

- தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணிபுரியும் பணியாளர்கள் உட்பட மாநகராட்சி, நகராட்சி மற்றும் ஊராட்சி மன்றங்களில் பணி நிலைப்படுத்தப்படாமல் இருக்கும் தூய்மைப் பொறியாளர்கள் அனைவரும் எந்த வகைக் கட்டுப்பாடுகளுமின்றி காலமுறை ஊதியம் பெறும் நிலையான அரசு ஊழியர்களாக மாற்றப்படுவார்கள். ஒப்பந்தத் தூய்மைப் பொறியாளர்கள் என்பதே இருக்கக்கூடாது என்பதே நாம் தமிழர் அரசின் நோக்கம்.

தனியார்மயமாக்கலுக்கு முற்றுப்புள்ளி

- சென்னை மாநகராட்சியின் மண்டலங்கள் (குறிப்பாக மண்டலம் 5 மற்றும் 6) தனியார் நிறுவனங்களுக்குத் தாரைவார்க்கப்படுவதை நாம் தமிழர் அரசு திரும்பப் பெறும். தூய்மைப்பணி தனியார்மயமாக்கப்படுவது முற்றிலும் ஒழிக்கப்படும்.

வழக்குகளுக்கு முடிவு

- 2025ஆம் ஆண்டு ஆகத்து மாதம் சென்னையில் நடைபெற்ற தூய்மைப் பொறியாளர்கள் போராட்டங்களின்போது, அமைதியான முறையில் உரிமைகளைக் கோரிய தூய்மைப் பொறியாளர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் மீது தொடுக்கப்பட்டுள்ள அனைத்துப் புனைவு வழக்குகளும் உடனடியாகத் திரும்பப் பெறப்படும்.











அமைப்புச் சாராத் தொழிலாளர் நலன்

> கட்டடத் தொழிலாளர்கள், வீட்டு வேலை செய்வோர், தையல் தொழில் செய்வோர், மண்பாண்டம் செய்வோர், மரம் ஏறும் தொழில் செய்வோர், தானி (ஆட்டோ) ஓட்டுநர்கள், முடி திருத்துபவர்கள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புச் சாராத் தொழிலாளர்கள் சற்றொப்ப இரண்டு கோடி பேர் தமிழ்நாட்டில் இருக்கின்றார்கள். அவர்களில் தமிழ்நாடு அமைப்பு சாராத் தொழிலாளர் நல வாரியத்தில் சற்றொப்ப நாற்பத்து ஏழு இலக்கம் பேர் மட்டும் தான் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள்.

முறைகேடுகள் இருக்காது

- அமைப்புச் சாராத் தொழிலாளர் நலவாரியத்தில் உறுப்பினர் சேர்க்கையில் பல்வேறு முறைகேடுகள் நடந்து வருகிறது. பெரும்பாலும் ஆளுங்கட்சிக்கு ஆதரவானவர்களே உறுப்பினராகப் பதிவு செய்யப்படுகிறார்கள். உண்மையான தொழிலாளர்கள் பதிவு செய்ய அலைக்கழிக்கப்படுகிறார்கள். நலவாரியத்தின் சலுகைகள் அனைத்தும் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்குத்தான் அதிகமாகச் சென்று கொண்டிருக்கிறது எனத் தொழிற்சங்கங்கள் குற்றஞ்சாட்டி வருகிறது. நாம் தமிழர் அரசு இந்த முறைகேடுகளைத் தடுத்து நிறுத்தும்.

ஆளுங்கட்சித் தலையீடு இருக்காது

- ஆளுங்கட்சிகளின் தலையீட்டிற்குத் தடை கொண்டு வரப்பட்டு, நல வாரியம் தன்னுரிமையுடன் இயங்க நடவடிக்கை எடுக்கப்படும். உறுப்பினர் சேர்க்கை விதிமுறைகள் எளிதாக இருக்கும். மாவட்டத்தின் தலைகநகரங்களில் மட்டுமின்றி அந்த மாவட்டங்களில் உள்ள முதன்மையான ஊர்கள்தோறும் அமைப்புச் சாரா உறுப்பினர் சேர்க்கைக்கான அலுவலகம் திறக்கப்படும். அனைத்துத் தொழிற்சங்க சார்பாளர்களும் நலவாரியத்தில் குழு உறுப்பினராக இருப்பார்கள்.



அனைவருக்குமான நலத்திட்டங்கள் உறுதி செய்யப்படும்

- தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள அமைப்புச் சாராத் தொழிலாளர்களில் ஐம்பது விழுக்காடு பேர் கூட நல வாரியத்தில் உறுப்பினர்களாக இல்லை. மேலும், ஓய்வூதியம், திருமண உதவித்தொகை போன்ற நலத்திட்ட உதவிகள் அவர்களைச் சென்றடைய ஆறு மாதங்களுக்கு மேல் ஆகும் நிலைமை உள்ளது. நாம் தமிழர் அரசு சிறப்புத் தங்ககங்கள் (முகாம்கள்) அமைத்து, அனைத்து அமைப்புச் சாராத் தொழிலாளர்களையும் நலவாரியத்துடன் இணைத்து, அவர்களுக்கான நலத் திட்டங்கள் முழுமையாகவும் விரைவாகவும் சென்றடைவதை உறுதி செய்யும்.

ஓய்வூதியம்

- தமிழகத்தில் தற்போது அமைப்புச் சாராத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மிகக்குறைந்த அளவிலான ஓய்வூதியத் தொகை, அவர்களின் மூத்த அகவையின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யப் போதுமானதாக இல்லை. மேலும், இந்தத் தொகை பகிரப்படும் முறையில் நிலவும் பல்வேறு நிருவாகக் குறைபாடுகளும், முறைகேடுகளும் உள்ளன.
- எனவே, நாம் தமிழர் அரசு பொறுப்பேற்றவுடன், உழைக்கும் வகுப்பினரின் முதுமைக்காலப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், அவர்களின் வாழ்வாதாரத்திற்குத் தேவையான தகுந்த ஓய்வூதியத் தொகை முறையாக வழங்கப்படும். இடைத்தரகர்களின் குறுக்கீடு இன்றி, இந்த ஓய்வூதியத் தொகை நேரடியாகத் தொழிலாளர்களின் வைப்பகக் கணக்கிலேயே வரவு வைக்கப்படுவது உறுதி செய்யப்படும்.

அமைப்புச் சாராத் தொழிலாளர் திருமணப் பொருளுதவித் திட்டம்

- தமிழகத்தில் தற்போது நடைமுறையில் உள்ள திருமணப் பொருளுதவித் திட்டங்கள், தொழிலாளர்களின் பிரிவைப் பொறுத்து பெருமளவு வேறுபடுகின்றன. குறிப்பாக, கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் ஏனைய அமைப்புச் சாரா வாரியத் தொழிலாளர்களுக்கும் இடையே நிலவும் இந்தத் தொகை ஒதுக்கீடு இடைவெளி, உழைக்கும் வகுப்பினர் இடையே ஒரு சமமற்ற நிலையை உருவாக்கியுள்ளது.
- நாம் தமிழர் அரசில், இந்த வேறுபாடுகள் முழுமையாகக் களையப்படும். உழைக்கும் வகுப்பைச் சார்ந்த அனைத்து அமைப்புச் சாராத் தொழிலாளர்களுக்கும், அவர்களது இல்லத் திருமணத்திற்குப் போதிய செலவினங்களை எதிர்கொள்ளும் வகையில் அதற்கான திருமணப் பொருளுதவி வழங்கப்படும்.

இழப்பீட்டுத் தொகை

- அமைப்புச் சாராத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் வகையில், முறையான மற்றும் போதுமான இழப்பீட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படும். இதன்படி, தொழிலாளர்களுக்கு இயற்கையான மரணம் நிகழும்போது அவர்களின் குடும்பத்தினருக்கு உரிய பொருளுதவி வழங்கப்படுவது உறுதி செய்யப்படும். குறிப்பாகப் பணியிடங்களில் ஏற்படும் நேர்ச்சிகளினால் உயிரிழக்கும் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு, மற்ற பிரிவு தொழிலாளர்களுக்கும் நேர்ச்சி மரணங்களுக்கான உரிய இழப்பீட்டுத் தொகைகள் வேறுபாடு இன்றி வழங்கப்படும். மேலும், எதிர்பாராத நேர்ச்சிகள் அல்லது இயற்கை சீற்றங்களினால் வாழ்வாதாரம்

பாதிக்கப்படும் காலங்களில், தொழிலாளர்களின் குடும்பங்கள் நிலைகுலையாமல் இருக்க முறையான இடைக்கால உதவித்தொகை வழங்கப்பட்டு அவர்களின் சமூகப் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.

கல் உடைக்கும் தொழிலாளர்கள்

- தமிழகத்தின் 26 மாவட்டங்களில் ஏறக்குறைய 3,000 இடங்களில் கற்சுரங்கம் (குவாரி) தொழில் நடந்து வருகிறது. தனி முதலாளிகளும், தனியார் நிறுவனங்களுமே இதை நடத்தி வருகிறார்கள். ஆண்டிற்குப் பல ஆயிரம் கோடிகளை வருவாயாக ஈட்டித்தரும் இந்தத் தொழிலில் பதினைந்து இலக்கத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.



- இவர்களுக்கு முறையான நிலையான வருவாய் மற்றும் சமூகப் பாதுகாப்பு வசதிகள் கிடைப்பதை நாம் தமிழர் அரசு உறுதி செய்யும். குறிப்பாக, இவர்களது பணிச் சூழலைக் கருத்தில் கொண்டு, உயர் மருத்துவ வசதிகள், வருங்கால வைப்புத் தொகை மற்றும் பிள்ளைகளுக்கான தடையற்ற உயர்கல்வி வாய்ப்புகள் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் மூலம் செம்மைப்படுத்தப்படும்.
- மேலும், சுற்றுச்சூழல் சமநிலையைப் பேணும் பொருட்டு, கற்சுரங்கங்களின் (குவாரிகளின்) செயல்பாடுகள் முறைப்படுத்தப்படுவதோடு, இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் நோக்கில் கற்சுரங்கங்களின் (குவாரிகளின்) எண்ணிக்கை படிப்படியாகக் குறைக்கப்படும். அவ்வாறு குறைக்கப்படும்போது தொழிலாளர்களுக்கு, அவர்களின் வாழ்வாதாரம் எவ்வகையிலும் பாதிக்காமல் மாற்றுத் தொழில் வாய்ப்புகளும், உரிய மறுவாழ்வுத் திட்டங்களும் செய்து தரப்படும்.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர் நலன்

- தமிழ்நாடு முழுதும் உள்ள தேயிலைத்தோட்ட தொழிலாளர்களுக்குச் சொந்தக் குடியிருப்புகள் கட்டித்தரப்படும். உயர்கல்வி பயின்ற தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு நிருவாகப் பணிகளில் முன்னுரிமை அளிக்கப்படும். தொழிலாளர்களின் குடியிருப்புப் பகுதிகளில் மருத்துவம், தூய குடிநீர் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும். தொழிலாளர் பிள்ளைகளின் கல்விக்காக தரமான பள்ளிகள் அப்பகுதியில் ஏற்படுத்தப்படும்.

- கூட்டுறவு ஏல மையங்களில் 'கூட்டமைப்பு' (Syndicate) முறை ஒழிக்கப்படும். இதனால் அரசுக்கும் தொழிலாளர்களுக்கும் வருவாய் கூடும். தேயிலைத்தூள் விற்பனையில் கலப்படங்கள் முழுதுமாக ஒழிக்கப்பட்டு, தரமான உருவாக்க முறை கொண்டு வரப்படும்.

- நிலச்சரிவு ஏற்படக்கூடியப் பகுதிகளில் வசிக்கும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் பாதுகாப்பான இடத்தில் குடியமர்த்தப் படுவார்கள். இதன் மூலம் ஒவ்வோர் ஆண்டும் நிலச்சரிவின் மூலம் நிகழும் உயிரிழப்புகள் தவிர்க்கப்படும்.



ஊர்க்காவல் படை

- தமிழகக் காவல்துறையினருக்குத் துணையாக நின்று மக்கள் பணியாற்றும் ஊர்க்காவல் படையினரின் நீண்டகாலக் கோரிக்கைகளை ஏற்று, அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் வகையில் தகுந்த ஊக்கத்தொகை உயர்த்தப்படும்.

- அவர்களின் பணிப் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு, பணியின் போது ஏற்படும் எதிர்பாராத நேர்ச்சிகளினால் பாதிப்பு ஏற்படும் நேரங்களில் உரிய மருத்துவ பொருளுதவியும், உயிரிழப்பு ஏற்படும் நேர்வுகளில் அவர்களின் குடும்பத்தினருக்கு முறைப்படுத்தப்பட்ட உயரிய இழப்பீட்டுத் தொகையும் குடும்ப நலத் தொகையும் விரைந்து வழங்கப்படுவது உறுதி செய்யப்படும்.

- மேலும், ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், தங்களின் கோரிக்கைகளை முன்வைக்கவும் சங்கம் அமைக்கும் உரிமை சட்டமுறையில் வழங்கப்படும். சங்க நடவடிக்கைகளில் ஈடுபடும் ஊழியர்கள் மீது எவ்வகைப் பழிவாங்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாது என்பது உறுதி செய்யப்படுவதோடு, வெளிப்படையான நிருவாக முறை நிலைநாட்டப்படும். அதன் தலைமைப் பொறுப்புகளில் தகுதியுள்ள தமிழர்களே பணியமர்த்தப்படுவார்கள்.

மகிழுந்து, தானி ஓட்டிகளுக்கான நல வாரியம்

- தமிழகத்தில் தற்போது இயங்கி வரும் பன்னாட்டு மகிழுந்து (Cab) மற்றும் தானி (Auto) நிறுவனங்கள், உழைக்கும் ஓட்டுநர்களிடமிருந்து மிக அதிக அளவிலான சேவைக் கட்டணத்தைச் (Commission) சுரண்டுவதால், ஓட்டுநர்கள் கடும் பொருளாதார நெருக்கடிக்கும், மன அழுத்தத்திற்கும் உள்ளாகின்றனர்.

- தனியார் நிறுவனங்களின் ஆதிக்கத்தை எதிர்கொள்ளும் வகையில், தமிழக அரசே 'உலா' என்கிற மேம்பட்ட ஊர்தி ஓட்டும் மென்பொருளை (Mobile App) அறிமுகப்படுத்தும். இதில் தனியார் நிறுவனங்கள் பெறக்கூடிய அதிகப்படியான சேவைக் கட்டணங்களுக்கு மாற்றாக, மிகக் குறைந்த அளவிலான நிருவாகக் கட்டணம் மட்டுமே பெறப்படும். இதனால் ஓட்டுநர்களின் வருமானம் முழுமையாக அவர்களைச் சென்றடைவது உறுதி செய்யப்படும்.

- ஓட்டுநர்களின் உடல்நலன் மற்றும் சாலைப் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, அவர்களின் பணி நேரம் முறைப்படுத்தப்படும். கூடுதல் பணிச்சுமையால் ஏற்படும் மன அழுத்தத்தைக் குறைத்து, அவர்கள் குடும்பத்துடன் போதிய நேரம் செலவிடுவதற்கான பணிச் சூழல் உருவாக்கப்படும். எரிபொருள் விலை உயர்வு மற்றும் பேணுதற் செலவுகளைக் கணக்கில் கொண்டு, பொதுமக்களுக்குப் பாதிப்பில்லாத வகையில் சரியான பயணக் கட்டணங்கள் அமைக்கப்படும்.

பொறியாளர்கள் கூட்டமைப்பு

- தமிழ்நாடு கட்டடப் பொறியாளர்கள் கூட்டமைப்பு சார்பான நீண்ட நாள் கோரிக்கையான, "கட்டடப் பொறியாளர் நல வாரியம்" அமைக்கப்படும். அவர்களுக்குத் தமிழக அரசின் கட்டுமானப் பணிகளில் உரிய ஏற்பிசைவும், குத்தகைப் பணிகளும் வழங்கப்படும். இதன் மூலம் இவர்களுக்கான சமூக ஏற்பிசைவு ஏற்படும்.

தற்காலிகச் சேவைத் தொழிலாளர் நலன் (Gig Workers)

- அண்மைக்காலத் தொழில்நுட்ப வளர்ச்சியால் உருவெடுத்துள்ள உணவுச்சேவை (Food Delivery) போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் எவ்வகைப் பணிப் பாதுகாப்பும் இன்றி இயங்கி வருகின்றனர். இவர்களைத் 'தொழிலாளர்கள்' என்று ஏற்காமல் 'கூட்டாளிகள்' (Partners) என விளிப்பதன் மூலம் நிறுவனங்கள் தங்களின் சட்டமுறைக் கடமைகளிலிருந்து நழுவுகின்றன. நாம் தமிழர் அரசு இவர்களது உழைப்பிற்கேற்ற முறையான ஊதியத்தை உறுதி செய்யும். நேர்ச்சிக் காப்பீடு, ஓய்வூதியம் மற்றும் முறையற்ற பணி நீக்கங்களுக்கு எதிரான சட்டப் பாதுகாப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு விரிவான சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை இவர்களுக்காகச் செயல்படுத்தும்.

புலம்பெயர் தொழிலாளர்கள் (Migrant Labours)

- தமிழகத்தின் மக்கள் தொகை கட்டமைப்பைப் பாதுகாக்கவும், மண்ணின் மைந்தர்களுக்கான வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தவும், அருணாச்சலப் பிரதேசம், நாகாலாந்து, மிசோரம் மற்றும் மணிப்பூர் ஆகிய மாநிலங்களில் நடைமுறையில் உள்ள 'உள்நுழைவு அனுமதிச் சீட்டு' (Inner Line Permit) முறையைத் தமிழ்நாட்டிலும் நாம் தமிழர் கட்சி நடைமுறைப்படுத்தும். தடையற்ற வெளிமாநிலத்தவர் குடியேற்றத்தால் தமிழர்கள் தங்கள் தாயகத்திலேயே அதிகாரமற்றவர்களாக மாறும் சூழல் நிலவுகிறது, இது மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு மற்றும் அரசியல் இறையாண்மைக்கு அச்சுறுத்தலாக உள்ளது.

- எனவே தமிழகத்திற்குள் நுழையும் ஒவ்வொரு வெளிமாநிலத்தவருக்கும் காலவரையறைக்குட்பட்ட 'உள்நுழைவு அனுமதிச் சீட்டு' வழங்கும் முறையை நாம் தமிழர் கட்சி அறிமுகப்படுத்தும். இதற்காகத் தனி தரவுத்தளம் (ஸிமீரீ வீஷ்மீக்ஷீஹ்) உருவாக்கப்பட்டு, வருபவர்களின் முகவரி, பணிபுரியும் நிறுவனம் மற்றும் தங்கும் காலம் ஆகியவைப் பதிவு செய்யப்படும். இதன் மூலம், வெளிமாநிலத்தவருக்கு வாக்குரிமை வழங்கப்படுவதைத் தடுத்து, தமிழர்களின் அரசியல் அதிகாரத்தை நிலைநாட்டவும், 'தமிழ்நாட்டு வேலை தமிழர்களுக்கே' என்ற கொள்கையின் கீழ் வேலைவாய்ப்பை முழுமையாக உறுதிப்படுத்தி, வருகின்ற வெளிமாநிலத்தவரின் நடவடிக்கைகளை மேற்பார்வைச் செய்யப்பட்டு, அவர்களுக்கான பாதுகாப்பும் உறுதி செய்யப்படும்.

- 15 ஆண்டுகள் தமிழ்நாட்டில் வாழும் பிற மாநிலத்தவர்களுக்கு மட்டுமே முறையான குடும்ப அட்டையும், வாக்காளர் உரிமையும் அளிக்கப்படும். அதன்பிறகு தான் அவர்கள் தமிழ்நாட்டிற்குள் சொத்து வாங்கும் உரிமை அளிக்கப்படும்.

- தமிழகத்தில் பல்வேறு கட்டுமான மற்றும் உருவாக்கப் பணிகளில் ஈடுபட்டுள்ள பிற மாநிலத் தொழிலாளர்கள் குறித்த முறையான தரவுத்தளம் (Database) உருவாக்கப்படும். இது அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதோடு, மண்ணின் மக்களின் வேலைவாய்ப்பு முன்னுரிமையைச் சமநிலைப்படுத்தவும் உதவும். புலம்பெயர் தொழிலாளர்கள் தங்கியிருக்கும் இடங்களில் முறையான நலவாழ்வு மற்றும் பாதுகாப்பு வசதிகள் இருப்பதை அரசு கண்காணிக்கும். அதேவேளையில், தமிழகத் தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்கும் பிற மாநிலங்களுக்கும் புலம் பெயர்வதைக் குறைக்கும் வகையில், இங்கேயே அவர்களுக்குத் தகுந்த வாழ்வாதார வாய்ப்புகள் உருவாக்கப்படும். இவர்களின் வருகையினால் சமூகக் கட்டமைப்பிலோ அல்லது உள்ளூர் மக்களின் வேலைவாய்ப்பிலோ பாதிப்பு ஏற்படாத வகையில் ஒரு சீரிய 'புலம்பெயர் தொழிலாளர் ஒழுங்குமுறைச் சட்டம்' நடைமுறைப்படுத்தப்படும்.



முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்.

– தமிழ்மறை (388) – வள்ளுவப்பெருமகனார்



**பெண் காவலர்களுக்கு
6 மணி நேர வேலை!
ஆண் காவலர்களுக்கு
8 மணி நேர வேலை!**

காவல் – மக்களுக்கான சேவை



"குற்றவாளிகளைப்
பிடித்து கூண்டில்
நிறுத்துவதல்ல
காவல் துறையின் வேலை.
குற்றவாளிகளே உருவாகாத ஒரு
சமூகத்தை உருவாக்குவதுதான்
காவல்துறையின் வேலை"

– தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்

காவல் துறையின் சீர்கேடு

- தற்போது காவல்துறை அரசியலாளர்களின் ஏவல் துறையாக இருக்கிறது. நேர்மை, ஆளுமைத் திறமைக்கு ஏற்ற பதவி உயர்வு இல்லை. இந்த நிலை உடனடியாக மாற்றி அமைக்கப்படும். நாம் தமிழர் அரசு, நேர்மையாகப் பணியாற்றுபவர்களுக்குப் பதவி உயர்வில் முன்னுரிமை அளிக்கும். காவல் துறை ஆளுமையும், நம்பிக்கையும் உள்ளதாக மாற்றப்படும்.

காவலர்கள் பற்றாக்குறை

- 450 பேருக்கு ஒரு காவலர் இருக்க வேண்டும் என்பது உலகளாவிய அளவு கோலாகப் பார்க்கப்படுகிறது. ஆனால் தமிழகத்தில் 600 பேருக்கு ஒரு காவலர் என்ற நிலை உள்ளது. நாம் தமிழர் அரசு 450 பேருக்கு ஒரு காவலர் என்று தரத்தை உயர்த்தும். அதற்கேற்ப புதிய காவலர்களைப் பணியில் அமர்த்தும்.
















ஒட்டுறை
முகப்புடை காண்பதிவு
வீச்சு விளக்கு
மின் தாக்கி
காவல் தொடர்பகக் கருவி
மிளகுநீர்த் தூவி
கை விளக்கு





ஏன் தேவை

- தில்லி - சற்றொப்ப 84,000 காவலர்கள்
- மும்பை - சற்றொப்ப 50,000 காவலர்கள்.
- கொல்கத்தா - சற்றொப்ப 37,000 காவலர்கள்.
- சென்னை - சற்றொப்ப 25,000 காவலர்கள்.
- மற்ற மாநிலத் தலைநகரங்களை ஒப்பிடும்போது சென்னையில் குறைவான காவலர்களே பணியில் இருக்கிறார்கள். மாநிலத் தலைநகரத்தின் சட்டம் ஒழுங்கை பாதுகாக்கப் புதிய கட்டமைப்புடன் கூடுதல் ஊழியர்கள் பணியமர்த்தப்படுவார்கள்.

மூன்று பிரிவு

- பெரும்பாலான காவல் நிலையங்களில் சட்டம் ஒழுங்கு பாதுகாப்பிற்காக பணியமர்த்தப்பட்டக் காவலர்கள்தான், குற்றங்களைத் தடுத்தல், நடந்த குற்றங்களுக்கான வினாவுதல் மேற்கொள்ளுதல், தேவையிருப்பின் புலனாய்வு செய்தல், மேலும், அரசு மற்றும் தனியார் பொது நிகழ்ச்சிகளுக்கான பாதுகாப்புக்கும் செல்லுதல் என அனைத்தையும் இவர்களே செய்ய வேண்டும் என்பது நடைமுறையில் இருப்பதால், இது காவலர்களுக்கு மிகுந்த பணிச்சுமையை ஏற்படுத்துகிறது.
- அதனால் பொது நிகழ்ச்சிகளுக்கான பாதுகாப்பு காவல் பிரிவு தனியாக அமைக்கப்படும். சட்டம் ஒழுங்கைக் கவனிப்பதற்கான பிரிவு தனியாக இயங்கும். குற்றத் தடுப்பு மற்றும் புலனாய்வு நடவடிக்கைகளுக்கான காவல் பிரிவு தனியாக இயங்கும். பொதுவாகக் குற்றப்புலனாய்வு உசாவுதலைக் குறைந்தது 30 நாட்களுக்குள் முடிக்க வேண்டும். அதற்கேற்ப அனைத்துப் பிரிவுகளிலும் கூடுதல் காவலர்கள் பணியமர்த்தப்படுவார்கள். காவலர்களின் பணிச்சுமையைக் குறைக்க நாம் தமிழர் அரசு இந்த மாற்றத்தைக் கொண்டு வரும்.

எட்டுமணி நேர வேலை

- காவலர்களுக்கு சுழற்சி முறைப் பணி சட்டமாக்கப்படும். ஆண் காவலர்கள் எட்டு மணி நேரமும், பெண் காவலர்கள் ஆறு மணி நேரமும் பணிபுரியும்படி சுழற்சி முறை அமல்படுத்தப்படும். காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும். இதனால் சற்றொப்ப 25,000 காவலர்களுக்கான புதிய வேலை வாய்ப்புகள் உறுதி செய்யப்படும். இதனால் காவலர்களின் பணிச்சுமை குறையும்.

ஓய்வும் மனவளப் பயிற்சியும்

- காவலர்களுக்கு ஆண்டிற்கு இரண்டு கிழமை (வாரம்) கட்டாய விடுப்பு சுழற்சி முறையில் அளிக்கப்படும். காவலர்களுக்கு ஏற்படும் மன அயர்ச்சி மற்றும் மன அழுத்தம் ஆகியவற்றைப் போக்க, தகுந்த மனவளப் பயிற்சியும், உடல் நலப்



பயிற்சியும் அளிக்கப்படும். மற்ற அரசு ஊழியர்களைப்போல் காவல் பணியில் இருப்பவர்களுக்கும் தன் குடும்பத்தோடு போதுமான நேரம் செலவழிக்கும்படியான பணி மற்றும் குடும்ப வாழ்க்கைச் சமநிலை (work-life balance) உறுதி செய்யப்படும்.

- காவலர்கள் மற்றும் அவரது குடும்பத்தினர் ஆண்டுக்கு ஒருமுறை மனநிறைவுடன் சுற்றுலாச் செல்வதற்கு அரசு வழிவகை செய்யும். தொடர் பணியினால் ஏற்படும் மன அழுத்தத்தைக் குறைக்கவும், குடும்ப உறவுகளை வலுப்படுத்தவும் இத்திட்டத்தின் கீழ், காவலர்கள் தங்கள் குடும்பத்தினருடன் இந்திய ஒன்றியத்திற்குள் எந்தப் பகுதிக்கும் சுற்றுலாச் சென்றுவரத் தேவையான பயண வழிகாட்டுதல்கள் மற்றும் வசதிகளை நாம் தமிழர் அரசு முன்னின்று ஏற்பாடு செய்யும்.

ஒன்றியக் காவல் படைக்கு இணையாக

- ஒன்றியக் காவல் படையில் இருப்பவர்களுக்கு இணையாக மாநிலக் காவல் பணியில் உள்ளவர்களுக்கும் ஊதியம் வழங்கப்படும். வீட்டு வசதிகள் உட்பட மற்ற நலத் திட்டங்கள் அனைத்தும் ஒன்றியக் காவல் படை ஊழியர்களுக்கு இணையாக வழங்கப்படும்.

புதுப்பிக்கப்பட்ட வசதிகள்

- காவலர்களுக்கான பழைய குடியிருப்புகள் அனைத்தும் மறு சீரமைப்புச் செய்யப்பட்டு, தேவையின் அடிப்படையில் மேலும் புதிய குடியிருப்புகள் மாவட்டந்தோறும் கட்டித்தரப்படும். அந்தக் குடியிருப்புகளில் வணிக வளாகங்கள், விளையாட்டுத் திடல், உடற்பயிற்சிக்கூடம், மருந்தகம், நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான உள் அரங்குகள் என அனைத்தும் அமைக்கப்படும். காவலர்கள் தங்கள் குடும்பத்தோடு இருக்கும் சூழல் உருவாக்கித் தரப்படும்.

வெளிப்படைத்தன்மை

- பணியிட மாற்றங்கள், பதவி உயர்வு ஆகியன வெளிப்படைத்தன்மையோடு இருக்கும். அதற்கேற்ற காவலர்களின் பணிக் குறிப்பேட்டுப் பதிவுகள் கணினியில் பதியப்படும். அவற்றைக் கொண்டு நேர்மையான பணியாளர்களுக்குப் பதவி உயர்வில் முன்னுரிமை அளிக்கப்படும். துறை சார்ந்த முறையீடுகள் உடனுக்குடன் வினவி முடிக்கப்படும். அவர்கள் ஓய்வு பெறும்வரை காலத்தாழ்வு (சுணக்கம்) இருக்காது. ஓய்வுக்குப் பின்பாகவும் வினாவுதல் நடக்காது.

படைத்துறை (இராணுவ) மருத்துவமனை போல்

- படைத்துறையி(இராணுவத்தி)னருக்கும், ஒன்றியக் காவல் படையினருக்கும் உள்ள தனி மருத்துவமனைகளுக்கு இணையாக, தமிழகக் காவல்துறையினருக்கும் தனி மருத்துவமனைகள் மாவட்டந்தோறும் உருவாக்கப்படும். உயர்தர மருத்துவங்கள் அனைத்தையும் இந்தத் தனி மருத்துவமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

குற்றத்தடுப்புப் பிரிவு

- ஒரு குற்ற நிகழ்வு நடந்த பிறகு நடவடிக்கை எடுப்பதைவிட, குற்றங்களே நடக்காமல் தடுப்பதற்கான நடவடிக்கை வேண்டும் என்பதே நாம் தமிழர் அரசின் நோக்கம். அதற்காகப் பல புதிய பட்டதாரி இளைஞர்கள் காவலர் பணிக்குப் பணியமர்த்தப்படுவார்கள். இவர்களுக்குச் சீருடை ஏதும் இருக்காது. உடல் தகுதியைக் காட்டிலும் அறிவுத்திறன் மட்டுமே முதன்மையானதாகக் கருதப்படும்.
- இந்தப் புதிய காவலர்களுக்கும் பன்னாட்டுத் தரத்தில் உளவுப் புலனாய்வுப் பயிற்சிகள் அளிக்கப்படும். இவர்கள் மக்களோடு மக்களாகக் கலந்திருப்பார்கள். எங்கெல்லாம் குற்றங்கள் நடக்க வாய்ப்பிருக்கிறது என்பதை முன்கூட்டியே அறிந்து தகவலைக் கொடுப்பார்கள்.
- உடனே அந்த இடங்களுக்குத் தடுப்புக் காவல் படையின் தனிப்பிரிவு சென்று, உரியவர்களை முன்கூட்டியே தளைப்படுத்தி, குற்றங்களைத் தடுத்து நிறுத்தும். இரு பிரிவினருக்கு மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது என்ற தகவல் மக்களிடமிருந்தே கிடைத்துவிடும். அதன்பேரில்தான் உடனடித் தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படும். இது அனைத்து வகைக் குற்றங்களுக்கும் பொருந்தும்.

நண்பனைப் போல் காவலர்கள்

- ஒவ்வொரு பகுதியிலும் உள்ள காவலர்கள், அந்தப் பகுதி மக்களுடன் மாதந்தோறும் கலந்துரையாடல் நடத்த வேண்டும். உள்ளூர் நிகராளிகளும், பல்துறை இளைஞர்களும், கல்லூரி மாணவ மாணவிகளும், அதில் கலந்து கொள்வார்கள்.
- இவ்வாறு தொடர்ச்சியாகக் கலந்துரையாடும்போது அப்பகுதியில் நடக்க உள்ள குற்றங்கள் பற்றிய தகவலும் உடனுக்குடன் கிடைத்துவிடும். இதனால் காவல்துறை மக்களுக்கு நண்பனாகவும் திகழும்.

உடை என்பது உளவியல் மாற்றம்

- உடை என்பது உளவியல் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஒன்று. இப்போது காவலர்கள் பயன்படுத்தி வரும் பழுப்பு (Khaki) வண்ணத்திலான சீருடையை மாற்றி, புதிய நீல வண்ணத்திலான சீருடைகள் வழங்கப்படும்.
- இந்த மாற்றம் காவலர்களுக்கும், பொது மக்களுக்குமே மன மாற்றத்தையும் புத்துணர்ச்சியையும் கொடுக்கக்கூடியதாக இருக்கும். பல நாடுகளில் உள்ள காவலர்களின் நிலையை ஆய்வு செய்தே நாம் தமிழர் அரசு இந்த மாற்றத்தைக் கொண்டு வருகின்றது.
- காவல்துறை பணி என்பது சொந்த மக்களைப் பாதுகாக்கவேயன்றி எப்போதும் அவர்கள் மீது தடியடி நடத்தும் துறையாக இருக்கக்கூடாது என்பதில் நாம் தமிழர் அரசு உறுதியாக இருக்கும்.











கணினிக் கண்காணிப்பில்

- முதன்மைச் செயல்பாடுகள் மற்றும் உளவுத்துறைப் பணிகளைத் தவிர்த்து மற்ற அனைத்தும் வெளிப்படையாக இயங்கும். ஒவ்வொன்றும் ஆவணப்படுத்தப்படும். காவல் நிலையங்களுக்கு உள்ளேயும் வெளியேயும் கண்காணிப்புக் கருவிகள் பொருத்தப்படும்.
- காவலர்களுக்கு மேம்படுத்தப்பட்ட சிறிய வகைக் கண்காணிப்புக் கருவி பொருத்தப்பட்ட சீருடை வழங்கப்படும். பணி நேரத்தின்போது அவரது செயல்பாடு, வினாவுதல் முறை அனைத்தும் கணினியில் பதிவாகும்.

காலக்கெடு

- பாதிப்புக்குள்ளாகும் பொதுமக்கள் விண்ணப்பம் கொடுப்பதும், அதன் மீதான வினாவுதல்களும், முடிவுகளும் முறைப்படி ஆவணப்படுத்தப்படும். காலந்தாழ்த்துவதற்கான உரிய காரணங்களையும் பதிவு செய்ய வேண்டும். எதிலும் ஒளிவுமறைவு இருக்காது. இதன்மூலம் குற்றமற்றவர்கள் மீது பொய் வழக்குகள் பதிவு செய்வது முற்றாகத் தடுக்கப்படும். ஒவ்வொரு முறையீட்டு விண்ணப்பம் மீதும் குறிப்பிட்ட நாள்களுக்குள் தீர்வுகள் கிடைக்கும்படி காலக்கெடு உறுதி செய்யப்படும்.

காத்திருப்பும் அலைச்சலும் வேண்டாம்

- குற்றம் நடந்த உடன், காவல் நிலையத்திற்கு நேரில் சென்றுதான் முறையீடு அளிக்க வேண்டும் என்ற முறையில், திருத்தம் செய்து நேரில் செல்வது கட்டாயம் இல்லை, முறையீட்டைச் சிற்றூர் நிருவாக அதிகாரியிடமோ அல்லது காவல் நிலைய மின் அஞ்சல் முகவரிக்கோ அனுப்பும்படி வழிவகை செய்யப்படும். ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் இணையவழி முறையீட்டு முறை, மேம்படுத்தப்பட்டு அதன் செயல்முறை மற்றும் பயன்பாடு அனைத்து மக்களையும் சென்று சேர வழிவகை செய்யப்படும். மேலும் முறையீட்டை கைப்பேசிச் செயலி வாயிலாக அனுப்பவும், விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்டதற்கான உறுதி மக்களுக்கு உடனே கிடைக்கவும், அதைக் கொண்டே மருத்துவமனைகளில் மருத்துவம் எடுத்துக்கொள்ள வழிவகை செய்யப்படும். அதற்கேற்ற வகையில் இச்செயலி மேம்படுத்தப்படும்.

தனிப்பயிற்சி

- ஆசிரியர்களுக்கு எப்படியெல்லாம் புதிய வகையில் பாடங்களைக் கற்பிக்க வேண்டும் என்ற வகுப்புகள் மாதந்தோறும் நடத்தப்படுகிறதோ, அதுபோலவே காவல் துறையினருக்கும் பயிற்சி மையங்களில் உலகளவில் ஏற்பட்டுள்ள புதிய புலனாய்வு வினாவுதல் போக்குகள், பொது மக்களை அணுகும் வகைகள், மனித உரிமைகளின் தலையீடுகள் அனைத்தும் பயிற்றுவிக்கப்படும்.







பெண் காவலர் நலன்

- பெண் காவலர்கள் மகப்பேறு உள்ளிட்ட அனைத்து வகை மருத்துவமும் காவல் துறையினருக்கான தனி மருத்துவமனையில் பெற்றுக்கொள்ளலாம்.
- பெண் காவலர்களின் பணியில் தனிக்கவனம் செலுத்தப்படும். உயர் அதிகாரிகளால் ஏற்படும் தேவையற்ற அழுத்தங்கள், பாலியல் சீண்டல்கள் உள்ளிட்ட அனைத்து முறையீடுகளின் மீதும் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். இதனால் ஏற்படும் மன அழுத்தங்களில் இருந்து அவர்கள் விடுபட, உடனடி கலந்தாய்வும் வழங்கப்படும். திருமணமாகாப் பெண் காவலர்களுக்கான குடியிருப்புப் பகுதிகளின் தரம் உயர்த்தப்படும்.
- பெண் காவலர்களின் நலனுக்கு எல்லா வகையிலும் பாதுகாப்பான சூழ்நிலையை நாம் தமிழர் அரசு உறுதியாக வழங்கும்.

அரசியல் தலையீடு இருக்காது

- அரசியலாளர்களின் விருப்பத்திற்குக் காவல் அதிகாரிகளைப் பணிமாற்றம் செய்வதும், மிரட்டுவதும், காவல்துறை அதிகாரிகள் அவர்களுக்குக் கீழ் பணிபுரியும் ஊழியர்களை முறையற்றுப் பணிமாற்றம் செய்வதும் நாம் தமிழர் அரசில் இருக்காது. ஒரு பணியிடத்தில் குறைந்தது மூன்று ஆண்டுகள் வேலை செய்வார்கள். தேவையற்ற இடமாற்றம் இருக்காது. அரசியல் தலையீடின்றிப் பணியாற்றுவார்கள். தண்டிப்பதற்குரியக் காரணமின்றி அவர்கள் யாருக்குமே குறுகியகால இடமாற்றம் இருக்காது.
- இப்போது இருக்கும் காவலர்களின் பணியிடத்தில் உள்ள கட்டமைப்புகள் அனைத்தும் அவர்களுக்கு மன அழுத்தத்தையும், பொது மக்களுக்கு

அச்சத்தையும் ஏற்படுத்தும் வகையில் இருக்கின்றது. எனவே காவல் நிலையங்கள் அனைத்தும் படிப்படியாக மேம்படுத்தப்படும். ஊர்திகள், தொலைத்தொடர்புக் கருவிகள், தடயவியலுக்கான மேம்படுத்தப்பட்ட கருவிகள் உள்ளிட்ட அனைத்தும் பன்னாட்டுத் தரத்திற்கு மாற்றப்படும்.

நடவடிக்கைகள்

- வினாவுதல் (விசாரணை) என்ற பெயரில் துன்புறுத்தல் / வதைத்தல்.
- போதிய சான்று இன்றி வழக்குப் பதிவு செய்தல்.
- பழிவாங்கும் முறைகளில் நடந்து கொள்தல்.
- பொய் வழக்குப் பதிவு செய்தல் போன்ற குற்றங்களில் ஈடுபடும் காவலர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.
- கையூட்டு, ஊழல் ஆகிய குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகும் காவல்துறையினர் மீது தகுந்த ஆதாரங்கள் இருப்பின் நிலையான பணி நீக்கம் செய்யப்படுவார்கள். தேவையான ஆதாரங்கள் இல்லை என்றால் தொடக்கத்திலேயே அந்த முறையீட்டை மறுத்து, பொய் முறையீடு செய்தவர் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

சீர்திருத்த மையம்

- குற்றங்களில் ஈடுபடும் காவல் துறையினருக்கு என்று தனியாக 'மனச் சீர்திருத்த மையம்' ஒன்று தொடங்கப்படும். பணி இடைநீக்கத்திற்கு உள்ளாகும் காவல் துறையினர் மனச் சீர்திருத்த வகுப்பில் தினமும் சென்று கலந்து கொள்ள வேண்டும். பயிற்சி பெற்றுக்கொண்ட சான்றுகளோடு வந்தால் மட்டுமே மீண்டும் பணியில் அமர்த்தப்படுவார்கள்.

தண்டனை உறுதி

- அதே காவலர் அல்லது காவல் அதிகாரி மற்றும் துறை சார்ந்த ஊழியர்கள், இரண்டாவது முறையாக குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகி, வினாவுதலில் அது நிறுவப்பட்டால், அவர்கள் உடனடியாகப் பணி நீக்கம் செய்யப்படுவார்கள். அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த யாவர்க்கும் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு எந்த அரசு உதவிகளும், உரிமைகளும் வழங்கப்படாது, தடுத்து வைக்கப்படும்.

குற்றவாளிகளைக் கண்டுபிடித்தாக வேண்டும்

- குற்ற வழக்குகளில் உரிய காவல் அதிகாரி தன்னதிகாரத்துடன் வினாவுதலை நடத்தலாம். அரசியல் தலையீடு இருக்காது. இருந்தால் அதை பதிவு செய்து ஆவணப்படுத்திவிட்டு, அவர்களின் அழுத்தத்தை ஒதுக்கிவிட்டு, நேர்மையோடு வினாவுதலைத் தொடரலாம். அந்த வகையில் முழு அதிகாரம் அளிக்கப்படும். ஆனால் உண்மையான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும்.
- குற்றம் சாட்டப்பட்டவர்கள் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டால் வழக்கை அதோடு முடித்துக் கொள்ளக்கூடாது. உண்மையான குற்றவாளிகளைத் தேடிக் கண்டுபிடிக்க



முன் மாதிரி



காவலர்

காவலர்களின் ஆடையில் புதிய சிறிய வகைக் கண்காணிப்புக் கருவி பொருத்தப்பட்டுப் பணி நேரத்தின்போது அவரது செயல்பாடு, வினாவுதல் முறை என அனைத்தும் கணினியில் கண்காணிக்கப்படும்.



காவல் நிலையத்தில் கண்காணிப்புக் கருவி







சாலையில் கண்காணிப்புக் கருவி



போக்குவரத்துக் காவலர்

வேண்டும். நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட குற்றம் சாட்டப்பட்டவருக்கு, அரசு உரிய இழப்பீட்டை வழங்கும். இழப்பீட்டில் பாதித் தொகை, வழக்கை நடத்திய வினாவுதல் அதிகாரியின் சம்பளத்தில் இருந்தே பிடித்தம் செய்யப்படும்.

உயர் பதவிகளில் தமிழர்கள்

- காவல்துறைப் பணி என்பது மக்களிடம் நெருங்கியிருக்க வேண்டிய பணி. அதனால் மொழி மற்றும் அவர்களின் பழக்கவழக்கங்களை அறிந்திருத்தல் அடிப்படையான ஒன்று. தமிழகக் காவல் துறையில் பணிபுரியும் 'இந்தியக் காவற்பணி' (IPS) அதிகாரிகளில் வேற்று மாநில அதிகாரிகளும் உள்ளனர். அவர்கள் தமிழர்களின் சமூகப் பண்பாட்டுப் பழக்கவழக்கங்களையும், அரசியல் மற்றும் உளவியல் தன்மைகளையும் புரிந்து கொள்ளக்கூடியவர்களாக இருப்பதில்லை. எனவே தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட அதிகாரிகள் மட்டுமே அரசின் முதன்மைப் பதவிகளில் பணியமர்த்தப்படுவார்கள்.

மரண தண்டனை தவிர்ப்போம்

- ஒருவன் குற்றம் செய்கிறான். அது சட்டப்படிக் குற்றம். ஆனால், சட்டமே ஒரு கொலையைச் செய்வது எப்படி சரியாகும்? எந்தக் குற்றத்திற்கும் மரண தண்டனை கூடாது என்பதே நாம் தமிழர் அரசின் நிலைப்பாடு. ஒருவருக்கு மரணம் தண்டனையாக இருக்கக்கூடாது என்பதே நாம் தமிழர் அரசின் கொள்கை முடிவு.
- தண்டனை என்பது குற்றம் செய்தவர்கள், அதற்காக வருந்தி திருந்தும்போது, மறுபடியும் வாழ வாய்ப்பு கொடுப்பதைப்போல அமைய வேண்டும். 'மரணம்' என்பது தண்டனை அல்ல. அது ஒரு முடிவு.
- ஒரு கொலைக்குத் தண்டனை இன்னொரு கொலைதான் என்பது அறிவார்ந்த சமூகத்தின் செயல் அல்ல.
- மரண தண்டனை என்பது குற்றவாளியின் பெற்றோருக்கும், இணையருக்கும், அவர் பெற்ற குழந்தைகளுக்கும் வாழ்நாள் தண்டனையாக அமைந்து விடுகிறது.
- ஆகவே, பாலியல் வன்புணர்வுக் குற்றத்தில் ஈடுபட்டுக் குற்றம் உறுதி செய்யப்பட்டவரைத் தவிர வேறு எவருக்கும் மரணதண்டனை கிடையாது என்று நாம் தமிழர் அரசு சட்டத்திருத்தம் கொண்டு வரும்.

தண்டனை என்பது கூடுதல் உழைப்பு

- **"சிறைச்சாலை என்பது குற்றவாளிகளைத் தண்டிக்கும் கொலைக்களம் அல்ல. அது மனநல மருத்துவமனை"** என்று அண்ணல் காந்தி சொல்கிறார்.
- மரண தண்டனை போன்ற வன்முறை சார்ந்த தண்டனைகளை நாகரிகமடைந்த அறிவுசார் சமூகம் ஏற்காது என்ற அடிப்படையில், 'தண்டனை என்பது கூடுதல் உழைப்பு' என்கிற கோட்பாட்டினை நாம் முன்வைக்கிறோம்.
- இதன்படி, சிறையாளிகள் சோம்பேறிகளாக முடங்கிக் கிடக்காமல், சீனா (China) போன்ற நாடுகள் பின்பற்றுவதைப் போல வேளாண் பண்ணைகள், நெசவு மற்றும் கால்நடை வளர்ப்புப் போன்ற ஆக்க அடிப்படையில் உருவாக்கப்





பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள். அவர்களுக்குத் தகுந்த தொழில் பயிற்சியும், தரமான உணவு மற்றும் உடையும் வழங்கப்பட்டு, அவர்களது உழைப்பின் மூலம் நாட்டின் உருவாக்கத் திறனைப் பெருக்குவதே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

- இதன்மூலம் ஒரு சிறையாளி தனது குற்ற உணர்விலிருந்து விடுபட்டு, உழைப்பின் வழியாகச் சமூகத்திற்குப் பயனுள்ள ஒரு மாந்தனாகத் தன்னைத் தகவமைத்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்படும்.

பத்தாண்டுகளுக்கு மேல் விடுதலை

- பத்தாண்டுகளுக்கும் மேலாக சிறை தண்டனைப் பெற்றுவரும் அனைவருக்கும் விடுதலை அளிக்கப்படும்.

- பாலியல் குற்றத்தில் ஈடுபட்டவர்கள், சிறுவர் சிறுமியர் மீதான வன்முறைகளில் ஈடுபட்டவர்கள், ஆணவக் கொலைகளில் ஈடுபட்டவர்கள், கூலிப்படையாகச் செயல்பட்டவர்கள், கையூட்டு ஊழலில் சிக்கிய ஊழியர்கள், அரசியலாளர்கள், போதைப் பொருட்களை கடத்துவோர் ஆகியோருக்கு மட்டும் இந்த விதிமுறை பொருந்தாது. இவர்கள் வாழ்நாள் முழுவதும் தண்டனையைப் பெற்றாக வேண்டும்.

- நில மோசடி செய்பவர்கள், அரசு நிலத்தை வன்கவர்பு செய்பவர்கள், நீர் ஆதார இடங்கள் மற்றும் வனப்பகுதிகளை வன்கவர்பு செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். பாலியல் குற்ற வழக்கு நடைமுறையைப் போல், மேற்கண்ட குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு, அந்த வழக்கு முடியும் வரை பிணை வழங்காது என்ற மாற்றத்தையும் நாம் தமிழர் அரசு கொண்டு வரும்.

போக்குவரத்துக் காவல்

மேம்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு அறைகள்

- சாலைகள் அனைத்தும் முழுமையாக எண்ணியல்மயமாக்கப்பட்டு (Digitization), மேம்படுத்தப்பட்ட கண்காணிப்புக் கருவிகள் பொருத்தப்படும்.
- போக்குவரத்துக் காவலர்கள் சாலைகளில் வெயிலில் நின்று பணியாற்றும் நிலை மாற்றப்பட்டு, சாலையோரங்களில் அமைக்கப்படும் குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்து கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்வார்கள்.
- வளைவுகள் மற்றும் சந்திப்புகளில் அனைத்துக் கோணங்களிலும் பயணங்களைக் கண்காணிக்கும் வகையில் கண்காணிப்புக் கருவிகள் ஒருங்கிணைக்கப்படும்.

தானியங்கி ஒலி அறிவிப்புகள்

- முதன்மையான இடங்கள் மற்றும் பள்ளிப் பகுதிகளில், ஊர்தி ஓட்டிகளை அறிவுறுத்தும் வகையில் தானியங்கி ஒலிபெருக்கிகள் அமைக்கப்படும். இவை மூன்று முறை தமிழிலும், ஒரு முறை ஆங்கிலத்திலும் "வேகத்தைக் குறைக்கவும்", "பள்ளிப் பகுதி கவனம் தேவை" போன்ற விழிப்புணர்வைத் தொடர்ந்து வழங்கிக்கொண்டே இருக்கும்.

தண்டனை முறை

- விதிமீறல்களில் ஈடுபடும் ஊர்தி ஓட்டிகள் கண்டறியப்பட்டு, உடனடியாகக் கட்டுப்பாட்டு அறை மூலம் இடைமறிக்கப்பட்டுத் தண்டனைத் தொகை விதிக்கப்படும்.
- சாலைப் பாதுகாப்பில் இணக்கம் கொள்ளாத வகையில் கடுமையான விதிமுறைகள் பின்பற்றப்படும். சிங்கப்பூர் போன்ற நாடுகளில் பன்னிரெண்டு முறை வாய்ப்புகள் வழங்கப்பட்டாலும், நமது நாட்டின் வளர்ந்து வரும் சூழலைக் கருத்தில் கொண்டு ஆறு முறை மட்டுமே வாய்ப்புகள் வழங்கப்படும். ஒவ்வொரு விதிமீறலும் ஓட்டுநர் உரிமத்தில் பதிவு செய்யப்படும். ஆறு முறைக்கு மேல் விதிமீறல்களில் ஈடுபடும் ஆட்களின் ஓட்டுநர் உரிமம் நிலையாக மறுக்கப்பட்டு, அவர்கள் வாழ்நாள் முழுவதும் ஊர்திகளை இயக்கத் தடை விதிக்கப்படும்.



இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும் வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு.

– தமிழ்மறை (737) – வள்ளுவப்பெருமகனார்



பசுந்தமிழ்நாடு

பத்தாண்டுப் பசுமைத்திட்டம், பலகோடிப் பனைத்திட்டம்



இந்த உலகம் உனக்குரியதல்ல. உன் பிள்ளைகளுக்குரியது. நம்மைச் சுற்றி வாழும் பல்லுயிர்களுக்கும் உரியது.

எதிர்காலத் தலைமுறைக்கு கோடி கோடியாகப் பணம் சேர்த்து வைக்க வேண்டாம். விலை உயர்ந்த மகிழுந்துகளை வாங்கி வைக்க வேண்டாம். வானுயர்ந்த மாளிகையை வாங்கி வைத்துவிட்டுப் போக வேண்டாம். இந்தப் புவியை அடுத்த தலைமுறையினரும், பிற உயிரினங்களும் வாழ்வதற்கு ஏதுவான ஒன்றாக விட்டுவிட்டுச் செல்லுங்கள். அவர்கள் உழுது விதைக்கும் நிலமாக வைத்துவிட்டுச் செல்லுங்கள். அவர்கள் குடித்து இளைப்பாற தண்ணீரை வைத்துவிட்டுச் செல்லுங்கள்.

நாம் தமிழர் அரசு மக்களிடம் இந்த கோரிக்கையைத்தான் வைக்கின்றது.

பனை மரம்

- 60 ஆண்டுகளுக்கு மேலான உறுதிப்பாடு கொண்ட பனை மரத்தைக் கொண்டு வீடு கட்டத் தேவையான பொருள்களாகவும் வீட்டுத் தேவைக்கான பல பொருள்களும் செய்யலாம்.

மரம்

- ஒவ்வொரு உயிரினத்திற்குமான உயரிய தேவை, தூய குடிநீர், தூய காற்று, தூய மண் வளம், தூய சுற்றுச்சூழல். மாந்தர்கள் இல்லாமல் மரங்கள் வாழும், மரங்கள் இல்லாமல் மாந்தர்களால் வாழவே முடியாது. மரம் மண்ணின் வரம். வீசுகின்ற காற்றை மூச்சுக் காற்றாக மாற்றித் தருகின்ற அரிய பணியை மரங்கள் செய்கின்றன. மரங்களின் பேயாகிய சீமைக் கருவேல மரம், தைல மரம் ஆகியவற்றை வேரோடு வெட்டி எடுத்துவிட்டு, அவற்றிற்கு மாற்றாக மா, புளி, வேங்கை, புங்கை, ஆலமரம், அரசமரம் ஆகிய மரக்கன்றுகள் நடப்படும். நாவல் மரம், ஆல மரம், அரச மரம் ஒவ்வொரு அயிரமாத்திரி(கி.மீ)க்கும் நடப்படும். காரணம் இந்த மரங்கள்தான் தொடர்ந்து 24 மணி நேரமும் மூச்சுக்காற்றை (ஆக்சிஜன்) வெளியிடுகிறது.



- ஆறு, குளம், ஏரி கரையோரங்களில் தேக்கு, சவுக்கு, பனை போன்ற மரங்கள் நடப்படும். பத்தே ஆண்டுகளில் பசுமைத் திட்டத்திற்காகச் சிறப்புக் கூறுகள் வகுக்கப்படும். இதற்கென அரசு ஊழியர்கள் பணியமர்த்தப்படுவார்கள். இந்த மண்ணைக் காப்பதும், மீட்டெடுப்பதும் மண்ணின் பிள்ளைகளுக்குக் கடமையாகிறது. அதை நாம் தமிழர் அரசு செய்து முடிக்கும்.

தமிழ்த்தேசிய மரம்

- தமிழ்த்தேசிய மரமான பனை மரம் பல தலைசிறந்த குணங்களைத் தன்னகத்தே கொண்டது.
- பாய், கூடை, கூரைகள் ஆகியவை உருவாக்க பனை ஓலை.
- உணவுப்பொருள்களாக நுங்கு, பதனீர், கருப்பட்டி, பனங்கற்கண்டு, பனம்பழம் மற்றும் பனங்கள் ஆகியவை.
- உலக்கை, மர வேலைப் பொருள்கள் உருவாக்கப் பனைத்தண்டு பல வகைகளில் பயன்படுவதோடு அதைச் சார்ந்த வேலை வாய்ப்புகளுக்கும் பனை மரம் வழிவகுக்கிறது.
- இதனால் பலகோடிப் பனைத்திட்டம் என்ற திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களிலும் குறிப்பாக ஆற்றுப்படுகைகள், வயல் வரப்புகள், கிணறு, குளம் ஆகிய நீர் நிலைப் பகுதிகளில் பனை மரங்கள் நடப்படும்.

பசுஞ்சோலைத் திட்டம்

- சிற்றூர்கள் தோறும் பசுஞ்சோலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். ஏற்கனவே இருக்கின்ற பள்ளி வளாகங்கள், அரசு கட்டடங்கள், தொடக்க நலவாழ்வு நிலையங்கள் அனைத்தும் பசுஞ்சோலையாக மாற்றப்படும். புதியதாக அமைக்கப்படும் மருத்துவப் பண்ணைகள், அரசின் புதிய கட்டடங்கள் அனைத்தும் பசுஞ்சோலைகளுக்கு நடுவே உருவாக்கப்படும். ஒவ்வொரு ஊரகச் சாலைகளிலும் மரங்கள் வளர்க்கப்படும். கட்டமைப்பின் போதே அரசு கட்டடங்களின் மீது புதிதாக சூரிய ஒளி மின் உருவாக்கத்திற்கான வசதிகளோடு கட்டப்படும். அதற்கான ஊழியர்கள் அந்தந்த ஊர்களில் இருந்தே பணியமர்த்தப்படுவார்கள். இதன்மூலம் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும்.




மரம் மாற்று நடவு இயந்திரம்

மருந்துகளைத் தவிர்க்க, மரம் வளர்ப்போம்

- பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு மரம் நடப்பட வேண்டுமென்று பெற்றோர்கள் ஊக்கப்படுத்தப்படுவார்கள்.
- மரங்களும், அதன் தேவைகளும் என்ன என்பதைப் பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். வருகின்ற தலைமுறைப் பிள்ளைகள் ஒவ்வொருவரும் மரங்களை நேசிக்கக்கூடியவர்களாக இருக்க வேண்டும் என்பதே நாம் தமிழர் அரசின் நோக்கம்.

மரங்களை வெட்டக் கட்டுப்பாடு

- மாந்தனை வெட்டிக் கொலை செய்வது எவ்வளவு பெரிய கொலைக் குற்றமாகக் கருதப்படுகிறதோ, அதைப் போல் மரங்களை வெட்டுவதும் பெருங்குற்றமாகக் கருதப்படும். அதனால் "மூன்று மரம் நட்டு, ஒரு மரம் வெட்டு" என்று சட்டம் இயற்றப்படும்.
- மரம் வெட்டுவதற்குத் தேவை இருக்குமேயானால் மூன்று மரம் நட்டதற்கான சான்றுகளையோ அல்லது 3 மரம் நடுவதற்கு ஆகும் பொருட்செலவையோ அருகில் இருக்கின்ற வட்டாட்சியர், அரசு அலுவலரிடம் கொடுத்து அனுமதியைப் பெற்று, ஒரு மரம் வெட்டிக் கொள்ளலாம். தொடர்புடைய அதிகாரி நேரில் ஆய்வு செய்த பிறகே மரங்களை வெட்டிக்கொள்ள அனுமதி கிடைக்கும்.
- மரங்களை வேருடன் பிடுங்கி வேறு இடத்தில் நடுவதற்கான தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும்.
- மரங்களை நட்டு வளர்க்கின்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை அரசு ஊக்கப்படுத்தி, உதவித்தொகையும் வழங்கும்.
- குருதிக்கொடை, உடல் உறுப்புக் கொடை செய்கின்றவர்களுக்குத் 'தமிழ்த்தேசிய நற்குடி' சான்றுகள் கொடுப்பதைப் போல, அதிக மரங்களை நட்டு வளர்ப்பவர்களுக்கு, 'பசுமை நாயகன் / பசுமை நாயகி' பட்டமளித்துப் பாராட்டப்படுவார்கள்.
- மண்ணின் மீது அக்கறைக் கொண்டு, ஏற்கனவே பல்லாயிரக்கணக்கான மரங்களை நட்டு வளர்த்துக் கொண்டு வருகின்ற பெருமக்களுக்கு, நாம் தமிழர் அரசு 'தமிழ்த்தேசிய நற்குடிச் சான்று'ம், 'தமிழ்த்தேசிய நற்குடிமகன் விருது'ம் வழங்கிப் பாராட்டும். மேலும், அவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படும்.

கிழமைக்கு (வாரம்) ஒரு மரம்

- ஆறு முதல் ஒன்பதாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்குக் கிழமை (வாரம்)தோறும் ஒருநாள் நண்பகல் முழுவதும் சுற்றுச்சூழலுக்கு என ஒதுக்கப்படும். ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஆசிரியர் பணியமர்த்தப்படுவார். அவர்களின் வழிகாட்டுதலில், ஒவ்வொரு மாணவரும் கிழமைதோறும் ஒரு மரக்கன்று பள்ளி வளாகத்திற்கு அருகிலும், சாலையோரங்களிலும் நட்டு பேணுவர். சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வு பள்ளிப் பருவத்திலேயே வழங்கப்படுவதால், மாணவர் வாழ்வியலில் அது ஒரு பகுதியாக மாறும். அடுத்த 10 ஆண்டுகளில் தமிழகம் பசுமையாக மாறும்.




INCREASED
DEATHS
HEATWAVE



காலநிலை மாற்றம்



- மாந்தச் செயல்பாடுகளின் காரணமாக கரியமில வாயு வெளியேற்றம் அதிகரித்து, புவியின் வெப்பநிலை அதிகரித்து வருகிறது. இதனால் அதிகளவு வானிலை மாற்றம், துருவ பகுதிகளில் உள்ள பனிப்பாறைகள் உருகுதல் உள்ளிட்ட கேடுகள் ஏற்பட்டு வருகின்றன. அண்மைக்காலங்களில் புவியின் வெப்பநிலை முன்னெப்போதும் இல்லாத வகையில் வேகமாக உயர்ந்து வருவதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். தற்போது நிலவி வரும் சூழ்நிலை தொடர்ந்தால், இந்த நூற்றாண்டின் இறுதிக்குள்ளேயே வெப்பநிலை பன்மடங்கு அதிகரிக்கக்கூடும் என்று உலக வானிலை ஆய்வு மையம் தெரிவிக்கிறது.

- நன்னீர்ப் பற்றாக்குறை, உணவுத் தட்டுப்பாடு, வெள்ளம், புயல்கள் மற்றும் வெப்ப அலைகளின் காரணமாக ஏற்படும் உயிரிழப்புகள் அதிகரிப்பது போன்ற வகைகளில் பருவநிலை மாற்றத்தின் தாக்கங்கள் உள்ளன.

- ஆசிய நாடுகளில் ஏற்பட்ட தீவிர புயல் மற்றும் வெள்ள பாதிப்பு, மத்திய கிழக்கு நாடுகளில் பதிவான அதிகளவு மழைப்பொழிவு, ஆப்பிரிக்காவில் படையெடுத்த வெட்டுக்கிளிகள் உள்ளிட்டவை பருவநிலை மாற்றத்தின் விளைவுகள் தான் என்று ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிடுகிறது. மேலும், மாறிவரும் காலநிலை ஏற்படுத்தும் தாக்கங்கள், தாவரங்கள் மற்றும் விலங்குகளிலும் காணப்படுகின்றன. தாவரங்கள் முன்னதாகவே பூத்து விடுவது மற்றும் பழம் விளையும் பருவம் மற்றும் விலங்குகளின் வாழிடங்களில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவை இதில் அடங்கும்.

- இவ்வாறு, பருவநிலை மாற்றம் காரணமாக உலகளவில் ஏற்பட்டுள்ள அவசர நிலையை உடனடியாகக் கருத்தில் கொண்டு, நாம் தமிழர் அரசு அதன் தாக்கத்தை குறைக்கும் முயற்சிகளில் தீவிர கவனம் செலுத்தும். ஐக்கிய நாடுகளின் பருவநிலை மாற்ற அமைப்பு வலியுறுத்தும் தரநிலைகளைப் பின்பற்றி, பாரிஸ் பருவநிலை ஒப்பந்தம் உள்ளிட்ட உலகளாவிய பருவநிலை இலக்குகளை அடைய தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளும்.



மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற் காடும் உடைய தரண்.

– தமிழ்மறை (742) – வள்ளுவப்பெருமகனார்



“காடு வளம் பெற்றிருந்தால்தான் நாடு வளம் பெற்றிருக்கும். எனவே காடுகளைப் பாதுகாக்கச் சிறப்புத் திட்டங்களும், புதிய சட்டங்களும் கொண்டு வரப்படும்.”

வனம் செய்வோம்

மரம் மண்ணின் வரம், அதை வளர்ப்பதே மனித அறம்

> ஒரு தேசம் தன் குடிமக்களை எப்படிப் பாதுகாத்துப் போற்றி வருகிறதோ, அதைவிடக் கூடுதலாகக் காட்டு வளங்களைப் பாதுகாக்க வேண்டும். காட்டு வளம் சிதைக்கப்படாமல் இருந்தாலே நாட்டின் அனைத்துச் சூழல்களும் செம்மையாக இருக்கும். தமிழகத்தின் மொத்த நிலப்பரப்பில் 20.21 விழுக்காடு வனப் பகுதியாகும். இதை 33 விழுக்காடாக ஆக்க வேண்டும் என முந்தைய அரசுகள் அறிவித்து இருந்தாலும், அதை செயல்படுத்துவதில் காலம் தாழ்த்துகின்றனர். நாம் தமிழர் அரசு அமைந்த ஐந்து ஆண்டுகளுக்குள்ளாக இதை நிகழ்த்திக் காட்டும்.

மலைகளும் ஆறுகளும்

- மேற்குத் தொடர்ச்சி மலை உச்சியில் உள்ளச் சோலைக்காடுகள் நீரைச் சேமித்து வைத்துச் சிறுகச் சிறுக வெளியிடும் தன்மை கொண்டது. சோலைப் பகுதிகளில் இருந்துதான் சிறு சிறு நீரோடைகள் பெருகிச் சிற்றாறுகளாகி வற்றாத ஆறுகளாக ஓடிக்கொண்டிருக்கிறது. எனவே மலைகள் அழிக்கப்பட்டால் தஞ் சாவூர் உழவர்களும் இல்லை, தாமிரபரணி உழவர்களும் இல்லை, பல்லுயிர் பெருக்கமும் இல்லை. மேற்குத் தொடர்ச்சி மலைகள் போல் அதிக உயரமும், அதிக மழைப் பொழிவும், அடர்ந்த மழைக் காடுகளும் இல்லை என்றாலும் தமிழ்நாட்டில் உள்ள சவ்வாவது மலைத்தொடர், ஏலகிரி, கல்வராயன் மலை, சேர்வராயன் மலைகள், கொல்லி மலை, பச்சை மலைத்தொடர், சிறுமலை என வடக்கே ஆந்திர மாநில எல்லையில் தொடங்கி தெற்கே திண்டுக்கல் வரை துண்டு துண்டாக நீண்டு இருக்கும் கிழக்கு மலைகளால் தான் வடக்கு மற்றும் நடுவண் தமிழக பகுதிகள் வளமாக இருக்கின்றன.






















வனப்பாதுகாப்பு

- காடு வளம் பெற்றிருந்தால்தான் நாடு வளம் பெற்றிருக்கும். எனவே காடுகளைப் பாதுகாக்கச் சிறப்புத் திட்டங்களும், புதிய சட்டங்களும், வனக்குற்றவாளிகளுக்குக் கடுமையானத் தண்டனைச் சட்டங்களும் இயற்றப்படும். வனப் பாதுகாப்புப் படையில் மலைவாழ் மக்களின் முக்கியப் பங்களிப்பு இருக்க வேண்டும், அதற்கான செயற்திட்டங்கள் வகுக்கப்படும்.

மாநில அனுமதி

- மாநில அரசின் அனுமதியைப் பெறாமல் எந்த மலையையும் எந்தத் திட்டத்திற்கும் ஒன்றிய அரசு எடுக்கக்கூடாது. இதற்கு எதிராக மற்ற மாநிலங்களோடு சேர்ந்து கூட்டமைப்பாக ஒன்றிய அரசிடம் வலியுறுத்தப்படும். தமிழக வனங்களில் மாநில அரசின் கட்டுப்பாடே முதன்மையானதாக இருக்கவேண்டும்.

வனக்காவல் படை

- இனி ஒருபோதும் மலைவாழ் மக்கள் மலைப்பகுதிகளை விட்டு வெளியேற்றப்பட மாட்டார்கள். ஆதிக்குடியான மலைவாழ் மக்கள் பல்லாயிரம் ஆண்டுகள் வாழ்விடமாக இருந்தது மலைகள்தான். அக்குறிஞ்சி நிலம்தான் அவர்களுக்கு நீர், சோறு மற்றும் வாழ்வாதாரமாகும். எனவே அம்மக்கள் வனங்களுக்கு எதிரானவர்களாக ஒருபோதும் இருக்கமாட்டார்கள். அவர்கள் தான் காடுகளுக்குப் பாதுகாப்பானவர்கள். அந்நியர்களின் சுரண்டலுக்காக, மலை வளத்தை கொள்ளையடிப்பதற்காக அவர்களின் வாழ்விடங்களை விட்டு வெளியேற்றப்படுவதை நாம் தமிழர் அரசு ஒருபோதும் அனுமதிக்காது. உறுதியாக நின்றுத் தடுக்கும். எனவே, மலைவாழ் மக்களைக் கொண்ட வனக்காவல் படை ஒன்று அமைக்கப்படும், வனப் பாதுகாப்புப் பணியில் இவர்களின் பங்களிப்பு முதன்மையானதாக இருக்கும்.

வன்கவர்புகள் அகற்றப்படும், அதிகாரம் மாற்றப்படும்

- காடுகளை முறைகேடாக கையகப்படுத்தி, வன விலங்குகளின் வழித்தடங்களை மறித்துக் கோவை, நீலகிரி உள்ளிட்ட தமிழ்நாட்டு வனப்பகுதிகள் முழுவதும் கட்டப்பட்டுள்ள மதம்சார் உறைவிடங்கள், வழிபாட்டுத் தளங்கள், கல்வி நிறுவனங்கள், சொகுசு விடுதிகள், அரசு மற்றும் தனியாருக்குச் சொந்தமான கட்டடங்கள் உள்ளிட்டவைக் குறித்தும் ஆராய்ந்து அறிக்கை அளிக்க வனத்துறை அமைச்சரின் கீழ் முதலமைச்சரின் நேரடிக் கண்காணிப்பில் பலதரப்பட்ட துறையினர் அடங்கிய கட்டுப்பாடற்ற வினாவுதல் ஆணையம் ஒன்று அமைக்கப்படும். பொதுமக்கள் உள்ளிட்ட யார் வேண்டுமானாலும் வன வன்கவர்பு குறித்து ஆணையத்தில் முறையீடு செய்யலாம். ஆணையம் அமைக்கப்பட்ட 12 மாதத்திற்குள் விரிவான உசாவுதல் மற்றும் பரிந்துரை அறிக்கை அரசிடம் அளிக்கப்படும். ஆணைய அறிக்கையை முதலமைச்சர் தலைமை யிலான அமைச்சரவைப் பகுப்பாய்வு செய்து கையகப்படுத்தப்பட்ட இடங்களை உடனடியாக அகற்றுவது, காலக்கெடு வைத்து அகற்றுவது, விதிமீறல்களுக்கான இழப்பீடுகள் வரையறுப்பது உள்ளிட்ட அனைத்தும் கால அளவுகளோடு கூடிய செயல் திட்டங்களாக உருவாக்கப்பட்டு ஆணையத்தின் அறிக்கை அளிக்கப்பட்ட 24 மாதங்களுக்குள் செய்து முடிக்கப்படும்.







"வனப் பாதுகாப்புத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருவோம். வனக் குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனைச் சட்டங்கள் இயற்றப்படும்."











மலைவாழ் மக்கள்

- நீலகிரி மாவட்டம் ஓவேலி மலைப்பகுதியில் உள்ள குடியிருப்புகளில் எது வனப்பகுதி என்பதை உறுதிப்படுத்தி, அடிப்படைத் தேவைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும். இந்தப் பகுதியில் உள்ள மக்கள் வெளியேற்றப்படமாட்டார்கள். இவர்களுக்கான நிலம் ஒதுக்கப்படும். அப்பகுதியில் வனம் பாதுகாக்கப்பட்டு வன விலங்குகளுக்கான உயிர்வாழ் சூழலை உருவாக்குவதன் மூலம் மனித உயிரிழப்புகள் தடுக்கப்படும்.

- சிங்கம்பட்டி பெரு நிலக்கிழார் வனப்பகுதிக்கு உட்பட்ட மாஞ்சோலை தனியார் தேயிலைத் தோட்டத்தின் உரிமம் நீக்கம் செய்யப்படும். பல தலைமுறைகளாக அங்கு வாழ்ந்து வந்த மலைவாழ் மக்கள் மீண்டும் அதே இடங்களில் குடியமர்த்தப்படுவார்கள். நாம் தமிழர் அரசே தனியார் தேயிலை நிறுவனத்தினை எடுத்து நடத்தும், மேலும் அங்கு வேலை செய்த தொழிலாளர்களுக்கு மீண்டும் அதே இடத்தில் வேலை வாய்ப்பும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

- நலிந்துவரும் தனியார் தேயிலைத் தோட்டங்கள் அரசுத் தோட்டங்களாக மாற்றப்படும். அதன் மூலம் மலைமக்களின் வேலைவாய்ப்புக்கு உறுதி அளிக்கப்படும். அப்பகுதியில் பெரும் முதலாளிகளின் கூட்டுக்கொள்ளை முற்றிலும் ஒழிக்கப்படும். நிலச்சரிவு ஏற்படும் பகுதிகளில் உள்ள தேயிலைத் தோட்டங்கள் அகற்றப்பட்டு அப்பகுதிகள் மீட்டு உருவாக்கம் செய்யப்படுவதோடு, தொடர் நிலச்சரிவால் பாதிக்கப்படும் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்திற்கும் மாற்றுத் திட்டங்கள் வகுக்கப்படும்.

பாதுகாப்பட்ட வனப்பகுதிகள்

- தமிழகத்தில் 17 வனவிலங்கு காப்பகங்களும், 17 பறவைகள் காப்பகங்களும், 5 தேசிய பூங்காக்களும், 5 யானைகள் காப்பகங்களும், 5 புலிகள் காப்பகங்களும், 3 உயிர்க்கோளக் காப்பகங்களும் உள்ளன. இவை அனைத்தும் வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம் 1972ன் படி பாதுகாக்கப்பட்டப் பகுதிகள் ஆகும். வனவிலங்கு மற்றும் காடுகள் பாதுகாப்பிற்காக தேசிய வனவிலங்கு வாரியம் மற்றும் மாநில வனவிலங்கு வாரியம் உள்ளன. இவற்றுள் தேசிய வாரியத்திற்கு மட்டுமே நிலைக்குழு, துணைக்குழுக்கள், ஆய்வுக்குழுக்கள் அமைக்கும் அதிகாரம் உள்ளது. மாநில வாரியத்திற்கும் அது நீட்டிக்கப்படும்.

- சூழலியல் உணர்திறன் மண்டலங்கள் அறிவிக்கப்படாத பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கு வனவிலங்குப் பாதுகாப்புத் திட்ட வரைவு 2002இன்படி சூழலியல் உணர்திறன் மண்டலம் உருவாக்கப்படும். சூழலியல் உணர்திறன் மண்டலங்கள் 10 அயிரமாத்திரை (கி.மீ) வரை முழுமையாக இல்லாத பகுதிகள் ஆராயப்பட்டு விரிவாக்கப்படும்.

- சூழலியல் உணர்திறன் பகுதிகளில் இருக்கும் அனைத்துச் சிவப்பு வகை தொழிற்சாலைகளும் வெளியேற்றப்படும்.

- பாதுகாக்கப்பட்டப் பகுதிகளாக இல்லாத சூழலியல் முதன்மைத்தன்மை வாய்ந்த பகுதிகள், நிலைக்குழுவின் மூலம் கண்டறியப்பட்டு சிறப்பு மண்டலங்களாக மாநில அரசால் அறிவிக்கப்படும். நாம் தமிழரின் கோரிக்கைப்படி சுற்றுச்சூழலுக்கான அதிகாரங்கள் மாநில அரசிடமே முழுவதும் இருக்கும்.

- எண்ணூர் கழிமுகம், பக்கிங்காம் கால்வாய் மற்றும் பழவேற்காடு நீர் அமைப்பு ஆகியவை பெரிய சதுப்பு நிலங்களைக் கொண்ட சூழலியல் முதன்மைத்தன்மை







அடர்ந்த காடுகள்



அடர்த்தி குறைந்த காடுகள்



திறந்தவெளிக் காடுகள்



வன எல்லை விரிவாக்கம்



நடு வனம் நடுவோம்



புதிய காடுகள் உருவாக்கம்

வாய்ந்த பகுதியாகும். இங்குதான் மூன்று அனல் மின் நிலையங்களும், 3 எரிபொருள் தூய்மையாக்கும் நிலையங்களும், ஓர் உரத்தொழிற்சாலையும், இரண்டு துறைமுகங்களும், தோல் பதனிடும் அலகுகளும், வேதியல் மற்றும் நெகிழி உருவாக்க அலகுகளும் உள்ளன.

- எனவே வட சென்னையின் சூழலியல் முதன்மைத்தன்மை வாய்ந்த பகுதிகள் பல்லுயிர் பெருக்க மண்டலமாக மாற்றி அமைத்திட நிலைக்குழு மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். திருவொற்றியூர் மாதவரம் பொன்னேரி ஆகிய வருவாய் கோட்டங்கள் இவற்றிள் வரும்.

- தமிழகத்தில் உள்ள சூழலியல் முதன்மைத்தன்மை வாய்ந்த பகுதிகள் கண்டறியப்பட்டு அவற்றிற்கான அறிக்கைகள் அளிக்கப்படும். அதன் அடிப்படையில் சிறப்பு மண்டலங்கள் உருவாக்கப்படும். இவற்றில் இயங்கும் தொழிற்சாலைகள் தொடர்ந்து செயல்பட அனுமதிக்கப்படும் அளவிற்கு அதிகமான மாசுகளை வெளியிட்டால் உடனடியாகவோ அல்லது குறிப்பிட்ட காலவரையறைக்குள்ளோ மாசினைக் கட்டுப்படுத்தவும், அதற்கு வாய்ப்பற்ற தொழிற்சாலைகள் வெளியேற்றவும்படும்.

- தொழிற்சாலையை நீக்குவதால் ஏற்படும் வேலை இழப்பிற்கு ஈடுசெய்யும் விதமாக அவர்களுக்கு அரசு நடத்தும் நிலம் வளம் சார்ந்த தொழிற்சாலைகளில் வேலைகள் வழங்கப்படும். தொழிற்சாலைகளால் இடம் பெயர்க்கப்பட்ட மக்கள் மீண்டும் அப்பகுதியில் குடியமர வாய்ப்பு வழங்கப்படும். அவர்கள் மேற்கொண்டிருந்த தொழில்களை தொடர்வதற்கும் வாய்ப்பு வழங்கப்படும்.

- நீலகிரியின் சிகூர் பகுதி யானைகள் அதிக அளவில் நடமாடும் வாழ்விடப் பகுதியாகும். இந்த பகுதியில் மக்கள் குடியேற்றம் அதிக அளவில் உள்ளது. இப்பகுதி யானைகள் பாதுகாப்பு வளையமாக அறிவிக்கப்பட்டு, அங்கு உள்ள விடுதிகள் மற்றும் குடியேற்றங்களை நிலைக்குழுவின் அறிவுரைப்படி அப்புறப்படுத்தப்படும்.

- வன விலங்குகளின் வழித்தடங்களை கையகப்படுத்திக் கட்டப்பட்டுள்ள மத வழிபாட்டுத் தலங்கள், துறவகங்கள், கல்வி நிலையங்கள், தனியார் விடுதிகள் அனைத்தும் உறுதியாக அகற்றப்படும். வன அழிப்புத் திட்டங்கள் அனுமதிக்கப்படாது.

வன எல்லை விரிவாக்கம்

- அடர்ந்த நடுக் காட்டுப்பகுதிகள் வன விலங்குகளின் வாழ்விடமாகவும், காடுகளின் ஓரங்கள் ஒன்றிணையும் பகுதிகளாகும் (Fransition Zone) திகழ்கின்றன. அரசு சார்பாக நடப்படும் மரங்கள் வனங்களின் ஓரங்களில் நடப்பட்டு வனத்தின் எல்லையை விரிவாக்கினால், விலங்குகளின் வாழ்விடங்களின் எல்லை தானாகவே அதிகரிக்கும். இதனைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு வனத்திலும் எவ்வகை மரங்கள் இயற்கையாகவே அமைந்துள்ளனவோ அம்மரங்களைப் பயன்படுத்தி வன எல்லை விரிவாக்கம் செய்யப்படும். குறிப்பாக வனங்களில் பெருகி வரும் கலப்பின நிலைத் திணைகளைக் (தாவரங்களை) கண்டறிந்து அவற்றை முறையாக அகற்றி, அவ்விடங்களில் நிலைத் திணை வாழ் உயிரினங்கள் விரும்பி உண்ணும் நிலைத் திணைகளைக் (தாவரங்கள்) பரவலாக வளர்க்கப்படும்.

- வனவிலங்குகள் நடமாட்டம் அதிகம் இருக்கும் வன எல்லைப்பகுதிகளில் கண்காணிப்புக் கருவிகள் பொருத்தப்பட்டு அவை கட்டுப்பாட்டு அறைகளுடன்











காடுகள் இணைப்பு



கோயில் காடுகள்

இணைக்கப்பட்டு வனத்துறை அதிகாரிகள் கண்காணிப்பில் இருக்கும். இதன் மூலம் வனவிலங்குகள் ஊருக்குள் வருவதையும், மக்கள் வனத்திற்குள் நுழைவதையும் உடனுக்குடன் கண்காணித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

நடுவனம்

- தமிழ்நாட்டின் மொத்த வனப் பரப்பு 26,420 சதுர கிலோமீட்டர்கள் ஆகும். இது மாநிலத்தின் மொத்த புவியியல் பரப்பளவில் 20.31% ஆகும். அதில் 4233 சதுர அயிரமாத்திரி (கிலோமீட்டர்) பரப்பளவு மட்டுமே மிக அடர்ந்த காடாக உள்ளது. மீதமுள்ள 10,870 சதுர அயிரமாத்திரி பரப்பளவு மிதமான அடர்ந்த காடாகவும், 11,316 சதுர அயிரமாத்திரி பரப்பளவு திறந்தவெளிக் காடாகவும் உள்ளன. அடர்ந்த காடுகளின் பரப்பளவை அதிகப்படுத்த, பரவலாக மற்றும் திறந்தவெளி காடுகளின் நடுவே மரக்கன்றுகள் நட்டு, வனத்தின் அடர்த்தி அதிகரிக்கப்பட்டு பல்லுயிர் பெருக்கக் காடாக மாற்றப்படும்.
- வனவிலங்குகள் நடமாட்டம் உள்ள பகுதிகளிலெல்லாம் குடிநீருக்கான நீர் நிலைகள் ஏற்படுத்தப்படும். உள் காடுகளில் உள்ள சமவெளிப்பகுதிகளில் குடிநீர்க் குட்டைகள் ஏற்படுத்தப்படும். இதனால் குடிநீர்த் தேவைக்காக வனவிலங்குகள் காட்டைவிட்டு வெளியே வருவது தடுக்கப்படும்.

காடுகள் இணைப்பு

- ஒரு பல்லுயிர் பெருக்கக்காட்டை மற்றொரு பல்லுயிர் பெருக்கக்காட்டுடன் இணைக்கும்பொழுது பெரும் பரப்பளவு கொண்ட ஒற்றைக்காடாக அது செயல்படத் தொடங்கி விலங்குகள் வாழ்விடங்களின் பரப்பளவை பெருமளவு அதிகரிக்கின்றது. உலக நாடுகள் இவற்றை உயிரியல் தாழ்வாரங்கள் (Biological Corridor) என அழைக்கின்றன. இம்முறையில் பூட்டான் அரசு காடுகளை இணைத்துப் பெரும் பரப்பளவு கொண்ட அடர்ந்த காட்டினை விரிவுபடுத்தி வென்று காட்டியுள்ளது.

கோயில் காடுகள்

- கோயில் காடுகள் குறைந்த அளவு 50 முதல் 500 குறுக்கம் வரை விரிந்து பரவிக் காணப்படுகின்றன. தமிழகத்தின் பல்வேறு கிராமப்புறங்களில் இன்றும் சிறந்த மேய்ச்சல் நிலங்களாகத் திகழ்கின்றன. வழிபாட்டு இடமாக மட்டுமில்லாமல், இயற்கைப் புகலிடமாக இருந்த ஊர்புறக் கோயில் காடுகள், அரிய வகைத் நிலத்திணைகள் (தாவரங்கள்), மருத்துவ நிலத்திணைகளின் இருப்பிடமாகத் திகழ்ந்து வந்தன. ஆனால், சுற்றுச்சூழல் சீரழிவு மோசமடைந்துவரும் இன்றைய சூழ்நிலையில் கோயில் காடுகளின் எதிர்காலம் வினாக்குறியாக இருக்கின்றது.
- எனவே, கோயில் காடுகளை வளர்ப்பதிலும், விரிவாக்குவத்திலும் அரசு அக்கறைகொள்ளும். இவ்வகை கோயில் காடுகள், விலங்குகள் மற்றும் பறவை இனங்களுக்கு உணவு, உறைவிடமாக இருக்கின்றது. விதைப் பரவலுக்கு அதிகமாக உதவுவதோடு அப்பகுதியில் மண் அரிப்பையும் தடுக்கும். நிலத்தடி நீர் மட்டம் உயரும், காற்று மாசுபடுதலைத் தடுக்கும். ஒலி மாசையும் குறைக்கும்.
- எனவே, நாம் தமிழர் அரசு வனத்துறையின் கீழ் இதற்கென தனிப்பிரிவை ஏற்படுத்தி கோயில் காடுகளை மீட்டுருவாக்கத்திற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கும்.













விலங்குகள் – பறவைகள் நலன்

- இயற்கைச் சங்கிலியில் மாந்தன் ஒரு பகுதி மட்டுமே என்ற உண்மையை நாம் ஏற்க வேண்டும். உயிர்த்தோற்றத்தின் படிநிலையில் இறுதியாக வந்த மாந்த இனம், தனது தன்னலத்திற்காக இயற்கையின் ஒவ்வோர் அசைவையும் தனது விருப்பத்திற்கேற்ப மாற்றியமைத்தது பேரழிவிற்கே வழிவகுத்துள்ளது. இயற்கையின் விதிகளை மீறிச் செயல்பட மாந்தனுக்கு எந்த உரிமையும் இல்லை. எனவே, சிதைக்கப்பட்ட இயற்கையின் ஒழுங்கை மீண்டும் நிலைநிறுத்துவதும், மாந்த மையக் கோட்பாட்டிலிருந்து விலகி உயிர்மையக் கோட்பாட்டை (Biocentrism) நோக்கி நகர்வதும் இன்றியமையாதது ஆகும். மாந்தர்கள் தங்கள் தான்மையின் வெளிப்பாடாக ஏற்படுத்தியுள்ள சூழலியல், விலங்குகள் நலச் சீரழிவுகளும் சீர்செய்யப்பட வேண்டும்.

யானைகளின் வாழ்வுரிமை

- யானைகள் என்பவை வனத்தின் ஆதார உயிரினம், ஒரு முழுமையான வனவிலங்கு. அவை ஒருபோதும் மாந்தர்களால் பழக்கப்படுத்தப்பட வேண்டிய (Domestic Animals) உயிரினம் அல்ல. ஆன்மீகம் அல்லது பண்பாடு என்ற பெயரில் யானைகளைக் கோவில்களிலும், விழாக்களிலும் கட்டிப்போட்டு வைப்பது அவற்றின் இயற்கையான வாழ்வியல் பண்பைச் சிதைப்பதாகும். மேலும், யானைகளின் மரபுத் தொடர்ச்சியையே அற்றுப்போகச் செய்யும் செயல். எனவே, யானைகளைச் சங்கிலிகளால் பிணைக்கும் முறையை முற்றிலும் ஒழித்து, தற்போது பிடியில் இருக்கும் யானைகளை முறையான மருத்துவ ஆய்வுக்குப் பிறகு அவற்றின் இயற்கையான காடுகளுக்கு அல்லது பாதுகாக்கப்பட்ட வனக் காப்பகங்களுக்கு அனுப்பும் திட்டத்தைச் செயல்படுத்துவோம்.

சிறகுகள்

- பறவைகளின் வாழ்வு என்பது எல்லையற்ற வானத்தில் சிறகடிப்பதில்தான் அடங்கியுள்ளது. பாதுகாப்பு என்ற போர்வையிலோ அல்லது செல்ல வளர்ப்புகள் என்ற பெயரிலோ பறவைகளைக் கூண்டுகளில் அடைத்து வைப்பது அவற்றின் அடிப்படை உரிமையைப் பறித்து வாழ்வியல் நோக்கத்தையே சிதைக்கும் செயலாகும். பறவைகளைச் சிறைப்படுத்தி விற்பனை செய்வது குற்றமாக அறிவிக்கப்படுவதோடு, மக்கள் தங்கள் வீடுகளிலும், தோட்டங்களிலும் பறவைகள் வந்து தங்கும் வகையில் பல்லுயிர்ச் சூழலை உருவாக்குவது ஊக்குவிக்கப்படும். கூண்டுகளுக்கு மாற்றாகக் கிளைகளே பறவைகளின் வீடாக அமைய வேண்டும் என்பதே எமது இலக்கு.

மரபணு மற்றும் பழக்கப்படுத்துதல்

- பல நூற்றாண்டுகளாக மாந்தர்களுடன் இணைந்து வாழ்ந்து, தனது காட்டு இயல்புகளை இழந்த ஒரே உயிரினம் நாய்கள் மட்டுமே. இதன் விளைவாக, அவற்றின் இயற்கையான பிழைப்புத் திறன் சிதைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, நாய்களின் மூளையில் சமூகத்தொடர்பு மற்றும் அச்ச உணர்வைக் கட்டுப்படுத்தும் மரபணுக்களில் ஏற்பட்ட மாற்றங்கள், அவை மாந்தர்களிடம் அதிகளவு அன்பு செலுத்தவும், எதற்கும் மாந்தனைச் சார்ந்து இருக்கவும் வழிவகுத்தன. அந்த நிலையை மற்ற வனவிலங்குகளுக்குப் புகுத்த முயற்சிப்பது உயிரியல் வன்முறையாகும். மற்ற விலங்குகளைத் தன்னலத்திற்காக மரபணு மாற்றம்









செய்வதையோ அல்லது செயற்கையாகப் பழக்கப்படுத்துவதையோ நாம் தமிழர் கட்சி வன்மையாக எதிர்க்கிறது. ஒவ்வோர் உயிரினமும் அதன் தனித்தன்மையான வேட்கையுடனும், இயல்புடனும் வாழ்வதை உறுதி செய்யும் சட்ட வகையிலான பாதுகாப்பை நாங்கள் வழங்குவோம்.

தெருக்களில் வாழக்கூடிய நாய்கள்

- தெருக்களில் வாழக்கூடிய நாட்டு நாய்களை முழுவதுமாக அப்புறப்படுத்தும் நோக்கில் செய்யப்படும் அண்மைக்கால நடவடிக்கைகள் என்பது, சிக்கலின் மூல காரணங்களைக் கண்டறியாமல் ஒரு தற்காலிகத் தீர்வை மட்டுமே முன்வைக்கின்றது. பெருநகரங்களில் நிலவும் முறையற்ற திடக்கழிவு மேலாண்மையே தெருநாய்கள் பெருகுவதற்கு முதன்மைக் காரணமாகும். இச்சிக்கலின் அடிவேரில் மாந்தனுடைய கட்டற்ற செயல்பாடுகள் இருக்கும் நிலையில், அதே மாந்த இனத்தால் பழக்கப்படுத்தப்பட்டு காட்டு விலங்கிற்கான தன்மையை இழந்த நாய்களை தண்டிப்பது அடிப்படை அறமற்ற செயலாகும்.

- இதற்கான நிலையான தீர்வாக, நாய்களைத் தங்குமிடங்களில் அடைத்து வைக்கும் முறையை விடுத்து, "விலங்குகள் பிறப்புக் கட்டுப்பாட்டு விதிகளின்" (ABC Rules)படி அறிவியல் வகையிலான கருத்தடை மற்றும் தடுப்பூசித் திட்டங்களை அந்தந்தப் பகுதிகளிலேயே உறுதி செய்ய நாம் தமிழர் கட்சி நடவடிக்கை எடுக்கும். நகராட்சிகள் மூலம் உணவுக் கழிவுகள் முறையாக மேலாண்மை செய்யப்படுவதை உறுதி செய்வதோடு, பொதுமக்களிடையே நாட்டு நாய்களைத் தத்தெடுத்து வளர்க்கும் விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படும். வெளிநாட்டு நாய்களின் வணிக முறையிலான விற்பனையைத் தடை செய்து, காலநிலை மாற்றத்தின் தாக்கத்தைக் கருத்தில் கொண்ட பசுமைத் திட்டங்களை வகுப்பதன் மூலமே, மாந்தர்களுக்கும் விலங்குகளுக்குமான மோதலைத் தடுத்து ஓர் அறம் சார்ந்த சமநிலையை எட்ட முடியும்.

வட்டரங்கம் (Circus) போன்ற கேளிக்கை வதைகளுக்கு முற்றுப்புள்ளி

- விலங்குகளைக் காட்சிப்படுத்தி, அவற்றைத் துன்புறுத்திப் பெறப்படும் பொழுதுபோக்கு என்பது நாகரிக சமூகத்திற்கு அழகல்ல. வட்டரங்கங்களில் விலங்குகளைக் கூண்டில் அடைத்து, வித்தைகள் காட்டக் கட்டாயப்படுத்துவது அவற்றின் கண்ணியத்தைச் சிதைக்கும் செயலாகும். இத்தகைய கேளிக்கைகளுக்குத் தடை விதிப்பதோடு, அங்கிருக்கும் விலங்குகளை மீட்டு அவற்றிற்குத் தகுந்த வாழ்விடங்கள் அமைத்துக் கொடுக்கப்படும். மாந்தனின் கேளிக்கைக்காக மற்ற உயிர்கள் கண்ணீர் விடுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

உயிரியல் பூங்காக்களுக்கு மாற்றாக வனப் பாதுகாப்பு

- உயிரியல் பூங்காக்கள் (Zoos) என்பவை விலங்குகளுக்கான திறந்தவெளிச் சிறைச்சாலைகளே அன்றி வேறல்ல. இதன்மூலம் விலங்குகள் தங்கள் அடிப்படை உள்ளுணர்வான வேட்டையாடுதல், வாழ்வெல்லை வரையறுத்தல் ஆகிய மரபு நினைவுகளை மறந்து விடுகின்றன. விலங்குகளின் விடுதலை மாந்தர்களுக்கு நிகராக மதிக்கப்பட வேண்டியவை. எனவே, உயிரியல் பூங்காக்களில் விலங்குகளை அடைத்து வைக்கும் முறையை மாற்றி, அவற்றைத் தங்களின் இயற்கைச் சூழலிலேயே பாதுகாப்பதற்கான "திறந்தவெளிப் பாதுகாப்பு" மண்டலங்கள் உருவாக்கப்படும். மக்கள் விலங்குகளைப் பார்வையிடக் காடுகளுக்குச் செல்லும் முறையை நெறிப்படுத்தி, விலங்குகளின் அமைதிக்குக் கேடு விளைவிக்காத இயற்கைச் சுற்றுலா (Eco-tourism) முன்னெடுக்கப்படும்.



“இந்த அதிகார பீடங்கள் நம் மண்ணையும் வளத்தையும்
நம் கண்முன்னே விழுங்குவதைப் பார்த்தபடி
இருக்கச் சபிக்கப்பட்டிருக்கிறோம் நாம்”
– ஜான் பெர்கின்ஸ்



மணல் கொள்ளை


இரும்புத் தாதுக் கொள்ளை


தாதுமணல் கொள்ளை


கருங்கல் (Granite) கொள்ளை


நிலக்கரிக் கொள்ளை


கருங்கல் கொள்ளை

கனிமவளப் பாதுகாப்பு

> பொழுதெல்லாம்
> எங்கள் செல்வம்
> கொள்ளை கொண்டு
> போகவோ? நாங்கள் சாகவோ?
> அழுது கொண்டிருப்போமோ
> ஆண்பிள்ளைகள்
> அல்லமோ?
> உயிர் வெல்லமோ.
>
> – பெரும்பாவலர் பாட்டன் பாரதி

சென்னை மாகாணமாக ஒன்றுபட்டிருந்த தமிழகம், 1956இல் கர்நாடகம், ஆந்திரம், கேரளம் என மொழிவாரி மாநிலமாகப் பிரித்தபோது தமிழகத்தின் நீர்வள ஆதாரங்கள் பெருமளவு அண்டை மாநிலங்களுக்குப் பறிபோனது. மீதம் இருந்த கனிமவளத்தைத் தனியார் நிறுவனங்கள் கொள்ளையடித்துச் சென்றன. வளமான நிலங்களைப் பல இடங்களில் நாசகார நச்சுத் தொழிற்சாலைகளை அனுமதித்துச் சீரழித்துவிட்டார்கள். பொன் விளையும் நிலமாக இருந்த தமிழகத்தை நஞ்சு விளையும் நிலமாக மாற்றியதுதான் 56 ஆண்டுகாலத் திராவிட ஆட்சிகளின் கேடு விளைவித்த கொடுஞ்செயலாக உள்ளது.

மக்களுக்குச் சொந்தம்

- இந்த மண்ணின் கனிம வளங்கள் எல்லாமும் மக்களுக்கே சொந்தம். பணத்திற்காகவும், பெரும் கையூட்டிற்காகவும் அவற்றைத் தனியார்களுக்குத் தூக்கிக் கொடுத்தது திராவிட கட்சிகளின் ஆட்சி. அரசிடம் இருக்க வேண்டிய கனிமவளத் தொழிலை தனியாருக்குக் கொடுத்துவிட்டார்கள். அரசுக்கு வரவேண்டிய பல ஆயிரம் கோடிகள் தனிப்பெரும் முதலாளிகளுக்குச் சென்றது. இந்த நிலையை நாம் தமிழர் அரசு மாற்றும். மண்ணின் வளங்கள் அனைத்தும் மக்களுக்கே சொந்தம் என்ற முழக்கத்தை முன்னெடுக்கும்.

நிலக்கரிக் கொள்ளை

- 200 கோடி கல்லெடை (டன்கள்) அளவுக்குப் பழுப்பு நிலக்கரி, நெய்வேலி பகுதியில் புதைந்திருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்தியாவின் மொத்தப் பழுப்பு நிலக்கரி இருப்பில், தமிழ்நாடு ஏறத்தாழ 79.3% பங்கைக் கொண்டுள்ளது.



“மண்ணின் வளங்கள்
எம் மக்களுக்கானது.
அது தனிப்பெரும்
முதலாளிகளுக்கானதல்ல.”















34,000 கோடிக்குச் சந்தை மதிப்பைக் கொண்ட நெய்வேலி நிலக்கரி நிறுவனம் பல்லாயிரம் கோடி மதிப்பிலான பழுப்பு நிலக்கரியை ஆண்டு தோறும் வெட்டியெடுத்துக் கொண்டே இருக்கின்றது. அதனால் அந்தப் பகுதியின் நீர்வளம், நிலவளம் எல்லாமும் சீரழிந்து போனது. மின் உருவாக்கத்திற்காக வெட்டி எடுக்கப்படும் நிலக்கரிப் பயன்பாடு தமிழகத்திற்கு மட்டுமின்றி கர்நாடகா, கேரளம், ஆந்திரா, தெலுங்கானா மாநிலங்களுக்கும் போகிறது. ஆனால் நிலக்கரி வெட்டியெடுப்பதால் நமக்கு மட்டுமே தீங்கு விளைகின்றது. மேலும் காலநிலை மாற்றம் உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் சூழலில், காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை அதிகரிக்கும் புதுப்பிக்க முடியாத ஆற்றலாகக் கருதப்படும் புதைபடிவ எரிபொருள்களான (Fossil Fuels) நிலக்கரி, இயற்கை எரிகாற்று எடுப்பது போன்றவை முற்றாகத் தடை செய்யப்பட்டு மண்ணின் வளத்தை நாம் தமிழர் அரசு முழுமையாகப் பாதுகாக்கும்.

இரும்புத் தாதுக் கொள்ளை

- திருவண்ணாமலை பகுதியில் பல்லாயிரம் கோடிகள் மதிப்புள்ள இரும்புத் தாதுக்கள் கொண்ட கவுந்தி - வேடியப்பன் எனும் மலைகளை ஜிண்டால் நிறுவனம் குறிவைத்தது. அங்குள்ள மக்களிடம் கருத்துக் கேட்காமல், அதை தாரைவார்த்துக் கொடுத்தது ஒன்றிய அரசு. அதற்கு மாநில அரசும் உடந்தையாக நின்றது. மலைகளை உடைத்துக் குடைந்து தாதுக்களை வெட்டி எடுத்துக் கொள்ளை அடித்தால், அப்பகுதி நிலவளம் முற்றாகச் சீர்குலைந்துவிடும். நீர்வளம் இல்லாமல் போய்விடும். அத்திட்டத்தை எதிர்த்து மக்கள் போராட்டம் வெடித்தது. நாம் தமிழர் கட்சியும் அந்தப் போராட்டத்தை முன்னெடுத்தது. மக்கள் எதிர்ப்பைப் பதிவு செய்த ஆட்சியர் முறையான தரவுகளை அரசுக்கு அளித்ததன் விளைவாக அப்போதிருந்த அரசு அத்திட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்துவதாக அறிவித்தது. ஆனால் நாம் தமிழர் ஆட்சி அமையும்போது அந்தத் திட்டம் ஒருபோதும் வராமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தாது மணல் கொள்ளை

- தூத்துக்குடிப் பகுதிகளில் நிறைந்துள்ள தோரியம் செறிந்த மணற்காடுகளைத் தனியாருக்குத் தாரைவார்த்துக் கொடுத்திருக்கிறார்கள். மோனோசைட் (Monazite) தாதுவில் இருந்து பிரித்தெடுக்கப்படும் இந்த தோரியம் தான் அணு உலைகளில் முதன்மை எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. மேலும் தென்மாவட்டக் கடற்கரைப் பகுதிகளில் கார்னெட், இல்மனைட், ரூட்டைல், சிர்கன், மோனசைட், சில்லமனைட் போன்ற அரியவகைக் கனிமங்கள் உள்ள மணலையும் தனியாருக்குக் தாரைவார்த்துக் கொடுத்துவிட்டார்கள். வெறும் கையூட்டுக்காக மட்டுமே திராவிடக் கட்சிகளின் ஆட்சி நம் வளங்கள் சூறையாடப்படுவதை வேடிக்கை பார்த்தபடி இருக்கின்றது.

கருங்கல் கொள்ளை

- மதுரை மாவட்டப் பகுதிகளில் கருங்கல் (Granite) வெட்டி எடுப்பதில் மலைகளை எல்லாம் சூறையாடியது ஒரு தனியார் நிறுவனம். இருந்தத் தொன்மச் சின்னங்கள் எல்லாம் உடைக்கப்பட்டன. பெரும் பெரும் கற்களாக ஏற்றுமதியானது. கருங்கல் பலகைகளாக மாற்றப்பட்டன.



- முன்னாள் மாவட்ட ஆட்சியர் திரு. உ.சகாயம் இ.ஆ.ப. தலைமையிலான வினாவுதல் (விசாரணை) குழுவினர், கருங்கற் சுரங்கங்களில் நடந்த முறைகேடுகளில் ஏறத்தாழ ஓர் இலக்கம் கோடி வரை அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என தொடக்கக் கட்ட ஆய்வறிக்கையில் குறிப்பிட்டனர். இதில் ஆளுங்கட்சி உடந்தை, எதிர்க்கட்சிக்கும் பங்கு என்று சர்ச்சையானது.

- அந்த வழக்கின் பேரில் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையால் வினாவுதல் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் ஆய்வில் ஒரு மாவட்டத்தில் மட்டும் ஏறத்தாழ 50,000 கோடி ஊழல் முறைகேடு நடந்திருப்பது தெரியவந்தது. மற்ற மாவட்டங்களில் நடந்தேறிய கொள்ளைகள் கணக்கில் இல்லை. பல இலக்கம் கோடிகள் அரசின் கருவூலத்திற்கு வந்து சேர்ந்திருக்க வேண்டிய பணம் அத்தனையும் தனியார்களுக்குப் போனது. தடுக்க வேண்டிய திராவிடக் கட்சிகளின் ஆட்சி, கொள்ளையர்களுக்குக் கூட்டுப் பங்காளியாகி நின்றது.

சுண்ணாம்புத் தாதுக் கொள்ளை

- பைஞ்சுதை (Cement) தொழிலுக்கான சுண்ணாம்புத் தாதுப் பொருட்கள் அரியலூர் மாவட்ட நிலத்தடிப் பகுதியில் ஏராளமாக உள்ளது. இம்மாவட்டத்தில் மட்டும் ஏறத்தாழ 60 கோடி கல்லெடை (டன்) அளவிலான சுண்ணாம்புப் படிமம் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அரியலூர் மாவட்டத்தில் பத்துக்கும் மேற்பட்ட பைஞ்சுதை (Cement)ஆலைகள் மற்றும் 166க்கும் மேற்பட்ட சுண்ணாம்புச் சுரங்கங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் உள்ள தொல்லுயிர் எச்சங்களைக் கொண்ட சுண்ணாம்புக்கல் (Fossiliferous Limestone) இருப்பில், அரியலூர் மாவட்டத்தின் பங்கு மட்டும் ஏறக்குறைய 90% ஆகும். இதை மிகக் குறைந்த தொகைக்குத் தனியாரிடம் கொடுத்தார்கள். குத்தகையில்லாத இடங்களிலும் சுரங்கம் தோண்டி எடுத்துக் கொள்ளையடிக்கிறது தனியார் நிறுவனம். இதனால் பல்லாயிரம் கோடிகள் கொள்ளை போகிறது. கேட்க வேண்டிய அரசுகள் வேடிக்கை பார்க்கிறது. இதில் மட்டுமே பல்லாயிரம் கோடி அரசுக்கு இழப்பு ஏற்படுகின்றது.

மேற்குத் தொடர்ச்சி மலை



மேற்குத் தொடர்ச்சி மலை

- இந்தியாவின் மேற்குக் கடற்கரை பகுதியில் ஏறக்குறைய 1,600 அயிரமாத்திரி (கி.மீ.) நீளமுள்ள மேற்குத் தொடர்ச்சி மலைகளில் ஏராளமான கனிம வளங்கள் குவிந்து கிடக்கின்றன. இதில் பெருமளவு ஏற்கனவே சுரண்டப்பட்டுவிட்ட நிலையில், எஞ்சியுள்ள பெருமழை நீரையும் உள்வாங்கிக்கொள்ளும் சோலைக் காடுகள், புல்வெளிக் காடுகள், வற்றாத சிற்றோடைகளையும், ஆறுகளையும் தந்து கொண்டிருக்கும் மழைக்காடுகள் என மொத்த வளத்தையும் கைப்பற்றி தனியாருக்குக் கொடுக்கத் திட்டம் போட்டு வருகிறது ஒன்றிய அரசு. அதற்கு இந்த திராவிடக் கட்சிகளின் ஆட்சியும் துணைபோனபடி இருக்கின்றது.

ஆற்று மணற்கொள்ளை

- காவிரி, தாமிரபரணி, பாலாறு, வைகை, வெள்ளாறு, மணிமுத்தாறு, தென்பெண்ணை ஆறு உள்ளிட்ட தமிழகத்தின் முதன்மை ஆறுகள் அனைத்தும் மணற்கொள்ளையர்களால் பாழ்பட்டுப் போயிருக்கின்றன. முப்பருவ விளைச்சலைக் கொடுத்த ஆறுகள் இன்று நிலத்தடி நீரை இழந்து மரணித்துக் கொண்டிருக்கின்றன.

- தமிழ்நாட்டில் ஒரு நாளைக்கு சற்றேறக்குறைய 5,500 முதல் 6,000 சுமையூர்திகள் (Truckloads) அளவிற்கு மணல் வெட்டியெடுக்கப்படுவதாகப் பொதுப்பணித் துறை மதிப்பிடுகிறது. ஆனால் தினமும் சற்றேறக்குறைய 55,000 முதல் 90,000 சுமையூர்திகள் வரை ஆற்று மணற்கொள்ளை நடக்கின்றது. இதனால் தாமிரபரணி மற்றும் பாலாறு போன்ற முதன்மை ஆறுகளின் படுகைகள் கடந்த சில பத்தாண்டுகளில் மட்டும் 50 அடி வரை ஆழம் குறைந்துள்ளன. அதிகப்படியான ஆற்று மணற்கொள்ளையால் தென் தமிழ்நாட்டில் சற்றேறக்குறைய 18 இலக்கம் கிணறுகள் வறண்டு போனதாக 2014ஆம் ஆண்டில் ஒன்றிய அமைச்சரே தெரிவித்திருந்தார். சட்டத்திற்குப் புறம்பாக நடக்கும் மணல் கடத்தலால் மட்டுமே ஆண்டிற்குச் சற்றொப்ப 19,800 கோடி உருபாய் வருவாய் இழப்பு ஏற்படுகின்றது.

நாம் தமிழர் அரசின் தீர்வுகள்

- கனிம வளங்கள் தனிப்பெரும் முதலாளிகளுக்கானது அல்ல. அவை மக்களுக்கானது, அடுத்த தலைமுறைக்கானது. எனவே தனியார்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் ஒப்பந்தங்கள் அனைத்தையும் நாம் தமிழர் ஆட்சி நீக்கம் செய்யும். கனிமவளக் கொள்ளைக்கு எதிராகக் கடும் தண்டனைகளுடன் கூடிய புதிய சட்டங்கள் இயற்றப்படும்.

எம் மண்ணின் வளங்கள் மக்களுக்கானது.
அது உள்நாட்டு வெளிநாட்டுப் பெரும் முதலாளிகளுக்கானது அல்ல.

- ‘‘நாளெல்லாம் எங்கள் செல்வம் கொள்ளை கொண்டு போகவோ நாங்கள் சாகவோ’’ என்று நம் பெரும்பாவலர் பாரதி அன்று வெள்ளையர்களுக்கு எதிராகப் பாடிய பாடல் இன்று உள்நாட்டுக் கொள்ளையர்களான தனியார்களுக்கு எதிராக நீடிக்கின்றது. அதனால் மக்களின் தேவைக்கேற்ற கனிமங்களை அரசே எடுத்துக் கொள்ளும்படியான கட்டமைப்புகள் வலுப்படுத்தப்படும்.




PROCESSING
RAW
SORTING
FACTORY
PRESSING
CRANE
TRUCK
GARBAGE
CONTAINERS
CLEANING BEACH
SCAVENGER
LOADING
TRASH
VOLUNTEERS

கழிவு மேலாண்மை

> பழந்தமிழர்கள் கழிவு மேலாண்மையில் சிறந்து விளங்கினர். எந்தக் குப்பையையும் வீணாக்காமல் நூறு விழுக்காடு மறுசுழற்சி முறையில் பயன்படுத்தினர். அம்முறையை நாம் தமிழர் அரசு மீட்டெடுக்கும்.

ஜப்பான்

- ஜப்பானிய குடிமக்கள் தங்கள் வீட்டுப் பயன்பாட்டுக் கழிவுகளை, பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப் பயிற்சி பெற்றவர்கள். பொதுவாக இவை எரிக்கக்கூடியவை, எரிக்க முடியாதவை, கலப்பு நெகிழிகள், PET குடுவைகள், கண்ணாடி மற்றும் குறிப்பிட்ட வகை காகிதங்கள் எனப் பிரிக்கப்படுகின்றன. சில நகராட்சிகளில் குடிமக்கள் தங்கள் குப்பைகளை 30க்கும் மேற்பட்ட வெவ்வேறு பிரிவுகளாகப் பிரிக்க வேண்டியது கட்டாயமாகும்.
- குப்பைகள் வெளிப்படையான நகராட்சிப் பைகளில் (Transparent bags) வைக்கப்பட்டு, வாரத்தின் குறிப்பிட்ட நாட்களில் மட்டுமே சேகரிப்பு மையங்களில் ஒப்படைக்கப்பட வேண்டும். சரியாகப் பிரிக்கப்படாத குப்பைகளைச் சேகரிப்பாளர்கள் நிராகரிப்பதோடு, எச்சரிக்கை அச்சு ஒட்டி அங்கேயே விட்டுச் செல்வார்கள். இது மக்களிடையே வலுவான சமூகப் பொறுப்புணர்வையும் ஒழுக்கத்தையும் ஏற்படுத்துகிறது.

தென்கொரியா

- மக்கக்கூடிய மற்றும் உணவுக் கழிவுகளைத் தரம் பிரிப்பதில் தென்கொரியா உயர்தொழில்நுட்பத் தொட்டிகளுடன் (High-tech smart bins) கூடிய கட்டாய உணவுக் கழிவு மறுசுழற்சி முறையைப் பயன்படுத்துகிறது.
- குடிமக்கள் இதற்கெனக் குறிப்பிட்ட மக்கும் பைகளை (Biodegradable bags) வாங்க வேண்டும் அல்லது வானலை அடையாள (Radio Frequency ID) அட்டைகளைப்



பயன்படுத்தித் தானியங்கித் தொட்டிகளில் தங்கள் உணவுக் கழிவுகளின் எடையைப் பதிவு செய்ய வேண்டும். தாங்கள் கொட்டும் உணவின் எடைக்கு ஏற்பப் பணம் செலுத்த வேண்டும் என்பதால், மக்கள் உணவை வீணாக்குவதைக் குறைப்பதோடு, கழிவுகளைச் சரியாகப் பிரிக்கவும் தூண்டப்படுகிறார்கள். இதன் மூலம் தென்கொரியா தனது உணவுக்கழிவு மறுசுழற்சியை 100 விழுக்காடாக உயர்த்தியுள்ளது.

- சப்பான் மற்றும் தென்கொரியாவின் இத்தகைய உலகத்தரம் வாய்ந்த தொழில்நுட்பங்களை உள்ளடக்கி, தமிழ்நாட்டின் கழிவு மேலாண்மையை நாம் தமிழர் அரசு மேம்படுத்தும்.

கழிவு மேலாண்மையில் தனிநபர் மற்றும் சமூகப்பங்கு

- மக்கும் குப்பை, மக்காக் குப்பை, மின்னணுக் குப்பை மற்றும் மருத்துவக் கழிவுகள் என்று தரம் பிரித்து அரசிடம் வழங்க வேண்டும்.
- வீடுகளில் உரக்குழி மற்றும் மழைநீர்க் கட்டுமானம் அமைத்தல் வேண்டும்.
- பொதுத் தளங்களில் தூய்மையைப் பேணுதல் வேண்டும்.
- வாழும் பகுதிகளைப் பசுமையாக வைத்திருத்தல் வேண்டும்.
- மறுபயன்பாட்டிற்கும், மறுசுழற்சிக்கும் பொருட்களினை முறையாகக் கையளித்தல் வேண்டும்.
- பொருட்களைப் பழுது நீக்கி மீண்டும் பயன்படுத்தும் முறையைக் கடைபிடிக்க வேண்டும்.

சுழற்சிப் பூங்கா

- நடைமுறையிலுள்ள திடக்கழிவு மேலாண்மை நெறிகள் (2016) கழிவுகளைக் கையாளுதல் மற்றும் அகற்றுதலிலேயே (Waste Disposal) கவனம் செலுத்துகின்றது. நாம் தமிழர் அரசு குப்பைகளை ஒரு பொருளாதார மூலமாக (Economic Resource) மாற்றுகிறது. நெகிழிக் கழிவுகளை அரசிடம் ஒப்படைக்கும் மக்களுக்குப் பயணச் சலுகை அட்டைகள் போன்றவை வழங்கி ஊக்குவிக்கப்படும். இதன் மூலம், கழிவு மேலாண்மையை ஒரு கடமையாக மட்டும் அல்லாமல் பொதுமக்களின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்யும்.

- தற்போதைய நடைமுறையில் குப்பைகளை ஓரிடத்தில் குவித்து எரிப்பது அல்லது நிலத்தில் புதைப்பது (Landfilling) போன்ற சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் முறைகளுக்கு அதிக முன்னுரிமை தரப்படுகிறது. நாம் தமிழர் அரசின் "சுழற்சிப் பூங்கா" (Cycling Parks) மற்றும் "தொழில்துறை ஒருங்கிணைப்பு" (Industrial Integration) சிறந்த மாற்றாக விளங்கும். இதில் ஒரு தொழிற்சாலையின் கழிவு மற்றொரு தொழிற்சாலையின் மூலப்பொருளாக மாற்றப்பட்டு கழிவுகளற்ற (Zero Waste) இலக்கு எட்டப்படும். கழிவிலிருந்து மின்சாரம், இயற்கை எரிகாற்று மற்றும் வேளாண்மைக்கான உயர்தர இயற்கை உரங்களைத் உருவாக்குவதன் மூலம், இத்திட்டம் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதோடு, வேலைவாய்ப்பையும் தற்சார்புப் பொருளாதாரத்தையும் உருவாக்குவதில் தற்போதைய விதிகளை விட முன்னோக்கி அமையும்.

திடக்கழிவு மேலாண்மை

- கழிவுகள் உருவாகும் இடங்களான வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களிலேயே அவற்றைத் தரம் பிரிப்பது ஒட்டுமொத்த கழிவு மேலாண்மையின் தொடக்கப் புள்ளியாகும். மக்கும் குப்பை, மக்காக் குப்பை மற்றும் மின்னணு / கேடு தரவல்ல குப்பைகள் என தனித்தனியாகப் பிரித்துச் சேமிப்பது கட்டாயமாக்கப்படும். இவ்வாறு பிரிப்பதன் மூலம் கழிவுகள் ஒன்றோடொன்று கலந்து மாசுபடுவது தவிர்க்கப்படுகிறது. இது மறுசுழற்சி மற்றும் உரமாக்கல் போன்ற அடுத்தகட்டச் செயல்பாடுகளை எளிதாக்கிடும்.

- நகராட்சி நிருவாகம் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளைச் சேகரிக்கும். இதில் தற்போதைய 'முறைசாராத் தொழிலாளர்கள்' (Waste Pickers) மற்றும் உதவிக்குழுக்கள் ஒருங்கிணைக்கப்பட்டு அடையாள அட்டைகள் வழங்கப்படும். வட்டம் (Ward) வாரியாக இவர்களை ஒருங்கிணைப்பதன் மூலம் உள்ளூர் அளவில் வேலைவாய்ப்புகளையும் உருவாக்க முடியும்.

- திடக்கழிவு மேலாண்மைப் பணியில் ஈடுபடும் தூய்மைப் பணியாளர்களுக்குச் சீருடை, ஒளிரும் மேலாடை, கையுறைகள், மழையாடைகள், முறையான காலணிகள் மற்றும் முகக்கவசங்கள் உள்ளிட்ட தனிமாந்தர் பாதுகாப்புப் கருவிகள் வழங்கப்படும். சேகரிக்கப்பட்ட கழிவுகள் சிதறாமலும், முடைநாற்றம் வீசாமலும் இருக்க மூடப்பட்ட மற்றும் மேம்பட்ட அடுக்குகள் / அறைகள் கொண்ட ஊர்திகளில் கொண்டு செல்லப்படும்.


- கழிவுகளை ஓரிடத்தில் குவித்து வைப்பதற்கு மாற்றாக, அந்தந்த வட்டம் அல்லது மண்டல அளவிலேயே தூய்மையாக்கும் 'பரவலாக்கப்பட்ட முறை' (Decentralized Processing) பின்பற்றப்படும். காய்கறி மற்றும் உணவுக் கழிவுகளை உள்ளூர்ச் சந்தைகள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளுக்கு அருகிலேயே உரமாக்கவும் (Composting) உயிரிமீத்தேனாக்கம் செய்யவும் (Bio-methanation) நடவடிக்கை எடுக்கப்படும்.

- பல ஆண்டுகளாகக் கொட்டி வைக்கப்பட்டுள்ள பழைய குப்பை மேடுகளை (Legacy Waste) அறிவியல் முறையில் அகற்ற உயிரியல் கழிவு மீட்பு (Bio Mining) தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும். இம்முறையில் பழைய குப்பைகளை அகழ்ந்தெடுத்து, அவற்றில் உள்ள மக்கும் பொருள்கள், நெகிழி, மண் மற்றும் கற்களைத் தனித்தனியாகப் பிரிப்பதன் வழியே நிலம் மீட்கப்படுகிறது.

- மக்கும் கழிவுகளிலிருந்து காற்றற்ற செரிப்பு மூலம் மின்சாரமும் இயற்கை உரமும் உருவாக்கலாம். மறுசுழற்சி செய்ய முடியாத ஆனால் எரியக்கூடிய கழிவுகளைப் பைஞ்சுதை ஆலைகளுக்கு எரிபொருளாக வழங்கலாம். ஒரு தொழிற்சாலையின் கழிவை மற்றொரு தொழிற்சாலைக்கு மூலப்பொருளாக மாற்றி, கழிவுகளே இல்லாத ஒரு பொருளாதாரச் சுழற்சியை (Circular Economy) உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

- சேகரிக்கப்பட்ட மக்காக் கழிவுகளான நெகிழி, மாழை, கண்ணாடி போன்றவை தரம் பிரிக்கப்பட்டு, முறையான மறுசுழற்சிக்கு உட்படுத்தப்படும். மேலும் 'மதிப்புக்கூட்டப்பட்ட சுழற்சி' (Upcycling), 'கீழ்நிலைச் செயலாக்கம்' (Downstream processing) போன்ற முறைகள் மூலம் பிற பயன்பாட்டுப் பொருட்களாகவும் மாற்றப்படும்.











மின் கழிவுகள் (E-waste)

- மின்னணுக் கழிவுகள் அவற்றின் கேடுதரவல்ல மற்றும் மதிப்புமிக்க பண்புகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்படும். இதற்காக முறையான சேகரிப்பு மற்றும் உருவாக்குவோரின் திரும்பப்பெறும் (Take-back) அமைப்புகள் வலுப்படுத்தப்பட்டு, சேகரிக்கப்பட்ட பொருட்கள் தரம் பிரிக்கப்பட்டு, அவற்றின் பாகங்கள் அறிவியல் முறையில் பிரித்தெடுக்கப்படும் (Dismantling). இயந்திர மற்றும் வேதியியல் முறைகளைப் பயன்படுத்தித் தங்கம், செம்பு போன்ற மதிப்புமிக்க மாழைகள் மீட்கப்படும் அதே வேளையில், எஞ்சிய நச்சு வேதிப்பொருட்களைச் செயலிழக்கச் செய்து சுற்றுச்சூழலைப் பாதிக்காத வண்ணம் பாதுகாப்பாக அகற்றப்படும்.

- மறுசுழற்சி செய்ய முடியாத எஞ்சிய கழிவுகளிலிருந்து தொழில்நுட்பங்கள் வழியே "ஆற்றல் மீட்பு" செய்யப்படும். இத்துறையில் நீண்டகாலமாக ஈடுபட்டுள்ள முறைசாராத் தொழிலாளர்கள் கண்டறியப்பட்டு, அவர்கள் முறையான துறையுடன் ஒருங்கிணைக்கப்படுவார்கள். மின்னணுக் கழிவு மேலாண்மை விதிகள் மற்றும் எல்லை தாண்டிய பரிமாற்றக் (Transboundary Movement) கட்டுப்பாடுகள் உறுதியாக நடைமுறைப்படுத்தப்படும். இதன் மூலம் நச்சுத் தனிமங்கள் மண்ணில் கலப்பது தடுக்கப்பட்டு, முழுமையான வள மீட்பு உறுதி செய்யப்படும்.

உயிர்மருத்துவக் கழிவுகள் (Biomedical waste)

- மருத்துவமனைகள் மற்றும் ஆய்வகங்களில் உயிர்மருத்துவக் கழிவுகள் உருவாகும் இடத்திலேயே அவற்றின் தன்மைக்கேற்ப (கூர்மையான கருவிகள், உடல் உறுப்புக் கழிவுகள், நெகிழிக் கழிவுகள்) தனித்தனியாகத் தரம் பிரிக்கப்படும். இவை வளாகத்திற்குள்ளேயே பாதுகாப்பான இடங்களில் சேமிக்கப்பட்டு, கழிவின் வகையைக் குறிக்கும் வகையில் முறையான வண்ணக் குறியீடுகள் மற்றும் அடையாளங்கள் (Labelling) இடப்படும். தொற்றுப் பரவாமல் இருக்க, கழிவுகள் சேகரிப்பு நிலையங்களுக்குக் கொண்டு செல்லப்படுவதற்கு முன்பே வளாகத்திற்குள்ளேயே தேவையான முன்தூய்மையாக்கம் மற்றும் நோய் எதிர்ப்பு (Pre-treatment and Disinfection) முறைகள் மேற்கொள்ளப்படும்.

- முறையாகச் சேகரிக்கப்பட்ட இக்கழிவுகள் அதற்குரிய ஊர்திகள் மூலம் பொதுவான உயிர்மருத்துவக் கழிவு தூய்மையாக்கும் நிலையங்களுக்குக் கொண்டு செல்லப்படும். அங்கு உயர் அழுத்த நீராவி மூலம் நுண்மிகள் (கிருமி) நீக்கம் செய்தல் (Autoclaving) போன்ற மேம்பட்ட செயலாக்கத் தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படும். கேடுதரவல்ல கழிவுப் பகுதிகள் மிகவும் கவனமாகக் கையாளப்படும்.

நீர்மக்கழிவு மேலாண்மை

- வெளியேற்றப்படும் நீர்மக்கழிவுகளை அவற்றின் இயற்பியல் மற்றும் வேதியியல் பண்புகளின் அடிப்படையில் முறையாக வகைப்படுத்தி அறிவியல் முறையில் மேலாண்மையை உறுதிப்படுத்துவோம். நீர் தூய்மையாக்க நிலையங்களில் முன் தூய்மையாக்கம் (Pre-treatment) மற்றும் வடிகட்டுதல் முறைகளைப் புகுத்தி, பெரிய அளவிலான கழிவுகளைத் தொடக்கத்திலேயே தடுத்து நிறுத்துவோம்.



- இதனைத் தொடர்ந்து, முதல்நிலைத் தூய்மையாக்கம் மூலம் திடக்கழிவுகளை அகற்றிவிட்டு, இரண்டாம் நிலைத் தூய்மையாக்கம் எனும் உயிரியல் முறைப்படி (Biological treatment) நீரில் கரைந்துள்ள நச்சுக்களை அழிப்போம். இந்தத் திட்டமிட்ட அணுகுமுறையில் கழிவுநீர் தூய்மையாக்கல் ஓர் இயந்திரச் செயல்பாடாக இல்லாமல், சூழலியல் அறமாக முன்னெடுக்கப்படும்.

- பெரிய மையப்படுத்தப்பட்ட நிலையங்களுக்கு மாற்றாக, அந்தந்தப் பகுதிகளிலேயே முன்தூய்மையாக்கம் மற்றும் முதல்நிலைச் தூய்மையாக்கல் (Primary Treatment) நிலையங்களை அமைத்து, உள்ளூர் நீர் மேலாண்மையில் தற்சார்பு நிலையை எட்டுவோம்.

- மூன்றாம் நிலைத் தூய்மையாக்கம் என்பது ஊட்டச்சத்து நீக்கம் மற்றும் நுண் மாசுகளை அகற்றி நீரை மெருகூட்டும் (Polishing) பணியாகும். இதன் பிறகு, பாசிகம் (கருமருது) அல்லது புற ஊதாக் கதிர்கள் மூலம் நுண்மிகள் (கிருமிகள்) அழிக்கப்படுகின்றன. தூய்மையாக்கலின் போது சேகரிக்கப்படும் கசடுகள் (Sludge) உலர்த்தப்பட்டு, நிலைப்படுத்தப்பட்டு, பாதுகாப்பாக அகற்றப்படுகின்றன. மேம்பட்ட முறையில் இந்தச் செயல்பாடுகளிலிருந்து உயிரி எரிகாற்று போன்ற ஆற்றல் மற்றும் வளங்கள் மீட்கப்படுகின்றன.

- இறுதியில், தூய்மையாக்கப்பட்ட நீர் மறுபயன்பாட்டிற்கு அல்லது பாதுகாப்பான முறையில் நீர்நிலைகளில் கலக்கப்படும். குறிப்பாகத் தொழிற்சாலைக் கழிவுநீரில் உள்ள நச்சுப் பொருட்களைக் கையாளுவது ஒட்டுமொத்தச் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு இன்றியமையாதது.

- ஒவ்வொரு தூய்மையாக்க நிலையத்தின் வாயிலிலும், அங்கிருந்து வெளியேற்றப்படும் நீரின் தரம், எஞ்சியிருக்கும் கசடுகளின் அளவு மற்றும் அவை நிலைப்படுத்தப்பட்டு அகற்றப்படும் முறை ஆகியவற்றை விளக்கும் நிகழ்நேர மின்னணுத் தகவல் பலகைகளை நிறுவுவோம். இதன் மூலம், தூய்மையாக்க முறைகள் சரியாகப் பின்பற்றப்படுகிறதா என்பதைப் பொதுமக்கள் நேரடியாகக் கண்காணிக்கும் உரிமையைப் பெறுவார்கள்.

காற்றுக்கழிவு மேலாண்மை

- தொழிற்சாலைகள் மற்றும் நகர்ப்புறக் கட்டமைப்புகளில் வெளியேறும் காற்றுக்கழிவுகள் அவற்றின் இயற்பியல் மற்றும் வேதியியல் பண்புகளின் அடிப்படையில் வகைப்படுத்தப் படுகின்றன. இதில் நச்சுப் புகைகள், துகள்மப் பொருட்கள் (Particulate matter) மற்றும் பசுங்குடில் காற்றுகள் எனப் பல பிரிவுகள் அடங்கும்.

- எரியூட்டும் இயந்திரங்களின் வடிவமைப்பை மேம்படுத்துவதன் மூலமும், சூழலுக்கு ஏற்ற மூலப்பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலமும் நச்சுக் காற்றுகள் உருவாவதை தொடக்கத்திலேயே தவிர்க்க முடியும்

- உருவாகும் காற்றுகள் வளிமண்டலத்தில் பரவுவதற்கு முன்பே, அவை வெளியேறும் அந்தந்த வளாகத்திற்குள்ளேயே முன் தூய்மையாக்கல் மற்றும் தொடக்கநிலைக் காற்றுப் பதப்படுத்துதல் (Pre-treatment and primary processing) செய்யப்படும். இதில் புகையை நனைத்துத் தூய்மைப்படுத்தும் (Scrubbers), துகள்களை ஈர்க்கும் மின்நிலை வீழ்படிவாக்கிகள் (Electrostatic Precipitators) மற்றும் வடிகட்டிகள் போன்றவை பயன்படுத்தப்படும்.



- தூய்மையாக்கப்பட்ட காற்றுகள் மாசுக்கட்டுப்பாட்டுப் புகைபோக்கிகள் (Pollution stack chimneys) வழியாக வெளியேற்றப்படும். இந்தப் புகைபோக்கிகளில் பொருத்தப்பட்டுள்ள உணரிகள் (Sensors), வெளியேறும் காற்றின் தரத்தை நிகழ்நேரத்தில் (Real-time) கண்காணித்து, அது அனுமதிக்கப்பட்ட அளவில்தான் இருக்கிறதா என்பதை உறுதி செய்யும்.
- கழிவுநீர் தூய்மையாக்கும் நிலையங்கள் மற்றும் திடக்கழிவுக் கிடங்குகளில் எழும் முடைநாற்றம் பொதுமக்களுக்குப் பெரும் இடையூறாக அமைகிறது. இதனைத் தடுக்க உயிரி வடிகட்டிகள் (Bio-filters) மற்றும் வேதியியல் தெளிப்பான்கள் போன்ற முடைநாற்றத்தைக் குறைப்பதற்கான உத்திகள் கையாளப்படும்.

வீட்டிற்கே வந்து குப்பைகள் பெறப்படும்

- கழிவு மேலாண்மையின் தொடக்கமே 'கழிவுகள் உருவாகும் இடத்திலேயே தரம் பிரித்தல்' ஆகும். குப்பைகளை ஒன்றாகக் கலக்கும்போது அவை நச்சுத்தன்மை வாய்ந்த, கையாளுவதற்குச் கடினமான கழிவாக மாறி நிலத்தையும் நீரையும் மாசுபடுத்துகின்றன. தூய்மையான கட்டமைப்பை உருவாக்குவது அரசின் கடமை மட்டுமல்ல, அது ஒவ்வொரு குடிமகனின் பொறுப்புமாகும்.
- குப்பைகளைக் கையாளுவதற்கும், பதப்படுத்துவதற்கும் அரசு அணியமாக இருந்தாலும், மக்கள் தங்கள் அன்றாடக் கடமையாக இதனை உணர்ந்து சரியான முறையில் தரம் பிரித்துக் கொடுத்தால் மட்டுமே இந்தத் திட்டம் முழுமையாக வெற்றியடையும்.
- வீடுகளுக்கே சென்று தரம் பிரிப்பதன் நன்மைகளை விளக்குவதுடன், அதற்கான முறையான வண்ணக் குப்பைத் தொட்டிகளை (Color-coded bins) அரசு நிருவாகமே வழங்கும்.






Recycling Bins
Drink cans
Glass & Plastic Bottles
Paper

- ஒருவேளை கழிவுகள் முறையாகத் தரம் பிரிக்கப்படாமல் வழங்கப்பட்டால், உடனடியாகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படாது. முதல் கட்டமாகத் தொடர்புடைய வீடுகளுக்குத் தெளிவான அறிவுறுத்தல்களும் எச்சரிக்கைகளும் வழங்கப்படும். அதன்பிறகும் விதிமீறல்கள் தொடர்ந்தால், தரம் பிரிக்கப்படாத குப்பைகளை வாங்க மறுக்கப்படும். மேலும், 'மாசுபடுத்துபவரே அதற்கான விலையைக் கொடுக்க வேண்டும்' (Polluter Pays Principle) என்ற உலகளாவிய கொள்கையின் அடிப்படையில், தண்டங்கள் மற்றும் கூடுதல் சேவைக் கட்டணங்கள் விதிக்கப்படும்.

- மேலாண்மைச் செலவுகளைக் குறைக்கவும், தேவையற்ற உமிழ்வுகளைக் கட்டுப்படுத்தவும், சேகரிப்பு வழித்தடங்கள் மற்றும் ஊர்திப் பயன்பாட்டைத் தொழில்நுட்ப உதவியுடன் மேம்படுத்துவோம். குப்பைத் தொட்டிகள் வைக்கப்படும் இடங்கள் மற்றும் ஊர்திகள் பயணிக்கும் பாதைகள் முறையாகக் கண்காணிக்கப்படும். மேலும், கழிவுகளை ஊருக்கு வெளியே மலைப்போல் குவிப்பதைத் தவிர்த்து, பரவலாக்க கொள்கையின் அடிப்படையில், ஆங்காங்கே சிறிய அளவிலான செயலாக்க நிலையங்களை அமைப்போம்.

குப்பையைத் தூய்மையாக்கும் நிலையம்

- கழிவு மேலாண்மையில் ஒரு நிலையானத் தீர்வை எட்டுவதற்காகப் பரவலாக்கப்பட்ட குப்பை தூய்மையாக்கும் நிலையங்களின் (Decentralized processing facilities) வரம்பு, நோக்கங்கள் மற்றும் அளவீடுகளை நாம் தமிழர் அரசின் நிருவாகம் தெளிவாக வரையறுத்துச் செயல்படுத்தும். இத்திட்டமானது, தேசிய அளவிலான திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 (SWM Rules 2016) மற்றும் கசடு மேலாண்மை (FSM) கொள்கைகளுடன் முழுமையாகச் சீரமைக்கப்பட்டு, ஒரு வலுவான ஒழுங்குமுறை மற்றும் நிருவாகக் கட்டமைப்பின் கீழ் இயங்கும்.

- எந்தவொரு நிலையத்தை அமைக்கும் முன்பும், அப்பகுதியின் கழிவு உருவாவதைக் கணக்கிட அடிப்படை வகைப்படுத்துதல் மற்றும் பின்னணிப் பகுப்பாய்வு துல்லியமாக மேற்கொள்ளப்படும். அதன் அடிப்படையில், சூழலுக்கு ஏற்ற தொழில்நுட்பத் தேர்வு, நிலையத்தின் அளவு, தளவமைப்பு மற்றும் கட்டமைப்பு ஏற்பாடுகள் ஆகியவை உள்ளூர் புவியியல் கூறுகளுக்கு ஏற்ப அறிவியல் முறையில் வடிவமைக்கப்பட்டுச் செயல்படுத்தப்படும்.

- நிலையத்தின் கட்டுமானமும் இயக்கமும் எவ்வகைத் தொய்வுமின்றி நடைபெறுவதை உறுதிசெய்ய, விரிவான செயல்முறை வடிவமைப்பு மற்றும் பல்வேறு துறைகளின் ஒருங்கிணைப்பு மேம்பட்ட தரநிலைகளின்படி மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்குரிய குவை (நிதி) திட்டமிடல், இடர்காலக் கணிப்பு மற்றும் வாழ்நாள் சுழற்சி மதிப்பீடு ஆகியவை முன்கூட்டியே வகுக்கப்படும்.

- மேலும், நிலையங்கள் அமைக்கப்பட்ட பின் கைவிடப்படாமல் இருக்க, தொடர்ச்சியான இயக்கம், முறையான பேணுதல் மற்றும் மாறும் தேவைகளுக்கேற்ப தகவமைப்பு மேலாண்மை ஆகியவற்றை உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பொதுமக்களின் நேரடிக் கண்காணிப்பில் முன்னெடுப்போம்.

- ஒவ்வொரு தூய்மையாக்கும் நிலையத்திலும் நிறுவப்பட்டுள்ள நிகழ்நேரக் கண்காணிப்புத் தரவுகள் (Real-time data monitoring) வெளிப்படையாக இணையத்தில் வெளியிடப்படுவதன் வழியே பொதுமக்களின் பார்வைக்குக் கொண்டுவரப்படும்.



நெகிழி ஒழிப்பு வாரியம்

- கடந்த ஐம்பது ஆண்டுகளில் மட்டும் 83 கோடி கல்லெடை (மெட்ரிக் டன்) அளவுள்ள நெகிழி உலகளவில் மாந்தர்களாகிய நாம் பயன்படுத்தியுள்ளோம். நெகிழிப் பொருள்கள் உருவாக்கத்தைத் தடுக்காமல், இதைக் குறைத்திட வாய்ப்பில்லை.

- எனவே, மிக இன்றியமையாத, மாற்றுக்கு வழியற்ற நெகிழிப் பொருள்களின் பட்டியல் உருவாக்கப்படும். அவை தவிர, தண்ணீர்ப் புட்டிகள், பற்குச்சிகள், விளையாட்டுப் பொருள்கள், நெகிழிப் பைகள், நாற்காலிகள், குடங்கள், கயிறு வகைகள், வீட்டிற்குத் தேவையான மற்றப் பயன்பாட்டுப் பொருள்கள் என எல்லா வகையான நெகிழிப் பொருள்களுக்கும் நிலையான தடை விதிக்கப்படும். உருவாக்கம் மற்றும் விற்பனை அனுமதிக்கப்படாது. மீறினால் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். உள்ளூர்ச் சந்தைகள், தொழிற்சாலைகள் மற்றும் வணிக வளாகங்களில் திடீர் ஆய்வுகளை மேற்கொண்டு, தடையை மீறுவோருக்கு உடனடித் தண்டமும், தொடர் மீறல்களில் ஈடுபடும் நிறுவனங்களின் உரிமத்தைத் திரும்பப் பெறவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

- நெகிழி ஒழிப்பிற்கான தனி வாரியம் அமைக்கப்படும். வாரியத்தின் நோக்கம், நெகிழி உருவாக்கம் மற்றும் விற்பனையைப் படிப்படியாக நிறுத்துவது, ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட நெகிழிப் பொருள்களைச் சேகரித்து மறுசுழற்சி செய்வதாகும்.

- அண்டை மாநிலங்களிலிருந்து கொண்டு வரப்படும் பொருள்களில், தடை செய்யப்பட்ட நெகிழிப் பொதிகள் (Packaging) இருந்தால், அவற்றை எல்லை யிலேயே தடுத்து நிறுத்த கடுமையான ஆய்வுச் சாவடிகள் அமைக்கப்படும். நமது மாநிலத்திற்குள் விற்பனைக்கு வரும் எந்தவொரு பொருளும் 'நெகிழியற்றப் பொதி' என்ற தரச் சான்றிதழ் பெற்ற பின்னரே அனுமதிக்கப்படும்.

- வெறிமப் (போதை) பொருள் பயன்பாட்டைக் கடுமையான நடவடிக்கைகள் மூலம் கட்டுப்படுத்துவதைப் போல், நெகிழிப் பயன்பாட்டையும் தடுத்தாக வேண்டும். வாழை இலை, பாக்கு மட்டை, மட்பாண்டங்கள், மாழைப் பாண்டங்களோடு, இயற்கை நார்கள், கிழங்கு வகைகள், கடல்பாசிப் போன்றவற்றிலிருந்து உருவாக்கப்படும் பொருள்கள், நெகிழிக்கு மாற்றாக முன்வைக்கப்படும்.

நெகிழி ஒழிப்பு ஆராய்ச்சி நடுவம் (Plastic Eradication Research Centre)

- நெகிழி ஒழிப்புக்கென ஆராய்ச்சி நடுவம் தொடங்கப்படும். அதில், மறுசுழற்சி செய்யப்பட்ட நெகிழியைப் பயன்பாட்டுப் பொருள்களாக மாற்றுவது எப்படி என்ற ஆய்வுகளையும், நுண்ணுயிரிகளைக் கொண்டு (Emzynes) நெகிழியை எப்படிச் செரிப்பது போன்ற ஆராய்ச்சிகளும் மேற்கொண்டு, நெகிழி மற்றும் குழைமங்களை முற்றாக ஒழிக்கப்படும்.

தொழில்துறைக் கழிவுகளுக்கான மேலாண்மைத் திட்டங்கள்

- தொழில்துறை வளர்ச்சியில் உருவாக்குபவர் பொறுப்பு (EPR) நீட்டிக்கப்படும். ஒரு பொருளை உருவாக்கம் செய்வதுடன் ஒரு நிறுவனத்தின் கடமை முடிந்துவிடுவதில்லை. அந்தப் பொருள் அதன் வாழ்நாள் முடிவில் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பில்லாத வகையில் கையாளப்படுவதையும் அந்த நிறுவனம் உறுதி செய்ய வேண்டும். இதனை நடைமுறைப்படுத்த, வாழ்நாள்

சுழற்சி நிலைத்தன்மை மதிப்பீடு (LCSA) மூலம் ஒரு பொருளின் தொடக்கம் முதல் இறுதி வரை ஏற்படும் சூழலியல் பாதிப்புகளைக் கணக்கிட்டு, கழிவே இல்லாத சுழற்சிப் பொருளாதார முறையை எட்டும் வகையில் நெறிகள் வகுக்கப்படும்.

- தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுகளை அவற்றின் அளவு, வேதியியல் கலவை மற்றும் கேடு தரவல்லப் பண்புகள் (Hazardous characteristics) ஆகியவற்றின் அடிப்படையில் துல்லியமாக வகைப்படுத்தப்படும்.

- தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுகளைக் கண்காணிக்க நிகழ்நேர இணையவழிக் கண்காணிப்பு அமைப்புகளை (Real-time Online Monitoring Systems) கட்டாயமாக்குவோம். கழிவுகள் உருவாகும் இடத்திலிருந்து அவை தூய்மையாக்கும் நிலையங்களுக்குச் சென்றடையும் வரை உள்ள முழுப் பாதையையும் நிறிஷி தொழில்நுட்பங்கள் வழியே கண்காணிப்பதன் மூலம், கழிவுகள் நீர்நிலைகளிலோ அல்லது திறந்தவெளிகளிலோ சட்டத்திற்குப் புறம்பாகக் கொட்டப்படுவதை முற்றிலுமாகத் தடுக்க முடியும்.

- ஒவ்வொரு கழிவு வகையையும் கையாளுவதற்குத் தரப்படுத்தப்பட்ட தூய்மையாக்கும் முறைகளை அரசு வழங்கும். இதில் முதன்மையாகக் கழிவுக் குறைப்பு மற்றும் பொருள் மறுபயன்பாட்டிற்கு முன்னுரிமை அளிக்கப்படும். மறுசுழற்சி செய்ய முடியாத கழிவுகளிலிருந்து ஆற்றல் மீட்பு, உயிர்காற்று உருவாக்குதல் போன்ற முறைகள் ஊக்குவிக்கப்படும். தொழிற்சாலைச் செயல்முறைக்குள்ளேயே கழிவுகளை மறுசுழற்சி செய்யும் முறைகளைத் தரப்படுத்துவதன் மூலம் மூலப்பொருட்களின் தேவையைக் குறைத்து உருவாக்கத்தை மேம்படுத்துவோம்.

- தொழிற்சாலையின் கழிவை மற்றொரு தொழிற்சாலைக்கு மூலப்பொருளாக மாற்றும் தொழில்துறை கூட்டுறவு (Industrial symbiosis) முறையை ஏற்படுத்துவதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்வோம்.

- மேற்கண்ட அனைத்துச் செயல்பாடுகளையும் சட்ட நிலையில் வலுப்படுத்த, தற்போதைய தொழில்முறைக் கொள்கைகளைச் சுழற்சிப் பொருளாதார (சிணி) அடிப்படை நெறிகளுடன் சீரமைப்போம். இதற்கான கட்டமைப்பு என்பது வெறும் கண்காணிப்புடன் நின்றுவிடாமல், தொழிற்சாலைகளுக்குத் தேவையான தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை வழங்கும் அறிவுரையாளராகவும் அரசு செயல்படும்.

- அரசு மற்றும் தொழிற்சாலைகளுக்கு இடையே நடக்கும் கழிவு மேலாண்மைப் பரிமாற்றங்கள் அனைத்தையும் ஒரு பொதுத் தகவல் தளத்தில் வெளியிடுவோம். எந்தெந்தத் தொழிற்சாலைகள் எவ்வளவு கழிவுகளை உருவாக்குகின்றன, அவை எவ்வாறு தூய்மையாக்கப்படுகின்றன மற்றும் நீட்டிக்கப்பட்ட உருவாக்குபவர் பொறுப்பு (EPR) நெறிகளை அந்த நிறுவனங்கள் எவ்வாறு பின்பற்றுகின்றன என்ற தகவல்களை மக்கள் நேரடியாகக் காண வகை செய்வோம்.

- தொழிற்பூங்காக்களைச் சுற்றியுள்ள மக்களின் உடல்நலனை உறுதி செய்ய, குறிப்பிட்ட கால இடைவெளியில் சுற்றுச்சூழல் மற்றும் நலவாழ்வுத் தணிக்கைகள் நடத்தப்படும்.

- சுற்றுச்சூழல் நெறிகளைத் திட்டமிட்டு மீறும் நிறுவனங்கள் மீது 'மாசுபடுத்துபவரே அதற்கான விலையைக் கொடுக்க வேண்டும்' (Polluter Pays Principle) என்ற உலகளாவிய நீதிக் கொள்கையின்படி கடுமையான தண்டங்கள் விதிக்கப்படும். தொடர் விதிமீறல்களில் ஈடுபடும் தொழிற்சாலைகளின் உரிமங்கள் திரும்பப்பெறப்பட்டு கடும் தண்டனைகள் வழங்கப்படும்.



அளவின்கண் நின்றொழுகல் ஆற்றார் களவின்கண் கன்றிய காத லவர்.

– தமிழ்மறை (286) – வள்ளுவப்பெருமகனார்













கையூட்டு – ஊழல் ஒழிப்பு

> தமிழகத்தில்
> ஊழலற்ற ஆட்சி
> என்பது பகல்கனவாகவே
> இருக்கிறது. ஊழலை ஒழிப்பதாகப்
> பேசிக்கொண்டே ஊழல்
> முறைகேடுகளை வளர்த்தெடுத்துக்
> கொண்டிருக்கிறார்கள்.
> நாம் தமிழர் அரசு
> இதனைத் தடுத்து
> நிறுத்தத் திட்டங்களை
> முன்வைக்கிறது.

விடுதலை பெற்ற இந்தியாவில்

- கையூட்டு (இலஞ்சம்) ஊழல் தேசியமயமாக்கப்பட்ட நாட்டில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். 'சுரண்டிக் கொழுக்கிறது - வெள்ளையர் ஆட்சி' என்ற முழக்கத்தை முன்வைத்து விடுதலை பெற்ற இந்தியா இன்று சொந்த நாட்டு அரசியல் தலைவர்களால் கையூட்டு, ஊழல் முறைகேடு என்று சுரண்டிக் கொள்ளையடிக்கப்படுகின்றது. தமிழகத்தில், காமராசர் ஆட்சிக்குப் பிறகு ஆட்சி - அதிகாரத்திற்கு வந்த திராவிடக் கட்சிகள் இன்று பெருமளவில் கையூட்டு, ஊழல் முறைகேடுகளைச் செய்து நாட்டைச் சீரழித்துக் கொண்டிருக்கின்றன.

திராவிடக் கட்சிகளின் ஊழல்

- வீராணம் குழாய் ஊழல் தொடங்கி, அடுக்கடுக்கான ஊழலைச் செய்தார் கருணாநிதி என்று அன்றைய எதிர்க்கட்சித் தலைவரான ம.கோ.இராமச்சந்திரன் குற்றம் சாட்டினார், ஆளுநரிடம் புகார் கொடுத்தார். நீதிபதி சர்க்காரியா தலைமையில் விசாரணை நடந்தது. அவர் உலகிலேயே விஞ்ஞான முறையில் ஊழல் செய்தவர்கள் என்றக் கருத்தைச் சொன்னார்.
- பிறகு முதல்வராக அமர்ந்த ம.கோ.இராமச்சந்திரன் மீது, அன்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கருணாநிதியால் ஊழல் குற்றச்சாட்டு வைக்கப்பட்டது.
- அடுத்து முதல்வராக அமர்ந்த கருணாநிதி மீது எதிர்கட்சித் தலைவராக இருந்த செல்வி செயலலிதா ஊழல் குற்றச்சாட்டை வைத்தார்.



- பிறகு முதல்வராக அமர்ந்த செல்வி செயலலிதா மீது முறைகேடாகச் சொத்துச் சேர்த்ததாக வழக்குத் தொடர்ந்தது எதிர்க்கட்சியாக இருந்த கருணாநிதி தரப்பு.

- இவ்வாறாக, ஆட்சிகள் மாறியதே தவிர காட்சிகள் மாறவில்லை. இத்தகைய ஊழல் நிறைந்த திராவிடத்தின் தீய ஆட்சியை ஒழித்து, ஊழல் முறைகேடுகளற்ற தூய்மையான ஆட்சியை நாம் தமிழர் அரசு வழங்கும்.

மீண்டும் காமராசர்

- பெருந்தலைவர் காமராசர் ஆட்சிக்காலத்தில் உண்மையும், நேர்மையுமாக இருந்த நிருவாகம், திராவிடக் கட்சிகளின் ஆட்சிக்காலத்தில் ஊழல், கையூட்டு நிறைந்த ஆட்சியாக மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் காமராசர் ஆட்சி தருவோம் என்று ஆண்ட, ஆளும் திராவிடக் கட்சிகள் பேசின. ஆனால் ஒருவரும் அத்தகைய நேர்மையான ஆட்சியைத் தரவில்லை. மக்களின் வரிப்பணத்தைக் கொள்ளையடிக்கும் ஆட்சியாளர்களாகவே மாறி நிற்கிறார்கள். இதை வெளிப்படையான நிருவாகத்தின் மூலம் நாம் தமிழர் அரசு முற்றிலும் ஒழிக்கும்.

வெளிப்படையான நிருவாகம்

- அனைத்து அரசு அலுவலகங்களிலும் கண்காணிப்புக் கருவிகள் பொருத்தப்பட்டு, வெளிப்படையான நிருவாகம் உறுதி செய்யப்படும். அமைச்சர்கள் அலுவலகம் தொடங்கி, கடைநிலை ஊழியர்கள் வரையிலும் இந்த வெளிப்படையான நிருவாக முறைமைக்குள் இயங்குவது உறுதி செய்யப்படும்.

- “கையூட்டு ஊழல் ஒழிப்பு ஆணையம்” அமைக்கப்படும். மாநில அளவில் தலைமை ஆணையரும், மாவட்டத் தலைநகரங்களில் ஒரு துணை ஆணையரும் பணியமர்த்தப்படுவார்கள். இவர்களின் கீழ் ஒரு கட்டமைப்பு தனித்த அதிகாரத்தோடு இயங்கும்.

- ஊழல் செய்பவர்களை, கையூட்டு பெறுபவர்களை அடையாளம் கண்டு, அவர்கள் அத்துறையில் இருந்து ஒரு படி தகுதி குறைப்பது, வேறு துறைக்கு மாற்றுவது போன்ற நடவடிக்கைகள் எடுக்க இந்த ஆணையத்திற்கு அதிகாரம் அளிக்கப்படும்.

- ஒவ்வொரு சிற்றூரிலும் உள்ளூர் இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து அனைத்து அரசுச் சேவைகளும் இசேவை மூலம் இணையத்தளம் வழியாக வழங்கப்படுவது உறுதி செய்யப்படும்.

- அரசுப்பணி ஆட்சேர்ப்பு, இடமாற்றங்கள், மருத்துவப் பணியாளர் தேர்வில் வெளி முகமைகளின் தலையீடு ஆகியவற்றில் நிலவும் ஊழலைத் தடுத்து நேர்மையான நிருவாகம் உறுதிப்படுத்தப்படும்.

- ஊழலைத் தடுக்கும் வகையில் ‘சேவை உரிமைச் சட்டம்’ (Right to Services) உடனடியாக இயற்றப்படும். ஊழல் தடுப்பு உசாவும் (விசாரணை) அமைப்புகளுக்கு முழுமையான தன்னாட்சி அளிக்கப்படும்.

- ஊழல் குற்றச்சாட்டுகள், நெறிமீறல்கள் குறித்து முறையீடு அளிப்பவர் பெயர் வெளியே தெரியாதவாறு காப்பதற்கான சட்டம் இயற்றப்படும்.

- சூழலியல் ஊழலினால் ஏற்படும் உயிர், வாழ்வாதார இழப்புகளைத் தடுத்திட சுற்றுச்சூழல் சார்ந்த ஊழலுக்கு எதிராக 'சுழிய பொறுத்தல்தன்மை' (Zero Tolerance) கடைபிடிக்கப்படும்.

- சட்டத்திற்குப் புறம்பாக இயங்கும் கற்சுரங்கங்கள் உடனடியாக மூடப்படும். இதுகுறித்து முறையீடு அளித்த ஆர்வலர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படும்.

- இயற்கை வளங்கள் மற்றும் சுரங்கக் குத்தகைகள் குறித்த அனைத்துத் தகவல்கள் மற்றும் நடவடிக்கைகள் அனைத்தும் அறிக்கைகளுடன் இணையதளத்தில் 100% வெளிப்படையாகக் கொண்டுவரப்படும்.

- உள்ளூர் குவையத் (நிதி) தணிக்கைக் குழுவின் அறிக்கைக் கண்டெடுப்புகள் ஆண்டு இறுதியில் ஒரு பொதுக்கூட்டத்தில் மக்களிடம் முன்வைக்கப்படும்.

- தமிழ்நாடு ஒப்பந்தங்கள் வெளிப்படைத்தன்மைச் சட்டம் மற்றும் நெறிகளில் உள்ள குறைபாடுகளைக் களைந்து, அரசு ஊழியர் - ஒப்பந்ததாரர் இடையிலான நெறி மீறல்கள் தடுக்கப்படும்.

விரைவான மக்கள் சேவை

- நாட்டில் கையூட்டு பெருகியதற்கு முதன்மைக் காரணம், அரசுத் துறைகளில் மக்களுக்கான வேலை எத்தனை நாட்களில் நடைபெற வேண்டும் என்ற அலுவலக நடைமுறை மக்களுக்குத் தெரியாததுதான். எப்படியாவது தங்கள் வேலை முடிந்தால் போதும் என்ற தேவையில் மக்களும் கையூட்டு கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

- அதனால், இந்த வேலை கொடுக்கப்பட்ட காலத்திற்குள் உறுதியாக முடிக்கப்படும் என்று வெளிப்படையாக மக்களுக்கு தெரிவிக்கப்படும். தாமதப்படுத்தும் அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். விரைவான மக்கள் சேவை என்பது அரசின் கடமை. அதற்காகத்தான் மக்கள் வரிப்பணத்தில் இருந்து ஊதியத்தைப் பெறுகின்றோம் என்பதை அரசு அலுவலர்கள் உணர்ந்து செயல்படுவது உறுதி செய்யப்படும்.

எளிதாக அமைக்கப்படும்

- தகவல் அறியும் உரிமைச் சட்டம் இன்னும் எளிதாக மாற்றி அமைக்கப்படும். எந்த அலுவலகத்தில் எவரிடம் எப்படித் தகவல் கேட்பது என்ற விண்ணப்பம் வெளிப்படையாக மக்களுக்கு அறிவிக்கப்படும்.

- அரசு அலுவலக வேலைகளைக் கண்காணிக்கும் அதிகாரம் படைத்த ``தகவல் பெறும் உரிமைச் சட்டத்தை'' நாம் தமிழர் அரசு வலிமைப்படுத்தும்.

- இந்தத் துறையில் உள்ள ஆணையர் நீதிபதிகளைப் போன்றவர்கள், தங்கள் பணியைச் சரியாக செய்யாவிட்டாலோ, பொறுப்பைத் தட்டிக்கழித்தாலோ, பதவியைத் தவறாகப் பயன்படுத்தினாலோ தகுதிக் குறைப்பு செய்யப்படுவர்.

- அனைத்துத் துறைகளும் இணையம் மூலமாக இணைக்கப்பட்டு படிவங்கள் அனைத்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதி ஏற்படுத்தப்படும்.











மக்கள் நீதிமன்றம்

- மக்களுக்கான சேவையில், தேவையின்றி தாமதத்தை ஏற்படுத்தும் அரசு ஊழியர்களுக்குத் தண்டனையும், அதனால் பாதிக்கப்படுபவர்களுக்கு இழப்பீடும் வழங்கப்படும். அந்த இழப்பீடு தொடர்புடைய அரசு ஊழியர்களின் சம்பளத்தில் இருந்தே பிடித்தம் செய்யப்படும். நேர்மையான ஊழியர்களுக்குப் பதவி உயர்வில் முக்கியத்துவம் கொடுக்கப்படும்
- மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊழல் செய்யும்போது அதைத் தட்டிக்கேட்டு தடுக்கும் அதிகாரம் படைத்த மக்கள் நீதிமன்றம் அமைக்கப்படும்.
- அனைத்து அரசு அலுவலகங்களிலும் பொதுமக்களுக்குப் புரியும் வகையில் அரசு அலுவலக நடைமுறைகள் குறித்த தகவல் விளம்பரப் பதாகைகள் வைக்கப்படும்.

உதவிகள் வழங்கப்படும்

- சமூக ஆர்வலர்களின் சேவையை அறிந்து, அதிலேயே அவர்கள் தொடர்ந்திட, அரசு உதவிகள் வழங்கப்படும்.
- வாரியம் போன்ற அமர்த்தப் பணிகள் அனைத்திலும் களப்பணியில் சிறப்பாகச் செயல்படும் சமூக ஆர்வலர்களே நியமிக்கப்படுவார்கள். அதற்குப் பொது மக்களிடத்தில் கருத்துக்கேட்புக் கூட்டங்கள் நடத்தப்படும்.
- பணப்பரிமாற்றம் முழுவதும் இணையம் மூலமாக நடைமுறைப்படுத்தப்படும்.


சலுகைகளும் உரிமைகளும் முடக்கம்

- கையூட்டு, ஊழல் குற்றத்தில் ஈடுபட்டவர்களின் குடும்பத்தாருக்கு அரசின் சலுகைகள், அரசு வேலைகள் எதுவும் கொடுக்கப்படமாட்டாது. அரசின் சலுகைகள் அனைத்தும் திரும்பப் பெறப்படும்.
- ஊழல், கையூட்டில் ஈடுபடுபவர்களுக்கு இடைக்காலப் பணி நீக்கம் கிடையாது. உடனடியாக விசாரணை நடத்தி உறுதி செய்யப்பட்டால் நிலையானப் பணி நீக்கம் செய்யப்படுவர்.
- இப்போது இருப்பது கையூட்டு, ஊழல் நிறைந்த பகட்டான நிர்வாக முறை. நாம் தமிழர் அரசு, உண்மை, நேர்மை, எளிமையான நிர்வாகத்தை வெளிப்படைத்தன்மையோடு நடைமுறைப்படுத்தும்.
- மக்களுக்காகவே நாம் தமிழர் கட்சி, மக்களோடு நாம் தமிழர் அரசு.



நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரும் நாடு.

– தமிழ்மறை (739) – வள்ளுவப்பெருமகனார்



வெளிப்படையான நிர்வாகம்

தொலைநோக்குப் பார்வையோடு

> **தமிழக மக்களின் தேவைகளையும் மானுட வளர்ச்சியையும் குறித்துத் தொலைநோக்குப் பார்வையை அடுத்த நூற்றாண்டுகளுக்கு எடுத்துச் செல்ல நாம் தமிழர் அரசு திட்டமிட்டு செயல்பட்டு, தமிழகம் அனைத்துத் துறைகளிலும் முன்னோடி மாநிலமாகச் செழித்திருக்கும் என்பதை உறுதி செய்யும்.**

ஊழியர்களுக்கான நிலைப்பாடு

- நாம் தமிழர் அரசில் உயர் அதிகாரப் பதவிகளான உள்துறைச் செயலாளர், தலைமைச் செயலாளர், மாவட்ட நிர்வாகம் போன்ற அனைத்துப் பதவிகளிலும் நேர்மையான தமிழர்கள் பணியமர்த்தப்படுவார்கள்.
- ஊழல், கையூட்டு (இலஞ்சம்) ஆகியவற்றில் ஈடுபடும் அனைத்து அரசு அலுவலர், அதிகாரிகள், அமைச்சர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதோடு, பத்தாண்டுக்கு அவர்கள் குடும்பத்தினருக்கு அரசுப் பணியும் கிடையாது.
- ஆசிரியர்களுக்கு இருப்பது போல, அனைத்துத் துறை ஊழியர்களுக்கும் முதுநிலை அடிப்படையில் வெளிப்படையான இணையவழி ஆலோசனை (Counselling) மூலம் இடமாற்றம் வழங்கப்படும்.
- மாற்றுத்திறனாளிகள், முதியோர் மற்றும் "கணவன் - மனைவி" (Spouse Category) ஆகியோருக்கு 100% முன்னுரிமை அளிக்கும் சட்டப்பூர்வ விதி உறுதி செய்யப்படும்.
- ஊழியர்கள் தங்களின் பணிக்காலத்தின் கடைசி 3 முதல் 5 ஆண்டுகளைச் சொந்த மாவட்டத்தில் கழிக்க வழிவகை செய்யப்படும்.
- பகுதி நேர தற்காலிக ஊழியர்கள் அனைவரும் நிரந்தர அரசு ஊழியர்களாக பணியமர்த்தப்படுவார்கள்.



வலைதளம்

- உலகிலேயே டென்மார்க் நாட்டில்தான் ஊழல் மிகக் குறைவாக இருக்கிறது என்று பன்னாட்டு வெளிப்படைத்தன்மை என்ற அமைப்பு கூறுகிறது.
- அதற்குக் காரணம் அங்கு அனைத்துச் செயல்பாடுகளும் மக்கள் பார்வைக்கு வெளிப்படையாக வைக்கப்படுகிறது. அவ்வாறே நாம் தமிழர் அரசு முழுமையாக வெளிப்படை நிர்வாகத்தைக் கடைபிடிக்கும்.
- அரசு ஒதுக்கும் நிதி எந்தத் திட்டத்திற்கு, எவ்வளவு செலவிடப்படுகிறது என்பதை மக்கள் நேரலையில் பார்க்கும் இணையதள வசதி உருவாக்கப்படும்.
- ஊழலைச் சுட்டிக்காட்டுபவர்களின் அடையாளங்கள் பாதுகாக்கப்படும் வகையில் உயரிய பாதுகாப்புச் சட்டங்கள் வலிமைபடுத்தப்படும்.

முதன்மைத் திட்டங்கள்

- ஒவ்வொரு துறைக்கும் இணையதளம் உருவாக்கப்படும். அரசின் திட்டங்கள் அனைத்தும் அதில் வெளியிடப்படும்.
- அரசின் ஒப்பந்தங்கள் மற்றும் ஒப்பந்ததாரர் விவரங்கள் வெளியிடப்படும். மொத்தத் தொகை முடிக்க வேண்டிய காலகட்டங்கள், அதன் தன்மை என அனைத்தும் மக்கள் பார்வைக்கு வைக்கப்படும்.
- துறை வாரியாக அரசு அதிகாரிகளின் பெயர்கள், அவர்களின் பொறுப்புகள், செய்ய வேண்டிய பணிகள் குறித்த விவரம் இருக்கும்.
- ஒவ்வொரு துறைக்கும் ஒதுக்கப்பட்ட நிதிகள் எவ்வளவு, செலவிடப்பட்ட விதங்கள் என்ன என்ற வரவு செலவுக் கணக்குகள் தொடர்ந்து வெளியானபடி இருக்கும்.
- நமது அரசுக்கு எந்தெந்த வகையில் நிதி வருவாய் கிடைக்கின்றது, அதைக்கொண்டு துறைகள் ரீதியாக ஒதுக்கப்படும் நிதி எவ்வளவு என்ற விவரங்களை நாம் தமிழர் அரசு வெளியிடும்.

அறிவுரைஞர் அவையம்

- ஒவ்வொரு துறைக்கும் ஐம்பேராயம், எண்பேராயம் என்று அவையம் அமைக்கப்படும். இந்த அவையத்தின் ஆய்வுரைத் திட்டங்களின் பேரில் அந்தந்தத் துறைகள் செயலாற்றும். அரசின் திட்டங்கள் மக்களைச் சென்றடையாமல் எங்கே தடங்கலாகி நிற்கிறது, அதற்கான தீர்வு என்ன என்பதைக் கண்டறிந்து உரிய நடவடிக்கைகள் எடுக்க இந்த அறிவுரைஞர் அவையம் செயலாற்றும்.

மக்களும் கண்காணிக்கலாம்

- ஊராட்சி முதல் மாநகராட்சி வரை, அதன் நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டும். அந்த நிர்வாகம் குறித்த தகவல்களும் மாவட்ட வாரியாக இணையத்தில் தனிப்பிரிவாக வெளியிடப்படும்.
- மக்களின் கோரிக்கை மனு எந்த அதிகாரியிடம் இருக்கின்றது. அதன் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகிறது என்பதை வெளிப்படையாக அறிந்து கொள்ள விண்ணப்பதாரர்களுக்கு ஒரு குறியீட்டு எண் வழங்கப்படும். அதை வைத்து

அவர்களே இணையத்தில் தங்கள் மனு குறித்த தகவல்களை வெளிப்படையாக அறிந்து கொள்ளலாம். இதன் மூலம் கையூட்டு, ஊழல் தவிர்க்கப்படும்.

பொறுப்புடைமை உரிமை (Right to Accountability)

- நாட்டின் குடிமக்கள் அரசின் திட்டங்களையும், துறைசார் சேவைகளையும் உரிய நேரத்தில் பெற்றுப் பயனடையும் வகையில், அதனைக் கையாளும் அரசு அதிகாரிகள் மக்களிடத்தில் நேரடியாகப் பொறுப்புடைமை கொண்டிருக்க வேண்டியதைக் கடமையாக மாற்றிட வேண்டும். பொதுமக்கள் அரசிடத்தில் விண்ணப்பிக்கும் சேவைகளுக்குக் குறித்த காலத்திற்குள் தீர்வு எட்டுகின்ற முறை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் வழியே பொதுத் தகவல் அதிகாரியிடம் தகவல்களைக் கேட்டுப் பெறுவது போல, ஒரு சேவையின் நிலை, அதற்குக் குறித்த காலத்திற்குள் தீர்வு காணுவது போன்றவற்றிற்கு அதிகாரிகளே பொறுப்புரிமை கொண்டிருக்கும் வகையில், உரிய காலத்திற்குள் தீர்வு காணும் உறுதியை விண்ணப்பித்த மக்களே பெற வழிவகை செய்ய முடியும்.
- அவ்வாறு குறித்த காலத்திற்குள் சேவையினை அரசு அதிகாரிகள் வழங்காத நிலையில், அவர்கள் நேரடியாகக் குறிப்பிட்டவருக்குப் பொறுப்பாகும் முறை இதன்மூலம் நடைமுறைப்படுத்தப்படும். இந்தப் பொறுப்புரிமை கடமையை அரசமைப்புச் சட்டத்தின் உறுப்பாக இணைப்பதற்கான முயற்சிகளை நாம் தமிழர் அரசு முன்னெடுக்கும்.
- இந்த உரிமையை அரசமைப்புச் சட்டத்தில் சேர்ப்பதன் வழியே, மக்களின் சேவைக்காக நியமிக்கப்பட்ட அரசு ஊழியர்கள், செய்ய வேண்டிய வேலைகளைத் தாமதிக்கும்போது, அவர்களுக்குத் தண்டனையாக மக்களுக்கு இழப்பீடு வழங்கும் அதிகாரம் படைத்த சேவை பெறும் உரிமைச் சட்டம் கொண்டு வரப்படும். பாதிக்கப்படும் மக்களுக்குத் தகுந்த அதிகாரியே இழப்பீட்டை வழங்க வேண்டும்.


ஊடக உரிமை

- அச்சு ஊடகம் மற்றும் காணொளி ஊடகங்களுக்கு 100 விழுக்காடு சுதந்திரம் அளிக்கப்படும். பாகுபாடின்றி அனைத்துச் சிறிய பெரிய ஊடகங்களுக்கும் விதிமுறைக்குட்பட்டு அரசு விளம்பரம் அளிக்கப்படும்.
- ஊடகங்கள் மூலம் சுட்டிக்காட்டப்படும் அரசின் குற்றங்கள், குறைபாடுகள் சரியாக இருப்பின் அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

அச்சு ஊடகவியலாளர்கள் நலன்

- அச்சு ஊடகப் பத்திரிகையாளர்கள் செய்தித் திரட்டவும், பணி ரீதியாகவும் மேற்கொள்ளும் பயணத்திற்கு பயணச் சலுகைகள் அளிக்கப்படும். ஊடகம் சார்ந்த உயர் படிப்பிற்கான உதவிகள் செய்து கொடுக்கப்படும்.
- 20 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற மூத்த பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.
- ஊடகக் காப்பகம் (Media Archives): பத்திரிகையாளர்கள் தங்களின் ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளத் தேவையான இணைய தரவுத்தளங்களை இலவசமாக அணுக வழிவகை செய்யப்படும்.





என்னுடைய
பொருளாதாரம், அரசியல்,
அதிகாரம் இவை மூன்றில்
எதாவது ஒன்று
பிறரிடத்தில் இருந்தாலே
நான் அடிமையாகி
விடுவேன், ஆனால்
எம் இன மக்களுக்கு இவை
மூன்றும் நீண்ட காலமாகப்
பிறரிடத்தில் இருக்கிறது.

மக்கள் அரசு சேவை மையம்

- டெல்லியில் உள்ள "Doorstep Delivery of Services", கர்நாடகாவில் உள்ள "Janasevaka" சேவைகள் போன்று நாம் தமிழர் அரசின் 'சேவை மையம்' மக்களுக்கான சேவைகளை வீடு தேடி வந்து செய்து கொடுக்கும். பொது மக்கள் அரசு அலுவலகங்களுக்குச் சென்று காத்திருந்து கையூட்டுக் கொடுத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவையில்லை.
- வீட்டு வரி, சொத்து வரி, குடும்ப அட்டை, குடிநீர், புதிய இணைப்புக் கட்டணங்கள் உள்ளிட்ட மக்களின் கோரிக்கையைச் சேவை மைய இயந்திரத்தில் பதிவு செய்துவிட்டால் சம்பந்தப்பட்ட அரசு ஊழியர்கள் வீட்டிற்கே வந்து தேவைகளைச் செய்து கொடுப்பார்கள்.
- இச்சேவை மையம் தமிழ்நாடு முழுவதும் அமைக்கப்படும்.
- இச்சேவை மையம் முழுவதும் கணினிமயத்தில் இயங்கும். இதற்கான மென்பொருளை உருவாக்கி அரசே ஏற்று நடத்தும்.
- படித்த இளைஞர்களை 'சேவை முகவர்களாக' (Service Agents) நியமிப்பதன் மூலம் அவர்களுக்கு வேலைவாய்ப்பையும் அரசு வழங்க முடியும்.

நியாயவிலைக் கடைகள்

- தற்போது நியாய விலைக் கடைகளில் பொது மக்களுக்கான வழங்கு பொருட்கள் சரியாகக் கிடைப்பதில்லை. அரிசி, சர்க்கரை உள்ளிட்ட முக்கியப் பொருட்களின் பற்றாக்குறை, அதில் இருக்கும் சிக்கல்கள் ஆகியவற்றை நாம் தமிழர் அரசு சரி செய்து முறைப்படுத்தும்.
- தற்போது 'டிஎன்பிடிஎஸ்' (TN-PDS) அலைபேசி செயலி மூலம் கடையில் உள்ள இருப்பு விவரங்களை மக்கள் பார்க்க முடிந்தாலும் அது முழுமையானதாக இல்லை. நாம் தமிழர் அரசு இதனை வெளிப்படையாகவும், மக்களுக்குப் புரியும் வகையிலும் மாற்றியமைக்கும்.
- தற்போது பல கடைகளில் 'Point of Sale' (POS) கருவிகள் மூலம் பொருட்கள் வழங்கப்படுகின்றன. வருங்காலத்தில் இது தானியங்கி எந்திரங்கள் (Automatic Grain Dispensers) மூலம் வழங்கப்பட்டு முறைகேடுகள் 100% தவிர்க்கப்படும்.
- சிற்றூர்களில் 200 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாயவிலைக் கடையும், நகரங்களில் 100 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாயவிலைக் கடையும் அமைக்கப்படும்.

கணினிமய நிர்வாகம்

- நாம் தமிழர் அரசு அனைத்து அரசுத்துறைகளையும், சேவைகளையும் முழுவதும் கணினிமயமாக்கும்.
- கணினிமயமாக்குவதன் மூலம் கையூட்டு, ஊழல், நேர விரயம் பெருமளவு தடுக்கப்படும். கணினிமயமாக்கலில் செயற்கை நுண்ணறிவை (AI) இணைப்பதன் மூலம், கோப்புகளை ஆய்வு செய்வது மற்றும் ஒப்புதல் வழங்குவதை மனிதத் தலையீடு இன்றியே நடைமுறைப்படுத்தலாம். இது கையூட்டு பெறுவதை முற்றிலுமாக ஒழிக்கும். எனவே அரசுத் துறைகளுக்குத் தேவையான அனைத்து மென்பொருட்களையும் (Software) வலைதளங்களையும் அரசே ஒரு மென்பொருள் நிறுவனத்தை உருவாக்கி அதற்கான பொறியாளர்களை அரசு ஊழியர்களாக நியமித்துத் தன் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளும்..



- ஜெர்மனியின் ம்யூனிக் (Munich) நகரம் தனது நிர்வாகத்தை முழுமையாக Linux-க்கு மாற்றியது. இந்தியாவிலேயே கேரள மாநில அரசு தனது பள்ளிக் கல்வி மற்றும் பல அரசுத் துறைகளில் Open Source மென்பொருள்களைப் பயன்படுத்தி கோடிக்கணக்கான ரூபாயைச் சேமித்துள்ளது.
- நாம் தமிழர் அரசின் அனைத்து அரசு துறைக் கணினியிலும் Microsoft Windows இயங்கு தளங்களை நீக்கித் திறந்த வெளிமூலத் தொழில் நுட்பமான (Open Source Technology) Linux இயங்குதளத்தைப் பயன்படுத்தும்.
- திறந்தவெளி மூலத் தொழில் நுட்பத்தைப் (Open Source) பயன்படுத்தி அனைத்து மென்பொருள், வலைத்தளங்களை உருவாக்கிக் கொள்ளும்.
- நாம் தமிழர் அரசு நடத்தும் வேளாண் பண்ணை, ஆட்டுப் பண்ணை, கோழிப் பண்ணை, மாட்டுப் பண்ணை, உரம் தயாரிக்கும் தொழிற்சாலை போன்ற அனைத்துப் பண்ணைகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் தேவையான நிறுவன வளத் திட்டமிடல் (Enterprise Resource Planning) மென்பொருளை அரசே உருவாக்கிக் கொள்ளும்.
- அரசுத் துறைகளுக்கான வலைதளங்களையும் அரசு மென்பொருள் நிறுவனத்தைப் பயன்படுத்தி உருவாக்கி கொள்ளும்.
- அரசு உற்பத்தி செய்யும் அனைத்துப் பொருட்களின் உலக மற்றும் வெளிமாநிலச் சந்தை வர்த்தகத்திற்கென்று சிறப்பு வலைதளம் உருவாக்கப்படும்.





கண்காணிப்பு

- நாம் தமிழர் அரசு காவல் நிலையங்கள், அரசு அலுவலகங்கள், அரசு மருத்துவமனைகள், சாலைகள் மற்றும் பொது இடங்களில் கண்காணிப்புக் கருவிகளைப் பொருத்திக் கண்காணிக்கும்.
- இதற்குத் தேவையான கண்காணிப்பு மையம், பராமரிப்பு போன்ற சேவைகளிலும் அரசு மென்பொருள் நிறுவனம் ஈடுபடும்.
- அரசு சேவைகளுக்கான அழைப்பு உதவி மையம் (Call Center) அரசு மென்பொருள் நிறுவனத்தின் மூலம் நடத்தப்படும்.

மாதிரி சிற்றூர் – பேரூராட்சி

- ஒவ்வொரு சிற்றூரும் திருநெல்வேலி மாவட்டம் 'ஜமீன் தேவர் குளம்' போன்று மாற்றப்படும்.
- இச்சிற்றூர் 2014 - 2015 கால கட்டத்திலேயே "தொழில் நுட்ப கிராமம்" (Tech-Savvy Village) என்று ஊடகங்களால் கொண்டாடப்பட்டது. தெருக்களில் CCTV புகைப்படக் கருவிகள் பொருத்தப்பட்டு, ஊராட்சி அலுவலகத்தில் இருந்து கண்காணிக்கப்படுகிறது.
- ஊர் முழுவதும் ஒலிபெருக்கி அமைக்கப்பட்டு, அரசுத் திட்டங்கள் மற்றும் அவசரத் தகவல்கள் உடனுக்குடன் பகிரப்படுகின்றன. பொது இடங்களில், சுவரொட்டிகள் ஒட்ட, பதாகைகள் வைக்க அனுமதி இல்லை என்ற கட்டுப்பாட்டை மக்கள் தாமாகவே கடைபிடிக்கின்றனர்.
- ஜமீன் தேவர்குளம் போல அனைத்துக் கிராமங்களும் மாதிரி ஊராட்சிகளுக்கு "நிதியதிகாரம்" (Financial Autonomy) வழங்கப்படும். கிராம சபைகள் வெறும் பெயரளவில் இல்லாமல், உண்மையான அதிகாரம் கொண்டதாக அமையும்.
- அதே போன்று ஏர்வாடி பேரூராட்சி அதன் தூய்மை மற்றும் முறையான வரி வசூல் மேலாண்மைக்காகப் பலமுறை பாராட்டுகளைப் பெற்றுள்ளது. நவீன சாலை வசதிகள், குப்பைகளை முறையாகத் தரம் பிரித்தல் மற்றும் வரிப்பணத்தில் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றைச் செயல்படுத்திய ஒரு பேரூராட்சியாக இது அறியப்படுகிறது.
- ஏர்வாடி போல வரிப்பணத்தை முறையாகப் பயன்படுத்த, ஒவ்வொரு பேரூராட்சிக்கும் பொதுவில் ஒரு மின்னணு நிர்வாகப் பலகை - "Digital Dashboard" உருவாக்கி மக்கள் பார்வைக்கு வைக்கப்படும்.
- சுத்தமான குடிநீர், சுகாதாரமான நகரம், கையூட்டு இல்லா நிர்வாகம் என்ற உறுதி, நவீன சாலை வசதிகள், மக்களின் வரிப்பணத்தை முறையாகச் செயல்படுத்துவது என்று எல்லா வகையிலும் ஏர்வாடி பேரூராட்சி சிறந்து விளங்குவதைப் போல் நாம் தமிழர் ஆட்சியில் தமிழகப் பேரூராட்சிகள் கொண்டு வரப்படும்.
- நாம் தமிழர் அரசு இந்த இரண்டு ஊர்களையும் முன்மாதிரியாகக் கொண்டு தமிழகம் முழுவதும் சிற்றூர் - பேரூராட்சி அளவில் மாற்றங்களைச் செய்யும்.





ஈழம்

எங்கள் இனத்தின் தேசம்

> உலகத்தில்
> ஐம்பதாயிரம்
> ஆண்டுகளுக்கு
> மூத்த ஒரு
> தொல்குடி
> இனம் தமிழ்த்தேசிய
> இனம். இன்று
> 130 நாடுகளில் பரவி வாழ்கிறார்கள்.
> தமிழர் வாழாத
> நாடில்லை, ஆனால்
> தமிழருக்கென்று
> ஒரு நாடில்லை.

இந்த உலகில் வெறும் 20,000 எண்ணிக்கை கொண்ட இன மக்கள் கூட விடுதலை பெற்றுப் பெருமையாக வாழ்கின்றார்கள். ஆனால், ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான மூத்த தமிழ்க்குடி, 13 கோடிக்கு மேல் இவ்வுலகில் பரவி நிறைந்து வாழுகிற ஒரு தேசிய இனத்தின் மக்கள், இந்த உலகில் தங்களுக்கென்று ஒரு தேசம் அடைந்து எல்லா மொழிவழித் தேசிய இனங்களைப் போல விடுதலை பெற்று, உரிமையோடு, உயர்ந்து சிறந்து பெருமையோடு வாழவேண்டும் என்ற கனவோடுதான் இலங்கையில் ஈழ விடுதலைப் போராட்டம் தொடங்கியது. அதைத்தான் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் வீரம் செறிந்த விடுதலைப் போராட்டமாக முன்னெடுத்தார்கள். ஈழத் தமிழ்த்தேசிய மக்கள், அடிப்படைப் பிறப்புரிமைக்காக விடுதலை கேட்டு நின்றார்கள். அவர்கள் தாய் நிலத்திலே, அவர்கள் விடுதலையாக வளர்ந்து வாழ்வதற்கான உரிமையைத் தான் கேட்டார்கள். ஆனால் சிங்களப் பேரினவாத அரசும், உலக வல்லாதிக்கமும் சேர்ந்து விடுதலைப் போராட்டத்தை அதிவன்மையம் (தீவிரவாதம்) என குற்றம்சாட்டி, அதன் பேரில் 2009இல் ஒரு தமிழினப் படுகொலையையே நடத்தி முடித்தது. சிங்களப் பேரினவாத அரசோ, அதனை 'பேரச்சவியச்சத்திற்கு (பயங்கரவாதத்திற்கு) எதிரான போர்' என்றது. அவர்கள் நடத்தியது போர் அல்ல, முழுவதுமான ஓர் இன அழிப்பு.




அடிமையாக வாழ்வதை விட

- ஆயிரம் ஆண்டுகள் அடிமையாக வாழ்வதை விட, விடுதலையாக சாவது மேலானது, அதுவும் அந்த விடுதலைக்காகப் போராடிச் சாவது அதைவிட மேலானது என்ற முழக்கத்தை முன்வைத்துதான் அங்கே விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அந்த விடுதலைப் போராட்டத்தை அதிவன்மையம் (தீவிரவாதம்) என்ற பெயரில் அழித்ததை, நாம் தமிழர் கட்சி தொடர்ந்து கண்டிக்கின்றது.

உயிர் மூச்சாக

- நாம் தமிழர் கட்சி ஈழத்தை ஒரு தூரத் தீவாக, மூன்றெழுத்து சொல்லாகப் பார்க்கவில்லை. தமிழ்த்தேசிய இனத்தின் மூச்சாக, உயிராக, பெரும் கனவாகப் பார்க்கின்றது. ஒரு இனம், என்று தனக்கென ஓர் தேசம் அடைகிறதோ அன்று தான் முழுமையான விடுதலை அடையும் என்பதை மீண்டும் மீண்டும் உணர்த்துகிறது.




தன்மானத்திற்கு இயக்கம்

- உலகத்தில், தன்மானத்திற்கு என்று இயக்கம் கண்ட தமிழன், இன்று அவமானச் சின்னமாக அலைகிறான். ஓர் அரசியல் விடுதலைப் போராட்டத்தை உலகெங்கும் வாழும் தமிழர்கள் முன்னெடுக்கிறார்கள். இந்தப் போராட்டத்தின் இறுதியாக 2008 தொடங்கி 2009 மே 18 வரையில் 1,75,000 பேருக்கும் மேல் மக்களைப் படுகொலை செய்து, உலக வரலாற்றில் இப்படியொரு கொடூர இனப்படுகொலை நடக்கவில்லை என்கிற அளவிற்கு நடத்திக் காட்டியிருக்கின்றது சிங்களப் பேரினவாதம்.

- இன்றைக்கும் அந்த நிலத்தில் 90,000 கணவனை இழந்த பெண்கள் இருக்கிறார்கள் என்கிறது ஆய்வு. நடந்தது திட்டமிட்ட இனப்படுகொலை என்று பேச உலகத்தில் ஒருவரும் இல்லை, தங்கை இசைப்பிரியா, தம்பி பாலச்சந்திரனின் மரணங்களைக் கூட குறிப்பிட்டுப் பேச, மானுடநேயம் பேசுகிற உலகத்தாரிடையே ஒருவர் குரலும் எழவில்லை என்பது வரலாற்றில் பெருந்துயரம்.

- ஈழ மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கான நீதியைக் கேட்டு, கடந்த பதினேழு ஆண்டுகளாகக் கடுமையாகப் போராடிக் கொண்டிருகிறோம். பன்னாட்டுச் சமூகத்திலும், ஒன்றிய நாடுகளின் (ஐ.நா) பெருமன்றதிலும் நியாயம் கேட்டு நின்றிருக்கிறோம். இந்தியா உட்பட உலக பெரும் நாடுகளும், தலைவர்களும் அங்கு நடந்தது வெறும் மாந்த உரிமை மீறல் தான் என்றும், சிலர் போர்க்குற்றம் தான் என்றும் கூறுகின்றனர். இதை நாம் தமிழர் கட்சி ஏற்க மறுக்கிறது. இந்தக் கருத்தாக்கத்தைக் கடுமையாக எதிர்க்கிறது.

- மாந்த உரிமை மீறல் என்பது ஒரு மாந்தன் உயிரோடு இருக்கும்போது அவன் உரிமையைப் பறிப்பது. ஒரு மாந்தனின் உயிரையே பறிப்பது உரிமை மீறல் அல்ல, அது கொலை.

போர்க் குற்றமல்ல, இனப்படுகொலை

- போர்க்குற்றம் என்றால் போர் சரியானது, அதில் சில குற்றங்கள் நடந்திருக்கிறது என்றாகிறது. ஆனால் நாம் தமிழர் கட்சி அந்தப் போரையே குற்றமாகப் பார்க்கின்றது. அங்கே நடந்திருப்பது வெறும் கொலை அல்ல, இனப்படுகொலை. பச்சிளம் குழந்தைகள், அகவை முதிர்ந்தவர்கள் கருவுற்ற பெண்கள், மருத்துவமனைகள் மீது தாக்குதல் நடத்தி ஏதுமறியாத் தமிழர்களை அழித்தொழித்த கொடுஞ் செயலை எப்படி மறப்பது. குறிப்பாக 'இது பாதுகாப்பான பகுதி எல்லோரும் வாருங்கள்' என்று அழைத்து, அங்கே மக்களைக் குவித்து, அந்த இடத்திலேயே தாக்குதல் நடத்தி அழித்தது சிங்களப் பேரினவாதம்.

சொந்த நாட்டின் மீது

- சொந்த நாட்டின் மக்களின் மீது வான்வழித் தாக்குதல் நடத்தக்கூடாது என்கிற அடிப்படைப் போர் மரபுகளை மீறி, ஏதுமறியா மக்களைக் கொன்றொழித்தனர்.




SRI LANKA ARMY








UNIVERSITY OF JAFFNA
SRI LANKA





அரை நூற்றாண்டுக்கும் மேலான சூழ்ச்சி

- வெறும் ஒன்றரை ஆண்டுகளுக்குள் இந்தப்போரை நடத்தி தமிழர்களை அழித்தொழிக்கவில்லை. சற்றொப்ப அரை நூற்றாண்டுக்கும் மேலாக சிறுகச் சிறுக எமது மொழியை சிதைத்து, எமது அதிகாரங்களைப் பறித்து, எமது வளங்களைச் சுரண்டி, எமது நிலங்களை வன்கவர்பு செய்து, எமது ஈழ மக்களை அழித்து முடித்தனர். இறந்தது முழுக்க தமிழர்கள், கொன்றொழித்தது சிங்களப் பேரினவாத அரசு. எனவே தான், இதைத் திட்டமிட்ட இனப்படுகொலையாக நாம் தமிழர் கட்சி பார்க்கிறது.

- எனவே எங்களைக் கொன்றொழித்த கூட்டத்தோடு இனி கூடி வாழ்வதென்பது வாய்ப்பில்லை. இலங்கையில் இரண்டு இனங்கள், ஒன்று தமிழர் மற்றொன்று சிங்களர், இரண்டும் பகை இனங்களாக 60 ஆண்டுகளுக்கும் மேலாக மாறி நிற்கிறது.

- இனி அங்கே சிங்களப் பேரினவாத அரசுடன் தமிழ் மக்கள் கூடி வாழ்வதற்கு வாய்ப்பில்லை. எனவே எமக்கிருக்கிற ஒரே ஒரு வழி நார்வே - சுவீடன் பிரிந்தது போல, கிழக்குத் தைமூர் - மேற்குத் தைமூர் பிரிந்தது போல், செர்பியா நாட்டிலிருந்து கொசோவா விடுதலை பெற்றதைப் போல், அண்மையில் தெற்குச்சூடான் விடுதலை பெற்றதைப் போல் ஒரு பொது வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்ற நீதியின் குரலை எழுப்புகின்றோம். கனடாவில் கியுபெக் இன மக்கள் இரண்டு முறை பொது வாக்கெடுப்புக்கு வந்து, அந்தப் பொதுவாக்கெடுப்புத் தோற்றுப் போய், இன்று கனடாவில் இணைந்து வாழ்வதுபோல, அண்மையில் ஸ்காட்லாந்து இன மக்கள் தனியாக நாடு கேட்டு அதற்கான பொதுவாக்கெடுப்பு நடத்தப்பெற்று இங்கிலாந்தில் வாக்கெடுப்புத் தோற்றுப்போய், அவர்கள் இங்கிலாந்தோடு சேர்ந்து வாழ்வதுபோல எமக்கொரு அரசியல் வாய்ப்பு, மக்களாட்சி வாய்ப்பு, ஒற்றை இலங்கைக்குள் ஒரே ஆட்சிக்குள் தான் வாழ்ந்தாக வேண்டும், இரண்டு நாடாகப் பிரியக்கூடாது என்று பேசுகிற பெருமக்கள், கருத்தாளர்கள், அறிஞர்கள், எழுத்தாளர்கள், எம் மக்களிடத்தில், 'ஒரே இலங்கைக்குள் வாழ்கிறீர்களா? தனித்தமிழ் ஈழமாக மீள்கிறீர்களா?' என்ற கருத்தை வைத்து ஒரு பொது வாக்கெடுப்பை நடத்துங்கள். அறிவார்ந்த பெருமக்கள், வல்லாதிக்கத் தலைவர்கள் எல்லோரும் மற்ற நாடுகள் எப்படி மக்களாட்சி முறைப்படி பிரிந்ததோ, அப்படி எமது தமிழ்த்தேசிய மக்களுக்கான ஈழ நாட்டைப் பிரித்து விடுதலை பெற்ற நாடாக, எல்லோரையும் போல தன்மானத்துடன் பிறக்க, வாழ, இறக்க உரிமையைப் பெற்றுத்தாருங்கள்.

இந்தியாவின் கவனத்திற்கு

- இன அழிப்பு நடந்து பதினேழு ஆண்டுகள் கடந்துவிட்டது. இன்றும் போரில் காணாமல் போனவர்கள் பற்றிய முறையான பதில் இல்லை. காணாமல் ஆக்கப்பட்டோர் அனைவரும், போர் நடக்காத பகுதிகளில் மக்களாலேயே போர்ப்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள். அவர்களை மீட்டுத்தரக்கோரி கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலான அறவழி, அமைதிவழிப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றது தமிழ்ப் பெண்கள் அமைப்பு. உலகில் வேறு எங்கும் இவ்வளவு நீண்ட நாள் போராட்டம் நடந்ததில்லை. போர் முடிந்த நிலையில் உலக நாடுகளிடம் என்னவெல்லாம் வாக்குறுதி கொடுத்தார்களோ, அதை இன்றுவரை நிறைவேற்றவேயில்லை. போர்க்குற்றத்திற்கான வினாவுதலை நடத்தி





முள்வேலி முகாம்



ஈழமண்ணில்
இன அழிப்பு போர்



முள்ளிவாய்க்கால் இன அழிப்புப்
போரின் போது







சிங்களப் போர்ப்படைக் கட்டுப்பாட்டில்







ஈழத்தில் நடந்த இனப்படுகொலை









முடிக்கவில்லை. அதனால்தான், உலக நாடுகளின் மேற்பார்வையில் ஒரு பொது வாக்கெடுப்பு நடத்துங்கள் என்று கேட்கின்றோம்.

- இதற்கான குரலையும், 'இலங்கை அரசின் மீது இனப்படுகொலைக்கான நீதி வேண்டும்' என்று பல கோடி தமிழர்கள் சார்பிலான கோரிக்கையை இந்திய ஒன்றிய அரசு, உலக நாடுகளிடம் எழுப்பி, ஐ.நா. மன்றத்தில் ஒலிக்கச் செய்ய வேண்டும். இந்தக் கோரிக்கையை நாம் தமிழர் கட்சி வலியுறுத்தியபடி இருக்கிறது. அதற்குக் காரணம், ஈழத்தமிழ் மக்கள் எப்போதும் இந்தியாவிற்கு ஆதரவானவர்கள். அமெரிக்காவிற்கு எப்படி இஸ்ரேல் நாடு துணை நிற்கின்றதோ, அப்படி இந்தியப் பெருங்கடல் பகுதியில் இந்தியாவுக்குத் தனி ஈழம் இருக்கும். இதைத்தான் எமது தேசியத் தலைவர் எப்போதும் வலியுறுத்தி வந்தார்.

இந்தியப் பற்றாளர்

- தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள், உலகத்தில் எத்தனையோ விடுதலைப் போராட்டத் தலைவர்களுடைய வரலாற்றை வாசித்து நேசித்து இருந்தாலும் கூட, இந்திய மண்ணின் விடுதலைக்குப் போராடிய நேதாஜி சுபாஸ் சந்திரபோசைத் தனது முன்மாதிரியாக எடுத்துக் கொண்டார்.

மறுப்புத் தெரிவித்தார்

- அமெரிக்க வல்லாதிக்க நாடு, எத்தனையோ முறை, "உங்களுக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுக்கின்றோம், உதவியாய் நிற்கின்றோம். அதற்கு மாற்றாக எங்களுக்குத் திரிகோணமலை கடற்பரப்பை 30 ஆண்டுகள் ஒத்தியாகக் கொடுங்கள்" எனக் கேட்டபோது கூட தலைவர் பிரபாகரன் அதை ஏற்கவில்லை.

புலிகள் மீதான தடை நீக்கம்

- விடுதலைப் புலிகள் மீது சுமத்தப்பட்டிருக்கின்ற தடையை நாம் தமிழர் கட்சி தமிழ்த்தேசிய இனத்தின் மீது சுமத்தப்பட்ட அவமானமாகக் கருதுகிறது. தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலைக்கும் உரிமைக்கும் போராடிய மக்கள் போர்ப்படை தான் விடுதலைப் புலிகள் அமைப்பு என்பதே நாம் தமிழர் அரசின் நிலைப்பாடு. இன்றைக்கு அந்த இயக்கம் முற்றுமுழுதுமாய் அழித்து ஒழிக்கப்பட்டுவிட்டதாக இலங்கை அரசே அறிவித்த பிறகும் இந்தியாவில் தடையை நீட்டித்து அதன்மூலம் தமிழினத்தின் உரிமையை, அரசியலாக முன்நகர விடாமல், இந்திய ஒன்றிய அரசு பல வழிகளில் தடுக்கிறது என்றால் மிகையாகாது. மேலும் இங்கு நடைமுறையில் உள்ள UAPA என்கிற ஆள்தூக்கிச்சட்டம், இந்த நிலப்பரப்பில் வாழும் பல்வேறு தேசிய இனங்களின் உரிமைகளை நசுக்கவே பயன்படுகிறது. இன்றைய நிலையில் இந்த நாட்டின் மதிப்பிற்குரிய சமூகச் செயற்பாட்டாளர்களாக அரியப்படும் சுதா பரத்வாஜ், கவுதம் நவ்லகா, ஆனந்த் டெல்டும்டே, சுரேந்திர காட்லிங், ரோனா வில்சன் உட்பட எண்ணற்றோர் இந்த மக்களுக்கு எதிரான சட்டத்தினால் கொடுஞ்சிறையில் துன்புற்றுள்ளனர். அப்படிப்பட்ட மக்களுக்கு எதிரான ஆள்தூக்கிச் சட்டத்தின் கீழ் நிகழ்த்தப்படும் இந்தத் தடையை என்றென்றும் தமிழர் எதிர்ப்பு நடவடிக்கையாகவே நாம் தமிழர் அரசு அணுகும். தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை உறுதி செய்ய ஒன்றிய அரசு எடுக்கும் எல்லா முயற்சிகளையும், அரசியல் அடிப்படையில் நாம் தமிழர் அரசு முறியடிக்கும் என்பதை பதிவு செய்கிறது.





எம்.ஜி.ஆர் பிரபாகரன் சந்திப்பு



இராஜீவ்காந்தியைத் தாக்கும் இலங்கைக் கடற்படை வீரன்



முன்னாள் பிரதமர் இராஜீவ்காந்தியுடன் பிரபாகரன் சந்திப்பு



பாலசந்திரன் மரணத்திற்கு நீதி கேட்டு நடந்த போராட்டம்

சொந்த நாட்டில்

வாழ முடியாத

ஏதிலிகளாகவும்,

வயிற்றில் கருவோடும்,

இடுப்பில் குழந்தையோடும்

ஆயுதங்களின்றி

வருபவர்களைக்கூட

இந்நாடு

பயங்கரவாதிகளாகத்தான்

பார்க்கிறது.



- இந்தத் தடையினால் தங்கள் சொந்த நாட்டில் வாழ முடியாத ஏதிலிகளாகவும், வயிற்றில் கருவோடும், இடுப்பில் குழந்தையோடும் ஆயுதங்களின்றியும் வருபவர்களைக் கூட இந்நாடு வன்முறையாளர்களாகத்தான் பார்க்கிறது. சிங்களப் பேரினவாத இனவெறி அரசுக்கு அஞ்சி தப்பி வரும் எம்மக்களை ஏதிலிகளாகப் பார்க்காமல் வன்முறையாளர்களாக நடத்தும் இந்தத் தடை என்றென்றும் எதிர்க்கப்பட வேண்டியதே. இப்படித் தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலைக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் புலிகள் மீதான தடையை நீக்க நாம் தமிழர் அரசு செயல்திட்டம் வகுக்கும்.

அறிவார்ந்த ஆளுமைக் குழு

- நாம் தமிழர் அரசு சார்பாக, அறிவார்ந்த ஆளுமைகளை ஒருங்கிணைத்து ஒரு குழு அமைக்கப்படும். அந்தக்குழு, இந்தியாவின் பிற மாநில முதல்வர்களை, எதிர்க்கட்சித் தலைவர்களை, அரசியலாளர்களை, கருத்தாளர்களை, எழுத்தாளர்களை தொடர்ச்சியாகச் சந்தித்துக் கலந்துரையாடும். ஈழ இனப்படுகொலைக்கான காரணங்கள் என்ன, எதற்காகப் புலிகள் போராடினார்கள் என்பதையெல்லாம் ஆவணங்களோடு விளக்கிக் கூறும். நாம் தமிழர் கட்சி கடந்த 15 ஆண்டுகளில் இப்படியான சில முயற்சிகளை இந்தியாவின் பிற பகுதி தலைவர்களுடன் பேசி வெளிப்படுத்தி உள்ளது. இனி இப்படித் தொடர் அழுத்தங்கள், பரப்புரைகள் மூலம் இந்தியாவின் பிற மாநிலங்கள் மற்றும் பிற தேசிய இனங்களின் ஆதரவைப் பெற்று ஒன்றிய அரசின் போக்கை மாற்ற முயற்சிகள் எடுக்கப்படும். அதே போன்று உலகளவில் அந்தந்த நாட்டு நிகராளர்கள், அறிவார்ந்தவர்களைச் சந்தித்து, புலிகள் மீதான தடை, இனப்படுகொலைக்கான நீதியைப் பொது வாக்கெடுப்பு உள்ளிட்ட பலவற்றையும் எடுத்துரைத்து நீதியை நிலைநாட்ட நாம் தமிழர் அரசு இணக்கமின்றி பாடுபடும் என்று உறுதியளிக்கிறது.

இலக்கு ஒன்றுதான் இனத்தின் விடுதலை

- கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாகப் போராடி, குருதி சிந்தி, கண்ணீர் சிந்தி, உயிரை விலையாகக் கொடுத்து, வீட்டை இழந்து, நாட்டை இழந்து, பல்வேறு நாடுகளில் பரவி வாழ்கின்ற தாய்த்தமிழ் உறவுகள் ஈழ விடுதலை அரசியலை, பன்னாட்டு அரசியலாக மாற்றி நிறுத்தியிருக்கிற இவ்வேளையில், 'தனித் தமிழீழ சமனியக் குடியரசை' அடைய அனைத்து வகையிலும் நாம் தமிழர் அரசு உறுதி செய்யும்.


- நாம் தமிழர் அரசுக்கு உயர்ந்த நோக்கங்கள் பல இருப்பினும், மிக உயரிய உயிர்க் கொள்கையான, தமிழ்த்தேசிய இன மக்களுக்கென இந்த உலகில் ஒரு தேசம் அடைவதில் உறுதியாக இருக்கிறது. எனவே “இலக்கு ஒன்றுதான் இனத்தின் விடுதலை” என்ற ஒப்பற்றக் கனவோடு நாம் தமிழர் அரசு ஒவ்வொரு அடியையும் மிகக் கவனமாக எடுத்து வைத்துச் செல்லும்.





சொந்தமண்ணில் இன்றும் நிலவி வரும் உயர்பாதுகாப்பு வளையங்கள், ஆயுதம் தாங்கிய சிங்களப் படையின் அதிகார இருப்பு, வன்கவர்பு செய்யப்பட்ட தமிழர் நிலங்கள் மீண்டும் ஒப்படைக்கப்படாத சூழல், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், மீள் குடியமர்வைக் கேள்விக்குறியாக்கியுள்ளன.

ஈழத்தமிழ் உறவுகளுக்கான தீர்வு



ஈழ உறவுகளின் அவலம்

- தமிழ்நாட்டில் 34,000/-க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலக்கத்திற்கும் (இலட்சத்திற்கும்) அதிகமான ஈழ உறவுகள், ஏதிலிகளாக (அகதிகளாக) இருக்கிறார்கள். அவர்களில் 19,625 குடும்பங்களைச் சேர்ந்த 64,924 பேர் 107 தங்ககங்களில் (ஏதிலிகள் முகாம்) தங்கி இருந்தார்கள். 1987 முதல் 1989ஆம் ஆண்டு வரை 25,600 ஏதிலிகள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். 1992ஆம் ஆண்டில் இருந்து 1995ஆம் ஆண்டு வரை சற்றொப்ப 54,000 பேர் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டார்கள்.
- இந்த 54,000 ஈழத்தமிழர்கள் அனைவரும் வவுனியாவின் சிதம்பரபுரம் தங்ககத்தில் பல ஆண்டுகளாகத் தங்கியிருந்தார்கள். அங்கும் பல கொடுமைகள் நீடித்திருந்தது. அதனால் பலர் மீண்டும் இந்தியாவிற்கே திரும்பிவிட்டார்கள். இவர்கள் அடையாளமற்று, போக்குவரத்து முடக்கப்பட்டு, விடுதலையற்ற தங்ககக் கண்காணிப்பில் துன்பப்பட்டபோதும் 3,500க்கும் மேற்பட்ட இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டதாரிகளையும் உருவாக்கிக் காட்டினார்கள்.
- சொந்த மண்ணில் இன்றும் நிலவி வரும் உயர்பாதுகாப்பு வளையங்கள், ஆயுதம் தாங்கிய சிங்களப் படைப்பிரிவின் அதிகார இருப்பு, வன்கவர்பு செய்யப்பட்ட தமிழர் நிலங்கள் மீண்டும் ஒப்படைக்கப்படாத சூழல், பேரச்சவிய த் (பயங்கரவாத) தடுப்புச் சட்டம், மீள் குடியமர்வைக் கேள்விக்குறியாக்கியுள்ளன.

தொடரும் துயரங்கள்

- தமிழ்நாட்டில் உள்ள ஈழத்தமிழர் ஏதிலிகள் தங்குமிடங்களில் அவர்களுடைய துயரங்கள் சொல்லித் தீராதவை. போதிய தங்குமிடம், துப்புரவு வசதிகள் இல்லாத கொட்டில்களில் பாலியல் சீண்டல்களுக்கு உள்ளாகும் நிலையில் இருக்கிறார்கள். குற்றத்தடுப்புப் (‘கியூ’) பிரிவுக் காவலர்களும், வருவாய் அதிகாரிகளும் ஏதிலிகளைத் துன்புறுத்தி வருகிறார்கள். குடும்பத்தாரையே



பிரித்துச் சிறப்புத் தங்குமிடத்தில் (முகாமில்) அடைத்து விடுவோம் என்று கூறி பணம் கேட்டு மிரட்டுவது, பாலியல் தொந்தரவுகளைக் கொடுப்பது எல்லாம் நடந்து கொண்டிருக்கிறது.

திபெத், வங்கதேச ஏதிலிகள்

- திபெத்திய ஏதிலிகளுக்கு 'மைய திபெத்திய நிருவாகத்தின்' கீழ் அதிகாரங்கள், நீண்ட கால வசிப்பிடத்திற்கான ஐந்தாண்டுப் பதிவுச் சான்றிதழ்கள், தன்விருப்பக் கல்வி மற்றும் நல வாழ்வு உரிமைகள், ஒன்றிய அரசு நலத் திட்டங்களைப் பெறும் உரிமைகள், தனியார் துறையில் வேலை செய்யும் உரிமை முதலியவற்றை வழங்கும் இந்திய ஒன்றிய அரசு, ஈழத்தமிழர்களை தங்ககங்களுக்குள் கொத்தடிமைகளைப் போல நடத்திக் கொண்டிருக்கிறது. இரக்கத்திற்கும், அறத்திற்கும் பெயர் பெற்ற நாடு என்று தம்பட்டம் அடிக்கும் இந்தியா, ஈழத்தமிழர்கள் நிலைப்பாட்டில் மட்டும் இரக்கமற்று நடந்து கொள்கிறது.

- அசாம், மேகாலயா, மிசோரம் மாநில உறவுகள் வருத்தப்படக்கூடாது என்று வங்கதேச ஏதிலிகளையும், அருணாச்சலப் பிரதேசத்து மக்கள் வருத்தப்படக்கூடாது என்று திபெத்திலிருந்து வந்த ஏதிலிகளையும் மதிப்புடன் நடத்துகிறது. காரணம் அந்த ஏதிலிகள் இங்கே இருக்கும் அந்தந்த மாநிலங்களுக்கு உறவுக்காரர்கள் என்பதால்.

- ஈழத்தில் இருந்து வரும் தமிழர்களை மட்டும், மூன்றாம்தரக் குடிமக்களாக அல்ல, ஐந்தாம்தரக் குடிமக்களாக நடத்துகிறது இந்தியா. காரணம் இங்கிருக்கும் எட்டுக்கோடி தமிழர்களையும் மூன்றாம்தரக் குடிகளாகப் பார்ப்பதுதான்.

திராவிட ஆட்சியின் இரண்டகம் (துரோகம்)

- ஈழத்தமிழர்கள் எதிர்கொள்ளும் இந்தக் கொடுமைகளுக்குக் காரணம் தமிழக ஆட்சிக் கட்டிலில் மாறி மாறி அதிகாரத்தைச் சுவைத்துக் கொண்டிருக்கும் திராவிடக் கட்சிகளின் இரண்டகம்தான். தங்களின் ஊழல் முறைகேடுகளில் இருந்து தப்பித்துக்கொள்ள ஒன்றிய அரசின் கண்ணசைவுக்கு ஏற்றாற்போல் சட்டங்களைக் கொண்டு வந்து ஈழ உறவுகளைப் பழிதீர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இங்கும் கொடுமையா?

- சொந்த மண்ணில் போர்க்கொடுமைகளிலும், தொடர்ந்து அச்சுறுத்தலாய் இருக்கும் சிங்களப் படையினரின் கொடுமைகளிலும் இருந்து தப்பி, அடைக்கலம் கேட்டு வந்தவர்களை அதிவன்மையர்களைப் போல் அடைத்து வைத்துள்ளது. அவர்கள் தன்விருப்பப்படி எங்கும் வேலைக்குச் செல்ல முடியாது, மாலை ஆறு மணிக்குள் ஏதிலிகள் தங்குமிடத்திற்குத் திரும்பிவிட வேண்டும். இதுபோன்ற அறமற்ற கெடுபிடிகளை விதித்துள்ளது. அடைக்கலம் கேட்டு வந்த மண்ணிலும் கொடுமை என்றால் அவர்கள் எங்குப் போய் முறையிடுவார்கள்.

தீர்வு

- நாம் தமிழர் அரசு, ஈழத்தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமையை ஒன்றிய அரசிடம் வலியுறுத்திப் பெற்றுத்தரும். ஈழ உறவுகள் விரும்பும் வரை இங்கே இருக்கலாம். தேவை என்றால் சொந்த நாட்டிற்குச் செல்லலாம்.





- இதுவரையில் அவர்கள் மீது திணிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் அனைத்தும் முற்றாக நீக்கப்படும். ஏதிலிகளுக்கு உலக நாடுகள் என்ன பொருளுதவிகளை வழங்குகிறதோ அதையே மாநில அரசும் வழங்கும். திபெத், வங்கதேச ஏதிலிகளைப் போல் விரும்பிய வேலைகளுக்குச் சென்று வர வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படும்.

- தமிழ்நாட்டு மலைப்பகுதிச் சுற்றுலாத்தலங்களில், திபெத் ஏதிலிகளுக்கும், வங்கதேச ஏதிலிகளுக்கும் கடைகள் ஒதுக்கப்பட்டிருப்பதைப் போல இங்கு ஈழத்தமிழ் உறவுகளுக்கும் கடைகள் ஒதுக்கித் தரப்படும்.

- அமெரிக்கா, கனடா, பிரிட்டன், பிரான்ஸ், சுவிஸ், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளைப் போல் இந்தியாவும் உலகளாவிய ஏதிலிகளுக்கான ஒப்பந்தங்களில் கையெழுத்திட வேண்டும் என்று நாம் தமிழர் அரசு தொடர்ந்து அழுத்தங்களைக் கொடுத்துச் செய்து முடிக்கும்.

- தமிழ்நாட்டில் உள்ள ஏதிலிகள் தங்ககங்கள், சிறப்புத் தங்குமிடங்கள் அனைத்தும் முற்றாக மூடப்படும். ஏதிலிகளாக தமிழ்நாடு வரும் ஈழ உறவுகள், முறைப்படி பதிவுகளுக்குப் பிறகு அரசுக் குடியிருப்புகளில் தங்க வைக்கப்படுவார்கள். பிறகு அவர்கள் விரும்பிய இடங்களில் சென்று தங்கிக்கொள்ள ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்.

காவல்துறை நடவடிக்கை

- ஏதிலிகள் தங்குமிடத்தில் இருக்கும் ஈழத்தமிழர்கள் மீது, ‘குற்றத் தடுப்புப் பிரிவு’ (கியூ பிரிவு) காவலர்களின் கண்காணிப்பு, வினாவுதல் முறைகளும், வருவாய்த்துறை அதிகாரிகளின் வினாவுதல் முறைகளும் நீக்கப்படும்.

கல்வி வேலை வாய்ப்பு

- கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு என அனைத்திலும் தமிழ்நாட்டுத் தமிழர்களைப் போல் சம உரிமையுடன் வாழ அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

தனி வாரியம்

- ஈழ உறவுகளுக்கான நல வாரியம் உருவாக்கப்படும். ஈழத் தமிழர்கள் இங்கே சிறுதொழில் செய்ய, வீடு கட்டிக்கொள்ள, திருமண உதவி பெற என்று பல்வேறு திட்டங்களுக்குத் தனியாக குவையம் (நிதியம்) அமைக்கப்பட்டு அவர்களுக்கு உதவிகள் வழங்கப்படும்.



செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.

– தமிழ்மறை (466) – வள்ளுவப்பெருமகனார்



என் தாய்மொழியை என்னைவிட நீ
சிறப்பாகப் பேசுகிறாய் என்றால், என்னை
ஆளவேண்டும் என்ற ஆசை உனக்கு
வந்துவிட்டது என்று அர்த்தம்.

– சீனப்பேரரசன் சன்ட் சூ

தமிழ் மீட்சி



உலக மொழிகளுக்கெல்லாம் மூலமொழியாகவும் இந்தியத் துணைக் கண்ட மொழிகளுக்கெல்லாம் தாயாகவும் இந்தியாவிற்கு வெளியே இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் அலுவல் மொழியாகவும், கல்வி மொழியாகவும் விளங்கும் ஒரே மொழி நம் தமிழ்மொழியாகும். ஆனால் தமிழ் மொழி நம் மண்ணில் செம்மையற்று நிற்கிறது என்பதே வருத்தமான ஒன்று. இதை மீட்க வேண்டிய கடமையில் இருக்கிறது நாம் தமிழர் அரசு.

ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு மூத்த மொழி

- தமிழ் மொழி ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு மூத்த மொழி என்று தனது ஆய்வில் நிறுவினார் ஐயா மொழி ஞாயிறு தேவநேயப்பாவாணர்.
- ஆதி மாந்தன் காடுகளிலிருந்து இடம்பெயரும் போது பேசிய மொழியின் ஒலி வடிவமும், வரி வடிவமும் இன்னும் தமிழில் இருக்கிறது என்று கூறும் கால்டுவெல் எல்லா மொழிகளுக்கும் மூத்தமொழி தமிழ் எனச் சொல்கிறார்.
- தமிழாய்வறிஞர் ஐயா தக்கார் ம.சோ.விக்டர் அவர்களும், உலக மொழிகளெல்லாம் தமிழில் இருந்து தான் வேர்ச் சொற்களை எடுத்துக் கொண்டிருக்கின்றன என மெய்ப்பிக்கின்றார்.

தமிழ் மீட்சித் துறை

- இந்தியத் துணைக் கண்ட மொழிகளுக்கெல்லாம் தாயாகவும், உலக மொழிகளுக்கெல்லாம் மூலமொழியாகவும்; இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் அலுவல் மொழியாகவும், கல்வி மொழியாகவும் விளங்கும் ஒரே இந்திய மொழி நம் தமிழ் மொழியாகும்.





தமிழ் எழுத்துகள் வளர்ச்சி

நூற்றாண்டு	a ā i ī u ū e ē ai o ō	நூற்றாண்டு	K ṅ c ñ ṭ ṇ t n p m y r l v ḷ ḻ ṟ ṉ
Century	அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ	Century	க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்
BC 3rd C	𑀅 𑀆 𑀇 𑀈 𑀉 𑀊 𑀏 𑀐 𑀑 𑀒	BC3rd C	𑀓 𑀗 𑀘 𑀙 𑀚 𑀜 𑀝 𑀞 𑀟 𑀠 𑀡 𑀢 𑀣 𑀤 𑀦 𑀧 𑀨 𑀩 𑀪 𑀫 𑀬 𑀭 𑀮 𑀯 𑀰 𑀱 𑀲 𑀳 𑀴 𑀵 𑀶
AD 2nd C	𑀅 𑀆 𑀇 𑀈 𑀉 𑀊 𑀏 𑀐 𑀑 𑀒	AD2nd C	𑀓 𑀗 𑀘 𑀙 𑀚 𑀜 𑀝 𑀞 𑀟 𑀠 𑀡 𑀢 𑀣 𑀤 𑀦 𑀧 𑀨 𑀩 𑀪 𑀫 𑀬 𑀭 𑀮 𑀯 𑀰 𑀱 𑀲 𑀳 𑀴 𑀵 𑀶
AD 3rd C	𑀅 𑀆 𑀇 𑀈 𑀉 𑀊 𑀏 𑀐 𑀑 𑀒	AD3rd C	𑀓 𑀗 𑀘 𑀙 𑀚 𑀜 𑀝 𑀞 𑀟 𑀠 𑀡 𑀢 𑀣 𑀤 𑀦 𑀧 𑀨 𑀩 𑀪 𑀫 𑀬 𑀭 𑀮 𑀯 𑀰 𑀱 𑀲 𑀳 𑀴 𑀵 𑀶
AD 4th C	𑀅 𑀆 𑀇 𑀈 𑀉 𑀊 𑀏 𑀐 𑀑 𑀒	AD4th C	𑀓 𑀗 𑀘 𑀙 𑀚 𑀜 𑀝 𑀞 𑀟 𑀠 𑀡 𑀢 𑀣 𑀤 𑀦 𑀧 𑀨 𑀩 𑀪 𑀫 𑀬 𑀭 𑀮 𑀯 𑀰 𑀱 𑀲 𑀳 𑀴 𑀵 𑀶
AD 5th C	𑀅 𑀆 𑀇 𑀈 𑀉 𑀊 𑀏 𑀐 𑀑 𑀒	AD5th C	𑀓 𑀗 𑀘 𑀙 𑀚 𑀜 𑀝 𑀞 𑀟 𑀠 𑀡 𑀢 𑀣 𑀤 𑀦 𑀧 𑀨 𑀩 𑀪 𑀫 𑀬 𑀭 𑀮 𑀯 𑀰 𑀱 𑀲 𑀳 𑀴 𑀵 𑀶
AD 6th C	𑀅 𑀆 𑀇 𑀈 𑀉 𑀊 𑀏 𑀐 𑀑 𑀒	AD6th C	𑀓 𑀗 𑀘 𑀙 𑀚 𑀜 𑀝 𑀞 𑀟 𑀠 𑀡 𑀢 𑀣 𑀤 𑀦 𑀧 𑀨 𑀩 𑀪 𑀫 𑀬 𑀭 𑀮 𑀯 𑀰 𑀱 𑀲 𑀳 𑀴 𑀵 𑀶
AD 7th C	𑀅 𑀆 𑀇 𑀈 𑀉 𑀊 𑀏 𑀐 𑀑 𑀒	AD7th C	𑀓 𑀗 𑀘 𑀙 𑀚 𑀜 𑀝 𑀞 𑀟 𑀠 𑀡 𑀢 𑀣 𑀤 𑀦 𑀧 𑀨 𑀩 𑀪 𑀫 𑀬 𑀭 𑀮 𑀯 𑀰 𑀱 𑀲 𑀳 𑀴 𑀵 𑀶
AD 8th C	𑀅 𑀆 𑀇 𑀈 𑀉 𑀊 𑀏 𑀐 𑀑 𑀒	AD8th C	𑀓 𑀗 𑀘 𑀙 𑀚 𑀜 𑀝 𑀞 𑀟 𑀠 𑀡 𑀢 𑀣 𑀤 𑀦 𑀧 𑀨 𑀩 𑀪 𑀫 𑀬 𑀭 𑀮 𑀯 𑀰 𑀱 𑀲 𑀳 𑀴 𑀵 𑀶
AD 9th C	𑀅 𑀆 𑀇 𑀈 𑀉 𑀊 𑀏 𑀐 𑀑 𑀒	AD9th C	𑀓 𑀗 𑀘 𑀙 𑀚 𑀜 𑀝 𑀞 𑀟 𑀠 𑀡 𑀢 𑀣 𑀤 𑀦 𑀧 𑀨 𑀩 𑀪 𑀫 𑀬 𑀭 𑀮 𑀯 𑀰 𑀱 𑀲 𑀳 𑀴 𑀵 𑀶
AD 10th C	𑀅 𑀆 𑀇 𑀈 𑀉 𑀊 𑀏 𑀐 𑀑 𑀒	AD10th C	𑀓 𑀗 𑀘 𑀙 𑀚 𑀜 𑀝 𑀞 𑀟 𑀠 𑀡 𑀢 𑀣 𑀤 𑀦 𑀧 𑀨 𑀩 𑀪 𑀫 𑀬 𑀭 𑀮 𑀯 𑀰 𑀱 𑀲 𑀳 𑀴 𑀵 𑀶
AD 11th C	𑀅 𑀆 𑀇 𑀈 𑀉 𑀊 𑀏 𑀐 𑀑 𑀒	AD11th C	𑀓 𑀗 𑀘 𑀙 𑀚 𑀜 𑀝 𑀞 𑀟 𑀠 𑀡 𑀢 𑀣 𑀤 𑀦 𑀧 𑀨 𑀩 𑀪 𑀫 𑀬 𑀭 𑀮 𑀯 𑀰 𑀱 𑀲 𑀳 𑀴 𑀵 𑀶
AD 12th C	𑀅 𑀆 𑀇 𑀈 𑀉 𑀊 𑀏 𑀐 𑀑 𑀒	AD12th C	𑀓 𑀗 𑀘 𑀙 𑀚 𑀜 𑀝 𑀞 𑀟 𑀠 𑀡 𑀢 𑀣 𑀤 𑀦 𑀧 𑀨 𑀩 𑀪 𑀫 𑀬 𑀭 𑀮 𑀯 𑀰 𑀱 𑀲 𑀳 𑀴 𑀵 𑀶
AD 13th C	𑀅 𑀆 𑀇 𑀈 𑀉 𑀊 𑀏 𑀐 𑀑 𑀒	AD13th C	𑀓 𑀗 𑀘 𑀙 𑀚 𑀜 𑀝 𑀞 𑀟 𑀠 𑀡 𑀢 𑀣 𑀤 𑀦 𑀧 𑀨 𑀩 𑀪 𑀫 𑀬 𑀭 𑀮 𑀯 𑀰 𑀱 𑀲 𑀳 𑀴 𑀵 𑀶
AD 14th C	𑀅 𑀆 𑀇 𑀈 𑀉 𑀊 𑀏 𑀐 𑀑 𑀒	AD15th C	𑀓 𑀗 𑀘 𑀙 𑀚 𑀜 𑀝 𑀞 𑀟 𑀠 𑀡 𑀢 𑀣 𑀤 𑀦 𑀧 𑀨 𑀩 𑀪 𑀫 𑀬 𑀭 𑀮 𑀯 𑀰 𑀱 𑀲 𑀳 𑀴 𑀵 𑀶
AD 15th C	𑀅 𑀆 𑀇 𑀈 𑀉 𑀊 𑀏 𑀐 𑀑 𑀒	AD15th C	𑀓 𑀗 𑀘 𑀙 𑀚 𑀜 𑀝 𑀞 𑀟 𑀠 𑀡 𑀢 𑀣 𑀤 𑀦 𑀧 𑀨 𑀩 𑀪 𑀫 𑀬 𑀭 𑀮 𑀯 𑀰 𑀱 𑀲 𑀳 𑀴 𑀵 𑀶
AD 16th C	𑀅 𑀆 𑀇 𑀈 𑀉 𑀊 𑀏 𑀐 𑀑 𑀒	AD16th C	𑀓 𑀗 𑀘 𑀙 𑀚 𑀜 𑀝 𑀞 𑀟 𑀠 𑀡 𑀢 𑀣 𑀤 𑀦 𑀧 𑀨 𑀩 𑀪 𑀫 𑀬 𑀭 𑀮 𑀯 𑀰 𑀱 𑀲 𑀳 𑀴 𑀵 𑀶
AD 17th C	𑀅 𑀆 𑀇 𑀈 𑀉 𑀊 𑀏 𑀐 𑀑 𑀒	AD17th C	𑀓 𑀗 𑀘 𑀙 𑀚 𑀜 𑀝 𑀞 𑀟 𑀠 𑀡 𑀢 𑀣 𑀤 𑀦 𑀧 𑀨 𑀩 𑀪 𑀫 𑀬 𑀭 𑀮 𑀯 𑀰 𑀱 𑀲 𑀳 𑀴 𑀵 𑀶
AD 18th C	𑀅 𑀆 𑀇 𑀈 𑀉 𑀊 𑀏 𑀐 𑀑 𑀒	AD18th C	𑀓 𑀗 𑀘 𑀙 𑀚 𑀜 𑀝 𑀞 𑀟 𑀠 𑀡 𑀢 𑀣 𑀤 𑀦 𑀧 𑀨 𑀩 𑀪 𑀫 𑀬 𑀭 𑀮 𑀯 𑀰 𑀱 𑀲 𑀳 𑀴 𑀵 𑀶
AD 19th C	𑀅 𑀆 𑀇 𑀈 𑀉 𑀊 𑀏 𑀐 𑀑 𑀒	AD19th C	𑀓 𑀗 𑀘 𑀙 𑀚 𑀜 𑀝 𑀞 𑀟 𑀠 𑀡 𑀢 𑀣 𑀤 𑀦 𑀧 𑀨 𑀩 𑀪 𑀫 𑀬 𑀭 𑀮 𑀯 𑀰 𑀱 𑀲 𑀳 𑀴 𑀵 𑀶

- ஆனால் இங்கே தனித்த அதிகாரம் கொண்ட துறையாகத் தமிழ் மொழித் துறை இல்லை. எனவே நாம் தமிழர் அரசு, செய்தி ஒளிபரப்புத் துறையில் இருந்து தமிழ் மொழி வளர்ச்சியைப் பிரித்து, தனித்த 'தமிழ் மீட்சித் துறை'' என்ற புதிய துறையை ஏற்படுத்திச் செயல்படுத்தும். மொழி நம் மண்ணில் செம்மையற்றுக் கிடக்கும் துன்பம் இனியும் தொடராது.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ்

- பெற்ற தாயைப் பட்டினிப் போட்டுவிட்டு எத்தனை ஆயிரம் உணவுக்கொடை செய்தாலும் ஒரு பயனும் இல்லை.
- தாய் மொழியில் படிக்காது உலகத்தில் எந்த மொழி படித்தாலும் அவனை அறிவாளி என்று உலகம் மதிக்கப்போவதில்லை.
- நம் வீட்டிற்கு எத்தனை சாளரங்கள் இருக்கிறதோ, அத்தனை சாளரங்களாக உலக மொழிகள் இருக்கட்டும். நுழைவு வாசலாக, தலைவாசலாக நம் தாய்மொழி தமிழ் இருக்கட்டும். தாய்மொழியை மறந்த இனம் வரலாற்றில் வாழ்ந்ததாகச் செய்தி இல்லை.
- எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பது நமது கனவு. தமிழை ஆட்சிமொழி, அதிகார மொழி, பண்பாட்டு மொழி, பயன்பாட்டு மொழி, வழிபாட்டு மொழி, வழக்காடு மொழி என நாம் தமிழர் அரசு மாற்றியமைக்கும்.

எதிரிகளோடும் – இரண்டகர்களோடும்

- ஒரு நாட்டை அழிக்க வேண்டுமாயின் படையெடுத்து வர வேண்டிய தேவை இல்லை. அந்த நாட்டு மக்களின் தாய்மொழியை அழித்தால் அவர்களின் கலை, பண்பாடு சிதைந்து அந்த இனம் அழிந்துவிடும். இவ்வுலகம் கண்டிருக்கும் வரலாற்று உண்மை இதுதான்.
- இங்கே ஆரியமும், திராவிடமும் சேர்ந்து மொழியையும், இனத்தையும் சிதைத்துக் கொண்டிருக்கின்றன.
- தனக்குரிய மொழியைத் தொலைத்த நரிக்குறவர்கள் இத்தேசத்திற்குரிய எந்த சலுகைகளும் உரிமைகளும் கிடைக்காத அவல நிலை எய்தியிருப்பதை சமகாலத்தில் கண்முன்னே எடுத்துக்காட்டாகக் காண்கிறோம்.
- தாய்மொழி அழிந்துவிட்டால் அந்த இனம் சிதைந்து அழிந்து போகும் என்பதற்கு குருதியும் சதையுமான சான்றைக் கண்முன்னே காணும் நாம், என்ன விலை கொடுத்தேனும் நம் மொழியைக் காக்கப் பாடுபட வேண்டும்.

மொழித் திரிபு

- தமிழோடு சமற்கிருதம் கலந்து பேசிப் பேசித்தான் தெலுங்கு, கன்னடம், துளு, மலையாளம் அனைத்தும் உருவானது.
- 15 ஆம் நூற்றாண்டில் மலையாளம் இல்லை. வெறும் 500 ஆண்டுகளுக்கு முன்பாகத்தான் சேர, சோழ, பாண்டியர்களில் சேரர்கள் மலையாளிகளாக மாறிப் போனார்கள். மொழித் திரிபு, பிறமொழிக் கலப்பு, ஒரு மொழியைச் சிதைத்து அழிக்கிறது.







தொல்காப்பியர்



கி.ஆ.பெ.விசுவநாதம்



மறைமலை அடிகள்



பாரதிதாசன்



வ.உ.சிதம்பரம்



கம்பர்



பரிதிமாற்கலைஞர்



தேவநேயப் பாவாணர்

- பாலில் தண்ணீர் கலப்பது. அரிசியில் கல் கலப்பது என எதிலும் கலப்படத்தை விரும்பாத நம் மக்கள். உயிருக்கு நிகரான நமது தாய்மொழியில் பிறமொழி கலப்பதை எப்படி ஏற்பார்கள்?

“மணக்க வரும் தென்றலிலே
குளிரா இல்லை?
தோப்பில் நிழலா இல்லை?
தணிப்பரிதாம் துன்பமிது
தமிழகத்தின் தமிழ்த்தெருவில் தமிழ்தான் இல்லை”

என்று வருந்தி நம் பாட்டன் பாவேந்தர் பாரதிதாசன் பாடுகிறார்.

மொழி மீட்சிக்கான வழிகள்

- தமிழ் வளர்ச்சித் துறை, தமிழ் இணையக் கல்விக் கழகம், தமிழ்ப் பல்கலைக் கழகம், செம்மொழித் தமிழ் உயராய்வு மையம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், உலகத் தமிழ்ச் சங்கம் போன்ற நிறுவனங்களை தமிழக அரசு நடத்தி வந்தபோதும், தமிழின் வளர்ச்சி என்பது ‘ஆங்கிலப் பெயர்ப் பலகைகளிலேயே’ தங்கியிருக்கின்றது. திராவிட ஆட்சியாளர்களிடம் மொழிப்பற்றும் உறுதியான கொள்கை முடிவும் இல்லை. இந்த அவலத்தைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளும் நாம் தமிழர் அரசு தமிழ்மொழி மீட்சிக்கான உறுதியான வழிகளை முன்வைக்கின்றது.

இலக்கியக் கல்வி

- தமிழ் இலக்கியக் கல்வியைப் பள்ளிக்கல்வி முதலே முழுமையாகத் தொடங்கி முனைவர் பட்டம் வரையிலும் வளர்த்தெடுப்பதற்கான வழிமுறைகளைக் கற்றறிந்தச் சான்றோர்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்துவோம்.
- தமிழ்வழிக் கல்விக்கு முன்னுரிமை அளிப்பதோடு, கல்விக்கான உதவித் தொகையும், கூடவே தமிழ் மொழியில் படித்தவர்களுக்கு மட்டுமே தமிழகத்தில் வேலைவாய்ப்பில் முன்னுரிமை என்ற ஆணையையும் நாம் தமிழர் அரசு அறிவிக்கும்.


தனித் தன்மையுடன்

- தனித்தமிழ்ப் பேச்சுப் பயிற்சி, இசைப்பாடல் பயிற்சி ஆகியவை தொடக்கக் கல்வி ஆசிரியர்களுக்குப் பெருமளவில் பயிற்றுவிக்கப்படும். அவர்கள் மாணவ மாணவிகளுக்குக் கற்றுத் தருவார்கள்.
- நாட்டுப்புறக் கலைகளில் திறன் கொண்ட தமிழார்வமிக்க, தொடக்கக் கல்வி ஆசிரியர்கள் பள்ளிகள் அளவில் பணியமர்த்தப்படுவார்கள்.

பிறமொழி அறிஞர்களைப் போற்றுவோம்

- ஒட்டுமொத்த மாந்த அறிவுக்குத் தமிழர்களின் அறிவுப் பங்களிப்பை, மொழியின் பெருமையை உலகுக்கு எடுத்துச் சொன்ன பிறமொழி அறிஞர்களைப் போற்றி, கொண்டாடி அவர்களுக்கு உரிய அரசு இசைவேற்பும் அளிக்கப்படும்.







திருக்கோயிலூர் அருகே காணப்படும் சம்பை தமிழி எழுத்துகள்



பாரதியார்




உ.வே.சாமிநாத ஐயர்



சி.பா.ஆதித்தனார்



பெருஞ்சித்திரனார்



ம.பொ.சிவஞானம்



வீ.முனுசாமி



இந்தி எதிர்ப்புப் பேரணி

கடல் கடந்தும் தனித்தமிழ் பயிற்சி நடுவம்

- ஜெர்மன், பிரான்சு, கனடா, இங்கிலாந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் அவர்களின் தாய்மொழியை இலவசமாகக் கற்றுக்கொடுக்கத் தனிப் பயிற்சி நடுவம் வைத்துள்ளார்கள். உலகின் மூத்த மொழியான நம் தமிழைப் பிற மொழியினர் இலவசமாகக் கற்றுக்கொள்ள வேண்டி அனைத்து மாவட்டத் தலைநகரிலும் 'தனித் தமிழ்ப் பயிற்சி நடுவம்' அமைக்கப்படும். வெளிநாட்டினர், வெளி மாநிலத்தினர் அனைவரும் தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ள அந்தந்த இடங்களிலேயே வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படும். தமிழகத்தில் பணிபுரியும் வேற்று மாநில நடுவணரசு ஊழியர்களும் தமிழைக் கட்டாயம் கற்றுக்கொள்ளும் நிலை உருவாக்கப்படும்.

- பிற மாநிலங்கள் மற்றும் நாடுகளில் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் அரசு செலவில் பயிற்சி நடுவம் நடத்தப்படும். தமிழ்மொழியைப் பேச எழுதக் கற்றுக்கொள்ள மறந்த இந்தத் தலைமுறையினருக்குச் சிறந்த பயிற்சி அளிக்கப்படும். அதனுடன் தமிழ்வழிப் பல்லைக்கழகத்துடன் இணைந்து, உயர்கல்விச் சான்றுகளைப் பெறவும் வேலைவாய்ப்பைப் பெறவும் வழிவகை செய்யப்படும்.

உயர் விருதுகள்

- தன் வாழ்நாள் முழுவதும் தமிழ் மொழிக்காக அரும்பாடுபட்ட மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர், மறைமலை அடிகளார், பரிதிமாற் கலைஞர், மகாகவி பாரதியார், பாவேந்தர் பாரதிதாசனார், சிலம்புச்செல்வர் ம.பொ.சிவஞானம், சி.பா.ஆதித்தனார், முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம், பாவலரேறு பெருஞ்சித்திரனார் போன்ற தமிழறிஞர்களின் நினைவைப் போற்ற அவர்களின் பெயரில் உயர்விருதுகள் தமிழ்ச்சான்றோர்களுக்கும், அரும்பணி ஆற்றியோர்க்கும் வழங்கப்படும்.

தமிழ் மொழியில்

- ஊர்ப்புறச் செயலகம் தொடங்கி (VAO) தலைமைச் செயலகம் வரை அனைத்துத் துறை ஆவணங்களும், பதிவுகளும், கோப்புகளும் தமிழில் மட்டுமே என்ற நடைமுறையைக் கொண்டு வருவோம். வெளி மாநிலங்கள், அயல் நாடுகளுடனான அரசின் தொடர்பு மொழியாக ஆங்கிலத்தைப் பயன்படுத்துவோம். வெளி மாநில அதிகாரிகள், ஊழியர்கள் தமிழகப் பணிக்கு வரும்போது, கட்டாயம் தமிழ்மொழி கற்றாக வேண்டும்.

- தமிழில் பெயர்ப்பலகை என்ற அரசாணை கிடப்பிலேயே உள்ளது. சிறு கடைகள் கூட அதை மதிப்பதில்லை என்பது தமிழ் வளர்ச்சித் துறையின் அக்கறையின்மையைக் காட்டுகிறது. தமிழில் பெயர்ப் பலகை என்பதை கட்டாயமாகப் பின்பற்ற நாம் தமிழர் அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கும்.

படிவங்கள் தமிழில்

- தமிழ்நாட்டில் இயங்கும் அஞ்சல், தொலைத்தொடர்பு, தொடர்வண்டி, வானூர்தி, போக்குவரத்துத் துறைகள், வைப்பகம் உட்பட அனைத்து நடுவணரசு அலுவலக




வள்ளலார்


சிவவாக்கியர்



திருமூலர்


கருவூரார்



போகர்


கோரக்கர்


கரிகாலச்சோழனின் கல்லணை


தீரன் சின்னமலை


அரசேந்திரச்சோழன்


மாவீரன் அழகுமுத்துக்கோன்


பண்டாரவன்னியன்


மருதுபாண்டியர்

செயற்பாடுகளும் தமிழிலும், ஆங்கிலத்திலும் இருக்க வேண்டும். இந்தி, ஆங்கிலம் மட்டும் என்று இருக்கக்கூடாது. ஒவ்வொரு மாநில மொழியையும் நடுவணரசு மதித்து நடக்க வேண்டும். தாய்மொழிக்கு மதிப்பளிக்காமல் பிற மாநில மொழியான இந்தியைத் திணிப்பது ஏற்புடையது அல்ல. இதை நடுவண் அரசுக்கு தொடர்ந்து வலியுறுத்தி, தமிழ் மொழிப் பயன்பாட்டைக் கொண்டு வருவோம்.

- நூலகங்களின் எண்ணிக்கை பெருக்கப்படும். சிற்றூர்கள் தோறும் நூலகங்கள் அமைக்கப்படும். இனம், மொழி சார்ந்த புத்தகங்கள் சிறுவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் வைக்கப்படும்.

நினைவிடங்கள்

- 1938இல் தொடங்கி 1965ஆம் ஆண்டு வரை நடந்த தமிழ்மொழிக் காப்புப் போரில், உயிர்க்கொடை ஈந்த மொழிப்போர் ஈகியர்களுக்கு நினைவிடங்கள், சிலைகள் வைக்கப்படுவதோடு அவர்களின் நினைவைப் போற்ற உயர் விருதுகள் உருவாக்கப்படும். மொழிக்காப்புப் போராளிகளின் பெயரில் மணிமண்டபமும் அமைக்கப்படும். அங்கே மொழிப் போராட்டமும், இறந்தவர்கள் பற்றிய குறிப்புகளும், ஓவியங்களாகத் தீட்டப்படும், ஒலி ஒளி வடிவக் காட்சிக் கதைகள் ஒளிபரப்பப்படும்.

வரலாற்று நாயகர்களின் வாழ்விடம்

- வரலாற்று இன முன்னோர்களுடைய அறம், நெறி, வாழ்க்கைமுறை, அறம் சார்ந்த ஆட்சிமுறையை நமது வருங்காலத் தலைமுறையினருக்குத் தெரியப்படுத்தும் வாய்ப்பாகத் தமிழர் மெய்யியல் தலைநகரான கன்னியாகுமரியில் மிகப்பெரிய நினைவிடம் எழுப்பப்படும். இதில் 'வரலாற்று நாயகர்களின் வாழ்விடம், வருங்காலத் தலைமுறைக்கான வழித்தடம்' என்ற பெயரிலே நமது முன்னோர்கள், சித்தர்கள், ஞானிகள் தொடங்கி நமது அருமைப் பெரும்பாட்டன்கள் சேரன், சோழன், பாண்டியன் வரலாறு, அருண்மொழிச் சோழன், அரசேந்திரச் சோழன், பாண்டியன் நெடுஞ்செழியன் போன்றோர்களின் வரலாற்றுக் குறிப்புகளும், படங்களும் குறிப்பிடப்பட்டு இருக்கும். மொழிப்போர், எல்லைப்போர் ஈகிகள், ஈழ விடுதலைப் போராளிகள் ஆகியோரின் வரலாற்றை அறியும் வகையில் குறிப்புகளும், படங்களும் இடம்பெற்றிருக்கும்.

- நமது இனக்காவலராக இருக்கும் தமிழ்த்தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் வீரம் செறிந்த போராட்ட வரலாறும், வாழ்க்கை வரலாறும் அதில் குறிப்பிடப்பட்டு இருக்கும். தமிழர் வரலாற்றைத் தெரிந்து கொள்ளும் வகையிலும், எவர் வந்தாலும் புரிந்து கொள்ளும் வகையிலும் ஒரு கல்லூரிக்கு இணையாக உருவாக்கப்படும். அங்கே உயர்தரத் தங்கும் விடுதிகள், திரையரங்குகள், வணிகவளாகங்கள் உருவாக்கப்பட்டு மிகப்பெரிய சுற்றுலாத் தலமாக்கப்படும்.

இலக்கியச் செல்வர்

- இலக்கியப் படைப்பாளர்களை நாம் தமிழர் அரசு போற்றும். மூத்த எழுத்தாளர்களை அரசே தத்தெடுத்துக் கொள்ளும். இளம் எழுத்தாளர்கள்



எம் உயிர்த் தமிழ் காக்கத் தம் உயிர் தந்த ஈகிகள்



நடராசன் 1919-1939



தாளமுத்து 1915-1939



கீழப்பழுவூர் சின்னசாமி 1919-1939



கோடம்பாக்கம் சிவலிங்கம் 1941-1965



விருகம்பாக்கம் அரங்கநாதன் 1931-1965



கீரனூர் முத்து 1943-1965



மாணவர் இராசேந்திரன் 1947-1965



சத்தியமங்கலம் முத்து 1942-1965



அய்யம்பாளையம் வீரப்பன் 1938-1965



விராலிமலை சண்முகம் 1945-1965



பீளமேடு தண்டபாணி 1944-1965



மயிலாடுதுறை சாரங்கபாணி 1947-1965

படைப்புகளுக்கு ஊக்கமளிக்கப்படும். சிறந்த படைப்பாளிகளுக்கு, 'இலக்கியச் செல்வர்' விருது வழங்கப்படும். மறைமலையடிகள், ம.பொ.சி., அறிஞர் குணா, சாத்தூர் சேகரனார், ச.இராமகிருட்டிணன், இரா.மதிவாணன், க.செல்வராசு, நெடுஞ்செழியன் உள்ளிட்ட பலரின் இலக்கியப் படைப்புகள் அனைத்தும் அரசுடைமையாக்கப்படும்.

மறை ஓதும் பள்ளிகள்

- மலையடிவாரங்களில் தமிழர்மறை திருக்குறள் ஓதும் பள்ளிகள் உருவாக்கப்படும்.

ஐயா வீரப்பனார்

- தமிழர்களின் வனக்காவலராக இருந்த ஐயா வீரப்பனாருக்கு, அவர் நினைவைப் போற்றும் வகையில் நினைவகம் கட்டப்படும்.

ஈகைத் தமிழர்கள் நினைவகம்

- இன விடுதலைக்குத் தன்னுயிரை ஈகம் செய்த ஈகைத் தமிழன் அப்துல் ரவூப், வீரத்தமிழன் முத்துக்குமார் மற்றும் மூன்று அண்ணன்மார்களைத் தூக்குக் கயிற்றில் இருந்து காக்கத் தன்னுயிரை ஈகம் செய்த வீரத்தங்கை செங்கொடிக்குத் தனித்தனியே நினைவகம் அமைக்கப்படும்.

தமிழ்ப் பல்கலைக்கழகம்

- நாம் தமிழர் அரசு மதுரையில் புதிதாகத் தமிழ்ப் பல்கலைக்கழகம் உருவாக்கும். இப்பல்கலைகழகம் அனைத்துத் தமிழ்ப் பல்கலைக்கழகங்களுக்கும் ஒருங்கிணைப்புத் தலைமையிடமாக இருக்கும். கலை, பண்பாடு, மொழி வளர்ச்சி, தமிழின வரலாற்று ஆய்வு, தொல்லியல் குறித்த அனைத்தையும் மீட்டெடுக்கும் வகையிலும், ஆய்வு மேற்படிப்புகள் அனைத்தும் கற்கும் வகையிலும் செயல்படும்.

பெருங்காமநல்லூர் நினைவிடம்

- தென்னகத்து சாலியன் வாலாபாக் படுகொலை எனப் பேசப்பட்ட 'பெருங்காமநல்லூர்' படுகொலை வரலாற்றில் மறக்கமுடியாப் பெருந்துயராகும். குறிப்பிட்ட சமுதாய மக்களை ஒடுக்க வேண்டி 'கைவரைச் சட்டத்தை' கொண்டு வந்தது ஆங்கிலேயே அரசு. 1920 ஆம் ஆண்டு ஏப்ரல் 3ஆம் நாள் அன்று அச்சட்டத்தை எதிர்த்து பெருங்காமநல்லூரில் மக்கள் ஒன்று கூடித் திரண்டெழுந்தார்கள். அவர்கள் மீது நடத்திய துமுக்கிச் சூட்டில் மாயக்காள் என்ற பெண் உட்பட 16 பேர் படுகொலை செய்யப்பட்டார்கள். அவர்களின் சடலங்களை மாட்டு வண்டியில் ஏற்றி உசிலம்பட்டி அருகிலுள்ள ஆற்றங்கரையில் புதைத்தார்கள். அந்த இடத்தில் நாம் தமிழர் அரசு வரலாற்று நினைவு மண்டபம் எழுப்பும். அவர்களின் வீரப் போராட்டத்தைப் போற்றிப் பதிவு செய்யும்.




தமிழ்ப் பல்கலைக்கழகம்


இருளர்


பழங்குடியினர்


பழங்குடியினர்


பறையாட்டம்


கரகாட்டம்

உலக மொழி நாள்

- உலகளவில் மொழிக்காக மிகப்பெரும் போராட்டமும் உயிரீகமும் செய்த முதன்மை இனம் தமிழினம் என்பதைப் பறைசாற்றியாக வேண்டும். எனவே தமிழ் ஈகையர்களின் நினைவு நாளான சனவரி 25ஐ உலக மொழி நாளாகக் கடைப்பிடிக்க வலியுறுத்தப்படும்.

தேசியத் தலைவர் செய்தவை

- தமிழீழத்தில் தமிழில் பெயர் வைத்தப் பிள்ளைகளுக்குத் தேசியத் தலைவர், தமிழீழத் தேசிய வைப்பகத்தில் பிள்ளைகளின் பெயரிலேயே 500 உருபாய் நிலையான வைப்புத்தொகை வைத்தார். அதுபோலத் தமிழில் பெயர் வைக்க ஊக்குவிக்கப்படும்.

- தமிழ்ப் பிள்ளைகளுக்குத் தூய தமிழில் பெயர் வைக்க ஊக்கப்படுத்துவோம், பிள்ளைக்குத் தமிழ்ப் பெயர் சூட்டுவோம், நாம் தமிழர் என்பதை உலகுக்குக் காட்டுவோம் என்ற ஐயா முத்துக்கூத்தனின் கனவை நிறைவேற்றுவோம்.

தமிழ்க் கலைச் சொற்கள்


- தமிழில் பல இலக்கக்கணக்கான கலைச்சொற்கள் இருக்கின்றன. அவற்றைத் தவிர்த்துவிட்டு, ஆங்கிலச் சொற்களையே பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். எடுத்துக்காட்டாக நெல், அரிசி, சோறு என மூன்று நிலைகளையும் மூன்று சொற்களால் குறிக்கின்றோம். ஆனால் ஆங்கிலத்தில் RICE என்ற ஒரே சொல்லைத்தான் பயன்படுத்துகிறோம்.

- பிளாஸ்டிக் என்பதை குழைமம் என்றும், பாலித்தின் என்பதை நெகிழி என்றும் தமிழ்க் கலைச்சொற்கள் உருவாக்கப்பட்டதுபோல் நிகழ் காலத்திற்கேற்ப புதிய தமிழ்க் கலைச்சொற்கள் உருவாக்கப்படும். இதற்கென்று தமிழ் அறிஞர்கள் குழு அமைக்கப்படும். பள்ளிப் பருவத்தில் இருந்தே இத்தகைய மொழிப் பயன்பாடு மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கப்படும்.



சுவைஒளி ஊறுஓசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு.

– தமிழ்மறை (27) – வள்ளுவப்பெருமகனார்



“பிரபாகரன் வழிபாடு என்பது,
அவன் வழியே பாடுபடு,
அவன் வழியே பயணப்படு,
அவன் வழியே செயல்படு
என்பதுதான்.”

தமிழர் மெய்யியல்

> **இயற்கை**
> எனது நண்பன்,
> **வாழ்க்கை**
> எனது தத்துவாசிரியன்,
> **வரலாறு**
> எனது வழிகாட்டி.
>
> - மேதகு
> வே.பிரபாகரன்

ஐம்பெரும் ஆற்றல்

- சூரியப் பெருநெருப்பு வெடித்துச் சிதறிய துண்டுகளில் ஒன்றுதான் இந்தப் புவி என்கின்றது பூகோள அறிவியல். அப்படித் தோன்றிய புவியின் உயிரியல் படிநிலையின் இறுதிப் புள்ளியாக மாந்த இனம் இன்று நிற்கிறது. விண், மண், நீர், காற்று, நெருப்பு ஆகிய ஐந்தாற்றல் இல்லாமல் உலகில் எந்த உயிரினமும் தோன்ற முடியாது. அதனால்தான் ஆதித் தமிழினம் ஐந்தாற்றலான இயற்கையை (பஞ்ச பூதங்களை) இறைவனாக வழிபட்டு வந்திருக்கின்றார்கள். உலகத் தமிழினம், இயற்கையைப் போற்றும் உழவர் திருநாளான பொங்கலைத் தனது தேசியத் திருநாளாகக் கொண்டாடுகின்றார்கள்.

- அறிவியல் நாகரிகமற்ற முதல் குடிமக்கள் தனது உயிரை இயற்கை, கொடிய விலங்குகள், நச்சுப்பாம்புகள், நோய் இவைகளிடம் இருந்து காப்பாற்றிக் கொள்ளப் போராடினர். காட்டுத்தீ, சூரைக்காற்று, மழை, காட்டு வெள்ளம் என்று இயற்கைச் சீற்றங்களைக் கண்டு அஞ்சினார்கள். அதன் விளைவாக இயற்கையை வணங்கத் தொடங்கினர். மறுபுறம் இயற்கையை நம்பினர். இந்த நம்பிக்கையின் வடிகாலாய்த் தோன்றியதே தமிழர் வழிபாட்டு மெய்யியல்.

இயற்கை வழிபாடு – நீத்தார் வழிபாடு

- ஆதித்தமிழ் மக்கள் நமக்காகவே போரிட்டு நம்மைக் காக்க தம் உயிரை ஈந்த மாந்தர்களைத் தெய்வமாக வணங்கினார்கள். இப்படித்தான் இயற்கையையும், முன்னோர்களையும் வணங்கும் பழக்கம் ஆதித் தமிழர்களிடம் இருந்தது. சிந்துச் சமவெளி வழிபாட்டு முறைகள் அனைத்தும் பறைசாற்றுவது முன்னோர்களைப் போற்றும் நடுகல் வழிபாட்டைத் தமிழர் கொண்டிருந்தனர் என்பதைத்தான். அண்மையில் அகழ்வாராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்ட ஆதிச்சநல்லூரில் கிடைத்த மண்பாண்டங்களில் பொறிக்கப்பட்டுள்ள வடிவங்களில் இப்படியான தெய்வ வழிபாட்டுக் குறிப்புகள் இருப்பதாகத் தொல்லியல் ஆய்வுகள் சொல்கின்றன.







காந்தாரி அம்மன்

- மேற்கண்ட ஆய்வுகளின் அடிப்படையிலும் பழந்தமிழ் இலக்கிய வரலாற்று ஆவணங்களின் அடிப்படையிலும் தமிழர் அறம் சார்ந்த மெய்யியல் மரபு வழிபாடு என்பது தொடக்கத்தில் இயற்கையாகவும், பிறகு அந்த இயற்கையின் பாதிப்பில் இருந்து மக்களைக் காப்பாற்றிய மாந்தர்களை வழிபடுவதாகவும் இருந்து வந்தது.

திருமுருகப் பெருவிழா

- தமிழரின் மூத்த இறையோனாகவும் குறிஞ்சி நிலத் தலைவனாகவும் இருக்கின்ற எம் முப்பாட்டன் முருகப்பெருமானின் சுறவக் கொடிறு (தைப்பூசம்) திருவிழா திருமுருகப் பெருவிழாவாகக் கொண்டாடப்படும்.

ஐந்திணைத் தெய்வ வழிபாடு

- குறிஞ்சி நிலத்தின் இறையோனாக சேயோன் (முருகன்), முல்லை நிலத்தின் இறையோனாக மாயோன் (கண்ணன்), மருத நிலத்தின் இறையோனாக இந்திரன், நெய்தல் நிலத்தின் இறையோனாக வருணன், பாலை நிலத்தின் இறைவியாகக் கொற்றவை என ஐந்திணை நிலத்திற்கும் தனித்தனி இறை வழிபாட்டை நாம் தமிழர் அரசு அறிவிக்கும்.

மெய்யியல் தலைநகரம்

- குமரிக்கண்டம் என்பது ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு மூத்த நீண்ட நெடிய வரலாற்றுப் பெருமை கொண்ட தமிழினத்தின் தாய்நிலம் ஆகும். இதன் பெருமைகள் நம் அடுத்தத் தலைமுறையினருக்குக் கடத்தப்பட வேண்டும். ஈழத் தாயகத்தில் தமிழின விடுதலைக்களத்தில் உயிர்நீத்த மாவீரர்களின் வரலாற்றையும், தமிழரின் தொன்மங்கள், மரபு சார்ந்த கலைகள், வரலாறு, வீரம், போர், வேளாண் முறை போன்ற அனைத்தும் எப்படி இருந்தது என்பதையும் அடுத்த தலைமுறையினருக்குக் கடத்த வேண்டும். அதற்காகக் குமரிக்கண்டத்தின் நீட்சியாக விளங்கும் கன்னியாகுமரியில் நாம் தமிழர் அரசு, 'தமிழர் கோயிலைக்' கட்டியெழுப்பும். இங்கு தங்கும் விடுதிகள், கலையரங்கக்கூடம் உட்பட பல்வேறு வசதிகளோடு சிறந்த சுற்றுலாத்தலமாக நிறுவப்படும்.


அருண்மொழிச் சோழன்

- உலகத்தில் மூன்றாம் பெரும் வல்லரசை நிறுவிய நம் அருமைப் பெரும்பாட்டன்கள் அருண்மொழிச் சோழனுக்கும், அவரது அன்பு மகன் அரசேந்திரச் சோழனுக்கும் தஞ்சாவூர் அருகே உடையாளூரிலே மாபெரும் நினைவகம் கட்டப்படும்.
- குஜராத்தில் சாராபாய் அருங்காட்சியகத்தில் உள்ள நமது பெரும்பாட்டன் அருண்மொழிச் சோழன் சிலையை மீட்டுக் கொண்டு வந்து உடையாளூரில் அவருக்குக் கட்டப்படும் நினைவகத்தில் வைக்கப்படும்.
- நம் பெரும்பாட்டன் அருண்மொழிச் சோழன் கட்டிய தஞ்சைப் பெருவுடையார் கோயிலுக்கு வெளியே வாசலில் உள்ள அருண்மொழிச் சோழன் சிலை அவன் கட்டிய கோயிலுக்குள்ளேயே நிறுவப்படும்.






வீரமங்கை வேலுநாச்சியார்



வீரன் சுந்தரலிங்கம்



தீரன் சின்னமலை



கோனேரிக்கோன் கோட்டை



பூலித்தேவன்



பெரும்பிடுகு முத்தரையர்



மருதுபாண்டியர்

அன்னை காந்தாரிக்குக் கோவில்

- கோவில்பட்டிக்கு அருகில் உள்ள குறிஞ்சான்குளம் எனும் ஊரில் தமிழர் நிலத்தின் பெருமைக்குரிய மூதாதை காந்தாரி அம்மன் கோயில் இருக்கிறது. பல ஆண்டுகளாக அங்கு நிலவி வரும் அந்த மண்ணின் ஆதிக்குடி மக்களின் இடையூறுகளைக் களைந்து, எந்த வகை இன மோதலுக்கும் இடமளிக்காமல் இச்சிக்கல் தீர்க்கப்படும். அன்னை காந்தாரிக்குக் கோயில் கட்டப்படும்.

கோனேரிக்கோன் கோட்டை

- செஞ்சியைத் தலைநகராகக் கொண்டு 300 ஆண்டுகளாக எம் அருமைப் பெரும் பாட்டன்கள் கிருஷ்ணக்கோன் மகன் ஆனந்தக்கோன், ஆனந்தக்கோன் மகன் மாரிக்கோன், மாரிக்கோன் மகன் கோனேரிக்கோன், கோவிந்தக்கோன் பரம்பரை பரம்பரையாக ஆண்ட கோட்டை இன்று தேசிங்கு இராசன் கோட்டையாக மக்களால் அழைக்கப்படுவது, அறியப்படுவது பெருத்த அவமானமாகும். அதனால் அதை மீட்டு எம் பாட்டன் பெயரில் கோனேரிக்கோன் கோட்டை எனச் சட்டத்தின் மூலம் நிறுவுவோம்.

வீரப்பெரும்பாட்டி வேலுநாச்சியார்

- பெண்ணினத்தின் வீரத்தை உலகுக்குப் பறைசாற்றிய பெருமைமிகு வீரப்பெரும்பாட்டி வேலுநாச்சியார் அவர்களின் வாழ்க்கை வரலாறு பள்ளி, கல்விக்கூடங்களில் மாணவர்களுக்குப் பாடமாக வைக்கப்படும்.

மான மறவர்கள்

- மான மறவர்கள் மருதுபாண்டியர், பூலித்தேவன், வீரன் அழகுமுத்துக்கோன், வீரன் சுந்தரலிங்கம், பெரும்பிடுகு முத்தரையர் ஆகியோரின் நினைவைப் போற்றும் வகையில் தனித்தனியே நினைவகம் கட்டப்படும். அவர்களின் வாழ்க்கை வரலாறு பள்ளிகளில் பாடமாக வைக்கப்படும். எங்கள் பெரும்பாட்டன் கப்பலோட்டியத் தமிழன் வ.உ.சிதம்பரனாருக்கு நாம் தமிழர் அரசு 'தமிழ்த் தேசிய மாமணி' விருது வழங்கி பெருமைப்படுத்தும்.

தமிழ்ப் புத்தாண்டு

- உலகின் மூத்த குடியான தமிழினத்திற்குப் புத்தாண்டு எதுவென்று தெரியவில்லை, தமிழர்களிடம் இருந்து பிரிந்து சென்ற தெலுங்கர், கன்னடர், மலையாளிகள், துளுவர் மக்களுக்குப் புத்தாண்டு எதுவென்றுத் தெரிகிறது. ஆனால் தமிழர்களுக்குப் புத்தாண்டு மேழம் (சித்திரை) ஒன்றா, இல்லை தை ஒன்றா எனத் தெரியவில்லை. நமது தேசியத் தலைவர் தான் கட்டி எழுப்பிய தனித் தமிழீழ நாட்டில் தை முதல்நாளை தமிழர் புத்தாண்டாகக் கொண்டாடினார். அதையே நாம் தமிழர் அரசு சட்டப்படி அறிவித்துத் தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடப்படும்.

தமிழ்த்தேசியத் திருவிழா

- சுறவம் (தை) முதல் நாள் ஒரு கிழமைக்கு (வாரம்) தமிழ்த் தேசியத் திருவிழா தமிழ்நாடு முழுவதும் மாபெரும் விழாவாகக் கொண்டாடப்படும். பல்வேறு நாட்டின்



பொங்கல் பண்டிகை
பொங்கல் திருவிழாவாக
ஒரு கிழமை (வாரம்) நடத்தப்படும்.





தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம்



ஓயிலாட்டம்



தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டு



காவடியாட்டம்

தலைவர்கள், கலை, இலக்கிய ஆர்வலர்கள் மற்றும் உலகம் முழுமைக்கும் பரவி வாழும் எம்மினச் சொந்தங்கள் அனைவரும் சிறப்பு அழைப்பாளராக வரவழைக்கப்படுவர்.

- சாதி, மத வேறுபாடின்றி தமிழ்ச்சமூகம் ஒரே நேரத்தில் அதிகாலைப் பொழுதில் பொங்கல் வைத்து மரபு விளையாட்டுகளை அரங்கேற்றி, இம்மண்ணின் கலைகளை நிகழ்த்திக் காட்டி, தமிழர் கலை, இலக்கிய, தொன்ம வரலாற்றுப் படிமங்களை, பண்பாட்டுக் கூறுகளை உலகினர் அறிந்துகொள்ள அரிய வாய்ப்பாக ஆண்டுதோறும் இதை நிகழ்த்துவோம். இது மிகப்பெரிய திருவிழாவாக ஒரு கிழமை நடத்தப்படும். தமிழருக்குத் தேசிய விழாவானது பொங்கல்தான் என்று நினைவுக்கு வரும் வகையில் மீட்டுருவாக்கம் செய்யப்படும். தமிழ்ப் புத்தாண்டுக்குத் தமிழர்கள் வாழும் பிற மாநிலங்களில் விடுமுறைக் கோரிப் பெற்றுத் தரப்படும். பிற மாநிலங்கள் அதை மறுக்கும் நிலையில் அவர்கள் புத்தாண்டுக்குத் தமிழ்நாட்டில் விடப்படுகின்ற விடுமுறை நீக்கம் செய்யப்படும்.

தமிழர் அறநிலையத்துறை

- தமிழர் மரபு வழிபாட்டு முறையாக, நன்றி நவிலுதல் தொடங்கி, நடுகல் முறை வழியாக முன்னோர்களையும், இயற்கையையும் மட்டுமே வணங்கியுள்ளது. பழந்தமிழ் நூல்களிலோ, தமிழர் வரலாற்றுச் சுவடுகளிலோ "இந்து" என்ற சொல் இல்லை. எனவே இந்து என்ற சொல்லும், இந்து மதமும் தமிழருடையது அல்ல. நாம் தமிழர் ஆட்சியில், தமிழகக் கோயில்களை நிருவகிக்கும் துறை "இந்து சமய அறநிலையத்துறை" என்பதற்கு மாறாக "தமிழர் அறநிலையத்துறை" என்று பெயர் மாற்றம் செய்யப்படும்.

கோயில் பூசகர்களுக்கு அரசு வேலை

- அனைத்துக் குடியினரும் பூசகர் ஆகலாம் என்ற திட்டத்தை நாம் தமிழர் அரசு உடனடியாக நிறைவேற்றும். பூசனைத் தொழிலைத் தமிழர் அறநிலையத் துறையின் கீழ் இயங்கும் அரசு வேலையாக மாற்றுவோம். மற்ற அரசு வேலைவாய்ப்புகளில் இடஒதுக்கீடு முறை பின்பற்றப்படுவதைப் போல் பூசகர் வேலையிலும் நடைமுறைப்படுத்தப்படும்.


தமிழில் வழிபாடு

- தமிழகக் கோயில்களில், உலகின் மூத்த மொழியான தமிழ் மொழியில் இறைவனை வழிபட முடியவில்லை. கோயில்களில் ‘தமிழிலும் வழிபாடு செய்யலாம்’ என்ற சொல்லை நீக்கிவிட்டு `இங்குத் தமிழில் மட்டுமே வழிபாடு செய்யப்படும்' என மாற்றப்படும். தமிழில் தான் வழிபாடு என்று நாம் தமிழர் அரசு சட்டம் இயற்றும்.

சிற்றூர் கோயில் பூசாரிகளுக்கு ஊதியம்

- தமிழ்நாட்டின் மண் வரலாறு, பழந்தமிழ் வீரம் இவற்றோடுக் கூடிய சிற்றூர் கோயில்கள் அனைத்தும், சிறுகச்சிறுகத் தமிழ் பூசாரிகளிடம் இருந்து வேதம், ஆகமம் என்ற பெயர்களில் சமற்கிருதத்தின் கைகளுக்கு மாற்றப்பட்டு வருகிறது. இந்த நிலையைத் தடுக்க வேண்டும். சிற்றூர்களில் இருக்கும் அனைத்துக்











குலதெய்வக் கோயில்களையும் நிருவகிக்கும் உரிமை இதுவரை நிருவகித்து வந்த பூசாரிகளுக்கே உரியது என்று நாம் தமிழர் அரசு அறிவிக்கும். சிற்றூர் பூசாரிகளுக்கான மாத ஊதியம் தமிழர் அறநிலையத்துறை மூலமாக வழங்கப்படும். பணி செய்து அகவை முதிர்ந்த பூசாரிகளுக்கு ஓய்வூதியம் உயர்த்தப்படும்.

கோயில் சீரமைப்பில் கட்டுப்பாடு

- கோயில் சீரமைப்பு என்ற பெயரில் தமிழரின் கட்டடக்கலைகள், கல்வெட்டு ஆவணங்கள், பழமை கூறும் வரலாற்று ஆவணங்கள் அனைத்தும் ஆளும் ஆரிய திராவிட அதிகார வகுப்பினரால் அழிக்கப்பட்டு வருகிறது. எனவே கோயில் மற்றும் கல்வெட்டு சீரமைப்பிற்கு முன்னதாக பழம்பெரும் சின்னங்கள் அனைத்தும் முப்பருமான முறையில் ஆவணப்படுத்தப்படும். முறையான அனுமதியின்றி, தேவையின்றி எந்த வகை மாற்றங்களும் செய்யக்கூடாது என்ற நடைமுறை கொண்டு வரப்படும்.
- முதன்மைத்தன்மை வாய்ந்த சிலைகள், ஓவியங்கள், ஓலைச்சுவடிகள் ஆகியவற்றைக் கடத்தியவர்களிடம் இருந்து மீட்கும் 'தனிப்படையினருக்கு', அப்பணிக்கான முழு அதிகாரமும், அரசியல் தலையீடற்ற நிலையும் உறுதி செய்யப்படும்.

பழனி கோயில் உரிமை

- பழனிமலைக் கோயில் வழிபாட்டு உரிமை வரலாற்றின் வழியில் புலிப்பாணி சித்தர்களின் வழித்தோன்றல்களுக்கு இருந்தது. திருமலை நாயக்கர் ஆட்சிக்காலத்தில் புகுத்தப்பட்ட மாற்றங்களால் மரபுரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில், எஞ்சியிருக்கும் போகர் திருமுற்ற உரிமைகளையும் அறநிலையத்துறை கைப்பற்றிக் கொள்ள முயலுகிறது.
- மண்ணின் மக்களுக்கே அதிகாரம் என்ற கொள்கையின் அடிப்படையில், பழனி கோயிலின் நிருவாகத்தில் சித்தர் மரபினருக்குரிய முதன்மைப் பங்கினை நாம் தமிழர் அரசு மீட்டெடுக்கும்.

வழிபாட்டுக் கட்டணங்கள் நீக்கம்

- தெய்வ வழிபாட்டிற்கானக் கட்டணங்கள் முற்றிலுமாக நீக்கப்படும். அனைவருக்கும் ஒரே மாதிரியான வழிபாட்டு முறையே நடைமுறைப்படுத்தப்படும். முதன்மையான கோயில்களில் தங்கிச் செல்வதற்காக, மிகக் குறைந்த கட்டணத்தில், தனியார் தங்கும் விடுதிகளுக்கு நிகரான புதிய தங்கும் விடுதிகள் கட்டப்படும். இது நமது சுற்றுலாத்துறையை மேம்படுத்தவும் பயன்படும். தமிழகத்தின் அனைத்துக் கோயில்களிலும் தற்பொழுதுள்ள பொருளாதார வருவாய்களை ஒருநிலைப்படுத்தி அவை தமிழர் அறநிலையத்துறையின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படும்.

கண்ணகிக் கோயிலுக்குத் தனிப்பாதை

- அறம் காத்து மறம் போற்றிய மானத்தமிழ் மறத்தி கண்ணகியின் கோயில் இன்று கவனிப்பாரற்றுச் சிதிலமடைந்து கிடக்கின்றது. அந்த கோயிலுக்குத் தமிழகத்தின் வனப்பகுதியின் வழியாகச் செல்ல பாதை இருந்தும், தமிழக அரசு அந்தப் பாதையைப் பயன்படுத்த அனுமதிப்பதில்லை.



சிதம்பரம் நடராசர் கோயில்











- கேரளா அரசின் எல்லைப்பகுதி வழியாகச் செல்லும் பாதையில் கேரளா வனச்சரகக் காவல்துறையும் மிகுந்த கட்டுப்பாடுகளை விதிக்கின்றது. எனவே, நாம் தமிழர் அரசு கண்ணகிக்குத் தனிக்கோட்டம் அமைத்துத் தமிழக வனப்பகுதி வழியாகவே பாதையை அமைத்துத் தரும். மேலும் பெரும்பாட்டி கண்ணகியின் நினைவைப் போற்றும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் சித்திரை முழுநிலவு நாளில் கண்ணகி கோயிலை நோக்கிப் பெரும் பயணம் மேற்கொள்வோருக்குப் பாதுகாப்பைத் தரும். இது அரசு விழாவாகவும் அறிவிக்கப்படும்.

முதன்மைப் பணி

- நாம் தமிழரின் ஆட்சியில் இராவணப் பாட்டனுக்குக் கோயில் கட்டப்படும். மேலும் வள்ளலார் பெருந்தகைக்கான மணிமண்டபமும், அய்யா வைகுந்தர் மணி மண்டபமும் கட்டப்பட்டு, மெய்யியல் தளத்திலான அவர்களின் சேவை, சமூகச் சீர்திருத்தங்கள் மக்கள் மத்தியில் பரப்பப்படும்.
- சிதம்பரம் நடராசர் கோயில் உட்பட, தமிழகத்தின் தொன்மைக் கோயில்கள், சிறுதெய்வ வழிபாட்டுக் கோயில்கள் அனைத்துமே தமிழர் அறநிலையத் துறையின் கீழ் கொண்டு வரப்படும்.
- சட்டத்திற்குப் புறம்பாக கையகப்படுத்தப்பட்ட கோயிலுக்குச் சொந்தமான 4 இலக்கத்து 57 ஆயிரம் குறுக்கம் நிலங்கள், கட்டடங்கள் அனைத்தும் புதிய குத்தகை வாடகைக்கு உட்படுத்தப்படும். சிறு கடைகள் வீடுகள் மட்டும் பயன்பாட்டாளர்களின் பொறுப்பிலேயே புதிய கட்டண விதிகளோடு ஒப்படைக்கப்படும்.
- சனாதனத்திற்கு எதிராகத் தமிழர்களின் சமனிய மெய்யியலான சமரச சுத்த சன்மார்க்கத்தை மீட்டெடுத்த வள்ளலார் வாழ்ந்த வடலூர் பெருவெளியை, ஆய்வு மையம் என்ற பெயரில் திமுக அரசு கையகப்படுத்த முனைந்தது. பல இலக்கம் அடியவர்கள் கூடும் இந்த வணங்குதற்குரிய பெருவெளியை கையகப்படுத்துவது வள்ளலாரின் மெய்யியல் நோக்கத்தையே சிதைப்பதாகும்.
- 70 குறுக்கம் பரப்பளவில் அமையவுள்ள இந்த ஆய்வு மையக் கட்டுமானத்தால், எதிர்காலத்தில் சுறவக் கொடிறு (தைப்பூச) வழிபாட்டிற்கு வரும் மெய்யன்பர்களுக்குப் பெரும் இடநெருக்கடியும், நேர்ச்சிகளும் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, அடியவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, இந்தப் பன்னாட்டு ஆய்வு மையத்தை வடலூர் பெருவெளியைத் தவிர்த்து, அருகிலுள்ள வேறு பகுதியில் நாம் தமிழர் அரசு அமைத்திடும்.

அனைத்துச் சமூகத்தவர்களுக்கும்

- கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் மற்றும் கட்டடங்கள் ஆகியவை ஆதித்தமிழ் குடிகளுக்கு உரிய விழுக்காட்டு அடிப்படையில் நேரடியாகவும், மற்ற சமூகத்தவர்களுக்கு விழுக்காட்டு அடிப்படையிலும் குத்தகைக்கு அளிக்கப்படும்.

அனைவரும் பூசாரியாகலாம்

- ஓதுவார்கள், சைவ வைணவ பெரியவர்கள், பண்டாரங்கள் ஆகியவர்களுடன் அனைத்துச் சாதியைச் சார்ந்த மெய்யியலில் அதீத ஈடுபாடு உடையவர்கள் ஒழுக்கத்தின் அடிப்படையில் பூசகர்களாகக் கோயில் பூசாரிகளாக பணியமர்த்தப்படுவார்கள்.















கூட்டுச் சூழ்ச்சி

- பத்தாம் நூற்றாண்டுக் காலகட்டத்தில் தமிழர் மெய்யியலில் ஆரியம் கலந்து, ஏற்கனவே இந்த நிலத்தில் இருந்த கடவுள்களின் மீது தனது பகுத்தறிவுக்கு ஒவ்வாத கற்பனைக் கதைகளைப் புனைந்தது. இந்தச் சூழ்நிலையை எதிர்கொள்ளத் தெரியாத அப்போது தமிழகத்தில் இருந்த வடுகர்கள் மிக நுட்பமாக வடுகர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையே இருந்த எதிர்ப்பை பிராமணர்களுக்கும் திராவிடர்களுக்கும் இடையேயான எதிர்ப்பாகத் திசைமாற்றி மெய்யியல் அரசியல் புரட்டை செய்துவிட்டார்கள்.

- தமிழர் மெய்யியல் மீதான ஆரிய திராவிடர்களின் வஞ்சமும் புரட்டும் இப்படித்தான் தொடர்ந்தது. பகுத்தறிவு என்ற பெயரில் தமிழர் மெய்யியலில் திணிக்கப்பட்ட ஆரியப் புரட்டுகளை நீக்காமல், 'கடவுளே இல்லை' என்று சொல்லி, தமிழினத்தை எந்தவகை பண்பாடுகளும் அற்ற ஒரு இனமாக மாற்றி வைத்தது திராவிடம். இந்தக் காலகட்டத்தில் ஆரிய - திராவிட கூட்டுச் சூழ்ச்சிகளை முறியடித்துத் தமிழர் மரபுவழி மெய்யியலை மீட்க வேண்டிய தேவை தமிழர் வரலாற்றுக்கு இன்றியமையாததாகின்றது. அதை நாம் தமிழர் அரசு முன்னெடுக்கும்.

தமிழம்

- முருகனைத் தமிழர்களின் இறையோனாக முன்னிறுத்துவதைப்போல், தமிழர் மறையோனாக உலகப்பொதுமறை தந்த பெரும்பாட்டன் வள்ளுவப்பெருமகனாரை நாம் தமிழர் அரசு அறிவிக்கும். சாதி மத வேறுபாடுகளைக் களைந்து, ஆதியில் இருந்த நமது மெய்யியலைக் கட்டமைக்கும். எனவே தாய்மொழியை முன்னிறுத்தி "தமிழம்" என்ற மதத்தினை அரசு ஆணையாக வெளியிடும்.

நிலையானத் தடை

- தீண்டாமையைக் கடைபிடிக்கும் பூசாரிகளுக்கு வேறு எந்தக் கோயிலிலும் வழிபாட்டு முறையில் ஈடுபட தடைவிதிக்கப்படும். சாதி மதங்களுக்கு அப்பாற்பட்டதுதான் தமிழர் மெய்யியல். நமது வழிபாட்டு முறையும் அதுதான்.

உயர்ந்த மெய்யியல்

- தமிழர்கள், தெய்வத்தினைத் தனித்த பண்புகள் கொண்டு அடையாளப்படுத்தி வந்தனர். தனிப்பெரும் நற்குணங்களாலும் பண்புகளாலும் தன்னிகரற்று விளங்கும் ஒருவரை தெய்வ நிலைக்கு உயர்த்தி வணங்குவதே தமிழரின் மரபாக இருந்து வந்துள்ளது. பசித்திருப்போருக்கு உணவளித்தும், துன்பம் நேர்ந்தால் தாங்கிப்பிடித்தும், உதவியாய் நிற்கும் உயர்ந்த குணங்களையே மக்கள் கடவுளாக உருவகப்படுத்துகின்றனர்.

  அதைத்தான் நமது தமிழ் மறை,

  "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
  தெய்வத்துள் வைக்கப்படும்"

  என்று கூறுகிறது.

  இதனையே நாம் தமிழர் அரசு மேலும் தெளிவாகத் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் "இருந்தால் எங்கள் தலைவன், இல்லையேல் எங்கள் இறைவன்" என்று தன் மெய்யியல் கோட்பாட்டினை முன் வைக்கிறது.





ஆதி திராவிடன் என்பது வரலாற்றுப் பிழை

அரிசன் என்பது காந்தியின் ஏமாற்று.
தாழ்த்தப்பட்டவன் என்பது தன்மானமின்மை.
தலித் என்பது தமிழின இழப்பு.
பழந்தமிழன் என்பதே சிறப்பும் பெருமையும்.
ஆதி ஆந்திரன், ஆதிக் கன்னடன், ஆதிக் கேரளன் என்று பிறர் தம்மைச் சுட்டும் பொழுது ஆதித்(பழந்)தமிழன் என்பதே சிறந்தது.

– பாவலரேறு பெருஞ்சித்திரனார்



தொல் தமிழர் மீட்சி

ஆதித் தமிழர் விடுதலை இல்லாது மீதித் தமிழர் விடுதலை வெல்லாது.

மண்ணின் தொல்குடிகளைப் ‘பட்டியல் இனம்’ என்று வகைப்படுத்தி, அவர்களுக்கான நலத்துறையை ‘ஆதி திராவிடர் நலத்துறை’ என அழைத்து வருவதை நாம் தமிழர் கட்சி கண்டிக்கின்றது. 1956இல் ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்திலிருந்து மொழிவழி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்ட பின்னர் அங்கே வாழும் தாழ்த்தப்பட்டோர் சமூகம், ஆதிக் கன்னடர், ஆதி ஆந்திரர், ஆதி மலையாளி என்று அரசாணை மூலம் அழைக்கப்படுவதைப் போன்று, தமிழகத்தில் ஆதிதிராவிடர் என்று அழைக்கப்படுவது தடை செய்யப்பட்டு, அதற்கு மாற்றாக பட்டியல் வகுப்புச் சமூகங்களை ஒருங்கிணைத்து அவர்கள் “ஆதித்(பழந்)தமிழர்” என்று நாம் தமிழர் அரசு சட்டம் இயற்றும்.

பொது வாழ்விடம், பொது இடுகாடு

- இரட்டை வாழ்விடம் (ஊர், சேரி), இரட்டை வழிபாட்டுத்தலங்கள், இரட்டைக்குவளை முறை போன்ற தீண்டாமைக் கொடுமைகள் அறவே நீக்கப்பட்டு, சமூக ஏற்றத்தாழ்வற்ற பொது வாழ்விடம் உறுதி செய்யப்படும்.
- சாதிக்கொரு இடுகாடு - சுடுகாடு என்றிருப்பதை மாற்றி, பொது மயானக் கட்டமைப்பு மேம்பட்ட முறையில் அமைக்கப்படும்.
- இதன்மூலம் ஏற்றத்தாழ்வற்ற, வேறுபாடற்ற ஒரு சமநிலைச் சமூகம் படைத்துச் சமூக விடுதலை அடைவதே நாம் தமிழர் அரசின் இலக்கு.









குவைப் (நிதி) பங்கீடு

- ஆதித்தமிழர், பழந்தமிழ்க் குடியினர் மக்கள் தொகை விழுக்காட்டுக்கு ஏற்ப கல்வி, வேலைவாய்ப்புகளில் இடப்பகிர்வு உயர்த்தப்படும்.
- ஆதித்தமிழர் சமூகத்திற்கென ஒதுக்கப்படும் சிறப்பு உட்கூறு குவை (நிதி), மக்கள் தொகை விழுக்காட்டிற்கு இணையாக பகிர்ந்தளிக்கப்படும். மேற்படி குவை (நிதி) ஆதித்தமிழர் நலன்களுக்கு மட்டுமே செலவிடப்படும்.

பஞ்சமி நில மீட்பு

- ஆதித்தமிழர்களுக்குச் சொந்தமான பஞ்சமி நிலங்கள், ஆங்கிலேய அரசு (James Henry Apperley Tremenheere - 1891) வழங்கியது. சென்னை மாகாணத்தில் மட்டும் சற்றேறக்குறைய பன்னிரண்டு இலக்கம் குறுக்கம் பஞ்சமி நிலங்களை ஆதித்தமிழ்க்குடி மக்களுக்கு வழங்கியது. அந்த நிலங்கள் எல்லாம் படிப்படியாக வலிந்து கவரப்பட்டுள்ளது. அந்த பஞ்சமி நிலங்கள் எல்லாம் கண்டறியப்பட்டு, அந்த நிலங்கள் மீட்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும் என்ற உறுதியை நாம் தமிழர் கட்சி அளிக்கின்றது. திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் இந்தக் கோரிக்கைகள் கண்டு கொள்ளப்படவில்லை. எனவே பஞ்சமி நிலத்தை மீட்டளிப்பதில் எமது அரசு உறுதியாக செயல்படும். கையகப்படுத்தியோர் மீது உசாவுதலுக்குப் (விசாரணை) பின் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
- அரசின்கீழ் உள்ள கோயில் நிலங்கள் கணக்கெடுக்கப்பட்டு, விழுக்காட்டின் அடிப்படையில் மண்ணின் தொல்குடி மக்களுக்கு ஒதுக்கப்படும். கடைகள் மற்றும் வணிக நிறுவன இடங்களும் அவ்வாறே பகிர்ந்தளிக்கப்படும்.

சமூகநீதிப் போராளிகள்

- சாதி எதிர்ப்புப் போரில் அரச வன்முறை மற்றும் சாதிவெறித் தாக்குதலில் பலியானோரைச் "சமூகநீதிப் போராளிகள்" என்று அறிவித்து அவர்தம் குடும்பத்தினருக்கு உரிய இழப்பீடும், அரசுப் பணியும் வழங்கப்படும்.
- ஆதித்தமிழர் மேம்பாட்டுக்கென இயங்கும் தாட்கோ (*TAHDCO*)-விற்கு மாற்றாக அயோத்திதாசர் பெயரில் குவையம் அமைக்கப்படும்.

வனவள உரிமைச்சட்டம் – 2008

- ஆண்டாண்டு காலமாய் வனத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கும் தொல்குடியினருக்கு அந்த வனங்கள் உரிமை கிடையாது என்ற அவலம் இருந்து வருகிறது. எனவே 2008ஆம் ஆண்டு கொண்டு வந்த வன உரிமைச் சட்டம் அம்மக்களுக்கு அவர்கள் பயன்படுத்திய நிலத்திற்கு பட்டா வழங்க வழிவகை செய்துள்ளது.
- சட்டம் அனுமதிக்கும் உச்சவரம்பான 4 வரம்பு (ஹெக்டேர்) வரை, தொல்குடியினர் பயன்பாட்டிலுள்ள நிலங்களுக்கு முழுமையான பட்டா எவ்விதத்













தடையுமின்றி வழங்கப்படும். இதன்கீழ் பட்டாவிற்கான விண்ணப்பங்களுக்கு நாம் தமிழர் அரசு உரிய தீர்வு காணும்.

- மலை சார்ந்த வேளாண்மைக்கு வேண்டிய கடனும் வழங்கப்படும்.
- நில உரிமையுடன் சேர்த்து, வனப் பொருட்களைச் சேகரிக்கும் மற்றும் பாதுகாக்கும் 'சமூக வன உரிமைகள்' (Community Forest Rights) சிற்றூர் அவைகளுக்கே (கிராம சபை) முழுமையாக வழங்கப்படும்.

இருவர் பெயரிலும் பட்டா

- அரசினால் வழங்கப்படும் திட்டங்கள், நிலங்கள், மனைப்பட்டாக்கள் ஆண், பெண் இருவர் பெயரிலும் கூட்டாக வழங்கப்படும்.
- அரசு கட்டித்தரும் வீடுகள் தரமானதாக வழங்கப்படும்.
- படித்துத் தொழில் தொடங்கும் இளைஞர்களுக்கு அரசு மானியம் வழங்கப்படும்.

இடஒதுக்கீட்டு முறைப்படி

- சிற்றூர்ப் பொது வளங்களான ஏரி மீன் ஏலமிடல், மர விளைச்சல் மற்றும் அரசு ஒப்பந்தப் பணிகளில் உரிய பங்கு வழங்கப்படும்.
- மாநகராட்சி, நகராட்சி, மாவட்ட, வட்டத் தலைநகரங்கள், பேரூராட்சி, ஊராட்சி ஆகிய உள்ளாட்சி அமைப்புகளின் வணிக வளாகங்களில் வருவாய் தரும் கட்டடங்களில் ஆதித்தமிழர், பழந்தமிழர் குடிமக்களுக்கு உரிய இடஒதுக்கீடு முறைப்படி உறுதியாக வழங்கப்படும்.

தீண்டாமை ஒழிப்பு

- மாந்தக் கழிவை மாந்தனே அகற்றும் இழிநிலை முற்றாகத் தடை செய்யப்படும்.
- தீண்டாமைக்கு உட்பட்ட மக்களுக்குத் தற்போது இருந்து வரும் தனித் தொழில்கள், தனிக்கிணறு, தனி வாழுமிடம், தனிப் பாதை போன்ற இழி முறைகள் முற்றிலுமாக ஒழிக்கப்படும். இதற்கான கடும் நடவடிக்கை எடுக்கப்படும். செத்த மாடு சுமத்தல், பிணம் சுடுதல், செருப்புச் செய்து கொடுக்க வற்புறுத்தல் போன்ற தீண்டாமைத் தொழில்கள் அறவே நீக்கப்படும்.

பொது விடுதி

- ஆதித்தமிழ்க்குடிகளுக்குத் தனி மாணவர் விடுதி, பிற்படுத்தப்பட்டோருக்குத் தனி மாணவர் விடுதி எனப் பிரித்து வைக்கப்பட்டிருக்கும் அமைப்பு மாற்றப்பட்டு அனைவரும் ஒரே விடுதியில் தங்கிப் படிக்க வைக்கப்படுவார்கள்.

சமூக நீதி

- பட்டியல் சமூகத்திற்குக் கிடைக்கக்கூடிய இடப்பகிர்வுக்குள் அருந்ததியர்களுக்கு உட்பிரிவினை ஏற்படுத்துவது, ஆதித்தமிழ்க்குடியினருக்கு கிடைக்க வேண்டிய வாய்ப்புகளைப் பறிக்கின்றது.



- அருந்ததியர்களுக்கான உள் இடப்பகிர்வு தேவை இருப்பின் அதனை பொதுப்பிரிவிலிருந்து உருவாக்கியிருக்க வேண்டுமே தவிர, பட்டியலினச் சமூகங்களுக்கான விழுக்காட்டிலிருந்து ஏற்படுத்தியதை நாம் தமிழர் கட்சி எதிர்க்கின்றது.
- அதே சமயம் அருந்ததியர்களுக்கான உரிய இடப்பகிர்வை நாம் தமிழர் அரசு உறுதி செய்யும்.

பட்டியல் வெளியேற்றம்

- பள்ளர் குடி இன மக்கள் ஒன்று சேர்ந்து 'தேவேந்திர குல வேளாளர்' என்ற பெயரில் தங்களை அழைக்க வேண்டும் என்று முன்மொழிந்த பட்டியல் வெளியேற்றக் கோரிக்கையை நாம் தமிழரர் கட்சி ஆதரிக்கிறது.
- குடும்பன், காலாடி, பண்ணாடி, கடையன், பள்ளர், தேவேந்திரகுலத்தான், வாதிரியார் என்ற ஏழு பிரிவினரையும் ஒன்றிணைத்து ஒரே சமூகமாகத் தேவேந்திர குல வேளாளர் என்று அழைக்க வேண்டும் என்கிற அரசாணை வெளியிடப்பட்டாலும், பட்டியல் வெளியேற்றம் இன்றளவிலும் தொடர் கோரிக்கையாகவே உள்ளது. தேவேந்திர குல வேளாளர் மக்களைப் பட்டியல் பிரிவிலிருந்து வெளியேற்றக் கோரும் நெடுநாள் கோரிக்கையை நாம் தமிழர் அரசு உடனடியாக நிறைவேற்றும்.

ஆணவப்படுகொலைக்கு எதிராகத் தனிச்சட்டம்

- ஆணவப்படுகொலைக்கு எதிராக தனிச்சட்டம் இயற்றப்படும்.
- கொலை செய்தவர் மட்டுமல்லாது, அந்த ஆணவப்படுகொலைக்கு அடிப்படையாக இருக்கக்கூடிய சாதியச் சிந்தனைகளை வளர்த்தெடுப்பதிலும், ஊக்கப்படுத்துவதிலும் குற்றவாளியின் குடும்பத்தினருடைய பங்கு இருப்பது உறுதிப்படுத்தப்பட்டால் அவர்கள் அனைவருக்குமான அரசு உதவிகள், அரசுப் பணி மற்றும் அரசின் நலத்திட்டங்கள் அனைத்தும் முற்றிலுமாக, வாழ்நாள் முழுவதும் மறுக்கப்படும்.



தாய்மொழிப் பதிவு

- பள்ளிகளில் சேர்க்கைப் பதிவின் போது, அவரவர் தாய்மொழி பற்றிய பதிவும் கட்டாயமாக்கப்படும். ஆதித்தமிழர்கள் மதம் மாறினாலும் ஆதித்தமிழர்களுக்கான அரசு உதவிகளே வழங்கப்படும். இடப்பகிர்விற்கு மதமாற்றம் ஒரு பொருட்டாகக் கருதப்படாது.

தனியார் துறைகளிலும்

- அரசுத் துறைகளில் உள்ளதைப்போல், தனியார் நிறுவனங்களிலும் ஆதித் தமிழர்களுக்கான இடப்பகிர்வைக் கடைபிடிக்க உத்திரவிடப்படும். அவற்றை நடைமுறைப்படுத்தாத நிறுவனங்களுக்கு அரசின் சலுகைகள், மானியங்கள் மற்றும் இதர உதவிகள் மறுக்கப்படும். இதற்கென ஆண்டுக்கொரு முறை அத்தனியார் நிறுவனங்கள் ஆய்வுக்குட்படுத்தப்படும் என்ற சட்ட நடைமுறைகளை நாம் தமிழர் அரசு கொண்டு வரும்.

மலைவாழ் தொல்குடிகள்

- வனப் பாதுகாப்புச் சட்டம் மறு ஆய்வுக்குட்படுத்தப்பட்டு, அதில் மலைவாழ் தொல்குடிகளுக்கு முன்னுரிமை கொடுக்கும் வகையில் மாற்றங்கள் கொண்டு வரப்படும்.
- கடந்த 15 ஆண்டுகளில் அப்புறப்படுத்தப்பட்ட மலைவாழ் தொல்குடிகள் அந்தந்த மலைப்பகுதிகளிலேயே மீண்டும் குடியமர்த்தப்படுவார்கள். அதற்கான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
- மலைவாழ் தொல்குடிகளுக்கான சாலை வசதி, குடிநீர், மருத்துவம், கல்வி உள்ளிட்ட அனைத்து அடிப்படைத் தேவைகளும் சிறப்புத் துறைகள் மூலம் மேற்கொள்ளப்படும்.

நிலங்கள் அளிக்கப்படும்

- வனப்பகுதியில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு, மதிப்புக்கூட்டிய பொருளாக மாற்றி விற்பனைக்கு ஏற்றுமதி செய்ய, ஒவ்வொரு வனச்சரகத்திலும் தகுந்த தற்சார்புப் பொருளாதார மண்டலம் அமைக்கப்படும். இதன் மூலம் அப்பகுதி மக்களுக்குப் பொருளாதார வசதியும், வாழ்வாதார உறுதியும் கிடைக்கும். இப்பகுதி மக்களுக்கான வேளாண் மற்றும் ஆடு, மாடு பண்ணைகளுக்கான நிலங்கள் ஒதுக்கப்படும். மலைவாழ் தொல்குடி மக்கள் அல்லாதோரின், கையகப்படுத்தப்பட்டுள்ள நிலங்கள் மீட்கப்பட்டு மலைவாழ் தொல்குடிகளிடமே ஒப்படைக்கப்படும்.
- படித்த மலைவாழ் தொல்குடி இளைஞர்களுக்கு, உயர்தர தங்கும் விடுதி மேலாண்மைக்குப் பயிற்சி வழங்கப்பட்டு, மலைவாழ் பகுதிகளில் உள்ள உயர்தர விடுதிகளில் பணியமர்த்தப்படுவார்கள். விடுதியும் வேலையும் அவர்களிடமே என்ற மாற்றம், அவர்களுக்கு முன்னேற்றமாக அமையும். மலைவாழ் தொல்குடியினர் தன்னிறைவு பெற்ற மக்களாக தலைநிமிர்வுடன் வாழ நாம் தமிழர் அரசு வழிவகை செய்யும்.



குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

– தமிழ்மறை (1025) – வள்ளுவப்பெருமகனார்



“வெளிநாடு வாழ் தமிழர்களின் வருவாயை ஈட்டிக் கொள்ளும் அரசு அவர்களுக்கான நெருக்கடிக் கால உதவிகள் பற்றி அக்கறை கொள்வதில்லை. நாம் தமிழர் அரசு அதற்கென்று தனிப் பிரிவை உருவாக்கும்.”

அயலகத் தமிழர்களுக்கான அமைச்சகம்

> ‘திரைகடல் ஓடியும் திரவியம் தேடு’ என்ற முதுமொழிக்கேற்ப உலகின் எல்லா நாடுகளுக்கும் சென்று பொருளீட்டி வருபவர்கள் தமிழர்கள். அவர்களின் மீது பெரும் அக்கறை கொண்டு நாம் தமிழர் கட்சி அவர்களுக்கான திட்டங்களை முன் வைக்கின்றது.

அயலகத் தமிழர் நலம்

- பெரும்பாலான தமிழர்கள் அரபு மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளில் கடுமையான பணிகளைச் செய்து வருகின்றனர். அவர்களின் சட்ட உரிமை மறுக்கப்படுவது மட்டுமல்லாமல், அடிப்படை மாந்த உரிமைகள்கூட வெளிநாட்டு அரசுகளால் மறுக்கப்பட்டு வருகிறது. இந்திய ஒன்றிய அரசும் தகுந்த நடவடிக்கைகளை எடுக்காமல் வேடிக்கை பார்த்தபடி இருக்கின்றது.
- 64ஆவது தேசிய மாதிரிப் புள்ளித்தகவலின்படி அயலகத் தமிழர்கள், 2009லிருந்து 2020 வரை ஏறத்தாழ 65,000 கோடி உரூபாயை இந்திய ஒன்றிய அரசுக்கு வருமானமாக ஈட்டிக் கொடுத்துள்ளனர். ஆனால் அந்தத் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாப்பதில் இந்திய ஒன்றிய, தமிழ்நாடு அரசுகள் எந்த முயற்சிகளையும் எடுப்பதில்லை.
- நாம் தமிழர் ஆட்சியில் 1983 குடிபெயர்வுச் சட்டம் (விதிகள் வரையறைகள்) இந்திய ஒன்றிய அரசின் சட்டத்தை மாற்றி அமைக்க ஆவன செய்வதுடன் தமிழர் நலன் சார்ந்து வெளிநாடு வாழ் தமிழர்களுக்கெனத் தனிச்சட்டம் கொண்டு வர நடவடிக்கைகள் எடுக்கப்படும்.



முன் மாதிரி



தனி அமைச்சகம்

- MOTA (Ministry of Overseas Thamizh Affairs) என்ற பெயரில் வெளிநாடுவாழ் தமிழர்களுக்கென நாம் தமிழர் அரசு தனி அமைச்சகத்தை ஏற்படுத்தும்.
- தமிழ்நாடு குடிப்பெயர்வு கணக்கெடுப்பு 2013இன்படி பெரும்பாலும் வெளிநாடுகளில் அன்றாட உழைப்பாளர்களாக உள்ள இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, பெரம்பலூர் போன்ற மாவட்டங்களைச் சார்ந்தவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அந்தந்த மாவட்டத் தலைநகரங்களில் சட்ட உதவி மையங்கள் ஏற்படுத்தப்படும்.

மாதந்தோறும் கணக்கெடுப்பு

- தமிழகத்திற்குப் பல ஆயிரம் கோடிகளை வருவாயாகக் கொடுத்துக் கொண்டிருக்கும் வெளிநாடு வாழ் தமிழர்கள் பற்றிய புள்ளித்தகவல்கள் எதையும் இதுவரையான அரசுகள் வைத்துக் கொள்ளாமல் இருப்பது வேதனையான ஒன்று. நாம் தமிழர் அரசு மாவட்டந்தோறும், மாவட்ட ஆட்சியரின் நேரடிக் கண்காணிப்பில் தனிப் பிரிவை ஏற்படுத்தும். இந்தத் தனிப்பிரிவு அந்தந்த மாவட்டங்களில் இருந்து வெளிநாடு சென்று வேலை பார்ப்போரின் தொடர்பு எண், வேலை செய்யும் நாடு, அவர்களுடைய சிக்கல்கள் உள்ளிட்ட அனைத்துத் தகவல்களையும் திரட்டிப் பதிவு செய்து பேணிக்காத்து வைத்திருக்கும்.
- மாதம் ஒருமுறை அவர்களை மாவட்ட நிருவாகம் தொடர்பு கொண்டு அவர்களின் நிலையை வினாவிப் பதிவு செய்யும். மாவட்டம் முழுவதும் திரட்டப்படும் தகவல்களை மாநில தலைமையகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். மாநிலத் தலைமை, இந்திய ஒன்றிய அரசின் வெளியுறவுத்துறையைத் தொடர்பு கொண்டு தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

நெருக்கடிக் கால அழைப்பு மையம்

- வெளிநாடு வாழ் தமிழர்களின் வருவாயை ஈட்டிக்கொள்ளும் அரசு அவர்களுக்கான நெருக்கடிக் கால உதவிகள் பற்றி அக்கறை கொள்வதில்லை. நமது அரசு அதற்கென்று தனிப்பிரிவை உருவாக்கும். 24 மணி நேரமும் இயங்கும் இந்த நெருக்கடிக் கால உதவி மையம், உலகின் எந்த மூலையில் இருந்தும் தொடர்பு கொள்ளும் தமிழர்களின் நெருக்கடிக் காலக் குரலுக்கு வேண்டிய நடவடிக்கையை உடனே எடுக்கும். அவர்களின் கோரிக்கைகளை இந்திய ஒன்றிய அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்று உடனடி நடவடிக்கை எடுக்கச் செய்யும்.

தொழில் முனைவோர் அமைப்பு

- வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் ஒன்று சேர்ந்து, தமிழகத்தில் தொழில் தொடங்க வழிவகை செய்து தரப்படும். கூட்டாண்மை முறையில், எந்த மாவட்டத்தில் என்ன தொழில் செய்ய இயலுமோ, அதில் பல தமிழர்கள் கூட்டாகச் சேர்ந்து முதலீடு செய்யலாம். அதன்மூலம் தமிழக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். தொழில் வளமும் பெருகும். அவர்களின் சிறு முதலீடும் வளர்ந்தபடி இருக்கும்.

முறையற்ற முகமைகளுக்குத் தடை

- தமிழ்நாட்டில் இயங்குகிற முறையற்ற தனியார் முகமைகளால்தான் பெரும்பான்மையான இளைஞர்கள் ஏமாற்றப்படுகிறார்கள். பல இலட்சங்களை இழந்து, வெளிநாட்டிலும் சரியான வேலையின்றி தவித்து வருகிறார்கள். இப்படியான மோசடிகள் அனைத்தும் தடுக்கப்படும். அதனால் இதற்கென்று அரசே முகமையை உருவாக்கும். எந்த நாட்டில் என்ன வேலைவாய்ப்பு இருக்கிறது என்பதை அறிந்து முறையான கட்டணத்தோடு அரசே மக்களை அனுப்பி வைக்கும். இதில் முறையாகப் பதிவு செய்யப்பட்ட முகமையாளர்களும் இணைந்து கொள்ள வாய்ப்பளிக்கப்படும்.


- இதை மீறி இளைஞர்களை ஏமாற்றி வெளிநாட்டிற்கு அனுப்பி வைக்கும் முகமையாளர்கள் ஆள் கடத்தல் வழக்கில் தளைப்படுத்தப்படுவார்கள். அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

துணைத் தூதரகம்

- இராமநாதபுரம் மாவட்டத்தைத் தலைமையாகக் கொண்டு அரேபிய மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளின் சிறப்புத் துணைத் தூதரகத்தை ஒன்றிய அரசின் உதவியோடு அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

- தமிழர்கள் பெரும்பாலும் வாழுகின்ற வெளிநாடுகளில் உள்ள பன்னாட்டு வானூர்தி நிலையங்களில் குடிப்பெயர்வு குறித்த ஐயங்கள், சட்டத் திட்டங்களைத் தெரிந்து கொள்வதற்கென்றும், முறையீடு மற்றும் உதவிக்கென்றும் சேவை மையம் ஒன்று ஏற்படுத்தப்படும்.





தனி வைப்பகம்

- வெளி நாடுகளில் வாழுகின்ற தொழிலாளர்கள் தங்களின் ஊதியத்தைத் தனியார் முகமை மூலமாக அனுப்பி ஏமாறாமல் இருப்பதற்குச் சட்டத்திற்குட்பட்டு வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்கென தனி வைப்பகம் ஏற்படுத்தப்படும். அந்த வைப்பகம் பணப் பரிமாற்றத்தை மட்டும் செய்யாமல், அவர்களுக்குக் கடன் உதவி, சேமிப்பு என பிற வைப்பகங்கள் செய்கின்ற சேவைகளையும் செய்து கொடுக்கும்.

வாக்குரிமை

- வெளிநாடுகளில் வாழுகிற தமிழர்களுக்கு அவர்கள் வாழும் நாடுகளிலிருந்தே வாக்களிக்கும் வசதியை ஏற்படுத்தித்தர நாம் தமிழர் அரசு இந்திய ஒன்றிய அரசின் வழியே நடவடிக்கை எடுக்கும்.

வெளிநாடு வாழ் மீனவர் நலன்

- பன்னாட்டுக் கடற்கரையில் ஒப்பந்த அடிப்படையில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் பற்றிய தகவல்கள் அனைத்தும் முறையாகப் பதிவு செய்யப்படும். எத்தனை மீனவர்கள், எந்தெந்த நாட்டில் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கான சிக்கல்கள் என்னென்ன என்று அனைத்தும் கண்காணிப்பிலேயே வைக்கப்படும். அவர்களுக்கான உரிமைகள் அங்கே மறுக்கப்பட்டால், உடனடியாகப் பன்னாட்டு மாந்த உரிமை அமைப்புகளோடு தொடர்பு கொண்டு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கென்று தனியாக ஒரு சட்ட உதவி மையம் அமைக்கப்படும்.

முறையற்ற காவல்

- முறையற்ற நிறுவனங்களால் வெளிநாடுகளுக்கு அன்றாட உழைப்பாளர்களாகக் கொண்டு செல்லப்பட்ட தமிழர்கள் ஏறத்தாழ 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள், எந்த வகை அடிப்படை உரிமையும் இல்லாமல் அந்நாடுகளின் சிறைகளிலும், அடைப்புக் காவலிலும் வைக்கப்பட்டிருக்கின்றனர். அவர்கள் பற்றிய தகவல்களை முழுவதுமாகப் பெற்று, பன்னாட்டு நீதிமன்றம் மூலமாக அவர்களை மீட்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். அவர்களின் விடுதலைக்காகத் தனிச்சட்டக் குழுமம் ஒன்றும் ஏற்படுத்தப்படும்.

- வெளிநாடுகளில் சட்டத்திற்குப் புறம்பாக இயங்கி வருகின்ற மாந்த வள முகமைகள் (Man Power Agency) கணக்கெடுக்கப்பட்டு உரிய அரசுகளுக்குத் தகவல் தெரிவித்து சட்டத்திற்குப் புறம்பான முகமைகளை தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.



தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு.

– தமிழ்மறை (396) – வள்ளுவப்பெருமகனார்.



கல்விக் கொள்கை

> தொடக்கக் கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்வி வரை சரியாகச் சமமாக அனைவருக்கும் இலவசம். நல்லத் தொடக்கம் பாதி வெற்றிக்குச் சமம். எனவே தொடக்கக் கல்வி, தொடக்க நல வாழ்வில் நாம் தமிழர் அரசு அதிக அக்கறை செலுத்தும். உயிரும் அறிவும் விற்பனைக்கு வந்துவிட்ட நாடு வளராது. எனவே மருத்துவத்தையும் கல்வியையும் நமது அரசு பொதுமைப்படுத்தும்.

கல்வித் தரம்

- முதலமைச்சர், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயரதிகாரிகள், கடைநிலை ஊழியர்கள், ஆசிரியப் பெருமக்களின் பிள்ளைகள் மற்றும் அரசு ஊழியர்களின் பிள்ளைகள் என அனைவருமே அரசுப் பள்ளியில் தான் கல்வி கற்க வேண்டும் என்பது அடிப்படை சட்டமாக்கப்படும்.
- அப்போதுதான் அரசுப் பள்ளிகள் முறையாக இயங்கும். அரசுப் பள்ளிகள் முறையாக இயங்கினால் தான் ஆசிரியர்களின் தேவைக்கேற்ப காலிப் பணியிடங்களை நிரப்ப முடியும். மாணவர்களின் எண்ணிக்கை கூடினால், மேலும் புதிய ஆசிரியர் பணியிடங்களை உருவாக்க முடியும்.
- மேலும், அரசுப் பள்ளியில் படிக்கின்ற பிள்ளைகளுக்குத்தான் அரசு வேலைகளில் முன்னுரிமை கொடுக்கப்படும். அப்பொழுது தான் அரசுப் பள்ளியின் கல்வித் தரம் உயரும்.
- இந்த முறையைப் பின்பற்றிய கேரளாவில் 37.5 விழுக்காடு மக்கள் அரசுப் பள்ளியை நோக்கி திரும்பியிருக்கிறார்கள். இதை நாம் தமிழர் அரசு தமிழ்நாட்டில் செயல்படுத்தும்.















“முதலமைச்சர் தொடங்கி கடைநிலை அரசு ஊழியர்கள் வரை அனைவரின் குழந்தைகளும் உறுதியாக அரசுப்பள்ளிகளில்தான் படிக்கவேண்டும்.”

கல்வியின் அடிப்படை நோக்கம்

- ஒரு நாட்டின் எதிர்காலம் என்பது அந்த நாட்டின் வகுப்பறைகளில் தான் தீர்மானிக்கப்படுகின்றது.
- கல்வி சுமையாக அல்லாமல், சுகமாக இருக்க வேண்டும்.
- கல்வி விற்பனைப் பொருளல்ல, அது நம் குழந்தைகளின் அடிப்படை உரிமை.
- கல்வி சமூகத்தைக் கட்டமைக்கும் கருவி, ஒடுக்கப்பட்டவர்களை மீட்டெடுக்கும் வழிமுறை.
- ஏற்றத்தாழ்வுகளற்ற, பாகுபாடுகளற்ற உண்மையான மக்களாட்சியை உருவாக்குவதே கல்வியின் நோக்கம்.
- இளைய சமூகம் உயிர் வாழ்வதற்கான, முன்னேறுவதற்கான சமவாய்ப்புகளை ஒழித்துக் கட்டிய தற்போதைய கல்வி அமைப்பு மக்களாட்சி நெறிகளுக்கு எதிரானது.
- கல்வியைத் தனியார் முதலாளிகளின் வணிகப் பொருளாக மாற்றியது, படிக்கும் பிள்ளைகளுக்கு இழைக்கப்பட்ட பெரும் இரண்டகம்.
- கல்விக்கென்று வரியை வாங்கிக் கொண்டு, அந்தக் கல்வியை விலை கொடுத்துப் பெற வைப்பது மாபெரும் சமூகக் குற்றம்.


தாய்மொழிக் கல்வி குறித்துக் காந்தியடிகள்

- "ஒருவருக்குத் தாய்ப்பால் எவ்வளவு முதன்மையோ, அதைப்போல் தாய்மொழிக் கல்வி முதன்மை" என்று கூறினார் அண்ணல் காந்தி.
- "அயலர் மொழியைப் பயிற்சி மொழியாக நம் மாணவர்கள் மேல் திணித்திருப்பது நம்மையே அழிக்கவல்லது. அதுவே மிகப்பெரிய கொடுமை என்பதை வருங்கால வரலாறு சொல்லும்" என்று 1928 சூலை 5ஆம் நாள் அன்று Young India இதழில் எழுதி எச்சரித்திருந்தார்.
- அயலர் மொழிவழிக் கல்வி நம் மாணவச் செல்வங்களின் ஆற்றலைப் பெருக்காமல் மங்கச் செய்துவிடும். இந்தக் கல்வி முறையை நாம் விடாப்பிடியாகக் கடைபிடித்தால் நம் நாட்டின் உயிர் நாடியான கல்வியை அழித்துவிடும் என்றும் கவலைபட்டார். அதனால் தாய்மொழிவழிக் கல்வியையே நாம் நடைமுறைப்படுத்துவோம்.

உலக நாடுகள்

- ஒருவருக்குக் கனவு எந்த மொழியில் வருகிறதோ, அந்த மொழிதான் அவருக்குக் கல்வி மொழியாக இருக்க வேண்டும்.
- Japan, Germany, China, France உள்ளிட்ட உலக நாடுகள் பலவும் முன்னேறிய நாடுகளாகவே இருக்கின்றன. காரணம், அங்கே அவரவர் தாய்மொழியில் கல்வியைக் கற்றுத் தருகிறார்கள். சொந்த மொழியில் கற்று, சிந்திக்கும் போதுதான் அறிவு வளர்ச்சி ஏற்படும் என்பது அறிவார்ந்த மக்களின் கருத்தாக இருக்கிறது. அதனால் தாய்மொழிக் கல்விக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.






முனைவர் ஆ.ப.ஜெ.அப்துல்கலாம்



ISRO சிவன்



முனைவர் அண்ணாதுரை



சிவாஜி கணேசன்



இளையராஜா



ஏ.ஆர்.ரகுமான்



உசேன் போல்ட்



நடனக் கல்வி



ஓவியக் கல்வி



இசைக் கல்லி



தனித்திறன் கல்வி



கலை நிகழ்ச்சி கற்றல்

- உலகளவில் சிறந்த கல்விமுறையில் தொடர்ந்து முதன்மை நாடுகளுள் ஒன்றாக இருக்கும் South Korea தனது தாய்மொழியில் தான் கல்வியைக் கற்றுக் கொடுக்கிறது. இங்குப் பிள்ளைகளை (6-7) அகவையில்தான் ஒன்றாம் வகுப்பில் படிக்கச் சேர்க்கிறார்கள்.
- அதேபோலச் சிறந்த கல்வி முறையில் முதல் பத்து இடங்களில் இருக்கும் Japan, Germany, Finland போன்ற நாடுகள் எல்லாம் தங்கள் தாய்மொழியில் தான் கல்வியைக் கற்றுத் தருகின்றன.

மேதைகள்

- இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவரும், அறிவியல் மேதையுமான ஆ.ப.ஜெ.அப்துல்கலாம், அறிஞர் மயில்சாமி அண்ணாதுரை, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த நீதியரசர் பி.சதாசிவம், கணித மேதை சர். சி.வி.இராமன், புகழ்பெற்ற இசையமைப்பாளர் இளையராஜா, நடிகர் திலகம் சிவாஜி கணேசன், அறிவியல் கண்டுபிடிப்பாளர்களான தாமசு ஆல்வா எடிசன் உள்ளிட்ட பலரும் அவரவர் தாய்மொழியில் படித்தவர்கள்தான். தமிழ்மொழியில் கல்வி கற்றால் மட்டுமே அறிவு வளர்ச்சி மேம்படும். அது நாட்டின் வளர்ச்சிக்கும் பயன்படும் என்று நாம் தமிழர் அரசு புதியதொரு கல்விக் கொள்கையை முன் வைக்கின்றது.

தமிழ் மீட்சியே தமிழர் எழுச்சி

- வரலாற்றில் வெற்றி பெற்ற அனைவரும் தாய்மொழியில் கற்றவர்களாகவே இருக்கிறார்கள். தாய்மொழியில் கற்றவர்கள் படைப்பாளிகளாக இருக்கிறார்கள், தாய்மொழியில் கல்லாதவர்கள் பயன்பாட்டாளிகளாகவே இருக்கிறார்கள்.
- மொழி என்பது வெறும் தொடர்புக் கருவி மட்டும் அல்ல. ஒவ்வொரு மொழி வழியே தான் தேசிய இனங்கள், நிலங்கள் என உலகம் ஏற்றுக் கொண்டுள்ளது.
- ஒவ்வொரு தேசிய இனத்தின் உயிராகவும், முகமாகவும், முகவரியாகவும், அடையாளமாகவும், இலக்கியமாகவும், கலையாகவும், வரலாறாகவும், அரசியலாகவும், எல்லாமாகவும் இருப்பது அவரவர் தாய்மொழியே.
- நம் தாய்மொழி சிதைந்து அழிந்தால், நம் இனம் அழிந்து போகும். ஒரு மொழியை எழுத, படிக்க, பேசத் தெரியாத ஓர் இனம் அழிந்துவிடும்.
- தமிழகத்தின் தெருக்களில் கூட Street, Avenue, Extension, Sector போன்ற ஆங்கிலச் சொற்கள் இருக்கின்றனவே தவிர, தமிழ் இல்லை.
- வீடுகளுக்குப் பல சாளரங்கள் இருப்பதைப் போல உலக மொழிகள் இருக்கட்டும். ஆனால், நுழைவாயிலாக இருக்கிற தலைவாயில் நமது தாய்மொழியானத் தமிழாக இருக்க வேண்டும்.
- பெற்ற தாயைப் பட்டினி போட்டுவிட்டு உணவுக்கொடை செய்வது பயனில்லை. அதேபோல், தாய்மொழி தெரியாமல் எந்த மொழியைக் கற்றாலும் அவன் அறிவற்றவன்.
- ஆங்கிலம் என்பது ஒரு மொழி (Language) மட்டுமே. அதுவே அறிவு (Knowledge) அல்ல. பிரிட்டனில் கல்வியறிவற்றவன்கூட ஆங்கிலத்தில் தான் பேசுவான், ஏனெனில் அது அவனது தாய்மொழி.




“எம்மொழியும் கற்போம் நாம் வாழ்வதற்கு,
நம் மொழி தமிழ் கற்போம் நம் இனம் வாழ்வதற்கு.”

முன் மாதிரி


பசுஞ்சோலைக்குள் பள்ளி


பள்ளிக்கட்டடங்களில் சூரிய ஒளி மின் உற்பத்தி


பள்ளிக் கட்டடங்களுக்குள் மரங்கள்


எண்ம (டிஜிட்டல்) நூலகம்

தமிழ் படித்தால் வேலை கிடைக்குமா? சோறு கிடைக்குமா? என்று பேசுவது அவமானம்


உடற்பயிற்சியினூடாகக் கல்வி


கணினிக் கல்விப் பயிற்சி

- தொடக்கக்கல்வி முதல் உயர் படிப்பான மருத்துவம், சட்டம், பொறியியல் வரையிலுமான அனைத்துப் பாடங்களும் தமிழ் மொழியிலேயே கற்றுத் தரப்படும். தமிழ்வழிக் கல்வியே சட்டமாக்கப்படும்.

மொழிக் கொள்கை

- தமிழ் பயிற்று மொழியாகவும், ஆங்கிலம் கட்டாயப் பாடமொழியாகவும், உலகின் அனைத்து மொழிகளும் விருப்ப மொழியாகப் பயிற்றுவிக்கப்படும். ஒரு மொழிக் கொள்கையே பின்பற்றப்படும்.

- தமிழகத்தில் உள்ள நவோதயா மற்றும் கேந்திரிய வித்யாலய பள்ளிகளில் தமிழ் கட்டாயப் பாடமொழியாகப் பயிற்றுவிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும். பிற நடுவண் பாடத்திட்டத்தைப் பின்பற்றும் (CBSE) மேல்நிலைப் பள்ளிகளிலும் தமிழ் கட்டாயப் பாடமொழியாக்கப்படும்.

- நாம் தமிழர் ஆட்சியில் தமிழர்கள் தங்கள் தாய்மொழியில் ஆழமானப் புலமை பெற்றிருப்பார்கள். ஆங்கிலத்தில் ஆங்கிலேயர்களுக்கு இணையாக எழுதவும், பேசவும் திறன் பெற்றிருப்பார்கள். மேலும், பிற உலக மொழிகளிலும் பேசுவதற்கும், எழுதுவதற்கும் ஆற்றல் பெற்றவர்களாக இருப்பார்கள்.

- தனியார் ஆங்கிலப் பள்ளிகளுக்கு இணையாக அரசுப் பள்ளிகளில் ஆங்கிலத்தின் தரம் உயர்த்தப்படும்.

தமிழ்ப் படித்தால் அரசு வேலை

- ஆங்கிலம் படித்தால் அயல் நாட்டில் வேலை, இந்தி படித்தால் வட இந்தியாவில் வேலை, **தமிழ் படித்தால் வேலை கிடைக்குமா? சோறு கிடைக்குமா?** என்று பேசுவது அவமானமானது. இந்த அவமானச்சொல் அழிக்கப்பட வேண்டும். தமிழ் படித்தால்தான் தமிழ்நாட்டில் வேலை என்ற நிலையை நாம் தமிழர் அரசு உருவாக்கும்.

- தனியார் ஆங்கிலவழிக் கல்விக்கு எதிரான நடவடிக்கைகள் இருக்காது. ஆனால் அரசுப் பள்ளிகள் அனைத்தும் உலகத் தரத்திற்கு உயர்த்தப்படும்.

- தமிழ்வழிக் கல்வி பயின்றவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் 20 விழுக்காடு இடப்பங்கீடு என்பது 40 விழுக்காடாக உயர்த்தப்படும். மீதமிருக்கும் பணியிடங்களை நிரப்பும் தேர்வுகளில் தமிழ் மொழி அறிவுத்திறனை மேலும் ஆழமாக மதிப்பிடும் வகையில் மாற்றம் கொண்டு வரப்படும்.

சமற்கிருதம் – தமிழ் இடையிலான போர்

- இந்திய ஒன்றிய அரசால் சமற்கிருத மொழிக்கு ஒதுக்கப்படும் தொகை, தமிழுக்கு ஒதுக்கப்படுவது இல்லை.

- சமற்கிருதத்தைத் தாய்மொழியாகக் கொண்டவன் அதிகாரம் கேட்கிறான். மொழி வழியே மாநிலங்கள் பிரிக்கப்பட்டபோது, சமற்கிருதத்திற்கென்று எந்த மாநிலமும் பிரிக்கப்படவில்லை.

- இறந்துபோன சமற்கிருத மொழியை உயிர்ப்பிக்கத் துடிக்கின்றார்கள் ஒன்றிய ஆட்சியாளர்கள். நாம் இறந்து கொண்டிருக்கின்ற நம் தாய்மொழியை உயிர்ப்பிக்கத் துடிக்கின்றோம்.



“காடுகள் வளர்ப்பு, பெருங்கடல் ஆய்வுகள், கடல்சார் அறிவியல், தமிழர்களின் வரலாறு, தொல்லியல் ஆய்வுகளுக்கென்று தனியாகப் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்படும்.”



அறிவுச் சோலை

- குழந்தைப்பருவம் அரும்பு - மொட்டு - மலர் என்று வகைப்படுத்தப்படும்.
- குழந்தைகள் மூன்று அகவையில் அரும்பு என்ற வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். அடுத்து மொட்டு, மலர் என அடுத்தடுத்த வகுப்பில் பயிற்றுவிக்கப்படுவார்கள்.
- இந்த வகுப்புகளில் விளையாட்டு, ஓவியம் வரைதல், நீதிக்கதைகள், இசை கேட்டல், பாட்டுப் பாடுதல், அறிவியல் கதைகள் ஆகியவை எளிய முறையில் பயிற்றுவிக்கப்படும். மேலும், விளையாட்டுப் பூங்கா, சுற்றுலாத்தலங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு ஒவ்வொன்றும் விளக்கமாக பயிற்றுவிக்கப்படும்.

தனித்திறன் கல்வி

- அரும்பு, மொட்டு, மலர் கல்வி முறையின்போது பிள்ளைகள் படிக்கமாட்டார்கள். பெற்றோர்களும் ஆசிரியர்களும் சேர்ந்து பிள்ளைகளைப் படித்து அவர்களின் தனித் திறமையை அறிந்து கொள்வார்கள்.
- ஆறாவது அகவையில் ஒன்றாம் வகுப்பில் சேர்க்கும்போது சிறுவர், சிறுமிகளின் தனித் திறன் குறித்துப் பெற்றோர்களிடமும், ஆசிரியர்களிடமும் கேட்டறிந்து, அதுவே முதன்மைப் பாடமாகப் பயிற்றுவிக்கப்படும். மற்றவை அனைத்தும் துணைப் பாடமாக பயிற்றுவிக்கப்படும்.
- ஓவியம், விளையாட்டு, சமூகப்பணி, புதிய கண்டுபிடிப்பு, மக்கள் மேம்பாடு, கணினியியல், அறிவியல், கணிதம், இயற்கை வேளாண்மை, இயந்திரவியல் என்று எதில் ஆர்வமாக இருக்கின்றார்களோ, அதுவே அவர்களுக்கு முதன்மைப் பாடமாகப் பயிற்றுவிக்கப்படும்.
- இதன்மூலம் துறை சார்ந்த ஆற்றல்மிக்க மேதைகளை அனைத்துத் துறைகளிலும் உருவாக்குகின்ற கல்வியாக நாம் தமிழர் ஆட்சியின் கல்வி முறை இருக்கும்.
- படித்து முடித்தவுடன் வேலை இல்லை என்ற நிலையை மாற்ற, "பள்ளிப் படிப்பின்போதே தொழில் நிறுவனங்களுடன் இணைந்து தொழிற்பயிற்சி (Internship Integrated Schooling)" வழங்கப்படும்.

தேர்வில்லாத் தேர்ச்சி, சுவர் இல்லாக் கல்வி

- மதிப்பெண்களை வைத்து மாணவர்களின் அறிவை அளவிட முடியாது. எனவே, ஒன்றாம் வகுப்பில் இருந்து எட்டாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்குப் பயிற்சி முறைக் கல்வி பயிற்றுவிக்கப்படும். அனைத்து இடங்களுக்கும் நேரில் அழைத்துச் சென்று பயிற்சி முறைக் கல்வி அளிக்கப்படும். தேர்வில்லாத் தேர்ச்சி முறை பின்பற்றப்படும்.
- பத்தாம் வகுப்பில் அரசுத் தேர்வு நடத்தப்படுவதால், அதற்குப் பயிற்சியாக ஒன்பதாம் வகுப்பில் தேர்வுமுறைப் பாடம் நடத்தப்படும்.

தனித்திறமை வளர்ப்பு

- இசைத்துறையில் பல விருதுகளைப் பெற்றுள்ள இசைஞானி இளையராஜா, Oscar விருது பெற்ற இசைப்புயல் ஏ.ஆர்.இரகுமான் ஆகியோர் இசையில்











ஒவ்வொரு மாந்தனுக்குள்ளும் ஒரு தனித்த பேராற்றல் மறைந்திருக்கிறது. அதைக் கண்டுணர்ந்து வெளிக்கொண்டு வருவதுதான் கல்வி. **- வீரத்துறவி விவேகானந்தர்**

மட்டுமே தனித்திறமையை வெளிப்படுத்தி புகழிலும், பொருளாதாரத்திலும் உயர்ந்து நிற்கிறார்கள்.

- சச்சின் டெண்டுல்கர் உலகப்புகழும், பெரும் பணமும் ஈட்டக் காரணம் அவரது தனித்திறமைதான். மட்டைப்பந்தை (Cricket) மட்டுமே முதன்மையாக எடுத்துக் கொண்டார். Jamaica என்ற நாட்டை இந்த உலகிற்குக் காட்டிய உசேன் போல்ட் என்ற ஓட்டப்பந்தய வீரர் உலகப்புகழ் பெற காரணம் அவர் விளையாட்டுப் போட்டியில் மட்டுமே தனித்திறன் கொண்டவராக இருந்ததுதான்.
- அனைத்துத் துறைகளிலும், இப்படித் தலைசிறந்த வல்லுநர்கள் தனித்திறன் பெற்றவர்களாக வளர்த்தெடுக்கப்படுவார்கள். எதிர்காலத்தில் இந்தியாவிலேயே பல திறமையாளர்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்களாகத் தலை நிமிர்ந்து நிற்பார்கள். அதற்கான கல்வி முறையை நாம் தமிழர் அரசு வழங்கும்.

பசுஞ்சோலைப் பள்ளிகள்

- அரசுப் பள்ளிகள் அனைத்தும் கலை நுட்பத்துடன் கட்டப்படும். தரமான விளையாட்டுத் திடல், சிறந்த அடிப்படை வசதிகள், நிழல் தரும் மரங்கள், மருத்துவத்திற்கான மூலிகைச் செடிப் பண்ணைகள் ஆகியவை அமைக்கப்பட்டுப் பசுஞ்சோலைக்குள் பள்ளிகள் இருக்கும்.
- கட்டடத்தின் மேல் தளத்தில் 'சூரிய ஒளிக்கற்றை' மின்னாக்கக் கட்டமைப்பு உருவாக்கப்படும். அதிலிருந்து கிடைக்கும் மின்சாரம் பள்ளிகளுக்கும் அருகில் உள்ள வீடுகளுக்கும் அளிக்கப்படும்.
- தூய குடிநீர், மேம்பட்ட கழிப்பறை வசதிகள், மேம்படுத்தப்பட்ட நூலகங்கள் உறுதியாக அமைக்கப்படும்.

சமூக நீதி வாழ்வியல்

- தொடக்கப் பள்ளிகள் முதலே சமூகநீதி, நல்லொழுக்கம், வாழ்வியல், தொன்மம் குறித்துத் தெரிந்து கொள்ளவும், நூலகங்கள் சென்று படிப்பதற்கும் தனியே வகுப்புகள் கிழமைக்கு (வாரத்தில்) இரண்டு முறை நடத்தப்படும்.
- மாணவர்களுக்குப் புத்தகச் சுமை இருக்காது. அவர்கள் புத்தகங்களை வைத்துக் கொள்ள வகுப்பறைகளிலேயே தனிப் பெட்டகம் அமைத்துக் கொடுக்கப்படும். வீட்டுப் பாடங்கள் இருக்கும் புத்தகங்களை மட்டும் மாணவர்கள் எடுத்துச் சென்றால் போதுமானது.
- பாடப்புத்தகங்கள், கதைப் புத்தகங்களை மீளாய்வு செய்து ஆணாதிக்க, சாதிய பிரிவினைச் சொற்கள் மற்றும் சிந்தனைகள் களையப்படும்.
- பள்ளிகளில் மாணவர்களிடையே சாதிய மோதல்களைத் தூண்டும் வகையிலானச் சின்னங்கள் முற்றிலுமாகத் தடை செய்யப்படும். விதிகளை மீறும் மாணவர்களுக்கு உரிய மனநல வழிகாட்டுதல்கள் வழங்கப்படும். மேலும் மாணவர்களைத் தூண்டிவிடுபவர்களுக்குக் கடும் தண்டனை வழங்கப்படும்.



“ஒன்றிய அரசின் பட்டியலில் உள்ள உயர் கல்வியை மாநில அரசின் பட்டியலுக்கு மாற்றும் உரிமையைக் கோருவோம்.”











- சமையல், வீட்டு வேலைகள், பேணிக்காக்கும் பணிகள் ஆகியவை பெண்களுக்கு மட்டுமே உரியவை அல்ல, அனைத்துத் தொழில்களும் ஆண், பெண் இருவருக்கும் பொதுவானது என்பதை நாடகங்கள், வீட்டுப் பாடங்கள் (Life Skills Education) மூலம் கற்பிக்கப்படும்.
- பள்ளிச் சுவர்கள், பொதுப் போக்குவரத்து, சாலைகள் போன்ற பொதுச்சொத்துகள் நாட்டின் சொத்து என்பதை உணர்த்தப்படும். அவற்றைக் சேதப்படுத்தாமல் தூய்மையாகப் பேணிக் காப்பதன் தேவையை நடைமுறையில் கடைப்பிடிக்கக் கற்றுத் தரப்படும்.
- குப்பைகளைத் தரம் பிரித்து அவற்றுக்கான கூடைகளில் இடுதல், நீர் மற்றும் மின்சாரச் சிக்கனம் போன்ற அடிப்படை சூழலியல் கல்வி பள்ளியின் நாள்தோறும் விதிமுறைகளாகப் பின்பற்றப்படும்.
- ஆண்டிற்கு ஒருமுறை உறுதியாக சமூகப்பணிகளில் மாணவர்களை ஈடுபடுத்தி, சமூகத்தின் மீதான பொறுப்புணர்வு கற்பிக்கப்படும்.
- மாணவர்கள் பள்ளிப் பருவத்திலேயே, சரியான சாலை நடத்தை, போக்குவரத்து விதிகள், பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் இடரான சூழ்நிலைகளைத் தவிர்ப்பது போன்ற அடிப்படைத் திறன்களைக் கற்பதை நாம் தமிழர் அரசு கட்டாயமாக்கும்.
- இளம் அகவையிலேயே இந்த விதிகளைப் பயில்வதன் மூலம், அவர்கள் எதிர்காலத்தில் பொறுப்புள்ள சாலைப் பயன்பாட்டாளர்களாக இருப்பார்கள். இதனால் சாலை நேர்ச்சிகள், உயிரிழப்புகள் மற்றும் காயங்கள் ஏற்படுவது கணிசமாகக் குறையும். மேலும், போக்குவரத்து நெரிசலைக் குறைப்பது, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு (எ.கா: ஊர்திகளின் புகையைக் குறைப்பது) மற்றும் மற்ற ஊர்தி ஓட்டிகள் / நடப்பவர்கள் மீதான பொறுப்புணர்வு ஆகிய குடிமைக் கடமைகளையும் இந்தத் தனிப் பாடம் இளம் தலைமுறையினருக்குச் சிறப்பாகக் கற்பிக்கும்.

உடல்நலக் கல்வி

- ஒவ்வொரு பள்ளியிலும் மாணவ, மாணவிகளுக்கு என்று மேம்பட்ட உடற்பயிற்சிக் கூடங்கள் அமைக்கப்படும். மேலும் கைப்போர்(Karate), களரி போன்ற தற்காப்புக் கலைகளும் பயிற்றுவிக்கப்படும்.
- புகையிலை ஏற்படுத்தும் புற்றுநோய், இதயநோய், நுரையீரல் நோய் உள்ளிட்ட பல நோய்களைக் குறித்து விளக்கும் புதிய பாடத்திட்டம் இணைக்கப்படும். புகையிலைக்கு எதிராக மாணவர் சமுதாயம் செய்ய வேண்டிய கடமைகள் அதில் எடுத்துரைக்கப்படும். புகையிலை பயன்படுத்தாத சமுதாயத்தை உருவாக்குவதே நமது அரசின் நோக்கம்.
- குழந்தைகளிடையே பாலியல் / உடல் விழிப்புணர்வு (Sex / Body Awareness), பாலினச் சமனியம் மற்றும் குடிமை உணர்வு (Civic Sense) போன்ற முதன்மையான சமூக விழுமியங்களைப் பற்றி உணர்வு அடிப்படையில் புரிய வைக்கப் பள்ளிக் கல்வியில் பாடத்திட்டங்கள் சேர்க்கப்படும்.




சுவரில்லாப் பள்ளி வகுப்பறை


வாழ்வியல் கல்வி மீன் பிடித்தல்

உலகில் கல்வியில் முதலிடத்தில் இருக்கும் தென்கொரிய நாடு தனது தாய்மொழியில்தான் கல்வியைக் கற்றுக் கொடுக்கிறது. இங்கு எட்டாம் அகவையில்தான் குழந்தைகள் ஒன்றாம் வகுப்பில் சேர்க்கப்படுகிறார்கள்.


வாழ்வியல் கல்வி பால் கறவை


வாழ்வியல் கல்வி தூரியஒளித் தகடு பொருத்துதல்


வாழ்வியல் கல்வி நாற்று நடுதல்


பள்ளியில் கிளித்தட்டு விளையாட்டு


விளையாட்டுப் பூங்கா


கல்விச் சுற்றுலா

- மாணவர்கள் தங்கள் உடலின் எல்லைகளை (Body Boundaries) அறிந்து கொள்ளப் பயிற்சி அளித்தல், பாதுகாப்பற்ற அல்லது அச்சுறுத்தும் தொடுதல்களை அடையாளம் கண்டு, உடனடியாக (ஆசிரியர், பெற்றோர், நம்பகமான பெரியவர்) தெரிவிக்க வேண்டும் என கற்பிக்கப்படும்.

- தனிப்பட்டோர் நலம், மாதவிலக்குக் காலப் பாதுகாப்பு (Menstrual Hygiene), பால்வினை நோய்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, உடல் மீதான பொறுப்பு உணர்த்தப்படும்.

- இணையம் மற்றும் சமூக ஊடகங்களில் தனிப்பட்ட தகவல்களைப் பகிர்வதன் பின்விளைவு, பாலியல் துன்புறுத்தல் முயற்சிகளை எவ்வாறு கையாள்வது என்பது குறித்த விழிப்புணர்வுப் பட்டறைகள் நடத்தப்படும்.

தமிழ்ப் பாடநூல் சீரமைப்பு

- தற்போதைய பள்ளி மற்றும் கல்லூரிப் பாடத்திட்டங்கள் தமிழை ஒரு 'மொழியாக' (Language) மட்டுமே பயிற்றுவிக்கின்றன. இதற்கு 13ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 'பவணந்தி முனிவரால்' எழுதப்பட்ட நன்னூலையே அடிப்படையாகக் கொள்கின்றன. நாம் தமிழர் அரசின் கீழ், தமிழ் மொழி என்பது வெறும் எழுத்திலக்கணம் மற்றும் சொல்லிலக்கணம் சார்ந்த கருவியாக மட்டும் பயிற்றுவிக்கப்படாது. நன்னூல், தமிழர்களின் வாழ்வியலைச் சொல்லும் 'பொருள்' இலக்கணத்தை விரிவாகப் பேசவில்லை. எனவே, பாடத்திட்டத்தை நன்னூல் கட்டமைப்பில் இருந்து விடுவித்து, தொல்காப்பியத்தின் அடிப்படையில் மாற்றி அமைப்பதன் மூலம், தமிழ் மொழியோடு சேர்த்துத் தமிழர்களின் திணை சார்ந்த வாழ்வியல், அறநெறிகள் மற்றும் இயற்கையோடு இணைந்த பொருளாதார முறைகளை மாணவர்களுக்குக் கற்பிக்க முடியும்.

- தொல்காப்பியம் காட்டும் ஐந்திணை நிலங்களின் நுட்பமான அறிவை (நிலவியல் மற்றும் உயிரியல்) பாடநூல்களில் கொண்டு வருவதன் மூலம், மாணவர்கள் தங்கள் மண்ணின் வளத்தையும், அதைக் காக்கும் முறையையும் கற்றுக்கொள்வார்கள். நன்னூல் வழியிலான 'மொழி அறிவு' என்ற குறுகிய வட்டத்தில் இருந்து, தொல்காப்பியம் வழியிலான 'இன வரலாறு மற்றும் வாழ்வியல் அறிவு' என்ற பரந்த தளத்திற்குத் தமிழகக் கல்வி முறை மாற்றப்படும்.

ஆசிரியர் பெருமக்களின் நலன்

- ஆசிரியர்கள் போற்றப்படும் சமூகமே அறிவார்ந்த சமூகம்.

- எழுத்தறிவித்தவன் இறைவன் என்றால், ஆசிரியப் பெருமக்கள் தான் நம் இறைவன். அவர்களைப் போற்றிக் கொண்டாட வேண்டும். அவர்களுக்கு உரிய ஊதியம் கொடுக்கப்பட வேண்டும். Finland நாட்டில் மற்ற உயர்ந்த பணிகளை விட ஆசிரியர் பணிக்குத்தான் முன்னுரிமை தரப்படுகிறது. அங்கு ஆசிரியப் பெருமக்கள் நல்ல ஊதியத்துடன் உயர்ந்த நிலையில் உள்ளனர். அதைத்தான் இங்கே நாம் தமிழர் அரசு செய்ய நினைக்கின்றது.



- அறிவார்ந்த சமூகத்தை உருவாக்கும் ஆசிரியப் பெருமக்களின் நலனில் நாம் தமிழர் அரசு அதிக அக்கறை எடுத்துக்கொள்ளும்.
- தொடக்கக் கல்வி ஆசிரியர்களுக்கு இரண்டாண்டுப் பயிற்சிகளோடு தாய்மொழித் திறனில் (தமிழில்) தனிப் பயிற்சியும் அளிக்கப்படும்.
- ஆசிரியர்களுக்கான ஊதிய உயர்வு என்பது இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை ஆய்வுக்குட்படுத்தப்படும். ஒன்றிய அரசு கல்வி நிறுவனங்களில் உள்ள ஆசிரியர்களுக்கு இணையான ஊதியம் வழங்கப்படும்.
- அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கான குடியிருப்புகள் பள்ளிகளுக்கு அருகிலேயே இருக்க வழிவகை செய்யப்படும். கணவன் மனைவிக்கு வெவ்வேறு ஊர்களில் பணிமாற்றம் இருக்காது. ஒரே இடத்தில் அல்லது ஒரே ஊரில் பணியமர்த்தப்படுவார்கள்.
- ஆசிரியர்கள் புள்ளியியல் கணக்கெடுப்பது, தேர்தலுக்கான பணிகள் உள்ளிட்ட எந்த வேலைகளிலும் ஈடுபடச் சொல்லி கட்டாயப்படுத்தப்படமாட்டார்கள்.

பள்ளிகளின் ஒருங்கிணைப்பு

- நம் நிலத்தில் உள்ளவர்கள் அனைவருக்கும் சமமான ஒரே கல்வி. பெருந்தலைவர் காமராசர் கொண்டுவந்தபடி, ஒவ்வொரு சிற்றூருக்கும் ஒரு தொடக்கப்பள்ளி, மூன்று அயிரமாத்திரிக்கு (km) ஓர் உயர்நிலைப்பள்ளி, ஐந்து அயிரமாத்திரிக்கு (km) ஒரு மேல்நிலைப்பள்ளியை நாம் தமிழர் அரசு அமைக்கும்.

தனியார் பள்ளிகள்

- அரசுப் பள்ளிகளின் கட்டமைப்பு மற்றும் கற்பித்தல் முறை உலகத் தரத்திற்கு உயர்த்தப்பட்டுத் தனியார் பள்ளிகளைவிடச் சிறந்த கல்வி தடையின்றி வழங்கப்படும். தனியார் பள்ளியா? அல்லது அரசுப் பள்ளியா? யார் சிறந்த கல்வியை வழங்குகிறார்கள் என்பதில் அரசுப் பள்ளிகள் முன்னிலை பெறுவதை உறுதி செய்யும் வகையில் மேம்பட்ட தொழில்நுட்பங்களும், சிறந்த ஆசிரியர் பயிற்சியும் அளிக்கப்படும்.
- தனியார் பள்ளிகளைவிட அரசுப் பள்ளிகளே மக்களின் முதன்மையான தேர்வாக மாறும் வகையில் கல்வித்துறை சீரமைக்கப்படும்.
- ஏரி, கண்மாய், குளங்கள் போன்ற நீர்நிலைகளைத் தத்தெடுத்துக்கொள்வது, சாலை வசதிகளின் மேம்பாட்டில் பங்கெடுப்பது, அரசு அமைக்கும் ஆதரவற்ற சிறுவர் முதியோர் இல்லங்கள் பேணுதலில் பங்கெடுப்பது உள்ளிட்ட சமூகநலனில் பங்கெடுத்துக் கொள்ளும் தனியார் பள்ளிகளுக்கு அரசின் முழு ஒத்துழைப்பு வழங்கப்படும்.

கூடுதல் ஆசிரியர் பணியமர்த்தும்

- தற்போது 30 முதல் 40 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்று இருக்கின்றார். சில பள்ளிகளில் 50க்கும் மேலான மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்று இருக்கின்றார். இது ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் மனத்தளர்வை

ஏற்படுத்துகிறது. அதனால் 25 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்கிற அளவீடு தமிழ்நாடு முழுவதும் உறுதி செய்யப்படும். கூடுதல் இடங்களுக்கு மேலும் புதிய ஆசிரியர்கள் பணியமர்த்தப்படுவார்கள்.

- மாணவர்களிடையே தீய பழக்கங்களும், தேர்வுத் தோல்வியால் ஏற்படும் தற்கொலை எண்ணங்களும் அதிகரித்து வரும் சூழலில், ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு நிலையான உளவியல் அறிவுரையாளர் (Student Counsellor) பணியமர்த்தப்படுவார்.

சமநிலைக் கல்விமுறை

- தேசியக் கல்விக்குழு பரிந்துரைத்த, "பொதுப் பள்ளிகளோடு இணைந்த அண்டைப் பள்ளி" என்ற திட்டத்தைப் பாராளுமன்றமும் ஏற்றது, ஆனால் நடைமுறைப்படுத்தவில்லை. அரசுப் பள்ளிகளுடன் தனியார் பள்ளிகளையும் இணைத்துக்கொண்டு, அனைவருக்குமான சமநிலைக் கல்விமுறை என்ற திட்டம் கிடப்பிலேயே உள்ளது. நாம் தமிழர் அரசு அதைப் போராடி நிறைவேற்றும்.

கட்டாயக் கணினிக் கல்வி

- ஒன்றாம் வகுப்பில் இருந்து பத்தாம் வகுப்பு வரையிலும் கட்டாயக் கணினிப் பயிற்சி வகுப்பு இணைக்கப்படும்.
- சற்றேறக்குறைய 60 ஆயிரம் கணினிப் பட்டதாரி ஆசிரியர்கள் பயிற்சி முடித்துவிட்டு வேலையின்றிக் காத்திருக்கின்றார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தரப்படும். மாணவர்களுக்கும் கணினிப் பயன்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும்.

கல்விக் கடன் தள்ளுபடி

- கல்வி விற்பனைப் பொருளல்ல, அதை வழங்க வேண்டியது அரசின் கடமை.
- கடன் வாங்கி கல்வி கற்கும் நிலையில் மக்களை வைத்திருப்பது இழிவானதாகும். இதுவரை மாணவர்கள் பெற்ற கல்விக் கடன் முற்றிலும் தள்ளுபடி செய்யப்படும்.

ஒன்றிய அரசின் வருவாய்

- மொத்த வருவாயில் 75 விழுக்காடு மாநில அரசிடமும், 25 விழுக்காடு ஒன்றிய அரசிடமும் இருப்பதே நமது கொள்கை. எவ்வகை வருவாயும் தானாக ஈட்டாத ஒன்றிய அரசிடம் வருவாய் மொத்தமாகச் செல்வதை நாம் எதிர்க்கிறோம். மாநில அரசின் மொத்த ஆக்க வருவாயில் கல்வித் துறைக்கு 10 விழுக்காடு பயன்படுத்தப்படும்.

மாணவர்கள் நல வாரியம்

- பள்ளி, கல்லூரிகளில் ஏற்படும் குறைபாடுகள், விடுதிகளில் உள்ள சிக்கல்கள், அவர்களுக்கு வழங்கப்படும் உரிமைகளில் உள்ள தடைகள் உள்ளிட்ட பல குறைகளைக் கண்காணித்து உடனடியாகத் தீர்த்து வைப்பதில் இந்த நலவாரியம் முனைப்புடன் செயல்படும்.



நூலகங்கள்

- உலக மொழிகளில் வெளியிடப்பட்டுள்ள சிறந்த நூல்கள் அனைத்தும் தமிழாக்கம் செய்யப்பட்டுத் தமிழ் ஓர் ஆய்வியல் மொழியாக உயர்த்தப்படும். அத்தகைய தமிழ் நூல்களைக் கொண்டு கணினிமயமாக்கப்பட்ட நூலகங்கள் அனைத்து மாவட்டங்களிலும் நிறுவப்படும்.

தேசியக் கல்விக் கொள்கை 2020

- கல்வியில் மாநில உரிமையைச் சிதைத்து, ஆளும் பாஜகவின் இந்துத்துவக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு முன்மொழியப்பட்டதே தேசியக் கல்விக் கொள்கை2020 ஆகும். எனவே, தேசியக் கல்விக் கொள்கையை நாம் தமிழர் கட்சி எதிர்க்கின்றது.

- ஒன்றிய அரசின் தேசியக் கல்விக் கொள்கையின்படி 5 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் மாணவர்களுக்குப் பொதுத்தேர்வு முறை அறிமுகம் செய்யப்படுவதாக முன்மொழியப்பட்டுள்ளது, தமிழ்நாடு அரசு தனது மாநிலக் கல்விக் கொள்கை (SEP) 2025ஐ வெளியிட்டு, அதில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை தேர்வில்லா கொள்கையைத் தொடர்வதாகவும், பொதுத்தேர்வு இல்லையென்றும் உறுதியளித்துள்ளது. தேசியக் கல்விக்கொள்கைக்கு எதிரான மாநிலக் கல்வி கொள்கை தொடர்ந்து கடைப்பிடிக்கப்படுவதோடு அவற்றினை மேலும் சீர்படுத்தி தேசியக் கல்விக் கொள்கை முற்றிலுமாகத் திரும்பப் பெறப்படுவது உறுதி செய்யப்படும்.

- தேசியக் கல்விக் கொள்கை, இந்திய ஒன்றியம் முழுமைக்கும் வல்லபாய் பட்டேல் வரலாற்றைக் கற்பிக்கும். வ.உ.சிதம்பரனார் வரலாற்றைத் தமிழ்நாட்டு மாணவர்களுக்குக் கற்பிக்குமா? சான்சி இராணி எனும் இலட்சுமிபாய் வரலாற்றைக் கற்பிக்கும் வீரமங்கை வேலு நாச்சியார் வரலாற்றைக் கற்பிக்குமா? வீரம் என்றாலே மராட்டிய மன்னர்தான் என்று கற்பிக்கும். இராசராசன் எனும் அருள்மொழிச்சோழன் வரலாறு இதுவரையிலும் கற்பிக்கப்படவில்லை.

- தேசியக் கல்விக் கொள்கையில் தேசிய இனங்களின் வரலாறு மறைக்கப்பட்டு இந்திய ஒன்றிய அரசு நினைக்கும் வரலாறு மட்டுமே கற்பிக்கப்படும். தாய்மொழிக் கல்விக்கான முதன்னுரிமை மறுக்கப்படும். இந்தி மற்றும் சமற்கிருதத்தைத் திணித்து, வடஇந்திய வரலாற்றை முதன்மைப்படுத்தும் நோக்கில் கொண்டு வரப்பட்டுள்ள தேசியக் கல்விக் கொள்கையில் தமிழரின் வரலாறு முற்றிலுமாகப் புறக்கணிக்கப்படும் பெருங்கேடு உள்ளது.

- எனவே தேசியக் கல்விக் கொள்கை 2020ஐ முழுமையாகத் திரும்பப் பெறச் செய்து கல்வியைப் பொதுப் பட்டியலிலிருந்து முழுமையாக மாநிலப் பட்டியலுக்கு மாற்றம் செய்யும் முயற்சிகளை நாம் தமிழர் கட்சி மேற்கொள்ளும்.

- ஒன்றிய அரசு நிறுத்தி வைத்துள்ள 2400 கோடி உருபாய் தொகையை ஈடுசெய்யும் தற்காலிகத் தீர்வாக மாநில அரசின் சொந்த வரவு செலவு அறிக்கையிலிருந்து ஒதுக்கி, அத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பள்ளி மேம்பாட்டுப் பணிகள், அடிப்படை வசதிகள் மற்றும் ஆசிரியர்களின் சம்பளம் போன்ற இன்றியமையாச் செலவுகள் பாதிக்கப்படாமல் இருப்பதை நாம் தமிழர் அரசு உறுதி செய்யும்.

உயர்கல்வி

மாநில அரசின் உரிமை

- ஒன்றிய அரசின் பட்டியலில் உள்ள உயர் கல்வியை மாநில அரசின் பட்டியலுக்கு மாற்றும் உரிமை வலியுறுத்திப் பெறப்படும். பிற மாநில ஆட்சியாளர்களுடன் இணைந்து மாநில உரிமை வென்றெடுக்கப்படும்.

நுழைவுத்தேர்வுகள்

- இந்திய ஒன்றியம் முழுமைக்கும் ஒரே தன்மையான கற்றல் வாய்ப்புகள் இல்லாத நிலையில், ஒரே தன்மையான நுழைவு மற்றும் தகுதித்தேர்வு என்பது பொருத்தமற்றது. காங்கிரசு ஆட்சியில் கொண்டுவரப்பட்டு, பாஜகவின் ஆட்சியில் வீரியமாகச் செயல்படுத்தப்படும் தேசியத் தகுதி மற்றும் நுழைவுத்தேர்வு (NEET) மற்றும் தேசியத் தகுதித்தேர்வு (NET) போன்ற தேர்வு முறைகள் முற்றிலுமாக நீக்கப்பட வேண்டும். தேசியத் தகுதி மற்றும் நுழைவுத்தேர்வு (NEET) என்பது ஒரு வடிகட்டிதான். கல்விமுறையை மாற்றாமல் வெறும் வடிகட்டியான தேர்வு முறையில் மாற்றம் கொண்டு வருவதால் மருத்துவர்களின் தரம் உயரும் என்பது அடிப்படையற்றது.
- மருத்துவம் மட்டுமல்லாது, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கும் ஒன்றிய அரசு நுழைவுத் தேர்வுகளைக் (CUET) கொண்டு வருகிறது. மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள கல்லூரிகளுக்கு எந்த வகையான தேசிய நுழைவுத் தேர்வும் அனுமதிக்கப்படாது. பன்னிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையிலேயே சேர்க்கை நடைபெறும்.

ஆசிரியர் தேர்வில் வெளிப்படைத்தன்மை


- உயர்கல்வித்துறை உதவிப் பேராசியர் மற்றும் ஊழியர்கள் தேர்வு, வெளிப்படைத் தன்மையோடு இருக்கும். குறிப்பாக உண்மையான சமூகநீதி விழுக்காட்டு அடிப்படையில் நிரப்பப்படும்.
- பெண் பேராசியர்களுக்கான பணிப் பாதுகாப்பு உறுதி அளிக்கப்படும். அவர்கள் வாழும் பகுதியிலேயே பணியமர்த்தப்படுவார்கள்.
- கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் வருகைப் பதிவுகள் கணினி வருகைப்பதிவாக மாற்றப்படும்.
- உயர் கல்விப்பாடத்தில் ஒரு துறையில் வழங்கப்படும் பட்டங்கள் மற்ற அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் ஒரே பெயரில், ஒரே தரத்தில், ஒரே பாடத்திட்டத்துடனும் அயல் நாடுகளில் வழங்கப்படும் பட்டங்களுக்கு இணையாகவும் இருக்கும்படி வழங்கப்படும்.
- அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பணியாற்றும் 5000க்கும் மேற்பட்ட பேராசிரியர்களுக்குப் பணி மேம்பாடு வழங்கப்படாத நிலையில், கல்லூரிகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கான சட்டப்படியான பணிப் பாதுகாப்பும், உரிமைகளும் உறுதி செய்யப்படும்.



கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு மாடல்ல மற்றை யவை.

– தமிழ்மறை (400) – வள்ளுவப் பெருமகனார்





சிறப்புத் தனிக் கல்லூரிகள்

- தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கீழ் துணை மற்றும் தன்னாட்சிப் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்படும். அதன்கீழ் உள்ள கல்லூரிகளில் தமிழ் மொழிக் கல்விக்கான சிறப்புத் தனிக் கல்லூரிகள் திறக்கப்படும். தமிழர் வரலாறு, தமிழர் கலை, தமிழர் மெய்யியல், தமிழர் பண்பாடு, விளையாட்டு ஆகியவற்றுக்கான துறைகள் உருவாக்கப்பட்டுத் தனிச் சிறப்புப் பட்டங்கள் வழங்கப்படும். இக்கல்லூரியில் படித்த மாணவர்களுக்கு அரசு வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை அளிக்கப்படும்.

- உலகப் பல்கலைக்கழகங்களில் தமிழ்மொழி வளர்ச்சிக்கான இருக்கைகள் மற்றும் தமிழ் மொழித்துறையை நிறுவ நாம் தமிழர் அரசு சார்பில் பொருளுதவி வழங்கப்படும். உலகப் பல்கலைக்கழகங்களில் தமிழ் படிக்கும் மாணவர்களுக்கு அரசு சார்பில் ஊக்கத்தொகை வழங்கப்படும்.

- உயர்கல்வி ஆராய்ச்சித் துறை உருவாக்கப்படும். அதன்மூலமாக மருத்துவம், அறிவியல், உழவு மற்றும் தொழில்நுட்பத் துறைகளில், சமூகப் பயன்பாட்டிற்கான கண்டுபிடிப்புகளை உருவாக்கும் திட்டங்கள் வடிவமைக்கப்படும். கண்டுபிடிப்புக்களுக்குத் தேவையான பொருளுதவியுடன் ஆராய்ச்சிக் கல்வி மேம்படுத்தப்படும். இதற்கென உலகத்தரம் வாய்ந்த கல்வி நிறுவனங்கள் தொடங்கப்படும். மாணவர்களின் புதிய கண்டுபிடிப்புகளை நாம் தமிழர் அரசு வெளிக்கொண்டு வரும்.

- காடுகள் வளர்ப்பு, பெருங்கடல் ஆய்வுகள், கடல்சார் அறிவியல், தமிழர்களின் வரலாறு, ஓலைச்சுவடிப் பயிற்சி, கல்வெட்டுப் பயிற்சி, தொல்லியல் ஆய்வுகளுக்கென்று தனியாகப் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்படும்.

- ஆராய்ச்சிப் படிப்புகளுக்கான நடுவணரசு தொகைப் பங்கீட்டில், தமிழக உயர்கல்வி ஆராய்ச்சியில் ஈடுபடும் தமிழக ஆராய்ச்சியாளர்களுக்கு தேவையான தொகைப் பங்கீட்டைப் பெற்றுத்தர உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

துணை வேந்தர் பணியமர்த்தம்

- பல்கலைக்கழக மானியக் குழுவின் (UGC) விதிகளின்படி, பல்கலைக்கழகத் துணைவேந்தர்களைப் பணியமர்த்தம் செய்யும் அதிகாரம் மாநில ஆளுநருக்கே (வேந்தர் என்ற முறையில்) உள்ளது. துணைவேந்தர்களைத் தேர்வு செய்யும் தேர்வுக் குழுவின் உறுப்பினர்கள் பணியமர்த்தம் மற்றும் அக்குழு இறுதி செய்யும் பெயர்ப் பட்டியல் ஆகியவற்றை ஆளுநர் ஏற்க மறுப்பதோ அல்லது காலந்தாழ்த்துவதோ வழக்கமாகிவிட்டது.

- இதன் நேரடி விளைவாகக் கடந்த 2025 மார்ச் மாத நிலவரப்படி, மாநிலத்தில் உள்ள எட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு இரண்டரை ஆண்டுகளுக்கும் மேலாக துணைவேந்தர்கள் நிலையாகப் பணியமர்த்தப்படவில்லை.

- இதனால், தற்காலிக நீட்டிப்புப் பதவிக் காலத்திலேயே 85 விழுக்காடு பல்கலைக்கழகங்கள் தொடர்ந்து செயல்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. துணைவேந்தர் பதவி காலியாக இருப்பதால் அல்லது தற்காலிக நிருவாகத்தின் கீழ் இருப்பதால், பட்டமளிப்பு விழாக்கள் நடத்தப்படாமல் காலந்தாழ்த்தப்படுவது



மற்றும் நிருவாக முடிவுகளை எடுப்பதில் தொய்வு எனப் பல சிக்கல்கள் நீடிக்கின்றன. நிலையானத் துணைவேந்தர் இல்லாதது, அந்தந்தப் பல்கலைக்கழகங்களின் நிறுவனத் தன்னாட்சிக்கும், கல்விச் செயல்பாடுகளின் தரத்திற்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

- தமிழ்நாடு அரசு முன்மொழிந்து 2025ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் வழியே சட்டமாக்கப்பட்டு முதலமைச்சரிடமே வேந்தர் பொறுப்பு இருக்கும் என்கின்ற முடிவினை நாம் தமிழர் கட்சி கடைப்பிடிக்கும். இந்தச் சட்டங்கள் தற்போது உயர்நீதிமன்றத்தின் இடைக்காலத் தடையின் கீழ் இருக்கும் நிலையில் அந்த வழக்குகளை விரைந்து முடித்து இந்தச் சட்டங்கள் உரிய முறையில் நடைமுறைக்கு வருவதற்கான முயற்சிகளை நாம் தமிழர் அரசு மேற்கொள்ளும்.

சுற்றுலாத் துறைக்கான படிப்பு

- தமிழகம் சுற்றுலாத்துறையில் முதன்மை மாநிலங்களில் ஒன்றாக இருந்து வருகிறது. எனவே சுற்றுலா மேம்பாட்டிற்கென்று தனியே ஒரு பல்கலைக்கழகம் உருவாக்கப்படும்.
- இதன்மூலம் தமிழகத்தின் தொன்மையான சிறப்பு வாய்ந்த இடங்கள் குறித்த வரலாறு, கடலில் மூழ்கிய சங்ககால நகரங்கள் குறித்த வரலாறு அனைத்தையும் மீட்டெடுக்கும் ஆய்வுகள் நடத்தப்படும்.

ஆராய்ச்சிப் பங்கீடு

- தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்பக் கழகத்தின் ஆராய்ச்சிப் பணப் பங்கீடு அனைத்து மாவட்ட பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளுக்குக் குறிப்பாகச் சிற்றூர்களில் இயங்கும் உயர் கல்வி நிறுவனங்களுக்குச் சென்றுச் சேருவது உறுதி செய்யப்படும்.
- தனியார் பல்கலைக்கழகங்களின் கல்லூரிகளில் பணிபுரியும் பேராசிரியர்களின் தகுதி, தேர்வு, ஊதியம் போன்றவற்றை உறுதி செய்யும் அமைப்பு ஒன்றை உருவாக்கி அரசின் மேற்பார்வையில் தனியார் பல்கலைக்கழகங்களின் செயல்பாடுகள் கண்காணிக்கப்படும். அனைத்து ஆசிரியர்களுக்கும் தமிழக அரசின் சிறப்புத் தேர்ச்சி ஒரு தகுதியாக வைக்கப்படுவதோடு, குறிப்பிட்ட கால இடைவெளியில் அரசுப் பயிற்சியிலும் கலந்து கொள்வது கட்டாயமாக்கப்படும்.
- தமிழகத்தில் உயர்கல்வி பயின்றோருக்கானத் தனியார் வேலைவாய்ப்புகள் ஒருங்கிணைக்கப்பட்ட அரசின் அமைப்பு மூலம் வெளிப்படைத்தன்மையுடன் தமிழர்களுக்குக் கிடைப்பது உறுதி செய்யப்படும்.

சிறப்புக் குழு

- பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் அளவிலான குழு அமைக்கப்பட்டு அனைத்துப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளின் பாடத்திட்டங்கள் பன்னாட்டுத் தரத்திற்கு உயர்த்தப்பட்டு, குறிப்பிட்ட கால இடைவெளியில் சீராய்வு

செய்யப்படும். தமிழகப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் குழுவின் கூட்டம் உலகத்தரம் மற்றும் நடப்பு நிகழ்வுகளை உள்ளடக்கிய பாடத்திட்டங்களை இறுதி செய்து, அனைத்துப் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் ஆகியவற்றில் அறிமுகம் செய்து நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்யும். ஒவ்வொரு துறையிலும் ஆண்டுதோறும் ஏற்படுகின்ற மாற்றங்கள், புதிய செய்திகள் போன்றவற்றில் எது சரியானதோ அது பாடத்திட்டங்களில் புதிதாகச் சேர்க்கப்படும். இருக்கும் பாடத் திட்டத்தில் இணைக்கும் வகையில் நிகழ்கால மாற்றங்கள் என்ற கட்டாயத் தலைப்பு அமைத்துப் புதிய பாடத்திட்டங்கள் வடிவமைக்கப்படும். வளர்ந்து வரும் மாற்றங்களுக்கு ஏற்ப, அனைத்துப் பாடத்திட்டங்களும் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை செறிவாக மாற்றி அமைக்கப்படும்.

- துறையின் அண்மை வளர்ச்சிகளுக்கென்று ஆண்டுதோறும் புதிய பாடம் சேர்க்கப்படும். இது துறையின் அன்றைய நிலை மற்றும் வளர்ச்சியை அறியும் வகையில் அமைக்கப்படும்.

- அறிவியல் ஆய்வுக்கூடங்கள் அனைத்தும் தரம் உயர்த்தப்படும். துறைசார் படிப்புக்கு ஏற்ற நேரடி செயலறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டி, காலாண்டிற்கு ஒருமுறை பயிற்சி இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்.

- நாம் தமிழர் ஆட்சியில் உயர்கல்வி உலகத்தரம் வாய்ந்ததாக மாற்றப்படும். பன்னாட்டுக் கல்விக் கோட்பாடுகளுக்கேற்ப பாடத்திட்டங்களும், பயிற்சிகளும், ஆராய்ச்சி முறைகளும் அளிக்கப்பட்டுத் தமிழக உயர்கல்விப் பட்டம் எந்த நாட்டிலும் ஏற்கக்கூடிய அளவில் மாற்றியமைக்கப்படும்.

- தற்போதைய உயர்கல்வி, வேலைவாய்ப்பினை மட்டும் மையப்படுத்தியதாக உள்ளது. இந்த நிலை மாற்றப்பட்டு உயர்கல்வி வாழ்வியல் சார்ந்ததாகவும் புதிய எண்ணங்களையும், அறிவாற்றலையும் உருவாக்கும் வகையில் மாற்றி அமைக்கப்படும். அறிவியல் கல்வியும், கலைக் கல்வியும், சம வேலைவாய்ப்பும், அறிவு மேன்மையும் கொண்ட கல்வியாக அமைக்கப்படும்.

- ஓய்வு அகவை வந்தவுடன் ஆராய்ச்சியாளர்களையும், பேராசிரியர்களையும் வெளியேற்றும் நடைமுறை மாற்றப்பட்டு, தகுதி வாய்ந்த ஆராய்ச்சியாளர்களுக்கு வாழ்நாள் ஆராய்ச்சியாளர் **(professor emeritus)** திட்டம் கொண்டுவரப்படும் அதன்மூலம் ஆராய்ச்சி அறிவையும், பட்டறிவையும் பெறுவதில் உள்ள தடை நீக்கப்படும்.


- பல்கலைக்கழகங்களுடன் தொடர்புடையவர்கள், கல்வி சார்ந்த மேதைகள் அல்லது ஆராய்ச்சியாளர்கள் தவிர மற்றவர்கள் பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களாக்கப்படும் நடைமுறை ஒழிக்கப்படும்

- ஆராய்ச்சி ஏடுகள் மற்றும் இதழ்கள் (Journals) கொண்ட மையம் ஒன்று தொடங்கப்பட்டு அதன்வழி எந்தப் பல்கலைகழகத்திலும் புத்தகம் கடன் பெறும் வாய்ப்பு ஏற்படுத்தப்படும். ஆராய்ச்சிக் கட்டுரைகள், இதழ்கள், புத்தகங்கள் கட்டணமில்லாமல் மின்னணுப் புத்தகமாக நாம் தமிழர் அரசு பெற்றுத்தரும்.

- கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் சிற்றூர்களைச் சேர்ந்த மாணவர்களுக்குத் தனியார் வேலைவாய்ப்புகளுக்காக வளாகத் தேர்வுகள் நடத்தப்படும். இந்த வேலைவாய்ப்பில், மிகவும் பின்தங்கிய சிற்றூர்களில் இருந்து வரும் மாணவ, மாணவிகளுக்கு (தகுதியின் அடிப்படையில்) முன்னுரிமை அளிக்கப்படும்.









நாம் தமிழர் ஆட்சியில் உயர்கல்வி, உலகத்தரம் வாய்ந்ததாக மாற்றப்படும். பன்னாட்டுக் கல்விக் கோட்பாடுகளுக்கு ஏற்ப பாடத்திட்டங்களும், பயிற்சிகளும், ஆராய்ச்சி முறைகளும் திருத்தியமைக்கப்பட்டுத் தமிழ்நாட்டு உயர்கல்விப் பட்டம் எந்த நாட்டிலும் ஏற்கப்படக்கூடிய அளவில் மாற்றியமைக்கப்படும்.





- சட்டம், மருத்துவப் பட்டம் பெற்றவர்களுக்கும் பல்கலைக்கழகங்களில் ஆசிரியராகும் வாய்ப்பு அளிக்கப்படும். இதன்மூலம் அத்துறைசார் வல்லுநர்களின் அறிவும், பயனறிவும் கல்வி வளர்சிக்குப் பயன்படுத்தப்படும்.
- அடிப்படையில் எந்தக் கல்வி பயின்றவருக்கும் எந்தத் துறையில் படிக்கவும் நுழைவுத்தேர்வு மூலம் வாய்ப்பளிக்கப்படும். இதன்மூலம் மருத்துவரும் சட்டம் பயிலும் நிலையும், பொறியாளரும் சட்டத்துறை சார்ந்தவர்களும், மருத்துவம் படிக்கும் தடையற்ற நிலை ஏற்படுத்தப்பட்டுக் கல்விசார் விடுதலை நிலைநாட்டப்படும்.
- ஒன்பது மற்றும் பதினோராம் வகுப்புகளில் மாணவர்களுக்குத் தொழில்சார் மேலாண்மை (Career Management) பற்றிய சிறப்புப் பாடங்கள் வைக்கப்படும்.

ஒப்பந்த அடிப்படையில் கல்வி உதவி

- வெளிநாட்டில் உயர்கல்வி பயில்பவர்களுக்கு ஒப்பந்தத்தின் அடிப்படையில் நாம் தமிழர் அரசு பொருளுதவி வழங்கும். மேலும் அவருக்கு வேலையையும் உறுதி செய்து அவரது ஆராய்ச்சி அறிவு நாட்டிற்கு பயன்படுத்தப்படும் (அரசு உதவியில் படித்தவர் வேறு இடத்தில் வேலை செய்ய முடியாதபடி ஒப்பந்தம் ஏற்படுத்தப்படும்)
- துணைவேந்தர் கையெழுத்துப் போட்டால்தான் பேராசிரியர்கள் ஓய்வு பெற முடியும் என்ற நிலை மாற்றப்படும். இதன்மூலம் துணைவேந்தர்கள் ஆசிரியர்களுக்கு அளிக்கும் முறையற்ற நெருக்கடியும் நீக்கப்படும்.
- மாற்றுமுறை ஆராய்ச்சிப் படிப்புகள் (Transferable Research and Degree) எனப்படும் ஆராய்ச்சிக் கல்விமுறை அறிமுகப்படுத்தப்படும். இதன்மூலம் எந்தப் பல்கலைக்கழகத்தில், கல்லூரியில் ஆராய்ச்சிப் படிப்பைத் தொடங்கிய மாணவரும் வேறு பல்கலைக்கழகத்திற்கும், கல்லூரிக்கும் தன் ஆராய்ச்சிப் படிப்பை மாற்றிக்கொண்டு படிப்பைத் தொடர வழிவகை செய்யப்படும்.



போக்குவரத்துத்துறையே - நாட்டின்
பொருளியல் குவிக்கும் வழியே!
ஆக்குக வெல்லும் வரையே - தமிழர்
அரசு மக்கள் வழியே!

- தனித்தமிழ்வேங்கை மறத்தமிழ்வேந்தன்



போக்குவரத்துக் கொள்கை

முதன்மை நோக்கம்

- போக்குவரத்து வளர்ச்சி என்பது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் துணை நிற்பதாகும். சாலைகள் மேம்பட தொழிற்சாலைகளும் மேம்படும். தரமான சாலை வசதியே நாட்டின் முன்னேற்றப் பாதைக்கு வழிவகுக்கும். இதைக் கருத்தில் கொண்டு நாம் தமிழர் அரசு புதிய சாலை வசதிக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும்.

தமிழ்நாட்டில்தான் அதிக நேர்ச்சி (Accident)

- இந்தியாவிலேயே அதிகம் சாலை நேர்ச்சிகள் (accidents) நிகழும் மாநிலம் தமிழ்நாடு என்று புள்ளித்தகவல்கள் தெரிவிக்கின்றன. 2024ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 67,500க்கும் மேற்பட்ட நேர்ச்சிகள் (accidents) நடந்திருக்கின்றன. அதில் இறந்தவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 18,500. அந்தளவிற்குச் சாலைப் போக்குவரத்து மோசமாகிக் கொண்டிருக்கிறது. அதை முற்றாகக் குறைக்கும் வகையில் புதிய கட்டுப்பாடுகள் அமைக்கப்படும்.

இன்றுள்ள போக்குவரத்து அவலம்

- முன்பு நூறு ஊர்திகள் பயணித்த சாலையில் இப்போது ஆயிரம் ஊர்திகள் பயணித்துக் கொண்டிருக்கின்றன.
- தமிழ்நாட்டில் தற்போது ஏறத்தாழ 3.8 கோடி ஊர்திகள் பயன்பாட்டில் இருக்கின்றன. அடுத்த ஐந்தாண்டுகளில் இதன் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். அதற்கேற்ப சாலை வசதிகளைத் தொலைநோக்குப் பார்வையோடு நாம் தமிழர் அரசு திட்டமிட்டு மேம்படுத்தும்.
- நாற்பது பேர் பயணிக்கக்கூடிய பேருந்தில் குறைந்தது 60 முதல் 80 பேர் வரை பயணிக்கின்ற அவலம் தொடர்கிறது. நகரங்கள் மட்டுமின்றி சிற்றூர்களிலும் இந்த நிலையே நீடிக்கிறது.
- காலமாற்றத்திற்கு ஏற்ப மேம்படுத்தப்பட்ட கட்டமைப்புகளைக் கொண்ட தரமான சாலைகளையும் போக்குவரத்துக் கட்டமைப்பையும் நாம் தமிழர் அரசு செயல்படுத்தும்.

ஊழியர்களின் சிக்கல்கள்

- அரசு ஊர்திகளின் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் கூடுதல் நேரம் பணி செய்கிறார்கள். போதுமான ஓய்வற்ற நிலையில் ஊர்திகளை இயக்கும்போது நேர்ச்சிகள் (accidents) ஏற்படுவதும் உயிரிழப்புகள் நிகழ்வதும் நாள்தோறும் நடக்கிறது.
- போக்குவரத்து ஊழியர்கள் போதுமான அளவில் இல்லை. அவர்களுக்கான ஊதியமும் குறைவானதாகவே இருக்கிறது. மக்கள் தொகைக்கு ஏற்ப பொது ஊர்திகள் போதுமானதாக இல்லை. எனவே காலிப்பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டு மற்ற அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் வழங்கப்படும்.






ADJ 0830









- ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களுக்கு எட்டுமணி நேரம் மட்டுமே வேலை என்று சட்டம் இயற்றப்படும். 'கூடுதல் வேலை நேரம்' என்பது இருக்காது. இவர்களுக்கான புதிய குடியிருப்புகள் அமைத்துத் தரப்படும். ஊதிய உயர்வு சிக்கல்கள் அனைத்தும் பேசி முடிக்கப்பட்டு அனைத்து வசதிகளும் போக்குவரத்து ஊழியர்களுக்கு வழங்கப்படும்.

ஊழியர்களின் நலன்

- முதன்மையான பேருந்து நிலையங்களில், ஓட்டுநர்களுக்கும் நடத்துநர்களுக்கும் தரம் மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன், குளிரூட்டப்பட்ட தங்கும் விடுதிகள் அமைக்கப்படும். இது அவர்களின் அடிப்படை தேவைகளில் ஒன்று. ஓட்டுநர்களின் ஓய்வு, சாலை நேர்ச்சிகளைக் (accidents) குறைக்கும்.

- பயணிகள் மற்றும் ஊழியர்களின் பாதுகாப்புக் கருதி, பேருந்து நிலையங்கள், நிறுத்தங்கள் அனைத்திலும் கண்காணிப்புக் கருவிகள் பொருத்தப்படும். அரசுப் பேருந்துகளிலும் கண்காணிப்புக் கருவிகள் பொருத்தப்பட்டு, போக்குவரத்துக் காவல் கட்டுப்பாட்டு அறையுடன் இணைத்துக் கண்காணிக்கப்படும்.

- தமிழகத்தில் பொது மக்களின் நலனைக் கவனத்தில் கொண்டு, குறைந்தளவுக் கட்டணங்கள் பெறப்படும். வேளாண் குடிகள் வேளாண் பொருள்களை ஏற்றிச் செல்ல பயணக் கட்டணச் சலுகைகள் அளிக்கப்படும்.

போக்குவரத்து ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி உரிமை

- தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் ஏறக்குறைய 1.2 - 1.4 இலக்கம் (இலட்சம்) ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் வருங்கால வைப்பு நிதி (PF), பணி நிறைவு நன்றிக் கொடை (Gratuity) உள்ளிட்ட ஓய்வூதிய நிலுவைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். பல்வேறு அரசுத் தொழிற்சங்கங்கள் மற்றும் பொது அறிக்கைகளின்படி, இந்த நிலுவைத்தொகை சற்றேறக்குறைய 5,12,000 - 7,15,000 கோடி வரை இருப்பதாக மதிப்பிடப்படுகிறது. தமிழ்நாடு அரசுப் பேருந்து ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களின் சம்பளத்தில் பிடித்தம் செய்த வருங்கால வைப்பு நிதியை திமுக - அதிமுக அரசுகள் சரியாக செலுத்தாமல் போக்குவரத்துக் கழகங்களை இழப்பில் தள்ளின. நாம் தமிழர் அரசு, பிடித்தம் செய்யப்பட்ட இந்தத் தொகையை முழுமையாகவும் உடனடியாகவும் வழங்கி, அரசியல் தலையீடு இல்லாத முறையில் எந்த ஊழியரின் உரிமையும் பாதிக்கப்படாத வகையில் செயல்படும்.

அரசு உதவிகள்

- போக்குவரத்தில் நிலையான பணியாளராக அமர்த்தப்பட்ட ஒருவருக்கு அரசின் ஓய்வூதியம் உட்பட மற்ற சலுகைகள், 20 ஆண்டுகள் பணியில் இருந்தவர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்ற நடைமுறையை மாற்றி, 15 ஆண்டுகள் பணியில் இருந்தவர்களுக்கும் வழங்கப்படும்.

- புதிதாகப் போடப்படும் சாலைகள் குறைந்தது ஐந்தாண்டிற்கு உறுதி குலையாத தன்மையுடன் இருக்க வேண்டும். அதற்குள் சிதைவுகள் ஏற்பட்டால் அந்தப் பகுதிக்குப் பொறுப்பாக இருக்கும் ஒப்பந்த ஏற்பாளர்கள் மற்றும் பொறியாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.





சாலைத் தொடர் வண்டி





நடைபாதை வணிகர்களுக்கான கடைகள்



ஊர்தி நிறுத்த அடுக்ககம்



கணினி பயண அட்டை



நெடுஞ்சாலையும் கண்காணிப்பும்

மாற்றுத் திட்டங்கள்

- பெரு நகரங்களுக்குள் பேருந்துகள் இயக்கப்படமாட்டாது. நெரிசலைக் குறைப்பதற்குச் சிற்றுந்துகள் மட்டுமே இயக்கப்படும். தொலைதூரப் பயணங்களுக்கு மட்டுமே பேருந்துகள் பயன்படுத்தப்படும்.
- பழைய பேருந்துகளின் பயன்பாடு நிறுத்தப்பட்டு, புதிய பேருந்துகள் வாங்கப்படும். மக்களின் பயன்பாட்டிற்கு ஏற்பப் பொது போக்குவரத்துகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். பேருந்துகள், பொது ஊர்திகள் அனைத்திலும் கதவுகள் தானியங்கி முறையில் இருக்கும். படிக்கட்டுப் பயணங்களால் ஏற்படும் நேர்ச்சிகள் மற்றும் மரணங்கள் முற்றாகத் தவிர்க்கப்படும்.
- அரசு ஊர்திகள் அனைத்தும் மாற்று எரியாற்றலில் இயங்கக்கூடியதாக மாற்றி அமைக்கப்படும். இதன்மூலம் சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தவிர்க்க முடியும். இதனால் நகரங்களில் உள்ள கரியீருயிரகம் அளவு குறைக்கப்படும்.
- அரசுப் பேருந்துகள் அனைத்தும் தடங்காட்டி மூலம் கண்காணிக்கப்படும். அனைத்துப் பேருந்து நிறுத்தங்களிலும் பேருந்து வருகையை அறியும் மின் பலகைகள் (Digital Boards) அமைக்கப்படும். இதன்மூலம் அடுத்த பேருந்து எங்கே வந்து கொண்டிருக்கின்றது என்பதை அறிந்து கொள்ள முடியும்.
- பேருந்து நிறுத்தங்கள் மற்றும் நிலையங்களில் அலுவலகம் அனைத்தும் கணினி மயப்படுத்தப்படும்.

மேம்படுத்தப்பட்ட ஊர்தி நிறுத்தங்கள்

- சாலை ஓரங்கள், நடைபாதைகள், பொது இடங்கள் என எங்கேயும் ஊர்திகளை நிறுத்தக்கூடாது. அந்தந்தப் பகுதிகளிலேயே அரசுச் செலவில் அடுக்குமாடி ஊர்தி நிறுத்தக் கட்டட வசதிகள் அமைக்கப்படும். சொந்த இடத்தில் ஊர்தி நிறுத்த இடமில்லாதவர்கள், 'குறைந்த மாதக் கட்டணத்தில்' அந்த இடங்களில் நிறுத்திக்கொள்ளலாம். இதன்மூலம் சாலைகள் அனைத்தும் போக்குவரத்துக்கும், நடைபாதைகள் நடப்பதற்காக மட்டுமே பயன்படுத்தப்படும்.

நடத்துநர்கள் இல்லாப் பேருந்து

- அரசுப் பேருந்துகளில் இப்போது பணியில் இருக்கும் நடத்துநர்கள் அதே வேலையில் தொடர்வார்கள். நகரங்கள் மற்றும் மாநகரங்களில் புதியதாக இயக்கப்படும் தானியங்கிப் பேருந்துகளில் இனி மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகள் ஆகியோர் பணியமர்த்தப்படுவார்கள். பேருந்து நிலையம், பேருந்து நிறுத்தம் ஆகிய இடங்களில் பயணக் கணினி அட்டை வழங்கும் பணி இவர்களுக்கு வழங்கப்படும்.
- அந்தப் பயண அட்டையைத் தானியங்கிக் கதவுகளில் பொருத்தினால் கதவு திறக்கும். இறங்க வேண்டிய இடத்தை ஒலிபெருக்கி அறிவித்தபடி இருக்கும்.




மெட்ரோ


வானூர்தி




ETANOLSTATION
எத்தனால் எரிபொருள்
நிரப்பும் இடம்


படகுப் போக்குவரத்து

மாநகரத் தொடரி (Metro Rail)

- மாநகரத் தொடரிப் பயன்பாட்டை மக்கள் அதிகம் பயன்படுத்திக் கொள்ள வேண்டி அதன் கட்டணங்கள் வெகுவாகக் குறைக்கப்படும். அரசு ஊர்திகளைப் பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும்போதுதான் நகரின் போக்குவரத்து நெரிசல் குறையும்.

மீண்டும் சாலைத்தொடர் வண்டி (TRAM)

- நகரங்களில் உள்ள சாலைகளின் நடுவே மீண்டும் சாலைத் தொடர்வண்டி (Tram) இயக்குவது குறித்து ஆய்வு செய்யப்படும். வாய்ப்புள்ள இடங்களில் அது நிறைவேற்றப்படும். இதன்மூலம் பொதுப் போக்குவரத்து அதிகமாகும். நெரிசலும் குறையும்.

கரும்புக் கழிவில் எரிபொருள் (Ethanol)

- கரும்புக் கழிவிலிருந்து எடுக்கப்படும் எரிசாராயம் (Ethanol) பசுமை எரிபொருளாகக் கருதப்படுகிறது. எரிசாராயம் கலந்த கன்னெய் (Petrol) எரிபொருளாகப் பயன்படுத்தும்போது காற்றில் கலக்கப்படும் கரிம ஓருயிரக நுண்துகள் உமிழ்வு (Carbon Monoxide Emission) பெருமளவில் கட்டுப்படுத்தப்படுகிறது.
- இதனைக் கருத்தில் கொண்டு எரிசாராயம் கலந்த எரிபொருள் மூலம் இயங்கும் ஊர்திப் பொறி இயந்திரங்களை (Motor Engine) இறக்குமதி செய்வதில் கவனம் செலுத்தும். இதன்மூலம் சுற்றுச்சூழலுக்குக் கேடு விளைவிக்காத போக்குவரத்து முறை உறுதி செய்யப்படும்.

ஓட்டுநர் உரிமம் பெறுவதில் மாற்றம்

- ஓட்டுநர் உரிமத்திற்கு விண்ணப்பம் செய்வோருக்கு ஊர்திகளை ஓட்டுவது மட்டுமல்லாது, போக்குவரத்து விதிமுறைகளைக் கற்பது, முதலுதவி பயிற்சி உள்ளிட்டவைகளை கற்றுத் தேர்ந்த பிறகுதான் அவர்களுக்கு ஓட்டுநர் உரிமம் வழங்கப்படும்.

சாலை வசதியை மேம்படுத்து

- நகரங்களில், புதிதாகச் சாலை போடுவதற்கு முன்பாகவே, தொலைபேசி இணைப்பு, மின்சார இணைப்பு, கழிவுநீர், குடிநீர்க் கால்வாய் இணைப்பு ஆகிய துறைகளுடன் கலந்துரையாடி, அதற்கேற்ற கட்டமைப்புகள் அமைத்துவிட்டு பின் புதிய சாலைகள் அமைக்கப்படும். குறைந்தது ஐந்தாண்டுகள் அந்தச் சாலைகள் தோண்டப்படாமல் பழுதில்லாமல் இருக்கும். மக்களின் வரிப்பணம் தேவையின்றி வீணாகாது.
- மாநில, தேசிய, நெடுஞ்சாலைகளில் போதுமான நெருக்கடிக்கால உதவி மருத்துவ வசதிகள் ஏற்படுத்தப்படும்.
- நெடுஞ்சாலைகளில் அமைந்திருக்கும் மருத்துவமனைகளில் உறுதியாக நேர்ச்சிக்கால மருத்துவப் பிரிவு அமைக்கப்படும். இதன்மூலம், நேர்ச்சிகளில் சிக்கியவர்களுக்கு உடனடி மருத்துவம் கிடைக்க வழிவகை செய்யப்படும்.



- அனைத்துச் சாலைகளும் உலகத்தரம் வாய்ந்த முறையில் அமைக்கப்படும். மண்ணை நஞ்சாக்கும் நெகிழிகள் அனைத்தையும் சேகரித்துச் சாலைகள் அமைப்பதற்குப் பயன்படுத்தப்படும். அந்தச் சாலைகளில் இருபுறமும் மழைநீர் வழிந்தோடும் வகையில் நீர்வழிகள் ஏற்படுத்தப்படும்.

இருபுறமும் நிழல்தரும் மரங்கள்

- போக்குவரத்துச் சாலையின் இருபுறமும் நிழல்தரும் மரங்கள் வளர்க்கப்படும். தேசிய நெடுஞ்சாலையின் நடுவில் உள்ள தோட்டப் பகுதியில் செடி வகைகள் மட்டுமே வளர்க்கப்படுகிறது. அதற்கு மாற்றாக நிழல் தரும் புங்கைமரம், வேப்பமரம், உள்ளிட்ட மரக்கன்றுகள் நடப்படும். குறிப்பாக ஒவ்வொரு அயிரமாத்திரிக்கும் ஓர் அரசமரமும், ஆலமரமும் கட்டாயம் வளர்க்கப்படும்.
- அரசமரம், ஆலமரம் இரண்டும் 24 மணி நேரமும் உயிர்க்காற்றை (Oxygen) கொடுக்கக்கூடியதாகும். அதனால் ஊர்களுக்குள்ளேயும், வெளியே சாலைகளின் ஓரமும் அரை அயிரமாத்திரி (km) தூரத்திற்கு ஒரு மரத்தை நட்டு வளர்ப்பது முதல் கடமையாகச் செய்து முடிக்கப்படும்.

நெடுஞ்சாலை

- தரமற்ற சாலைகளைச் செப்பனிடத் தனிப்படை அமைக்கப்படும்.
- பெரு ஊர்திகள் (Heavy Vehicles) தங்களுக்கு ஒதுக்கப்பட்ட தடத்தைத் தவிர்த்து மற்ற தடங்களில் பயணித்தால் தண்டம் விதிக்கப்படும்.
- வளைவுகளில் நேர்ச்சிகளைக் குறைக்கும் மெத்துருளைகள் (Rolling Bar System) அமைக்கப்படும்.
- வனவிலங்குகள் நடமாடும் பகுதிகளில் அவைகள் சாலைகளைக் கடக்க பசுமை மேம்பாலம் அமைக்கப்படும்.
- கட்டுருவாக்கப்பட்ட நெகிழிச் சாலைகள் அமைக்கப்படும். (Pre Fabricated Plastic Roads)
- வேகக்கட்டுப்பாடு மற்றும் ஓட்டுநர் தூக்கக் கட்டுப்பாட்டுக் கருவிகள் அனைத்துத் தனியார் மற்றும் அரசு ஊர்திகளிலும் பொருத்தப்படும்.

கடலோர நீர் வழிப்பாதை

- கடலோரப் பகுதிகளில் படகுகள் மூலம் புதிய நீர் வழிப் போக்குவரத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும். இவை கடலோர மாவட்டங்களை இணைக்கும். இதனால் கடலோர மாவட்டங்களின் பொதுப் போக்குவரத்து எளிமையாக்கப்படும். சாலை வழிப் போக்குவரத்திலுள்ள நெருக்கடி குறையும்.
- வ.உ.சிதம்பரம் பிள்ளை பெயரில் வேளாண் பொருட்களை ஏற்றுமதி செய்யும் கப்பல் போக்குவரத்துத் தொடங்கப்படும்.

கூவம் ஆறு தூய்மைப்படுத்தப்படும்

- தமிழகத்தில் நீர்வழிப் பாதைகளுக்கான வாய்ப்புகள் அனைத்தும் ஆய்வு செய்யப்படும். சென்னைக்குள் ஓடும் கூவம் ஆற்றைத் தூய்மை செய்து அதில்

முன்புபோல் பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்துச் செயல்படுத்தப்படும். ஆற்றின் இருபுறமும் பெரிய குழாய்கள் அமைக்கப்பட்டு அதன் மூலம் கழிவுநீர், தூய்மையாக்க ஆலைகளுக்குக் கொண்டு செல்லப்படும். நீர்வரத்துப் பாதைகளைச் செப்பனிட்டு, நீர்வழிப் போக்குவரத்திற்குப் பயன்படுத்துவதோடு, படகுச் சுற்றுலாத் தளமாகவும் மாற்றப்படும். London, Singapore போல சென்னையையும் படகுப் போக்குவரத்து நகரமாக நாம் தமிழர் அரசு மாற்றி அமைக்கும்.

உயிர்க்காப்பு ஊர்திகள்

- தேசிய, மாநில நெடுஞ்சாலைகளில் ஒவ்வொரு 100 அயிரமாத்திரிக்கும் (km) உயிர்க்காப்பு ஊர்திகளுடன் கூடிய விரைவு மருத்துவ மையம் அமைக்கப்படும். நேர்ச்சிகளில் (accident) சிக்கியவர்களை உடனடியாக மீட்டு அந்த மருத்துவமனைகளில் முதலுதவி செய்து அருகில் உள்ள பெரிய மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும். புதிய நகரங்களை உருவாக்கும்போது சாலை வசதிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். தொலைநோக்குப் பார்வையில் உருவாக்கப்படும் சாலைகள் பசுமைக் காப்புச் சாலையாகவும் இருக்கும்.

- அனைத்து மாநில மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளிலும் உயிர்க்காப்பு ஊர்திகளுக்கெனத் தனி வழித்தடம் அமைக்கப்படும். இந்தத் தடத்தில் மற்ற ஊர்திகள் செல்வது தடை செய்யப்படும். இதன்மூலம் உயிர்க்காப்பு ஊர்திகள் போக்குவரத்து நெரிசல்களில் சிக்கிக்கொள்வது முற்றிலும் தவிர்க்கப்படும்.

சிறு வணிகர்களுக்கு மாற்று இடம்

- சாலையோரங்களில் இருக்கும் சிறு வணிகர்களுக்கு அந்தந்தப் பகுதியிலேயே குறைந்த வாடகைக்குத் தனியாக இடம் அமைத்துக் கொடுக்கப்படும். அதனால் அவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படாது. நடைபாதைகளைப் பயன்படுத்தும் மக்களும் பாதிக்கப்படமாட்டார்கள்.

சுங்கச்சாவடி அகற்றம்

- தமிழகத்தில் இருக்கும் நடுவண் மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகள் நாம் தமிழர் ஆட்சியில் அகற்றப்படும்.

போக்குவரத்துச் செம்மைப்படுத்தப்படும்

- மாணவர்களுக்குப் பள்ளிப் பருவத்திலேயே போக்குவரத்து விதிமுறைகள் பற்றிய அனைத்தும் கற்றுக் கொடுக்கப்படும். கல்லூரிக் காலகட்டத்தின்போது போக்குவரத்தில் உதவியாகப் பணியாற்றும் மாணவர்களுக்குச் சான்றுகள் வழங்கப்படும். இவ்வாறு தொடக்கத்திலேயே போக்குவரத்து விதிமுறைகளைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பினை அடுத்த தலைமுறையினருக்கு வழங்குவது மிகவும் இன்றியமையாதது என்று நாம் தமிழர் அரசு கருதுகிறது.








Noiweg!




Plastic
Road






PLEASE DRIVE
SAFELY

வானூர்தி

- நாட்டின் சுற்றுலா, தொழில், பொருளாதார வளர்ச்சிக்கு வானூர்திப் போக்குவரத்து முதன்மையானது. தமிழகத்தில் வானூர்திப் போக்குவரத்தை விரிவாக்கம் செய்யத் தேவையானத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

சென்னை வானூர்தி நிலையம்

- பரந்தூரில் வானூர்தி நிலையம் அமைக்கும் திட்டம் திரும்பப் பெறப்படும். சென்னையின் தற்போதைய வானூர்தி நிலையம் (மீனம்பாக்கம்) ஆண்டுக்கு 2.3 கோடி பயணிகளைக் கையாளும் திறன் கொண்டது, ஆனால் 2024 நிதியாண்டில் சற்றொப்ப 2.2 கோடி பயணிகளைக் கையாண்டுள்ளது. 58 இலக்கம் பன்னாட்டு பயணிகள் 2024ல் பயணித்துள்ளனர். பயணிகள் போக்குவரத்து வளர்ச்சி காரணமாக 2035க்குள் 4 கோடியாக உயரும் என கணிப்புகள் உள்ளன.

- மீனம்பாக்கம் விரிவாக்கத் திட்டம் (phase 2) நடைபெற்று வருகிறது, ₹2,467 கோடி செலவில் புதிய முனையம் (Terminal) T3 (86,135 சதுர மாத்திரி) அமைக்கப்பட்டு, திறன் 3.5 கோடியாக உயரும். இது நாளொன்றுக்கு 500+ வானூர்திகளைக் கையாளும். மீனம்பாக்கத்தை 306 குறுக்கம் பரப்பளவில், ₹10,500 கோடி செலவில் மேலும் விரிவாக்கம் செய்திடுவது சாத்தியமாகவே உள்ளது. புதிய வானூர்தி நிலையம் அமைக்கும் திட்டத்தை கைவிட்டு தற்போது இருக்கும் நிலையங்களின் விரிவாக்கத்தை நாம் தமிழர் அரசு மேற்கொள்ளும்.

சுற்றுலா வளர்ச்சி

- சுற்றுலா மற்றும் பொருளாதார வளர்ச்சியைப் பெருக்கும் விதமாக மதுரை, தூத்துக்குடி, சேலம் ஆகிய வானூர்தி நிலையங்களை விரிவாக்கம் செய்வதோடு தமிழகத்தின் முதன்மை நகரங்கள், சுற்றுலாத் தலங்கள் ஆகிய பகுதிகளுக்கும் உள்நாட்டு விமானப் போக்குவரத்தைத் தொடங்கிட ஒன்றிய அரசிடம் வலியுறுத்தி செய்து முடிக்கப்படும்.

விண்வெளி ஆராய்ச்சி

- தமிழர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வானியலில் தேர்ச்சி பெற்றிருந்தனர். இன்று தமிழ்நாட்டில் வானியல் அறிவியலில் தேர்ச்சி பெற்றுள்ள மாணவர்கள் அதிகமாக உள்ளனர். இவர்களின் ஆற்றலைப் பயன்படுத்தும் விதமாக விண்வெளிப் பயிற்சி மையம் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

- கோவில்பட்டி, நெய்வேலி, வேலூர், கயத்தாறு, உளுந்தூர்ப்பேட்டை, சோழவரம் ஆகிய இடங்களில் உள்ள பயன்பாட்டில் இல்லாத வானூர்தி ஓடுதளங்களைச் செயல்பாட்டிற்குக் கொண்டு வரவும், வானூர்தி இயக்கப் பயிற்சி, தேர்ச்சி ஆய்வுக்கூடம் முதலியவை அமைத்திடவும் நடவடிக்கை எடுக்கப்படும்.



துறைமுகக் கொள்கை

- உலகிலேயே மிகப் பழமையான துறைமுக நகரங்களைக் கொண்டது தமிழகம். "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்று கடல் அலைகளை எதிர்கொண்டு ஆண்ட இனம் தமிழினம். அந்த வகையில் நாம் தமிழர் அரசு கடல் வணிகத்தை மேம்படுத்தத் துறைமுகங்களை மேம்படுத்தும். இந்தியாவின் மொத்தப் பன்னாட்டு வர்த்தகத்தில் சற்றொப்ப 95% அளவு கடல் வழியாகவே நடைபெறுகிறது. வர்த்தக மதிப்பின் அடிப்படையில், சற்றொப்ப 70% கடல் வழியாக நடைபெறுகிறது. அந்த வகையில் தமிழகத்தில் இப்போது சென்னை, காமராசர் (எண்ணூர்), வ.உ.சிதம்பரனார் (தூத்துக்குடி) ஆகிய பெரிய துறைமுகங்களும், 15க்கும் மேற்பட்ட சிறிய/இடைநிலை துறைமுகங்களும் செயல்பாட்டில் உள்ளன.

முழுத் திறன் செயல்பாடு

- தமிழகத்தின் முதன்மைத் துறைமுகங்களான சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி ஆகியவை அவற்றின் முழுத் திறனில் (Cargo Handling Capacity) பாதியளவு கூட இன்னும் பயன்படுத்தப்படவில்லை. இத்துறைமுகங்கள் சற்றொப்ப 55% முதல் 60% வரை மட்டுமே செயல்பாட்டில் உள்ளன. இந்நிலையில், காட்டுப்பள்ளியில் 53,000 கோடி ரூபாய் செலவில், கழிமுகப் பகுதியை அழித்து முன்னெடுக்கப்படும் அதானித் துறைமுக விரிவாக்கத் திட்டம் தேவையற்றதாகும். எனவே, அதானித் துறைமுக விரிவாக்கத் திட்டத்திற்கான இசைவுகள் எதுவும் வழங்கப்படாது.

- புதிய துறைமுகங்களை உருவாக்குவதை விட, தற்போதுள்ள துறைமுகங்களின் கட்டமைப்பை மேம்படுத்துவதன் மூலமே அவற்றின் முழுத்திறனையும் திறம்படப் பயன்படுத்த முடியும். மேம்பட்டத் தொழில்நுட்பத்தைப் புகுத்தி, கணினிமயமாக்கப்பட்ட சரக்குப் பெட்டக மேலாண்மை மற்றும் தானியங்கி முறைகளைச் செயல்படுத்துவதன் மூலம் கப்பல்கள் வந்து செல்லும் நேரத்தைச் சீரமைக்க முடியும்.

- தமிழகத்தில் உள்ள துறைமுகங்களை மையமாக வைத்து மேலும் கூடுதலாக வர்த்தகப் போக்கு வரவு, சுற்றுலாப் படகு, கப்பல் போக்குவரத்து, கேளிக்கை, மீன்பிடி விழுமியங்கள் உள்ளிட்ட வளர்ச்சிகளைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். துறைமுகப் பகுதிகளில் கழிவுகள் தேங்காமல் மீன்கள் இயற்கையாக வளர்வதற்கான வழிகளைச் செய்ய வேண்டும். அந்தப் பகுதிகள் முழுவதும் காற்று மாசுபாடற்ற நடவடிக்கையை நாம் தமிழர் அரசு மேற்கொள்ளும்.

உரிமைகள்

- துறைமுகங்களின் வளர்ச்சி என்ற பெயரில் கரையோரம் வாழ்பவர்களுக்கான உரிமைகள் மறுக்கப்படக்கூடாது. தற்போதுள்ள கடலோர ஒழுங்குமுறை மண்டல (Coastal Regulation Zone) விதிகள், மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதாகக் கூறினாலும், நடைமுறையில் வளர்ச்சித் திட்டங்களுக்காக கடற்கரைப் பகுதிகளில் கட்டுமானங்களுக்குப் பல்வேறு விலக்குகளை அளிக்கின்றன. பழங்குடியினருக்கு "வன உரிமைச் சட்டம்" இருப்பது போல, கடலோர மீனவர்களுக்கு அவர்களின் மரபுசார் இடங்களுக்கான (மீன் உலர்த்தும் இடங்கள், படகு நிறுத்துமிடங்கள்) சட்டப்பூர்வ உரிமை வழங்கப்படும். கடலோரப் பகுதிகளில் அவர்களின் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படாமல் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும்.



பசுமைப் பாதுகாப்பு முறைகள், துறைமுகத் தொழிலாளர்களுக்குக் காப்பீடு, உலகத் தரத்திலான பாதுகாப்பு ஏற்பாடு, கணினிக் கட்டுப்பாடுகள் உள்ளிட்ட அனைத்தும் செயல்படுத்தப்படும்.

- நாம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கப்பல்கட்டி வர்த்தகம் செய்தவர்கள். அந்த வகையில் தமிழகத்தில் புதியதாகப் பெரிய வர்த்தகக் கப்பல், சரக்குக் கப்பல்களைக் கட்டும் தொழில்நுட்பம் நம் முப்பாட்டன் அரசேந்திரச் சோழன் பெயரில் ஏற்படுத்தப்படும். "தமிழ்நாடு கப்பல் கட்டும் கொள்கை 2026"இன்படி பெரிய சரக்குக் கப்பல்கள் (VLCCs) மற்றும் பசுமை நீரியக் கப்பல்களைத் உருவாக்கும் மையமாக தமிழகத்தை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். அனைத்துத் துறைமுகங்களிலும் சரக்கு மற்றும் வணிகக் கப்பல்களைப் பழுதுபார்க்கும் முறைமைகள் ஏற்படுத்தப்படும்.

போக்குவரத்து

- தமிழகத்தில் உள்ள அனைத்துத் துறைமுகங்களுக்கும் சரக்குப் பெட்டகங்களை எளிதில் எடுத்துச் செல்லும் வகையில் சாலைப் போக்குவரத்து மேம்படுத்தபடும். சாலைப் போக்குவரத்து, தொடர்வண்டிப் போக்குவரத்து அனைத்தும் எளிதில் துறைமுகங்களோடு இணைக்கும் படியான கட்டமைப்புகள் வலுப்படுத்தப்படும்.

இயற்கை நீரோட்டம்

- அண்மைக்கால தொழில் நுட்பங்கள் வளர்வதற்கு முன்பே பல்லாயிரம் ஆண்டுகளாக நம் முன்னோர்கள் இயற்கை வழி நீர்ப் போக்குவரத்துகளில்தான் கப்பலைச் செலுத்திக் கொண்டிருந்தார்கள். வங்காள விரிகுடாவில் நிலவும் "மழைக்கால நீரோட்டங்கள்" (Monsoon Currents) பண்டைய காலத்தில் மரக்கலங்களை இயக்குவதற்குப் பெரும் உதவியாக இருந்தன. குறிப்பாக, வடகிழக்குப் பருவக்காற்றுக் காலத்தில் பர்மாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு வருவது எளிதாக இருந்தது. அவற்றை மீளாய்வு செய்து மீண்டும் இயக்குவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்த நாம் தமிழர் அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.



அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க் கிவ்வுலகம் இல்லாகி யாங்கு.

– தமிழ்மறை (247) – வள்ளுவப்பெருமகனார்



நீர்வளமும், நிலவளமும் சார்ந்த தொழிற்சாலை, வேலைவாய்ப்பு, வளர்ச்சியைத்தான் நாம் தமிழர் அரசு முதன்மையாக முன்னெடுக்கும்.

பொருளாதாரம்

பொருளாதாரக் கொள்கை

நம் நாடும், மக்களும் எதற்கும் கையேந்தாதவர்களாக இருக்க வேண்டும். தனக்கான தேவைகள் வளர்ச்சிகள் அனைத்தையும் தம் மண்ணிலிருந்தே பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கான அத்தனை வளங்களும் தமிழகத்தில் இருக்கின்றன. அந்த வளங்களைப் பயன்படுத்தி மக்களை வளப்படுத்த தற்சார்புப் பொருளாதாரக் கொள்கையை நாம் தமிழர் அரசு முன்வைக்கிறது.

தற்சார்புப் பசுமைத் தாய்மைப் பொருளாதாரம்

- தற்சார்புப் பசுமைப் பொருளாதாரக் கொள்கையைத்தான் அண்ணல் காந்தியடிகள் முன்வைத்தார். ஆனால் இன்று, தனியார்மயம், தாராளமயம், உலகமயம் தான் இந்திய ஒன்றியத்தின் பொருளாதாரக் கொள்கையாக உள்ளது. இதில் தனிப்பெரும் முதலாளிகளின் வளர்ச்சி தான் ஒட்டுமொத்த நாட்டின் வளர்ச்சியாகக் கட்டமைக்கப்படுகிறது. சந்தைப் பொருளாதாரத்தை ஏற்றுக்கொண்ட நாட்டில் மக்களும் பண்டமாகத்தான் பார்க்கப்படுவார்கள்.

- அன்று 'வணிகம்' எனக் கப்பலில் வந்த வெள்ளையர்கள் அரசை விரட்டியடித்து விடுதலை பெற்றுவிட்டு, இன்று வானூர்திகளில் வரும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் பெரு முதலாளிகளுக்கும் இந்திய ஒன்றியத்தை விற்றுக் கொண்டிருக்கின்றார்கள். இந்த நாட்டின் வளங்களையும், மக்கள் நலன்களையும், உள்நாட்டு, வெளிநாட்டு பெரு முதலாளிகளுக்குத் தாரை வார்க்கின்ற கொள்கைதான் இந்தத் தனியார்மய, தாராளமய, உலகமயப் பொருளாதாரக் கொள்கை. அனைத்துத் துறைகளையும் தனியார் வசம் ஒப்படைத்துவிட்டு "ஆத்மநிர்பார்" என்ற திட்டத்தை இந்திய ஒன்றிய அரசு முன்மொழிந்தது ஏமாற்றுச் செயலாகும்.

- தற்சார்பு என்பது வெளிநாடுகளுடனான தொடர்பைத் துண்டிப்பது அல்ல. மாறாக, உணவு, மருத்துவம் உள்ளிட்ட இன்றியமையாத் தேவைகளுக்கு நம் மண்ணை முதன்மையாகச் சார்ந்து இருப்பதே ஆகும். நீர்வளமும், நிலவளமும் சார்ந்த தொழிற்சாலை வேலைவாய்ப்பு வளர்ச்சியைத்தான் நாம் தமிழர் அரசு முதன்மையாக முன்னெடுக்கும்.



“ஏம்பா சாப்பாட்டுக்குக் கூடவா வெளிநாட்டுல கை ஏந்துறது. உணவுக்கு ஊரான் நாட்டுல கை ஏந்துறதுக்கா போராடிச் சுதந்திரத்தைப் பெற்றோம். நம்மகிட்ட என்ன இருக்கோ கஞ்சியோ, கூழோ இருக்கிறதை குடிச்சுட்டு நிம்மதியா படுப்போம். அதுதான் நாட்டுக்குப் பாதுகாப்பு, அதுதான் நல்லது”


பெருந்தலைவர் காமராசர்











- “பொருளாதார அடியாள்களாகிய (EHMs) நாங்கள் பன்னாட்டு நிதி நிறுவனங்களைப் பயன்படுத்தி, மற்ற நாடுகளை எங்களது மிகப்பெரிய நிறுவனங்கள், அரசு மற்றும் வைப்பகங்களை இயக்கும் பெருநிறுவனங்கள் (Corporate) அடிபணிய வைக்கும் சூழலை உருவாக்குவோம். இதன்மூலம் கடன்களை வழங்குவோம். இவை மின் உருவாக்க நிலையங்கள், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், வானூர்தி நிலையங்கள் அல்லது தொழில்துறை பூங்காக்கள் போன்ற உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கான கடன்களின் வடிவில் இருக்கும். இத்தகைய கடன்களின் ஒரு கட்டுப்பாடு என்னவென்றால், எங்களது சொந்த நாட்டைச் சேர்ந்த பொறியியல் மற்றும் கட்டுமான நிறுவனங்களே இந்தத் திட்டங்கள் அனைத்தையும் கட்ட வேண்டும் என்பதாகும். சுருக்கமாகச் சொன்னால், இந்தப் பணத்தின் பெரும்பகுதி அமெரிக்காவை விட்டு வெளியேறுவதே இல்லை, இது வாஷிங்டனில் உள்ள வைப்பக அலுவலகங்களிலிருந்து Newyork, Houston அல்லது San Franciscoவில் உள்ள பொறியியல் அலுவலகங்களுக்கு மாற்றப்படுகிறது” - John Perkins (ஒரு பொருளாதார அடியாளின் ஒப்புதல் வாக்குமூலம்)

Cuba

- கடுமையான பன்னாட்டுப் பொருளாதாரத் தடைகளுக்கு நடுவிலும், Cuba சில துறைகளில் வியக்கத்தக்க தற்சார்பை அடைந்துள்ளது. உணவுத் தட்டுப்பாட்டைப் போக்க, நகரங்களிலேயே சிறிய அளவிலான இயற்கை வேளாண் பண்ணைகளை உருவாக்கி, வேளாண் விளைச்சலில் தன்னிறைவு பெற்றுள்ளது.
- மேலும் தனக்கெனச் சொந்தமான மருத்துவக் கட்டமைப்பை உருவாக்கி, உலகத்தரம் வாய்ந்த இலவச மருத்துவச் சேவையை மக்களுக்கு வழங்குகிறது.

Denmark

- Denmark தற்சார்பு எரிபொருள் உருவாக்கத்தில் உலகிற்கே ஒரு முன்மாதிரியாகத் திகழ்கிறது. தனது மின்சாரத் தேவையில் 50 விழுக்காட்டிற்கும் அதிகமானவற்றைக் காற்றாலைகள் மூலம் உருவாக்கம் செய்கிறது. கழிவுகளிலிருந்து ஆற்றல் உருவாக்கத்திலும், மிதிவண்டிப் பயன்பாட்டினை ஊக்குவிப்பதன் மூலமும் கரிம வெளியீட்டைக் (Carbon emission) குறைப்பதிலும் வெற்றி கண்டுள்ளது. இறக்குமதி செய்யப்படும் நிலக்கரி மற்றும் எண்ணெயைச் சார்ந்திருப்பதைப் பெருமளவு குறைத்துச் சொந்தமாகப் பசுமை ஆற்றலை உருவாக்குகிறது.

Iceland

- Iceland தனது புவியியல் அமைப்பை வாய்ப்பாகப் பயன்படுத்தி எரியாற்றல் உருவாக்கத்தில் தற்சார்பை அடைந்துள்ளது. இந்நாட்டின் 90 விழுக்காடு வீடுகளுக்குத் தேவையான வெப்பம் மற்றும் 25 விழுக்காடு மின்சாரம் புவியின் வெப்பத்திலிருந்து பெறப்படுகிறது. (Geo Thermal Energy)
- கடும் குளிரான நாடாக இருந்தாலும், புவி வெப்ப ஆற்றலைப் பயன்படுத்தி பசுங்குடில்கள் (Greenhouses) மூலம் தங்களுக்குத் தேவையான வேளாண் பொருள்களைத் தாங்களே உருவாக்கம் செய்கின்றனர். மேலும் இந்நாடு புதைபடிவ எரிபொருள்களை (Fossil Fuels) முற்றிலும் தவிர்ப்பதை நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றது.



Venezuela

- Venezuela நாட்டின் அரசத்தலைவர் Hugo Rafael Chavez Frias, எண்ணெய் வளத்தை அரசுடமையாக்கினார், அதன்வழியே கிடைத்த வருவாயைக் கொண்டு கல்வி, மருத்துவம் ஆகிய சேவைகளை மக்களுக்கு வழங்கினார். எண்ணெய் வருவாயை மட்டுமே நம்பியிருந்ததாலும், வேளாண் பொருள்கள் உருவாக்கம் செய்யாமல் இறக்குமதி செய்து கொடுத்ததாலும், 2014க்குப் பிறகான காலகட்டத்தில் வெனிசுலா பெரும் பொருளாதாரப் பின்னடைவைச் சந்தித்தது. வளங்களை அரசுடமையாக்கியதோடு அதன் வருவாயை வேளாண்மை, வேளாண் தொழிற்சாலைகளில் முதலீடு செய்திருந்தால் தன்னிறைவான பொருளாதாரத்தை எட்டியிருக்க முடியும்.













இலங்கை

- 2022ஆம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்ட பணவீக்க நெருக்கடிக்கு முதன்மைக் காரணங்களில் ஒன்று, உணவு மற்றும் பிற இன்றியமையாப் பொருள்களுக்கு இறக்குமதியையே சார்ந்திருந்ததுதான். தற்சார்புப் பொருளாதாரத்தில், மக்களின் அடிப்படை வாழ்வாதாரம் உலகளாவிய சந்தையின் ஏற்ற இறக்கங்களால் தீர்மானிக்கப்படுவதில்லை. உள்நாட்டிலேயே உருவாக்குவதன் மூலம், இலங்கையின் பொருளாதாரத்தைச் சீரழித்த "இறக்குமதி பணவீக்கத்தைத்" தவிர்த்திருக்க முடியும். தற்சார்பு வாழ்வு முறை பொருளாதாரத்தை வலிமையற்ற நுகர்வோர் பொருளாதாரத்தில் இருந்து உருவாக்கப் பொருளாதாரமாக மாற்றி வலிமைப்படுத்துகிறது.

பசுமைப் பொருளாதாரக் கொள்கை

- எல்லா வளங்களையும் வைத்துக்கொண்டு நம் நாடு, பிற நாடுகளிடம் கையேந்தி நிற்பது அவமானம். அதனால் நாம் தற்சார்புப் பொருளாதாரக் கொள்கையை முன்னெடுக்கிறோம். சிற்றூர்களில் இருந்து மண் சார்ந்த தொழிலை வளர்த்தெடுப்போம். அதுதான் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி சம விழுக்காட்டில் இருப்பதை உறுதி செய்யும்.

தொழிற்சாலைகள் மட்டும் போதாது

- நகர்ப்புற வளர்ச்சியை மட்டும்தான் இந்நாடு கணக்கில் எடுத்துக் கொள்கிறது. இதுவரை அதிகாரத்திலிருந்த ஆட்சியாளர்கள், தொழிற்சாலைகளுக்குக் கொடுத்த முன்னுரிமையை வேளாண் விளைச்சலுக்குக் கொடுக்கவில்லை. நமது மண்ணின் தன்மை வேளாண் தொழில் சார்ந்து, வேளாண் நிலமாக இருப்பதுதான். அதை ஒழித்துவிட்டுத் தொழிற்சாலை நகரமாக மாற்றி வருவதால் தற்சார்பற்ற நாடாக நம் நாடு மாறிப்போகிறது. வெறும் இயந்திரங்களை மட்டுமே உருவாக்கிக்கொண்டு உணவுக்காக வெளிநாடுகளிடம் கையேந்த வேண்டிய நிலையை நமது அரசுகள் உருவாக்கியிருக்கின்றன.

தரகு அரசு

- போக்குவரத்து, மருத்துவமனை, கல்வி, வானூர்தி, குடிநீர் விற்பனை, மின்சார உருவாக்கம், சாலை வசதி, அரசுக் கட்டுமானம், தொடர் வண்டிப் போக்குவரத்து, அஞ்சல் சேவை, காய்கனி வணிகம், வேளாண் பொருள் கொள்முதல், எரிபொருள் விற்பனை என அனைத்துமே தனியார் வசம் சென்றுவிட்டது. தனிப்பெரும் முதலாளிகளின் வள வேட்டைக்காடாக மாறிவிட்ட நிலத்தில் சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர் பெருமக்களும், அரசும் மக்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையே தரகு வேலை பார்க்க முடியுமே ஒழிய தலைவர்களாக இருந்து சேவை செய்ய முடியாது. நாம் தமிழர் அரசு இந்தக் கேடு விளைவிக்கும் போக்கைக் களைந்து, மாநில மக்களின் முதுகெலும்பாக அமையும் வகையில் தற்சார்புப் பசுமைப் பொருளாதாரக் கொள்கையின் வழி பயணிக்கும்.



உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு.

– தமிழ் மறை (734) – வள்ளுவப்பெருமகனார்



சிற்றூர்களின் பொருளாதார வளர்ச்சி

> ஓர் அரசை சிறப்பாக நடத்த வேண்டுமென்றால் சிற்றூர்களின் பொருளாதார வளர்ச்சியை முதன்மைப்படுத்த வேண்டும்.

தற்சார்புப் பொருளாதாரம்

- ஒரு நாட்டின் பொருளாதாரத்தைக் சம விழுக்காட்டில் வளர்த்தெடுக்க வேண்டுமென்றால் நாட்டின் பெருமளவு மக்கள் வாழக்கூடிய சிற்றூர்களை மேம்படுத்துவது மிகவும் முதன்மையானது.
- இங்கு Smart City/ Smart Village திட்டம் இருக்கின்றதே தவிர நிலையான வளர்ச்சியை உறுதி செய்யக்கூடிய Sustainable City / Sustainable Village திட்டம் கிடையாது. அதற்கான செயல் திட்டங்களும் ஆளும் அரசுகளால் உருவாக்கப்படவில்லை.

சிற்றூர்களில் வசதிகள்

- சிற்றூர்களை விட்டு மக்கள் வெளியேறி நகர்ப்புறத்தை நோக்கி வரக்காரணம் தரமானக் கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்புகள் போன்ற வசதிகள் எதுவும் பெருநகரங்களுக்கு இணையாகச் சிற்றூர்களில் கிடைப்பதில்லை. இதன் காரணமாகத்தான் நகரங்கள் நெருக்கடி மிகுந்து பிதுங்கி வழிகிறது.

சம அளவில் வளர்ச்சி

- உடலில் எல்லா உறுப்புகளும் வலிமைப் பெற்று வளர்வதுதான் வளர்ச்சி. குறிப்பிட்ட பகுதி மட்டும் வளர்ந்துகொண்டே போவது வளர்ச்சியல்ல, வீக்கம்.











சிற்றூர்களின் பொருளாதார வளர்ச்சி





இதேபோல நகர்ப்புற வளர்ச்சியை மட்டுமே தற்பொழுதுள்ள பொருளாதாரக் கொள்கை முதன்மைப்படுத்துகிறது. அதை நாம் தமிழர் அரசு ஏற்கவில்லை. சிற்றூர்களின் பொருளாதார வளர்ச்சியும், நகர்ப்புறப் பொருளாதார வளர்ச்சியும் சம அளவில் வளர்த்தெடுக்கப்படாமல், நாட்டின் பொருளாதார வளர்ச்சியை சீரமைக்க முடியாது.

சிற்றூர்களை நோக்கி

- மக்கள் சிற்றூர்களிலிருந்து நகரங்களுக்குச் செல்வதன் மூலம் சிற்றூர் மக்களுக்கே உரிய கலை, பண்பாடு உள்ளிட்ட அவர்களது வாழ்வியல் முறை சிதைந்து அழியும். அதனால் பண்பாட்டுப் பெருமைகளை மீட்டெடுக்கவும், மரபுசார் வேளாண்மையைப் பாதுகாத்திடவும் மக்களுக்கு அவர்களது வாழ்விடங்களிலேயே அனைத்து வசதிகளையும் அமைத்துக் கொடுக்க வேண்டியது தலையாய கடமையாகிறது. அதனால், சிற்றூர் மக்களுக்கு அவர்களின் வாழ்விடத்திற்கு அருகிலேயே தரமான கல்வியையும், மருத்துவத்தையும், வேலைவாய்ப்பையும், வாழ்வாதாரத்தையும் நாம் தமிழர் அரசு உறுதி செய்யும்.

வேலைவாய்ப்பு

- சிற்றூர்களின் பொருளாதாரத்தில் பெரும்பங்கான வேளாண்மை, ஆடு மாடு வளர்த்தல், மீன் வளர்த்தல், கோழி வளர்த்தல், பட்டுப்பூச்சி வளர்த்தல், தேனீக்கள் வளர்த்தல், பாய் பின்னுதல், கட்டில் பின்னுதல், கூடை முடைதல், நெசவு செய்தல் உள்ளிட்ட அனைத்தையும் நிறுவனமயமாக்கி அரசுப் பணியாக நாம் தமிழர் அரசு அறிவிக்கும்.
- அதற்குச் சான்றாக, தமிழ்நாட்டில் பல பகுதிகளில் தென்னை பெருமளவில் வளர்க்கப்படுகிறது. அவற்றின் மூலம் அந்தந்தப் பகுதிகளில் தொழிற்சாலைகளை நிறுவி தேங்காய் எண்ணெய் எடுப்பது, இளநீரைப் பதப்படுத்தி பாதுகாப்பான குளிர்பருகமாக மாற்றி ஏற்றுமதி செய்வது, தேங்காய் நாரைக் கொண்டு கயிறு திரிப்பது, கட்டில் செய்வது, படுக்கை செய்வது உள்ளிட்ட பல மதிப்புக்கூட்டப்பட்ட பொருள்களாக்கி உள்நாட்டுப் பொருளாதாரம் மேம்படுத்தப்படும்.

குடிநீர் மற்றும் நீர்வள மேலாண்மை

- தமிழ்நாட்டின் சிற்றூர்களில் உள்ள முதன்மையான சிக்கல் குடிநீர்ப் பற்றாக்குறை ஆகும். மழைநீர்ச் சேகரிப்பு, ஊருணிகள், குளங்கள், ஏரிகள் சீரமைத்தல் ஆகியவை ஒருங்கிணைந்த திட்டமாகச் செயல்படுத்தப்படும். ஒவ்வொரு சிற்றூரிலும் நீர்வள மேலாண்மைக் குழு அமைக்கப்பட்டு, நீர் வீணாகாமல் பயன்படுவது உறுதி செய்யப்படும்.

எண்மச் சிற்றூர்கள் (Digital Villages)

- ஒவ்வொரு சிற்றூரும் இணைய வசதியுடன் கூடிய எண்மச் சிற்றூராக மாற்றப்படும். இணையவழி அரசு சேவைகள், எண்மக் கட்டண முறைகள், வேளாண் குடிகளுக்கான இணையவழிச் சந்தை அணுகல் (e-Market access), மாணவர்களுக்கான மின்னணுக் கற்றல் (e-learning) உள்ளிட்டவை நடைமுறைப்படுத்தப்படும். இதன்மூலம் சிற்றூர் மக்கள் நகரங்களைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை தவிர்க்கப்படும்.

















பெண்களின் பொருளாதாரத் தற்சார்புநிலை

- சிற்றூர்களைச் சார்ந்த பெண்களின் கடின உழைப்பினை தன்னுதவிக் குழுக்கள், சிறு தொழில் கடன்கள், சந்தை இணைப்புகள் மூலம் பொருளாதார அடிப்படையில் வலுப்படுத்துதல் முதன்மையானது. இதன் தேவையைக் கருதி பெண்கள் நடத்தும் தொழில்களுக்கு அரசின் நேரடிக் கொள்முதல் (Government Procurement) முறை உருவாக்கப்படும்.

இளைஞர் திறன் மேம்பாடு மற்றும் தொழில் பயிற்சி

சிற்றூர்களில் உள்ள இளைஞர்களுக்கு

- தொழில்நுட்பப் பயிற்சி, ITI / Skill Centers, புதிய தொழில்கள் (Start-up) தொடங்குவதற்கான பயிற்சியும், அறிவுரைகளும் வழங்கப்படும். இதனால் வேலை தேடி நகரங்களை நோக்கிச் செல்லும் நிலை கட்டுப்படுத்தப்படும்.

வேளாண்மையுடன் இணைந்த மதிப்புக் கூட்டல் (Value Addition)

- வேளாண்மை என்பது விளைச்சலுடன் நிற்காமல், அதனைப் பதப்படுத்துதல், பொதியிடுதல், நேரடியாகச் சந்தைப்படுத்துதல் போன்றவற்றைச் செய்தால் வேளாண் குடிகளின் வருமானம் பன்மடங்கு உயரும். அதை உறுதி செய்யும் வகையில் அனைத்துச் சிற்றூர்களிலும் வேளாண் செயலாக்க மையங்கள் (Agro-Processing Units) அமைக்கப்படும்.

சிற்றூர்த் தொழில்கள்

- மண்பானை செய்வது, தச்சு வேலை செய்வது போன்ற மரபுசார் தொழில்கள் நிறுவனமயமாக்கப்பட்டுத் தொழிற்சாலைகள் தொடங்கப்படும். அந்தத் தொழில்கள் தொடர்பான மாதிரிப் புத்தகங்கள் கொள்முதலாளர்களுக்கு வழங்கப்பட்டு, ஒப்பந்தத்தின் அடிப்படையில் அவர்களின் விருப்பத்திற்கேற்றவாறு பொருள்கள் உருவாக்கித் தரப்படும்.

- நெசவு ஒரு குறிப்பிட்டச் சமூகம் செய்யும் வேலை என்பதனை மாற்றி, அதனை விரிவுப்படுத்தி நெசவுச்சோலைத் தொடங்கப்படும். அனைத்து மக்களுக்கும் பயிற்சியும், தேவைப்படும் மூலப்பொருள்களும் வழங்கி நெசவுத் தொழில் வளர்க்கப்படும். அப்பொருள்களை அரசே சந்தைப்படுத்தும். இவ்வாறு மக்களின் வாழ்விடங்களிலேயே அவர்களுக்கான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

இதுதான் நமது திட்டம்

- சிற்றூர்களின் பொருளாதாரத்தை வளர்க்காமல் நகரமயமாதலைத் தடுக்க முடியாது. நகரமயமாதலைத் தடுக்காவிட்டால் நாடு முழுமையான வளர்ச்சியை அடையாது. இதனால், மக்களின் வாழ்விடங்களிலேயே உள்ள வளங்களைக் கொண்டு வேலைவாய்ப்பைப் பெருக்கிச் சிற்றூர்களின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதில் நாம் தமிழர் அரசு மிகுந்த கவனம் செலுத்திப் பணியாற்றும்.



நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு.

– தமிழ் மறை (520) – வள்ளுவப்பெருமகனார்



தொழில்

நிலமும் வளமும் சார்ந்த தொழிற்சாலைகள், வேலைவாய்ப்பு, வளர்ச்சி

> வலுவான தொழிற்கொள்கைதான் நாட்டின் கட்டமைப்பை வலிமையாக்கும். கடந்த ஐம்பதாண்டு காலம் ஆட்சியில் இருந்தவர்கள் முறையான தொழிற் கொள்கையற்று வேளாண்மையைச் சீர்குலைத்துத் தொழில் வளங்களைத் தனியாருக்குத் தாரை வார்த்ததன் விளைவாகத் தமிழ்நாடு மோசமான பொருளாதாரச் சீர்கேடுகளைச் சந்திப்பதுடன் வேலையில்லாத் திண்டாட்டமும் மிகப்பெரும் அளவில் நீடிக்கிறது.

தொழிற்கொள்கை

- நாம் தமிழர் ஆட்சியில் மண் வளம், நீர் வளம் ஆகியவற்றைப் பாதிக்கக்கூடிய எந்தத் தொழிற்சாலைக்கும் அனுமதி கிடையாது.
- நிலமும் வளமும் சார்ந்தத் தொழிற்சாலைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு அதனைக்கொண்டு வேலைவாய்ப்பும் வளர்ச்சியும் உறுதி செய்யப்படும்.

தொழிற்பயிற்சி

- தொழில்துறை வளர்ச்சியில் உலக நாடுகளுக்கு இணையாகப் போட்டியிட வேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம். அதற்குத் தேவையான புதிய தொழில்நுட்பங்களை வளர்த்தெடுப்பதோடு, உலகத்தரம் வாய்ந்த திறன்மிக்க தொழிலாளர்களை உருவாக்குவதே நமது இலக்கு. இதன் முதற்கட்டமாக, அனைத்து மாவட்டங்களிலும் மேம்படுத்தப்பட்டத் தொழிற் பயிற்சி நிலையங்கள் (Vocational Training Centers) நிறுவப்பட்டு, அங்குச் சமகாலத் தொழில்நுட்பப் பயிற்சிகள் வழங்கப்படும். இதன்மூலம் வருங்காலத் தமிழகத்தின் அனைத்துத் துறைகளிலும் ஆற்றல்மிக்க இளைஞர்கள் உருவாவதை நாம் தமிழர் அரசு உறுதி செய்யும்.
- போதுமான பயிற்சியும், செயலறிவும், செயல்முறைகளும் இல்லாமல் இருப்பதே தொழில் நலிவடையக் காரணமாகிறது. இத்தகைய குறைகளைக் களைய, தொழில் தொடங்குவோருக்குத் தகுந்த வழிகாட்டுதல்களும், பயிற்சிகளும் அளித்து நெறிப்படுத்தவும் சிறந்த வல்லுநர்கள் குழு ஒன்று அமைக்கப்படும்.











குறைகள் தீர்க்கப்படும்

- தொழில்முனைவோர் அரசிடம் வைக்கும் கோரிக்கைகள் சரியானதாகவும், வளர்ச்சிக்கானதாகவும் இருப்பின் அது உடனடியாகச் செய்து கொடுக்கப்படும். அவர்களுக்கு அரசின் எந்த மட்டத்திலும் தடையோ தொய்வோ இருக்காது. குறைகள் உடனுக்குடன் தீர்க்கப்படும்.

காலத்தாழ்வு இருக்காது

- தொழில் துறையில், அனைத்தும் வெளிப்படையானதாக மாற்றி அமைக்கப்படும். தொழில் முனைவோர்களின் கோரிக்கை மற்றும் வேண்டுகோள் விண்ணப்பம் அல்லது முறையீடுகள் எந்த நிலையில் இருக்கிறது என கணினியிலே அறிந்து கொள்ளுமாறு நடைமுறைகள் கொண்டு வரப்படும். காலத்தாழ்வுக்கான சரியான காரணத்தை அந்த அதிகாரி அளிக்க வேண்டும். தவறினால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். தொழில்துறை சார்ந்த கோரிக்கைகள் அனைத்தும் ஒரு கிழமைக்குள் (வாரத்திற்குள்) முடிக்கப்படும்.

கடும் நடவடிக்கை

- தொழில் வளர்ச்சிக்கு உதவ முன்நிற்கும் அதே நேரத்தில், தோல் மற்றும் வேதிப்பொருள்கள் உள்ளிட்ட எந்தத் தொழிற்சாலைகள் கேடு விளைவிக்கும் கழிவுகளை வெளியேற்றி சுற்றுச்சூழலை மாசுபடுத்தினாலும் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். தொழிற்சாலைக் கழிவுகள் மண் வளத்தையும், நீர் வளத்தையும் பாதிக்காத அளவிற்கு மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

உள்ளூர்த் தொழில்முனைவோருக்கான முன்னுரிமை

- அயல்நாட்டு முதலீடுகளைவிட, உள்ளூர் மக்களின் தொழில் ஆர்வத்தை ஊக்குவிப்பதற்கும், புதிய தொழில்முனைவோரை உருவாக்குவதற்கும் 'நாம் தமிழர் அரசு' முன்னுரிமை அளிக்கும். தற்போது செயல்பாட்டில் உள்ள எல்காட் (ELCOT), டிட்கோ (TIDCO), சிப்காட் (SIPCOT) போன்ற அரசுத் தொழில் நிறுவனங்களில் நிலவும் முறைகேடுகளைக் களைந்து, அவை புதிய தொழில்நுட்பம் சார்ந்த தொழில்முனைவோரை உருவாக்குவதற்கான தளங்களாக மாற்றியமைக்கப்படும்.

புதிய கண்டுபிடிப்புகள்

- வேளாண் தொழில், மின் உருவாக்கம், கணினியியல், இயந்திரவியல் என்று பல பிரிவுகளிலும் புதிய புதிய கண்டுபிடிப்பாளர்கள் உரிய இசைவு இல்லாமல் இதுகாறும் ஆண்ட ஆட்சியாளர்களால் புறக்கணிக்கப்பட்டு இருக்கின்றனர். புதிய கண்டுபிடிப்பை வெற்றிகரமாக ஆக்கியவர்களுக்கான வாய்ப்பும் சரிவர அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

- நாம் தமிழர் ஆட்சியில் இளம் அறிவியலாளர்களுக்கும், புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கும் தனிப்பிரிவு ஒன்று தொடங்கப்படும். அந்தப் பிரிவு, புதிய கண்டுபிடிப்பாளர்களின் முயற்சிக்கு ஊக்கமளித்து உடனுக்குடனான உதவிகளைச் செய்யும். வெற்றியோடு வெளிவரும் புதிய கண்டுபிடிப்புகளைக்



முன் மாதிரி



மரப்பெட்டிகள் உருவாக்கும் தொழிற்சாலை

ஒருவரால் தொழில் தொடங்க இயலாது என்றால் பல முதலாளிகளைக் கூட்டாகச் சேர்த்து முதலீடு செய்ய வழிவகை செய்யப்படும். மேலும் பணம் தேவை என்றால் அரசே பெரும் தொகையைக் கொடுத்துத் தன்னையும் ஒரு பங்குதாரராக இணைத்துக் கொண்டு, தொழிற்சாலையை வெற்றியோடு நடத்த உதவியாக நிற்கும்.



தக்காளிச்சாறு உருவாக்கும் தொழிற்சாலை



கணினி நிறுவனம்



அரசு தொழில் நுட்பப் பூங்கா

கொண்டு தமிழகத்திலேயே தொழிற்சாலைகள் அமைக்க கடன் மற்றும் அனைத்து உதவிகளும் அளிக்கும். இந்த முயற்சி தமிழகத்தின் வளர்ச்சிக்கு முதுகெலும்பாக அமையும்.

- வெற்றிகரமாக உருவாக்கப்பட்ட புதிய மென்பொருள்களுக்குக் கடன் வசதியுடன் தொழில் தொடங்க ஊக்கமும் ஆக்கமும் அளிக்கப்படும். கடந்த கால ஆட்சியாளர்களால் இப்படியான பல வாய்ப்புகள் தமிழகத்தை விட்டு வெளியேறியிருக்கின்றன. வருங்காலங்களில் அப்படி நடக்காமல் இருக்க மென் பொருள் உருவாக்குபவர்களுக்கு வேண்டிய கடனையும், தொழில் தொடங்க ஊக்கத்தையும் நாம் தமிழர் அரசு அளிக்கும்.

ஆற்றல் சார்ந்த தொழில்கள்

- தமிழ்நாட்டில் சூரிய ஒளி மின்சாரம், காற்றாலை, உயிர் எரிகாற்று (Biogas) போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றல் சார்ந்த தொழில்கள் ஊக்குவிக்கப்படும். மின் உருவாக்கம் மட்டுமல்லாமல், சூரிய ஒளித் தகடு உருவாக்கம், பேணுதல், சேமிப்புத் தொழில்நுட்பம் போன்ற துணைத் தொழில்களும் வளர்த்தெடுக்கப்பட்டு ஊரக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்படும்.

நீர் மேலாண்மைத் தொழில்கள்

- மழைநீர்ச் சேகரிப்பு அமைப்புகள், கழிவுநீர்த் தூய்மையாக்கம், நீர் மறுசுழற்சி தொழில்நுட்பம் போன்ற நீர் மேலாண்மை சார்ந்த தொழில்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இத்தொழில்கள் குடிநீர்ப் பாதுகாப்பையும், வேளாண் நீர்வளத்தையும் உறுதி செய்வதோடு சுற்றுச்சூழலுக்கும் தீங்கு விளைவிக்காத தொழில்களாக இருக்கும்.

இயற்கை வேளாண் மதிப்புக் கூட்டல் தொழில்கள்

- இயற்கை வேளாண் விளைச்சலுக்கான பதப்படுத்துதல், சேமிப்பு, பொதி கட்டுதல், சந்தைப்படுத்தல் போன்ற மதிப்புக் கூட்டல் தொழில்கள் ஊக்குவிக்கப்படும். இதன்மூலம் வேளாண் குடிகளின் வருமானம் உயர்வதுடன், வேதியல் மாசுபாடும் கட்டுப்படுத்தப்படும்.

மரபுசார் கைவினை மற்றும் ஊரகத் தொழில்கள்

- கைத்தறி, பானை, மரவேலை, மாளைக் (உலோக) கைவினை, பனை மற்றும் மூங்கில் பொருள்கள் போன்ற மரபுத் தொழில்கள் மேம்படுத்தப்பட்ட வடிவமைப்புடன் வளர்த்தெடுக்கப்படும். இத்தொழில்கள் உள்ளூர் பொருளாதாரத்தை வலுப்படுத்தும்.

மறுசுழற்சி மற்றும் கழிவு மேலாண்மைத் தொழில்கள்

- குழைமம், மின்னணுக் கழிவுகள், கட்டுமானக் கழிவுகள் போன்றவற்றை மறுசுழற்சி செய்யும் தொழில்கள் ஊக்குவிக்கப்படும். இதன்மூலம் புதிய மூலப்பொருள்களின் தேவை குறையும்.





நெகிழிக்கு மாற்றாகப் பொருள்கள் உருவாக்கம்



தோல் பொருள் உருவாக்கம்



நாற்று நடும் இயந்திரம்



கண்ணாடி உருவாக்கும் தொழிற்சாலை



பாசி வளர்த்தல்



காகிதம் உருவாக்கும் தொழிற்சாலை



ஆயத்த ஆடைகள் உருவாக்கம்

துகள்மண் (Silica) மற்றும் கண்ணாடித் தொழில்நுட்பம்

- மணலிலிருந்து பிரித்தெடுக்கப்படும் துகள்மண் (Silica), கண்ணாடி உருவாக்கம் முதல் மேம்பட்ட மின்னணுவியல் கருவிகள் உருவாக்கம் வரை பல்வேறு துறைகளில் முதன்மைப் பங்கு வகிக்கிறது. இதற்கான மூலப்பொருள்களும் தட்பவெப்பச் சூழலும் தமிழகத்தில் அதிகமாக உள்ளன. இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி, உலகத் தரம் வாய்ந்த கண்ணாடி மற்றும் துகள் மண் சார்ந்த தொழிற்சாலைகளை நிறுவி, தமிழகத்தைக் கண்ணாடி உருவாக்கத்தில் ஒரு முன்னணி மாநிலமாக நாம் தமிழர் அரசு மாற்றும்.

மூலிகை மற்றும் மரபுசார் மருத்துவத் தொழில்கள்

- தமிழ்நாட்டின் மூலிகை வளங்களை அடிப்படையாகக் கொண்டு, சித்த மருத்துவம், மரபுசார் மருத்துவப் பொருள்கள் உருவாக்கும் தொழில்கள் வளர்க்கப்படும். இது உள்ளூர் வளங்களைப் பாதுகாத்து, உலகளாவிய சந்தைக்கும் வாய்ப்புகளை உருவாக்கும்.

உயிரித் தொழில்நுட்பம் (Bio technology)

- உயிரினங்கள், அவற்றின் செல்கள் மற்றும் அவற்றிலிருந்து பெறப்படும் உயிரியல் மூலக்கூறுகளைக் கொண்டு மாந்தகுலத்திற்குப் பயன்படும் பொருள்களை உருவாக்குவதே உயிரித் தொழில்நுட்பம் ஆகும். இத்துறையில் மேம்பட்ட ஆராய்ச்சிகள் மூலம் தமிழ் மரபுவழி மருத்துவ முறைகளை மேம்படுத்தவும், அவற்றின் செயல்திறனை அறிவியல் அடிப்படையில் மெய்ப்பிக்கவும் முன்னுரிமை அளிக்கப்படும்.

நிலையான சுற்றுலா சார்ந்த தொழில்கள்

- ஊரகச் சுற்றுலா, இயற்கைச் சுற்றுலா, பண்பாட்டுச் சுற்றுலாப் போன்ற தொழில்கள் ஊக்குவிக்கப்படும். இது உள்ளூர் மக்களுக்கு நேரடி வருமானம் அளிக்கும் தொழில்களாக இருக்கும்.

நெகிழிக்கு மாற்று

- சுற்றுச்சூழலைச் சீரழிக்கும் நெகிழிப் பொருட்களுக்கு (Plastics) நிலையான தடை விதிக்கப்பட்டு, அதற்கு மாற்றாகப் பனை, பாக்கு மற்றும் தென்னை மட்டையினாலான இயற்கை சார்ந்த பொருள்கள் உருவாக்க ஊக்குவிக்கப்படும். இதற்கான மேம்படுத்தப்பட்ட தொழிற்சாலைகள் மாநிலம் முழுவதும் நிறுவப்படும்.

புதிய தொழில்நுட்பப் பூங்காக்கள்

- திருவண்ணாமலை, கோவை, சேலம், திருச்சி, மதுரை, நாகர்கோயில் ஆகிய நகரங்களில் புதிய தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கப்படும். புதிய தகவல்













தொழில்நுட்பப் பூங்காக்களில் உள்ளூர் நிறுவனங்கள் பங்கு பெற வேண்டிய உதவிகள் அனைத்தையும் நாம் தமிழர் அரசு செயல்படுத்தும். இத்துறை சார்ந்த அனைத்து வேலைகளுக்கும் சென்னையையே சார்ந்திருக்க வேண்டிய தேவை இருக்காது. அந்தந்தப் பகுதியிலேயே வேலைகளைச் செய்ய புதிய தொழிற்பூங்காக்கள் அமைக்கப்படும்.

நெசவுத்துறை அரசுப்பணி

- நெசவு என்பது தொழில் அல்ல. நமது பண்பாடு. ஏறத்தாழ 5000 ஆண்டுகள் தொன்மை வாய்ந்த கலை, இன்று நலிவடைந்திருக்கிறது. நெசவைப் புதிய தொழில்நுட்பத்துடன் உலக நாடுகளோடு போட்டியிடக்கூடிய அளவிற்கு வளர்த்தெடுக்கும் நடவடிக்கைகளை நாம் தமிழர் அரசு முன்னெடுக்கும். புதிய தரத்தில் புதுமைகளோடு நெசவுக்கலை மாற்றப்படும். இதற்கான ஆய்வுகள் புதிய வடிவமைப்பு வல்லுநர்களைக் கொண்டு மேற்கொள்ளப்படும். கைத்தறி நெசவில் புதிய புதிய ஆடைகள் வரும்போது இளைஞர்களிடையே வரவேற்பைப் பெரும்.
- திருப்பூர், ஈரோடு, கோவை ஆகிய பகுதிகளில் நெசவுத் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கப்படும். அங்கு மருத்துவத்திற்குப் பயன்படுத்தப்படும் உறைகள், துண்டுகள், பஞ்சு, பசுமை வலைகள், பாதுகாப்பு உடைகள் ஆகியவைகள் உருவாக்கப்படும். அவர்களுக்கு வேண்டிய தொழில்நுட்ப உதவிகளை நாம் தமிழர் அரசு வழங்கும். நெசவு அரசுப்பணியாக மாற்றப்பட்டு கைத்தறித் துறை தொழிலாளர்கள் அரசு ஊழியர்களாக ஏற்கப்படுவர்கள்.

தமிழ்த்தேசிய முதலாளிகள்

- வெளிநாட்டு, வெளிமாநில பெருமுதலாளிகளுக்குப் போட்டியாக, தமிழ்நாட்டுத் தொழில் முனைவோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். ஒருவரால் தொழில் தொடங்க இயலாது என்றால் பல தொழில்முனைவோர்கள் கூட்டாகச் சேர்ந்து முதலீடு செய்ய வழிவகை செய்யப்படும்.
- மேலும் நாம் தமிழர் அரசே குறைந்த வட்டிக்குக் கடன் கொடுத்துத் தன்னையும் ஒரு பங்குதாரராக இணைத்துக்கொண்டு, தொழிற்சாலையை வெற்றிகரமாக நடத்தத் துணை நிற்கும்.

வேலூரில் புதிய முயற்சி

- வேலூர் மாவட்டம் ஆம்பூரில் உள்ள பெரும் அளவிலான தோல் மற்றும் காலணித் தொழிற்கூடங்கள் மேம்படுத்தப்படும். அங்கு உள்ளூர் முதலாளிகள், பிற பன்னாட்டு நிறுவனங்களுக்கு உருவாக்குவதை விடுத்து, தங்கள் பெயரிலேயே சொந்தமாக உருவாக்கிப் பன்னாட்டு நிறுவனங்களோடு போட்டியிட ஊக்கப்படுத்தப்படுவார்கள்.



உள்ளூர்த் தொழில்கள்

- இதுவரையிலான ஆட்சியாளர்கள் அயல்நாட்டு முதலீட்டை வரவேற்பதில் எடுத்துக் கொண்ட அக்கறையை, உள்ளூர் தொழில்முனைவோரை உருவாக்குவதில் எடுத்துக் கொள்ளவில்லை. ELCOT, TIDCO, SIPCOT போன்ற நிறுவனங்களில் ஊழல் பெருகியிருக்கிறது. நாம் தமிழர் அரசு இந்த நிலையை மாற்றி அமைக்கும்.
- அரசு முதலீட்டுத் தரப்பில் அதிகாரிகள் குழு ஒன்று வழிகாட்டுதல்களை வழங்கும். தொழில் நலிவடைந்துவிட்டது, இழப்பு என்று காட்டி, ஓடிவிட முடியாது. காரணம் அதிகாரிகளும் அதற்குப் பொறுப்பாவார்கள். அதிகாரிகள் மீதும் நடவடிக்கைகள் எடுக்கும் வகையில் நடைமுறைகள் மாற்றப்படும். அதனால் தொழில் வளர்ச்சி நலிவடையாது.

இளநீர், பதநீர் ஏற்றுமதி

- உடல்நலத்திற்குக் கேடான அனைத்து வகை குளிர்பருகங்களும் தடை செய்யப்படும். அதற்கு மாற்றாக இளநீர், பழச்சாறு, பதநீர், நுங்கு போன்ற பருகங்களை ஏற்றுமதி செய்தவற்கானத் தொழிற்சாலைகள் அமைக்கப்படும்.

உணவு பதப்படுத்தல் / உருவாக்குதல்

- பெருநகரங்களை ஒட்டி வேளாண் உணவு பதப்படுத்தும் நிலையங்கள் மற்றும் பயிற்சி மையங்கள் அமைக்கப்படும். இதன்மூலம் இயற்கை முறையில் விளைவிக்கப்பட்ட வேளாண் பொருள்களின் ஏற்றுமதியை முதன்மைத் தொழிலாக நாம் தமிழர் அரசு மாற்றியமைக்கும்.

கட்டுமானத் தொழில் வளர்ச்சி

- தமிழகக் கட்டுமானத் தொழிலில் சற்றொப்ப ஐம்பது இலக்கம் பேர் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஈடுபட்டிருக்கிறார்கள். கட்டுநர்கள், பொறியாளர்கள், கட்டட வடிவமைப்பாளர்கள், மேலாளர்கள், அதிகாரிகள், ஊழியர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், இரும்புக் கம்பி, பைஞ்சுதை, கட்டுமானக் கற்கள், குழாய் உள்ளிட்ட 120க்கும் மேற்பட்ட பொருள்களின் உருவாக்குபவர்கள், விற்பனையாளர்கள் உட்பட பல இலக்கம் பேர் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தத் தொழிலை வளர்த்தெடுக்க கையூட்டு, ஊழல் தடையாக இருந்து வருகிறது. எனவே, கட்டுமானத் தொழில் வளர்ச்சி மற்றும் தொழிலாளர் நலனுக்கானக் கீழ்க்கண்ட புதிய திட்டங்களை நாம் தமிழர் அரசு அறிவிக்கின்றது.

உடனடி அனுமதி

- கட்டுநர்கள் செயல்திட்ட விண்ணப்பங்களுக்கு பதினைந்து நாள்களுக்குள் அனுமதி வழங்கப்படும். விண்ணப்ப முறை அனைத்தும் இணைய வழியில்

கண்காணிக்கப்படும். காலத்தாழ்வு ஏற்பட்டால் அதற்கானக் காரணம் என்னவென்பதை அதிகாரிகள் தெரிவிக்க வேண்டும். அதிக அளவாக ஒரு மாதத்திற்குள் கட்டுநர்களுக்கான அனுமதியை வழங்கியாக வேண்டும்.

கடுமையான நடவடிக்கை

- சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் என்பது கையூட்டுப் பெறும் நிறுவனமாக மாறி வருகிறது. கட்டுநர்கள் கட்டட வேலையைத் தொடங்கியதில் இருந்து ஒவ்வொரு கட்டமாகச் சதுர அடிக்கு இவ்வளவு தொகை என வரையறுத்துக் கையூட்டுப் பெற்று வருவதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. நாம் தமிழர் அரசு இதனை முழுவதுமாகத் தடுக்கும். சரியான பணிகள் முடிந்த கட்டடத்திற்கு, 'பணி நிறைவுச்சான்று', உடனடியாக வழங்கப்பட வேண்டும். காலந்தாழ்த்தும் அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

- தமிழகத்தில் உள்ள பைஞ்சுதை உருவாக்க நிறுவனங்கள் கட்டுப்படுத்தப்படும். பைஞ்சுதைத் தொழில் நிறுவனங்கள், அரசின் நிலக்கரிச் சாம்பலை விலை யில்லாமல் பெற்றுக்கொள்கிறார்கள். சுண்ணாம்புக் கற்களை மிகக்குறைந்த விலையில் வெட்டி எடுத்துக் கொள்கிறார்கள். 50 அயிரச்சீரெடை (kg) பைஞ்சுதை மூட்டைக்கான ஆக்கச் செலவு, கட்டுச் செலவு, போக்குவரத்துச் செலவு, வரிகள், கட்டணம் மற்றும் 20 விழுக்காடு ஈட்டம் (இலாபம்) உட்பட ஒரு மூட்டை பைஞ்சுதையின் விலை ஏறக்குறைய 180 உருபாய் தான். ஆனால் தனியார் நிறுவனங்கள் 450 உருபாய் என்று விற்றுக்கொண்டிருக்கின்றன. இது தடுக்கப்படும். அதிகளவு விலை 200 உருபாய் என வரையறுக்கப்படும்.

மாற்றுக் கட்டுமானப் பொருள்கள்

- தொழிற்சாலைக் கழிவுகள், அனல்மின் நிலைய நிலக்கரிச் சாம்பல் இவற்றைக் கொண்டு உருவாக்கப்படும் கட்டுமானப் பொருள்கள் (Geopolymers), மறுசுழற்சி செய்யப்பட்ட கட்டுமானப் பொருள்கள், மாற்றுக் கட்டுமானப் பொருள்களாக பயன்படுத்தப்படும்.

தனிப்பயிற்சி

- தமிழகத்தைச் சேர்ந்த கட்டுமானத் தொழிலாளர்களுக்கு உலகத்தரம் வாய்ந்த பயிற்சிகள் அளிக்கப்படும். அதற்கேற்ப சிறப்புப் பயிற்சி மையங்கள் ஏற்படுத்தப்பட்டு, ஆண்டிற்குச் சற்றொப்ப 10,000 இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்கப்படும். பிற மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பு உள்ள இடங்களைத் தேர்வு செய்து அரசே இவர்களை அங்கு அனுப்பி வைக்கும்.

- இதுபோன்ற பயிற்சிகளைச் சில தனியார் நிறுவனங்கள் முறைப்படுத்தப்படாமல் செய்து வருகிறார்கள். அதிலும் பல முறைகேடுகள் நடந்துள்ளது. ஆதலால், இதற்கான தனிப் பயிற்சி மையத்தை அரசே பொறுப்பேற்று நடத்தும்.







தகவல் தொழில்நுட்பத்துறை ஊழியர்கள் நலன்

- இந்தியாவின் தகவல் தொழில்நுட்பத் துறை நாட்டின் மொத்த உள்நாட்டு ஆக்கத்தில் 7.7 விழுக்காடு பங்களிப்புச் செய்துள்ளது, மேலும் 2025ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு ஆக்கத்தில் 10 விழுக்காடு பங்களிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் துறையின் ஆண்டு வருமானம் ஏறத்தாழ 9 லட்சம் கோடிகள் ஆகும். இந்தத் துறையில் நாட்டில் ஏறத்தாழ 45 இலக்கம் ஊழியர்கள் உள்ளனர்.
- தகவல் தொழில்நுட்பம் (IT) மற்றும் வணிக செயல்முறை வெளிப்பணியாக்கம் (BPO) சேவைகளில் இந்தியாவின் இரண்டாவது பெரிய ஏற்றுமதியாளராக தமிழ்நாடு விளங்குகிறது. தமிழகத்தின் தகவல் தொழில்நுட்பத் துறை ஏறத்தாழ 8 இலக்கம் ஊழியர்களைக் கொண்டுள்ளது, அவற்றில் 30 விழுக்காட்டிற்கும் மேலானோர் பெண்கள். மேலும் ஒவ்வொர் ஆண்டும் இத்துறை 8 விழுக்காடு வளர்ச்சி அடைகிறது. இத்துறை மாநிலத்தின் பொருளாதாரத்தில் முதன்மைப் பங்கு வகிக்கிறது, அதாவது ஏறத்தாழ ஒன்றரை இலக்கம் கோடி வரை ஆண்டு வருமானம் ஈட்டுகிறது.
- எவ்வாறாயினும், இந்தத் துறையின் ஊழியர்கள் பெரும்பாலும் உடல்நலச் சிக்கல்கள், வேலைப் பாதுகாப்பின்மை, இக்கட்டான நேரங்களில் அலுவலகத்திற்குச் சென்று வரும்போது பாதுகாப்புச் சிக்கல்கள் போன்றவற்றை எதிர்கொள்கின்றனர். இது பெண் ஊழியர்கள் அதிக எண்ணிக்கையில் உள்ள துறையாகும். எனவே இந்தத் துறையில் உள்ள தொழிலாளர்கள் நலத்துடனும், சரியான வசதிகளுடனும் பாதுகாப்பாக பணிக்குச் சென்று வருகின்றார்கள் என்பதை உறுதி செய்வது இன்றியமையாதது.

தொழிற்சங்கம் மற்றும் முத்தரப்புக் குழு

- ஒவ்வொரு தொழிலாளரும் அந்தப் பகுதியைச் சேர்ந்த தகவல் தொழில்நுட்பத் தொழிற்சங்கத்தில் உறுப்பினராதலும், ஐம்பதிற்கும் அதிகமான தொழிலாளர்களைக் கொண்ட நிறுவனங்களில் தொழிற்சங்கம் அமைப்பதும் கட்டாயமாக்கப்படும்.
- தொழிலாளர் நலன் சார்ந்த திட்டங்களைச் செயல்படுத்தவும் தொழிலாளர்களால் முன்வைக்கப்படும் குறைகளைச் சரி செய்யவும் நிறுவன நிகராளர்கள், தொழிற்சங்க நிகராளர்கள் மற்றும் தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளைக் கொண்டு ஒவ்வொரு நிறுவனம் / பகுதிக்கும் ஒரு முத்தரப்புக்குழு அமைக்கப்படும். அதேபோல் பெண்கள் பாதுகாப்பு மற்றும் பெண் தொழிலாளர்கள் நலனுக்காக தனியான ஒரு முத்தரப்புக்குழு உருவாக்கப்படும்.
- தொழிலாளர் நலத்துறை சார்பில் தொழிலாளர் நலச்சட்டங்கள், தொழிலாளர் நலச் செயல்பாடுகள் குறித்த பிற தகவல்கள் மற்றும் தொழிலாளர்கள் தங்கள் குறைகளை நேரடியாக தெரிவிக்கும் வகையிலான படிவங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய இணையத்தளம் செயல்படுத்தப்படும்.



பணிப் பாதுகாப்பு மற்றும் ஊதியம்

- அனைத்துத் தொழில்நுட்ப வேலைகளுக்கும் குறைந்தளவு ஊதியமாக ஒரு மணி நேரத்திற்கு 120 உறுதி செய்யப்படும்.
- ஒவ்வொரு பொருளாண்டும் (நிதியாண்டும்) தொழிலாளர் நலத்துறை பணவீக்கத்தை மதிப்பிட்டு குறைந்தளவு ஊதிய உயர்வு விழுக்காட்டை உறுதி செய்யும். நிறுவனங்கள் தொழிலாளர்களின் மதிப்பீட்டிற்கு ஏற்ப ஊதிய உயர்வு வழங்கும்போது அந்த குறைந்தளவு விழுக்காட்டைப் பின்பற்ற வேண்டும்.
- ஒரு நிறுவனம் தங்கள் ஈட்ட நட்டங்களை (இலாப நட்டங்களை) கருத்தில் கொண்டு சில தொழிலாளர்களை பணியிலிருந்து விடுவிக்க நேரிடும். அப்படியான சூழல்களில் தற்போதைய சட்டப்படி (The Industrial Disputes Act 1947) ஒரு மாத காலம் முன்னதாகத் தொழிலாளருக்கு தெரியப்படுத்தி அவரது பணி காலத்தின்படி ஆண்டுக்கு 15 நாள்கள் சம்பளம் என கணக்கிட்டு இழப்பீடாக தரப்படவேண்டும்.

மாற்றம்

- வேலை நீக்கம் செய்ய வேண்டுமென்றால் அந்தத் தொழிலாளர்களுக்கும் தொழிற்சங்கத்துடன் அமைக்கப்பட்ட முத்தரப்புக் குழுவிற்கும் தெரியப்படுத்திவிட்டு அவர்களுக்கு 3 மாதக் காலக்கெடுவும் மூன்று மாத ஊதியமும் இழப்பீடாக வழங்க வேண்டும். அந்தத் தொழிலாளர் 3 ஆண்டிற்கும் அதிகமாக அந்த நிறுவனத்தில் பணியாற்றியிருந்தால் ஒவ்வோர் ஆண்டிற்கும் ஒரு மாத ஊதியம் எனக் கணக்கிட்டு அதற்கான சம்பளத்தை இழப்பீடாக வழங்க வேண்டும்.

வேலை நேரம்

- தொழிற்சாலைகள் சட்டம் 1948 (Factor குறுமாத்திரி (mm)s Act 1948)இன்படி ஒரு நாளைக்கான வேலை நேரமாக 9 மணி நேரமும், ஒரு கிழமைக்கான (வாரத்திற்கான) வேலை நேரமாக 48 மணி நேரமுமே உள்ளது. தொழிலாளர்களின் வேலை நேர விதிமுறைகளில் 12 மணி நேரம் வேலையில் அமர்த்திக் கொள்ளலாம் என்று புதிய சட்ட வரைவு தற்போது கலந்துரையாடலில் உள்ளது.
- ஒரு பணியாளரை ஒரு நாளைக்கு 9 மணி நேரத்துக்கும் மிகாமல் கிழமைக்கு (வாரத்திற்கு) 48 மணி நேரத்திற்கு மிகாமல் பணி செய்யக் கட்டாயப்படுத்தக் கூடாது. பணியாளர் கூடுதல் நேர வேலைக்கு ஒப்புக்கொண்டால் அதற்கான ஊதியத்தை முத்தரப்புக் குழு உறுதி செய்யும்.
- இரவு 8 மணி முதல் காலை 9 மணி வரையிலான நேரத்திலும் விடுமுறை நாள்களிலும் வேலை செய்பவர்களுக்குப் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து வசதியை நிறுவனம் உறுதி செய்ய வேண்டும்.

விடுமுறைகள்

- தற்போது தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் 1947 (The Tamil Nadu Shops and Establishments Act) தற்செயல் விடுப்பு (casual leave), பிணி விடுப்பு

(sick leave) - சிறப்பு விடுப்பு (privilege leave) ஆகிய வகைகளில் ஆண்டுக்கு 12 நாள்கள் விடுமுறை வழங்குகிறது. அதனோடு, பெண் தொழிலாளர்கள் அனைவருக்கும் ஆண்டிற்கு 12 நாள்கள் மாதவிடாய் விடுப்பு வழங்கப்படும்.

- மேற்கண்ட விடுப்பில் அடங்காத அனைத்து தொழிலாளர்களுக்கும் ஒவ்வோர் ஆண்டும் 2 கிழமை (வாரம்) ஆண்டு விடுமுறை வழங்கப்படும்.

பெற்றோர் நலன்

- குழந்தைகளுக்கு முதல் சில ஆண்டுகள் அவர்களின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. குழந்தைகள் உள்ள குடும்பத்தில் பெற்றோர் இருவரும் வேலைக்குச் செல்லும் நிலை அதிகரித்து வருகிறது. அவ்வாறான பெற்றோர்கள் தங்கள் குழந்தையை பேணி வளர்ப்பதில் முதலீடு மிகக்குறைந்த நேரமே செலவிட முடிகிறது. இந்தச் சூழலில் பெரும்பாலும் பெற்றோருடன் செலவழிக்கும் நேரத்தை குழந்தைகள் இழக்கின்றன அல்லது குழந்தைகளுக்காக இருவரில் ஒரு பெற்றோர் வேலைக்குச் செல்வதை நிறுத்திவிடுகிறார்கள். அதுவும் 99 விழுக்காடு பெண்களே என்பது குறிப்பிடத்தக்கது. எனவே பணியிட மற்றும் வீட்டின் தேவைகளைச் சமநிலைப்படுத்த குடும்பங்களின் திறனை அதிகரிப்பதற்குப் பெற்றோர்களுக்கான விடுப்பு மற்றும் வீட்டில் இருந்து வேலை செய்யும் (WFH) விருப்பங்கள் முதன்மையாகின்றது.

- தற்போது, மகப்பேறு நலன்கள் திருத்தச் சட்டம் 2017 (Maternity Benift Amendment Act 2017) பேறுகாலப் பெண் தொழிலாளர்களுக்கு 6 மாதம் மகப்பேறு விடுமுறை அளிக்கிறது. அதே சமயம் ஆண்களுக்கு அவர்களது மனைவி மகப்பேற்றின்போது அப்படி எந்தவித விடுமுறையும் கட்டாயமாக்கப்படவில்லை.

- பேறுகாலப் பெண்களுக்கு ஓர் ஆண்டும், அப்பெண்ணின் கணவருக்கு 3 மாதம் விடுப்பும் கட்டாயமாக்கப்படும்.

- மகப்பேறு விடுப்பு முடிந்த பின்னர், பெற்றோர் இருவருக்கும் அவர்கள் குழந்தை 4 அகவையை எட்டும் வரை 72 நாள்கள் விடுப்பும், 50% வேலை நாள்களில் வீட்டிலிருந்து வேலை செய்யும் வாய்ப்பும் வழங்கப்படும்.

தமிழகத் தொழிலாளர்களுக்கான முன்னுரிமை

- நிறுவனங்கள் தங்கள் தொழில்நுட்ப பணியிடங்களில் 80 விழுக்காடு தமிழகத் தொழிலாளர்களை நிரப்பிய பிறகே பிற மாநில (அ) பிற நாட்டுத் தொழிலாளர்களை சேர்க்க வேண்டும்.

- எந்த ஒரு தொழில்நுட்பத்திற்குத் தமிழகத் தொழிலாளர்கள் கிடைக்கவில்லை என்றாலும் நிறுவனங்கள் அரசுக்குத் (தொழிலாளர் நலத்துறை) தெரியப்படுத்திவிட்டு மற்றத் தொழிலாளர்களைப் பணியமர்த்திக் கொள்ளலாம். அவ்வாறு நிறுவனங்கள் தெரியப்படுத்தும் தகவல்களை உதவியாகக் கொண்டு எந்தெந்தத் தொழில்நுட்பங்களுக்குத் தேவை இருக்கிறது என்பதை அறிந்து பள்ளி கல்லூரிகளில் மாணவர்களுக்கு விருப்பப் பாடங்கள் திட்டமிடப்படும்.





ஒரு மாநிலம் சொந்தமாக வைப்பகம் தொடங்குவது நாட்டின் தொழில் வளர்ச்சிக்கானது. அந்த வகையில் இந்தியக் காப்பு வைப்பகத்தின் (Indian Reserve Bank) சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நாம் தமிழர் அரசு புதிய வைப்பகத்தைத் தொடங்கும்.

தமிழ்த்தேசிய வைப்பகம்



நோக்கம்

- இனத்தின் பெயராலும், மொழியின் பெயராலும் தனித்தன்மையைக் கொண்டிருக்கிற தமிழ்நாட்டில் உயர்ந்த நோக்கத்தோடு, தமிழ்த்தேசிய வைப்பகத்தை நாம் தமிழர் அரசு தொடங்கும். ஓர் இனம் தன் அரசியல், அதிகாரம், பொருளாதாரம் அனைத்தையும் தன்னகத்தே கொண்டிருப்பது பெருமைக்குரிய ஒன்று. இத்தகைய தற்சார்பைச் செயல்படுத்துவதே தமிழ்த்தேசிய வைப்பகத்தின் அடிப்படை நோக்கம்.

தன்னிறைவு

- இந்தியக் காப்பு வைப்பகத்தின் (Indian Reserve Bank) சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு இயங்கும் 'Tamilnad Mercantile Bank'ஐப் போன்றதொரு வைப்பகம் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்கள் மற்றும் இந்திய ஒன்றியத்தின் அனைத்து மாநிலங்களிலும் தொடங்கப்படும். மேலும் உலக நாடுகள் அனைத்திலும் அதன் கிளைகள் தொடங்கப்படும். அனைத்திலும் தன்னிறைவு பெற்ற மாநிலமாக இருக்கும் தமிழ்நாடு வைப்பகத்திலும் தன்னிறைவு பெற்றிருக்கும்.

கந்து வட்டி ஒழிப்பு

- தமிழ்த்தேசிய வைப்பகத்தின் முதன்மை நோக்கம் தொழில் முனைவோருக்கு உதவியாய் நிற்பதும், தனியாரிடம் அதிக வட்டிக்குக் கடன் வாங்கி நலிந்து போவதைத் தடுப்பதும்தான். அவர்கள் அனைவரையும் அதிலிருந்து மீட்டெடுத்து எளிதாகத் தொழிலில் ஈடுபடுத்தும் நடவடிக்கையை நாம் தமிழர் அரசு மேற்கொள்ளும்.

குறைந்த வட்டி

- வேளாண் பெருங்குடிகள், மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகள், கைம்பெண்கள், மீனவர்கள், பெண்கள் ஆகியோருக்கு மட்டும் தொழில் தொடங்க குறைந்த வட்டியில் கடன் வழங்கப்படும். நிலமும் வளமும் சார்ந்த தொழில், சிறுகுறு / கைவினைப் பொருள் உருவாக்கத் தொழில், குறிப்பாக வேளாண் தொழிலுக்கு முன்னுரிமை வழங்கப்படும். எந்த வகையிலும் தொழில் நலிந்து போகாமல் இருக்க அவ்வப்போது தகுந்த அறிவுரைகளும், வழிகாட்டுதல்களும் தகுந்த அதிகாரிகளால் வழங்கப்படும்.




250
நாம் தமிழர் ஆட்சி 2021 செயற்பாட்டு வரைவு

மாற்று மின் பெருக்கம்

நாம் தமிழர்
அரசு இயற்கையை
பாதிக்காத புதிய மாற்று மின்சார
உருவாக்க முறைகளுக்கு முன்னுரிமை
அளிக்கும். ஒளிமயமான எதிர்காலத்திற்குத்
தடையற்ற மின்சாரம் தேவை.
அந்த வகையில் நாட்டின்
வளர்ச்சிக்கு முதுகெலும்பாய் இருக்கும்
மின் உருவாக்கத்தில் தன்னிறைவைப்
பெறும் நோக்கத்தோடு புதிய
கொள்கையை நாம் தமிழர்
அரசு செயல்படுத்தும்.

தமிழகத்தின் மின் தேவை

- தமிழ்நாட்டில் தற்போதைய மொத்த மின் தேவை 13,500 பத்திலக்க மின்திறனலகு (மெகாவாட்)
- நிலையில் தேவை தடையின்றி இயங்க நாளொன்றுக்கு சற்றொப்ப 15,000 - 16,000 பத்திலக்க மின்திறனலகு (மெகாவாட்) மின்சாரம் தேவைப்படுகிறது; கோடைக் காலங்களில் இந்தத் தேவை 20,000 பத்திலக்க மின்திறனலகை (மெகாவாட்) தாண்டி உயர்கிறது.
- இதில் மாநில அரசின் சொந்த மின் உருவாக்கம் (வெப்ப, நீர்மின், சூரிய, காற்றாலை உள்ளிட்டவை) மூலம் சுமார் 9,000 - 10,000 பத்திலக்க மின்திறனலகு (மெகாவாட்) மின்சாரம் கிடைக்கிறது. ஒன்றிய அரசின் மின் திட்டங்கள் மற்றும் ஒன்றிய மின் நிலையங்களில் இருந்து 5,000 - 6,000 பத்திலக்க மின்திறனலகு (மெகாவாட்) அளவில் மீதமுள்ள தேவைக்கு மின்சாரம் வாங்கப்படுகிறது.




தனியாரிடம் வாங்குவதில் முறைகேடு


- பற்றாகுறையைப் போக்க தனியாரிடமிருந்தும், வெளி மாநிலங்களில் இருந்தும் 5,700 பத்திலக்க மின்திறனலகு (மெகாவாட்) மின்சாரம் வாங்கப்படுகிறது. இந்த மின்சாரத்தை வாங்கினாலும், வாங்காமல் விட்டாலும் தமிழ்நாடு தனியார் நிறுவனங்களுக்கு 3500 கோடியைக் கட்டாயம் செலுத்தியாக வேண்டும் என்ற ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது.

- இதில் தனியாரிடம் இருந்து ஓர் அலகு மின்சாரம் 6.50 (ஆறு உருவாய் ஐம்பது காசு)க்கு வாங்குகிறார்கள். வெளி மாநிலத்தில் இருந்து ஓர் அலகு 3.50 (மூன்று உருவாய் ஐம்பது காசு)க்கும் வாங்கப்படுகிறது.

- ஒரே அளவுள்ள மின்சாரம் வாங்குவதில் 3.10 (மூன்று உருவாய் பத்து காசு) வேறுபாடு. இதனால் பத்துகோடி உருவாய் அளவிற்கு ஊழல் முறைகேடு குறித்தக் குற்றசாட்டும் எழுந்துள்ளது.











- அதைப்போலவே மிகப்பெரிய நிறுவனங்களும், தமிழகத்திற்குச் சூரிய ஒளி மின்சாரம் உருவாக்கிக் கொடுப்பதாக ஒப்பந்தம் போட்டுக் கொண்டு பல மாவட்டங்களில் நிலங்களை வாங்கிப் கையகப்படுத்தியிருக்கிறார்கள்.

உருவாக்க முறைகள்

தமிழகத்தில் கீழ்கண்ட வகைகளில் மின் உருவாக்கம் செய்யப்பட்டு வருகிறது

- அணு உலை மின் உருவாக்கம்
- அனல் மின் உருவாக்கம்
- நீர் மின் உருவாக்கம்
- சூரியசக்தி மின் உருவாக்கம்
- காற்றாலை மின் உருவாக்கம் முறை

பாதிப்புகள்

- அணு உலை மின்சார உருவாக்கத்தை தோல்வி அடைந்த ஆக்க முறை என பெரும்பான்மை நாடுகள் மூடி வருகின்றன. அணு உலை கதிர் வீச்சுகளால் உருவாகும் சுற்றுச்சூழல் பாதிப்புகளும், அது ஏற்படுத்தும் கொடிய நோய்களும், மாந்த இறப்புகளும் கடும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்றது. எனவே நாம் தமிழர் அரசு அணு உலைகளை நிலையாக மூடுவதைக் கொள்கை முடிவாக அறிவிக்கின்றது.
- அதே போன்று அனல் மின் உருவாக்கத்தில் நிலக்கரி எரிப்பதால் கடும் சுற்றப்புறச் சூழல் பாதிப்பு ஏற்படுகிறது. அனல் மின் உருவாக்க நிலையங்களைச் சுற்றி வாழ்கின்ற மக்கள் பலவித நோய்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக நெய்வேலி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் வாழுகின்ற மக்களுக்கு நெஞ்சகம், நுரையீரல் தொடர்புடைய நோய்கள் அதிகமாகி வருவதை நாம் அறிவோம்.
- அது மட்டுமின்றி நிலக்கரிச் சுரங்களில் இருந்து வெளியேற்றப்படும் நீர் மண்வளத்தைக் கடுமையாகப் பாதிக்கக் கூடியதாக இருக்கின்றது. எனவே, அனல் மின் உருவாக்க முறை படிப்படியாகக் குறைக்கப்படும்.

பாதிப்பில்லாப் புதிய மின் உருவாக்கம்

- நீர் மின் உருவாக்கம்
- காற்றாலை மின் உருவாக்கம்
- சூரியசக்தி மின் உருவாக்கம்
- திடக்கழிவுகளில் இருந்து மின் உருவாக்கம் ஆகிய உயிர்களுக்குப் பாதிப்பில்லா மின் உருவாக்க முறை பெருக்கப்படும்.

அரசுக்கு இழப்பு ஏற்படுவதேன்?

- உருவாக்கம் இடத்தில் இருந்து பயன்படுத்தும் இடத்திற்கு மின்சாரத்தைக் கடத்திப் பகிர்ந்து வருவதில் பெரிய அளவில் மின் இழப்பும், கசிவும் ஏற்படுவதாலும்,



தனியாரிடம் மின்சாரத்தை வாங்குவதில் நடக்கும் முறைகேடுகளாலும் அரசுக்குப் பெருமளவில் இழப்பு ஏற்பட்டு வருகிறது.

சூரிய ஒளிக்கற்றை மின் உருவாக்கம்

- புதிய வகை "சூரிய ஆற்றல் ஒளிக்கற்றை" (Cas Cad Solar Panel) கண்ணாடிகளைப் பயன்படுத்தி சூரிய ஒளியை ஒர் புள்ளியில் குவித்து, அங்கு உருவாகும் கடும் வெப்பத்தை வைத்து மின்சாரம் உருவாக்கும் முறையாகும்.
- சூரிய ஒளியைக் குவித்து தண்ணீரைக் கொதிக்க வைத்து, அதிலிருந்து வரும் உயர் அழுத்த நீராவியைக் (High-pressure steam) கொண்டு விசைச் சக்கரங்களைச் சுழற்றி மின்சாரம் உருவாக்கும் இம்முறையால் பெரிய தொழிற்சாலைகளுக்குத் தேவையான அதிகளவு மின் திறனை வழங்க முடியும்.
- தமிழகத்தில் நேரடி சூரிய கதிர்வீச்சு அதிகமாக உள்ள தூத்துக்குடி, இராமநாதபுரம் மாவட்டங்களில் இத்திட்டங்களைச் செயல்படுத்துவது அதிக பயனைத் தரும்.

அரசுக் கட்டடங்களில்

- தமிழகத்தில் உள்ள ஆயிரக்கணக்கான அரசுப் பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் வெறும் நிருவாக மையங்களாக மட்டுமல்லாமல், இனி "மின் உருவாக்க நிலையங்களாக" மாற்றப்படும்.
- தற்போதுள்ள சூரிய ஆற்றல் மின் தகடுகளுக்குப் பதிலாக, புதியவகை சூரிய ஒளிக்கற்றை (Concentrated Solar Power) நுட்பத்தை அரசு கட்டடங்களின் மேல் தளங்களில் நிறுவப்படும்.
- சூரிய மின் தகடுகளைச் சுத்தப்படுத்த நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதைத் தவிர்த்து, மறுசுழற்சி செய்யப்பட்ட நீரைப் பயன்படுத்துவதன் மூலம் நீர் ஆதாரங்கள் பாதுகாக்கப்படும்.
- இந்த மின்சாரம் பள்ளிகள் மற்றும் அலுவலகங்களின் மின்விசிறி, விளக்குகள் மட்டுமின்றி, பெரிய இயந்திரங்கள் மற்றும் சீர்வளிக் இயந்திரங்களையும் (கிசி) இயக்கும் திறன் கொண்டது.
- அரசு அலுவலகங்களுக்குச் செலவிடப்படும் கோடிக்கணக்கான உருவாய் மின் கட்டணம் சேமிக்கப்படும். அந்தத் தொகை மக்கள் நலத்திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும்.

புதிய வகை மின் உருவாக்கம்

- நீரோட்டத்தைத் தடுத்து ஒரு உருளை வடிவத் தொட்டிக்குள் (Basin) செலுத்தி, அங்கு செயற்கையாக ஒரு 'சுழல்' (Vortex) உருவாக்கப்பட்டு, அந்தச் சுழலின் மையத்தில் உள்ள விசைச்சக்கரம் (Turbine) சுழல்வதன் மூலம் மின்சாரத்தை உருவாக்க முடியும். இதில் விசைச்சக்கரம் மெதுவாகச் சுழல்வதால், நீரில் உள்ள மீன்களும் எந்த பாதிப்பும் இன்றி இதன் வழியாகக் கடந்து செல்ல முடியும்
- மற்ற நீர்மின் திட்டங்களைப் போல இதற்குப் பெரிய அணைகளோ, அதிக உயரமோ தேவையில்லை. 0.7 மாத்திரி (மீட்டர்) முதல் 2 மாத்திரி (மீட்டர்) உயரம் இருந்தாலே போதுமானது.

- ஒரு சிறிய நீர்ச்சுழி அமைப்பு 15 அயிர மின்திறனலகு (kW) முதல் 100 அயிர மின்திறனலகு (kW) வரை மின்சாரத்தை உருவாக்கும். இது 60 வீடுகளுக்கு (வீட்டிற்கு ஏறக்குறைய 12 அயிர மின் திறனலகு (kW) தேவை எனில்) இது போதுமானது.

- ஆஸ்திரியா மற்றும் பெல்ஜியம்: இந்த நாடுகளில் இத்தொழில்நுட்பம் ஏற்கனவே வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில் தமிழகத்தில் உள்ள வாய்க்கால்கள் (எடுத்துக்காட்டாக): மேட்டூர் கீழ்மட்ட வாய்க்கால், கீழ்பவானி வாய்க்கால்) மற்றும் சிற்றாறுகளில் 'குறுமின் திட்டங்களை' நிறுவ முடியும்.

கடற்பகுதியில் காற்றாலை மின்சாரம்

- தமிழ்நாடு 1076 அயிரமாத்திரி (கி.மீ) நீளமானக் கடல்கரையைக் கொண்டுள்ளது. இதில் மீனவர்களுக்கோ கடல் உயிரினங்களுக்கோ பாதிக்காத வகையில் காற்றாலை மின்சாரம் உருவாக்க முடியும். கடற்பகுதியில் காற்றாலை மின்சாரம் உருவாக்கும் முறை பல பயன்களைக் கொண்டுள்ளது. பெரிய பரப்பளவு நிலம் தேவை இல்லை.

- இந்திய அரசு தமிழகக் கடற்கரையில் (குறிப்பாக தனுசுகோடி மற்றும் தூத்துக்குடிப் பகுதிகளில்) 4 நூற்றுக்கோடி மின்திறனலகு (GW) (4000 பத்திலக்க மின்திறனலகு (மெகாவாட்) திறன் கொண்ட கடலோரக் காற்றாலைகளை அமைக்க ஏல நடைமுறைகளைத் தொடங்கியுள்ளது.

- காற்றாலைகளை நிறுவும்போது உருவாகும் இரைச்சலைக் குறைக்க 'குமிழித் திரைகள்' (Bubble curtains) போன்ற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, கடல் உயிரினங்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் முன்னெடுக்கப்படும்.

காய்கறி கழிவுகளில் இருந்து மின்சாரம்


- தமிழ்நாட்டில் ஓராண்டுக்குப் பல்லாயிரம் கல்லெடை (டன்) காய்கறிகள் வீணாகின்றது. அதைக்கொண்டு மின்சாரம் உருவாக்கும் தொழிற்சாலைகளை நாம் தமிழர் அரசு நிறுவும்.

- 16 கல்லெடை (டன்) காய்கறிக் கழிவுகளை தாங்கும் மின் ஆலை மூலம் 140 அயிர மின்திறனலகு (kW) மின் இயக்கியை இயக்க முடியும். ஒரு நாளைக்கு இதன் மூலம் சற்றொப்ப 900 அலகு மின்சாரம் இவ்வாலையில் உருவாக்கம் செய்ய முடியும். சென்னை கோயம்பேடு சந்தையில் காய்கறி கழிவுகளைக் கொண்டு மின்சாரம் உருவாக்கும் ஆலை தற்போது செயல்பாட்டில் உள்ளது. இது சந்தையின் தெருவிளக்குகள் மற்றும் பொதுத் தேவைகளுக்கான மின்சாரத்தை நிறைவு செய்கின்றது. இவ்வாறு ஒவ்வொரு மாவட்டத்திலும் புதிய ஆலைகளை நாம் தமிழர் அரசு உருவாக்கிச் செயல்பாட்டிற்குக் கொண்டு வரும்


கடல் ஆற்றல் முறை

- இம்முறை மூலம் மிதவைகளைக் கடலில் தொங்க விட்டு அடுக்கு பற்சக்கரங்களை மிதவையின் நடுப்பகுதியில் இணைப்பதன் மூலம் மின்சாரம் உருவாக்கலாம்.











சூரிய சக்தி ஒளிக்கற்றைத் தகடு



ஓடும் தொடர்வண்டியின் இருபுறமும் நவீன காற்றாடியை வைத்து ஒரு மெகாவட் மின்சாரம் அதன் மூலம் மின் உற்பத்தியைப் பெற்றுக் கொள்வதாகும்



இம்முறை பல வளர்ந்த நாடுகளில் வெற்றியாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது எளிமையான முறை மட்டுமல்லாமல் கடல்வாழ் உயிரினங்களை பாதிக்காத முறையாகும். இதுவும் கடற்பகுதி காற்றாலை மின்சாரத்தைப் போலவே பயன்களைக் கொண்டது.

- சென்னை இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (ஐஐடி) ஆராய்ச்சியாளர்கள் தூத்துக்குடி கடற்பகுதியில் 'சிந்துஜாமி' என்ற கடலலை ஆற்றல் இயந்திரத்தைச் சோதனை செய்துள்ளனர். இது கடலுக்கு அடியில் 20 அயிரமாத்திரி ஆழத்தில் நிலைநிறுத்தப்பட்டு மின்சாரம் உருவாக்க வடிவமைக்கப்பட்டுள்ளது.
- கன்னியாகுமரி முதல் சென்னை வரை அலைகளின் வேகம் சீராக இருப்பதால், அதைக்கொண்டு ஏறக்குறைய 40,000 பத்திலக்க மின்திறனலகு (மெகாவாட்) மின்சாரம் உருவாக்க வாய்ப்புள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன.

தொடர்வண்டி பாதையில் மின் உருவாக்கம்

- தொடர்வண்டிகள் வேகமாகச் செல்லும்போது தண்டவாளத்தைச் சுற்றி பலத்த காற்று வீசும். அங்குச் செங்குத்து அச்சு காற்றாடிகளை (Vertical Axis Wind Turbines - VAWT) வைப்பதன் மூலம் மின்சாரம் உருவாக்க முடியும்.
- இந்திய மேற்கு இரயில்வே (Western Railway) முன்னரே தண்டவாளங்களுக்குப் பக்கத்தில் சிறியக் காற்றாடிகளை வைத்து சோதனை செய்துள்ளது. இது சிறிய மின் விளக்குகளை எரிய வைக்க உதவுகிறது.
- தமிழகத்தில் ஓடும் பல்லாயிரம் அயிரமாத்திரி நீளமுள்ள தொடர்வண்டிப் பாதைகளைப் பயன்படுத்திக் மின் உருவாக்கம் செய்துகொள்ளும் திட்டத்தை நாம் தமிழர் அரசு செயல்படுத்தும்.

தொழிற்சாலை மின் கட்டணம்

- பன்னாட்டு நிறுவனங்களுக்கு இணையாக, நமது மண்ணின் சிறு மற்றும் பெருந்தொழில் நிறுவனங்களுக்கும் 24 மணிநேர தடையற்ற மின்சாரம் வழங்கப்படுவது உறுதி செய்யப்படும். குறிப்பாக, வணிக மற்றும் தொழிற்சாலைகளுக்கான மின்கட்டணம் தற்போதுள்ள நிலையை விடக் கணிசமாகக் குறைக்கப்படும்.
- நாம் தமிழர் அரசு முன்மொழியும் சூரிய ஒளிக்கற்றை, கடல் காற்று மற்றும் கழிவு மேலாண்மை போன்ற நிலையான (Sustainable) மின் உருவாக்கம் முறைகள் மூலம் தமிழகம் மின் மிகை மாநிலமாக மாறும். நிலக்கரி மற்றும் வெளிமாநில மின் கொள்முதல் மீதான சார்புநிலைக் குறையும் போது, மின்சார வாரியத்தின் கடன் சுமை நீங்கி, மலிவான விலையில் மக்களுக்கு மின்சாரம் வழங்கும் வாய்ப்பு ஏற்படும்.

சிறு / குறு தொழில் முனைவோர்

- சிறு மற்றும் குறு தொழிலை நடத்துவோர்கள் தொடர்ந்து மின்வெட்டிற்கு ஆளாகிறார்கள். அதனால் உருவாக்கம் குறைந்து இழப்பைச் சந்திக்கின்றார்கள். நாம் தமிழர் அரசு இவர்களின் நலனில் அக்கறை கொண்டு 24 மணி நேரமும்



தடையற்ற மின்சாரத்தை வழங்குவதோடு அதற்கான கட்டணத்தை குறைத்து வழங்கும்.

கூட்டுறவு மின் பண்ணை

- பேரூராட்சி முதல் தொகுதியில் உள்ள தலைமை மின் உருவாக்கம் நிலையம் வரைக்குமான "கூட்டுறவு மின் பண்ணை" முறையை நாம் தமிழர் அரசு அமைக்கும். அதன் முதலீட்டில் அரசு ஒரு பங்குதாரராக இருக்கும். முதலீட்டில் பங்குதாரர்களாக மக்களும் தங்களை இணைத்துக் கொள்வதால் அவர்களது பங்குகளுக்கேற்ப வருவாய் ஈட்டுவதுடன் நிருவாகமும் வெளிப்படைத் தன்மையுடன் இயங்கும்.
- இந்த புதிய வகை "கூட்டுறவு மின் பண்ணை" முறையில் தமிழகத்தில் உள்ள சிறு முதலாளிகள் பலர் ஒன்றாக சேர்ந்து முதலீடு செய்து மின் உருவாக்கம் திட்டத்தை செயல்படுத்தலாம். ஈட்டும் வருவாயை அவர்கள் பங்கிட்டு கொள்ளலாம். இதனால் பெரும் முதலாளிகள் மேலும் வளர்ந்து கொண்டிருப்பதை தடுக்க முடியும். இங்கு கிடைக்கும் வருவாய் இங்குள்ள முதலாளிகளிடமும் மக்களிடமும் இருக்கும் படியான செயல் திட்டத்தை நாம் தமிழர் அரசு நடைமுறைப்படுத்தும்.
- இதனால் பணத்தை முதலீடு செய்தவர்களுக்கு நிலையான வருவாய் கிடைத்தபடியே இருக்கும். வறுமை ஒழியும். வளமும் பெருகும்.
- இதன்மூலம் அந்தந்த பகுதியில் உள்ள இளைஞர்களுக்கும், பெண்கள் அமைப்புகளில் உள்ளவர்களுக்கும் புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும்.

சிறுகுறு தொழிலுக்கான மின்கட்டணம்

- ஊர்புற கைவினை பொருள்கள், பனை மற்றும் தென்னை உள்ளிட்ட மண்ணின் வளம் சார்ந்த சிறு தொழில் அமைப்பினர், தனியார் மருத்துவமனைகள் மற்றும் தொண்டு மையங்களின் சமூக அக்கறையைக் கண்காணித்து அவர்களுக்கு ஒரு ஒரு அலகு மின்சாரம் விலை குறைத்து வழங்கபடும்.

கட்டணமில்லா மின்சாரம்

- நாம் தமிழர் அரசு வேளாண்மைக்கு 24 மணி நேரமும் முன்முனை மின்சாரத்தைக் கட்டணமில்லாமல் வழங்கும். எப்போது மின்சாரம் கிடைக்கும் என உழவர் பெருமக்கள் காத்திருக்க வேண்டிய தேவை இருக்காது.

தரை வழி மின்சாரம்

- நாம் தமிழர் அரசு தரை வழி மின்சார முறையை நடைமுறைப் படுத்தும். இதனால் மழை மற்றும் பிற பேரிடர் நேரும் காலங்களில் ஏற்படும் மின்வெட்டு மற்றும் நேர்ச்சிகள் தடுக்கப்படும். பேணுதல் முறைகள் எளிதாகவும் செலவுகள் குறைவாகவும் இருக்கும் தரைவழி மின்சார முறையில், உரிய பாதுகாப்பு வழிமுறைகள் பின்பற்றப்பட்டு இந்த முறை செயல்படுத்தப்படும்.

சிற்றூர்களில் மின்சாரம்

- ஒவ்வொரு சிற்றூரையும் மின் உருவாக்க மையமாக மாற்றும் வண்ணம் அந்தந்த ஊரில் மாட்டுச் சாணத்தில் இருந்து இயற்கை எரிகாற்று, நீரலை மின்சாரம், சூரியத் தகடு மற்றும் காற்றாலை மின் உருவாக்கம் என சூழலியல்

பாதிப்பில்லாமல் வாய்ப்புள்ள முறையில் செயல்படுத்திடத் திட்டங்கள் வகுக்கப்பட்டு நிறைவேற்றப்படும். இத்திட்டத்தை பயன்படுத்திக்கொள்ள ஊரக நிருவாகம் 30 விழுக்காடு பங்களிக்க வேண்டும். அப்பொழுதுதான் ஊரக நிருவாகம் பேணிக்காக்கும் பணிகளைச் சரிவர செய்யும். இத்திட்டம் செயல்படுத்தப்படும் ஊர்கள் மின் உருவாக்கத்தில் தன்னிறைவு பெறுவதோடு அதிகப்படி உருவாக்கத்தை அரசுக்கு அளிக்கும். காலப்போக்கில் பெரும்பாலான சிற்றூர்கள் இத்திட்டத்தை செயல்படுத்தும்பொழுது அணு மின் நிலையம், அனல் மின் நிலையம் போன்ற சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்கும் திட்டங்கள் தேவையற்றதாகிவிடும்.

வீடு மற்றும் நிறுவன மின் உருவாக்கம் – விற்பனை முறை

- வீடுகள், சிறு தொழில்கள், வேளாண் பண்ணைகள், கூட்டுறவுச் சங்கங்கள் தங்களது தேவைக்கு மேலாக உருவாக்கம் செய்யும் சூரிய, காற்று, சாண எரிவளி மின்சாரத்தை நேரடியாக அரசுக்கு விற்பனை செய்யும் சட்டவரைவு உருவாக்கப்படும். இதன் மூலம் நுகர்வோரும் மின் உருவாக்குபவராக மாறுவார்கள்.

உள்ளூர் மின் சேமிப்பு (Energy Storage)

- பசுமை மின் உருவாக்கம் பருவநிலைக்கு உட்பட்டது என்பதால், சிற்றூர் மற்றும் நகர அளவில் மின்சாரச் சேமிப்பு மையங்கள் (ஙிணீமீமீமீகூஷீஹ் ஷிமீஷீகூஷீ ணீரீமீ) அமைக்கப்படும். இதனால் இரவு நேரமும், நெருக்கடிக் காலங்களிலும் நிலையான மின் பகிர்வு உறுதி செய்யப்படும்.

சிறப்பு மின் கட்டமைப்பு

- சிறப்பு மின்னளவி, தேவையையும் பகிர்வையும் கண்காணித்து, நேரடிக் கட்டண விதிப்பு முறைப் போன்ற தொழில்நுட்பங்கள் கொண்டு மின் பயன்பாட்டைச் சீராக நிருவகிக்கும் முறை செயல்படுத்தப்படும். இதனால் தேவையான அளவு உருவாக்கப்பட்டு வீணாவதும் தவிர்க்கப்படும்.

ஒவ்வொரு தொகுதியிலும்

- ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு தலைமை மின் உருவாக்க நிலையம் அமைக்கப்படும். சிற்றூர்களை உள்ளடக்கிய பேரூராட்சி மின் உருவாக்க நிலையங்கள் அனைத்தும் அந்தத் தொகுதி தலைமை மின் உருவாக்க நிலையத்துடன் இணைக்கப்பட்டிருக்கும். அதனால் அந்தத் தொகுதியில் உள்ள அனைத்து ஊர்களுக்கும் எளிதில் தடையற்ற மின் வசதியைப் பெற்றுக் கொள்ளும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளும்

புதிய ஆய்வுத் துறைகள்

- இயற்கையைப் பாதிக்காத புதிய மின்சார உருவாக்க முறைகளை ஊக்குவிக்க இளம் அறிவியலாளர்களை நாம் தமிழர் அரசு ஊக்குவித்து அவர்கள் தலைமை யிலேயே புதிய ஆய்வு குழுக்களை உருவாக்கி, மின் உருவாக்கத்தில் தன்னிகரற்ற, மின் மிகை மாநிலமாக மாற்றும்.



அலைதவழ் கடலும் அரும்பெரும் கோயிலும்
மலைகள் அருவி மணக்கும் காடொடு
உலகக் கலையின் ஊற்றுக் கண்ணாய்
நிலவும் தமிழகம் நெடுபுகழ் நாடே!

– தனித்தமிழ்வேங்கை மறத்தமிழ்வேந்தன்



சுற்றுலாக் கொள்கை

தமிழினத்தின் கலை இலக்கியம், பண்பாடு, வாழ்வியல் முறை, வழிபாடு, வரலாற்றுப் பெருமை, நாகரீகம், மரபு சார்ந்த மருத்துவப் பெருமை ஆகியவற்றை உலகறியச் செய்யும் அரிய வாய்ப்பினை வளர்த்தெடுப்பதே நாம் தமிழர் அரசின் நோக்கம்.

உலகெங்கும் வாழும் தமிழர்கள்

- உலகெங்கிலும் 130 நாடுகளில் பரவி வாழும் தமிழர்கள் மற்றும் வெளிநாட்டினரைத் தமிழகத்திற்குப் பார்வையிட, உறவுகளோடு கலந்து கொள்ள வரச் செய்ய வேண்டும். தமிழகச் சுற்றுலா அலுவலர்கள் அந்தந்த நாடுகளுக்குச் சென்று அவர்களைச் சந்திக்கப் பணியமர்த்தப்படுவார்கள்.
- கோயில்கள், நகரங்கள், பாரம்பரியத் தலங்கள், மலைப்பகுதிகள், அருவிகள், தேசியப் பூங்காக்கள், தமிழகப் பாரம்பரிய உணவு, வனவளம், விலங்குகள், இயற்கை எழில் கொஞ்சும் ஏராளமான இடங்கள் இங்கே இருப்பதை அவர்கள் அறியும்படி முன்னோட்ட விளம்பரங்கள் வெளியிடப்படும்.


பண்பாட்டுச் சுற்றுலா

- பல்லாயிரம் ஆண்டுகளாக நம் பாரம்பரியக் கலைகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. பொங்கல், மாட்டுப்பொங்கல், ஏறுதழுவல், தைப்பூசம், ஆடிப்பெருக்கு, சித்திரைத் திருவிழா, கார்த்திகை தீபம் முதலிய திருவிழாக்களின் போது பயணிகளை வரவழைக்கச் சுற்றுலா மையங்கள் திறக்கப்படும்.

கலை நிகழ்ச்சி

- முதன்மை நகரங்களில், நமது பண்டைய மரபு விளையாட்டுகளான சல்லிக்கட்டு, கபடி, மற்போர், மல்யுத்தம், மள்ளர் கம்பம், சிலம்பு, சேவல் சண்டை, சதுரங்கம், கிளித்தட்டு, மாட்டுவண்டிப் பந்தயம் ஆகியவை நடத்தப்படும்.













- பறையாட்டம், பொம்மலாட்டம், சாக்கை ஆட்டம், காமன் பண்டிகை, கைச் சிலம்பு, கோலாட்டம், ஓகம், கரகாட்டம், காவடி, கழைக்கூத்து, கும்மி, மயிலாட்டம், பொய்க்கால் ஆட்டம், ஓட்டன்கூத்து, ஒயிலாட்டம், ஒயில் கும்மி, பாம்பாட்டம், பொய்க்கால் குதிரை, புலிஆட்டம், சேவை ஆட்டம், தெருக்கூத்து, உருமி ஆட்டம், வில்லுப்பாட்டு ஆகிய பண்பாட்டுக் கலைநிகழ்ச்சிகள் புத்துணர்வுடன் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம், சரியான திட்டமிடலுடன் செயல்படுத்தப்படும். இதனுடன் உலகெங்கும் சுவைக்கும் தமிழ்நாட்டின் சிறப்பான 200 வகை இயற்கை வழி உணவுகளும் பரிமாறப்படும்.

மெய்யியல் சுற்றுலா

- உலகம் போற்றும் கோனேரிக்கோன் கோட்டை, தமிழ் இறையோன் திருமுருகன் திருக்கோயில்களான அறுபடை வீடுகள், சித்தன்னவாசல் ஓவியம், ஆதிச்சநல்லூர் அகழ்வாராய்ச்சி இடம், தஞ்சைப் பெரியகோயில், மாமல்லபுரத்து ஒற்றைக்கல் தேர்கள், மேட்டுப்பாளையம் நீலமலைத் தொடர்வண்டி, மதுரை மீனாட்சி அம்மன் கோயில், திருவண்ணாமலை கோயில், காஞ்சி காமாட்சி அம்மன் கோயில், ஆகியவைகளுக்கான சிறப்பு உலகச் சுற்றுலாத் திட்டம் கொண்டு வரப்பட்டு, தலங்கள் பொலிவூட்டப்படும்.

- ஆயிரக்கணக்கான கோயில்கள், முதன்மையான பள்ளி வாசல்கள் சீர்செய்யப்படும். தர்காக்கள், தேவாலயங்கள், புனிதர்களின் நினைவிடங்கள் ஆகியவை மெய்யியல் சுற்றுலாத் தலங்களாகப் புனரமைக்கப்படும். வட இந்தியாவில் இருந்து வரும் சுற்றுலாப்பயணிகள் இதை அதிகம் விரும்புகிறார்கள். எனவே வடநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை மேலும் கவரும் வண்ணம் வடமாநிலங்களில் உள்ளச் சுற்றுலாத் தலங்களுடன் ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப்படும்.

- தமிழகத்தின் முதன்மையான புகழ்பெற்ற சைவ வைணவ இசுலாமிய கிருத்துவ பௌத்த வழிபாட்டுத்தலங்கள் சமயப் பண்பாட்டுப் பகுதிகளாகக் தெரிவு செய்யப்பட்டு அந்த பகுதிகள் சுற்றுலா பண்பாடு தொல்லியல் மற்றும் சமய அறநிலையத் துறைகளின் கூட்டு நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரப்படும்.

- தமிழகத்தின் கோட்டைக் கொத்தளங்கள், அரண்மனைகள் அருங்காட்சியகங்களாக மாற்றப்படும். வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் சங்ககால நாடகங்கள் ஒளி ஒலி அமைப்புகளுடன் நாட்டுப்புறக் கலைஞர்களால் மாலை வேளைகளில் நடத்தப்பட்டு சுற்றுலா பயணிகளின் கவனம் ஈர்க்கப்படும்.

வளர்ச்சிக்கான வழிகள்

- தமிழ்நாட்டில் சுற்றுலாத்துறை மேலும் வளர்ச்சியடையக் கீழ்க்கண்ட சுற்றுலாத் தாழ்வாரங்களை அரசு அமைக்கும்.

1. திருச்சி - தஞ்சை - கும்பகோணம்.
2. மதுரை - இராமேசுவரம்
3. மதுரை - கொடைக்கானல்













4. சென்னை - காஞ்சிபுரம் - வேலூர்

5. சென்னை - மாமல்லபுரம் - புதுச்சேரி - சிதம்பரம்

6. கோவை - குன்னூர் - உதகமண்டலம் - ஏற்காடு - ஏலகிரி

7. கூடலூர் - தெப்பக்காடு - மசினாகுடி

8. கோவை - ஆழியாறு - திருமூர்த்தி அணை - டாப்ஸ்லிப் - வால்பாறை

9. தூத்துக்குடி - திருநெல்வேலி - நாகர்கோயில் - கன்னியாகுமரி

இந்த வழித்தடங்களில் உள்ள கலை பண்பாட்டுத் தலங்கள், இயற்கை மலைகள், அருவிகள், பழமைவாய்ந்த வழிபாட்டுத் தலங்கள் எல்லாம் சுற்றுலாப் பயணிகளுக்குச் சுற்றிக் காட்டும் விதமாக முறைப்படுத்தப்படும்.

புதிய வகை சுற்றுலா

- மலைவாசிகள் வழியில் மலையேற்றம் (Trekking and Trailing)
- குன்றுகளில் பாறையேற்றம் (Mountain climbing)
- ஊதுப்பிப் பயணம் (Balloon Tours)
- உலங்கூர்திப் பயணம் (Chopper Tours)
- கயிறுவழி வான் பயணம் (Sky Trams)
- வான் நடை பயணம் (Sky walk)
- மலை முகாம் (Camping) போன்ற புதிய வகைச் சுற்றுலா வசதிகள் ஏற்படுத்தப்படும்.

முன்னெடுக்க வேண்டியவை

- எளிமையான கட்டண விகிதங்கள் இருக்க ஆவன செய்வோம். அதற்கு ஏற்ற பயணிகளின் பயணச் செலவுத் திட்டத்தை உருவாக்குவோம்.
- உலகத் தரம் வாய்ந்த, பன்னாட்டுப் பயணிகளுக்கு ஏற்ற தங்குமிடங்கள் அமைக்கப்படும். சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பிற்கு முழு உத்திரவாதம் அளிப்போம். திறன் வாய்ந்த வழிகாட்டிகள் அமர்த்தப்படுவார்கள்.
- ஒரே நேரத்தில் அனைத்துப் பயண ஊர்திகளையும் பயன்படுத்திக் கொள்ளும்படியான ஒருங்கிணைந்த போக்குவரத்து வசதி ஏற்பாடு செய்யப்படும்.
- நல்ல காற்றையும் இயற்கை எழிலையும் ஒருங்கே கண்டுணர மலையேற்றப் பயணங்கள் மேற்கொள்ளப்படும்.
- சுற்றுலாப் பயணிகளின் முதன்மைத் தேவையான தூய குடிநீர், மருத்துவ வசதி, சுகாதாரம் மற்றும் கழிப்பிட வசதிகள் ஏற்பாடு செய்யப்படும்.

தமிழகத்தில் தீவுச்சுற்றுலா

- வங்கக் கடலிலும், இந்தியப் பெருங்கடலிலும் 21 தீவுகள் தமிழ்நாட்டிற்குச் சொந்தமாக இருக்கின்றன. நாம் தமிழர் அரசுத் தீவுச் சுற்றுலாவைப் புதிதாக உருவாக்கும்.









தீவுகள்

- வான், கோசுவரி, விலங்குச்சள்ளி, கரியச்சள்ளி, உப்புத் தண்ணி, புளுவினி சள்ளி, நல்ல தண்ணி, அணைப்பார், வாலி முனை, பூவரசன் பட்டி, அப்பா, தலையிரி, வாளை, முல்லை, புள்ளிவாசல், குருசடை, முயல் தீவு, மானொலி, மானொலிப் புட்டி, பூமறிச்சான், சிங்க்லே ஆகிய 21 தீவுகளும் தமிழகத்திற்குச் சொந்தமானவை. நடுவண் அரசின் ஒப்புதலைப் பெற்று வெளிநாடுகளைப் போன்ற சிறப்பான -
- அதிவேக விசைப்படகு பயணம் (High speed motor boat)
- கட்டுமரப் பயணம் (Catamaran travel)
- ஆழ்கடல் மூழ்கல் (Sea diving)
- பவளப்பாறைப் பயணம் (Snorkeling)
- கடலடிச் சுற்றுலாக்கள் (Submarine tours)
- கடற்பறவைப் பயணம் (Sky flying)

  போன்ற விளையாட்டுகள் வழங்கப்பட்டு சுற்றுலா பன்மடங்கு உயர்த்தப்படும்.


கடற்கரை சுற்றுலா

- உலகிலேயே இரண்டாவது நீண்ட கடற்கரையைக் கொண்டது தமிழகம்தான். சென்னைக் கடற்கரைப் பகுதிகளில் கேளிக்கைகள், குடும்ப விருந்து, இசைத் திருவிழா, நடனத் திருவிழா, நாட்டுப்புறக் கலைகள் நிகழ்ச்சிகள் போன்றவை நடத்தப்படும்.
- காற்றலை விளையாட்டு, கடற்கரை இருசக்கர வண்டிகள், மணல் கலை, குதிரை ஏற்றம், துப்பாக்கிச் சுடுதல், கலைப் பூங்காக்கள், கடற்கரைக் கைப்பந்து, கால்பந்து ஆகியவை நடத்தி கடற்கரைச் சுற்றுலா வளர்க்கப்படும்.
- தமிழகத்தின் நீண்ட தகுந்த கடற்கரைப் பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆண்டுதோறும் உள்ளூர் மீனவர்கள் தலைமையில் கட்டுமரப் போட்டிகள், தனிநபர் படகுப் போட்டிகள், பாய்மரப் படகுப்போட்டிகள் நடத்தப்பட்டு வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளும் பங்குபெற வாய்ப்பேற்படுத்தப்படும். ஆழமற்ற கடல்நீரில் நீந்தும் விளையாட்டுகளுக்கான ஏற்பாடுகள் எழில்மிகு இராமேசுவரம் கடலில் அமைக்கப்படும்.
- கண்ணாடிப் படகுகளின் வழியே, கடலில் நீந்த முடியாதவர்களுக்குக் கடலுக்குள் சென்ற உணர்வை தரும் வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்.

அணைகள் சுற்றுலா

- மேட்டூர் அணை, ஆத்துப்பாளையம் அணை, கல்லணை, வைகை அணை. தாமிரபரணி, அமராவதி அணை, மணிமுத்தாறு அணை, பாபநாசம் அணை, பேச்சிப்பாறை அணை, பெருஞ்சாணி அணை, பரம்பிக்குளம் அணை, ஆழியாறு





ஆயிரங்கால் மண்டபம், இராமேசுவரம்



நெல்லை - பேரருவி



புலிகள் சரணாலயம்



மலையடிவாரச் சுற்றுலாத் தலம் (முன்மாதிரி)



பழவேற்காடு



சித்தன்னவாசல் குகை ஓவியம்



சுற்றுலாப் பயணிகள் தங்கும் குடில்கள் (முன்மாதிரி)

ஆணை, பவானிசாகர் அணை, சாத்தனூர் அணை போன்ற புகழ்பெற்ற நீர்ப்பிடிப்புப் பகுதிகள் அனைத்தும் சிறந்த சுற்றுலாத்தலமாக மாற்றப்படும். வார இறுதி நாட்களில் கலைநிகழ்ச்சிகள், சிறப்புப் போக்குவரத்து வசதிகள் செய்யப்படும்.

இயற்கைச் சூழல் சுற்றுலா

- நீலமலை (ஊட்டி), கொடைக்கானல், குற்றாலம், சென்னிமலை, சதுரகிரி, சவ்வாது மலை போன்ற மலை, மலை சார்ந்த பகுதி, வனங்கள், அருவி நீர்ப்பகுதிகள் அனைத்தும் மேம்படுத்தப்பட்ட சுற்றுலாத்தலமாக மாற்றப்படும். மலைப்பகுதிகளில் மலைவாழ் மக்களே வழிகாட்டிகளாக பணியமர்த்தப்படுவார்கள். தற்பொழுது 25 இயற்கைச் சூழல் தலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும் பல இடங்களை நாம் தமிழர் அரசு அடையாளப்படுத்தும்.

- மேற்குத்தொடர்ச்சி மலைகளில் மூலிகைக் காற்றுச் சூழலில் ஓகம், உடல் ஒத்தடம், தொக்கணம் ஆகியவை அடங்கிய சோலைகள், குடில்கள் நிறுவிப் புத்துணர்வுச் சுற்றுலா பெருக்கப்படும். சித்த மருத்துவ முறைகளுடன் கூடிய சேவைகள் அங்கே மேற்கொள்ளப்படும்.

வன உயிரிகள் சுற்றுலா

- தமிழகத்தில் மொத்தம் 3 வன உயிரிப் பாதுகாப்புக் காடுகளும், 6 தேசிய உயிரியல் பூங்காக்களும், 8 வனவிலங்கு சரணாலயங்களும், 4 யானைகள் பாதுகாப்புப் பகுதிகளும், 4 புலிகள் சரணாலயங்களும், 5 முதலைப் பண்ணைகளும், 16 பறவைகள் சரணாலயங்களும் இருக்கின்றன. இவ்விடங்கள் கல்வி, பொழுதுபோக்கு, பல்லுயிர்ப் பாதுகாப்பு, கடலோர ஆமைகள் பாதுகாப்பு, புராதான இடங்களின் பாதுகாப்பு, நிலம் மற்றும் கடலின் தன்மைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு ஆகியவற்றோடு சுற்றுலா வளர்ச்சிக்கும் பயன்படுத்தப்படும்.


- சுற்றுலா என்பது வருவாயை ஈட்டித் தரும் துறையாக இருந்தாலும் அது பல்லுயிர்ப் பெருக்கத்திற்கெதிரான பாதிப்புகளையும் தன்னகத்தே கொண்டது என்பதை நாம் தமிழர் அரசு உணர்ந்திருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையின் வழிகாட்டுதல்களைக் கருத்தில் கொண்டு, பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளில் பல்லுயிர்ப் பெருக்கத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும், அதற்கு உதவும் வகையிலுமான வழிமுறைகள் சுற்றுலாத்துறையால் பின்பற்றப்படும். இத்துறையின் அனைத்து முடிவுகளும், செயல் திட்டங்களும் பல்லுயிர்ப் பெருக்கத்தைப் பாதிக்காத வண்ணம் வடிவமைக்கப்படும்.

உப்பங்கழிச் சுற்றுலா

- 177 வகைப் பறவைகள் வந்து தங்கும் பிச்சாவரம் சதுப்புநிலக் காடுகள் உலக அளவில் மிகப்பெரிய அலையாத்திக் காடுகளும், உப்பங்கழி ஓடையும் கொண்டப் பகுதியாகும்.

- புத்துணர்வு நடுவங்கள், மரபு மருத்துவ முறைகள், மரபு உணவு ஆகியவை உள்ளடக்கிய உடல்நலச் சுற்றுலாவை இந்தப் பகுதிகளில் வளர்க்க உரிய











நடவடிக்கைகள் எடுக்கப்படும். சிறப்புமிக்க இப்பகுதிகள் பற்றி, உலகறிய 'முன்னோட்ட ஆவணப் படமும்' சுற்றுலா வலைத்தளங்களில் வெளியிடப்படும்.

- வெள்ளாறு, கொள்ளிடம் ஆறுகள் ஆகியவற்றின் காயல் பகுதி நீரில் படகு விளையாட்டுகள் ஏற்படுத்தப்படும்.
- வரலாற்றுச் சிறப்புமிக்க பழவேற்காடு ஏரி மற்றும் பறவைகள் சரணாலயம் அவற்றின் சூழலியல் தன்மை மாறாமல் சிறந்த சுற்றுலாத்தலமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நாட்டுப்புறச் சுற்றுலா

- பழமை மாறாத சிற்றூர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்குச் சுற்றுலா நடுவங்கள் அமைத்துப் பொருளாதார மேம்பாடு, சமூக ஆர்வம் பெருக்கப்படும்.

வரலாற்றுச் சுற்றுலா

- வரலாற்றுச் சிறப்புமிக்க துறைமுக நகரங்கள் மற்றும் கடலில் ஆழ்ந்த மாமல்லபுரம் மற்றும் பூம்புகார் கடற்பகுதிகள், வரலாற்று முதன்மை கொண்ட கடல்வாய் நகரங்களாகவும் பாதுகாக்கப்பட்ட பகுதிகளாகவும் அறிவிக்கப்படும்; இப்பகுதிகளில் வரலாற்று அறிவும் ஆர்வமும் கொண்ட சுற்றுலா வழிகாட்டிகள் பயிற்றுவிக்கப்பட்டு பணியமர்த்தப்படுவர்.

கேளிக்கைச் சுற்றுலா

- முதன்மையான மலைப் பகுதிகளில் கயிற்றுப் பாலங்கள், கோல் திடல்கள், குழந்தைகள் விளையாட்டுப் பூங்காக்கள், தண்ணீர்ப் பூங்காக்கள், உயிரியல் பூங்காக்கள், தொழில்நுட்ப அருங்காட்சியகங்கள் ஆகியவை வளர்த்தெடுக்கப்படும்.
- திருப்பெரும்புதூர் "மெட்ராசு பன்னாட்டுப் பந்தய தளத்தில்" பன்னாட்டுப் பந்தயங்களை (Motor Race) நடத்தவும், அவற்றை பார்வையிட வரும் விளையாட்டு ஆர்வலர்களை ஈர்க்கும் வகையிலும் ஏற்பாடுகள் செய்யப்படும்.
- தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை உலக அரங்கில் வியத்தகு வரலாறு, பண்பாடு, மரபு, கேளிக்கை, ஓய்வு, மகிழ்ச்சி ஆகிய அனைத்தும் கலந்த முழுமையான முதன்மையான சுற்றலாத்துறையாக விளங்க நாம் தமிழர் அரசு நடவடிக்கை எடுக்கும்.
- கூடுதலாகப் பறையாட்டம், பொம்மலாட்டம், தெருக்கூத்து போன்ற நாட்டிசை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுச் சுற்றுலா பயணிகளுக்கு ஓய்வு நேரங்களில் புத்துணர்ச்சி ஊட்டப்படும். இதுபோன்ற நிகழ்ச்சிகளால் பயணிகள் ஈர்க்கப்படுவதோடு உள்ளூர் கலைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் அதிகரிக்கும்.
- கோயில் நகரங்கள், வரலாற்றுச் சின்னங்கள் அமைந்த நகரங்கள், ஓவியச் சிறப்பு நகரங்கள், தொல்லியல் படிமங்கள் கொண்ட பகுதிகள், குகைகள், சுரங்கங்கள் கொண்ட பகுதிகள் அடையாளம் காணப்பட்டு சிறப்பு பகுதிகளாக அறிவிக்கப்படும்.




செட்டிநாடு வீடு


செஞ்சிக்கோட்டை


ரிப்பன் மாளிகை


இராமநாதபுரம் அரண்மனை


மீனாட்சியம்மன் கோயில்


நாகூர் தர்கா


வேளாங்கண்ணி கோயில்

- இப்பகுதியைச் சேர்ந்த வரலாற்று அறிவும் ஆர்வமும் உள்ள இளம் தமிழர்கள் அடையாளம் காணப்பட்டு உரிய பயிற்சி அளிக்கப்பட்டு வழிகாட்டிகளாக பணியமர்த்தப்படுவார்கள். இதன்மூலம் உள்ளூர் வேலைவாய்ப்பும் அதிகரிக்கப்படும்.

தங்கும் விடுதிகள்

- விழாக்காலங்களில் தங்கும் விடுதிகள் வாடகை ஏற்றம் செய்யப்படுவதைத் தடுக்கச் சுற்றுலாத் துறை தலைமையில் குழு அமைத்து சீரான வாடகை நிர்ணயிக்கப்படும். பேருந்து நிறுத்தத்திலிருந்து தலங்களுக்குக் கட்டணமற்ற ஊர்தி வசதி செய்து தரப்படும்.

சிறப்பு சுற்றுலாத் திட்டங்கள்

- உண்மையான வரலாற்றைத் தமிழர்களுக்கு விளக்கும் வகையில் தொல்லியல் சான்றுகள் கிடைக்கும் இடங்களில் விரைந்து அருங்காட்சியகம் அமைக்கப்படும்.
- கீழடி அருங்காட்சியகம் முழுவதும் ஒலிச் சுற்றுலா செயலி மூலம் அருங்காட்சியகத்தில் சேகரிக்கப்பட்ட பொருட்கள் குறித்து விளக்கம் பெற வகை செய்யப்படும்.
- சங்ககால இலக்கியங்கள் இயற்றப்பட்ட இடங்களில் அந்த இலக்கியக் காட்சிகள் சிற்பங்களாகவும், சித்தன்னவாசலுக்கு இணையான ஓவியங்கள் மற்றும் காணொலி என காட்சிகள் வாயிலாக உருவாக்கப்பட்டு இளந்தமிழருக்கு இலக்கிய ஆர்வம் தூண்டப்படும். இது சுற்றுலாப் பயணிகளை மேலும் கவரும் விதத்தில் அமையும்.

தொல்லியல் சுற்றுலா

- தொல்லியல் மற்றும் வரலாற்றுச் சிறப்பு மிக்க பகுதிகளுக்கெனத் தனிவடிவச் சுற்றுலாக்கள் ஏற்படுத்தப்படும் அவ்வகையில் -
- பாறை ஓவியங்கள்.
- கீழடியில் பழந்தமிழர் உறைகிணறு அமைத்த வரலாறு.
- குகைப் பயணங்கள்.
- கொடைக்கானல் சுரங்கப் பயணங்கள்.
- மதுரை யானைமலை சுரங்கப் பயணங்கள்.
- திருச்சி மலைக்கோட்டை சுரங்கப் பயணங்கள்.
- மதுரை, காஞ்சி, குமரி, இராமேசுவரம் மெய்யியல் சுற்றுலாக்கள் என தனித்தனி சுற்றுலாக்கள் அறிமுகப்படுத்தப்படும்.

வீர நிகழ்வுகளை அறியும் சுற்றுலா

- இளம் தலைமுறையினர் வரலாற்றை அறியும் பொருட்டு வரலாற்றுச் சிறப்புமிக்க சுற்றுலாக்கள் ஏற்படுத்தப்படும். அவ்வகையில் -





மல்லர் கம்பம்





தஞ்சைப் பெரிய கோவில்



ஏறுதழுவுதல்



சேவற் சண்டை



இளவட்டக் கல்





பொங்கல் விழா

- வந்தியத்தேவன் பாதையில் பயணம்.
- திருப்பத்தூர் மாமன்னர் மருதுபாண்டியர் படுகொலைப் பயணம்.
- மாமல்லன் சிற்பமும் வாழ்வும்.
- நெற்கட்டான் செவல் போர்க்களத்தில் பெரும்பாட்டன் பூலித்தேவன் ஆங்கிலேயனை வீழ்த்தியது எப்படி போன்ற புதிய வகை சுற்றுலாக்கள் உருவாக்கப்படும்.

இன்பச் சுற்றுலாக்கள்

- முழுக்க முழுக்க பொழுதுபோக்குக்கெனச் சுற்றுலாக்கள் உருவாக்கப்படும். வெளிநாடுகளில் உள்ளது போல தமிழர் தேசிய பானங்களான பனைப் பான விழா, தென்னைப் பான விழா, பழச்சாறு சுவைக்கும் விழா போன்ற விழாக்கள் நடத்தப்படும். இதன்மூலம் பனை மற்றும் தென்னை பொருட்கள் முதன்மை பெற்று வேளாண் வருவாய் அதிகரிக்கும்.

- சுற்றுலாப் பகுதிகளில் தங்குமிடங்களிலேயே தமிழர் தேசிய பானங்களான பனை, தென்னை போன்ற மரங்களிலிருந்து கிடைக்கும் பானங்கள் வழங்கப்படும். மேலும் இயற்கையில் விளைந்த மலைப் பழங்கள், கிழங்குகள் போன்ற உணவுப் பொருட்கள் தோட்டப் பகுதிகளிலேயே வழங்கப்படும். மேலும் நாட்டு விலங்கின இறைச்சி வழங்கப்படும். இதன்மூலம் உள்ளூர் மக்களின் வேலைவாய்ப்பு, வேளாண் பொருள் உற்பத்தி மற்றும் நேரடி விற்பனை உயர்ந்து வாழ்க்கைத்தரம் உயர வழி ஏற்படுத்தப்படும்.

மரபுப் பண்பாடு மற்றும் மண்டலத் திருவிழாக்கள்

- ஆண்டுதோறும் பாரம்பரியத் திருவிழா, பண்பாட்டுத் திருவிழா மற்றும் மண்டலத் திருவிழாக்கள் நடத்தப்படும்.

- இவ்வகைத் திருவிழாக்கள் மூலம் பாண்டிய மண்டலப் பண்பாடு மற்றும் உணவுப் பழக்கவழக்கங்கள் வடகோடி வரையிலும், தொண்டைமண்டலப் பண்பாடு தென்கோடி வரையிலும் பரவ வகை செய்யப்படும்.

- மண்டலம்தோறும் உள்ள திருவிழாக்களை சுற்றுலாத்துறையே முன்னின்று நடத்தும். மேலும் மண்டல அளவில் உணவுத் திருவிழாக்கள் நடத்தப்பட்டு கடல் உணவு, மலை உணவு, வன உணவு, செட்டிநாட்டு உணவு, கரிசல் பகுதி உணவு போன்றவை அனைவரும் அறிந்து சுவைக்க ஏற்பாடு செய்யப்படும்.

- சுற்றுலா விடுதிகள் அனைத்திலும் நாள்தோறும் மாலை வேளைகளில் தமிழர் மரபுக் கலைகள், இயல் இசை நாடகங்கள், நாட்டுப்புறப் பண்ணிசை, தெருக்கூத்துக் கலை, பொம்மலாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், வில்லுப்பாட்டு, பொய்க்கால் குதிரை, கரகாட்டம், சிலம்பக் காட்சி, மற்போர் காட்சி, குத்துவரிசை போன்ற நிகழ்ச்சிகள் ஒலி ஒளி அமைப்போடு நடத்தப்பட்டு இதன் மூலம் சுற்றுலாவும் உள்ளூர் கிராமப்புறக் கலைகளும் உள்ளூர் கிராமப்புறக் கலைஞர்களின் வாழ்வும் ஒருசேர உயர்த்தப்படும்.






The biggest change
Western
TIMES
TO THE FUTURE
test change in 137 years is here




LIVE
TV

செய்தி ஒளிபரப்புத்துறை

அச்சு, காட்சி ஊடகங்கள்

- நாளேடுகளுக்கான அரசு விளம்பரம், அனைவருக்கும் சமமான எண்ணிக்கையின் அடிப்படையில் பாகுபாடில்லாமல் அளிக்கப்படும்.
- அச்சு, காட்சி ஊடகங்களுக்கான மின்கட்டணத்தில் இழப்பு ஏற்படாத வகையில் அரசிடம் இருந்து தேவைப்படும் உதவிகள் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.
- அதே நேரத்தில், அச்சு, காட்சி ஊடக ஊழியர்களின் நலனை முன்னிட்டு அவர்களின் ஊதியத்தில் அடிப்படை உரிமைகள், வாழ்வாதாரம் ஆகியவை பாதிக்காத வகையில் உறுதிபடுத்தப்பட்ட ஊதிய பலன்கள் வழங்கப்படும்.
- அச்சு, காட்சி, வலைத்தள இதழியலாளர்கள், ஒளிப்படக் கலைஞர்கள், காணொலிப் பதிவாளர்கள், துறை சார்ந்த ஊழியர்கள் அனைவருக்கும் ஆண்டிற்கு ஒரு முறை அரசு செலவில் முழு உடல் ஆய்வுத் திட்டம் செயல்படுத்தப்படும்.
- அச்சு, காட்சி, வலைத்தள ஊடகவியலாளர்கள், புகைப்படக் கலைஞர்கள் மற்றும் காணொலிப் பதிவாளர்களுக்காக, "ஊடகக் கலைக்கூட பயிற்சி மையம்" ஒன்று ஏற்படுத்தப்படும். அதன்மூலம், மாறி வரும் புதுமைக்கேற்ப புதிய பயிற்சிகள் அளிக்கப்படும்.

காட்சி ஊடகங்கள்

- காட்சி ஊடகம் வந்து முப்பது ஆண்டுகள் கடந்துவிட்டது, ஆனாலும் அதில் உள்ளவர்களுக்குச் செய்தி ஒளிபரப்புத் துறையின் எந்த சலுகைகளும், உரிமைகளும் அளிக்கப்படுவதில்லை. இந்த முறையை மாற்றி, காட்சி ஊடகத்தில் இருப்பவர்களுக்கும் அரசின் திட்டங்கள் கிடைக்க நாம் தமிழர் அரசு வழிவகை செய்யும்.

இதழியலாளர்களின் நலன்

- இதழியலாளர்களுக்கு கிடைக்கும் ஓய்வூதியம் மாதம் 12,000 உருபாய் என்பது 15,000 உருபாயாக உயர்த்தப்படும்.
- ஓய்வூதியம் பெற்று வந்த இதழியலாளர் மறைந்த பிறகு, அவரது துணைவியாருக்குக் குடும்ப ஓய்வூதியம் வழங்கும் முறைகளில் உள்ள தடைகளைக் களைந்து எளிமையாக்கப்படும். ஓய்வூதிய விண்ணப்பங்கள் நிலுவையில் இருப்பதைத் தவிர்க்க, ஒவ்வொரு மாவட்டத்திலும் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் (PRO) மற்றும் மூத்த இதழியலாளர் அடங்கிய குழுவை அமைத்துத் தீர்வு காணப்படும். தற்போது செய்தி இணையத்தளங்கள் (News Portals) மற்றும் சமூக ஊடகங்களில் பணியாற்றுபவர்களுக்கும் முறையான ஏற்பிசைவு வழங்கி, அவர்களையும் நல வாரியத்தின் கீழ் கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.




சென்னை பத்திரிகையாளர் மன்றம்
CHENNAI PRESS CLUB







ஓய்வூதியத் திட்டம்

- பொதுவாக இதழியலாளர்களுக்கான பணிக்காலச் சான்றிதழை எந்த நிறுவனமும் வழங்குவதில்லை. அதனால் நீண்டகால இதழியலாளராக இருந்தாலும் அவருக்கு அரசின் சலுகைகள் கிடைப்பதில்லை. நிறுவனங்கள் முழுவதுமாக மூடப்படும்போது பணிச் சான்றிதழ் பெறுவதில் சிக்கல் ஏற்படுகிறது. இதைத் தவிர்க்க, 'மதிப்பிசைவு அட்டை' (Accreditation Card) அல்லது இதழியலாளர் சங்கங்களின் உறுதிமொழியை ஆதாரமாக ஏற்கும் நடைமுறை கொண்டு வரப்படும்.

நெறிப்படுத்தும் குழு

- வலைத்தள ஊடக ஊழியர்களையும் அரசுச் செய்தி ஒளிபரப்புத் துறையின் வரம்பிற்குள் கொண்டு வர, 'வலைத்தளங்கள் முறைப்படுத்தும் குழு' ஒன்று அமைக்கப்படும். அந்தக் குழுவில் அரசு அதிகாரிகளும், இசைவேற்பு பெற்ற இதழியலாளர் சங்கப் பொறுப்பாளர்களும் பங்கு பெறுவார்கள்.

- யாரெல்லாம் இதழியலாளர்கள் என்பதில் பெரும் குழப்பம் நிலவி வருகின்றது. வலைக்காட்சி ஊடகங்கள் பெருகிவிட்ட நிலையில் அவர்களையும் உள்வாங்கும் பொருட்டு சில நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டியுள்ளது. எனவே "பணிபுரியும் இதழியலாளர்" சட்டத்தின்படி, யாரெல்லாம் முழு நேர இதழியலாளர்களாக, அதையே வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்டிருக்கின்றார்களோ, அவர்களை எல்லாம் அக்குழு தேர்வு செய்து இசைவேற்பு பெற்றவர்களாக ஏற்றுக்கொள்ளும் என நாம் தமிழர் அரசு உறுதியளிக்கின்றது.

- இதற்கான நெறிப்படுத்தும் குழுவில் அரசு மற்றும் ஊடக ஒளிப்பட இதழியலாளர்கள் சங்கப் பொறுப்பாளர்களின் குழு அமைக்கப்படும். ஆறு மாதத்திற்குள் நெறிப்படுத்துவதை முடித்து, இசைவேற்புப்பெற்ற வலைத்தளங்களின் ஊழியர்களுக்கு அரசுப் பலன்கள் கிடைக்க இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.



என்தமிழர் படமெடுக்க ஆரம்பஞ் செய்தார்
எடுத்தார்கள் ஒன்றிரண்டு பத்து நூறாக!
ஒன்றேனும் தமிழர்நடை யுடைபா வனைகள்
உள்ளதுவாய் அமைக்கவில்லை உயிர் உள்ளதில்லை
ஒன்றேனும் தமிழருமை உணர்த்துவதா யில்லை!

- பாவேந்தர் பாரதிதாசன்



திரைக்கலை மேம்பாடு



“திரைக்கலையும் பேச்சும் போர்ப்படையின், இரண்டு வலிமையான படைப்பிரிவுகள்”

– தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன்

“திரைக்கலை அறிவியலின் ஓர் அழகான குழந்தை”

– செந்தமிழன் சீமான்


கலைமுகம்

- நாம் தமிழர் அரசு திரைக்கலையைத் தமிழ்த் தேசிய இனத்தின் அழகிய கலை முகமாகவும், தமிழ் மொழி, கலை, இலக்கியம், பண்பாடு, வாழ்வியல் மரபு, அழகியல் போன்றவற்றை உலகறியச் செய்வதற்கான வலிமைமிக்க ஊடகமாகவும் பார்க்கிறது.
- கண் வழியே வெறிமத்தை (போதை) ஊட்டும் வகையில் இல்லாமல், கண்வழி நூலகமாகத் திரைத்துறை மாற்றி அமைக்கப்படும். வெறும் பொழுதைப் போக்குவதற்கான கலையாக இல்லாமல் நல்ல பொழுதை ஆக்குவதற்கான கலையாக மாற்றும்.

திரையில் தேடுகிறோம்

- திரைத்துறையில் இருப்பவர்களுக்கு வாழ வீட்டைத் தராத எம்மக்கள், ஆள நாட்டைக் கொடுத்து விடுகிறார்கள். திரைக்கலையைத் தீண்டத்தகாத கலையாக முற்போக்காளர்கள் பேசினார்கள். ஆனால் ஐயா பெருந்தலைவர் காமராசருக்குப் பிறகு திரைத்துறையைச் சார்ந்த முதலமைச்சராக ஐந்து பேரைத் தமிழ் மக்கள் தேர்ந்தெடுத்துள்ளனர்.
- பிற மாநில மக்களை விட, எம் தமிழக மக்களிடம் திரைப்பட வேட்கை மண்டிக் கிடக்கிறது. அதன் விளைவாகத்தான் எம் இன இளைஞர்கள், மக்களுக்காக ஈகம் செய்த தலைவர்கள் தரையில் இருந்தாலும் தனக்கான தலைவனை திரையில் தேடுகிறார்கள்.




THE MODERN THEATRES LTD


தமிழ்நாடு அரசு
இசைமேதை இளையராஜா இசைக்கல்லூரி

பாடநூலாகச் சேர்க்கப்படும்

- மக்களுக்கான எந்த ஒரு கருத்தையும், சிக்கலையும் மிக எளிதில் உலக அரங்கில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடத் திரைக்கலையால் மட்டுமே முடியும். இரண்டாம் உலகப்போரின் கொடிய முகத்தை உலகத்திற்குக் காட்டியது திரைக்கலையே. பல இருண்ட பக்கங்களை வெளிச்சத்திற்கு கொண்டுவந்து நிறுத்தியதும் திரைக்கலையே. அதனால் திரைப்படக்கலையைத் தொடக்கக் கல்வியில் ஒரு பாடமாக வைக்கப்படும்.

திரைப்பட வளர்ச்சிக் கழகம்

- "தமிழ்நாடு திரைப்பட வளர்ச்சிக் கழகம்" தொடங்கித் தமிழ் மக்களின் வாழ்வியல் மேம்பாட்டுக்கான படங்களை எடுக்க ஏற்பாடு செய்யப்படும். நம் இனம் முன்னேற்றம் காண்பதற்கான வாய்ப்புகளைக் கொண்ட திரைப்படங்கள் கொண்டு வரப்படும். இத்துறைக்குள் ஆர்வமுடன் வருபவர்கள் நலிந்து போகாமல் இருப்பதற்கான அறிவுரைகளும், உதவிகளும் வழங்கப்படும்.

ஆவணக்காப்பகம்

- இன்றைய ஆவணங்கள் நாளைய வரலாறு. எனவே நம் திரைக்கலையைக் குறித்த ஆவணங்களைத் தொடர்ந்து சேகரித்துப் பாதுகாக்க, 'தமிழ்நாட்டு திரைப்பட ஆவணக் காப்பகம்' உருவாக்கப்படும்.

திரைப்படக் கல்லூரிகளும் – விருதுகளும்

- தமிழில் முதலாகத் திரைப்படம் உருவாக்கி இயக்கிய பெருந்தமிழர் நடராச முதலியார் பெயரில் ஒவ்வொரு ஆண்டும் உயரிய விருதுகள் வழங்கப்படும்.
- தமிழ்நாட்டின் ஐந்து மண்டலங்களிலும் நடராச முதலியார், வின்சென்ட் சாமிக்கண்ணு, நடிகர் திலகம் சிவாஜி கணேசன், கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், ஆச்சி மனோரமா பெயரில் திரைப்படக் கல்லூரிகள் தொடங்கப்படும். ஆண்டுதோறும் சிறந்த திரைப்படங்களுக்கும், தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும் அத்துறையில் முன்னோடியாக விளங்கிய தமிழ் அறிஞர்களின் பெயரில் விருதுகள் வழங்கப்படும்.

இசைக்கல்லூரி

- இசைமேதை இளையராஜா பெயரில் மாபெரும் இசைக்கல்லூரி தொடங்கப்படும். தற்போதுள்ள தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரியில் கருநாடக இசைக்கு மட்டுமே முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. நீண்ட போராட்டங்களுக்குப் பிறகு தான் தமிழ் இசையும், நாட்டுப்புறக் கலைகளும் பாடமாகச் சேர்க்கப்பட்டது.
- இசைமேதை இளையராஜா பெயரில் தொடங்கப்படும் இசைக்கல்லூரியில் தமிழ் இசை, மேற்கத்திய இசை, இந்திய இசை, கருநாடக இசை, நாட்டுப்புற இசை என அனைத்தும் பயிற்றுவிக்கப்படும்.



தனித் தணிக்கைத் துறை

- தமிழ்நாட்டுக்கென்று தனித் தணிக்கைத் துறை ஏற்படுத்தப்படும். திரைக்கலை மற்றும் சின்ன திரையினுடைய கட்டுப்பாடுகள் ஒன்றிய அரசின் வசம் மட்டுமே குவிந்திருப்பது அதிகாரப் பறிப்பாகும். எனவே நாம் தமிழர் அரசு ஒன்றிய அரசுடன் பேசி, 'மாநிலத் தணிக்கைத் துறை' ஒன்றை ஏற்படுத்தும்.

திரைப்படங்களை அரசே வாங்கும்

- தமிழ்ப் படங்களில் தமிழ் மொழி, பண்பாட்டை மேம்படுத்தி எடுக்கும் படங்களுக்கு அரசு பொருளாதார உதவி செய்து வரி விலக்கு அளிப்பதோடு, அரசே சிறந்த திரைப்படங்களை வாங்கித் திரையிடச் செய்யும்.
- இவற்றுக்கு எதிராக இருக்கும் படங்களுக்கும், தமிழில் தலைப்பு இல்லாத படங்களுக்கும் இரட்டிப்பு வரி விதிக்கப்படும்.

குறைந்த வாடகை

- சேலம் மாவட்டம் ஏற்காட்டில் 'மாடர்ன் தியேட்டர்ஸ்' நடத்தி வந்த திரைக்கலை மேதை ஐயா டி.ஆர்.சுந்தரம் அவர்களின் பெயரில் தமிழகத்தில் உள்ள இயற்கை எழில் கொஞ்சும் இடங்களில் 'திரைப்பட நகர்' அமைத்தும், அரங்கங்கள் நிறுவியும் முறையான தொகைக்கு வாடகைக்கு விடப்படும்.

கலைத் தூதுவர்கள்

- திரைப்படங்களை இணையத்தில் அனுமதியற்று வெளியிடுபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இதன்மூலம் படம் எடுப்பவர்கள் இழப்படைவது தடுக்கப்படும்.
- திரையரங்கக் கட்டணம், ஊர்தி நிறுத்தக் கட்டணம், திரையரங்குகளில் விற்கப்படும் உணவுப்பொருள்கள் விலை ஆகியவை முறைப்படுத்தப்படும்.
- பல்வேறு நாடுகளில் நடத்தப்படும் உலகத் திரைப்பட விழாக்களுக்குத் தமிழர்களின் வாழ்வியலை மேம்படுத்தும் தகுதியான திரைப்படங்களைத் தேர்வு செய்து அதை உருவாக்கிய, இயக்கிய கலைஞர்களை 'கலைத் தூதுவர்களாக' அனுப்பி வைப்பதோடு சிறந்த நடிகர்கள், தொழில்நுட்பக் கலைஞர்களை அரசே தத்தெடுத்துக்கொள்ளும்.
- கேன்ஸ் திரைப்பட விழா (Cannes Film Festival), ரோட்டர்டாம் திரைப்பட விழா (International Film Festival Rotterdam) போன்று ஒவ்வோர் ஆண்டும் உலகின் பல்வேறு மொழிகளில் வெளியாகும் சிறந்த திரைப்படங்களைத் திரையிடும் வகையில் உலகத்திரைப்பட விழாவை அரசே நடத்தும்.

தனிக்குழு அமைக்கப்படும்

- திரைப்படங்களின் தொலைக்காட்சி உரிமை வாங்க ஒரு குழு அமைத்து இரு தரப்பினரையும் சார்ந்த கலைஞர்கள் மற்றும் ஆக்குநர்கள் பாதிக்கப்படாத

வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். அனைத்துத் திரைப்படங்களும் தொலைக்காட்சியில் ஒளிபரப்பும் ஒவ்வொரு முறையும் அதற்கான வெகுமதியை ஆக்குநர்கள் மற்றும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கலைஞர்களுக்குப் பெற்றுத் தரப்படும்.

பெருமைமிகு முன்னோர்கள், தலைவர்கள் பெயரில் திரைப்படங்கள்

- எமது பெரும்பாட்டனார்கள் தீரன் சின்னமலை, பூலித்தேவன், பண்டார வன்னியன், மருது பாண்டியர்கள், பாட்டி வேலுநாச்சியார் போன்ற எம் இன முன்னோர்களின் வீர வரலாறுகளை அரசே உருவாக்கி வெளியிட்டு ஆவணமாகப் பாதுகாப்பதோடு, சமூக மாற்றத்திற்குத் தன் வாழ்வை ஒப்படைத்த பெருந்தமிழர்கள் ஐயா அயோத்திதாச பண்டிதர், சிங்காரவேலர், இரட்டைமலை சீனிவாசன், ஐயா முத்துராமலிங்கத்தேவர், புரட்சிப்பாவலர் பாரதிதாசன், பா.ஜீவானந்தம், ம.பொ.சி, சி.பா.ஆதித்தனார் போன்ற பெருமைமிகு சான்றோர்களின் வாழ்க்கை வரலாறு ஆவணப்படமாக உருவாக்கி வெளியிடப்படும்.
- மொழிப்போரில் இறந்த மொழிப்போர் ஈகியர்களின் வரலாறும், இனத்திற்காக உயிர்விட்ட ஈகியர் அப்துல்ரவூப், முத்துக்குமார், முருகதாஸ், செங்கொடி, அமரேசன், சோதி, இளமணி, சீவானந்தம், இரவி, சிவப்பிரகாசம், மாரிமுத்து, சதாசிவம், சீனிவாசன், சுப்பிரமணி, இராசசேகர், இராஜா, கிருட்டிணமூர்த்தி, இரவிச்சந்திரன், கோகுல் ஆகியோரின் வரலாறும் ஆவணப்படமாக எடுத்து வெளியிடப்படும்.

சின்னத்திரை

- சின்னத்திரைக்கு வாரியம் ஏற்படுத்தப்படும்.
- பெண்கள், குழந்தைகள் உட்பட குடும்பத்தினர் அனைவரும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அதிகமாகப் பார்ப்பதால் அந்நிகழ்ச்சிகளையும் அதில் வரும் விளம்பரங்களையும் அரசு முறையாகத் தணிக்கை செய்து ஒளிபரப்ப வழிவகை செய்யப்படும்.
- திரைப்படத்தைப் போலவே தமிழ்மொழி, பண்பாடு, மெய்யியலை மேம்படுத்தும் தொலைக்காட்சித் தொடர்களுக்கு அரசு பொருளாதார உதவிகள் செய்யும்.
- சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற பெரும் காப்பியங்களை நெடுந்தொடராக அரசே உருவாக்கி ஒளிபரப்பு செய்யும்.
- சிறந்த சின்னத்திரை கலைஞர்களுக்கு ஆண்டுதோறும் விருதுகள் வழங்கப்படும்.

குறும்படங்கள்

- குறும்படங்களைத் திரையில் வெளியிடும் நிலை உருவாக்கப்படும்.
- சிறந்த குறும்படங்களை அரசே வாங்கித் திரையிடச் செய்யும்.
- மாவட்டந்தோறும் குறும்படவிழாக்கள் நடத்தப்பட்டு விருதுகள் வழங்கப்படும்.



பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்.

– தமிழ்மறை (996) – வள்ளுவப்பெருமகனார்



என் தாய்மொழி உங்கள் அடித்தளத்தை
ஆட்டம் காணச் செய்கிறது என்றால்;
உங்களின் கட்டுமானத்தை எங்கள்
தாய் நிலத்தில் கட்டி இருப்பீர்கள்.

– எழுத்தாளர் குருதீஸ் மூசா

கலை, இலக்கிய, பண்பாட்டு மீட்சி

> உயர்ந்த பண்பாட்டோடு வாழ்ந்தவர்கள் தமிழர்கள். ‘பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்’ என்று இந்த உலகத்திற்கு முதலில் பொதுவுடைமைக் கருத்தைச் சொன்னவர் நம் முப்பாட்டன் திருவள்ளுவர். மொழி, கலை, பண்பாட்டில் சிறந்தோங்கி வாழ்ந்த நம் இனத்தின் அடையாளங்கள் அனைத்தையும் மீட்டுருவாக்கம் செய்வதே நாம் தமிழர் அரசின் இலக்கு.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்

- தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பல தமிழ் அறிஞர்களுக்கு ஒரே இடத்தில் வேலைவாய்ப்பு உருவாக்கித் தரப்படும். அவர்களைக் கொண்டு, ஓலைச்சுவடிகள், கல்வெட்டு, கடலாய்வு, மெய்யியல், மொழியியல், தமிழிசை, நாட்டுப்புறக்கலைகள் போன்ற துறைகளில் உயர் ஆய்வுகளை மேற்கொள்ளவும், அதை உலகளவில் முன்னெடுத்துச் செல்லவும் நடவடிக்கை எடுக்கப்படும்.
- தனியார்களிடம் இருக்கும் ஓலைச்சுவடிகளை அரசே பொறுப்பேற்றுப் பாதுகாப்பை அளிக்கும். தஞ்சை சரசுவதி மகாலில் பூட்டப்பட்டுக் கிடக்கும் ஓலைச்சுவடிகள் அரசு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படும். இதுவரை வாசிக்கப்படாமலே இருக்கின்ற இலக்கக்கணக்கான ஓலைச்சுவடிகளைப் படித்தாய்ந்து வெளிக்கொண்டுவர அறிஞர்கள் குழு அமைக்கப்படும்.





களரி



மான் கொம்பு



சிலம்பம்



மற்போர்



வாள் சண்டை

- அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள ஓலைச்சுவடிகளைவிட தனியார் நிறுவனங்களிடம் உள்ள ஓலைச்சுவடிகளில் தமிழ் மீட்சிச் சான்றுகள் சிறப்பாக உள்ளது என்ற அவப்பெயரைப் போக்க, நாம் தமிழர் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும். பண்டைய சங்ககால இலக்கியங்கள் அனைத்தும் முறையாக ஆவணப்படுத்தப்படும்.

ஆதிக் கலைகள் மீட்பு

- பறையிசை, தெருக்கூத்து, மயிலாட்டம், ஒயிலாட்டம், காவடியாட்டம், கரகாட்டம், தேவராட்டம், சிலம்பம், மற்போர், கும்மியாட்டம் போன்ற மரபுக் கலைகள் எல்லாம் இதுவரையான ஆட்சியளார்களின் மெத்தனத்தாலும் மொழி இனக்கலப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களாலும் சிதைந்து கொண்டிருக்கின்றன. பல கலைகள் மறைந்தும் போயுள்ளது. இவற்றை எல்லாம் மீட்டுருவாக்கம் செய்ய, மாவட்டந்தோறும் தமிழகச் சுற்றுலாத் துறையோடு சேர்ந்து பட்டறைக் கலை நிகழ்ச்சிகளாக புதிய தலைமுறை இளைஞர்களுக்குப் பயிற்றுவிக்கப்படும்.

போர்க்கலைகள்

- தமிழனின் போர்க்கலைகளான சிலம்பாட்டம், வாள்வீச்சு, களரி, மான் கொம்பு, மற்போர், வருமம், நோக்கு வருமம் உள்ளிட்ட போர்க்கலைகள் மீட்டுருவாக்கம் செய்யப்படும். முதன்மைப் பெருநகரங்களில் இவற்றிற்கான சிறப்புப் பயிற்சிக்கூடங்கள் தனியாக அமைக்கப்படும்.

- பள்ளி, கல்லூரிகளில் இருந்தே தமிழர்களின் இந்த மரபுவழிப் போர்க்கலைகள் கற்றுத்தரப்படும், தற்காப்பிற்கும் உடல் நலத்திற்காகவும் இது பயிற்றுவிக்கப்டும்.

- கொரிய நாடு டேக்வாண்டோ தற்காப்புக் கலையை உலகளவில் விளையாட்டுப் போட்டியாக கொண்டு வந்துவிட்டார்கள். ஜப்பான், சீனா போன்ற நாடுகள் கராத்தே போட்டியைக் கொண்டு வந்துள்ளது. ஆனால் நம் தமிழர்களிடம் இந்த சிறப்புமிக்கக் கலைகளில் சிலம்பம் மட்டும் இப்போது விளையாட்டுப் போட்டிகளில் காலடி வைத்துள்ளது. இந்த நிலையை மாற்றித் தமிழர்களின் கலை ஒவ்வொன்றையும் பன்னாட்டளவிற்குக் களம் இறக்க வேண்டும். அதற்கு உரிய அனைத்துக் கட்டமைப்புகளையும் நாம் தமிழர் அரசு மேற்கொள்ளும்.


எங்கும் தமிழ் இசை

- தமிழிசை மூவர் என்பவர்கள் அருணாசலக் கவிராயர், முத்துத் தாண்டவர் மற்றும் மாரிமுத்தாப் பிள்ளை எனும் மூன்று பெருமக்கள். இவர்கள் தமிழிலேயே பாட்டெழுதி பாடி தமிழ் இசையை வளர்த்தனர்.

- இவர்களின் பெயரில் ஆண்டுக்கு ஒரு முறை சிறப்பான இசைவிழா நடத்தப்படும். இதுவரை இருந்த ஆட்சியாளர்கள் அதைப் பெயரளவுக்கே நடத்தி வந்திருக்கின்றார்கள். நாம் தமிழர் அரசு அதற்குப் போதிய பொருள் ஒதுக்கி இசை ஆய்வுகளுடன் கூடிய உயரிய கட்டமைப்பாக மாற்றி அமைக்கும்.

- கோயில்களில் நடக்கும் திருவிழாக்களிலும், பொங்கல் உள்ளிட்ட திருவிழா நிகழ்ச்சிகளிலும், மற்ற மரபுக் கலை நிழச்சிகளின் போதும், தமிழ் இசை விழாவும் சிறப்பாக நடத்தப்படும். இசை அறிஞர்களை அழைத்து இசை வளர்ச்சிக்கென்றே தமிழ் இசை ஆராய்ச்சி நடுவம் அமைக்கும்.






வீரமங்கை வேலுநாச்சியார்



வீரன் சுந்தரலிங்கம்



தீரன் சின்னமலை



கோனேரிக்கோன் கோட்டை



பூலித்தேவன்



பெரும்பிடுகு முத்தரையர்



மருதுபாண்டியர்

சிற்றூர்க் கோயில்களில் தமிழ்

- தமிழகத்தில் உள்ள 30,000 சிற்றூர்க் கோயில்களில் தமிழ்முறையில் வழிபாடு என்பது கட்டாயமாக்கப்படும். அவர்களுக்கான அமைப்பு ஒன்றை உருவாக்கி, அதன் மூலம் தொடர்ந்து திருமுறைகளும், நாலாயிர தேம்பனுவல் (திவ்யப்பிரபந்தம்) உள்ளிட்ட தமிழ் வழிபாட்டு முறைகளும் பயிற்றுவிக்கப்படும்.

சிறப்பு ஆய்விதழ்

- தமிழினம் குறித்த சிறந்த ஆய்வு நூல் ஒன்று மாதந்தோறும் வெளிக்கொண்டு வரப்படும். அந்த இதழில் தமிழர்களின் தொன்மம், இலக்கியம், பண்பாட்டு முறைகள், இடப்பெயர்வுகள், பிற மொழிகளில் தமிழ் கலப்பு, பிற இனத்தவர்களிடம் தமிழ் மரபு என்று அறிஞர் பெருமக்களால் ஆய்வு செய்யப்பட்ட சிறப்புக் கட்டுரைகள் இருக்கும்.
- உலகில் வேறெங்கெல்லாம் தமிழ், தமிழ்ச்சமூகம் பரவியிருக்கின்றது, அதற்கான ஆதாரங்கள் என்ன என்பதற்கான தேடல் ஆய்வுகளும், ஆதாரங்களுடன் பதிவு செய்யப்படும். சங்க இலக்கியங்கள், மறைந்துபோன அல்லது மறைக்கப்பட்ட தொல்லியல் வரலாறு போன்ற பல ஆய்வுகளும் தாங்கியதாக இந்த இதழ் இருக்கும்.

துறை சார்ந்த ஆய்வு நூல்கள்

- கணிதம், அறிவியல், வரலாறு, கணினி உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் வெளிவரும் ஆய்வுகள் அனைத்தும் தமிழிலேயே ஆய்விதழாகக் கொண்டு வரப்படும்.
- அதே போன்று உலகின் பல்வேறு மொழிகளில் வெளிவரும் புதிய தகவல்கள், ஆய்வுகள், சிறப்புக் கட்டுரைகள், கண்டுபிடிப்புகள் உள்ளிட்ட அனைத்தும் உடனுக்குடன் தமிழில் மொழிபெயர்க்கப்படும். இதற்கெனத் துறைசார் வல்லுநர்கள் அமர்த்தப்படுவார்கள்.

தமிழகத் தொல்லியல் துறை

- மாநில அரசின் கீழ் தனியே ஒரு தொல்லியல் துறை அமைக்கப்படும். தமிழ் மண்ணில் ஆதிச்சநல்லூர், கீழடி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் ஆய்வு செய்து புதைந்த வரலாற்றை மீட்டெடுப்போம். மைசூரில் பூட்டிக்கிடக்கும் பண்டைய தமிழ்க் கல்வெட்டுகள் அனைத்தும் மாநில அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்படும்.


ஏறு தழுவுதல்

- ஏறு தழுவும் விளையாட்டு தமிழர்களின் இறையாண்மை சார்ந்தது. ஆண்டாண்டு காலமாய் வீரியமான காளைகளின் மூலம் அதன் வீரியமிக்க மரபணுக்களைக் கடத்திக்கொண்டிருக்கும் சிறப்பும் ஏறு தழுவுதலில் இருக்கின்றது.
- உலகம் முழுதும் மரபணு மாற்றப்பட்டக் கலப்பின (JERSEY) மாடுகளின் விற்பனை பரவலாக்கப்பட்டது. அப்படித் தமிழகத்திற்குள்ளும் நுழைக்கப்பட்டது. இதனால் தற்போது தமிழகமெங்கும் கலப்பின வகை மாடுகளே நிரம்பியிருக்கிறது. அதிகம்





மஞ்சுவிரட்டு



மரத்தச்சர்



சேவற் சண்டை



மண் பானை செய்தல்





கூடை முடைதல்

பால் கொடுக்கிறது என்ற காரணத்திற்காக மட்டுமே இந்த வகையை மக்கள் வாங்குகிறார்கள்.

- இப்போது உலக நாடுகள் பலவும் கலப்பின மாடுகளின் A-1 வகை பாலைத் தடை செய்து கொண்டிருக்கிறது. காரணம் மாந்த குலத்திற்கு ஒவ்வாத, பல புதிய நோய்களை A-1 வகை பால் கொடுத்துக் கொண்டிருப்பதுதான்.
- தமிழகத்தின் நாட்டு மாடுகள் மாந்த குலத்திற்கு ஏற்ற, நோய் எதிர்ப்புச் சத்தைக் கூட்டக்கூடிய A-2 வகைப் பாலை கொடுத்துக்கொண்டிருக்கிறது. நாட்டு மாடுகளின் உருவாக்கத்திற்கு நாட்டுக் காளை மாடுகள் மிகத்தேவை. இந்த நுணுக்கத்தை அறிந்துதான் பன்னாட்டு நிறுவனங்களின் கட்டளைக்கு இணங்க ஏறுதழுவுதல் விளையாட்டிற்குத் தடை அறிவித்தார்கள்.
- ஆண்டுக்கு ஒரு முறைதான் அந்த விளையாட்டு. மற்றக் காலங்களில் இனப்பெருக்கத்திற்குத்தான் பயன்படுத்தப்படுகிறது. இதனால் நாம் தமிழர் அரசு ஏறு தழுவுதலை அரசு விழாவாக ஏற்று நடத்தும்.

சேவல் – ஆட்டுக்கடாச் சண்டை

- சிற்றூர்கள் தோறும் ஆடு, சேவல்களுக்கான சண்டை நடந்து வருவது வழக்கம். இரண்டு சேவல்கள் மோதிக் கொள்ளும் போது அதில் வீரியமான சேவல் வெற்றி பெறுகிறது. வெற்றி பெற்ற சேவலைத்தான் இனப்பெருக்கத்திற்குப் பயன்படுத்துவார்கள். இப்படிச் செய்வதன் மூலம் நோய் எதிர்ப்புத் திறன் அதிகம் கொண்ட வீரியமிக்க மரபணுக்களைக் கடத்தப்படும். இதற்காகவே இப்படியான சேவல்ச் சண்டைகளும் ஆட்டுக்கடாச் சண்டைகளும் நடத்தப்படுகிறது. எனவே தமிழினத்தின் பண்பாட்டைக் காக்கும் வகையில் இவ்வகையான விளையாட்டுகளை நாம் தமிழர் அரசு ஊக்குவிக்கும்.

மரபுசார் தொழில் மீட்பு

- தமிழர்களின் கலை இலக்கியம், பண்பாட்டோடு, நாட்டுப்புறக் கலைகள், நம் முன்னோர்களின் மரபுவழித் தொழிலான மரத்தச்சர், கல்தச்சர், பெருந்தச்சர், ஓவியர், படிமக்கலை, பைஞ்சுதை, படக்கலை, பொற்கொல்லர், கருங்கொல்லர், மண்பாண்டக் கலை, பாரிவேட்டை, மஞ்சு விரட்டு, கூடைமுடைவார், பொம்மலாட்டம், பனுவல் பயிற்சி, பண் இசை, ஊர்ப்புற விளையாட்டு, மெய்யியலைப் பயிற்றுவிக்கும் முதியோர் அவை உள்ளிட்ட பலவும் மீட்டுருவாக்கம் செய்யப்படும். மரபு வழியிலான தொழிற்பயிற்சிக்கூடங்கள் அமைக்கப்படும்.

தமிழின ஒருங்கிணைப்பும் – முன்னேற்றமும்

- ஆதியில் தமிழர்க்கு சாதி இல்லை. பாதியில் வந்த கொடுமைதான் சாதியப் பாகுபாடுகளும் சமய சச்சரவுகளும்.
- நமது முன்னோர்களான சேர, சோழ, பாண்டிய வேந்தர்கள் காலத்தில் அரசியல் மோதல்களும் அதற்கான போர்களும் நடைபெற்றுள்ளதாகத்தான் வரலாற்றில் படிக்கிறோம், சாதி மோதல்கள் நடைபெற்றதாக எங்கும் காணப்படவில்லை. கி.பி.12ஆம் நூற்றாண்டு வரையில்கூட, இன்று பட்டியல் சமூகத்தவராக மாற்றப்பட்ட, பறையர்கள், சாம்பவர்கள் சமூகம் 'படைவீடு' தலைநகராகக் கொண்டு வடஆற்காடு மாவட்டப் பகுதியை ஆண்டு வந்திருக்கின்றார்கள்



எனவும், சேர சோழ பாண்டியர்களை வீழ்த்திய விசயநகரப் பேரரசு இவர்களை வீழ்த்த முடியாமல் ஓராண்டுக்கும் மேலாகத் தொடர்ச்சியாகப் போரிட்டுத்தான் வீழ்த்தினார்கள் என்றும் வரலாற்று ஆவணங்கள் கூறுகின்றன.

- விசயநகரப் பேரரசு நுழைந்த பிறகுதான் தமிழர்களிடத்தில் சாதியும் கூடவே ஆரியர்கள் முன் வைத்த சனாதனமும் பரவியது. இந்த உண்மை வரலாற்றை எடுத்துச்சொல்லி சாதி ஒழிப்பு அரசியல் செய்யாத திராவிடர்களின் ஆட்சி, திட்டமிட்டு விசயநகர மன்னர்களின் சூழ்ச்சியை மூடி மறைத்தது. திராவிடத் தலையெடுப்புக்குப் பிறகுதான் இன்னும் இங்கே சாதி மோதல்களும், கலவரங்களும் வளரத் தொடங்கியது.

கீழ்வெண்மணி படுகொலை

- ஆதித்தமிழ்க்குடி மக்கள் அறுவடைக் கூலி உயர்வு கேட்ட ஒரு காரணத்திற்காகவே தஞ்சை மாவட்டம் கீழ்வெண்மணியில் 44 பேரை ஒரே குடிசைக்குள் போட்டு உயிருடன் எரித்துக் கொன்றார் கோபாலகிருட்டிண நாயுடு. இக்கொடுமை 1968இல் அறிஞர் அண்ணா ஆட்சிக் காலத்தில் நடந்தது. சமூகநீதி பேசி அரசியலுக்கு வந்தவர்கள் ஆட்சியில்தான் நடந்தேறியது. அந்தக் கோபால கிருட்டிணன் குற்றமற்றவர் என விடுதலையானதும் திராவிடர் ஆட்சியின் காவல்துறை ‘செயல்பாட்டால்’தான்.

மாஞ்சோலை அரசியல்

- அதே போன்று 1966ஆம் ஆண்டு காலகட்டத்தில் கோவை மாவட்டம் வால்பாறையில் கூலி உயர்வு கேட்டுப் போராடிய தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மீது காவலர்படை சுட்டதால் ஒருவர் பலியானார். காங்கிரசு ஆட்சியில் நடந்த அந்தத் துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் மரணத்தை வைத்து

  “கூலி உயர்வு கேட்டான் அத்தான் குண்டடிப்பட்டு செத்தான்”

  என 1967இல் நடந்த தேர்தலின்போது சுவரொட்டி ஒட்டிய தி.மு.க. தான், பிறகு தனது 1999 ஆட்சிக்காலத்தில் மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்டு ஊர்வலம் போனபோது 17 தமிழர்களைத் தாமிரபரணி ஆற்றில் தள்ளி அடித்துக் கொன்றது. இப்படித் தொடர்ந்து பல சாதி மோதல்களை திராவிடம் வளர்த்தது.

விழுக்காட்டின் அடிப்படையில் இடப்பகிர்வு

- தமிழகத்தின் வகுப்புரிமை பெறும் சமூகங்களாக, பட்டியல் (S.C, S.T) 76+36=112 சமூகங்களாகவும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (MBC) 109 சமூகங்களாகவும், பிற்படுத்தப்பட்ட மக்களாகக் கிட்டத்தட்ட 200 சமூகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். இதில் பலன் பெறும், தமிழ்ச் சமூகங்களின் எண்ணிக்கை மிகக்குறைவு. தமிழ்நாட்டின் 69 விழுக்காடு இடப்பகிர்வில் பெரும்பாலான இடங்களைப் பிற மொழியாளர்களே கைப்பற்றிக் கொள்கிறார்கள். தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்டவர்கள் மிகக் குறைவான வேலைவாய்ப்பையே பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். எனவே நாம் தமிழர் அரசு குடிகள் வாரியாக, மொழி வாரியாக கணக்கெடுப்பை நடத்தி அதற்கேற்ற விழுக்காட்டின் அடிப்படையில் இடப்பகிர்வு அளிக்கும். அதே நேரத்தில் தமிழரல்லாத பிறமொழிக் குடிகளுக்கு, அந்தந்த மாநிலத்தில் தமிழர்களின் குடிகளுக்கு எந்த விழுக்காடு ஒதுக்கப்படுகிறதோ, அதே அளவுக்கான இடப்பகிர்வு தமிழக வேலைவாய்ப்பில் வழங்கப்படும்.

புதிய கட்டமைப்பு

- சாதி ஒழிப்பு, சமத்துவம், சம உரிமை, தன்மான உணர்வு என்ற நோக்கில் புதிய வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு தமிழ்ச் சமூகம் கட்டியமைக்கப்படும்.

பணி நீக்கம் செய்யப்படுவார்கள்

- சாதி, மத வேறுபாடு கற்பித்து அதன் அடிப்படையில் செயல்படும் அரசு அலுவலர்கள், அதிகாரிகள் அவர்கள் எத்துறையைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் எந்த வகைச் சலுகையுமின்றி பணி நீக்கம் செய்யப்படுவார்கள்.

வழிபாட்டுத்தலங்களில் சம உரிமை

- தமிழரில் எல்லோரும் பிறப்பால் சமம் என்ற அடிப்படையில் நாம் தமிழர் அரசு புதிய சட்டடங்களை இயற்றும். வழிபாட்டு உரிமை என்ற வகையில் தமிழ் மக்கள் அனைவரும் சமத்துவத்துடன் அனைத்து வழிபாட்டுத் தலங்களிலும் சென்று வழிபடும் உரிமையை நாம் தமிழர் அரசு உறுதி செய்யும்.

தமிழர் இன வரலாறு – பாடத்திட்டம்

“வேரை இழந்த மரமும், மொழியை மறந்த இனமும் வாழ்ந்ததாக வரலாறு இல்லை.”

- வரலாற்றில் தெளிவு பெறாத எந்த இனமும் எழுச்சி பெறமுடியாது என்றார் புரட்சியாளர் லெனின். வரலாற்றைப் படிக்காதவன் வரலாற்றைப் படைக்கமுடியாது என்றார் அண்ணல் அம்பேத்கர். என்னை உருவாக்கியது என்நாட்டு வரலாறு என்றார் இட்லர். வரலாற்றைப் படி, வரலாற்றைப் படை, வரலாறாகவே வாழ் என்றார் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள்.

- வரலாற்றைப் பாதுகாக்கும் எல்லா இனங்களும் பாதுகாப்பாக வாழ்கிறது. எம்மின வரலாற்றில் வாழ்ந்ததையும் வீழ்ந்ததையும் நாங்கள் வாசித்து நேசித்து தெரிந்து கொள்ளாமல் எழமுடியாது.

வரலாறு இல்லாதவனுக்கு நிகழ்காலம் தெரியாது!
நிகழ்காலம் இல்லாதவனுக்கு எதிர்காலம் இல்லை!

எம் இன வரலாற்றை எங்கள் பிள்ளைகள் தெரிந்து கொள்ள வேண்டும்.

- ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு மூத்த நீண்ட நெடிய வரலாற்றுப் பெருமை கொண்ட தமிழர் தேசிய இனம் திராவிட ஆட்சிகளால் ஐம்பது ஆண்டுக்குள் குறுக்கப்பட்டுள்ளதை மீட்டெடுக்க வேண்டும்.

பாடத்திட்டங்களில் முன்னோர்கள்

- எமது முன்னோர்களுடைய வீரம் செறிந்த போராட்டங்கள், ஆட்சிமுறை அவர்களுடைய ஒழுக்கம், அவர்களுடைய நிருவாகத் திறன் போன்றவற்றை அறிந்து தெரிந்து கொள்வதற்காக அவை எமது பிள்ளைகளுக்குப் பாடமாக வைக்கப்படும்.

- அதன்படி கரிகாற்சோழன், அருண்மொழிச்சோழன், அரசேந்திரச் சோழன், எல்லாளன், பண்டாரவன்னியன், தீரன் சின்னமலை, பூலித்தேவன், வேலுநாச்சியார், மருதுபாண்டியர், அழகுமுத்துக்கோன் போன்ற எம் இன முன்னோர்களின் வரலாறுகளை எம் பிள்ளைகளுக்குப் பாடமாக வைத்துப் பயிற்றுவிக்கப்படும்.



நீதித்துறைச் சீர்திருத்தம்

ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை. - தமிழ்மறை (541) - வள்ளுவப்பெருமகனார்

நீதிபதிகளின் தேர்வு (Civil Judge)

- நீதித்துறை தேர்வுக்கு 3 ஆண்டுகள் வழக்குரைஞராகப் பணியாற்றியிருக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதுகுறித்த விதிகளை மாநில அரசு வரையறை செய்திடும். குறிப்பாக 3 ஆண்டுகள் வழக்குரைஞராகப் பணியாற்றியிருப்பது குறித்து ஆய்வு செய்திட நீதிமன்ற பதிவாளரை உள்ளடக்கிய குழு உருவாக்கப்படும்.
- பணம் படைத்த, அமைப்பு சார்ந்து பலம் கொண்ட வழக்கறிஞர்கள் மட்டும் பயன்பெறுவதைத் தடுத்து, ஏழை எளிய மாணவர்கள், வழக்கறிஞர்கள் அனைவரும் சரியான மற்றும் சமமான முறையில் 3 ஆண்டுக்கான சான்றினைப் பெறுவதை மேற்கண்ட குழு உறுதி செய்யும்.
- மக்கள் நலனுக்காகக் குறைந்த கட்டணத்தில் நேர்மையுடன் வழக்குகளை நடத்தியிருக்கும் வழக்கறிஞர்களுக்கு நீதிபதிகள் நியமனத்தில் முன்னுரிமை அளிக்கப்படும். தூய சேவை, சமூக விழிப்புணர்வு சிந்தனை மற்றும் நன்மதிப்பின் அடிப்படையில் நேர்முகத்தேர்வில் சிறப்பு மதிப்பெண்கள் அளிக்கப்படும்.

பதவி உயர்வு

- நீதிபதியாகப் பதவியேற்ற நாள் முதல் அவர்கள் வழங்கிய அனைத்துத் தீர்ப்புகளையும் ஆய்ந்து அதில் நீதிபதிகளின் நேர்மைத்திறன், சட்ட நுணுக்கங்கள், தெளிவானத் தீர்ப்பு முறைகள் ஆகியவற்றை மதிப்பிட்டு தரப் பட்டியல் தயாரிக்கப்படும். அதன் அடிப்படையில் பதவி உயர்வுகளில் முன்னுரிமை அளிக்க வழிவகை செய்யப்படும். இதில் அரசியல் அழுத்தங்கள், தலையீடுகள் ஏதும் இருக்காது.

கூடுதல் நீதிமன்றங்கள் மற்றும் நீதிபதிகள்

- சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் தமிழ்நாடு மாவட்ட நீதிமன்றங்களில் சற்றொப்ப 14 இலட்சத்திற்கும் அதிகமான வழக்குகள் நிலுவையில் உள்ளன. மாவட்ட நீதிமன்றங்களில் உள்ள உரிமையியல் வழக்குகளில் சற்றொப்ப 15 விழுக்காடு வழக்குகள் 10 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளன.
- மாவட்ட மற்றும் சார்பு நீதிமன்றங்களில் ஏறக்குறைய 18 - 20 விழுக்காடு நீதிபதிப் பணியிடங்கள் இன்னும் நிரப்பப்படாமல் உள்ளன.
- தமிழகத்தில் 10 இலட்சம் பேருக்கு ஏறத்தாழ 16 - 18 நீதிபதிகளே உள்ளனர். இது தேசிய சராசரியைவிட அதிகம் என்றாலும், பரிந்துரைக்கப்பட்ட 50 நீதிபதிகள் என்ற இலக்கைவிட மிகவும் குறைவு.




- எனவே 10 இலட்சம் மக்களுக்கு 50 நீதிபதிகள் என்ற எண்ணிக்கையை எட்டிட நீதிமன்ற ஆள்வரை வகுக்கப்பட்டு, நீதிமன்ற எண்ணிக்கையும் அதிகரிக்கப்படும்.
- உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியால் பரிந்துரைக்கப்படும் உயர் நீதிமன்றத்திற்கான நீதிபதிகளின் பெயர்கள் உடனடியாகப் பரிசீலிக்கப்பட்டு ஒன்றிய அரசுக்குத் தெரிவிக்கப்படும். கால தாமதமின்றி நீதிபதிகள் நியமிக்கப்பட ஒன்றிய அரசு முடிவெடுப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் தமிழர் அரசு மேற்கொள்ளும்.

இணையவழி வழக்குப்பதிவு முறை

- அண்மையில் (2025 டிசம்பர் முதல்) நடைமுறைப்படுத்தப்பட்டு வழக்கறிஞர்களின் தொடர் போராட்டத்தினால் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள, முற்றிலுமாக இணையவழியில் மட்டுமே வழக்குகளைப் பதிவு செய்யும் முறை ஏழை எளிய வழக்கறிஞர்கள் மற்றும் மக்களுக்கு எதிராக அமைகிறது. நகரங்கள் தவிர்த்த ஏனைய பகுதிகளில் உள்ள நீதிமன்றங்களில் இந்த முறையை செயல்படுத்துவதில் நடைமுறைச் சிக்கல்கள் நிறைய உள்ளன.
- இணையவழி மற்றும் நேரடி வழக்குப் பதிதல் என்கிற இரண்டும் கலந்த (Hybrid) முறையே சரியானதாகும்.
- நீதிமன்ற அலுவல் விதிகளை மாற்றியமைக்கும் அதிகாரம் சென்னை உயர் நீதிமன்றத்திடமே உள்ள காரணத்தால், வழக்கறிஞர் மற்றும் பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு நாம் தமிழர் அரசு துணை நிற்கும்.
- மேலும், வலுவான தொழில்நுட்ப உள்கட்டமைப்பை வழங்குவதன் வழியிலும், நீதிமன்ற பணியாளர்களுக்கு விரிவான பயிற்சி வழங்கிடவும், கட்டாய இணையவழி வழக்குத் தாக்கல் செயல்முறையை எளிதாக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.
- நீதிமன்றந்தோறும் இணையவழி வழக்குத் தாக்கல் முறைக்கான நடுவங்கள் நிறுவப்பட்டு வழக்கறிஞர்களுக்கு வழிகாட்டுதல்கள் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.




Toppersnotes
BSA
Bharatiya Sakshya
Adhiniyam, 2023
New Criminal Laws
Volume - 1


यतो धर्मस्ततो जयः



அமைப்பு மாற்றங்கள்

- பயன்படுத்தப்படாத உட்கட்டமைப்பு நிதி முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு கூடுதல் நீதிமன்ற வளாகங்கள் கட்டப்படும்.
- ஒரு புதிய சட்டத்தை சட்டமன்றத்தில் இயற்றும்போதே, அந்த சட்டத்தால் நீதிமன்றங்களுக்கு வரப்போகும் கூடுதல் வழக்குகளின் சுமையை முன்கூட்டியே கணித்து, அதற்கேற்ப நீதிபதிகளை நியமிக்கவும், சட்டத்தில் தேவையான மாற்றங்களை பரிந்துரைக்கவும் வழிவகை செய்யப்படும்.
- காலதாமதத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டு தாக்கல் செய்யப்படும் மனுக்கள் மற்றும் தேவையற்ற வழக்குகளுக்கு, நீதிமன்றம் மிகக் கடுமையான அபராதம் விதிக்க திருத்தம் கொண்டுவரப்படும்.

கண்காணிப்பு

- நீதித்துறை பொறுப்புக்கூறல் மற்றும் ஆய்வுக் குழு (Judicial Accountability & Research Committee) ஒன்று அமைக்கப்படும். அக்குழுவில் ஓய்வு பெற்ற நீதிபதிகள் மற்றும் சட்ட அறிஞர்கள் நியமிக்கப்படுவார்கள். நீதித்துறை தொடர்பாக எழும் புகார்களை விசாரிக்கவும், எளிய மக்களின் ஐயங்களைத் தீர்க்கவும், நீதித்துறை சார்ந்த தேவையை மக்கள் உணரும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இந்தக் குழு உதவும். மேலும் அக்குழுவின் நடவடிக்கைகள் மற்றும் புகார்தாரர்களின் அடையாளங்கள் குறித்து கமுக்கம் காக்கப்படும்.

உயர் நீதிமன்றங்களும் உச்ச நீதிமன்றமும்

- தற்பொழுது நடைமுறையிலுள்ள நீதிமன்றச் செயல்பாடுகளில் உச்ச நீதிமன்றத்தின் ஆதிக்கம் அதிகமாக இருக்கின்றது. அரசமைப்புச் சட்டச் சிக்கல்கள் மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான உரிமை சார்ந்த சிக்கல்கள் போன்ற முதன்மைத்துவம் வாய்ந்த வழக்குகளில் மட்டுமே உச்ச நீதிமன்றம் தலையிட வேண்டும். மற்றபடி, அந்தந்த மாநிலங்களுக்குட்பட்ட வழக்குகளைக் கையாள அந்தந்த மாநிலங்களின் தலைமை நீதிமன்றங்களே உச்ச அதிகாரம் பெற்ற நீதிமன்றங்களாகச் செயல்படுவதற்குரிய சட்டத் திருத்தத்தை கொண்டுவர நாம் தமிழர் அரசு முயற்சிகள் மேற்கொள்ளும்.

தண்டனைக்குப் பின்னரான ஆணையங்கள்

- பல்வேறு வழக்குகளில் நீதித்துறை நடவடிக்கைகள் முடிவுக்கு வந்தபிறகு கிடைக்கும் அறிவியல் மற்றும் இதர சாட்சியங்களை ஆராயவோ அல்லது குற்றத்தில் தொடர்புடையவர்கள் மற்றும் விசாரித்தவர்களின் வாக்குமூலங்களை பரிசீலிக்கவோ, அவற்றைப் பயன்படுத்தி குற்றத்தின் பின்புலத்தை வெளிக்கொணரவோ, அதன்மூலம் குற்றம் சாட்டப்பட்டவருக்கு நீதி வழங்கவோ எந்த வழிமுறையும் இல்லை. இருக்கின்ற வாய்ப்புகளும் அவற்றை ஆயிரத்தில் ஒரு வழக்கிற்கு மட்டுமே பயன்படுத்தும் வகையில் பல்வேறு கட்டுப்பாடுகளை



விதிக்கிறது. இங்கு பெரும்பாலும் ஏழை, எளிய, விளிம்பு நிலை மக்களே தவறான குற்றச்சாட்டுகளுக்கும், காவல்துறையின் அடக்குமுறைகளுக்கும் ஆளாகி பலியாகிறார்கள்.


- நீதியின் வழியில் எத்தனை குற்றவாளிகள் தப்பித்தாலும் ஒரு குற்றமற்றவர்கூட தண்டிக்கப்படக்கூடாது என்கிற உயரிய மாண்பைக் கொண்ட நமது சமூக அமைப்பில் இந்த அநீதிகளைத் தடுக்க 'தண்டனைக்குப் பின்னரான மறு ஆய்வு / மேல்முறையீட்டு ஆணையம்' தண்டனைக்குப் பின்னரான விடுவித்தல் ஆணையம் (Post-Conviction Exoneration Commission) அல்லது 'வாய்மைக்கான ஆணையம்' (Innocence Commission) போன்ற அமைப்புகளை உருவாக்க நாம் தமிழர் அரசு முயற்சிக்கும். இதேபோன்ற எடுத்துக்காட்டுகள் உலகில் பல்வேறு நாடுகளில் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளதால் அவற்றின் மாதிரிகள் மூலம் இதற்கான வாய்ப்பை நமது அரசு ஏற்படுத்தும்.

மண்ணின் மைந்தர்களே நீதியரசர்கள்

- மாநில உயர் நீதிமன்றங்களில் நீதியரசர்களாக வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் பணியமர்த்தப்படுவதை நாம் தமிழர் கட்சி வன்மையாக எதிர்க்கின்றது. மாநிலங்களில் ஏற்படும் சிக்கல்கள் குறித்து பிற மாநிலங்களில் இருந்து வருகின்ற தலைமை நீதியரசர்களுக்குத் தெரிவதற்கு வாய்ப்புக் குறைவு. அம்மாநிலத்தின் மொழி, பண்பாடு, வரலாறு, வாழ்வியல் உள்ளிட்டவை குறித்த போதிய பட்டறிவு அந்நீதியரசர்களுக்கு இருப்பது கடினம். மேலும் கீழமை நீதிமன்றங்களிலிருந்து வரும் வழக்குகளில் கோப்புகள், ஆவணங்கள் ஆகியவை பெரும்பாலும் தமிழிலேயே இருக்கும். எனவே பிற மாநில நீதியரசர்களுக்காக மொழிபெயர்ப்பு செய்யும் இரட்டைப் பணிச்சுமை ஏற்படுகிறது. மொழிபெயர்க்கப்பட்டாலும்கூட அந்த ஆவணங்கள் அதன் உண்மையான பொருளில் புரிந்து கொள்ளப்படுவது இயலாத ஒன்று. எனவே, அந்தந்த மாநில அரசின் தலைமை நீதியரசர்களாக அந்தந்த மண்ணின் மைந்தர்களைப் பணியமர்த்தும் வகையிலான சட்டத் திருத்தத்தை ஏற்படுத்த நாம் தமிழர் கட்சி முயற்சி மேற்கொள்ளும்.

தமிழே தமிழ்நாட்டின் வழக்காடு மொழி

- நீதிமன்றத்தின் செயல்பாடுகள் எளிய மக்களும் அணுகும் வகையிலும், புரிந்து கொள்ளும் வகையிலும் இருக்க வேண்டும். அனைத்து நாடுகளிலும் நீதிமன்றங்கள் அவரவர் தாய்மொழியில்தான் செயல்படுகின்றன. எனவே, தமிழ்நாட்டு உயர் நீதிமன்றத்தில், மாநிலத்தின் தாய்மொழியான தமிழை வழக்காடு மொழியாகவும், அலுவல் மொழியாகவும் நடைமுறைப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும். "மொழிவழித் தேசிய இனங்களின் தாயகமான மாநிலங்களின் வரிப்பணம் வேண்டும், மொழி வேண்டாமா?" என்கின்ற கேள்வி மக்கள் மனதில் பன்னெடுங்காலமாக இருந்து வருகிறது. இந்திய ஒன்றியத்தின் அரசமைப்புப் பட்டியல் மொழிகள் அனைத்தும் உச்ச நீதிமன்றத்தின் வழக்காடு மொழியாகவும், அலுவல் மொழியாகவும் உடனடியாக ஆக்கப்பட நாம் தமிழர் அரசு வலியுறுத்தும்.



அரசுப் பதவிகளில் ஓய்வுபெற்ற நீதியரசர்கள்


- நீதிபதிகளாக இருந்து ஓய்வு பெறுபவர்கள் ஒன்றிய அரசின் பதவிகளிலும், ஆளுநராகவும் பணியமர்த்தப்படுவது மக்கள் மனதில் பெரும் நம்பிக்கையின்மையை ஏற்படுத்துகின்றது. எனவே, நீதிபதிகளாக இருந்து ஓய்வு பெறுபவர்கள் அரசுப் பதவிகளிலோ, ஆளுநராகவோ, அரசியல் கட்சியிலோ செயல்படுவதை அனுமதிக்காத வகையில் சீர்திருத்தம் செய்திட நாம் தமிழர் அரசு முயற்சி மேற்கொள்ளும்.

இந்தியத் தண்டனைச் சட்டப் பெயர் மாற்றம்

- இந்திய அமைப்பு முறையின் அனைத்துத் தளங்களிலும் இந்தி மயமாக்குவது, இந்தி பேசாத பிற தேசிய இனங்களை வஞ்சிப்பதாகும். இதுவரை நடைமுறையில் இருந்த குற்றவியல் சட்டங்களுக்கு, குறிப்பாக இந்தியத் தண்டனைச் சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டம், இந்தியச் சான்றுச் சட்டம் ஆகிய மூன்று சட்டங்களுக்கு மாறாக 2024ஆம் ஆண்டு சூலை மாதம் முதல் பாரதிய நியாய சம்கித்தா, பாரதிய நாகரிக் சுரக்ச சம்கித்தா, பாரதிய சாக்சிய அதினியம் (Indian Penal Code - Bhartiya Nyaya Sanhita, Criminal Procedure Code - Bhartiya Nagarik Suraksha Sanhita, Indian Evidence Act - Bhartiya Sakshya Adhiniyam) என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இது ஒன்றிய அரசின் இந்தித் திணிப்பு முயற்சியின் நீட்சியாகவே வெளிப்படுகிறது. எனவே இந்தியில் இருக்கக்கூடிய இச்சட்டங்களின் பெயர்களை மாற்றியமைக்கவும், இச்சட்டங்களுக்குள்ளேயே திருத்தங்களை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும்.




ARTICLE 370


மகாராஷ்டிரா
குஜராத்
பிரிவு
371
சிக்கிம்
பிரிவு
371F
(1975)
அசாம்
பிரிவு
371B
(1969)
அருணாச்சலப்பிரதேசம்
பிரிவு
371H
(1955)
நாகலாந்து
பிரிவு
371A
மணிப்பூர்
பிரிவு
371C
(1971)
மிசோரம்
பிரிவு
371G
(1986)
ஆந்திரா
தெலங்கானா
பிரிவு
371D
(2014)
கர்நாடக
பிரிவு 371J
(2012)

காலத்தின் தேவை

முழுமையான மாநிலத் தன்னாட்சியின் கீழ் இறையாண்மையுள்ள நாம் தமிழர் அரசு!

இந்திய ஒன்றிய அரசமைப்புச் சட்டம் 370

- முழு மாநிலத் தன்னாட்சியை நிலைநிறுத்திடவும், தேசிய இனங்களின் உரிமைகளைப் பெற்றிடவும், தமிழ்நாட்டு அரசின் இறையாண்மையைக் காத்திடும் வகையிலும் இந்திய ஒன்றிய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 370ஐ போன்றதொரு சட்டத்தைத் தமிழ்நாட்டிற்கு உருவாக்கிட அனைத்து வழிகளிலும் நாம் தமிழர் அரசு உறுதியான, தொடர்ச்சியான நடவடிக்கைகளை எடுக்கும். இதன்மூலம் ஒன்றிய அரசின் சட்டங்கள் எவையும் தமிழ்நாட்டிற்குப் பொருந்தாது. மேலும் தமிழ்நாட்டிற்கான அரசமைப்புச் சட்டத்தை சட்டமன்றமே உருவாக்கிக் கொள்ளும் உரிமைக்கும், நாம் தமிழர் அரசு உருவாக்கிய தமிழ்நாட்டிற்கான கொடிக்கும் இந்திய ஒன்றிய அரசமைப்பின் சட்ட வழி இசைவேற்பு பெறப்படும்.

மாநில, ஒன்றியப் பட்டியல்

- இந்திய ஒன்றிய அரசமைப்புச் சட்டத்தின் பட்டியல் 7இல் உள்ள ஒத்திசைவுப் பட்டியல் (Concurrent List) முழுதாக நீக்கப்படும்.
- ஒன்றியப் பட்டியலில் உள்ள வெளியுறவுத் துறை, பாதுகாப்புத் துறை, இந்திய ரிசர்வ் வங்கி, தொலைத்தொடர்பு ஆகியவைத் தவிர ஏனைய துறைகள் அனைத்தும் மாநிலப் பட்டியலுக்கு முழுதாக மாற்றப்படும். இதன் மூலம் மாநில நலன் சார்ந்த அனைத்திற்கும் சட்டமியற்றி முடிவெடுக்கும் முழு அதிகாரமும் மாநில அரசின் வரையறைக்கு உட்பட்டதே என்ற நிலை உருவாக்கப்படும். இதற்கான ஒத்த கருத்துள்ள, மாநில உரிமைகளின் மேல் அக்கறை கொண்ட, இழந்த மாநில உரிமைகளை மீட்கும் எண்ணம் கொண்ட ஏனைய மாநில அரசுகள் மற்றும் பிற தேசிய இனத் தலைவர்களுடன் கலந்துரையாடி இந்திய ஒன்றிய அரசமைப்பில் சட்டத் திருத்தத்தை மேற்கொள்ள நாம் தமிழர் அரசு அனைத்து முயற்சிகளையும் எடுக்கும்.

இந்திய ஒன்றிய அரசமைப்புச் சட்டம் 371

- தற்போது மகாராஷ்டிரா, குஜராத் (371), நாகாலாந்து (371A), அசாம் (371B), மணிப்பூர் (371C), ஆந்திரா/தெலுங்கானா (371D/E), சிக்கிம் (371F), மிசோரம் (371G), அருணாச்சலப் பிரதேசம் (371H), கோவா (37-I) மற்றும் கர்நாடகா (371J) ஆகிய மாநிலங்கள் இப்பிரிவின் கீழ் வெவ்வேறு வகையான சிறப்பு அதிகாரங்களைப் பெற்றுள்ளன.
- இறையாண்மை கொண்ட முழு மாநிலத் தன்னாட்சிக்கான நிலையானத் தீர்வாக, இந்திய ஒன்றிய அரசமைப்புச் சட்டம் 370ஐ போன்றதொரு சட்டத்தைப் போராடிப் பெறும் வரையில், குறுகிய காலத் தேவையாக இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 371இன் கீழ் சில மாநிலங்கள் ஏற்கனவே பெற்றுள்ளதைப் போல தமிழ்நாட்டிற்கான உடனடித் தேவையாக உள்ள கல்வி, மருத்துவம், வரி விதிப்பு, வேளாண்மை, சுற்றுச்சூழல் உள்ளிட்ட குறிப்பிட்டத் துறைகளில் இயற்றப்படும் சட்டங்கள், விதிகள் தொடர்பான சிறப்பு அதிகாரங்களைப் பெற்று மாநில உரிமைகளைப் பேணிக் காத்திடும் வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ள நாம் தமிழர் அரசு உடனடி நடவடிக்கை எடுக்கும்.



படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு.

– தமிழ்மறை (381) – வள்ளுவப்பெருமகனார்





தாய்நில உரிமை

நாம் தமிழர்
கட்சியின் அரசியலும்,
“நாம் தமிழர்” எனும்
முழக்கமும் பிற மொழிவழித் தேசிய
இனங்களுக்கு எதிரானதோ அல்லது
அவர்களைப் பகைப்பதற்கானதோ அல்ல.
மாறாக, இது சிதைந்து கொண்டிருக்கும் தமிழ்
மொழியை மீட்டெடுத்து, தமிழர்களுக்கான
தன்னாட்சியை நிலை நிறுத்தும் அறவழிப்
பயணம். மேலும், எம் இனத்தைப்
பாதுகாப்பதும், அடிமைப்பட்டுக் கிடக்கும்
தமிழ்ச் சமூகத்தை மீட்பதுமே
நாம் தமிழர் அரசின் முதன்மை
நோக்கம்.

கொள்கை முழக்கம்

- இந்தியா என்பது பல்வேறு மொழிவழித் தேசிய இனங்களின் கூட்டமைப்பு. இத்தகைய சூழலில், தமிழர்களின் அரசியல் வலிமை, பொருளாதார உரிமைகள் மற்றும் மொழி அடையாளம் ஆகியவை நாளுக்கு நாள் பறிக்கப்படுகின்றன. இதனைத் தடுத்து நிறுத்தி, தமிழர்களின் உரிமைகளை மீட்டெடுக்க வேண்டிய கட்டாயம் இன்று ஏற்பட்டுள்ளது. மற்ற இனங்களின் அடிப்படை உரிமைகளுக்குப் பாதிப்பு ஏற்படுத்தாமல், அதேநேரம், தன் சொந்த நிலத்தில் தமிழன் தன் உரிமைகளையும் இழக்காமல் அனைவரும் ஒற்றுமையோடு வாழ வேண்டும் என்கிற அரசியலையே நாம் தமிழர் கட்சி பேசுகின்றது.
- “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்றும் “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்ற உயரிய அறக்கோட்பாடுகளை உலகுக்குத் தந்து, உயிர்மநேயத்தை அடிப்படையாகக் கொண்டவர்கள் தமிழர்கள். இந்த மரபின் பண்பாட்டுத் தொடர்ச்சியாகவே நாம் தமிழர் கட்சியும் இயங்குகிறது. அடிப்படையிலேயே உயிர்மநேயத்தைக் கொண்ட ஒரு சமூகம், ஒருபோதும் பிற இனங்கள் மீது வெறுப்பை உமிழாது.



இடைவந்த சாதி

- தமிழர் என்கிற தேசிய இன அடையாளமே முதன்மையானது. செயற்கையாகத் திணிக்கப்பட்ட சாதி, மதப் பிரிவினைகளைத் தாண்டி, ஒருமித்த இன உணர்வோடு எழுவதே விடுதலையின் முதல் படி.
- என்றைக்குச் சாதி, மத உணர்ச்சிகள் சாகின்றதோ, அன்றுதான் தமிழன் என்கிற இன உணர்ச்சி பிறக்கும்.

“கடவுள் வெறி சமய வெறி
கன்னல்நிகர் தமிழுக்கு
நோய் நோய் நோயே!
இடைவந்த சாதி எனும்
இடர் ஒழிந்தால் ஆள்பவள் நம்
தாய் தாய் தாயே”
- புரட்சிப்பாவலர் பாரதிதாசன்.

முதலில் தோன்றியது மொழி, இனமே. சாதி, மதங்கள் பிற்காலத்தில் புகுத்தப்பட்ட நோய்கள். புரட்சிப் பாவலரின் வரிகளுக்கேற்ப, இடைவந்த சாதிய ஏற்றத்தாழ்வுக் கொடுமைகள் ஒழிக்கப்பட்டுத் தாய்நிலம் காக்கப்படும்.

குடியுரிமை மற்றும் தேசிய இனம்

- இந்திய ஒன்றியத்திற்குள் நிலவும் பன்முகத்தன்மையை ஏற்பதோடு, “தேசிய இனம்” மற்றும் “குடியுரிமை” ஆகியவற்றுக்கு இடையேயான தெளிவான வேறுபாடு நிலைநாட்டப்படும். நாம் “தமிழர்” என்பது எங்களின் தேசிய இனம். நாங்கள் இந்திய நாட்டின் குடிமக்கள்.
- பல்வேறு மொழிவழித் தேசிய இனங்கள் இணைந்து வாழும் இந்திய ஒன்றியத்தில், ஒரு மொழி மட்டுமே ஆதிக்கம் செலுத்துவது மக்களாட்சிக் கோட்பாட்டிற்கு எதிரானது. தமிழ் மொழிக்கு அரசியலமைப்புச் சட்டத்திலும், அறமன்றங்களிலும் உரிய இறையாண்மை பெற்றுத் தரப்படும்.

மொழி மற்றும் பண்பாட்டுக் கொள்கை

- “எங்கும் தமிழ், எதிலும் தமிழ்” என்பதே நாம் தமிழர் அரசின் அடிப்படைக் கொள்கை. உலகளாவிய மொழிக் கொள்கை நடைமுறைகளைப்போல தமிழ்நாட்டிலும் தமிழ்மொழியின் அடையாளம் காக்கப்படும்.
- தமிழ்நாட்டின் அனைத்து வணிக நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களின் பெயர்ப்பலகைகளும், நிருவாகக் கோப்புகளும் முதன்மையாகத் தமிழிலேயே இருக்கும்படியான சட்டம் உறுதியாக நடைமுறைப்படுத்தப்படும்.



- பிற மொழியினரின் தேவை கருதி, தவிர்க்க முடியாத இடங்களில் மட்டும் 1/3 பங்கு அளவில் ஆங்கிலம் பயன்படுத்தப்படும். எங்கள் நாட்டிற்குள் வரும்போது எங்கள் மொழியைக் கற்காமலேயே அனைத்தும் கிடைக்கும் என்ற நிலையை ஏற்க முடியாது. தமிழ்நாட்டில் வாழவும், பணியாற்றவும் தமிழ் மொழியறிவு கட்டாயமாக்கப்படும்.

பொருளாதார மற்றும் வேலைவாய்ப்பு உரிமை

- மண்ணின் வளங்கள் மண்ணின் மக்களுக்கே என்ற கோட்பாட்டின் அடிப்படையில் வேலைவாய்ப்புகள் உறுதி செய்யப்படும். தமிழர்களுக்கு 85 விழுக்காடு, பிற மாநிலத்தவர் / பொதுப் போட்டியாக 15 விழுக்காடு வேலைவாய்ப்பு என்கிற அளவில் நடைமுறைப்படுத்தப்படும்.
- தொடர்வண்டித் துறை, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் (NLC) போன்ற ஒன்றிய அரசு நிறுவனங்களில் அந்தந்த மாநில மக்களுக்கே முன்னுரிமை அளிக்க வழிவகை செய்யப்படும்.
- வேலைவாய்ப்பில் மண்ணின் மக்களுக்கான முன்னுரிமை என்பது அரசு மற்றும் தனியார் ஆகிய இரு துறைகளுக்கும் கட்டாயமாக்கப்படும்.

மெய்யியல் மற்றும் வழிபாட்டு முறை

- தமிழர் நிலத்தின் ஆதி மெய்யியல் கோட்பாடான இயற்கை வழிபாடு மற்றும் முன்னோர் வழிபாட்டு முறைகள் அரசின் இசைவேற்புடன் போற்றிப் பாதுகாக்கப்படும்.



அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

– தமிழ்மறை (555) – வள்ளுவப்பெருமகனார்



நாம் தமிழர் எதிர்க்கும் சட்டங்களும், திட்டங்களும்

நாம் தமிழர் கட்சி எதிர்க்கும் சட்டங்கள்

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை 2020 (EIA)

- சுற்றுச்சூழல் அனுமதி பெறாத சட்டவிரோதத் தொழிற்சாலைகளை அனுமதித்தும், சுரங்கத் திட்டங்கள் மற்றும் ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டங்களுக்கான சுற்றுச்சூழல் அனுமதியின் காலவரையறையை நீட்டித்தும், முன்மொழியப்பட்ட ஒரு திட்டத்திற்கு நடத்தப்படும் பொதுமக்கள் கருத்துக் கேட்புக்கான நாட்களைக் குறைத்தும், ஆண்டிற்கு இரண்டு முறை ஒப்படைக்க வேண்டிய சுற்றுச்சூழல் அறிக்கைகளை ஒருமுறை மட்டும் ஒப்படைத்தால் போதுமென்று அதன் முக்கியத்துவத்தைக் குறைத்தும், இப்படி பல விதிமுறைகளை நீர்த்துப்போகச் செய்துச் சூழலியல் சீர்கேட்டிற்கு வழிவகை செய்து, முதலாளிகளின் வணிக நோக்கை மட்டுமே பெரிதாக முன்னிறுத்தி முன்மொழியப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை 2020ஐ நாம் தமிழர் கட்சி முற்றிலுமாக எதிர்க்கிறது. மேலும் அது செயல்படுத்தப்படக்கூடாது எனும் கருத்தில் உறுதியாக இருக்கிறது.

தேசிய அணைகள் பாதுகாப்புச் சட்டம்

- இந்திய ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள அணைகள் பாதுகாப்புச் சட்டம், 2021 மாநில உரிமைகளைப் பறிக்கும் விதமாக இருக்கிறது. 10 மாத்திரிக்கு மேல் உயரம் கொண்ட அனைத்து அணைகளும் தேசிய அளவிலான ஆணையத்தின் விதிமுறைகளுக்கு ஏற்ப இருக்க வேண்டும் என்பது மாநில அதிகாரத்தைப் பறிக்கும் வண்ணம் உள்ளது. குறிப்பாக நீர் சார்ந்து சட்டமியற்றும் உரிமை மாநிலப் பட்டியலில் இருக்கும்போது இந்த சட்டம் ஒன்றிய அரசின் அதிகார மீறலாகும். முல்லைப்பெரியாறு, பரம்பிக்குளம், துணைக்கடவு, பெருவாரிபள்ளம் ஆகிய அணைகள் அனைத்தும் கேரள மாநில எல்லைக்குள் வருகின்றன. இருப்பினும் இவை அனைத்துமே தமிழ்நாட்டிற்குச் சொந்தமானவை. தமிழ்நாடு அரசு பணம் செலவிட்டுப் பேணிக் காத்து வருகின்ற சூழ்நிலையில் அணைகள் பாதுகாப்புச் சட்டம் வந்துவிட்டால் இந்த அணைகளை மேற்பார்வையிடும் அதிகாரம் ஒன்றிய அரசின் ஆணையத்திடம் செல்வதால், பாதுகாப்புப் பணிகளில் கேரளாவின் தலையீடு அதிகரிக்கும். இதனால் நாம் தமிழர் அரசு இந்த சட்டத்தை முற்றிலுமாக எதிர்க்கிறது. அணைகள் பாதுகாப்பு குறித்து மாநில அரசே சட்டம் இயற்றிக்கொள்ளும் வகையிலான நடவடிக்கைகளை நாம் தமிழர் அரசு மேற்கொள்ளும்.

தமிழ்நாடு நில ஒருங்கிணைப்புச் சட்டம்

- “தமிழ்நாடு நில ஒருங்கிணைப்பு சட்டம் 2023” தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்டது. அதன் தொடர்ச்சியாக “தமிழ்நாடு நில ஒருங்கிணைப்பு விதிகள் 2024” வெளியிடப்பட்டு அவை செயல்பாட்டுக்கு வந்துள்ளன. நூறு பரப்பலகு அளவிற்குக்









குறையாத நிலப்பரப்பு கொண்ட திட்டங்கள் அனைத்திற்கும், அவற்றுள் நீர்நிலைகள் இருப்பின் கட்டுப்பாடுகளையும் கடந்து நிலம் கையகப்படுத்துவதற்கு வழிவகை செய்யக்கூடிய சட்டமே இதுவாகும். இயற்கையாகவே நீரோட்டங்கள் தன் வழித்தடத்தினை மாற்றிக் கொள்ளும் நிலையில், அவை தனியார் நிலங்களில் அமையப்பெற்றால் அவற்றைப் பாதுகாக்கும் பொருட்டு இச்சட்டம் கொண்டுவரப்படுவதாகச் சொல்லப்பட்டாலும், இது வளர்ச்சி என்கின்ற பெயரில் திட்டங்களை முன்மொழியக்கூடியவர்களுக்கு நிலத்தினைக் கையகப்படுத்தித் தருவதற்கான செயல்முறையே.

- தனியாருக்காக நிலம் கையகப்படுத்துவதற்கு ஏதுவாக திமுக அரசு கொண்டு வந்துள்ள தமிழ்நாடு நில ஒருங்கிணைப்புச் சட்டம் மற்றும் அதன் விதிகளை நாம் தமிழர் அரசு திரும்பப்பெறும்.

குடியுரிமைத் திருத்தச் சட்டம் (CAA), தேசிய மக்கள் தொகைப் பதிவேடு (NPR), தேசியக் குடியுரிமைப் பதிவேடு (NRC)

- பாகிசுதான், வங்கதேசம், ஆப்கானிசுதான் ஆகிய நாடுகளிலிருந்து வந்த இசுலாமியர் அல்லாதவர்களுக்கு மட்டும் குடியுரிமை வழங்கப்படும் வகையில் மேற்கொள்ளப்பட்ட குடியுரிமைத் திருத்தச் சட்டத்தினை நாம் தமிழர் கட்சி மிகக் கடுமையாக எதிர்க்கின்றது.
- இதனுடன் தேசிய மக்கள்தொகைப் பதிவேட்டையும் (NPR), தேசியக் குடியுரிமைப் பதிவேட்டையும் (NRC) கொண்டு வந்திருப்பது இசுலாமிய மக்களை நாடற்ற ஏதிலிகளாக மாற்றும் நோக்கமாகவே கருத முடிகிறது.
- நாட்டை மதத்தால் பிளந்து, இசுலாமியர்களின் குடியுரிமையைப் பறிக்கும் சூழ்ச்சியே இது என்பதால் இதனை நாம் தமிழர் கட்சி கடுமையாக எதிர்க்கின்றது.

தேசியப் புலனாய்வு முகமைத் (NIA) திருத்தச் சட்டம்

- ‘தேசப் பாதுகாப்பு’ எனும் பெயரில் ஆய்வு, தடுப்புக் காவல் மற்றும் கைது நடவடிக்கைகள் என வரம்பற்ற அதிகாரங்களைக் கொண்டிருக்கும் NIA திருத்தச் சட்டம் அடிப்படை மனித உரிமைகளுக்கே எதிரானது.
- மாநில அரசின் ஒப்புதலோ, முன் அனுமதியோ இல்லாமல் அம்மாநிலத்தில் உள்ள எவரையும் கைது செய்யலாம் என்பது மாநிலத்தின் தன்னாட்சி உரிமைக்கெதிரான அதிகாரமாகும். இந்த முகமையை எதிர்ப்பதோடு, அதனைக் கலைக்கவும் நாம் தமிழர் கட்சி உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

முத்தலாக் தடைச் சட்டம்

- முத்தலாக் முறை சரீஅத் சட்டங்களில் இல்லை மற்றும் இசுலாம் ஏற்கவில்லை என்றபோதிலும், இதனை பாஜக அரசு குற்றமென அறிவித்துள்ளது. மதவாத நோக்கத்தோடு இசுலாமியர்களின் மத நடவடிக்கைகளில் தலையிடும் வண்ணம் கொண்டு வரப்பட்ட இச்சட்டத்தை நாம் தமிழர் கட்சி கடுமையாக எதிர்க்கின்றது.

பொருளாதார அடிப்படையில் இடப்பகிர்வு

- சாதிய ஏற்றத்தாழ்வுகளை சரிசெய்ய, இடப்பகிர்வு சாதியின் அடிப்படையில் இருப்பதுதான் சரியான சமூகநீதியாக இருக்கும், இது பொருளாதார நிலையின் அடிப்படையில் இருத்தல் சமூகநீதிக் கோட்பாட்டுக்கே எதிரானது என்பது



ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்.

– தமிழ்மறை (560) – வள்ளுவப்பெருமகனார்





நாம் தமிழர் கட்சியின் கொள்கை நிலைப்பாடு. அதனால் இந்த பொருளாதார அடிப்படையிலான இடப்பகிர்வை நாம் தமிழர் கட்சி முற்றிலுமாக எதிர்க்கிறது.

வக்பு வாரியச் சட்டம்

- இந்திய ஒன்றிய அரசால் கொண்டு வரப்பட்டுள்ள வக்பு (திருத்த) சட்டம் 2025, இசுலாமியச் சமூகத்தின் மதத் தன்னாட்சி மற்றும் நிர்வாக உரிமைகளை நேரடியாகப் பறிக்கும் செயலாகும். வக்பு வாரியங்களில் இசுலாமியர் அல்லாதவர்களைக் கட்டாயமாகத் திணிப்பதும், ஒரு சொத்து வக்பு என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை வாரியத்திடமிருந்து பறித்து மாவட்ட ஆட்சியர்களிடம் ஒப்படைப்பதும் அரசமைப்புச் சட்டப்பிரிவு 26 வழங்கும் மத உரிமைக்கு எதிரானது. மேலும், "பயனர் வக்பு" முறையை நீக்குவது மற்றும் காலவரம்புச் சட்டத்தைப் புகுத்துவது போன்ற மாற்றங்கள், பல நூற்றாண்டுகளாகப் பயன்பாட்டில் உள்ள மசூதிகள் மற்றும் கல்லறை நிலங்களைக் கையகப்படுத்தியவர்களிடமும், அரசிடமும் இழக்கும் பேராபத்தை ஏற்படுத்தும்.

- இத்தகைய அறமற்ற, மதவாத உள்நோக்கம் கொண்ட சட்டத்தை நாம் தமிழர் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. இசுலாமிய மக்களின் வழிபாட்டுத் தலங்கள் மற்றும் அறக்கட்டளைச் சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய, இந்தச் சட்டத்தை நாம் தமிழர் அரசு முற்றுமுழுதாக எதிர்ப்பதோடு, இதனைத் திரும்பப் பெறச் செய்வதற்கான அனைத்து அரசியல் நடவடிக்கைகளையும் முன்னெடுக்கும்.

விதைச் சட்ட வரைவு 2025

- இயற்கை வேளாண்மைக்கு எதிராகவும், வேளாண்குடியினரை பாதிக்கும் வகையிலும் ஒன்றிய அரசால் முன்மொழியப்பட்டுள்ள 'விதைச் சட்ட வரைவு 2025'ஐ (Draft Seeds Bill 2025) நாம் தமிழர் கட்சி எதிர்க்கிறது.

- இந்தச் சட்ட வரைவு வேளாண்குடி மக்களின் நலன்கள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிலிருந்து விலகி, நிறுவனமயமாக்கப்பட்ட விதைத் தொழிலுக்குச் சாதகமாக அதிகாரத்தைக் குவிக்கிறது. இது வேளாண்குடிகளின் மரபுரிமைகளான, விதைகளைச் சேமிப்பது மற்றும் விற்பது போன்றவற்றை "வணிகக் குறியீட்டுப் பெயர்" (Branding) வரையறைகள் மூலம் சிக்கலாக்கி, விதைகள் பாதிப்பினால் ஏற்படும் இழப்பீட்டு விதிகளைத் தளர்த்துகிறது. மாநில அரசின் அதிகாரத்தையும் பறிக்கும் இந்தச் சட்ட முன்மொழிவைத் திரும்பப் பெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் தமிழர் அரசு மேற்கொள்ளும்.


வழக்கறிஞர் திருத்தச் சட்டம் 2025

- இந்திய வழக்கறிஞர்கள் சட்டம் 1961இல் மாற்றம் கொண்டுவரும் வகையில் வழக்கறிஞர்கள் திருத்தச் சட்டம் 2025ஐ நிறைவேற்றுவதற்கான வரைவினை ஒன்றிய அரசு முன்மொழிந்துள்ளது. இதன்மூலம் வழக்கறிஞர் கழகத்தைத் தங்களது அதிகாரத்திற்கு உட்பட்ட கைப்பாவை அமைப்பாக மாற்ற இந்திய ஒன்றிய அரசு முயலுகிறது.

- வழக்கறிஞர்கள் எதிர்ப்பு தெரிவித்துப் போராட்டம் நடத்தியவுடன், தற்போது நிறுத்தி வைப்பதாக ஒன்றிய அரசு அறிவித்திருப்பது தற்காலிக ஏமாற்று நடவடிக்கையாகும். ஆகவே, வழக்கறிஞர்களின் தொழிலுக்கும், நலனுக்கும் பேராபத்தை ஏற்படுத்தி, மக்களாட்சியின் ஆணிவேராக விளங்கும், இந்த நாட்டின்






THE ADVOCATES (AMENDMENT)
BILL, 2025

நீதி முறைமையை நீர்த்துப்போகச் செய்யும் வகையில் வெளியிடப்பட்டுள்ள வழக்கறிஞர் சட்டத்திருத்த முன் வரைவு 2025ஐ முற்றிலுமாகத் திரும்பப்பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

கடலோர ஒழுங்குமுறை மண்டல (CRZ) விதிமுறை

- கடற்சூழலியலைச் சீரழிக்கும் வகையிலும், மீனவர்களை அவர்களின் வாழ்விடங்களிலிருந்து அப்புறப்படுத்தும் வகையிலும் கொண்டு வரப்பட்டுள்ள கடலோர ஒழுங்குமுறை மண்டல விதிமுறைகளை நாம் தமிழர் கட்சி வன்மையாக எதிர்க்கின்றது.

வன (பாதுகாப்பு) திருத்தச் சட்டம் 2023

- வன (பாதுகாப்பு) திருத்தச் சட்டம், 2023 (FCAA) ஆனது, இந்தியாவின் வனப்பகுதியில் 28 விழுக்காடு வரை, குறிப்பாக அடர்ந்த காடுகளில் 19.51 விழுக்காடு பகுதியை வனம் சாரா பயன்பாடுகளுக்கு முன் அனுமதியிலிருந்து விலக்கு அளிப்பதன் வழியே காடுகளின் பாதுகாப்பை வெகுவாகப் பலவீனப்படுத்துகிறது. காடுகள் என்ற வரையறையை அக்டோபர் 25, 1980க்குப் பிறகு பதிவு செய்யப்பட்ட அல்லது அறிவிக்கப்பட்ட காடுகளுக்கு மட்டும் என்று சுருக்குவது, வகைப்படுத்தப்படாத மலைக் காடுகளை முன் அனுமதியிலிருந்து விலக்கி, வனப் பாதுகாப்பை நீர்த்துப்போகச் செய்யும்.எனவே, இந்தத் திருத்தச் சட்டத்தை நாம் தமிழர் அரசு உடனடியாகத் திரும்பப் பெறும்.

தனியார் பல்கலைக்கழகச் சட்டத் திருத்த வரைவு 2025

- தமிழ்நாடு அரசின் உயர்கல்வித்துறை அறிமுகப்படுத்தியுள்ள தனியார் பல்கலைக்கழகச் சட்டத் திருத்த வரைவு 2025, தற்போது அரசு உதவி பெறும் கல்லூரிகளை தனியார் பல்கலைக்கழகங்களாக மாற்றுவதற்கு வழிவகை செய்வதாகும். இந்தச் சட்டத்தின் வழியே கல்லூரிகள் தனியார் பல்கலைக்கழகங்களாக மாற்றப்பட்டால், அவை அரசின் எந்தவித தலையீடும் இல்லாமல் தனி நபர் வருவாய் ஈட்டும் தொழிலாக மாறிவிடும். குறிப்பாக, கல்வி நிறுவனங்கள் கட்டணங்களை உயர்த்தும் நிலை ஏற்படும். இதனால், தற்போதுள்ள உரிமைகளைப் பெறும் ஏழை மற்றும் எளிய சமூகப் பிரிவைச் சேர்ந்த மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்பு முழுவதுமாக மறுக்கப்படும்.
- ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் எதிர்ப்பின் காரணமாக இந்தச் சட்ட வரைவு தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தாலும் அவர்களின் கோரிக்கையை முழுமையாக ஏற்று தமிழ்நாடு அரசு இந்த "தனியார் பல்கலைக்கழகச் சட்டத் திருத்த வரைவு 2025"ஐ எந்த வகைக் கட்டுப்பாடுமின்றி திரும்பப் பெற வேண்டும்.

தொழிலாளர் நலத் திருத்தச் சட்டம்

- முதலாளிகளின் நலனை முன்னிறுத்தியும், தொழிலாளர்களின் வேலை நேரத்தை உயர்த்தியும், அவர்களின் உழைப்பை உறிஞ்சிய பிறகு திடீரென வெளியேற்றும் வகையிலும், தொழிற்சங்க உரிமைகளைப் பறிக்கும் வகையிலும் முதலாளிகளுக்கு ஆதரவாகக் கொண்டு வரப்பட்டுள்ள தொழிலாளர் நலத் திருத்தச் சட்டங்களை நாம் தமிழர் அரசு எதிர்க்கின்றது. பன்னாட்டு நிறுவனங்களின் அழுத்தத்திற்குப் பணியாமல், பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு (ILO) விதிகளின்படி 8 மணி நேர வேலையைச் சட்டத்தின் மூலமாக நிலைநிறுத்தும். தொழிலாளர்களின் கூட்டுப் பேரம் பேசும் உரிமையைப் (Collective Bargaining) பாதுகாக்கும் வகையில் தொழிற்சங்கச் சட்டங்கள் வலுப்படுத்தப்படும்.



மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதின்றேல்
மன்னாவாம் மன்னர்க் கொளி.

– தமிழ்மறை (556) – வள்ளுவப்பெருமகனார்





நாம் தமிழர் கட்சி எதிர்க்கும் திட்டங்கள்

காட்டுப்பள்ளி அதானி துறைமுக விரிவாக்கம்

- 6000 குறுக்கத்திற்கும் மேலான கடல் பரப்பு, நீர் நிலைகள், வேளாண் நிலங்களை கையகப்படுத்தித் திட்டமிடப்பட்டுள்ள அதானி நிறுவனத்தின் காட்டுப்பள்ளி துறைமுக விரிவாக்கம் அங்குள்ள சூழலியலை முற்றுமுழுதாக அழிப்பதோடு, மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் அழிக்கவல்லது. இத்திட்டம் அங்குள்ள பொழிப் பகுதிகளைப் பாதிப்பதால் உருவாகும் வெள்ளம் சென்னை மாநகருக்கு பேராபத்தை உண்டாக்கும். கடலரிப்பு அதிகரிப்பதோடு நிலத்தடி நீர் பாதிக்கும். குடிநீர்த் தட்டுப்பாடும் ஏற்படும். மனிதர்கள் வாழத் தகுதியில்லாத இடமாக சென்னை மாறும். குறிப்பாக வடசென்னை மக்கள் படிப்படியாக அங்கிருந்து வெளியேறும் அவல நிலை ஏற்படும். இத்தகைய பேராபத்தை விளைவிக்கக்கூடிய காட்டுப்பள்ளி அதானி துறைமுக விரிவாக்கத்திற்கு அனுமதி வழங்காது நாம் தமிழர் அரசு தடுத்து நிறுத்தும்.

- திமுக எதிர்க்கட்சியாக இருந்தபோது இத்திட்டத்தை எதிர்ப்பதாகக் கூறியது. ஆனால், ஆட்சிக்கு வந்த பின்னர் "சுற்றுச்சூழல் விதிகளுக்கு உட்பட்டே எந்தத் திட்டமும் அனுமதிக்கப்படும்" என்று பின்வாங்கியுள்ளது. பழவேற்காடு பறவைகள் புகலிடப் பரப்பைப் பாதுகாத்து அதானி துறைமுக விரிவாக்கத்தை தடுக்கும் அதிகாரம் மாநில அரசிடம் இருந்தபோதும் அதனைச் சரியாகப் பயன்படுத்த திமுக அரசு தவறியுள்ளது. பழவேற்காடு பறவைகள் புகலிடத்தின் அளவை சரியாக உறுதி செய்து அதானி துறைமுக விரிவாக்கத் திட்டத்தினை தடுப்பதோடு, பழவேற்காடு பறவைகள் புகலிடத்தின் மேம்பாட்டிலும் நாம் தமிழர் அரசு கவனம் செலுத்தும்.

பரந்தூர் வானூர்தி நிலையம்

- காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூரில் ₹27,400 கோடி மதிப்பீட்டில் சென்னைக்கான இரண்டாவது வானூர்தி நிலையம் அமைக்க ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் திட்டமிட்டுள்ளன. சற்றொப்ப 5,746 குறுக்கம் பரப்பளவில் இத்திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. இத்திட்டப் பகுதியில் சற்றொப்ப 2,600 குறுக்கம் நன்செய் வேளாண் நிலங்களும், 1,300 குறுக்கம் அளவிற்கு அதிகமான நீர்நிலைகளும் (ஏரிகள், குளங்கள் மற்றும் கால்வாய்கள்) உள்ளன. குறிப்பாக, இப்பகுதியில் ஓடும் 'கம்பன் கால்வாய்' 85க்கும் மேற்பட்ட ஏரிகளை நிரப்பும் முதன்மை நீர் ஆதாரமாகும்.

- நீர்நிலைகளை அழித்துக் கட்டப்படும் இந்த வானூர்தி நிலையம், மழைக்காலங்களில் மிகை நீர் வெளியேற வழியில்லாமல் செய்து, சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் 2015 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் ஏற்பட்டதைப் போன்ற பெரும் வெள்ளப் பாதிப்புகளை மீண்டும் உருவாக்கும் ஆபத்துள்ளது. இத்திட்டத்தினால் ஏகனாபுரம், நெல்வாய் உள்ளிட்ட 13 சிற்றூர்களைச் சேர்ந்த மக்களின் வேளாண் நிலங்கள் மற்றும் குடியிருப்புகள் பறிபோகும் நிலை ஏற்பட்டுள்ளது. தங்கள் சொந்த மண்ணையும், வாழ்வாதாரத்தையும் விட்டுக்கொடுக்க முடியாது எனப் போராடி வரும் மக்கள், ஏறத்தாழ 1,300 நாட்களுக்கும் மேலாகத் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.





நெய்வேலி பழுப்ப நிலக்கரி
அனல் மின் நிலையம்



நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் நிலையான பணி கோரி போராட்டத்தில் ஈடுபட்ட நாம் தமிழர் கட்சி போராளிகள் கைது!



கமுதி சூரிய ஒளி மின் பூங்கா

- வேளாண் நிலங்கள், நீர்நிலைகள் மற்றும் ஈரநிலங்களை அழித்து ஒருபோதும் வளர்ச்சித் திட்டங்களை முன்னெடுக்கக்கூடாது என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம். ஏற்கனவே இருக்கும் மீனம்பாக்கம் வானூர்தி நிலையத்தின் பயனளவே முழுமையாகப் பயன்படுத்தப்படாத நிலையில், பரந்தூர் வானூர்தி நிலையம் தேவையற்றது. பின்னாளில் ஒருவேளை தேவைப்பட்டால் மீனம்பாக்கம் வானூர்தி நிலையத்தின் கட்டமைப்பை மேம்படுத்தி வானூர்தி போக்குவரத்துத் தேவையை நிறைவு செய்வது மட்டுமே சரியாகும். எனவே நாம் தமிழர் அரசு பரந்தூர் வானூர்தி நிலையத் திட்டத்தை உடனடியாகத் திரும்பப் பெறும்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனச் (NLC) சுரங்க விரிவாக்கம்

- நெய்வேலியில் தற்போதுள்ள இரண்டாவது நிலக்கரிச் சுரங்கத்தை (Mine II) விரிவுபடுத்துவதுடன், புதிதாக மூன்றாவது நிலக்கரிச் சுரங்கத்தை (Mine III) அமைக்கவும் ₹10,000 கோடிக்கும் மேலான மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டுள்ளது. வளையமாதேவி, கம்மாபுரம் போன்ற பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான குறுக்கம் விளைநிலங்கள் இதற்காகப் பறிக்கப்படுகின்றன. குறிப்பாக 2023-24 காலப்பகுதியில், விளைச்சலில் இருந்த நெல் பயிர்களைப் பெரும் இயக்கிகள் கொண்டு அழித்து நிலங்கள் கையகப்படுத்தப்பட்டன.

- நிலக்கரி எடுப்பதற்காகப் பூமிக்கடியில் ஆழமாகத் தோண்டப்படுவதால், நிலத்தடி நீர் மட்டம் மிகக் கீழ் நிலைக்குச் சென்றுவிட்டது. மேலும், நிலக்கரி துகள்களால் ஏற்படும் காற்று மாசும், சாம்பல் கழிவுகளும் உள்ளூர் மக்களின் உடல்நலனை மிகக் கடுமையாகப் பாதித்து வருகின்றன.

- நிலம் கொடுத்தவர்களுக்கு நிலையான வேலை வழங்காதது மற்றும் விளைச்சலில் இருந்த பயிர்களை அழித்து நிலம் கையகப்படுத்தியதை எதிர்த்து வேளாண் குடிகள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். நெய்வேலி நிலக்கரி சுரங்கத்தின் விரிவாக்கத் திட்டங்களுக்குத் தடை விதிப்பதோடு, ஏற்கனவே நிலம் கையகப்படுத்தப்பட்டு உரிய வேலைவாய்ப்புகள் கிடைக்கப் பெறாதவர்களைப் பணியமர்த்த நாம் தமிழர் அரசு உறுதி செய்யும்.

சூரிய ஒளி மின் பூங்காக்கள் (Mega Solar Parks)

- தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகம் (TNGECL) மூலம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் மிகப்பெரி சூரிய ஒளி மின் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக இராமநாதபுரம் (கமுதி), தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர் மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் இத்திட்டங்கள் அதிகளவில் முன்னெடுக்கப்படுகின்றன. இதில் மிகப்பெரிய திட்டமாக இராமநாதபுரம் மாவட்டம் கமுதியில் அமைந்துள்ள அதானி குழுமத்தின் சூரிய ஒளி மின் பூங்கா விளங்குகிறது.


- இத்திட்டங்களில் ஆயிரக்கணக்கான குறுக்கம் வேளாண் நிலங்களும், மேய்ச்சல் நிலங்களும் கையகப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் கால்நடை வளர்ப்பு மற்றும் மரபு வேளாண்மை செய்யும் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. சூரிய ஒளி மின் தகடுகளைத் தூய்மைப்படுத்த பெருமளவிலான தண்ணீர் தேவைப்படுகிறது. கமுதி திட்டத்தில் மட்டும் ஒரு நாளைக்குச் சற்றொப்ப 2 இலட்சம் சீர்படி (litre) நிலத்தடி நீர் பயன்படுத்தப்படுவதாகத் தெரிகிறது. வறட்சி பாதித்த இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் இது நிலத்தடி நீர்மட்டத்தைக் குறைத்துப் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.



உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேராது இயல்வது நாடு.

– தமிழ்மறை (734) – வள்ளுவப்பெருமகனார்





- பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஆயிரக்கணக்கான குறுக்கம் வேளாண் நிலங்களைத் தாரை வார்ப்பதை நாம் தமிழர் அரசு ஏற்காது. வேளாண் நிலங்களில் இது போன்ற திட்டங்களை முன்னெடுப்பதற்கு பதிலாக, "பரவலாக்கப்பட்ட மின் உற்பத்தி" முறையை நாம் தமிழர் அரசு பின்பற்றும். பொது நிலங்களை கையகப்படுத்தாமல், வீடுகள் மற்றும் பொதுக் கட்டடங்களின் மேற்கூரைகளில் சூரிய ஒளித் தகடுகளை அமைத்து மின்சாரம் தயாரிக்கும் முறையை நடைமுறைப்படுத்துவோம்.

விளைநிலங்களில் எரிவாயுக் குழாய் மற்றும் எண்ணெய்க் கிணறுகள்

- கெயில் எரிவாயுக் குழாய்ப் பதிப்புத் திட்டம், IOCL-ன் குழாய்ப் பதிக்கும் திட்டம், ONGC-ன் எரிவாயுக் குழாய்ப் பதிக்கும் திட்டம், இயற்கை எரிகாற்று மற்றும் நீரகக்கரிமம் (ஈத்தேன் மீத்தேன், ஹைட்ரோ கார்பன்), உள்ளிட்டவற்றை எடுக்கும் எண்ணெய்க் கிணறுகள் ஆகியவைக் காவிரிப் படுகைப் பகுதியிலுள்ள வேளாண் நிலங்களைப் பாழாக்கி, அங்குள்ள மண் வளத்தைச் சிதைத்து, வேளாண் தொழிலை முற்றிலுமாக அழிக்கும் சிலை உள்ளது. வேளாண் மக்களின் வாழ்வாதாரத்தைப் பறித்து, அதனால் வறுமை தலைதூக்கும் ஆபத்து நிறைந்துள்ளதால் இத்திட்டங்களுக்கான அனுமதிகளை நாம் தமிழர் ஆட்சி முற்றாக நீக்கம் செய்யும்.

- 2020இல் அப்போதைய அதிமுக அரசு காவிரிப் படுகைப் பகுதிகளை 'பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண் மண்டலமாக' அறிவித்தது. இதன்மூலம் புதிய நீரகக்கரிமத் (ஹைட்ரோ கார்பன்) திட்டங்களுக்குத் தடை விதிக்கப்பட்டது. இருப்பினும், ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள கிணறுகள் தொடர்ந்து இயங்க இச்சட்டம் அனுமதி அளிக்கிறது. செயல்பாட்டில் உள்ள திட்டங்களையும், எரிவாயு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் திட்டங்களையும் தடை செய்யும் வகையில் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படும்.

- 2025ஆம் ஆண்டில், இராமநாதபுரம் மாவட்டத்தில் 20 நீரகக்கரிமக் (ஹைட்ரோ கார்பன்) கிணறுகளை அமைக்க ஒன்றிய அரசு அனுமதி அளித்தது. மக்கள் எதிர்ப்பு காரணமாக, தற்போது கிடப்பில் உள்ள இத்திட்டத்தை நாம் தமிழர் அரசு திரும்ப பெறும்.

சாகர்மாலா திட்டம்

- ஒன்றிய அரசு 'Maritime India Vision 2030' என்பதன் ஒரு பகுதியாக, சென்னை - கடலூர் பகுதிகளை ஒரு 'Mega Port Cluster' மாற்றத் திட்டமிட்டுள்ளது. மார்ச் 2025 நிலவரப்படி, தமிழ்நாட்டில் மட்டும் ₹47,000 கோடி மதிப்பிலானத் திட்டங்களை அறிவித்துள்ளது.

- இத்திட்டத்தின் கீழ் புதிய துறைமுகங்கள் மற்றும் கடற்கரையோரச் சாலைகள் அமைப்பதால், கடலோர ஒழுங்குமுறை மண்டல (CRZ) விதிகளில் தளர்வுகள் ஏற்படுத்தப்படுகின்றன. இது மீனவர்களின் வலை பின்னும் இடங்கள், வாழ்விடங்கள் மற்றும் படகு நிறுத்துமிடங்களை கையகப்படுத்த வழிவகுக்கிறது.

- துறைமுகங்களை ஒட்டிய வளர்ச்சி என்ற பெயரில் பன்னாட்டு நிறுவனங்களின் சரக்கு முனையங்கள் அமைக்கப்படுவதால், மரபுசார் மீன்பிடிப் பகுதிகள் "பாதுகாப்பு மண்டலங்களாக" அறிவிக்கப்பட்டு மீனவர்கள் நுழையத் தடை விதிக்கப்படும் ஆபத்துள்ளது. மீனவர்கள் தற்சார்புப் பொருளாதாரத்தை விட்டு நிறுவனங்களின் கூலியாட்களாக மாற்றப்படுவார்கள். ஆண்டாண்டு காலமாய் அவர்களுக்கு உரிமையாய் இருந்த மண், பன்னாட்டு நிறுவனங்களின் கைகளுக்கு மாற்றப்படும். அதனால் இந்தத் திட்டத்தை நாம் தமிழர் அரசு எதிர்க்கின்றது.









அணுத்துகள் (நியூட்ரினோ) ஆய்வகம்

- தேனி மாவட்டம் பொட்டிபுரத்தில் அமையவுள்ள அணுத்துகள் (நியூட்ரினோ) ஆய்வு மையத்தால் பேராபத்தை எதிர்கொள்ளவிருக்கிறது மேற்குத்தொடர்ச்சி மலைகள். செழித்த பகுதியாய் விளங்கும் தேனி மாவட்டம், பொட்டிபுரம், கேரளா எல்லைக்கு அருகில் இருப்பதால் இதுபோன்ற ஆபத்தானத் திட்டத்தை நிறுவுவதன் மூலமாக இரு மாநில மக்களின் அன்றாட வாழ்வு பாதிக்கப்படும். மேலும் பொட்டிபுரம் மலைப்பகுதியில் 1300 மாத்திரி ஆழத்தில் நிறுவப்படும் இந்த ஆய்வுக்கூடம் அமைப்பதற்கு 8 இலக்கம் அயிரச்சீரெடை எடையுள்ள அகழ்விடங்களை (குவாரிகளை) வெடிவைத்து எடுக்க வேண்டியிருப்பதால், பழமை வாய்ந்த முல்லைப்பெரியாறு அணை உட்பட, போடி மற்றும் சுற்றுவட்டாரத்தில் உள்ள பல்வேறு அணைகளும், நீர்நிலைகளும் சிதையும் வாய்ப்பு உள்ளதால் இத்திட்டத்தை நாம் தமிழர் அரசு அனைத்து வகையிலும் தடுத்து நிறுத்தும்.

- மேற்குத் தொடர்ச்சி மலையின் பல்லுயிர்ப் பெருக்கத்திற்கு ஈடு செய்ய முடியாத கேடுகளை ஏற்படுத்துவதோடு மதிகெட்டான் சோலை தேசியப் பூங்கா மற்றும் பெரியார் புலிகள் காப்பகம் ஆகியவற்றுக்கு மிக அருகில் இத்திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. மதிகெட்டான் சோலை தேசியப் பூங்காவின் சூழலியல் உணர்திறன் மண்டல எல்லையைச் சரிவர அளவீடு செய்வதன் மூலம் அணுத்துகள் ஆய்வுத் திட்டத்திற்கு எதிரான நடவடிக்கை எடுக்கப்படும்.

சில்லகல்லா நீர் மின் அணைத்திட்டம்

- சூழலியல் விதிகளுக்கு முரணாக, மலைகளின் அரசி என்று அழைக்கப்படும் நீலகிரியில் 800 குறுக்கம் காடுகளையும், பல குறுக்கம் விளைநிலங்களையும் கையகப்படுத்தி 10,000க்கும் அதிகமான மக்கள் வாழ்வாதாரம் அழிந்து இடம்பெயரக் காரணமாக அமையப்போகும் சில்லகல்லா திட்டத்தை நாம் தமிழர் அரசு எதிர்க்கிறது. அதிலும் ஏற்கனவே உள்ள அணைகளுக்கு அருகிலேயே நீர் மின் உற்பத்திக்காக நீலகிரியில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள சில்லகல்லா நீர் மின் அணைத் திட்டத்தை நாம் தமிழர் அரசு நீக்கம் செய்யும்.

சேலம் – சென்னை எட்டு வழிச்சாலை

- வேளாண் நிலங்களைப் பறித்து, நீர் நிலைகளை அழித்து. மலை வளங்களையும் சூறையாடும் வகையிலான தற்போதைய சென்னை - சேலம் எட்டுவழிச் சாலை திட்டத்தை நாம் தமிழர் அரசு ஏற்கவில்லை. இத்திட்டத்திற்காக நில அளவீடு செய்யப்பட்டு, ஆவணங்களில் மாற்றம் செய்யப்பட்ட நிலங்களை மீண்டும் பழைய நில உரிமையாளர்களின் பெயருக்கே மாற்றுவதைச் சட்டத்தின்மூலம் உறுதி செய்யும். ஏற்கனவே வெட்டப்பட்ட மரங்கள், மூடப்பட்டக் கிணறுகள் மற்றும் இடிக்கப்பட்ட வீடுகளுக்குத் தகுந்த இழப்பீடு வழங்குவதோடு, பாதிக்கப்பட்ட நிலங்களை மீண்டும் வேளாண்மைக்கு ஏற்றவாறு சீரமைக்க (Soil Restoration) சிறப்பு நிதி ஒதுக்கப்படும்.

நுழைவுத்தேர்வு என்கிற தகுதித் தேர்வு

- மாநில உரிமைகளைப் பறிக்கும், சமூகநீதியைப் புறந்தள்ளும் வகையில் ஒன்றிய அரசு முன்மொழியும் கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்கான அனைத்து வகை தகுதித் தேர்வுகளையும் நாம் தமிழர் அரசு எதிர்க்கும். மருத்துவப் படிப்புகளுக்கான நீட் தேர்வை மாதிரியாகக் கொண்டு, கலை, அறிவியல்,







கூடங்குளம் அணுமின் நிலையம்



எண்ணூர் அனல் மின் நிலையம்

சட்டம், பொறியியல் உள்ளிட்ட அனைத்து வகைப் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வுகளையும், வேலைவாய்ப்பிற்கான அனைத்து வகைத் தகுதித் தேர்வுகளையும் நாம் தமிழர் அரசு தமிழ்நாட்டில் எக்காரணத்தைக் கொண்டும் அனுமதிக்காது. கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வருவதற்கான தீவிரமான அரசியல் மற்றும் சட்டப் போராட்டங்களை முன்னெடுக்கும். அனைத்துத் துறை வேலைவாய்ப்புகளிலும் தமிழ் வழியில் பயின்ற மாணவர்களுக்கு முன்னுரிமை மற்றும் இடப்பகிர்வை வழங்குவதன் மூலம் வெளிமாநிலத்தவரின் செல்வாக்கைத் தடுக்கும்.

கூடங்குளம் அணு உலை

- சுற்றுச்சூழலுக்கும், அனைத்து உயிர்களுக்கும் நீண்டகால பேராபத்தை ஏற்படுத்தக்கூடிய, உலகின் பல நாடுகளாலும் கைவிடப்பட்ட அணு உலை மற்றும் நிலக்கரி வழியிலான அனல்மின் உருவாக்கத் திட்டங்கள் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படாது. கூடங்குளம் அணுமின் நிலையம் (KKNPP) தற்போது 1 மற்றும் 2வது அலகுகள் (Units) செயல்பட்டு வருகின்றன. 3, 4, 5 மற்றும் 6வது அலகுகளுக்கான கட்டுமானப் பணிகள் 2026இல் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. கமுக்கத் தொழில்நுட்பத்துடன் இவை கட்டப்பட்டு வருகின்றன.
- புதிய அலகுகள் (3 முதல் 6 வரை) அமைப்பதை நிறுத்துவதோடு, அணுமின்சாரத்தைச் சார்ந்திருக்கும் நிலையை நாம் தமிழர் அரசு படிப்படியாக கட்டுக்குள் கொண்டு வரும். தமிழ்நாட்டை அணுக்கழிவு சேமிப்பு மையமாக மாற்ற எக்காரணத்தைக் கொண்டும் நாம் தமிழர் அரசு அனுமதிக்காது.

அனல்மின் நிலையத் திட்டங்கள்

- தமிழ்நாட்டில் தற்போது வடசென்னை (Stage III), உடன்குடி (Stage I) மற்றும் எண்ணூர் ஆகிய இடங்களில் புதிய அனல் மின் திட்டங்கள் இறுதி நிலையில் உள்ளன. பாரிஸ் உடன்படிக்கை மற்றும் COP28 மாநாட்டுத் தீர்மானங்களின்படி, புவி வெப்பமடைதலை 1.5° வெப்ப அளவு (செல்சியஸ்) நிலையில் கட்டுப்படுத்த நிலக்கரிப் பயன்பாட்டை உலக நாடுகள் படிப்படியாகக் குறைத்து வருகின்றன. நாம் தமிழர் ஆட்சியில், இத்தகைய சூழலியல் சீர்கேடு விளைவிக்கும் புதிய அனல் மின் திட்டங்கள் எக்காலத்திலும் அனுமதிக்கப்படாது. மாறாக, பன்னாட்டு விதிமுறைகளைப் பின்பற்றி, ஏற்கனவே உள்ள அனல் மின் நிலையங்களின் பயன்பாட்டைக் குறைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

ஸ்டெர்லைட் ஆலை

- ஆலையின் அளவுக்கு மீறிய மாசுபாட்டோடு தொடர் விதிமீறல்களுக்கும் உள்ளாகி, தூத்துக்குடி மக்களின் நீண்ட நெடியப் போராட்டத்திற்குப் பிறகு, அரசப் பயங்கரவாதத்தால் பல உயிர்களைப் பறிகொடுத்தப் பிறகு இறுதியாக இழுத்து மூடப்பட்ட ஸ்டெர்லைட் தாமிர ஆலை மீண்டும் செயல்பட எக்காரணத்தைக் கொண்டும் நாம் தமிழர் ஆட்சி அனுமதிக்காது.

- 15.11.2024 அன்று, வேதாந்தா நிறுவனம் தாக்கல் செய்த சீராய்வு மனுவையும் (Review Petition) உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இதன்மூலம் ஆலையை மீண்டும் திறப்பதற்கான முதன்மைச் சட்டப் போராட்டங்கள் முடிவுக்கு வந்தன. இருப்பினும், அண்மையில் வேதாந்தா நிறுவனம் பழைய ஆலைக்குப் பதிலாக ஒரு புதிய 'பசுமைத் தாமிர ஆலை' (Green Copper Plant) அமைப்பதற்கான திட்டத்தை முன்மொழிவது குறித்துத் தகவல்கள் வெளியாகியுள்ளன.





ஸ்டெர்லைட் தாமிர ஆலை எதிர்ப்புப் போராட்டம்



ஸ்டெர்லைட் தாமிர ஆலை



- உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மற்ற சிறு வழக்குகளைத் விரைவுபடுத்தி, ஆலை நிலத்தை மீண்டும் அரசு வசமாக்க நடவடிக்கை எடுக்கப்படும். நீதிமன்ற உத்தரவுப்படி ஆலையின் கருவிகள் மற்றும் கழிவுகள் (Gypsum/Slag) குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் அகற்றப்படும். மேலும், பாதிக்கப்பட்ட மக்களின் உடல்நலனைச் சீர்செய்ய சிறப்பு மருத்துவ வசதிகள் மற்றும் அப்பகுதியின் நிலத்தடி நீரைச் சுத்திகரிக்க நாம் தமிழர் அரசு நீண்டகாலத் திட்டங்களை முன்னெடுக்கும்.

- நீதியரசர் அருணா ஜெகதீசன் ஆணைய அறிக்கையின்படி, ஸ்டெர்லைட் துப்பாக்கிச் சூடு சட்டத்திற்கு புறம்பானது மற்றும் தேவையற்றது என்று உறுதி செய்யப்பட்டது. இருப்பினும் துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்ட அதிகாரிகள் மீது கடுமையான குற்றவியல் வழக்குகள் (FIR) பதிவு செய்யப்படவில்லை. குறிப்பாக, அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்ட உயர் அதிகாரிகள் சிலருக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டதை சென்னை உயர் நீதிமன்றம் கடுமையாக விமர்சித்தது. "தவறு செய்தவர்களுக்கு இரட்டைப் பதவி உயர்வா?" என்று நீதிமன்றம் கேள்வி எழுப்பியதோடு, பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீடு மட்டும் நீதியாகாது என்றும், தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. ஸ்டெர்லைட் துப்பாக்கிச்சூட்டில் குற்றம் நடத்திய பாசக - அதிமுக அரசும், குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்காத திமுக அரசும் ஒரே அணியில் நின்று மக்களை வஞ்சிக்கின்றனர்.

- நாம் தமிழர் அரசு, இச்சம்பவத்தை வெறும் துறை சார்ந்த விசாரணையாக பார்க்காமல், அரசப் பயங்கரவாதமாகக் கருதி நடவடிக்கை எடுக்கும். இந்த நிகழ்வில் தொடர்புடைய அனைத்து அதிகாரிகள் மீதும் கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டு, அவர்கள் உடனடியாகப் பணியிலிருந்து நீக்கப்படுவார்கள். அருணா செகதீசன் ஆணைய அறிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்தி, அதில் பெயரிடப்பட்ட அனைவருக்கும் உரிய தண்டனை பெற்றுத்தரப்படும்.

தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் (SIPCOT)

- தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம் (SIPCOT) அமைப்பானது தனது தொழில் விரிவாக்கத் திட்டத்தின்கீழ் சற்றொப்ப 45,000 குறுக்கம் நில வங்கியை உருவாக்க இலக்கு நிர்ணயித்துள்ளது. தற்போது திருவண்ணாமலை மாவட்டம் மேல்மாவில் 3,174 குறுக்கம், செங்கல்பட்டு செய்யூரில் 800 குறுக்கம், தர்மபுரி அதகப்பாடியில் 1,724 குறுக்கம் மற்றும் மதுரையில் 278 குறுக்கம் எனப் பல்வேறு இடங்களில் புதிய தொழிற்பேட்டைகள் அமையவுள்ளன. இத்திட்டங்கள் பெரும்பாலும் மூன்று போகமும் விளையும் நஞ்சை நிலங்கள் மற்றும் மேய்ச்சல் புறம்போக்கு நிலங்களைக் குறிவைத்தே அமைகின்றன.

- இத்தகைய புதிய திட்டங்களை "வளர்ச்சி" என்ற பெயரில் நடக்கும் "சூழலியல் படுகொலை" என்றே பார்க்க முடிகிறது. இத்திட்டங்களைத் தடுத்து நிறுத்த, வளமான வேளாண் நிலங்களை எக்காரணம் கொண்டும் தொழிற்சாலைகளுக்குக் கையகப்படுத்தக்கூடாது என்ற சட்டப்பூர்வ தடை கொண்டு வரப்படும். வேளாண் நிலங்களை கையகப்படுத்துவதற்குப் பதிலாக, தரிசு நிலங்களில் மட்டுமே தொழிற்சாலைகளை அமைக்க வழிவகைச் செய்யப்படும்.





மற்ற இனங்களுக்கெல்லாம் வாழ்க்கையில் போராட்டம் எப்போதாவது வருகிறது, தமிழ்த்தேசிய இனத்திற்குப் போராட்டமே வாழ்க்கையாக மாறி நிற்கிறது

- ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள கடலூர், இராணிப்பேட்டை போன்ற SIPCOT வளாகங்களில் நிலவும் கடுமையான சூழலியல் சீர்கேடுகளைக் களைய நாம் தமிழர் அரசு மிகத் தீவிரமான கண்காணிப்பு முறையைப் பின்பற்றும். தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் நச்சுக் கழிவுகளை முறையாகச் சுத்திகரிக்காமல் நீர்நிலைகளில் கலக்கவிடும் நிறுவனங்களின் உரிமங்கள் உடனடியாக நீக்கப்படும்.

- "மாசுபடுத்துபவரே இழப்பீடு வழங்க வேண்டும்" (Polluter Pays Principle) என்ற அடிப்படையில், பாதிக்கப்பட்ட நிலங்களையும் நீர்நிலைகளையும் பழைய நிலைக்குக் கொண்டு வரும் செலவை அந்தந்த நிறுவனங்களே ஏற்குமாறு கடுமையான செயல்முறை விதிகள் வகுக்கப்படும். மேலும், தொடர்ச்சியான சுற்றுச்சூழல் தணிக்கை மூலம் விதிகளுக்குப் புறம்பாகச் செயல்படும் ஆலைகளை மூடிவிட்டு, அப்பகுதிகளில் தூய்மையான மற்றும் பசுமையான சிறுதொழில் கூடங்களை அமைக்க வழிவகை செய்யப்படும்.

தேர்தல் நன்கொடைத் தளை (Electoral Bonds)

- அரசியல் கட்சிகள் பெருநிறுவனங்களிடம் வரம்பற்ற தொகையைப் பெற்றிடவும், அவற்றைப் பொதுத்தளத்தில் வெளியிடாமல் இருக்கவும் இது வழிவகை செய்கிறது.

- இது அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக்கே எதிரானது என்ற உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பினை நாம் தமிழர் கட்சி வரவேற்கின்றது.

- இதில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து ஒரு குழு அமைத்து விசாரணை நடத்தப்பட வேண்டும் மற்றும் முறைகேடுகளில் ஈடுபட்ட கட்சிகளைத் தேர்தலில் போட்டியிடத் தடை விதிக்க வேண்டும் என வலியுறுத்துகின்றது.

சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் (SIR)

- சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் (SIR) என்பது ஒருபுறம் இலட்சக்கணக்கானத் தமிழர்களின் வாக்குரிமையைப் பறிக்கும் வேளையில், மறுபுறம் வெளிமாநிலத்தவர்கள் தாராளமாகத் தமிழக வாக்காளர் பட்டியலில் ஊடுருவ வழிவகை செய்கிறது.

- மண்ணின் மைந்தர்களான தமிழர்கள் ஒரு சிறு முகவரி மாற்றத்திற்காகப் பட்டியலிலிருந்து நீக்கப்படும்போது, குறிப்பாக வடமாநிலத்தவர்கள் எந்தவிதத் தடையுமின்றி இலட்சக்கணக்கில் வாக்குகளைப் பெறுவது பெரும் முறைகேடாகும். இது திட்டமிட்ட முறையில் தமிழர்களின் அரசியல் அதிகாரத்தைக் குறைக்க எடுக்கப்படும் நடவடிக்கையாகவே நாம் தமிழர் கட்சி கருதுகிறது.

- வாக்குரிமை என்பது மண்ணின் உரிமை இங்கு வாழும் பிற மாநிலத்தவர்கள் தங்கள் சொந்த மாநிலங்களில் வாக்களிக்க வேண்டுமே தவிர, தமிழகத்தின் தலையெழுத்தைத் தீர்மானிக்க அவர்களுக்கு எந்த அறமும் இல்லை. எம் நிலத்தின் அதிகாரத்தை வேற்று மாநிலத்தவர் கையில் ஒப்படைக்கும் இந்தச் சதித்திட்டத்தை நாம் தமிழர் கட்சி கடுமையாக எதிர்க்கிறது.

நாம் தமிழர் எதிர்க்கும்
சட்டங்களும், திட்டங்களும்



அதிகாரம் வலிமையானது

– அண்ணல் அம்பேத்கர்

எமது அதிகாரம்
எம் மக்களுக்கானது!

அதிகாரம் மிக வலிமையானது

– அண்ணல் அம்பேத்கர்

அதை அடைந்துவிட்டால்
அனைத்தும் எளிமையானது!



வென்றாக வேண்டும் தமிழ்!

ஒன்றாக வேண்டும் தமிழர்!



- பசி, பஞ்சம், ஊழல், இலஞ்சம், கொலை, கொள்ளை,
  சாதிய இழிவு, தீண்டாமைக் கொடுமை, அடக்குமுறை,
  ஒருக்குமுறை, பெண்ணிய அடிமைத்தனம்,
  பாலியல் வன்கொடுமை, வளக்கொள்ளை,
  மது மத போதை இவை ஏதுமற்ற
  புதியதொரு தேசம் செய்வோம்
  மக்கள் புரட்சியால் அதை உறுதி செய்வோம்
  இது மாற்றத்திற்கான எளிய மக்களின் புரட்சி.
- புரட்சி எப்போதும் வெல்லும் நமது வெற்றி அதைச் சொல்லும்.
- இலக்கு ஒன்றுதான் இனத்தின் விடுதலை!
  இனம் ஒன்றாவோம் இலக்கை வென்றாவோம்.

எண்.8, இராவணன் குடில், மருத்துவமனைச் சாலை, செந்தில் நகர், சின்னப்போரூர், சென்னை – 600116.
தொடர்புக்கு : 044 2476 9070 / naamtamizhar@gmail.com / www.naamtamilar.org / www.makkalarasu.com
Seeman4TN SenthamizhanSeeman Seeman4TN_Official